இராமேஸ்வரம் காசி நடைப்பயணம்

பொற்கிழிக் கவிஞர்
"காசிஸ்ரீ" அரு. சோமசுந்தரன்



பொன்முடி பதிப்பகம்

இராமேஸ்வரம் காசி நடைப் பயணம்

[இராமேசுவரத்தில் இருந்து 17-2-1983 அன்று பாதயாத்திரையாகப் புறப்பட்டு 116 நாட்களில் 2000 மைல் நடந்து 12-6-1983 அன்று காசிக்கு இனிதே சென்று வழிபட்ட வரலாறு— இதில் இந்தியாவின் சரித்திரம், பூகோளம், கல்வி, விஞ்ஞானம், சமூகம், புராணம் மதம், இதிகாசம், இலக்கியம் பற்றிய பல புதிய உண்மைகளை அறியலாம். இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் முழுவடிவம் இது.]

''பொற்கிழிக் கவிஞர்''
''காசிஸ்ரீ''
அரு. சோமசுந்தரன். M.A., B.T.

பொன்முடி பதிப்பகம்
காரைக்குடி.

போன் : 2824

பொன்முடி : 113
உரிமை : ஆசிரியற்கே
முதற்பதிப்பு : 1986 ஆகஸ்டு

விலை ரூ. 50-00

[நூலாசிரியரின் பொன்விழா சென்னையில் 15 - 8 - 1986 அன்று தி. நகர் "பாலாஜி கல்யாண மண்டபத்தில்" "நகரத்தார் திருத்தணிப் பாத யாத்திரைக் குழுவின்" சார்பில் நிகழ்ந்த பொழுது, தொழிலதிபர் 'வள்ளல்' உயர்திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்களால் இந்நூல் வெளியிடப் பெற்றது.]

Publishers :
Ponmudi Pathippagam
(Founded on 3—6—1963)
123, Muthupatnam III St.,
Karaikudi, P. M. Dt. 623001.
Tamilnadu. India.
Phone : 2824.

Printed By :
Vetri Achagam, 91, Dr. Besent Road,
Royapet, Madras—600 014.

33-1



முன்னுரை

இந்தியாவை ஒரு புண்ணிய பூமி என்று கூறுவதற்குக் காரணம் இந்தப் பூமியில் தென் முனை கன்னியாகுமரி முதல், வடமுனை கேதாரம் வரை கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் தெய்வங்களின் அருளாட்சி நிகழ்வது தான். இத்தெய்வீக நாட்டில் பிறந்தும் அந்த ஒளியைக் காணாமல், தெய்வீக உரையைக் கேளாமல் வாழும் மக்களைத்தான் பாரதியார் ''கண்ணிருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடராய்'' வாழ்வதாகக் கூறுவதாகக் கொள்ளலாம். இந்திய மண்ணின் தெய்வீக ஒளியைக் காண்பதற்காகத்தான் வெளி நாட்டில் இருந்து ஏராளமான அறிஞர் பெரு மக்கள் இந்தியாவிற்குப் பண்டு தொட்டு வந்து கொண்டிருக்கின்றனர். உலகம் எல்லாம் ஆன்மீக வளர்ச்சிக்கு இந்தியாவையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்திய மண்ணில் ''காசி இராமேஸ்வரம்'' என்ற தொடர் சிறு பிள்ளைக்குக் கூடத் தெரியும். அதற்குக் காரணம் இந்தியாவின் தெய்வீக ஒளியால் இந்த இரண்டு

முனைகளும் இணைக்கப்பட்டிருப்பது தான். கடற்கரையில் இராமேஸ்வரம்! கங்கைக்கரையில் காசி!! இந்த இரண்டு கரைகளையும் நடந்தே இணைத்தவர் இராமபிரான்! சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராமபிரான் நடந்ததாக ஐதீகம்! இராமபிரான் வாழ்ந்த யுகத்தினைத் "திரேதாயுகம்" என்று கூறுவர்.

"கிருஷ்ண பரமாத்மா" வாழ்ந்த காலத்திற்குத் "துவாபரயுகம்" என்று பெயர். இப்பொழுது நாம் வாழும் காலத்திற்குக் "கலியுகம்" என்று பெயர். கலி முற்றியுள்ள காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். மனிதனை மனிதன் ஆயுதங்களால் வீழ்த்த முனைந்து விட்டான். அன்பைப் பிரயோகித்துத் தியாகத்தை நெறிப்படுத்திய ஆன்மீக பூமியில் இப்பொழுது ஆயுதமும் முரட்டுத்தனமும் கோலோச்சுகின்றன.

ஆசைக்கு மக்கள் அடிமையாகி அலையும் இந்த நேரத்தில், கலியுக தர்மமாகிய பக்தி நெறியினைப் பிரயோகித்தே மக்களை வழிப்படுத்த வேண்டும். அதற்குப் பாத யாத்திரை ஒன்றே கருவியாகும், பாத யாத்திரையானது மக்களைப் பண்படுத்தி, உள்ளத்தைச் செம்மைப் படுத்தும்.

"திரேதாயுகத்தில் **வேள்வி** செய்து அடையும் பலனைத் துவாபர யுகத்தில் **அர்ச்சனை** செய்து பெறலாம்; அதே பலனைக் கலியுகத்தில் பகவானின் **நாமாவளி** சொல்லி அடையலாம். திரெளபதி "ஹரி ஹரி" என்று கிருஷ்ண பரமாத்மாவின் நாமா வளியைச் சொல்லியே தன் மானத்தைக் காத்துக் கொண்டாள். கஜேந்திரன் ஆகிய யானை அரசன் "ஆதி மூலமே" என்று பகவானின் நாமத்தைச் சொல்லியே தன் உயிரைக் காத்துக் கொண்டான்.

எனவே இறைவனின் நாமத்தைச் சொல்ல வழி காட்டுவது பாதயாத்திரை தான். பாத யாத்திரை செல்லும் பொழுது "முருகா! முருகா" "முருகா

முருகா'' என்றும், ''வேலும் மயிலும்'' ''வேலும் மயிலும்'' என்றும், ''ஹர ஹர சிவ சிவ'' ''ஹர ஹர சிவ சிவ'' என்றும் சொன்னால், நம்மை அறியாமல் கால் விரைந்து நடக்கும். கால் வலியினால் வீழ்ந்து கிடப்போர் கூட இந்த நாமாவளி கேட்டு, எழுந்து ஓடக் காணலாம். நாமாவளிக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்பதை நடக்கும் போது மட்டுமே உணர முடியும்.

பாத யாத்திரையின் போது பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் பரவசத்தோடு இலட்சக் கணக்கில் மக்கள் செல்வதைக் காணலாம். இந்தப் பாத யாத்திரை நெறிதான் ஆன்மீகத் துறைக்கு நடைமுறை (Practical) ஆகும். நாம் படித்துள்ள பன்னிரு திருமுறைகள் முதலிய நூல்கள் எல்லாம் ஏட்டுப் படிப்பே (Theory) ஆகும். இவற்றைப் படிப்பதால் நயம் உணரலாம். ஆனால் பகவானை உணர்வது கடினம். அதற்குப் பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவத்தைப் பாத யாத்திரை கொடுக்கிறது, மனத்தைப் பண்படுத்து கிறது.

நெடுங் காலமாகச் செட்டி நாட்டில் நடை பெற்று வரும் பழநிப் பாத யாத்திரையில் பங்கு கொண்ட அடியேன், அதன் பலனை உணர்ந்தேன். ஏராளமான நூல்களைப் படித்திருந்தேன். படித்ததனால் அறிவு பெற்றேன்; அறிவினால் **குழப்பம்** அடைந்திருந்தேன். ஆனால் பாத யாத்திரையில் ஈடுபட்ட பிறகே எனக்குத் **தெளிவு பி**றந்தது. அந்தத் தெளிவு கல்வி உலகத்திற்குத் தேவை என்று கருதினேன். எனவே கற்றவர்கள் மத்தியிலும், புலவர்கள் மத்தியிலும் நான் ஒரு தனிப் பாதை வகுத்துக் கொண்டு நடை போடலானேன். அந்தப் பாதை எனக்கு இறைவன் காட்டியது என்றே நம்பு கிறேன்.

முருகனின் படை வீடுகள் அனைத்துக்கும் பலரை அழைத்துக் கொண்டு நடந்தேன். அந்தப் பாதயாத்

திரைகள் தொடர்ந்து நடைபெற ஆவன செய்தேன். அதன் விளைவுதான் "இராமேஸ்வரம் காசி நடைப் பயணம்."

திருச்செந்தூருக்கு நடந்த பொழுது அடியேன் எழுதிய பாடலில் முக்கியமாக இரண்டு வரிகள் அமைந்தன. அந்த அடிகளை எடுத்துக் கொடுத்தவன் முருகனாகவே நான் கருதுகிறேன்.

"காசி முதல் குமரிவரை உனது எல்லையே!
கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே!"

இந்த இரண்டு வரிகள்தாம் எங்களுக்கு **"ஞானோதயம்"** (Inspiration) ஏற்படுத்திய வரிகள். இவை எங்களைச் சிந்திக்க வைத்தன. பிறகு காசிக்கே நடக்க வைத்தன. அதுபற்றிய எல்லாச் சரித்திரமும் இந்நூலில் விரிவாக எழுதப் பெற்றுள்ளன.

இதனை ஒரு மிகப் பெரிய புராணமாகச் சிலர் கருதலாம். இதனை ஒரு **தமிழக யுவான் சுவாங்கின்** நடைப்பயணக் குறிப்பாகவும் கொள்ளலாம். இது படிப்பவர்களின் மன நிலையைப் பொறுத்தது. இது ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதால் நாள்வாரியாக எழுதி உள்ளேன். நடைப்பயணிகளுக்கு இது ஒரு கையேடாகப் பயன்படும்.

இந்த நெடிய பயணம் நிறைவேறப் பலர் பொருள் வழங்கினர்; உணவு ஊட்டினர்; சிரமதானம் செய்தனர். அவர்களின் பேருதவியினால் எங்கள் பயணம் வெற்றிகரமாக நிறைவேறியது. இதன் பலனில் அவர்களுக்கும் பங்குண்டு.

மூன்றரை ஆண்டுகள் கழித்து இந்நூல் வெளிவருகிறது. காசி நடைப் பயணம் முடிந்து ஊருக்குத் திரும்பியது முதல் கால்வலி, கண்வலி, தலைவலி, வயிற்றுவலி, உடல்வலி ஆகியவற்றால் பெரிதும் நொந்திருந்தேன். பலமாத காலம் ஓய்வு தேவைப்பட்டது. மேலும் என் குடும்பச் செலவுகளுக்காக நான் ஓடியாடி உழைக்க

நேர்ந்தது. பொதுப்பணிகள் வேறு — இவற்றுக்கு இடையே இந்த நூலை உடனடியாக எழுதத் துவங்க முடியவில்லை.

ஆறுமாதம் கழித்து எழுதத் தொடங்கினேன். இடையில் பலம் பெற்றிருந்த உடல் மீண்டும் தளரத் தொடங்கியது. இதை எழுதத் தொடும்பொழுதெல் லாம் உடற்பிணியினால் தாக்குண்டு எழுத்துத் தடைப் படலாயிற்று. இதனை நான் முதலில் அவ்வளவாகக் கருதவில்லை.

பிறகு தொடர்ந்து எழுத உட்கார்ந்த நான் சுமார் நூறு பக்கங்கள் எழுதியபொழுது காலில் வாதநோய் தாக்கிப் படுத்துவிட்டேன். காலால் நடந்தவன் காலால் வீழ்ந்ததில் ஏதோ குறிப்பு இருப்பதாக உணர்ந்து, புத்தகக் கட்டினை மூட்டைகட்டி வைத்துவிட்டேன்.

அதன்பின் பெரியவர் ஒருவரின் ஆலோசனைப்படி இராமேஸ்வரம் சென்று வணங்கிவந்து இதனை எழுத லானேன். எனினும் பல்வேறு பிரச்னைகளில் சிக்குண்டு தொடர்ந்து எழுத்துப்பணியில் ஈடுபட இயலாத நிலையில் கட்டுண்டு கிடந்தேன்.

என் பொன்விழாவினை (50 வயது நிறைவு) 15-8-1986 அன்று (ஆடி 30) சென்னையில் சிறப்பாகக் கொண்டாட "நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரை குழுவினர்" மிக அன்பாகவும், ஆர்வமாகவும் முன்வந்த னர். அவர்களது இடைவிடாத தூண்டுதலால்தான் இந்நூலைத் தொடர்ந்து பல மாதங்கள் எழுதி முடிக்க லானேன். இப்பொழுது நூல் உங்கள் கையில்!

"நடைப் பயணம்" செய்ய இந்திய மக்களின் உதவி பெரிதும் துணையாக அமைந்தது. இந்நூல் மலர அடியேன் பல்லாயிரக்கணக்கில் பொருள் முதலீடு செய்ய நேர்ந்துள்ளது. இன்றுள்ள சூழ்நிலையில் இது எனக்குப் பெரும்சுமை! என்றாலும் ஒரு திருப்பணியாக எண்ணி

இதனை வெளியிடுகிறேன். இது இந்திய தேசீய ஒருமைப் பாட்டுக்கு (National Integration) பெருந்துணை செய்யக் கூடியது. ஆன்மீக உணர்வினை ஊட்டக் கூடியது. இது இந்திய மொழிகள் அனைத்திலும் வெளிவர வேண்டியது.

இந்த நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும், இதில் இன்னொரு பிரதி விலைக்கு வாங்கித் திருமணப் பரிசாகவோ, பிறந்தநாள் பரிசாகவோ, பாதயாத்திரைப் பரிசாகவோ, அன்புப்பரிசாகவோ அடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டுகிறேன். **செல்வர்கள் நூறு பிரதி வாங்கி மற்றவர்களுக்கு வழங்கலாம்.** இது ''அன்னதானம்'' போல ''ஞானதானம்'' ஆகும். அப்படி ஒவ்வொருவரும் விலைகொடுத்து வாங்குவதால் கிடைக்கும் தொகை அடுத்தடுத்த பதிப்புக்கள் வெளிவரத் துணைசெய்யும்.

காசிக்கு நடைப்பயணம் நாங்கள் சென்றபொழுது உதவி செய்ய வாய்ப்பில்லாமல் போய்விட்டவர்களுக்கு இப்பொழுது மறுவாய்ப்புக் கிடைக்கிறது! இப்புத்தகம் விலைக்கு வாங்கிப் பிறருக்கு அன்பளிப்பாக வழங்கும் பக்த கோடிகளின் பாதார விந்தத்தில் தலைவைத்துப் பணிந்து, இந்நூலை, பாதயாத்திரையின்போது உதவி செய்த அனைவரின் பொன்னார் திருவடிகளில் பணிவோடு படைக்கிறேன்.

இந்நூலை மிகச் சிறப்பாக, மிக விரைவில் அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை **வெற்றி அச்சக உரிமையாளர் திரு. குப்புசாமி** அவர்கட்கும், அழகிய முறையில் அட்டை எழுதித்தந்த **ஓவியர் ஆனந்தன்** அவர்கட்கும், அருமையாக ஐந்து வண்ண அட்டை அச்சிட்டுத் தந்த **எஸ். கே. பிரிண்டர்சுக்கும்,** அற்புதமாக பைண்டு செய்து தந்த **உமாபதிக்கும்** அன்பான நன்றி உரியது.

அடியேன்
அரு. சோமசுந்தரன்
(அருசோ)

காரைக்குடி
1-8-1986.

பொருள் அடக்கம்

1. இராமேசுவரம்-காசி நடைப்பயணம்

தென்னாட்டில் இராமேசுவரமும், வடநாட்டில் காசியும் பல்வேறு யுகங்களாக ஒரே நேர்கோட்டில் இணைக்கப்பட்டிருக்கின்ற சிவத்தலங்கள் ஆகும். இரண்டையும் சிவனொளி இணைத்திருக்கிறது. தென்னகத்து மக்கள் காசிக்கும், வடபுலத்து மக்கள் இரோமேசுவரத்துக்கும் பல்லாயிரம் ஆண்டுகளாக நடந்து பாதயாத்திரையாகச் சென்று விசுவநாதரையும், இராமநாதரையும் வழிபட்டிருக்கிறார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் நடந்து சென்று வழிபடும் சாதனையில் ஈடுபட யாரும் முன் வராததில் வியப்பில்லை. அதற்குக் காரணம் பெருகியுள்ள போக்குவரத்துச் சாதனங்களே ஆகும். பேருந்து, புகைவண்டி, விமானம் ஆகியவற்றின் வளர்ச்சியினால் மக்கள் நடைப்பயணத்தை மறந்து ஒரு நூற்றாண்டு ஆகிறது. சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு டல்ஹௌசி பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் தென்னாட்டில் புகைவண்டிப் பாதை அமைக்கப்பட்டது. அதன்பிறகு மக்கள் நடந்து செல்ல விருப்பப்படவில்லை. எனவே காசிக்கு நம் முன்னோர்கள் நடந்து சென்ற நிகழ்ச்சிகள் கதையாகவும், கற்பனையாகவுமே கருதப்பட்டன. இந்நிலையில் இந்த இருபதாம் நூற்றாண்டில் கதையாகிப் போன காசி நடை யாத்திரையை உண்மை நிகழ்ச்சியாக்க வேண்டும் என்று இறைவன் நினைத்திருக்கிறான். எனவே அவனது நினைப்பை அடியேனுக்கு எழுப்பி, காசி நடை யாத்திரையை நிறைவேற்றி இருக்கிறான். இதைத் தவிர வேறு ஒன்றும் எனக்கு எழுதத் தெரியவில்லை. ஆண்

டவன் விருப்பத்தை எங்களைக் கொண்டு பூர்த்தி செய்து கொண்டான் என்றுதான் சொல்லத் தோன்று கிறது.

இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்கு நடந்து செல்வது என்பது கற்பனைக்கும் எட்டாதது. நடந்து சென்று வந்தோம் என்று சொன்னால் இப்பொழுதும் கூட நம்ப மறுப்பவர்கள் இருக்கிறார்கள். அப்பேர்ப் பட்ட ஒரு சாதனையை நிகழ்த்தும் பேறு இறையருளால் அடியேனுக்குக் கிட்டியது. காசி நடைப்பயணத்தை நிறைவேற்றி வந்தது முதலே அடியேன் மனத்தில் ஒரு நிறைவு ஏற்பட்டு விட்டது. வாழ்க்கைப் பயணமே நிறைவேறியது போன்ற ஒரு பரிபூரண உணர்வு ஏற் பட்டுள்ளது. இந்த உடலும், உயிரும், உணர்வும் அவன் கொடுத்த கொடை. இவற்றை எப்பொழுது வேண்டு மானாலும் திருப்பி எடுத்துக் கொள்ள அவனுக்கு உரிமை உண்டு. ஆனால் அவன் மறுபிறவியை அடியேனுக்கு இம்மையிலேயே அளித்திருப்பதாக நான் உணர்கிறேன். காசிக்கு நடந்து சென்று சுமார் மூன்று ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நேரத்தில் இந்நூலினை நான் எழுதும் பொழுது என்னை மூன்று வயதுக் குழந்தை யாகவே கருதிக் கொண்டு, ஆண்டவன் அருளுக்கு நன்றி கூறிக் காசி நடைபயணம் பற்றிய உண்மையான செய்தி களை வருணிக்கிறேன்.

2. பழநிப் பாதயாத்திரை

செட்டி நாட்டில் இருந்து பழநிக்குச் சுமார் நானூறு ஆண்டுகளாகத் தைப்பூசக் காவடி சென்று வருகிறது. கண்டனூர்ச் "சாமியாடி" குடும்பத்தினர் பழநிப் பாத யாத்திரைக்குக் குருநாதராக இருந்து யாத்திரிகர்க்குத் திருநீறு வழங்கி ஆசி கூறி நடத்தி வருகிறார்கள். திருநீற்றின் பெருமையைத் திரு ஞான சம்பந்தப் பெருமான் வாக்கால் நாம் உணர்ந்திருக்கிறோம். ஆனால் பழநிப் பாதயாத்திரையின் பொழுது நடக்க முடியாதவர்கள் எல்லாம் கண்டனூர்ச் சாமியாடி குடும்பத்தின் வழிவந்த குருநாதர், அருளாடியார் திரு. **பழனியப்ப செட்டியார்** அவர்களிடம் திருநீறு வாங்கி நெற்றியில் அணிந்து, கால்களில் வலி உள்ள இடங்களில் பூசியவுடன் வலி மறைந்து வலிமை ஏற்பட்டுப் புதிய தெம்புடன் நடப்பதைக் காண்கிறோம். இந்த அற்புதத்தைப் பழநிப் பாத யாத்திரையில் ஒவ்வொரு நாளும் காணலாம்.

1975ஆம் ஆண்டு தைப்பூசத்தின் பொழுது அடியேன் முதன் முறையாகப் பழநிப் பாதயாத்திரையில் ஈடுபட்டேன். என்னை அம்முயற்சியில் ஈடு படுத்திய பெருமை என் மனைவி **நீலா**வையே சேரும். அவளது தூண்டுதலால் சுமார் 120 மைல் நடந்து சென்று பழநியாண்டவரை வழிபட முன்வந்தேன். அப்பொழுது என் மகள் **இளவெயினி**யும், என் மனைவியும் என்னுடன் நடந்து வந்தனர். என் மகள் இளவெயினி சுமார் பத்து வயதுச் சிறுமியாக இருந்த நேரம். அவளால் நடக்க இயலாது என்று அவளைப் பயமுறுத்தி அவளது பாத

யாத்திரை விருப்பத்தைத் தடுக்க முனைந்தேன். ஆனால் அவள் விடாப்பிடியாக என்னுடன் வந்தே தீர்வேன் என்று அடம் பிடித்ததனால் அவளை நடக்க அனுமதித் தேன். நான் எளிதாக நடந்து விடுவேன் என்று கற்பனை செய்தேன். ஆனால் திண்டுக்கல் கடக்கும் பொழுது என்னால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. என் மகள் இளவெயினி எளிதாக நடந்து வந்தாள். அப்பொழுது தான் எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது. பாதயாத்திரையில் நடந்து செல்வது என்பது நமது உடல் பலத்தைப் பொறுத்ததன்று; இறைவனின் திருவருளைப் பொறுத்தது என்ற முடிவுக்கு வந்தேன். எனவே பழநியாண்டவரை மீண்டும் பிரார்த்தனை செய்து எழுந்து நின்றேன். என் மனைவியும், மகளும், திரு. ஐ. என். ஏ. சொக்கலிங்கம் செட்டியாரும், மற்றும் பல நண்பர்களும் என்னை ஊக்குவித்தனர். அருமையான பாடல்களைப் பாடினர். அந்தப் பாடல்கள் ஊட்டிய எழுச்சியால், பழநியாண்டவரின் கருணையினால், இனிதே பழநிக்கு நடந்து சென்று பழநியாண்டவரை வழிபட்டேன். அந்த யாத்திரையின் பொழுது 21. 1. 1975 அன்று அடியேன் எழுதிய பாடல் வருமாறு:

சாமியே முருகையா
சாமியே சரணம் முருகய்யா

அல்லும் பகலும் அடியார் கூடி
ஒல்லும் வகையான் ஏழ்நாள் ஓடிச்
செல்லும் வழிநடைப் பயணப் பாதை
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
(சாமியே)

முந்நூ ருண்டாய் முருகனைத் தேடிப்
பெண்ணும் ஆணும் பிள்ளையும் கூடிக்

கண்ணுக் கினிய கடவுளைப் பாடி
நண்ணும் பயணம் நன்மையே ஆக
(சாமியே)

பழநிக் கடவுட் பாதம் பணியக்
கழனி வரப்பும் கண்மாய்க் கரையும்
நிழலும் காணா நெடுங்கற் பாதை
தழலைத் தாங்கும் தாள்கள் காப்பாய்
(சாமியே)

பிஞ்சுக் கல்லும் பெரும்பனிக் காற்றும்
கொஞ்சக் கூடக் கொடுமை செயாமல்
பஞ்சம் நோய்கள் பகைஅணு காமல்
நஞ்சும் இன்றி நடைவழி காப்பாய்
(சாமியே)

குற்றம் குறைகள் குழந்தைகள் செய்தால்
முற்றும் துறந்த முருகா! வேலா!
சுற்றும் அதனைச் சட்டை செயாமல்
வெற்றி அளித்தே வேலா காப்பாய்!
(சாமியே)

வாடைக் காற்றும் வழிநடைச் சோர்வும்
கோடை வெயிலும் கொட்டும் பனியும்
பீடை பிணியும் பிசாசும் திருட்டும்
சோடை செயாமல் சுகம் அருள் வாயே!
(சாமியே)

ஏரிக் கரையில் ஏறி இறங்கித்
தாரின் சாலைத் தடம்வழி யாக
ஊரின் பொட்டலில் உறங்கி எழுந்து
பாரில் பழநிப் பயணம் சிறக்க

(சாமியே)

வண்டிகள் கட்டி வழிநடை யாகப்
பெண்டிரும் பிள்ளையும் பெரியவரு மாக
அண்டி நெருங்கி ஆண்டிக ளாக
உண்டி மறந்த யாத்திரை ஓங்க

(சாமியே)

தோளில் மூட்டை தொங்கிடு மாறும்
தாளில் ஊக்கம் தழைத்திடு மாறும்
மேலில் போட்ட முதல் துணி யோடும்
நாளில் ஏழு நடையும் வெல்ல

(சாமியே)

நூற்றுப் பத்து மைல்கள் நொடியில்
காற்றுப் போலக் கடந்திடு மாறும்
சாற்றும் சரணம் சஞ்சலம் நீக்கிக்
கூற்றை வெல்லும் குமரா காப்பாய்.

(சாமியே)

எண்ணெய் காணா ஈர்முடி யாக
மண்ணே தோய்ந்த மலரடி யாகப்
பண்ணே பாடும் பஜனைக ளோடு
தன்னே ரில்லாப் பயணம் தழைக்க

(சாமியே)

குன்றக் குடியில் கூட்டம் கூடி
நன்றாய்ப் பக்தர் நாலா யிரம்பேர்
ஒன்றே உடலும் உள்ளமு மாகச்
சென்றே பழநிப் பயணம் சிறக்க
(சாமியே)

அரண்மனைப் பொங்கல் கலிங்கப் பையா
கரங்களில் நீறு கண்டனூர் சாமி
பரம்பரை யாகப் பழநிப் பயணம்
வரங்கள் தந்து வாழ்த்திடு வாயே.
(சாமியே)

குன்றக் குடியில் முதல்நாள் கூடி
மருது பட்டியில் மறுநாள் தங்கி
சமுத்திரப் பட்டியில் சற்றே தூங்கி
வேலாம் பட்டியில் துயிலை விரட்டி
(சாமியே)

செம்மடை ஊரில் சிறிதே தங்கி
சம்மத மாகச் சத்திரப் பட்டி
நம்மவர் பழநிப் பயணம் ஏழ்நாள்
இம்மையில் பயனை இனிதே அருள
(சாமியே)

காவடி தூக்கும் கால்நடைப் பயணம்
பூவடி பாடும் புனிதப் பயணம்
சேவடி சற்றும் சிவந்திடா வாறு
பாவடி பாடும் பயணம் சிறக்க
(சாமியே)

நடப்போர் பசியால் நலியா வாறு
தடத்தில் நீரும் உணவும் தந்து
கடப்போர் சிந்தை களித்திடு மாறு
திடத்தை அருளித் தேவா காப்பாய்.
(சாமியே)

பள்ளயம் இட்டு வேலினைப் பாடிப்
புள்ளினம் போலப் பயணிகள் கூடி
வெள்ளி முளைத்த வேளையில் உண்டு
துள்ளி நடக்கும் பயணம் சிறக்க
(சாமியே)

பாதையில் சற்றுப் பாதம் தளர்ந்தால்
வாதைகள் தீர்க்கும் நீறு வழங்கிப்
பேதைகள் நெஞ்சப் பிணிகளை நீக்கி
மேதைக ளாக்கி மேன்மைகள் செய்வாய்
(சாமியே)

பழநியை நோக்கிப் பயணம தாகிக்
குழந்தை வேலன் சந்நிதி வணங்கிப்
பழநி ஆண்டவன் பாதம் போற்றும்
பழநிப் பயணம் பயனுய் முடிய
(சாமியே)

ஏழு நாள் நடைபெறும் பழநிப் பாதயாத்திரையின் வரலாறும் வடிவமும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன. இப்பாடலை ஏ. வி. எம். காசெட்டில் வெளியிட்டுள்ளனர். 1975 ஆம் ஆண்டில் நான் நடந்து சென்ற பொழுது சுமார் நாலாயிரம் பக்தர்கள் உடன் நடந்தனர். ஆனுல் இப்பொழுது சுமார் நான்கு லட்சம் பக்தர்கள் தைப்பூசப்

பாதயாத்திரையில் பங்கு பெறுகின்றனர். பாத யாத்திரை அன்பர்கள் பாடிக் கொண்டும், ஆடிக்கொண்டும், முருகனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டும், சாரி சாரியாக நடந்து செல்லும் இந்த அணிவகுப்பைக் காணக் கண்கோடி வேண்டும். இக்காட்சியை நான் காணும் பொழுதெல்லாம் என் கண்களில் இருந்து கண்ணீர் சொரியும். இவர்கள் எல்லாம் காலில் பாதுகை இன்றிக் கையில் குடையின்றி, முதல்நாள் அணிந்த உடையோடு தலைவாராமல், அழகு செய்யாமல், ஆண்டிக் கோலத்தோடு நடந்து செல்வதைக் காணும்போது பழநியாண்டவர் மலைவிட்டு இறங்கி வாராமலா இருப்பார்? அதனால்தான் பாதயாத்திரிகர்கள் நினைத்தது நடக்கிறது; ஆண்டுதோறும் பக்தர் கூட்டம் பெருகுகிறது.

இப்படிப் பாத யாத்திரையாக நடந்து சென்றுதான் இறைவனை வழிபட வேண்டுமா? வாகனங்களில் செல்லக்கூடாதா? என்று கேட்பவர்கள் உளர். வாகனங்களில் சென்றும் வழிபடலாம். வாகனங்களில் செல்லும் போது நாம் கடவுளைக் காணப் போகிறோம். ஆனால் பாத யாத்திரையாகச் செல்லும் போழுது கடவுள் நம்மைக் காண வருகிறார். கல்லும், முள்ளும், வெயிலும், மழையும் வருத்த நாம் நடக்கிறோம். எனவே இறைவன் நாம் நடக்கும் பொழுது நம்மைக் காண வருகிறான்; நம்குறை தீர்க்கிறான்.

பழநிப் பாதயாத்திரை முடித்து வந்தது முதல் திருச்செந்தூர்ப் பாதயாத்திரை அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று அடியேனின் உள்ளுணர்வு தூண்டியது. அதற்கும் ஆண்டவன் வழிவகுத்தான்.

3. திருச்செந்தூர்ப் பாதயாத்திரை

திருச்செந்தூருக்கு ஆண்டுதோறும் தேவகோட்டையில் இருந்து காவடி தாங்கிச் சென்று செந்திலாண்டவனை வழிபட வேண்டும் என்று எண்ணற்ற நண்பர்களிடம் தொடர்ந்து சொல்லி வந்தேன். அதற்கு முதலில் செவி சாய்த்தவர் என் ஆருயிர் நண்பர் தேவகோட்டை திரு **ஆர். வயிரவன்** ஆவார். திருச்செந்தூர்ப் பாதயாத்திரையினை ஆண்டு தோறும் என்னுடன் சேர்ந்து தொடர்ந்து நடத்த அவர் முன்வந்தார். உடனே மற்றொரு நண்பர் திரு. **எஸ். ஏகநாதன்** அவர்களைச் சந்தித்துத் திருச்செந்தூருக்குக் காவடி தாங்கி வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அதற்கு அவர் ''முருகனுக்குக் காவடி தாங்கத்தான் என் தோள்கள் உள்ளன'' என்று மகிழ்ச்சியுடன் கூறிக் காவடி எடுக்க முன் வந்தார். திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக்குத் தேதி குறிக்கும் முக்கியமான பொறுப்பினை எல்லோரும் என்னிடம் கொடுத்தனர்.

சரித்திர முக்கியத்துவம் உள்ள மிகப் பெரிய பொறுப்பல்லவா? அதற்குத் தேதிக் குறிப்பிட நான் யார்? குறித்தால் அதன்படி இனிதே நடைபெற வேண்டாமா? எனவே ஆண்டவனின் ஆணைக்காகக் காத்திருந்தேன். ஒருநாள் அதற்கும் ஆண்டவன் ஆணை கொடுத்தான். அந்த நிகழ்ச்சி வருமாறு... 1977 ஏப்ரலில் ஒருநாள் காலையில் எழுந்து நீராடி இறைவணங்க முற்பட்டேன். அப்பொழுது நண்பர் ஆர் வயிரவன் அவர்களும், அவரது நண்பர்கள் சிலரும் எனது காரைக்குடி இல்லத்துக்கு

சைக்கிள் யாத்திரையாக வந்தனர். தேவகோட்டையில் இருந்து விராலிமலைக்கு சைக்கிளில் யாத்திரை சென்று வழிபட்டுவிட்டுத் திரும்பும் வழியில் நம் வீட்டுக்கு வந் திருப்பதாகக் கூறி விராலிமலை முருகனின் விபூதி பிர சாதம் வழங்கினர். திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக்கு உடனே நாள் குறிக்குமாறு என்னை வேண்டினர். இது எனக்கு "அந்தாதி" என்ற இலக்கணத்தை நினைவுபடுத் தியது. ஒரு யாத்திரையின் முடிவு மறுயாத்திரையின் தொடக்கமாக அமைவதுசிறப்பு. அந்த முறையில் விராலிமலை யாத்திரையின்முடிவு, திருச்செந்தூர் யாத்திரையின் தொடக்கமாக அமைகிறது என்று நினைத்தேன். அது ஆண்டவன் கட்டளை என்று உணர்ந்தேன். உடனே பஞ்சாங்கத்தைப் பார்த்துப் பிங்கள ஆண்டு சித்திரைத் திங்கள் 21 ஆம் நாள் (3-5-1977) சித்திரா பௌர்ணமி அன்று விடிகாலையில் தேவ கோட்டையில் இருந்து காவடி தாங்கிப் புறப் பட்டு, 11-5-1977 அன்று திருச்செந்தூர் சேர்ந்து, 13-5-1977 அன்று காவடி செலுத்துவது என்று நாள் குறித்துக் கொடுத்தேன். அடியேனும், ஆர். வயிரவன் அவர்களும் அமைப்பாளர்களாக இருந்து யாத்திரைக் குரிய முன்னேற்பாடுகளைச் செய்தோம், செந்திலாண் டவன் அந்த யாத்திரையை அற்புதமாக நிறைவேற்றிக் கொடுத்தான். திரு. ஏகநாதன் காவடி தாங்க, மொத்தம் இருபது பேர் சுமார் 150மைல் நடந்து சென்று முதலாண்டு காவடி செலுத்திச் செந்திலாண்டவனை வணங்கி வந்தோம். திருச்செந்தூர்ப் பாதயாத்திரை அமோகமாக ஆண்டுந்தோறும் நடைபெற்று வருகிறது. அண்மையில் பத்தாம் ஆண்டாக அட்சய ஆண்டு சித்திரா பௌர்ணமி (24-4-86) அன்று காவடி செலுத்தப் பெற்றது.

முதலாண்டு நடந்து சென்று காவடி செலுத்திய வுடன் காவடி தாங்கிய ஏகநாதன் அவர்களுக்குக்

"காவடி சாமி'' என்ற பட்டமும், ஆர் வயிரவன் அவர்களுக்குத் ''திருத்தொண்டர்'' என்ற பட்டமும், எங்களுடன் நடந்து வந்து எங்களுக்கெல்லாம் பஞ்சாட்சர உபதேசம் செய்து வைத்த எங்கள் குருநாதர் திரு. **சிதர். சிதம்பரம் செட்டியார்** அவர்கட்குச் ''சிவபாத சேகரர்'' என்ற பட்டமும், பழநிக்குத் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் பாதயாத்திரை செய்த அன்பர் திரு. கதி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கட்குத் ''திருமுருகன்'' என்ற பட்டமும் வழங்கிப் பொன்னாடைப் போர்த்திச் சிறப்பித்தோம்.

அடியேன் திருத்தலங்கட்குச் செல்லும் பொழுது பாடல் எழுதுவது மரபு. அந்த முறைப்படி திருச்செந்தூருக்கு முதலாண்டு நடந்து சென்ற காலை

''செந்தில் ஆண்டவா திருச்செந்தூர் ஆண்டவா
செந்தில் ஆண்டவா திருச்செந்தூர் ஆண்டவா''

என்ற தலைப்பில் பதினைந்து பாடல்கள் பாடினேன். அதில் இரண்டு வரிகள் இறையருளால் அமைந்தன. அந்த வரிகள் வருமாறு.

''காசி முதல் குமரிவரை உனது எல்லையே
கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே''

இந்த வரிகள் தான் எங்களைக் காசிக்கு நடக்குமாறு தூண்டிய ஞானோதய (inspiration) வரிகள் ஆகும்.

அந்த முழுப்பாடலும் வருமாறு;

செந்தில் ஆண்டவா திருச் செந்தூர் ஆண்டவா
செந்தில் ஆண்டவா திருச் செந்தூர் ஆண்டவா

தேவ சேனா பதியே உன்னைப் பாட்டுப் பாடியே
தேடி உன்னை நாடி வந்தோம் செந்தூர் ஓடியே
பாவ மெல்லாம் போக்கு கின்ற பழநி யாத்திரைப்
பக்த ரெல்லாம் கூடி வந்தார் பாத யாத்திரை.

(செந்தில்)

வேலெ டுத்துப் பாட்டுப் பாடி வெற்றி யாகவே
வீர மோடு சுற்றி வந்தார் பற்றி லாமலே
நாலெ ழுத்துக் கற்றவர்கள் யாரு மில்லையே
நமச்சி வாய என்ற பின்னர் நாலு மில்லையே

(செந்தில்)

காடு மேடு பள்ளம் முள்ளு கால்நடை யாகக்
கந்த னுக்குச் சிந்து பாடி வேல்படை யாகப்
போடு போடு போடு என்று போகுது பாரே
போரெ ழுந்த செந்தூ ருக்குக் காவடி பாரே,

(செந்தில்)

பால ரோடு பெண்ணும் ஆணும் பக்தி யாகவே
பாட்டுப் பாடிக் கூட்டம் கூடிச் சித்தி யாகவே
வேல ருக்குச் சித்தி ரையில் காவடி ஆட்டம்
வேலெ டுத்த பேர்க ளுக்குச் சேவடி நாட்டம்

(செந்தில்)

மெல்ல மெல்ல மெல்லச் செல்லும் பாத யாத்திரை
மேனி நோகத் தோணி யாவான் பாத மாத்திரை
வெள்ள மாகக் கூடு கின்றார் மக்கள் கூட்டமே
வேலன் அங்கே ஆடு கின்றான் வீர ஆட்டமே

(செந்தில்)

மூட்டை தூக்கி யாத்திரைக்கு முன்னே வந்தவர்
மோக மெல்லாம் மூட்டை கட்டிப் போட்டு வந்தவர்
வேட்டை யாடும் வேல னுக்கு வள்ளி யாகிறார்
வேலனது பாதத்திலே புள்ளி ஆகிறா.ர்
(செந்தில்)

சோறு போட்டுப் பாதையிலே நீரினை ஊற்றிச்
சுகம ளித்த பேர்களுக்கு வேதனை மாற்றி
ஆறுமுகக் கந்தனவன் ஆறுதல் கூட்டி
அத்தனையும் தந்திடுவான் பால் முகம் காட்டி.
(செந்தில்)

மாசி மகம் பச்சை சாத்தி மால் மருகா நீ
மாந்த ருக்குக் காட்சி தந்தாய் வேல் முருகா நீ
காசி முதல் குமரிவரை உனது எல்லையே
கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே
(செந்தில்)

வைகாசி விசாகத்திலே கடலின் எல்லையே
வந்தி ருந்த பேரை எண்ண வார்த்தை இல்லையே
பங்குனியின் உத்திரத்தில் பக்தர் கூட்டமே
பார்வையிலே ஈர்ப்பதுவும் பாலன் நாட்டமே.
(செந்தில்)

செந்தூரின் கடற்கரையில் தேரும் ஓடுது
செட்டி நாட்டுக் காவடியும் சேர்ந்து கூடுது
எந்தூரும் எங்களுக்குச் சொந்த மில்லையே
ஈசன் மகன் வேலனைப் போல் பந்த மில்லையே
(செந்தில்)

வெய்யி லென்றும் மழையி தென்றும் வாட
வில்லையே
வேட்டி சட்டை சேலை மாற்றிப் போட
வில்லையே
கையி லொன்றும் தோளில் ஒன்றும் கனக்குது
மூட்டை
கடலலையில் செந்தூரான் பிரிக்கிறான் ஏட்டை
(செந்தில்)

பச்சை மயில் வாகனத்தில் பறந்து வருகிறான்
பக்தர் குறை தீர்ப்பதற்கு விரைந்து வருகிறான்
இச்சை எல்லாம் வேலனது பாதத்தில் தானே
எழுந்து விட்டான் நம்முடைய நாதத்தில் தானே
(செந்தில்)

பல்லக்கில் வந்திடுவான் பார்புகழ் வேலன்
பாதத்தில் வந்தவர்க்குப் பைந்தமிழ்ச் சீலன்
உள்ளத்தில் வைத்தவர்க்கோர் ஆயிரம் கோடி
உவகையுடன் தந்திடுவான் பாயிரம் பாடி
(செந்தில்)

அப்பனுக்கும் உபதேசம் அன்ற ளித்தவன்
அன்புடனே எங்களுக்கும் இன்ற ளித்தவன்
சுப்ப னுக்குப் பின்னர் ஒரு தெய்வ மில்லையே
சுகமளிக்க வருவதி லோர் ஐயமில்லையே.
(செந்தில்)

மேக முட்டும் கோபுரமும் அங்கே தெரியுது
மின்னலைப்போல் வேலுமங்கே மின்னித்
தெரியுது
தாகம் தீரச் செந்தூரானைப் பருக வாருங்க
தமிழால் அவனைப் பாடி ஆடி உருக வாருங்க
(செந்தில்)

4. திருத்தணிப் பாத யாத்திரை

முதலாண்டுத் திருச்செந்தூர்ப் பாத யாத்திரை முடிந்ததும் மற்ற ஐந்து படை வீட்டுப் பாத யாத்திரையினை முடிப்பதாகத் தீர்மானித்தோம். அதன்படி ஓராண்டுக்குள் திருப்பரங்குன்றம், பழநி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருத்தணி முதலிய மற்ற படை வீடுகட்கும் தேவ கோட்டையில் இருந்து காவடி ஏந்திச் சென்று வழிபட்டோம். ஆறுபடைவீட்டுப் பாத யாத்திரையில் அதிகமான தொலைவுடையது திருத்தணியாகும். அது தேவகோட்டையில் இருந்து 303 மைல் தொலைவுடையது, திட்டமிட்டுப் பத்தொன்பது நாட்கள் நடந்து திருத்தணிக்கு இனிதே சென்று சேர்ந்தோம். அப்பொழுது சென்னை அன்பர்கள் பலர் சென்னையில் இருந்து காஞ்சீபுரம் வந்து அங்கிருந்து எங்களுடன் பாத யாத்திரையில் கலந்து கொண்டனர். மற்றும் சிலர் சென்னையில் இருந்து நேரே திருத்தணிக்கு நடந்துவந்து எங்களுடன் கலந்து கொண்டனர்.

பிங்கள ஆண்டு மாசித் திங்கள் 21-ஆம் நாள் (5-3-1978) அன்று காலை தேவகோட்டையில் இருந்து புறப்பட்ட நாங்கள் 23-3-1978 அன்று திருத்தணி சென்று, 24-3-1978 பங்குனி உத்தரத்தன்று காவடி பாற்குடங்கள் செலுத்தித் திருத்தணி முருகனை வழி பட்டோம்.

திருத்தணிப் பாதயாத்திரை வழியில் எங்களை மிகவும் சிந்திக்க வைத்த வரி

''காசி முதல் குமரி வரை உனது எல்லையே
கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே''

என்பதாகும். காசியைப் பற்றிய எண்ணம் திருச்செந்தூர் பதிகத்தில் இடம் பெற வேண்டிய அவசியம் என்ன என்பதாகப் பாத யாத்திரை அன்பர்கள் தொடர்ந்து சிந்தித்தனர். அது பற்றி ஏராளமான கேள்விகளை என்னிடம் கேட்டனர்.

''காசி முருக ஸ்தலமா?'' என்று கேட்டனர். அதற்கு அடியேன் ''காசி சிவஸ்தலம்தான். என்ருலும் காசி விசுவநாதர் கோவிலில் சண்முகர் இருக்கிருர். மேலும் காசி நாட்டுக் கோட்டை நகர விடுதியில் முருகன் இருக்கிருர்'' என்றேன்.

''காசிக்கு யாராவது நடந்து போய் இருக்கிருர்களா?'' என்று கேட்டனர். அதற்கு அடியேன், 'நூறு ஆண்டுகளுக்கு முன் நடந்து போய் இருப்பதாகச் சொல்கிருர்கள். மாட்டு வண்டி கட்டிச் சாமான்களை ஏற்றிக் கொண்டு, வீட்டில் வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு செல்வார்களாம். வயதானவர்கள் தான் காசி யாத்திரை செல்வார்கள். அப்படிச் சென்றவர்கள் பெரும்பாலும் திரும்பி வருவதில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்து மாடு மட்டும் திரும்பி வந்ததாகக் கதை சொல்வதுண்டு'' என்றேன்.

''காசிக்கு நமது பாதயாத்திரை உண்டா?'' என்று அடுத்த கேள்வி கேட்டனர். ''திருத்தணியில் அதுபற்றிச் சிந்திப்போம்'' என்றேன். திருத்தணியில் எங்களைச் சந்தித்த நண்பர் திரு. சுப. இராகவன் அவர்கள், ''காசிக்கு இதுவரை யாரும் நடந்து போனதாகச் சரித்திரம் இல்லையே கவிஞரே'' என்று கேட்டார். அதற்கு அடியேன், 'அந்தச் சரித்திரத்தை நாம் படைக்கிறோம்'

என்றேன். "நாம்" என்கிறீர்களே என்றார். "ஆம் நீங்களும் தான்" என்றேன். இவை எல்லாம் ஆண்டவன் அருளால் நிகழ்ந்த உரையாடல்கள். அவன் எங்களைக் காசியாத்திரைக்குத் தயாரித்திருக்கிறான்.

திருத்தணியில் முதலாண்டுக் காவடி செலுத்தியதும், தொடர்ந்து பங்குனி உத்தரக் காவடியைச் சென்னையில் இருந்து திருத்தணிக்கு நடந்து வந்து செலுத்துமாறு சென்னை அன்பர்களிடம் வேண்டிக் கொண்டு, அந்தப் பொறுப்பை ஏற்று நடத்தும் பணியினை திரு. **சுப. இராகவன்** அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் அதனை மிக அருமையாகச் செயற்படுத்துகிறார். சென்னையில் உள்ள "நகரத்தார் திருத்தணிப் பாதயாத் திரைக் குழு"வுக்கு திரு. சுப. இராகவனைத் தலைவராக வும், திரு. பழ. முத்துராமனை உப தலைவராகவும், திரு. எம். எஸ். வி. சேவுகன், திரு. சுப. சின்னக்கருப்பன் ஆகியோரைச் செயலராகவும், மற்றும் பலரைச் செயற் குழு உறுப்பினராகவும் கொண்ட மாபெரும் பக்தர் குழாம் ஆண்டுதோறும் பங்குனி உத்தரக் காவடியினைச் சென்னையில் இருந்து செலுத்தி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

முதல் ஆண்டு திருத்தணியில் காவடி செலுத்தியதும் பக்தர்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கினோம். அப்பொழுது நடந்த ஆசியுரை விழாவில், "காசிக்குப் பாதயாத்திரை உண்டா?" என்று அன்பர்கள் கேட்ட னர். அதற்கு அடியேன் முருகப் பெருமானை ஒரு கணம் தியானித்து உரைத்த பதில் வருமாறு:

"திருத்தணிக்கு 303 மைல் நடந்து வந்துள்ளோம். நமது உடலும் உள்ளமும் சோர்வடையவில்லை. இது போல் ஆறு மடங்கு தொலைவில் காசி இருக்கிறது. இங்ஙனம் முன்கூட்டியே திட்டமிட்டு நடந்தால் நான்கு

மாதத்தில் காசி சேரலாம். ஆகவே காசி யாத்திரை உண்டு'' என்றேன்.

''எப்பொழுது?'' என்று மறுகேள்வி கேட்டார்கள்.

''முருகன் ஆணை கிடைக்கும் பொழுது'' என்று பதில் கூறினேன். அன்றிலிருந்து காசி யாத்திரை பற்றிய எண்ணம் எங்கள் எல்லோரையும் பற்றிக் கொண்டது. எங்கள் குழுவினர்கள் அடியேனைக் காணும்பொழுதெல்லாம் காசி நடை யாத்திரை பற்றித் தூண்டிக் கொண்டே இருந்தனர்.

திருத்தணி முதலாண்டுப் பாத யாத்திரை பங்குனியில் முடிந்த உடன், திருச்செந்தூர் இரண்டாம் ஆண்டுப் பாத யாத்திரை 15.4.1978 அன்று தொடங்கியது. திருச்செந்தூரில் இரண்டாம் ஆண்டுக் காவடி செலுத்திய (23.4.1978) சித்திரா பௌர்ணமி அன்று நிகழ்ந்த ஆசியுரை விழாவில் திரு. சுப. இராகவன் அவர்கட்கு ''அருள் தொண்டர்'' என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தோம். அதுபோல் சிங்கம்புணரி பக்தர் திரு. கு. பழநியாண்டி அவர்கட்கும் ''அருள் தொண்டர்'' என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தோம்.

அப்பொழுதும் ''காசி நடை யாத்திரை'' பற்றிய வினாக்கள் எழுந்தன. ''காசியாத்திரை உண்டா?'' என்றார்கள். ''நிச்சயமாக உண்டு'' என்றேன். ''எப்பொழுது?'' என்றார்கள். ''காலம் வரும். காத்திருப்போம்'' என்றேன்.

அருள் தொண்டர் சுப இராகவன் கேட்டார், ''நானும் காசி யாத்திரையில் உண்டா?'' என்றார். ''ஆம், நீங்களும் நிச்சயம் உண்டு'' என்றேன். ஆண்டவன் அந்த வாக்கினைக் காப்பாற்றிக் கொடுத்தான். அவனது பெருங்கருணையே கருணை.

5. ஆறாண்டுத் திட்டம்

காசிக்கு நடப்பது என்பது சாதாரணமான காரியம் இல்லை. அது உயிரைப் பணயம் வைத்துச் செய்யும் செயலாகும். **பயணம்** என்பதைச் சிறிது மாற்றி எழுதினால் **பணயம்** என்று ஆகும். எந்தப் பயணத்திலும் உயிரைப் பணயம் வைக்கக் கூடிய மன உறுதி வேண்டும் என்பதை இந்த வார்த்தை அமைப்புக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் Set up என்ற வார்த்தைகளை மாற்றி அமைத்தால் Upset என்று ஆகிறது அல்லவா? அதுபோல் தான் பயணம்-பணயம் என்பதும். எனவே உயிரைப் பணயம் வைத்துக் காசி யாத்திரையில் ஈடுபடுவதற்கு முன்பு ஒவ்வொருவரும் தங்கள் குடும்பக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறு ஆலோசனை கூறினேன். எங்கள் குழுவினர்கள் அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர். அடியேனும் எனது குடும்பக் காரியங்களை விரைந்து செயற்படுத்தலானேன்.

வீட்டைப் பழுது பார்த்தேன். எனது புதல்விகளாகிய **பொன்முடி, இளவெயினி** ஆகிய இருவருக்கும் திருமணம் முடித்தேன். நான் நடத்தும் புத்தகத் தொழிலைச் (பொன்முடி பதிப்பகம்) செம்மைப்படுத்தினேன். மூல பவுத்திர நோயால் ஏழரை ஆண்டுக்காலம் அவதிப்பட்ட அடியேன் சென்னையில் உள்ள மாபெரும் மருத்துவ மேதை **டாக்டர் ரெங்கபாஷ்யம்** அவர்களிடம் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன். அந்த வியாதி தீரவே தீராதோ என்று ஐயுற்றிருந்த நிலையில் அந்த

வியாதியை முற்றிலுமாகத் தீர்த்து உதவினார் டாக்டர் ரெங்கபாஷ்யம் அவர்கள். அந்தக் கதை வருமாறு:

2-4-1981 மாலையில் எனக்கு டாக்டர் ரெங்க பாஷ்யம் அவர்கள் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். மாலை 4 மணிக்கு அறுவைச் சிகிச்சை அரங்குக்கு என்னைத் தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிச் சென்றனர். மயக்க ஊசியின் காரணமாகச் சிறிது மயங்கிய நிலையில் அப்பொழுது இருந்தேன். அறுவைச் சிகிச்சை அரங்கில் எங்குபார்த்தாலும் சுவாமிபடங்கள் ஒட்டப்பட்டிருந்தன, ஓரளவு எனக்கு நினைவு இருந்த அந்த நிலையில் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டேன். "இறைவா! இந்த உடலும், உள்ளமும், உணர்வும் நீ கொடுத்தவை. இவற்றை நீ மீண்டும் கொடுத்தாலும் சரி; எடுத்துக் கொண்டாலும் சரி. நீ மீண்டும் உயிரைக் கொடுத்து வியாதியை முற்றிலும் தீர்த்தால் நீ கொடுக்கும் உயிரைக் காசி நடையாத்தி ரைக்குப் பணயம் வைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டேன். பிறகு எனக்கு நினைவு தவறியது. அறுவைச் சிகிச்சை இனிதே நிகழ்ந்தது. இரவு 9 மணிக்கு எனது நினைவு திரும்பியது. அப்பொழுது நான் என் மனைவியிடம் பேசிய முதல் வார்த்தை "கடவுள் நம்மைக் காப்பாற்றி விட்டார்" என்பதாகும்.

உடனே என் மனைவியிடம் நான் அறுவைச் சிகிச்சை அரங்கில் மனதால் செய்து கொண்ட காசி நடை யாத்திரை பற்றிய பிரார்த்தனைக் கடனைப் பற்றிக் கூறினேன். நான் எப்படியாவது உயிர் பிழைத்தால் போதும் என்ற மன நிலையில் இருந்த அவள் "உங்கள் என்றாள். "வியாதி தீர்ந்ததும் நீ நடை யாத்திரைக்குத் தடைபோடக் கூடாது" என்று முன் கூட்டியே அவளிடம் வாக்குக் கேட்டுக்கொண்டேன்.

இறைவன் திருவருளாலும், டாக்டர் ரெங்கபாஷ்யம் அவர்களின் தீவிர சிகிச்சையாலும் ஒரு மாதத்தில் கொடிய மூல பவுத்திர வியாதி முற்றிலுமாகத் தீர்ந்தது. பிறகு சில மாதங்கள் ஓய்வாக இருந்து உடலைத் தேற்றிக் கொண்டேன். அதன்பின் வழக்கம் போல் காசி நடையாத்திரைக்கு உரிய முன்னேற்பாடுகளில் ஈடு பட்டேன்.

இராமேஸ்வரம் முதல் காசிவரை உள்ள நண்பர்கள், நிறுவனங்கள், போக்குவரத்துக் கழகங்கள். அரசு அலுவலகங்கள், மத்திய மாநில அரசுகள் ஆகியவற் றோடு தொடர்பு கொண்டேன். கன்னியாகுமரியில் இருந்து காசிக்குச் செல்கிற தேசீய நெடுஞ்சாலை எண் ஏழு (N.H.7) வழியில் உள்ள ஊர்கள், இடைப்பட்ட தூரங்கள், தங்கக் கூடிய இடங்கள், அங்குள்ள சூழ்நிலை பற்றிய எல்லாச் செய்திகளையும் நுட்பமாகச் சேகரித் தேன். "இந்திய வாகனச் சங்கத்தின் (Auto mobile association of India) சென்னை, நாகபுரி கிளைகளோடு தொடர்பு கொண்டு பல செய்திகளைச் சேகரித்தேன். பெரிய சாலைப் படம் (Road map) விலைக்கு வாங்கி ஆய்வுகள் மேற்கொண்டேன். வட நாட்டுக்குச் செல்லும் பல லாரி ஓட்டிகளோடு தொடர்பு கொண்டு மேலும் பல ஊர்களையும், தங்கும் இடங்களையும் பற்றிய விபரங்களைக் கேட்டு அறிந்தேன். இப்படிப் பல ஆண்டுகளாக நான் திரட்டிய செய்திகள், படங்கள் குறிப்புக்கள் எல்லாம் ஒரு பிளாஸ்டிக் பையில் கட்டப் பட்டுக் கிடந்தன. பயணத்தைப் பற்றித் திட்டமிடுகிற அன்று அவை தேவைப்படும் என்பதால் பத்திரமாகப் பாதுகாத்து வந்தேன்.

இதற்கிடையில் எங்கள் குழுவினர் என்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் காசி நடை யாத்திரை எப்பொழுது என்று துளைக்க ஆரம்பித்தனர். பல

ஆண்டுகளாகக் காசி நடைப் பயணம் பற்றி நாங்கள் வெளியில் கூறி இருந்ததால், எங்கள் வார்த்தையினை நம்பாத சிலர், எங்களைப் பார்க்கும்பொழுது "இதோ போகிறது காசி" என்று கேலி செய்ய ஆரம்பித்தனர். எங்கள் குழுவில் வயதான பெரியவர்கள் சிலர் இருந் தனர். அவர்களில் எங்கள் குருநாதர் சிவபாத சேகரர் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் என்னை விடாமல் தூண்டி வந்தார்கள். மேலும் அவர்கள் வெளியூர் செல்லும் பொழுதெல்லாம் அங்கிருந்தும் என்னை ஊக்குவித்துத் தேதி வைக்கும்படி கடிதம் எழுதி வந்தார்கள். நானோ ஆண்டவனின் ஆணைக்காகக் காத்திருந்தேன்.

எங்கள் குழுவைச் சேர்ந்த அன்பர் தேவகோட்டை "திருமுருகன்" **கதி. வெங்கடாசலம் செட்டியார்** அவர்கள் முப்பதாம் ஆண்டாகப் பழநித் தைப்பூச பாதயாத்திரை முடிந்து ஊருக்குத் திரும்பியவர்கள் சில வாரங்களில் இதயநோயால் திடீரென்று இயற்கை எய்தினார்கள். அந்தச் சோக நிகழ்ச்சியைத் தாங்க மனவலிமை போதாத நிலையில் நான் அவரது உடலுக்கு அருகில் உட்கார்ந்திருந்த வேளையில், எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் பேசலானார், "நீங்கள் இத்தனை வருடத்திற்குள் காசிப் பாத யாத்திரைக்குத் தேதி வைத்திருந்தால் இவரும் வந்திருப்பார். காசி காசி என்று சொல்லிக் கொண்டிருந்தார். காசிக்கு நடக்கும் பாக்கியம் இவருக்குக் கிடைக்கவில்லை. இறந்து விட்டார். எங்களுக்கெல்லாம் வயதாகிறது. எப்பொழுது தேதி வைக்கப் போகிறீர்கள்?" என்றார். அவரது கேள்வி ஆண்டவனின் தூண்டுதலால் வந்ததாகவே உணர்ந்தேன். ஆகவே ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுக் கூறி னேன், "சித்திரை பிறக்கட்டும். தேதி குறிப்பிடு கிறேன்" என்றேன். எல்லோருக்கும் அது மனநிறைவைத் தந்தது. மறைந்த வெங்கடாசலம் செட்டியாரும் எங்களை மானசீகமாக வாழ்த்தி இருப்பார் என்பதில் ஐயமில்லை.

6. ஆண்டவன் ஆணை

துர்மதி வருடம் பங்குனி மாதம் முடியப் போகிறது. துந்துபி வருடம் சித்திரை பிறக்கப் போகிறது. சித்திரை பிறந்தால் காசி நடைப்பயணத்திற்கு உரிய தேதி குறிப்பிடுவதாகச் சொல்லி இருந்தேன். இந்த இடைக்காலத்திற்குள் எனது புத்தகத் தொழில், தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சிகள், குடும்பக் காரியங்கள் ஆகிய அனைத்தையும் செம்மைப்படுத்தி ஒரு கட்டுக்குள் வைத்திருந்தேன். எந்த நேரத்திலும் காசி நடைப் பயணத்திற்கு என்னை நான் தயாராக்கிக் கொண்டிருந்தேன். மேலும் காசி பற்றிய எண்ணம் ஏற்பட்ட ஆறு ஆண்டுகளாக அடியேன் எங்கு சென்றாலும் ஒரு கையில் குடையோடும், மறுகையில் பையோடும் நடந்தே செல்வது என்ற பயிற்சியில் ஈடுபட்டிருந்தேன், அத்துடன் உணவுக் கட்டுப்பாடும் உடையவனாக இருந்தேன். மேலும் உடலை மிகவும் பேணி வளர்த்தேன்.

ஆர்வமுடன் எதிர்பார்த்திருந்த துந்துபி வருடம் சித்திரை மாதம் முதல்தேதி புத்தாண்டு பிறந்தது. ஒருநாள் தேவகோட்டையில் நடைபெற்ற ஒரு பொது நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காக அடியேன் காரைக்குடி முத்துப்பட்டணம் மூன்றாம் வீதியில் உள்ள எளியேனின் இல்லத்தில் இருந்து விடிகாலை ஐந்தரை மணிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். வீதிக்கு வந்தேன். அப்பொழுது காசி நடைப்பயணம் பற்றிய சிந்தனை எழுந்தது. "தேவகோட்டை செல்கிறோம். அங்கு காசிப் பயணத்திற்குத் தேதி கேட்பார்கள். காசி விசுவ

நாதா! கட்டளை இடு'' என்று மனமாரப் பிரார்த்தனை செய்து கொண்டு பேருந்து நிலையம் நோக்கி நடக்கலானேன்.

அடியேன் இல்லத்திற்கு அருகில் சுமார் ஆயிரம் அடி தொலைவில் செல்வ விநாயகர் கோவில் இருக்கிறது. நான் வெளியே செல்லும் பொழுதும், வீடு திரும்பும் பொழுதும் செல்வ விநாயகரைத் தரிசித்தே செல்லும் பழக்கத்தைப் பல்லாண்டுகளாக மேற்கொண்டிருந்தேன். இன்றும் செல்வ விநாயகர் கோவிலை நோக்கி என் கால்கள் நடந்து கொண்டிருந்தன. அப்பொழுது மனத்திற்குள் அவரை எண்ணிப் பிரார்த்தனை செய்து கொண்டே நடந்தேன்.

''கத்தும் கடலின் அலைபோலக்
கவலும் மாந்தர் துயர்நீக்கிச்
சித்தம் மகிழச் செய்கின்ற
தேவே! செல்வ விநாயகனே!
சொத்தும் சுகமும் நல்லறிவும்
தொழிலும் தந்தே அருளுகவே!
முத்துப் பட்டணம் உறைகின்ற
முதல்வா! கடைக்கண் அருளுகவே!''

என்று செல்வவிநாயகரை நெஞ்சால் வழிபட்டுக் கொண்டே சென்றேன். மேலும், ''செல்வ விநாயகரே! சித்திரை பிறந்துவிட்டது. தேவகோட்டை செல்கிறேன். காசிக்கு நடைப்பயணத் தேதி கேட்பார்கள். நான் வரும் தைமாதம் பழநிப் பூசயாத்திரை முடிந்து காசிக்குப் பாதயாத்திரை புறப்படுவோம் என்று சொல்ல நினைக்கிறேன். அதனை ஏற்றுத் தகுந்த

ஆணை கொடுத்து வழிகாட்டி அருள்புரிய வேண்டும்'' என்று மனமாரப் பிரார்த்தித்துக் கொண்டே சென்றேன்.

செல்வ விநாயகர் கோவில் வந்தது. அது ஒரு சிறு கோவில். சந்நிதியில் நின்றேன். அந்த நேரம் சாதாரணமாகக் கோவில் பூட்டி இருக்கும். கம்பிக் கதவின் வழியாகத்தான் செல்வ விநாயகரைத் தரிசிப்பேன். ஆனால் இன்றோ அதிசயமாகக் கோயில் திறந்திருந்தது. பூசாரி செல்வ விநாயகருக்குத் தீபம் காட்டினார். செல்வ விநாயகரை வணங்கிக் காசி யாத்திரைக்கு வழி காட்டும்படியாக வேண்டிக் கொண்டேன். என்ன அதிசயம்! விநாயகரின் பாதத்தில் காசி விசுவநாதரின் புதிய படம் ஒன்று காட்சியளிக்கிறது. அந்தப்படம் நேற்று இரவு 11-மணிவரை அங்கு வரவில்லை. அடியேன் நேற்று இரவு 11-மணிக்குத்தான் வெளியூரில் இருந்து வீடு திரும்பினேன். அப்பொழுது செல்வ விநாயகரைத் தரிசித்த சமயம் அந்தப்படம் அங்கு இருக்கவில்லை.

எனவே புதிய படத்தைக் கண்டதும் என் மேனி சிலிர்த்தது. கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகியது. எந்தக் காசிக்குப் பாதயாத்திரை செல்வதற்கு ஆணை கேட்கிறேனோ, அந்தக் காசி விசுவநாதரே பட உருவில் திடீரென்று வந்து காட்சியளிக்கிறார். இதைவிட வேறு எந்த முறையில் அவர் நமக்கு ஆணை பிறப்பிக்க முடியும்? நாம் எதை நம்புகிறோமோ, அந்த நம்பிக்கையின் வழியாகத்தான் கடவுள் நமக்கு வழி காட்டுவார். ஆகவேதான் பெரியோர்கள் ''கடவுளை நம்பு'' என்றார்கள். அந்த நம்பிக்கை எனக்கு இங்கே வழிகாட்டியது.

பூசாரி காசி விசுவநாதர் படத்துக்குத் தீப ஆராதனை செய்ததும் அடியேனுக்கு விபூதி பிரசாதம் வழங்கினர். உடனே அந்தப் பூசாரியிடம் கேட்டேன். ''இந்தக் காசி விசுவநாதர் படம் இங்கே எப்படி

வந்தது?'' என்று. அதற்கு அவர் கூறிய பதில் என்னை மேலும் வியப்பில் ஆழ்த்தியது. ''யாரோ ஒரு பக்தர் சற்று முன்னர் தான் இங்கு வந்தார். காசிக்குச் சென்று வந்ததாகவும், இந்தப் படத்தை வாங்கி வந்ததாகவும், இதைக் கோயிலில் வைக்குமாறும் கூறி விட்டுச் சென்றார்'' என்றார்.

பூசாரியின் பதில் என்னை மெய் மறக்கச் செய்தது. காசி விசுவநாதரே ஒரு பக்தரின் வடிவில் எழுந்தருளிப் படப் பிரதிஷ்டை செய்து எனக்கு வழிகாட்டி இருப்பதாக நம்பினேன். ''அந்தாதி'' இலக்கணப்படி, ஒரு பக்தரின் காசியாத்திரை முடிவு, எங்களது காசிநடை யாத்திரைத் தொடக்கமாக அமையட்டும் என்று எண்ணினேன். ''செல்வ விநாயகரே! காசி விசுவநாதரே! உங்கள் ஆணை கிடைத்து விட்டது. இந்த ஆணைக்காகத் தான் இத்தனை ஆண்டுகள் காத்துக் கிடந்தேன். இப்பொழுது தைரியமாகத் தேவ கோட்டை செல்கிறேன். வரும் தைமாதத்தில் பழநிப் பூசயாத்திரை முடிந்ததும் காசிக்கு நடைப் பயணம் புறப்படுகிறோம் என்று குறிப்பிடுகிறேன். மார்கழி மாதத்தில் அடியேன் இல்லத்தில் அமைப்புக் கூட்டம் ஏற்பாடு செய்து தேதி முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கிறேன். நல்ல வழிகாட்டிக் காசி நடைப்பயணத்தை இனிதே நிறைவேற்றித்தாருங்கள்'' என்று மனம், மொழி, மெய்களால் வேண்டிக் கொண்டு தேவகோட்டைக்குச் சென்றேன். அங்கே எங்கள் குழுவினர் என்னைச் சூழ்ந்து கொண்டு, ''சித்திரை பிறந்து விட்டது, காசிக்கு நடையாத்திரை எப்பொழுது?'' என்று கேட்டார்கள். உடனே நான் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு, ''ஆண்டவன் ஆணை கிடைத்து விட்டது. வரும் தை மாதம் பழநிப் பூசயாத்திரை முடிந்ததும் காசிக்குப் புறப்படுகிறோம். மார்கழியில் காரைக்குடியில் அடியேன் இல்லத்தில் அமைப்புக் கூட்டம் நடைபெறும். அப்பொழுது தேதி

குறிக்கப்பெறும். அதற்குள் குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். ஆயிரம் ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய்வரை தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். ஆண்டவன் வழிவிடுவான்' என்று கூறினேன்.

ஒருவழியாகக் காசியாத்திரை பற்றித் தெளிவான முடிவுக்கு வந்தது பற்றி எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி. இனி அவரவர் பொறுப்பு. காசி நடைப்பயணம் துந்துபி வருடம் தைமாதம் தொடங்குவதாக எல்லோரிடமும் உறுதியாகக் கூறப்பட்டது. நடையாத்திரை நடைபெறப் போகிறது. இன்னும் பத்து மாதம் தான் இருக்கிறது. அதற்குள் பாதயாத்திரையில் பங்கு பெற விரும்புவோர் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். ஆண்டவனின் அருளும் இருக்க வேண்டும். யார் யார் இந்த வரலாற்றுப் புகழ்மிகு யாத்திரையில் பங்கு பெறுவார்களோ?

7. அமைப்புக் கூட்டம்

துந்துபி ஆண்டு சித்திரை முதல் கார்த்திகை முடிய உள்ள எட்டு மாதங்கள் காற்றுப் போல் பறந்தோடி மறைந்தன. இந்த எட்டு மாதத்துக்குள் அடியேன் எனது புத்தகத் தொழில் முயற்சிகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் அமைத்துக் கொண்டேன். கார்த்திகைக்குப் பிறகு எந்த ஊருக்கும் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சிகட்குத் தேதி கொடுக்கவில்லை. குடும்பக் காரியங்களையும் செம்மைப் படுத்திக் கொண்டேன். கார்த்திகை மாதக் கடைசி வாரத்தில் எங்கள் குழுவினர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் துந்துபி மார்கழி 4-ஆம் தேதி (19-12-1982) ஞாயிறு காலை 8-55 மணிக்குக் காரைக் குடியில் உள்ள அடியேன் இல்லத்தில் காசி நடை யாத்திரை பற்றிய அமைப்புக் கூட்டம் நடைபெறும் என்று, அதன் அமைப்பாளர் என்ற முறையில் அறிவித் திருந்தேன். அடியேன் எந்தச் செயலையும் குறித்த நேரப்படி செய்பவன் என்பது என் நண்பர்கள் அனைவர்க்கும் தெரியும். சொல்லும் எதனையும் அடியேன் செயற் படுத்துபவன் என்பதும் அவர்களுக்குத் தெரியும். எனவே காலை 8-50 மணிக்குள் ஒன்பது பேர் எங்கள் இல்லத்திற்கு வருகை புரிந்தனர். அடியேன் தினந்தோறும் முதல் தெய்வமாக வழிபடும் என் தாய் மீனாட்சியையும், பிறகு செந்திலாண்டவனையும் எங்கள் வீட்டில் வழிபட்டேன். வீட்டு அருகில் உள்ள செல்வ விநாயகரையும் வழிபட்டேன். அங்குள்ள காசி விசுவ நாதர் படத்தினையும் வழிபட்டேன். நடைப் பயணத்திற்கு நல்லதொரு தேதி குறிப்பிட்டு, நல்வழி

காட்டும்படி எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டேன்.

காலை 8-50 மணிக்குக் காசி நடைப் பயணத்திற் குரிய செய்திகள், படங்கள் முதலியன சேகரித்து வைத்திருந்த பிளாஸ்டிக் பையினை அலமாரியில் இருந்து எடுத்தேன். கையில் எடுத்த பை நழுவிக் கீழே விழுந்து கிழிந்தது. உள்ளே இருந்த படம், செய்திக் குறிப்புக்கள் முதலியன தரையில் சிதறின. அப்பொழுது அடியேன் குறிப்பிட்டேன். இதுவரை பல ஆண்டுகளாகப் பத்திர மாக இருந்த பை இன்று கிழிகிறது. ஆகவே இனி இந்தப் பைக்கு வேலை இல்லை. பாத யாத்திரை தொடங்கப் போகிறது என்பதற்கு இதுவே ஒரு நல்ல அறிகுறி'' என்றேன்.

காலை 8-55 மணிக்கு அமைப்புக் கூட்டம் தொடங்கியது. அதற்கு அமைப்பாளர் என்ற முறையில் அடியேன் தலைமை வகித்தேன். இறை வணக்கத்திற்குப் பிறகு அடியேன் காசி நடைப் பயணம் பற்றிய எல்லாச் செய்திகளையும் திரட்டிச் சொன்னேன். சரித்திர முக்கியத்துவம் உடைய அக் கூட்டத்திற்குக் கீழ்க் கண்டோர் வந்திருந்து கையொப்பமிட்டனர்.

1. அரு. சோமசுந்தரன். காரைக்குடி
2. ''அருள் தொண்டர்'' லெ. சுப்பய்யா செட்டியார்; நேமத்தான்பட்டி
3. ''திருத் தொண்டர்'' ஆர். வயிரவன் தேவகோட்டை
4. ''இசைத் தொண்டர்'' ந. காசிநாதன் தேவகோட்டை
5. ''இசைத் தொண்டர்'' இராம. லெட்சுமணன் தேவகோட்டை

6. என். அய்யாச்சாமி. திருச்சி-3

7. ''சிவபாத சேகரர்'' சி த. சிதம்பரம் செட்டியார். தேவகோட்டை

8. ''வேல்சாமி'' சுப. நல்லதம்பி; கார்மாங்குடி. தேவகோட்டை

9. பொ. தங்கவேலு பிள்ளை. தேவகோட்டை

மேற்படி கூட்டத்தில் அடியேனை அமைப்பாளராக நியமித்தும், அமைப்பாளர் சொற்படி காசி நடைப் பயண யாத்திரிகர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அமைப்பாளர் செய்யும் முடிவுகளுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும் என்றும் தீர்மானங் கள் ஒருமனதாக நிறை வேற்றப் பட்டன. யாத்திரையில் பங்கு பெற விரும்புவோர் அமைப்பாளரிடம் ரூ 100. நன்கொடை செலுத்திப் பெயரைப் பதிவு செய்து கொள் வது என்றும், யாத்திரைக்குத் தள்ளுவண்டி (சைக்கிள் ரிக்ஷா) கூடாரம் முதலிய தேவையான பொருள்களைத் தயாரித்துக் கொள்வது என்றும், யாத்திரிகர்கள் அனைவரும் மஞ்சள் உடை அணிந்து கொள்வது என்றும், தேவையானால் குடை, நடையன் (பாதுகை) பயன்படுத்துவது என்றும் தீர்மானிக்கப் பெற்றன. ஒவ்வொருவரும் தம் செலவுக்காக ரூ 1500-க்கு ஸ்டேட் பாங்க் பயணக் காசோலையாக (Traveller'scheque) வைத்துக் கொள்வது என்றும் தீர்மானிக்கப் பெற்றது. பயணத் திட்டங்களை (programme) அமைப்பாளர் திட்டமிட்டுத் தெரிவிப்பது என்றும் அதன்படி யாத் திரிகர்கள் யாத்திரையில் பங்கு பெறுவது என்றும் தீர் மானிக்கப் பெற்றது.

19-12-1982 காலை 8-55 மணிக்குத் தொடங்கிய அமைப்புக் கூட்டத்தில் யாத்திரைப் பாதை-நாள்-தூரம்

முதலிய விபரங்கள் தற்காலிகமாகக் குறிக்கப் பெற்றன. இரண்டு பேர் பெரிய இந்தியாப் படத்தைக் கையில் பிடித்துக் கொண்டனர். அடியேன் ஒவ்வொரு நாளும் நாம் நடக்கும் தூரமும், போய்ச் சேரும் இடமும், பகலிலும் இரவிலும் தங்கும் இடங்களும் பற்றிய விபரங் களைக் கணக்கிட்டுச் சொல்லிக் கொண்டே வந்தேன். பயணத்தின் முதல் நாள் புறப்படும்இடம் இராமேசுவரம். பகலில் தங்கும் இடம் தங்கச்சிமடம். தூரம் 4 மைல். பிறகு மாலையில் புறப்பட்டுப் பாம்பன் வந்து தங்கல். தூரம் 6 மைல். இரண்டாம் நாள் மண்டபம் வழியாக உச்சிப்புளி தங்கல். 15 மைல். மூன்றாம் நாள் இரவு தங்கல் இராமநாதபுரம். 15 மைல். என்று ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியாக (Programme) கூறிக்கொண்டே வந்தேன். அதனைத் "திருத்தொண்டர்" ஆர். வயிரவன் எழுதிக் கொண்டே வந்தார். "இசைத் தொண்டர்" **ந. காசிநாதன்** தனது பேனாவால் பெரிய இந்தியாப் படத்தில் உள்ள தேசீய நெடுஞ்சாலைக் கோட்டின் மீது இராமேஸ்வரத்தில் உள்ள புள்ளியில் இருந்து தொடங்கி காசி நோக்கி உள்ள ஊர்ப் புள்ளிகளை இணைத்துக் கோட்டினை இழுத்துக் கொண்டே வந்தார். சுமார் 10மணி அளவில் கோடு போடத் தொடங்கியவர் மதியம் 1-30 மணி அளவில் அடியேன் 113-ஆம் நாள் நாராயண்பூர் 6 மைல், 114-ஆம் நாள் ராம்நகர் 6மைல். 115-ஆம் நாள் மாளவியா கங்கைப் பாலம் 10 மைல் என்று கூறி 116-ஆம் நாள் காசி 10 மைல் என்று கூறினேன். உடனே இசைத்தொண்டர் காசிநாதன் படத்தில் காசிப் புள்ளிபோடு கோட்டை இணைத்து "அண்ணே! நான் காசிக்கு வந்துவிட்டேன்" என்று மகிழ்ச்சியோடு துள்ளி எழுந்தார். உண்மை. இராமேசுவரத்தில் தொடங்கிய கோடு காசியில் முடிவு பெற்றது. அவரைப் பொறுத்தவரை அவர் அன்றே காசிக்குச் சென்றுவிட்டார். அவரது பெயரே காசிநாதன்

அல்லவா? அவரது உடல் காரைக்குடியில் இருந்தாலும், உள்ளம் காசியில் இருந்தது. எங்கள் எல்லோரது மன நிலையும் அதுதான். நாங்கள் எல்லாம் மனத்தால் கோயில் கட்டிய பூசலார் நாயனாரின் மனநிலையில் இருந்து அன்று வரலாற்றுப் புகழ்மிக்க காசி நடை யாத்திரைத் திட்டத்தை வகுத்தோம். பிறகு மதிய உணவு உண்டு மேற்கொண்டு சிந்திக்க வேண்டியவற்றைப் பற்றி எல்லாம் தீவிரமாகவும், ஆழமாகவும் சிந்தித் தோம். பயணத்திற்கு வேண்டிய பொருள்களைப் பற்றி எல்லாம் திட்டமிட்டோம். அவற்றை நன்கொடைகள் மூலம் பெறக் கருதினோம். இனித் தேதி குறிக்க வேண்டியதுதான் பாக்கி.

8. தேதி குறித்தல்

அன்று (19. 12. 1982) மாலையில் காரைக்குடிக்கு அருகில் உள்ள இலுப்பைக்குடி என்ற ஊருக்குச் சென்றோம். அங்கு புகழ் மிக்க தான்தோன்றிநாதர்—சவுந்தரநாயகி அம்மன் திருக்கோயில் உள்ளது. அக்கோயிலில் வயிரவப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். அக்கோயில் அருகில் "சக்திதாசர்" திரு **கே. கே. சுப்பிரமணியஐயர்** என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சோதிடம் பார்ப்பதிலும் நாள் குறிப்பதிலும் பேராற்றல் பெற்றவர். எனவே அவரைச் சந்தித்து இலுப்பைக்குடிக் கோயில் சந்நிதியில் தேதி குறிப்பது என்று முடிவெடுத்து இலுப்பைக்குடிக்குச் சென்று அவரைச் சந்தித்தோம்.

அவருக்கு வயது சுமார் 70. கண் பார்வை குறைந்து, உடல் தளர்ந்திருந்த நிலையிலும் அவர் எங்களை வரவேற்றுப் பஞ்சாங்கத்தைப் பார்த்துப் பயணத் தொடக்க நாள் கணிக்கத் தொடங்கினார். கோயில் முற்றத்தில் கணிப்புவேலை நடந்தது. தைமாதத்தில் ஒரு நாள் குறித்தார். அத்தேதியில் பழநிப் பூசயாத்திரை நடைபெறுவதால் பழநிப் பாதயாத்திரையில் ஈடுபட்டிருப்பவர்கள் காசி நடைப் பயணத்தில் பங்குபெற முடியாது. ஆகவே தை மாதத்தில் வேறு ஒரு தேதி பார்க்கச் சொன்னோம். தைமாதத்தில் வேறு தேதி எதுவும் பொருத்தமாக அமையவில்லை. எனவே மாசி மாதத்தில் பார்க்கச் சொன்னோம். மாசி மாதத்தில் 5ஆம்தேதி (17. 2. 1983) மிகப் பொருத்தமாக இருந்தது. இதனை விட்டால் மாசி

மாதத்தில் வேறு பொருத்தமான நாளே கிடையாது. எனவே இராமேசுவரத்தில் இருந்து காசி நடைப்பயணம் புறப்படும் தேதி மாசி 5 (17. 2. 1983) என்று தீர்மானித்தோம். அதுபற்றிய குறிப்பு ஒன்றை திரு K. K. சுப்பிரமணிய ஐயர் தம்கையால் எழுதி மஞ்சள் தடவி வயிரவர் சந்நிதியில் வைத்து அடியேனிடம் தந்தார். தான் தோன்றி நாதரையும், சௌந்தரநாயகி அம்மனையும், வயிரவப் பெருமானையும் வழிபட்டு. காசி நடையாத்திரையினை வெற்றிகரமாக நடத்தித் தருமாறு வேண்டிக்கொண்டு காரைக்குடிக்குத் திரும்பினோம். மாசி 2 ஆம் தேதி (14. 2. 83) காரைக்குடியில் இருந்து பயணமாவது என்று தீர்மானித்தோம்.

காசி நடையாத்திரை புறப்படும் தேதியினை எல்லோருக்கும் அறிவித்தோம். இனி காசியாத்திரை பற்றிய அடுத்த கூட்டம் எப்பொழுது என்று நண்பர்கள் கேட்டனர். காசிக்குப் பயணமாகும் நாளன்று என்று கூறி அனைவர்க்கும் நன்றி கூறி அனுப்பி வைத்தேன்.

சக்திதாசர் திரு K. K. சுப்பிரமணிய ஐயர் தேதி குறித்துக் கொடுத்த விபரம் வருமாறு:

ஸ்ரீதேவிசகாயம். ஸ்ரீசண்முகமயம்.
ஸ்ரீகாசி விசுவநாதர் துணை.

ஸ்வஸ்திஸ்ரீ மங்களகரமான துந்துபி வருடம் மாசி மாதம் 5 ஆம் தேதி (17. 2 1983) வியாழக்கிழமை சுக்கில சதுர்த்தியும் ரேவதி நடசத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை மணி 8க்கு மேல் 9க்குள் மீனலக்கினத்தில் இராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டுப் பக்த கோடிகள் ஸ்ரீகாசித்தலத்துக்கு நடையாத்திரை தொடங்கிச் செல்ல சர்வ உத்தமம்.

சுபம்

ஸ்ரீ நவக்கிரக சகாயம்.

9. முன்னேற்பாடுகள்

யாத்திரைக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டேன். மாபெரும் காசி நடைப் பயணத்திற்கு நன்கொடைகளும், பொருள்களும் வழங்குமாறு அச்சிட்ட வேண்டுகோள் கடிதத்தைப் பல ஊர்களுக்கும் செல்வர்களுக்கும் அனுப்பினேன். அக்கடிதம் வருமாறு:-

வேண்டுகோள் கடிதம்
இராமேஸ்வரம்– காசி நடையாத்திரை

பேரன்புடையீர்,

வணக்கம்—முருகனின் ஆறுபடை வீட்டுக்கும் நடந்து சென்று காவடி செலுத்தி வழிபட்ட முருகபக்தர்கள் சுமார் 10 பேர் இப்பொழுது இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்கு நடந்து சென்று ஸ்ரீகாசி விசுவநாதரையும், விசாலாட்சி அன்னையையும், அன்னபூரணியையும், கால பைரவரையும் வணங்கி, இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கும், இந்திய மக்களின் நலத்துக்கும், இந்தியாவின் வளத்துக்கும் பிரார்த்திக்கத் திட்டமிட்டுள்ளோம்.

யாத்திரைக் காலம்:- சுமார் 5 மாதம்
யாத்திரைதூரம்:- சுமார் 2000மைல்கள்

நடையாத்திரை துந்துபி ஆண்டு மாசி மாதம் 5-ம் தேதி (17-2-83) காலை 8½மணிக்கு

இராமேஸ்வரத்தில் இருந்து தொடங்குகிறது. யாத்திரை இனிதே நிறைவேற வாழ்த்துக. யாத்திரைப் பொருள்கள் கொண்டு செல்ல ஒரு சைக்கிள் ரிக்ஷா, துணிக் கூடாரம் (Tent), ஸ்டவ், விளக்கு, சில பாத்திரங்கள், மருந்துகள் முதலியன தேவை. தங்களால் இயன்ற உதவி யினை ரொக்கமாகவோ, அல்லது டிராப்ட்டு மூலமாகவோ, அல்லது பொருள்களாகவோ.

பொற்கிழிக் கவிஞர்:-

அரு. சோமசுந்தரன், M. A., B. T.,

அமைப்பாளர்:-

இராமேஸ்வரம் காசி நடையாத்திரைக் குழு.
C/o பொன்முடிபதிப்பகம்
123. முத்துப்பட்டணம் மூன்றாவது தெரு,
காரைக்குடி, இராமநாதபுர மாவட்டம்

என்ற முகவரிக்கு அனுப்பி உதவப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

காரைக்குடி — அன்புசால்
19—12—82. — **அரு. சோமசுந்தரன்**
போன்: 824. — அமைப்பாளர்

ஆனால் இந்தக் கடிதத்துக்குக் கிடைத்த வரவேற்பு மிகக் குறைவாகவே இருந்தது. அதற்குக் காரணம் இந்த யாத்திரை நடைபெறுமா? குறிப்பிட்ட தேதியில் யாத்திரைக் குழு புறப்படுமா? புறப்பட்டாலும் காசிக்குப் போய்ச் சேருமா? என்ற ஐயம் எல்லோருக்குமே இருந்த்து.

இந்த யாத்திரையில் யார் யார் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பது தெளிவில்லாமலே காலம் நகர்ந்தது.

அரு. சோமசுந்தரன்
சித. சிதம்பரம் செட்டியார்
பொ. தங்கவேலு பிள்ளை
சுப. நல்லதம்பி
என். அய்யாசாமி

என்ற ஐந்து பேர்கள்தான் முதலில் ரூ100/- நன்கொடை செலுத்திக் காசி நடைப்பயணத்திற்குத் தம் பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர். பிறகு ஒவ்வொருவராகத் தம் பெயர்களைப் பதிவு செய்ய லாயினர். யாத்திரைத் தொடக்க நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

யாத்திரைக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், துணிமணிகள், சமையல் பாத்திரங்கள், கூடாரம் (tent) முதலிய பொருள்களைக் கொண்டு செல்ல ஒரு சைக்கிள் ரிக்ஷா தயாரிக்கச் சென்னையில் உள்ள "சுந்தர் டிரேடர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ்" என்ற நிறுவனத் திற்கு ஆணையிட்டிருந்தேன். அது சம்பந்தமாக அடியேன் சென்னைக்குச் சென்றிருந்தேன். குரோம் பேட்டையில் வாழும் "அருள் தொண்டர்" திரு. சுப. இராகவன் என்னை உடனே சந்தித்துப் பெயரைப் பதிவு செய்து கொள்ளவில்லை. அடியேன் யாரையும் நேரில் சந்தித்து யாத்திரையில் பங்கு பெறுமாறு வற்புறுத்துவதில்லை என்று முடிவு செய்திருந்தேன். எனவே என்னை விருப்பமுடன் சந்தித்துப் பெயரைப் பதிவு செய்து கொள்பவர்களையே நான் விரும்பினேன். காசிக்கு நடக்கும் பேறு உடையவர்களை ஆண்டவனே தேர்ந்தெடுத்து அனுப்புவான் என்பது என் கருத்து.

ஒருநாள் இரவு 10-மணி அளவில் சென்னையில் என் தம்பி **ஆண்டான் செட்டி** இல்லத்தில் திரு. சுப. இராகவன் என்னைச் சந்தித்து ரூ. 100/- தந்து தன் பெயரைப் பதிவு செய்து கொண்டார். ''ஏன் இவ்வளவு நாள் தாமதம்?'' என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய விபரங்கள் என்னைப் புல்லரிக்கச் செய்தன. ''நான்கு நாட்களுக்கு முன்னாலேயே நான் உங்களைச் சந்தித்து, ரூபாய் கொடுத்துப் பெயரைப் பதிவு செய்து கொள்வது என்று புறப்பட்டேன், ஆனால் அன்று என் பையில் இருந்த இரண்டு தங்க வளையல்கள் வழியில் எப்படியோ கீழே விழுந்து காணாமல் போய்விட்டன. அவை கிடைத்தால் ஒழிய நான் யாத்திரையில் கலந்து கொள்ளக் கூடாது என்று என் மனைவி கண்டிப்பாய்த் தடுத்துவிட்டாள். ''பெயரைப் பதிவு செய்யப் புறப்பட்ட அன்றே தங்க வளையல் காணாமல் போகிறது. பிறகு நீங்கள் உண்மையிலேயே காசிக்குப் புறப்பட்டால் என்னென்ன காணாமல் போகுமோ? மேலும் வழியில் காடு, மலை, சிங்கம், புலி, கரடி, கொள்ளைக் கூட்டம் —இப்படி எல்லாவற்றையும் கடந்து நான்கு மாதம் சிரமப்பட்டு 2000-மைல் நடந்து சென்று காசியை அடைய வேண்டும். இது என்ன நடக்கக் கூடிய காரியமா?'' என்று என்னைத் தடுத்து விட்டாள். நான் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தேன். அவள் கேட்கவில்லை. ''தங்க வளையல் திரும்பக் கிடைத்தால் ஒழியக் கங்கையும் இல்லை, காசியும் இல்லை'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். வேறு வழியில்லாமல் நான் குரோம்பேட்டை வீதிகள் எல்லாவற்றையும் சல்லடை போட்டுத் தேடினேன். தங்க வளையல் கிடைக்கவில்லை. காசி விசுவநாதா! இது என்ன சோதனை என்று தேம்பினேன். இன்று காலை குரோம் பேட்டைக் கோயிலில் தரிசனம் செய்து கொண்டிருந்த பொழுது நண்பர் ஒருவர் என்னைத் தேடி வந்து இன்

னொரு நண்பரின் வீட்டுக்கு அழைத்தார். அவர்பின் சென்றேன். அங்கே என்னுடைய தங்கவளையல் இருந்தது. விறகு வண்டிக்காரர் ஒருவர் எங்கள் வீட்டு வீதியில் அதனைக் கண்டெடுத்து, ஒருவரிடம் சொல்ல, அது எனது நண்பருக்குத் தெரியக் கடைசியாக அவர் வீட்டுக்கு அப்பொருள் வந்து சேர, எனது தங்கவளையல் காணாமல் போன செய்தி ஊரெல்லாம் பிரபலமாகி இருந்ததால் உடனே எனக்கு ஆளனுப்பி என்னிடம் தந்தார்கள். நான் அந்த விறகு வண்டிக்காரருக்குச் சிறிது நன்கொடை கொடுத்து நன்றி கூறிவிட்டு, என் மனைவியிடம் ஓடிச் சென்று வளையலைக் கொடுத்து நடந்த கதைகளைச் சொன்னேன். உடனே அவள் மகிழ்ச்சியோடு என்னைக் காசி நடையாத்திரையில் கலந்து கொள்ள அனுமதித்து, உங்களிடம் ரூ.100/- கொடுத்துப் பதிவு செய்து கொள்ள அனுப்பினாள். இதோ நூறு ரூபாய்'' என்று என்னிடம் ரூபாய் தந்து தன் பெயரைப் பதிவு செய்தார்.

அவரைப் பின்பற்றி:—

க. தேனிமலை
கு. பழநியாண்டி
பி. சுப்பையா
ஆர். எம். இராசாங்கம்
அ. திருநாவுக்கரசு செட்டியார்,

என்ற அன்பர்கள் தம் பெயரைப் பதிவு செய்து கொண்டனர். ஆக இதுவரை 11 பேர் சேர்ந்திருந்தனர். நாங்கள் விரும்பியது 10 பேர். கூடுதலாகவே ஒருவர் சேர்ந்துள்ளார். ஆகவே பயணம் நிச்சயம் என்று பரவலாகப் பேசத்தலைப்பட்டனர்.

இருந்தாலும் சைக்கிள் ரிக்ஷா, கூடாரம் முதலியன தயாராக இல்லாததாலும், எதிர் பார்த்த அளவுக்கு நன்கொடைகள் வராததாலும் பயணத்தேதி ஒத்திப்

போடப்படலாம் என்ற ஐயமும் வெளியில் சிலருக்கு இருந்தது. ஆனால் அடியேனைப் பொறுத்த வரை எந்த ஐயமும் இல்லை. நான் புறப்படுவதற்கு உரிய எல்லா ஏற்பாடுகளிலும் முனைந்து ஈடுபட்டேன். நாள் நெருங்க நெருங்க என் மனைவியைச் சமாதானப்படுத்து வது எனக்குப் பெரிய காரியமாகி விட்டது. "இவ்வளவு ஆபத்தான இந்தப் பயணத்திற்கு இப்பொழுது என்ன அவசரம்?" என்று என் மனைவி என்னைக் கேட்டுத் துளைக்கத் தொடங்கினாள். மேலும் நான் உயிரோடு திரும்பி வரவேண்டுமே என்ற ஆர்வத்தால் அவளது முகத்தில் அச்சரேகை படிய ஆரம்பித்தது. அவளுக்குப் பெருமளவில் ஆறுதல் கூறித் தேற்றினேன், "நிச்சயம் பயணம் முடித்துத் திரும்பி வருவேன்" என்று உறுதி கூறினேன். என்றாலும் அவளுக்கு மன அமைதி இல்லை.

ஒருநாள் பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். மத்தியபிரதேசத்தில் மாபெரும் கொள்ளைக் காரியான பூலாந்தேவி காவற்படையிடம் சரண் அடைந்தாள் என்ற செய்தியை என் மனைவியிடம் காட்டிப் "பார்த்தாயா? இனிப் பயமில்லை. கொள்ளைக்காரி சரண் அடைந்து விட்டாள். இனி நாங்கள் பத்திரமாகச் செல்லலாம்." என்றேன். அதற்கு அவள் "மத்தியப் பிரதேசக் காடு களில் கொள்ளைக் கூட்டம் இருக்கிறது என்றார்கள். நான் நம்பவில்லை. இந்தச் செய்தியைப் பார்க்கும் பொழுது அது உண்மை என்று தெரிகிறது. ஆகவே எனக்கு இப்பொழுதுதான் பயம் அதிகரிக்கிறது" என்றாள். என் முகத்தில் அசடு வழிந்தது. பிறகு அவளுக்கு வீர வரலாறுகளையும், நாயன்மார் சரித்திரங் களையும் கூறி ஒருவாறு சமாளித்தேன். பயணக் காலத் தில் பல ஊர்களுக்கும் அவள் பேருந்து மூலம் வந்து என்னைப் பார்த்து மன அமைதி கொள்ளலாம் என்றும் வாக்களித்தேன்: அதன் பிறகுதான் அவள் ஒருவாறு மன நிம்மதி அடைந்தாள்.

காசிக்கு யாத்திரை புறப்படுபவர்கள் முதலில் தேவ கோட்டைக்கு அருகில் உள்ள உப்பூரில் கோயில் கொண்டுள்ள வெயிலுகந்த விநாயகரைத் தரிசிக்க வேண்டும். அடுத்துத் தேவி பட்டினம் சென்று அங்குள்ள கடலில் நீராடிக் கடலில் உள்ள நவபாஷாண நவக்கிரகங்களை வழிபடவேண்டும். பிறகு இராமேஸ்வரம் சென்று எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிக் கடல் மணலும் கோடி தீர்த்தமும் எடுத்துக் கொண்டு காசிக்குப் புறப்பட வேண்டும். காசியில் கங்கை ஆற்றில் இராமேசுவரக் கடல்மணலைக் கரைத்து, நீராடி, விசுவநாதப் பெருமானுக்கு இராமேசுவரக் கோடி தீர்த்தத்தை அபிஷேகம் செய்து, வழிபட வேண்டும். பிறகு காசிக் கங்கை நீரை எடுத்து வந்து இராமேசுவரத்தில் இராமநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட வேண்டும். பின்னர் மதுரை சென்று மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபட்டு வீடுதிரும்ப வேண்டும். காரைக்குடியில் அடியேன் இல்லத்தில் தொடங்கும் யாத்திரை அடியேன் இல்லத்தில் மீண்டும் வந்து நிறைவேறும் விதத்தில் நிகழ்ச்சி நிரல் அமைக்கப் பெற்றது.

அந்த நிகழ்ச்சி நிரல் வருமாறு:

★

10. நடைப்பயண நிகழ்ச்சி நிரல்

இராமேஸ்வரம்–காசி–நடையாத்திரை

Rameswaram-Varanasi on Foot

பயண நிகழ்ச்சி—Daily Programme

தேசிய நெடுஞ்சாலை எண் 7—National Highway No. 7

துந்துபி மாசி 2-ஆம் தேதி (*14-2-1983*) திங்கட் கிழமை காரைக்குடியில் கவிஞர் அரு. சோமசுந்தரன் (அமைப்பாளர்) இல்லத்தில் காலையில் சந்தித்தல்-மாலையில் தேவகோட்டைக்குப் பயணம்-இரவு 7 மணிக்குத் தேவகோட்டை சிலம்பணி விநாயகர் கோவிலில் வழிபாடு.

15-2-1983 விடிகாலை 5-45 மணிக்குத் தேவகோட்டையில் இருந்து உப்பூர் சென்று விநாயகரை வணங்கித் தேவிபட்டினம் சென்று கடலில் நீராடி நவபாஷாணம் வணங்கி இராமேஸ்வரம் செல்லல்.

16-2-1983 இராமேஸ்வரத்தில் கடல்நீராடி, தீர்த்தங்கள் ஆடி, இராமநாதரையும் இறைவியையும் வணங்கிக் கோடித்தீர்த்தமும் கடல் மணலும் சேகரித்துக் கொள்ளல்.

The Pilgrims start from Rameswaram on 17-2-83 at 8-30 A.M. on Foot to Varanasi.

நாள்:

1. துந்துபி மாசி 5 தேதி (17-2-1983) வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு இராமேஸ்வரம் கோயிலில் இருந்து காசிக்கு நடையாத்திரை தொடங்குதல்— தங்கல் தங்கச்சிமடம்
2. 18-2-83 மண்டபம் வழி உச்சிப்புளி தங்கல் (பாம்பன்சாமி மடம் முருகன்)
3. 19-2-83 இராமநாதபுரம், Ramanathapuram . மைல் (50)
4. 20-2-83 திருப்பாலைக்குடி வழி உப்பூர்
5. 21-2-83 திருவாடானை நால்ரோடு. Thiruvadanai Textiles
6. 22-2-83 தேவகோட்டை Devakottai. (50)
7. 23-2-83 சண்முகநாதபுரம் வழி காரைக்குடி. Karaikudi (12)
8. 24-2-83 பள்ளத்தூர் (வழி) நேமத்தான்பட்டி (10)
9. 25-2-83 நமனசமுத்திரம் (வழி) புதுக்கோட்டை Pudukottai (18)
10. 26-2-83 நார்த்தாமலை (வழி) கீரனூர் (18)
11. 27-2-83 மாத்தூர் (வழி) திருச்சி Tiruchirappalli (15)
12. 28-2-83 டோல்கேட்—குணசீலம் (16)
13. 1-3-83 முசிறி (16)
14. 2-3-83 தொட்டியம்— (16)
15. 3-3-83 —நாமக்கல் (15)
16. 4-3-83 -மஞ்சராடி அல்லது அண்டலூர்கேட் (16)
17. 5-3-83 -சேலம் Salem (15)
18. 6-3-83 அம்மாபாளையம் (10)

19. 7-3-83 ஓமலூர்-மேச்சேரி (15)
20. 8-3-83 தொப்பூர் (15)
21. 9-3-83 மலைஏற்ற இறக்கம் (8)
22. 10-3-83 -தர்மபுரி Dharmapuri (10)
23. 11-3-83 -காரிமங்கலம் (Straight Road) (15)
24. 12-3-83 பெண்ணை நதிப்பாலம் கிருஷ்ணகிரி Krishnagiri (18)
25. 13-3-83 -Road Junction மலைப்பகுதி (St) (15)
26. 14-3-83 -சூலகிரி: (மலை 2 மைல்) (8)
27. 15-3.83 -ஹோசூர் Hosur (15)
28. 16-3-83 Road Jn. (St) கர்நாடகா-தமிழ்நாடு எல்லை. Check post (8)
29. 17-3-83 -ஹெப்பகோடி Hebgodi (15)
30. 18-3-83 .பெங்களூர் Bangalore (12)
31. 19-3-83 -Road Jn (St) எலகங்கா YElahanka (10)
32- 20-3-83 -தரன்ஹள்ளி Daranhalli (15)
33. 21-3-83 -Road Jn. (St) Straight (10)
34. 22-3-83 சிக்பலப்பூர் Chikballapur (5) -பெரசெண்ட்ரா Peresandra (15)
35. 23-3-83 Rd Jn (St) -ஆந்திரா எல்லை Andhra Check Post (15)
36. 24-3-83 RdJn (St)-பாலசமுத்திரம் Palasamudram (13)
37. 25-3-83 Rd Jn (St)- பெனுகொண்டா Penugonda (14)
38. 26-3-83 குட்டுரு Gutturu (St) (9) -Rd Jn St (9)
39. 27-3-83 மமிலாபள்ளி Mamilapalli (9) -மருரு Maruru (5)
40. 28-3-83 Rd Jn (St) -அனந்தப்பூர் Anantapur (15)
41. 29-3-83 கார்லடின் Garladin (10) -பெண்ணாறு நதிப்பாலம் Pennar River Bridge (9)

42. 30-3-83 பாமிடி Pamidi (Via) Rd Jn (St)Gooty (14)
43. 31-3-83 தயாபள்ளி Tyapalle Rd Jn (St) (14)
44. 1-4-83 Dhone துரோணாசலம் (15)
45. 2-4-83 வெல்டூர்ட்டி Veldurti (St) before chinnatekuru (15)
46. 3-4-83 ChinnaTekuru-கர்னூல் Kurnool (10)
47. 4-4-83 துங்கபத்திரா நதிப்பாலம் LC கடந்து (7) Rd Jn (St) முன்னால் (10)
48. 5-4-83 -கிருஷ்ணா நதிப்பாலம் Krishna River Bridge (15)
49. 6-4-83 Rd Jn (St) -RdJn(St) (14)
50. 7.4-83 கோத்தகோட்டா Kothakota (St) Janampet முன்னால் (12)
51. 8-4-83 ஜனம்பெட்-புத்பூர் Buthpur (10)
52. 9-4-83 (Lo) ஜட்சேர்லா Jadcherla (8) Rd Jn St (12)
53. 10-4-83 Shadnagar (Farukhnagar) (9) Palamkul (8)
54. 11-4-83 Shamsabad (ஷாம்சபாட்) (8)Rd Jn (St) (8)
55. 12-4-83 ஹைதராபாத் Hyderabad (8)
56. 13-4-83 Rd Jn(St) - 8 Madchal (12)
57. 14-4-83 துப்ரான் Tupran (15)
58. 15-4-83 Chengunta (St) (9) Ramayanpet (St) (11)
59. 16-4-83 Rd Jn (St) Biknur (7) -Kamareddipet (10)
60. 17-4-83 Rd Jn (St) (9)...Kalvarei (3)
61. 18-4-83 Rd Jn (Lt t) ...DichSipalli முன்னால் (15)
62. 19-4-83 Rd Jn Dichipalli (St) -Perket (10)
63. 20-4-83 Dudgeon (15)
64. 21-4-83 (Via) son -Nirmal நிர்மல் (9)Vankdi (10)

65. 22-4-83 Neridikonda (8) Ichora இச்சோரா (10)
66. 23-4-83 மலைப்பகுதி 5 மைல் Kupi Ghat Guri Hutnur (St) (9)
67. 24-4-83 மலைத்தொடக்கம் (4) அடிலாபாட் Adilabad (8)
68. 25-4-83 Kamai (River Pengange Bridge)-Bori (15)
69. 26-4-83 Pandhar Kawada (14)
70. 27-4-83 Rd Jn (St) - Karanji (10)
71. 28-4-83 மலைப்பகுதி. (5) - Wadki (7)
72. 29-4-83 River Wardha Bridge வார்தாநதி - மகாராஷ்டிரா எல்லை Maharashtra (5)
73. 30-4-83 Wadner (9) - River Wunna Bridge (6)
74. 1-5-83 Hin-gaghat (3) - Jamb (8)
75. 2-5-83 Kondhali (St) (9)-L.C. (Level crossing)- (8)
76. 3-5-83 Bori (போரி) (5) - Rd Jn (St) (12)
77. 4-5-83 Nagpur (நாகபுரி) (5)
78. 5-5-83 Kamptee (10)
79. 6-5-83 Kanhan River Bridge (St) (4)-Mansar (11)
80. 7-5-83 Deolapar (5)
81. 8-5-83 மத்தியபிரதேஷ் Madyapradesh check post (8)
82. 9-5-83 Khawasa - Korai கோரை (10)
83. 10-5-83 மலைப்பகுதி 2 மைல் - Rookher-Sukhtara (12)
84. 11-5-83 Seoni (சியோனி) (11)
85. 12-5-83 River waingange Bridge (20)
86. 13-5-83 Chapara (St) மலைப்பகுதி (6)
87. 14-5-83 மலைப்பகுதி 4 மைல் உட்பட (Laknadon Temple) (12)
88. 15-5-83 Dhuma (13)
89. 16-5-83 மலைப்பகுதி (10)

90. 17-5-83 மலைப்பகுதி (8)
91. 18-5-83 Rd Jn (St) - Bargi (13)
92. 19-5-83 River Narmadha Bridge (10)
93. 20-5-83 ஜபல்பூர் (Jabalpur) Temple (5)
94. 21-5-83 Rd Jn (St) (10) River Hiran Bridge (11)
95. 22-5-83 Sihora (5) - Sleemnabad (St) (14)
96. 23-5-83 Piprod (9)
97. 24-5-83 Katni (கட்னி) (9)
98. 25-5-83 Jukehi (R.T) (12)-Walking
99. 26-5-83 Walking - Maihar Temple (St) (30)
100. 27-5-83 Amarpattan (St) (15)
101. 28-5-83 Kuchala Rd Jn (Lt) (16)
102. 29-5-83 Bela (St) - ரீவா Rewa (10)
103. 30-5-83 Towards Mangowan மங்கோவான் நோக்கி
104. 31-5-83 Mangowan (St) (20) Towards Manganj
105. 1-6-83 Manganj மங்கஞ்ச் (15)
106. 2-6-83 Hanumana (17 U.P.Check-Post. Bhainsaur உத்தரப்பிரதேசம் (2)
107. 3-6-83 மலைப்பகுதி (4 மைல் மலை) (7) Drummondsyan
108. 4-6-83 Barundha மலைப்பகுதி (8)
109. 5-6-83 Lalgange (8) Bhagwantalao (9)
110. 6-6-83 Rd Jn (St) Mirsapur மீர்சாபூர் (9)
111. 7-6-83 Rd Jn (St) (15)
112. 8-6-83 Chunar (St) Rd Ja. (St) (Lc) (15)
113. 9-6-83 Narayanpur (5) நாயண்பூர்
114. 10-6-83 Rd Jn (Rt) (3) Ramnagar (3)
115. 11-6-83 Malavia Bridge (5) Mogalsarai மொகல்சராய் (5)
116. 12-6-83 Varanasi காசி (10)

(வைகாசி-29)

(Those who want to feed us, please contact us in the previous centres in person உணவு வழங்க விரும்புவோர் முன்னதாக உள்ள இடங்களில் எங்களைச் சந்தித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்) எல்லோரும் தங்களால் இயன்ற பொருளுதவிகளைச் செய்ய வேண்டுகிறோம். All are requested to help

(There may be some alterations in the daily programme)

காசியில் விசுவேசுவரருக்கும் விசாலாட்சிக்கும் கோடிதீர்த்தம் முதலியன அபிஷேகம் செய்து ஆராதனை செய்தல்-அன்னபூரணி, காலபைரவரை வணங்குதல்-சில நாள் தங்குதல்-அலகாபாத், கயா முதலிய தலங்களுக்கும் புகைவண்டிமூலம் சென்று வணங்கிப்பின் சென்னைவழியாக இராமேஸ்வரம் திரும்பிக் காசிக் கங்கை அபிஷேகம் செய்து. இறைவணங்கிப்பின் மதுரை வந்து மீனாட்சி சுந்தரேஸ்வரரை வணங்கித் தேவ கோட்டை வந்து சிலம்பணி விநாயகரை வழிபட்டு அமைப்பாளர் இல்லம் வந்து உணவுண்டு பிறகு அவரவர் வீடுகளுக்கு இனிதே திரும்புதல்.

ஸ்ரீ காசி விசுவநாதர் விசாலாட்சி துணை

"பொற்கிழிக் கவிஞர்"
அரு. சோமசுந்தரன்,
அமைப்பாளர்.
இராமேஸ்வரம்-காசிநடையாத்திரைக்குழு

* * *

இந்த நிகழ்ச்சிநிரல் அச்சிட்டு எல்லோருக்கும் வழங்கப்பெற்றது.

11 முதல் கட்டம்-இராமேசுவரம் பயணம்

இராமேசுவரம் காசி நடையாத்திரையானது நான்கு கட்ட யாத்திரையாக வகுக்கப்பட்டது.

1. அமைப்பாளரின் காரைக்குடி இல்லத்தில் இருந்து பேருந்து மூலம் இராமேசுவரம்சேர்தல்.
2. இராமேசுவரத்தில் இருந்து காசிக்கு நடந்து செல்லுதல். (2000 மைல்)
3. காசியில் இருந்து இராமேசுவரத்திற்குப் புகை வண்டி மூலம் திரும்புதல்.
4. இராமேசுவரத்தில் இருந்து அமைப்பாளரின் காரைக்குடி இல்லத்திற்கு மீண்டும் வந்து உண வுண்டு விடைபெறுதல்

இந்த யாத்திரையில் பங்கு பெற விரும்புவோர் முதல் கட்ட யாத்திரையிலேயே பங்கு பெற வேண்டும் என்றும் அறிவித்திருந்தோம். முதல் கட்ட யாத்திரை தொடங்கும் நாள் (14-2-1983) நெருங்கிக் கொண்டிருந்தது. அதுவரை 11 பேர் தம் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர். எல்லோரும் தமக்கு உரிய மஞ்சள் உடை, குடை, நடையன், சாப்பாட்டுத் தட்டு, டம்ளர் கைவிளக்கு, தண்ணீர்ப்பை (water bag), தோள்பை, விரிப்பு முதலிய அனைத்தும் தயாராகச் சேகரித்து வைத்திருந்தனர்.

சைக்கிள் ரிக்ஷா ரூ. 3400/- விலைக்குத் தயாராகிக் காரைக்குடிக்கு வந்து சேர்ந்தது. அதனைப் பெற

வேண்டுமானால் ரூ. 3400/- வங்கியில் செலுத்தி, லாரி பாஸ் வாங்கி, ரூ. 200/- லாரிவாடகை செலுத்தி, சைக்கிள் ரிக்ஷாவைப் பெறவேண்டும். நன்கொடை எதுவும் வந்து சேரவில்லை. ஆரம்பச் செலவுகள் அனைத்தும் அடியேன் செலவு செய்திருந்தேன். இந்த நிலையில் யாத்திரை தொடங்குவதற்குப் பத்து நாள் முன்பு கண்டனூர் சென்று **வள்ளல் திரு. வீ. தெ. வீரப்ப செட்டியார்** அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் தான் அடியேனை இளமைக் காலத்தில் படிக்க வைத்து ஆதரித்தவர்கள். என்னுடைய எல்லா முயற்சிகளிலும் ஊக்கம் அளித்து உறுதுணை நிற்பவர்கள். அந்தப் பெருமகனார் ரூ. 500/- முதல் நன்கொடை அளித்து உற்சாகப் படுத்திக் காசியாத்திரைக்கு வாழ்த்துக் கூறி அனுப்பினார்கள். பிறகு சண்முகநாதபுரம் பெரியவர் உயர்திரு. **பெ. சித. லெ. லெட்சுமணன் செட்டியார்** அவர்களைச் சந்தித்து ஆசி பெறப் போனேன். அவர்கள் ரூ. 101/- நன்கொடை அளித்து அடியேனுக்கு ஆசி கூறி அனுப்பினார்கள். நடுத்தர வர்க்கத்தினர் ரூ. 5, ரூ. 10, ரூ. 25 என்று நன்கொடைகள் வழங்கினர். பெருஞ்செல்வர்களை நாங்கள் தபால் மூலம் அணுகியும், போதுமான ஆதரவு கிட்டவில்லை. பிறகு தன்கையே தனக்குதவி என்ற முறையில் செயற்பட்டேன். சைக்கிள் ரிக்ஷாவை லாரி அலுவலகத்தில் இருந்து பயணத்திற்கு முதல்நாள் பெற்று அடியேனின் இல்லத்திற்குக் கொண்டு வந்தேன். அந்த சைக்கிள் ரிக்ஷாவை எங்களில் ஒருவர் ஓட்டிவர ஒப்புதல் கொடுத்திருந்தார். முதல் நாளே அவர் என் இல்லத்திற்கும் வந்திருந்தார். அவர் சைக்கிள் ரிக்ஷா மீது ஏறி அமர முயன்றார். ஆனால் சைக்கிள் ரிக்ஷா ஒரு பக்கம் ஓட, அவர் ஒரு பக்கம் அதைக் கட்டுப் படுத்த முயல, வீட்டுச் சுவரில் போய் ரிக்ஷா இடித்துக் கொண்டு நின்றது. அவருக்கு சைக்கிள் ரிக்ஷா ஓட்டத் தெரியாது என்பது எனக்கு அப்பொழுதுதான் புலப்

பட்டது. பாவம்! அவருக்கே அந்த உண்மைஅப்பொழுது தான் புலப்பட்டது. அவர் இதற்குமுன் சைக்கிள் ஓட்டி யிருக்கிறாரே ஒழிய, சைக்கிள் ரிக்ஷா ஓட்டியதில்லை. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவதும், சைக்கிள் ஓட்டுவதும் ஒன்றுதான் என்று அவர் எண்ணியிருந்திருக்கிறார். நாங்கள் தயாரித்துள்ள சைக்கிள் ரிக்ஷா மிகக் கன மானது. 3 சக்கரங்களை உடையது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவருக்குப் பின்னே ஒரு பெரிய கனமான அலுமினியப் பெட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதற்குள் பொருள்களை வைத்து மூடலாம். பின்புறம் கதவு அமைக்கப்பட்டுள்ளது. பெட்டிக்கு மேல் சாமான்கள் அடுக்க ''காரியர்'' அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரியரில் விநாயகர், முருகன், காசி விசுநாதர், இராமமேசுவரம் இராமநாதர் படங்கள் அழகாகப் பொருத்தப்பட்டன. மேலும் இராமலிங் கத்தை இராமர் பிரதிஷ்டை செய்ய, அருகில் சீதை, லெட்சுமணர், அனுமன் ஆகியோர் காணும் காட்சி பொலிந்த படமும் பொருத்தப்பட்டது. இராமேசுவரம் கோடி தீர்த்தம், கடல் மணல், வேல் ஆகியன பொருத்த இடம் ஒதுக்கப்பட்டது, அத்துடன் யாத்திரிகர்களின் படுக்கைகள் அதில் வைக்கப்படும். 300 கிலோ எடை ஏற்றும் அளவுக்கு சைக்கிள் ரிக்ஷா தயாரிக்கப்பட்டது. ஆனால் பொருள் எதுவும் ஏற்றாமலே சைக்கிள் ரிக்ஷாவை ஓட்ட எங்கள் ஆள் திணறுகிறார். இந்த நிலையில் விடிந்தால் பயணம் புறப்படும் நாள். சைக்கிள் ரிக்ஷாவை என்ன செய்வது? எப்படி ஓட்டுவது? ஒன்றும் புரியாமல் திகைத்தோம். கூலிபேசி ஆளை அழைத்துச் செல்ல முயன்றோம். யாருமே காசிக்கு சைக்கிள் ரிக்ஷா ஓட்டிவர ஒப்புக் கொள்ளவில்லை. ஒரே ஒருவர் மட்டும் முன் வந்தார். அவர் கேட்ட கூலியைக் கொடுப்பதென்றால் அத்தொகை சைக்கிள் ரிக்ஷாவின் விலையை விட அதிகமாக இருந்தது. மேலும் காடு,

மலைப் பகுதிகளில் அவருக்கு நாங்கள் நல்ல உணவு வேறு வழங்கவேண்டுமாம். நாங்கள் உண்ணா விட்டாலும் அவருக்குப் படைக்கவேண்டும். இது இயலக் கூடியதா? பாவம். அவர் ஒரு பக்தர் இல்லை; வேலையாள் தானே! ஆகவே அவரை அனுப்பி விட்டோம். சைக்கிள் ரிக்ஷாவை ஓட்ட ஒரு பக்தரை ஆண்டவன் தராமலா போய் விடுவான் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருந்தோம். இன்னும் இருபது மணி நேரத்தில் அந்த நம்பிக்கை பலிக்க வேண்டும். இல்லாவிட்டால் செலவு செய்து பெற்ற சைக்கிள் ரிக்ஷா ஓடாது. அது ஓடா விட்டால் பயணம் நிறைவேறாது. இந்தச் சூழ்நிலையில் கடவுளே கதி என்று காத்திருந்தோம். எங்களது ஆறுபடைவீட்டுப் பாதயாத்திரையில் பங்கு கொண்ட பக்தி மிகு இளைஞர்கள் இருவருக்குச் செய்தி அனுப்பினோம்: பொதுச் செலவில் அவர்களில் ஒருவரை அழைத்துச் செல்ல முன் வந்தோம். அவர்களில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டத்தெரிந்தவர் வரலாம் என்று செய்தி குறிப்பிட்டிருந்தோம்.

முதல் கட்டப் பயணம் புறப்பட வேண்டிய 14-2-1983 ஆம் நாள் விடிந்தது. காலையில் இருந்தே பாதயாத்திரிகர்கள் தமது மஞ்சள் ஆடையில் அடியேன் இல்லத்திற்கு எழுந்தருளத் தொடங்கினர். மேலும் எங்களை வழியனுப்பவும் ஏராளமான நண்பர்கள், உறவினர்கள், பொதுமக்கள் ஆகியோர் அடியேன் இல்லத்தில் குழுமினர். சைக்கிள் ரிக்ஷாவையும் எங்களையும் வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம் கூடியது. சைக்கிள் ரிக்ஷாவில் ''இராமேசுவரம் காசி நடை யாத்திரை'' என்று தமிழிலும், Rameswaram-Varanasi on Foot என்று ஆங்கிலத்திலும், அதே பொருளுடைய வாக்கியங்களைத் தெலுங்கு, கன்னடம், இந்தி முதலிய மொழிகளிலும் பெரிய எழுத்துக்களில் எழுதிச் சிவ லிங்கப் படமும் வரையச் செய்திருந்தோம்.

14-2-1983 காலையில் அடியேன் நீராடி எங்கள் இல்லத்தில் உள்ள தெய்வங்களை எல்லாம் வழி பட்டேன். இரண்டு நாள்முன் அடியேன் பிறந்த ஊராகிய புதுவயல் சென்று அடியேனை ஈன்ற தாய் **மீனாட்சி**யின் பேழையினை வணங்கி வந்தேன். மேலும் தேவகோட்டையில் உள்ள அடியேனின் வளர்ப்புத் தாயார் திருமதி வள்ளியம்மை ஆச்சியை வணங்கி ஆசி பெற்று, என் வளர்ப்புத் தந்தையாரின் படத்தினையும் வழி பட்டு வந்தேன். மேலும் காரைக்குடிக் கொப்புடை அம்மன், முத்துமாரி அம்மன், புதுவயல் கயிலாய விநாயகர், சாக்கோட்டை உமையவள் உடனாய வீரசேகரமூர்த்தி, குன்றக்குடி முருகப்பெருமான், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர், வயிரவன்பட்டி வடிவுடை அம்பாள் உடனாய வளரொளிநாதர்-வயிரவ மூர்த்தி, மக்கமடை ஐயனார் ஆகிய தெய்வங்களை வழிபட்டு வந்திருந்தேன்.

14-2-1983 காலையில் எங்கள் இல்லத்துப் பூசை அறையில் எனது சிறிய தாயார் திருமதி உண்ணாமலை ஆச்சி அவர்கள் எனக்கு மஞ்சள் ஆடையினைத் தமது திருக்கரத்தால் எடுத்துத் தந்து, திருநீறு பூசி ஆசி கூறினார்கள்.

மஞ்சள் உடையோடு நாங்கள் பாதயாத்திரிகர்கள் 11 பேரும் காரைக்குடி அரசாங்க வங்கிக்கு (State Bank) சென்று அவரவர் தொகையினைப் பயணக் காசோலையாக (traveller's cheque) மாற்றிக் கொண் டோம். பிறகு அடியேன் தலைமை அஞ்சல் நிலையம் (Head post office) சென்று எனக்கு உரிய அடையாள (identity card) வாங்கிக் கொண்டேன். அதில் எனது புகைப்படம், கையெழுத்து, அஞ்சல் நிலைய முத்திரை, அஞ்சல் நிலைய அதிகாரியின் கையெழுத்து எல்லாம்

இருக்கும். தெரியாத இடங்களில் நமது அடையாளத்தை நிரூபிக்க இது பயன்படும்.

அடையாள அட்டை பெற்றுக் கொண்டு மதியம் 12-மணி அளவில் வீட்டுக்குத் திரும்பினேன். "ஆண்டவனே! சைக்கிள் ரிக்ஷா ஓட்ட ஒரு பக்தரைத் தா" என்று வேண்டிக் கொண்டே வந்தேன். வீட்டில் **அடைக்கப்பன்** என்ற பக்தர்-21 வயது இளைஞர்—எனக்காகக் காத்திருந்தார். தனக்கு சைக்கிள் ரிக்ஷா ஓட்டத் தெரியும் என்றார். இவர் எங்கே ஓட்டப் போகிறார் என்று எண்ணினேன், சைக்கிள் ரிக்ஷாவைப் பத்திரமாக ஓட்டும்படி கூறினேன். அவர் அதில் லாவகமாக ஏறிய போது நமது காரியம் கைகூடியதாகக் கருதினேன். அவர் சில அடிதூரம் நன்றாக ஓட்டினார். உடனே அவரை நம்முடன் அழைத்துச் செல்ல இசைந்தேன். பன்னிரண்டாவது பாதயாத்திரிகராக அவர் கையெழுத்திட்டு எங்கள் குழுவில் சேர்ந்தார். இவருக்குப் பொதுச் செலவு செய்வதாக உடன்பாடு-இவரிடம் மஞ்சள் உடை இல்லை. எனவே எனது மஞ்சள் உடையில் ஒன்றை அவருக்கு அளித்தேன்.

கவலை தீர்ந்தது என்று எண்ணி இருந்தேன். அப்பொழுது **தியாகராாசன்** என்ற இன்னொரு பக்தர் சைக்கிள் ஓட்டுவதற்காக வந்து சேர்ந்தார், ஆக நாங்கள் செய்தி சொல்லி இருந்த இருவருமே வந்து விட்டனர். சைக்கிள் ஓட்ட ஒருவர் போதும். மேலும் நன்கொடை சேராத நிலையில் இரண்டு பேரைப் பொதுச் செலவில் கொண்டு செலுத்துவது எப்படி? என்று பெரிதும் தயங்கினேன். "தியாகராாசனுக்கு நன்கு சமையல் செய்யத் தெரியும். அத்துடன் இயன்ற அளவு சிரமதானம் செய்யவும் தயாராய் இருக்கிறான்" என்று திரு. இராகவனும், திரு. சுப்பையாவும் சிபாரிசு செய்தனர். தியாகராசனையும் அழைத்துச் செல்ல வேண்டும்

என்பது விதிபோலும். மறுத்துரைக்க நா எழவில்லை. எனவே கடவுள் விட்ட வழி ஆகட்டும் என்று அவரையும் பொதுச் செலவில் எங்களுடன் வர அனுமதித்தேன். தியாகராசன் பதின்மூன்றாவது பாதயாத்திரிகராகக் கையெழுத்திட்டு எங்களுடன் சேர்ந்தார்.

மதியம் 2-மணிக்கு அடியேன் இல்லத்தில் வழியனுப்பு விருந்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது. பழநிக் குருநாதர் அருளாடியார் உயர்திரு. பழநியப்ப செட்டியார் அவர்கள் எங்களுக்கெல்லாம் திருநீறு வழங்கி ஆசி கூறி எங்களுடன் விருந்துண்டார்கள். காசியாத்திரை முடிந்து திரும்பும் பொழுது காரைக்குடிக்கு அமைப்பாளர் இல்லத்திற்கு அனைவரும் வந்து உணவுண்டு தத்தம் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றும், அந்த நாளில் தாமும் வருகை தந்து விருந்தில் கலந்து கொண்டு விபூதி வழங்குவதாகவும் அருளாடியார் கூறி அருளினார்கள். ஆக அவர்களது ஆசி அடியேனின் இல்லத்தில் இருந்து பயணம் புறப்படும் நாள் தொடங்கித், திரும்பி வந்து சேரும் நாள் வரை கவசமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

அந்தச் சமயத்தில் அடியேனுக்குப் பதிவுத் தபால் வந்தது. ஆர்வமுடன் அதனைப் பிரித்துப் படித்தோம். அதில் சைக்கிள் ரிக்ஷா விலைக்குரிய ரூ. 3400-க்கு ஒரு காசோலை இருந்தது. சென்னை "ஜெமினி சினிமா" பத்திரிகை அதிபரும், என்னுடைய இனிய நண்பரும் ஆகிய வள்ளல் திரு. **பழநியப்பன் இராமசாமி** அவர்கள் அடியேனுடைய வேண்டுகோளை ஏற்று சைக்கிள் ரிக்ஷாத் தொகையினை நன்கொடையாக அனுப்பித் தந்துள்ளார்கள். நாங்கள் பயணம் புறப்படும் சமயத்தில் அத்தொகை எங்கட்குக் கிடைத்தது எங்களுக்கு ஒரு நல்ல சகுனமாக இருந்தது. மேலும் பணத்தட்டுப்பாடு இருந்த சமயத்தில் அது கிடைத்ததால் எங்கட்கு

ஓரளவு தெம்பினையும் அது ஊட்டியது. வள்ளல் பழநியப்பன் இராமசாமி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினேன்.

மாலை 5 மணிஅளவில் அடியேன் உட்படப் பாத யாத்திரிகர்கள் 13 பேர் எங்கள் இல்லத்தில் இருந்து பயணம் புறப்பட்டோம். 13 பேர் வருமாறு:

1. அரு. சோமசுந்தரன் -- அமைப்பாளர்— தேவகோட்டை
2. சித. சிதம்பரம் செட்டியார்— தேவகோட்டை
3. அ. திருநாவுக்கரசு செட்டியார்— தேவகோட்டை
4. இராம. அடைக்கப்பன் — தேவகோட்டை
5. பொ. தங்கவேலுபிள்ளை—தேவகோட்டை
6. சுப. நல்லதம்பி—கார்மாங்குடி — தேவகோட்டை
7. சுப. இராகவன் — சொக்கநாதபுரம் சென்னை.
8. என். தியாகராசன் — சொக்கநாதபுரம்
9. பி. சுப்பய்யா — சண்முகநாதபுரம்
10. கு. பழநியாண்டி — சிங்கம்புணரி
11. ஆர். எம். இராசாங்கம் — சிங்கம்புணரி
12. என். அய்யாசாமி —திருச்சி
13. க. தேனிமலை — வலையபட்டி.

எங்களை வழி விட வந்திருந்த அன்பர்கள் ஒரு வாழ்த்து கூட்டம் அமைத்தார்கள். சாக்கோட்டைக் கோவில் ஓதுவார் திரு. இரத்தின சபாபதி தேசிகர் கோளறு திருப்பதிகம் பாடி வாழ்த்தினார். அடியேனுடைய பேராசிரியர் திரு. **க தேசிகன்,** திரு. **சொ.ராம. இராமசாமி செட்டியார்** முதலிய அன்பர்கள் எங்களைப் பாராட்டி, ஊக்குவித்து, வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். சைக்கிள் ரிக்ஷா தேவகோட்டைக்குப் போய்ச் சேர்ந்தது.

நாங்கள் எங்கள் பயணத்திட்டப்படி தேவகோட்டை சிலம்பணி விநாயகர் கோயிலுக்குச் சென்று சேர்ந்தோம் இரவு 7½ மணி அளவில் அங்கு பஜனை நிகழ்ந்தது. ஏராளமான மெய்யன்பர்கள் அந்த பஜனையில் கலந்து கொண்டனர். அப்போது மெய்யன்பர் ஒருவர் அன்று மாலையில் வெளிவந்திருந்த "மாலை முரசு" பத்திரிகையினைக் கொண்டு வந்து எங்களிடம் தந்தார். அதில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் கீழ்க்கண்டவாறு எங்களது காசிப்பயணம் பற்றிய செய்தி வெளியாகி இருந்தது.

இராமேசுவரத்தில் இருந்து
காசிக்குப் பாத யாத்திரை
17ஆம் தேதி புறப்பாடு

காரைக்குடி: பிப் 14: இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாத யாத்திரை செல்கிறார்கள். இந்தப் பயணம் வருகிற 17ஆம் தேதி தொடங்குகிறது.

காரைக்குடி கவிஞர் அரு. சோமசுந்தரத்தை அமைப்பாளராகக் கொண்ட 12 பேர் இந்தப் பயணத்தைத் தொடங்கி உள்ளனர். இவர்களது பயண காலம் 5 மாதம் ஆகும்.

காசி யாத்திரை

இன்று (14ஆம் தேதி) மாலை காரைக்குடியில் இருந்து புறப்பட்டு தேவகோட்டை, உப்பூர், தேவி பட்டினம் வழியாக இடையில் உள்ள கோவில்களில்தங்கி சாமிதரிசனம் செய்து விட்டு இராமேசுவரம் செல்கிறார்கள்.

17ஆம்தேதி காலை 8-30 மணி அளவில் ராமேசுவரம் கோவிலில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை புறப்படுகிறார்கள்.

இந்தக் குழுவினர் ராமநாதபுரம், திருப்பாலக்குடி, திருவாடானை, தேவகோட்டை, காரைக்குடி, மணச்சை,பள்ளத்தூர் வழியாக 27ஆம் தேதி திருச்சியை அடைகிறார்கள்.

கிருஷ்ணாநதி

இடையில் உள்ள கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலம், துங்கபத்திரா நதி, கிருஷ்ணாநதி வழியாக 12-4-1983ல் ஐதராபாத் செல்கிறுர்கள்

பின்னர் அங்கிருந்து மத்தியப்பிரதேசம் சென்று, பல மலைப்பகுதிகளைக் கடந்து ஜபல்பூர், உத்தரப் பிரதேசம், மொகல்சராய் வழியாகக் காசியை (வாரணாசி) 12-6-83ல் அடைகிறார்கள்.

அங்கு விசுவேசுவரருக்கும், விசாலாட்சிக்கும் கோடி தீர்த்தம் முதலிய அபிஷேக ஆராதனைகள் செய்து வருகிறார்கள்.''

—இப்படியாக மாலைமுரசு பத்திரிகையில் வெளி வந்திருந்த செய்தி எங்கட்கு உற்சாகம் ஊட்டி மிகவும் ஊக்குவித்தது.

சிலம்பணி விநாயகர் கோவிலில் பஜனை முடிந்ததும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கூடி இருந்து எங்களுக்கு வாழ்த்துரைத்தனர். அந்த வாழ்த்தரங்கில் பேராசிரியர் திரு. அர. சிங்கார வடிவேலன், ''அருட்செல்வர்'' திரு. சோமநாராயணன், தியாகி இராம. அண்ணாமலை, ''காவடிசாமி'' ஏகநாதன் ஆகியோர் ஆசி கூறினர், எங்கள் 13 பேருக்கும் ''பழம் நீ'' முத்துமாணிக்கம் பூமாலை சூட்டி வழியனுப்பினார். அன்று இரவு தேவகோட்டை அன்பர் திரு. சேதுச் செட்டியார் அவர்கள் முதல் விருந்தளித்து, காணிக்கை தந்து வழியனுப்பினார்கள்.

"மக்கள் வாழும் இடங்களில் எங்கட்கு விருப்புடன் உணவு வழங்குவார்கள். மக்கள் இல்லாத இடங்களில் நாங்களேதான் உணவு சமையல் செய்து கொள்ளவேண்டும். அதற்கு ஒருவேளைக்கு ரூ30 ஆகலாம். ரூபாய் முப்பது வீதம் யாராவது நன்கொடை அளித்தால் அவர்கள் இடும் திரு அமுதமாக நாங்கள் குறிப்பிட்ட ஏதாவது இடத்தில் அவர்களது நன்கொடையில் உணவு சமைத்து உண்டு, அவர்கட்கு வாழ்த்துரைத்து நன்றி கூறுவோம். இதற்குத் **"திருஅமுதுத்திட்டம்"** என்று பெயர். இதற்கு நன்கொடை வழங்குபவர்கள் வழங்கலாம் என்று அறிவித்தேன். உடனே என் மகள் **பொன் முடி இராமசாமி** முதல் திருஅமுதுபடைப்பவராகி எங்களுக்கு ரூ 30 நன்கொடை அளித்தாள். அவளது கைராசியினால் தொடங்கப் பெற்ற இந்தத் திட்டத்திற்கு மக்கள் பேராதரவு வழங்கினர். நாங்கள் காசி சென்று ஊர் திரும்பும் வரை இந்தத் திருஅமுதுத் திட்டத்தில் இருந்து எல்லாருக்கும் திருஅமுது வழங்கப்பெற்றது. அந்த அளவிற்கு இத்திட்டம் ஓர் அமுதசுரபியாக விளங்கியது. அமுத சுரபியில் முதல்முதலாகப் பிச்சை யிட்ட ஆதிரைஎன்னும் கற்புக்கரசி "பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக" என வாழ்த்தி அமுதசுரபியில் பிச்சை இட்டாள். பிறகு அமுத சுரபி வற்றாது வழங்கியது. அதுபோல் திரு அமுதுத் திட்டத்தைப் பொன்முடி இராமசாமி பக்தியோடு தொடங்கி வைக்க அத்திட்டம் வற்றாது வழங்கியது.

இராமபிரான் இராமேசுவரத்திற்குச் சென்ற பொழுது உப்பூர் வெயிலுகந்த விநாயகரை வழிபட்டுத் தேவிபட்டினம் கடலில் நீராடி, நவபாஷாணம் வணங்கி, இராமேசுவரம் சென்றதாக ஐதீகம். அதே முறையில் தான் இன்றும் இராமேசுவரம் செல்லும் பக்தர்கள் வழிபாடு செய்கின்றனர். நாங்கள் 16-2-1983

செவ்வாய்க்கிழமை காலை 4-மணிக்கு எழுந்து நீராடி, பேருந்து மூலம் 4-55 மணிக்கு உப்பூருக்குப் பயண மானோம். காலை 6-மணி அளவில் உப்பூர் சென்றோம். அங்குள்ள அழ. அரு. அழ. சித. சத்திரத் தர்மகர்த்தா திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்து வெயிலுகந்த விநாயகர் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

உப்பூர் என்பது ஒரு சிற்றூர். அது திருவாடானையில் இருந்து தேவிபட்டினம் செல்லும் பாதையில் இருக்கிறது. இவ்வூர் அருகில் கடல் இருக்கிறது. இங்குள்ள கோயில் மிகப் பழைமையான தாகும். இக்கோயிலில் உள்ள விநாயகர் மீது தினந் தோறும் சூரியோதய வெயில் படுவதால் இவருக்கு வெயிலுகந்த விநாயகர் என்பது திருப்பெயர். இத்தலத் திற்குத் "தலபுராணம்" உள்ளது. இத்தல விநாயகர் மீது பல பாடல்களைப் புகழ்மிக்க புலவர்கள் இயற்றி உள்ளனர். வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயும் வெயிலுகந்த விநாயகர் கோவிலில் பஜனைப் பாடல்கள் பாடி வழிபட்டோம். பிறகு சிறிது நேரத்தில் நாங்கள் பேருந்து மூலம் தேவிபட்டினம் செல்ல வேண்டும். பேருந்து வருவதற்குச் சில மணித்துளிகள் ஆகும் என்றனர். அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அடியேன் வெயிலுகந்த விநாயகர் சந்நிதியில் இருந்து "காசியாத்திரைப் பாடல்" எழுதினேன்.

இராமேஸ்வரா காசி விஸ்வேஸ்வரா
இராமேஸ்வரா காசி விஸ்வேஸ்வரா
பர்வத வர்த்தினி ராமேஸ்வரா
பாராளும் விசாலாட்சி விஸ்வேஸ்வரா
(இராமேஸ்வரா)

உப்பூரின் வெயிலுகந்த விக்னேஸ்வரா
உளமார ஸ்ரீராமர் தொழுதேஸ்வரா
ஒப்பில்லா செந்தூரின் முருகேஸ்வரா
ஓங்கார நாயகனே? விஸ்வேஸ்வரா!
(இராமேஸ்வரா)

உயர்தேவி பட்டினத்துத் திலகேஸ்வரா
உன்பாதம் பணிகின்றோம் பரமேஸ்வரா!
அயராமல் நடக்கின்றோம் ராமேஸ்வரா
அஞ்சாமல் காப்பாயே! விஸ்வேஸ்வரா!
(இராமேஸ்வரா)

கர்நாடகம்தாண்டிக் கங்கேஸ்வரா!
காலார நடக்கின்றோம் விஸ்வேஸ்வரா!

என்று எழுதிக் கொண்டிருந்தேன்' பிறகு ஆந்திரா, மகாராஷ்ட்ரா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் பற்றி எல்லாம் பாடலில் குறிப்பிட எண்ணினேன். ஆனால் அந்த நேரத்தில் பேருந்து வந்துவிட்டது. எனவே ஆண்டவன் கவிதையினை நிறைவு செய்யச் சொல்வதாக எண்ணிக் கவிதையைக் கீழ்க்கண்டவாறு நிறைவு செய்தேன்.

கர்நாடகம்தாண்டிக் கங்கேஸ்வரா!
காலார நடக்கின்றோம் விஸ்வேஸ்வரா!
ஒருநாடாய் எல்லோரும் உயர்வாகவே
ஒன்றாகப் பூசித்தோம் விஸ்வேஸ்வரா?
(இராமேஸ்வரா)

அடியேனுடைய பாடல் வரிகள் பலிதமாவதைப் பல முறை பணிவோடு கவனித்திருக்கிறேன். இந்தப் பாடலிலும் கர்நாடகம் பற்றி எழுதியதும் நிறைவு வார்த்தைகள் வந்து விட்டதால் கர்நாடகம் வரை நடைப்பயணம் மிகத் தொல்லையுடையதாகவும், பிறகு சுலபமான

தாகவும் இருக்கலாம் என எண்ணினேன். அது பிறகு உண்மையாயிற்று. கர்நாடக மாநிலம் நுழைவதற்குள் நாங்கள் பட்டபாடு மிகுதி. தொடர்ந்து நடந்து பாதம் பயிற்சி பெற வேண்டி இருந்தது. அதனால் முதலில் கால் வலி தாங்க முடியாமல் இருந்தது. ஆனால் கர்நாடகம் தாண்டிய பிறகு கால்வலி இல்லை. காலார நடந்து சென்றோம். நடை எங்களுக்கு நன்கு பழகிவிட்டது. எனவே ''கர்நாடகம் தாண்டிக் கங்கேஸ்வரா! காலார நடக்கின்றோம் விஸ்வேஸ்வரா'' என்ற வரிகள் பலித்தன. மேலும் எங்கள் யாத்திரையின் நோக்கம் தேசீய ஒருமைப்பாடும், நாட்டு மக்களின் நல்வாழ்வும் ஆகும். ''ஒரு நாடாய் எல்லோரும் உயர்வாகவே ஒன்றாகப் பூசித்தோம் விஸ்வேஸ்வரா!'' என்ற வரிகள் தேசீய ஒருமைப்பாட்டுக்குச் சோதனை வந்த நேரங் களில் ஒருமைப்பாடு காக்கும் வித்தாய், வரமாய் அமைந்தன. எங்கள் பிரார்த்தனை வீண் போகவில்லை. இன்றுவரை இந்தியாவின் ஒருமைப்பாடு உலகமே வியக்கும் வகையில் பாதுகாக்கப்படுகிறது.

பிறகு பேருந்து மூலம் தேவிபட்டினம் பயண மானோம். 10-மணி அளவில் தேவிபட்டினம் சென்றோம், இந்த ஊர் கடற்கரை நகரம் ஆகும். பட்டினம் என்றால் தமிழில் கடற்கரை நகரைக் குறிக்கும். தேவிபட்டினம் ஒருகாலத்தில் பெரிய துறைமுக நகரமாக இருந்திருக்க வேண்டும். இல்லா விட்டால் பட்டினம் என்ற பெயர் வந்திராது.

காவிரிப்பூம்பட்டினம், நாகைப்பட்டினம், மசூலிப் பட்டினம், சென்னைப்பட்டினம் என்ற கடற்கரை நகர்களைப் போலத் தேவிபட்டினமும் ஒரு காலத்தில் பெரிய துறைமுக நகராக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தேவிபட்டினம் இராமநாதபுரத்தில் இருந்து சுமார் 10-கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்குள்ள கடல் ஆழமற்றது. ஆகவே கடலில் சற்று அதிகமான தூரம் சென்று நீராடலாம். மேலும் அலையும் மிகக் குறைவு. ஆகவே பயமின்றி நீராடலாம். இக்கடலில் ஒன்பது கற்கள் நடப்பட்டிருக்கின்றன. இவை நவ பாஷாணத்தால் உருவாக்கப்பட்டவை. இவற்றை நவக் கிரகங்கள் என்று சொல்கிறார்கள். இந்த ஒன்பது கற்கள் மீதும் கடல்நீர் அலைபாய்கிறது. மக்கள் இக் கற்களைச் சுற்றி வந்து கடல்நீரை அள்ளி அபிஷேகம் செய்து, தேங்காய் உடைத்து, தூபதீபம் காட்டி நவக் கிரக வழிபாடு செய்கின்றனர். நாங்களும் "கோளறு திருப்பதிகம்" பாடிக்கொண்டே கடலில் நீராடி, நவ பாஷாண நவக்கிரகங்களை ஒன்பது முறை சுற்றி வழிபட்டோம். பிறகு கடலுக்கு எதிரில் உள்ள சக்கர தீர்த்தம் என்னும் குளத்தில் நீராடினோம்.

தேவிபட்டினத்தில் உள்ள சிவன் கோவிலில் எழுந்தருளி இருக்கும் திலகேஸ்வரரையும், பெருமாள் கோயிலில் எழுந்தருளி இருக்கும் திருமாலையும் வணங்கி மதியம் இராமநாதபுர சமஸ்தானச் சத்திரத்தில் தங்கினோம். மாலையில் அங்கிருந்து பேருந்து மூலம் பயணமாகி இராமநாதபுரம் அடைந்து அங்கிருந்து புகை வண்டி மூலம் புறப்பட்டு இரவு 8-30 மணி அளவில் இராமேஸ்வரம் வந்து சேர்ந்து நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தில் தங்கினோம். இரவு உணவு தனுஷ்கோடி "வீர. சத்திர" நிர்வாகிகளால் வழங்கப் பெற்றது.

12. இராமேஸ்வரம்

புனிதமான பாரதத்தில் புண்ணிய ஸ்தலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் தென்னாட்டில் முதலிடம் வகிப்பது இராமேஸ்வரம் ஆகும். விஷ்ணு ஸ்தலங்களில் 108 (திருப்பதிகள்) முக்கியமானவை என்றும், சிவஸ்தலங்களில் ஆயிரத்தெட்டு சிவாலயங்கள் முக்கியமானவை என்றும் கூறுவர். சிவத்தலங்களைச் சைவர்களும், விஷ்ணுத்தலங்களை வைணவர்களும் வழிபடுவர். ஆனால் இராமேஸ்வரத்தைச் சைவர்களும் வணங்குவர்; வைணவர்களும் வழிபடுவர். ஏனெனில் இங்குள்ள சிவலிங்கம் இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும். எனவே காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை உள்ள இந்துக்கள் அனைவரும் இந்தியாவின் தென்கீழ்க் கோடியில் உள்ள இராமேஸ்வரத்திற்கு வாழ்நாளில் ஒரு முறையாவது வந்து வணங்கி செல்கின்றனர். வடநாட்டில் நாங்கள் நடந்து சென்ற பொழுது வடபுலத்து மக்கள் எங்களை மிக்க அன்போடு வரவேற்றனர். ""நாங்கள் இராமேசுவரத்தில் இருந்து நடந்து வருகிறோம்'' என்று சொன்னதும் அவர்கள் ""ராம் ராம்'' என்று கூறி எங்களை வணங்கி, எங்கள் பாதத்தில் குறைந்தது பத்து முறையாவது தமது தலையால் முட்டி, எங்களிடம் விபூதி பிரசாதம் வாங்கிக் கொண்டதோடு, எங்கள் கையால் அவர்களது நெற்றியில் விபூதி பூசிவிடச் சொல்லி, அனுமன் போலக் குனிகையில் நாம் காணும் பக்தி நெறி நம்மைப் புல்லரிக்கச் செய்யும். வடநாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் கூட வீட்டில் ஒரு குழந்தை பிறந்ததும் அதற்கென்று ஓர் உண்டியல்

வைத்து அதில் காசு சேர்க்கிறார்கள். அந்தக் குழந்தை கிழவராகும் காலம் வரை பணம் சேர்கிறது. போதுமான தொகை சேர்ந்ததும் அதனைக் கொண்டு இராமேசுவரம் வந்து இராமநாதரை வணங்கி, மீதி இருக்கும் காசுகளை அங்குள்ள உண்டியலில் கொட்டிவிட்டுச் செல்கிறார்கள். அந்த அளவுக்கு வடநாட்டில் இராமேஸ்வரத்தின் மீது பக்தி இருக்கிறது. அங்கு தமிழ்நாடு என்றோ, சென்னை என்றோ சொன்னால் தெரியாது. இராமேஸ்வரம் என்றால் தான் தெரியும். இந்தியாவில் உள்ளஎல்லோருக் கும் தெரிந்த ஊர்கள் இரண்டே. அவை காசியும் இராமேசுவரமுமே ஆகும். அத்தகு இராமேசுவரத்தின் பெருமையை வர்ணிக்க வார்த்தை இல்லை.

இராமேசுவரம் இந்தியாவில் உள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றாகும். இங்குள்ள மூர்த்திக்கு இராமநாதர் என்பது பெயர். மற்ற ஜோதிர் லிங்கங்கள் வருமாறு: (ம. பி.) ஓங்காரம் ஓங்காரேசர், குஜராத் சோமநாதர், நாசிக் (மகாராஷ்டிரம்) திரியம் பகம் திரியம்பகநாதர், ஆந்திரா ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சு னர், மகாராட்டிரம் நாகேசர், மகாராட்டிரம் வைத்திய நாதர், (உ. பி) காசிவிசுவநாதர், ஹிமாசலம் கேதார நாதர், மகாராட்டிரம் பீமேசர், (ம. பி) உஜ்ஜயினி மகாகாளேசுவரர், மகாராட்டிரம் குஸ்ருணேசர்.

இராமநாதருக்கு நாள்தோறும் கங்கைநீர் அபிஷேகம் செய்யப்படுகிறது. வடநாட்டில் இருந்து தினந்தோறும் பக்தர்கள் இராமநாதருக்குக் கங்கைநீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்கின்றனர். ஆனால் அந்த முறையில் தமிழ்நாட்டுக் கோடி தீர்த்தத்தைத் தமிழர்கள் காசி விசுவநாதருக்குக் கொண்டு செல்கிறார் களா என்றால் இல்லை என்றே பதில் சொவ்ல வேண்டும்.

இராமேஸ்வரம் பாடல் பெற்ற தலமாகும். இது பாண்டிபதினுலில் ஒன்று. தமிழ், வடமொழி ஆகிய

வற்றின் புராதன நூல்களில் எல்லாம் இராமேஸ்வரத்தைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. திருஞான சம்பந்தர் இரண்டு திருப்பதிகங்களாலும், திருநாவுக்கரசர் ஒரு திருப்பதிகத்தாலும் இராமநாதரைப் போற்றி வழிபடுகின்றனர். இராமநாதரை இராமபிரான் பிரதிஷ்டை செய்த நிகழ்ச்சி பற்றி இரு கதைகள் உள்ளன.

இலங்கைப் போருக்கு முன்னால் இராமபிரான் இராமநாதரது கோயிலை எழுப்பினார் என்பது ஒரு கதை. போருக்குப் பின்னால் இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமபிரான் இக்கோயிலை எழுப்பியதாக மற்றொரு கதை.

முதல்கதை வருமாறு: சீதாபிராட்டியை மீட்பதற்காக வானர சேனையுடன் இலங்கைக்குச் செல்லும் பொருட்டு இராமபிரான் சேதுக்கடலில் பாலம் கட்டத் தொடங்கினார். அவர் பகலில் கட்டிய பாலத்தை இரவில் இராவணன் அழித்து வந்தான். எனவே ஜாம்பவான் பாலம் அழிக்கப்படாதிருக்க ஓர் யோசனை கூறினார். அதன்படி பாலம் கட்டியதும் அதன்மீது இராமபிரான் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வணங்கினார். மிகப்பெரிய சிவபக்தனாகிய இராவணன் பாலத்தின் மீது சிவலிங்கத்தைக் கண்டதும் பாலத்தை அழிக்காமல் சிவலிங்கத்தை வழிபாடு செய்து சென்றான். எனவே பாலம் பிழைத்தது. இராமபிரான் இலங்கைக்குச் சென்றார். இப்படி ஏற்பட்டதுதான் இராமநாதர் திருஉருவம் என்பது ஒரு புராணக்கதை.

இரண்டாவது கதை வருமாறு: இராமபிரான் இராவணனைக் கொன்றபின், பிரம்மஹத்தி பாவம் நீங்கச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சிவவழிபாடு செய்ய எண்ணினார். எனவே அனுமனை அழைத்து, அந்திக்குள் காசியில் இருந்து சிவலிங்கம் ஒன்றைக்

கொண்டு வரும்படி ஆணையிட்டார். அனுமன் மிக்க மகிழ்ச்சியோடு வான்வழியே காசிக்குப் பறந்தான். அங்கிருந்து ஒரு சிவலிங்கத்தை எடுத்துவர அவன் நினைத்தான். காசியில் ஒரே சிவலிங்கம்தான் இருக்கும் என்பது அவனது கருத்து. ஆனால் காசியில் அவன் எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்களாகவே இருக்கக் கண்டான். எந்த லிங்கத்தை எடுப்பது என்பது அவனுக்குத் தெரிய வில்லை. குற்றமுள்ள லிங்கத்தை எடுத்துச் சென்றால் அது குறையாகிவிடும் அல்லவா? எனவே குணமிக்க சிவலிங்கம் ஒன்றை எடுத்துச் செல்ல அவன் நினைத் தான். அப்படி அவன் நினைத்த பொழுது ஒரு சிவலிங்கத்தின் மீது கருடன் வட்டமிட்டான். "இது புனிதமான லிங்கம். இதை எடுப்போம்" என்று அனுமன் முடிவு கட்டிய பொழுது கெவுளி (பெரியபல்லி) சொல்லியது (கத்தியது). இதையும் ஒரு நல்ல சகுனம் என்று கருதிய அனுமன், தான் எண்ணியபடியே குறிப் பிட்ட ஒரு சிவலிங்கத்தைத் தன் வாலால் பெயர்த்து எடுத்துக் கொண்டு வான்வழியே புறப்பட்டான். அப்பொழுது காசியின் காவல் தெய்வமாகிய வைரவர் குறுக்கிட்டு அனுமனைத் தடுத்தார். இருவருக்கும் இடையே போர் மூண்டது. உடனே தேவர்கள் தலை யிட்டுச் சமாதானம் செய்து வைத்தனர். நல்லதொரு தேவகாரியத்தைத் தடுக்காமல் அனுமதிக்கும்படி வைரவரைத் தேவர்கள் வேண்டினர். உடனே வைரவர் அனுமனைச் சிவலிங்கத்துடன் செல்ல அனுமதித்தார். என்றாலும் அனுமனுக்கு உத்தரவு கொடுப்பது போல நல்ல சகுனம் காட்டிய கருடன் காசி எல்லைக்குள் பறக்கக்கூடாது என்றும், கெவுளி சொல்லக் கூடாது என்றும், வைரவர் ஆணையிட்டார். அதன்படி இன்றும் காசியில் கருடன் பறப்பதையோ, கெவுளி சொல்வதை யோ காணமுடியாது.

அனுமன் காசியில் எடுத்த சிவலிங்கத்தோடு (காசிலிங்கத்தோடு) பறந்து சேதுக்கடல் பகுதிக்கு வந்து சேரச்சிறிது கால தாமதம் ஆகிவிட்டது. எனவே இராமபிரான் குறிப்பிட்ட காலத்திற்குள் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்ய விரும்பிக், கல் கிடைக்காததால் மணலில் சிவலிங்கம் பிடித்துத் தருமாறு சீதா பிராட்டியை வேண்ட, சீதா பிராட்டி கடல் மணலைத் தன் இருகைகளாலும் எடுத்துச் சிவலிங்க உருவமாக்கி இராமபிரானிடம் கொடுக்க, இராமபிரான் வாங்கி அதனைக் கடற்கரை ஓரத்தில் பிரதிஷ்டை செய்து சிவலிங்கப் பூசை செய்து முடித்தார். இராவணன் முதலியோரைக் கொன்றதால் ஏற்பட்ட பிரமஹத்தி பாவம் நீங்கியது. சிவலிங்கப் பிரதிஷ்டை வழிபாடு முடிந்தது சமயம் அனுமன் காசிலிங்கத்தோடு வந்து சேர்ந்தான். அதற்குள் சிவலிங்கப் பிரதிஷ்டை நடந்து விட்டதால் அவனுக்கு அளவில்லாதகோபம் ஏற்பட்டது. "சீதா பிராட்டி உருவாக்கிக் கொடுத்த மணல் லிங்கம் வலிவற்றது. ஆகவே அதனை எடுத்து விட்டுக் காசிலிங் கத்தை அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யும்படி" அனுமன் இராமபிரானை வேண்டினான். அனுமனின் கோபத்தைத் தீர்க்க விரும்பிய இராமபிரான் மணல் லிங்கத்தை எடுக்கும்படி அனுமனுக்குக் கூறினார். அனுமன் தன் காலாலும் வாலாலும் எவ்வளவோ முயன்றும் மணல் லிங்கத்தை அசைக்க முடியவில்லை. சீதா பிராட்டியின் கைராசியும் இராமபிரானின் கைராசி யும், அந்த மணல் லிங்கத்திற்கு அவ்வளவு வலிமை கொடுத்து விட்டன. இராமபிரானால் அது பிரதிஷ்டை செய்யப்பட்டதால் அதற்குஇராமலிங்கம் (இராமநாதர்) என்ற திருப்பெயர் ஏற்பட்டது.

அனுமனின் கோபம் தீரவில்லை. எனவே அனுமனைச் சாந்தப்படுத்த வேண்டி, அவன் முயன்று கொண்டு வந்த காசிலிங்கத்தை இராமலிங்கத்திற்கு

அருகில் வடபுறமாகப் பிரஷ்டை செய்து, அதற்கு ஒவ்வொரு நாளும் முதலில் பூசை செய்யப்பட வேண்டும் என்ற நியதியினை இராமபிரான் ஏற்படுத்தினார். அதன்படி இன்றும் இராமநாதசுவாமி கோயிலில் முதல் பூசை காசிலிங்கத்திற்கும் (விசுவநாதர்) இரண்டாவது பூசை இராமலிங்கத்திற்கும் (இராமநாதர்) நடைபெறக் காணலாம் இராமபிரான் பிரதிஷ்டை செய்த இராமநாதர் கோயில் அன்று தொட்டு விரிவடைந்தது; புகழ்பெற்றது. இராமர் பிரதிஷ்டை செய்த ஈஸ்வரன் உள்ள அந்த ஊர் இராமேஸ்வரம் என்ற திருப்பெயர் பெற்றது.

இராமேசுவரம் இன்று ஒரு சிறு தீவாக உள்ளது. சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு இப்பகுதி இராமநாத புரத்துடன் இணைந்து இருந்ததாகக் கருதப்படுகிறது. பாம்பன் அருகில் கடல் புகுந்து ஒரு சிறு கடற் கால்வாய் ஏற்பட்டதால் இராமேசுவரம் தீவு ஏற்பட்டதெனப் பூகோள நூல் வல்லார் கூறுகின்றனர். சுமார் இருபது ஆண்டுகட்கு முன்பு இராமேஸ்வரத்தோடு இணைந்திருந்த தனுஷ்கோடி ஒரு புயல் வெள்ளத்தால் துண்டிக்கப் பட்டு இன்று தனுஷ்கோடி ஒரு சிறிய தனித் தீவாக ஆகி இருக்கும் காட்சியைக் காண்கிறோம் அல்லவா!

இராமேசுவரம் தீவில் மொத்தம் 64 தீர்த்தங்கள் இருப்பதாக ஐதீகம். அவற்றில் நீராட வேண்டுமானால் இராமேஸ்வாம் தீவு முழுவதும் சுற்றி வர வேண்டும். அதற்குப் பதிலாக இப்பொழுது இராமநாதர் கோவிலுக்கு உள்ளும் புறமுமாக 24 முக்கிய தீர்த்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. "சேது புராணமும்" "தேவை உலாவும்" இந்த 24 தீர்த்தங்களை மிக முக்கியமான வையாகக் குறிப்பிடுகின்றன. அந்தத் தீர்த்தங்கள் வருமாறு.

1. முதலாவது **சேது தீர்த்தம்** எனப்படும் தனுஷ்கோடி தீர்த்தமாகும், இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 16 மைல் தொலைவில் தனுஷ்கோடி இருக்கிறது. இப்பொழுது கோதண்டராமர் கோவில் வரை பேருந்தில் செல்லலாம். அதன் பின் சுமார் 4 மைல் நடந்து சென்றால் சேது தீர்த்தத்தை அடையலாம். வங்காளக் குடாக் கடலும், இந்து மகாசமுத்திரமும் சங்கமம் ஆகும் இடமே சேது தீர்த்தம் ஆகும். இந்து மகா சமுத்திர அலைகள் கடுமையாக இருக்கும். வங்காளக் குடாக் கடலின் அலைகள் மென்மையாக இருக்கும். இரண்டும் சேரும் இடத்தில் நீராடினால் எல்லாப் பாவங்களும் நீங்கும் என்பது புராணக் கருத்தாகும். ஆடி அமாவாசை தை அமாவாசை புண்ணிய காலங்களில் இலட்சக் கணக்கான யாத்திரிகர்கள் முன்பு இங்கு நீராடினர். இப்பொழுது தனுஷ்கோடி துண்டிக்கப்பட்டிருப்பதால் அந்த வாய்ப்பு குறைந்து விட்டது.

இராமேஸ்வரம் தீவு வில்போன்று நீண்டுள்ளது. இதன் தென்கிழக்கு முனையில் இருப்பதால் தனுஸ்கோடி என்ற பெயர் ஏற்பட்டது. தனுஸ் என்றால் வில் என்று பொருள். கோடி என்றால் முனை என்று பொருள். இங்குதான் சேது அணை இராமபிரானால் கட்டப்பட்டது. பிறகு அவரது வில் நுனியால் அது உடைக்கப்பட்டது.

2. இரண்டாவது **அக்கினி தீர்த்தம்.** இராமேஸ்வரத்தில் இராமநாதர் கோயிலுக்கு அருகில் கிழக்கே உள்ள கடல் அக்கினி தீர்த்தமாகக் கருதப்படுகிறது. இதுவும் மிக முக்கியமான தீர்த்தமாகும்: தனுஷ்கோடி தீர்த்தக் கரையிலும், அக்கினி தீர்த்தக் கரையிலும் மக்கள் நீராடிப் பிதுர்க் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

இனிவரும் 22 தீர்த்தங்களும் இராமநாத சுவாமி கோவிலுக்குள் உள்ளன. அவை வருமாறு:

3. மகாலட்சுமி தீர்த்தம்
4. சாவித்திரி தீர்த்தம்
5. காயத்ரி தீர்த்தம்
6. சரசுவதி தீர்த்தம்
7. சேதுமாதவ தீர்த்தம்
8. கந்தமாதன தீர்த்தம்
9. கவாட்ச தீர்த்தம்
10. கவய தீர்த்தம்
11. நள தீர்த்தம்
12. நீல தீர்த்தம்
13. சங்கு தீர்த்தம்
14. சக்கர தீர்த்தம்
15. பிரமஹத்தி விமோசன தீர்த்தம்
16. சூரிய தீர்த்தம்
17. சந்திர தீர்த்தம்
18. கங்கை தீர்த்தம்
19. யமுனை தீர்த்தம்
20. கயா தீர்த்தம்
21. சிவ தீர்த்தம்
22. சத்தியாமிருத தீர்த்தம்
23. சர்வ தீர்த்தம்

24. கோடி தீர்த்தம் —இந்தக் கோடி தீர்த்தம் ஊருக்குப் புறப்படுமுன் ஆட வேண்டும். கோடி தீர்த்தம் ஆடிய பிறகு இராமேசுவரத்தில் தங்கக் கூடாது என்பது ஐதீகம்.

இராமேசுவரம் இராமநாதர் கோவில் உலகப் புகழ் பெற்றதாகும். இங்குள்ள மூன்றாம் பிரகாரம் தமிழ் நாட்டுக் கட்டடக் கலைக்கே ஒரு சிறந்த சான்றாகக்

கருதப்படுகிறது. இக்கோயில் இராமபிரானால் தோற்று விக்கப்பட்டது முதல் இன்று வரை ஏராளமான மன்னர்களாலும் மக்களாலும் திருப்பணி செய்யப் பெற்றிருக்கிறது. இலங்கை மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள், இராமநாதபுரம் சேதுபதிகள், நேபாள அரசர்கள், தேவகோட்டை ஜமீன் தார் திரு. அழ அரு குடும்பத்தினர், தமிழக அரசு, மற்றும் பொது மக்கள் இக்கோயிலுக்குச் செய்துள்ள சேவை அளப்பரிது.

இக்கோயிலில் எழுந்தருளி உள்ள இராமநாத சுவாமிக்கு அருகில் காசி விசுவநாதர் (காசி லிங்கம்) சந்நிதி உள்ளது. அதன் அருகில் காசி விசாலாட்சி சந்நிதி அமைந்துள்ளது. இராமநாதர் சந்நிதி முன்பு இராமபிரான், சீதாபிராட்டி, இலக்குமணப் பெருமாள், அனுமார் சிலைகள் உள்ளன. இராமநாதருக்குத் தென் புறம் பர்வத வர்த்தினி அம்மனுக்குத் தனிக் கோயில், தனிச் சந்நிதி அமைந்திருக்கும் சிறப்பினைக் காணலாம்.

இராமநாதர் கோயிலுக்கு யுகம்யுகமாய் இந்தியத் திருநாடு முழுதும் இருந்து மக்கள் சாரி சாரியாக வந்து வணங்கிச் செல்கின்றனர். இக்கோயில் வேதகாலத்தில் இருந்தே புகழ் பெற்றிருக்கிறது. இக்கோயிலைப் பற்றிய சிறப்புக்களைக் கீழ்க்கண்ட வேத, புராண, இதிகாசங்கள் பலபடப் பேசக் காண்கிறோம்.

ரிக்வேதம், யஜுர்வேதம், துலாவூர் நகரத்தார் பெண்கள் குருபீட ஆதீனகர்த்தராகிய நிரம்ப அழகிய தேசிகர் இயற்றியுள்ள சேது ஸ்தல புராணம், வால்மீகி ராமாயணம், ஆத்யாத்ம ராமாயணம், ஆனந்த ராமாயணம், மதன்ய புராணம், கூர்ம புராணம், அக்கினி புராணம், பிரம்மாண்ட புராணம், திருநாவுக்கரசர் தேவாரம், திருஞானசம்பந்தர் தேவாரம், தாயுமானவர் பாடல்கள், அருணகிரிநாதர் திருப்புகழ்,

மு. ரா. அருணாசலக் கவிராயர் பாடல்கள், விவேகா நந்தர் உரை ஆகியவற்றால் இராமேசுவரம் கோயிலின் பெருமைமயை உணரலாம்.

திருஞான சம்பந்தர் இக்கோயிலுக்கு எழுந் தருளி இராமநாதரை வணங்கித் தேவாரத் திருப்பதி கங்கள் பாடி உள்ளார்.

அலைவளர் தண்மதியோ டயலே அடக்கி உமை
முலைவளர் பாகம் முயங்கவல்ல முதல்வன் முனி
இலைவளர் தாழைகள் விம்முகானல் இராமேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தானிருந்
தாட்சியே''

என்ற பதினோரு பாடலும்

''திரிதரு மாமணி நாகம் ஆடத்
திளைத்தொரு தீயழல்வாய்
நரிகதிக்க எரியேந்தி யாடும்
நலமே தெரிந்துணர்வார்
எரிகதிர் முத்தம் இலங்குகானல்
இராமேச்சுர மேய
விரிகதிர் வெண்பிறை மல்குசென்னி
விமலர் செயுஞ் செயலே''

என்ற பதினோரு பாடலும் திருஞான சம்பந்தரின் திரு வாக்காகும்.

''பாசமும் கழிக்க கில்லா
அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு
மதியினால் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னாலே
நினைமின்நீர் நின்று நாளும்
தேசமிக் கான் இருந்த
திரு இராமேச் சுரமே.''

என்ற பதினோரு பாடல் திருநாவுக்கரசரின் திரு வாக்காகும்.

இங்கு எழுந்தருளி உள்ள பர்வதவர்த்தினி அம்மன் மீது சுவாமி தாயுமானவர் ஒரு பெரிய பதிகமே பாடி உள்ளார். ''பர்வதவர்த்தினி'' என்ற வடமொழிப் பெயரை ''மலைவளர் காதலி'' என்று அருமையாகத் தாயுமானவர் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார். அப் பதிகத்தில் ஒரு பாடல் வருமாறு:

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்கா லமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனும் திமிரம் அணுகாக்
கதியுண்டு ஞானமாம் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளும் உண்டு.
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்றும் உண்டாகு மேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை உண்டபர
ஞான ஆனந்த ஒளியே!
நாதாந்த ரூபமே! வேதாந்த மோனமே!
நான்எனும் அகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே!
மதுசூத னன் தங்கையே!
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே!''

என்று மிக உருக்கமான முறையில் சுவாமி தாயுமானவர் பர்வதவர்த்தினி அம்மனைப் பற்றிப் பாடுகிறார்.

27-1-1897 அன்று விவேகானந்தர் இக் கோயிலுக்கு வருகை தந்து இறை வணங்கிய பொழுது ஆற்றிய ஒப்பற்ற உரை வருமாறு:

''அன்பே சமயம். தூய உள்ளன்பில் அன்றிப் புறச் சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை. உடற் சுத்தமும், உள்ளத் தூய்மையும் இன்றிச் சிவபெருமானை

வழிபடுதலில் பயனில்லை. சுத்தமான உடலுடனும், தூய்மையான உள்ளத்தோடும், சிவபெருமானை வழி படுபவர் உடைய பிரார்த்தனைகளே செவிசாய்க்கப் பெறும். தூய்மை அற்றவரும் பிறருக்குச் சமயபோதனை செய்ய முயல்கின்றனர்- ஆனால் இறுதியில் அவர்கள் முயற்சி தோல்வியுறும். புறவழிபாடு என்பது உளங் கனிந்த பக்தியின் ஒரு சின்னமேயாகும். ஆனால் பக்தியும் தூய்மையுமே உண்மையில் வேண்டுவன. அவை இரண்டும் அன்றிச் செய்யப்படும் புறவழி பாட்டினால் பயனில்லை. ஆகையால் இந்த உண்மையை நீங்கள் யாவரும் நினைவில் வைத்துக் கொள்ள முயலவேண்டும்.

மனத்தூய்மை இன்றி ஒருவன் கோவிலுக்குள் சென்றால் அவன் ஏற்கெனவே செய்துள்ள பாவங் களோடு மற்றொரு பாவத்தையும் செய்தவன் ஆகிறான். ஆகவே அவன் தன் வீட்டை விட்டுக் கோவிலுக்குப் புறப்படும் பொழுது இருந்ததைவிட இன்னும் இழிந்த நிலையில் தான் ஆலயத்தினின்றும் வீட்டுக்குத் திரும்பு கிறான். தீர்த்தமாடும் திருத்தலத்தில் அநேகப் புனித வஸ்துக்களும், பரிசுத்தமான மக்களும் உறைகின்றனர். சாதாரணமான ஓர் இடத்தில் புரிகிற பாவத்தை எளிதில் போக்கிக் கொள்ள இயலும். ஆனால் தீர்த்தஸ்தலம் ஆகிய புனிதத் தலத்திலே புரியும் பாவத்தைப் போக்க வழியேதும் இல்லை.

எல்லாவித வழிபாட்டின் சாரமாவது, தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மை புரிவதுதான். ஏழை எளிய மக்கள், நோயுற்ற மக்கள் இவர்களிலே சிவத்தைக் காண்பதுதான் சிவவழிபாடு! விக்கிரகங்களில் மட்டும் சிவனைக் காண முயல்வது வழிபாட்டின் பூர்வாங்கமே ஆகும். கோவிலில் மட்டும் சிவத்தைக் காண விழைகிறவனைக் காட்டிலும், ஜாதி, மதம், மற்ற யாதொரு பேதமும் இன்றி ஒரு ஏழை மனிதனிடம்

கடவுளைக் கண்டு, அவனுக்குச் சேவை செய்து, உதவி புரிகிறவன் தான் சிவபெருமானின் இன்னருளுக்குப் பாத்திரமாகிறான்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்பு கிறவன் அவனுடைய படைப்புக்களாகிய உலகத்தில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் சேவை செய்ய முற்பட வேண்டும். சிவனடியார்களுக்குச் செய்யும் சேவைதான் சிவபெருமானுக்குச் செய்யும் சிறந்த சேவை என சாத்திரங்கள் கூறுகின்றன. ஆகையால் இந்த உண்மையை நீங்கள் தெளிவாய் உணரவேண்டும்.

மீண்டும் நான் உங்களுக்குக் கூறுவதாவது, உங்களை நாடிவரும் எவருக்கும் உங்கள் சக்திக்கு இயன்றவரை தூய உள்ளத்துடன் உதவிபுரிய வேண்டும். இந்தக் குணத்தினால் தான் உங்கள் உள்ளம் தூய்மை அடைந்து சித்த சுத்தி அடைய முடியும். அப்பொழுது நம்மிடத்தில் உறையும் சிவபெருமான் எங்கும் நீக்கமற நிறைந்தவர் ஆவார். அவர் எப்பொழுதும் யாருடைய உள்ளத்திலும் குடிகொண்டுள்ளார்.

சுயநலம் இன்மையே உண்மையான சமயப் பற்றுக்குச் சான்று. ஒருவன் எவ்வளவுக்குத் தன்னல மின்றிப் பிறருக்கென வாழ்கிறானோ அவ்வளவுக்கு அவன் ஆன்மீக ஞானம் பெற்றுச் சிவபெருமான் அருகே இருக்கக் கடவன். அவன் தான் படித்தவனாயினும். பாமரனாயினும், அறிந்தோ அறியாமலோ மற்ற எவரைக் காட்டிலும் சிவபெருமான் பக்கலிலே இருக்க அருகதை உள்ளவன் ஆகிறான். அப்படி இன்றி ஒருவன் சுயநலம் மிக்கவனாக இருப்பின், அவன் எல்லாக் கோவில் களுக்கும் சென்று தலதரிசனம் செய்திருப்பினும், சிறுத்தை உடல்போலத் தன் உடம்பு முழுதும் நீறு பூசித் திலகம் தீட்டித்திரியினும், அவன் சிவபெருமானை விட்டு வெகுதூரம் விலகி உள்ளவனே ஆகிறான்'' என்று சுவாமி விவேகாநந்தர் இந்துமத சாரம் பற்றி உரைக்கிறார்.

27-1-1897 அன்று இராமநாத சாமி கோவிலில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புப் பற்றி சுவாமி விவேகாநந்தர் ''பெரியோர் வருகை'' ஏட்டில் எழுதி யிருப்பதாவது: ''இந்த ஆலயத்தின் அர்ச்சகர்கள், மேற் பார்வையாளர்கள் ஆகியோரின் பணிவு, விரைந்த சேவை ஆகியவற்றைச் சான்று கூறி உறுதி செய்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.''

விவேகாநந்தா—

என்று அவரே கைப்பட எழுதி உள்ளார். இவை பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களால் இக்கோயிலின் கீழ்ப்புற நுழைவாயிலில் 28-9- 963 அன்று திறந்து வைக்கப் பெற்றுள்ளன.

வடநாட்டு மக்கள் ''சார்தாம்'' என்று நான்கு தலங்களைப் புகழ்வர். அவை: பத்ரி, துவாரகை, பூரி, இராமேசுவரம் ஆகும். எனவே ''சார்தாம்'' என்ற நான்கு திருத்தலங்களில் ஒன்று என்ற சிறப்புக்குரிய தென்னாட்டுத்தலம் இராமேசுவரம் ஆகும். வடதலம் பத்ரி. தென் தலம் இராமேசுவரம். கீழைத் தலம் பூரி. மேலைத் தலம் துவாரகை.

இராமநாதர் கோவிலில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் வடபுறத்தில் **கெந்தமாதன பர்வதம்** என்ற சிறுமலை இருக்கிறது. கெந்தம் என்றால் சந்தனம் என்று பொருள். பர்வதம் என்றால் மலை என்று பொருள். இராமர் சீதையைத் தேடித் தெற்கே வந்த பொழுது இராமேசுவரத்தில் இந்த கெந்தமாதனபர்வதத் தின் மேல் ஏறி நின்று சீதை சிறையிருக்கும் இலங்கையை நோக்கினார் என்று சொல்லப்படுகிறது. எனவே இங்கு இராமர் பாதம் வைத்து வணங்கப்படுகிறது. இந்தக் கெந்தமான பர்வதம் புராணகாலத்துப் புகழ்மிக்க ஐந்து மலைகளில் ஒன்றாகும். அவை: மைந்நாகமலை, மந்தர

மலை, மேருமலை, கயிலாயமலை, கெந்தமாதனமலை ஆகும். இவற்றுள் மைந்நாகமலையும், மந்தரமலையும் கடலுள் அழுந்தி விட்டன. மேருமலையும் கயிலாயமலையும் இமயமலைப் பகுதியில் யாரும் அடைய முடியாத உயரம் உடையவை. எனவே இப்பொழுது மக்கள் காணவும், ஏறி வணங்கவும் வாய்ப்பாக இருப்பது கெந்தமாதன மலை ஒன்றேயாகும். இதைத் தொழுதால் பாவம் போகும் என்பது ஐதீகம்.

இராமேஸ்வரத்தில் தீர்த்தம் ஆடுபவர்கள் முதலில் லெட்சுமண தீர்த்தம், சீதா தீர்த்தம் ஆடி, இராமர் தீர்த்தம் ஆடவேண்டும். இந்தத் தீர்த்தங்கள் இராமநாதசுவாமி கோவிலுக்கு மேற்கே சிறிது தொலைவில் உள்ளன. பிறகு அக்கினி தீர்த்தம் ஆடிக் கோவிலுக்குள் உள்ள 22 தீர்த்தங்கள் ஆடவேண்டும். இயன்றால் தனுஷ்கோடிக்கும் சென்று தீர்த்தம் ஆடலாம்.

இராமநாத சுவாமி கோவிலில் ஆனிமாதத்தில் இராமநாதர் பிரதிஷ்டைத் திருவிழா மூன்று நாள் நடைபெறும். இது வரலாற்றுச் சிறப்புடைய திருவிழா ஆகும்.

ஆனி-ஆடி மாதங்களில் ஸ்ரீபர்வதவர்த்தினி திருக்கல்யாணத் திருவிழா 17 நாட்கள் நடைபெறும்.

மாசி மாதத்தில் மகாசிவராத்திரித் திருவிழா 10 நாட்கள் கோலாகலமாகக் கொண்டாடப்பெறும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவில் அம்பாள் தங்கப் பல்லக்கில் மூன்றாம் பிரகாரத்தில் எழுந்தருளி வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கோயிலில் உள்ள விலைமதிக்க முடியாத தங்கம், வெள்ளி, வயிர, நவரத்தின ஆபரணங்கள், கவசங்கள், வாகனங்கள் காணக் கண்கோடி வேண்டும்.

வாழ்நாளில் ஒரு முறையாவது இராமேஸ்வரம் சென்று தீர்த்தம் ஆடி இராமநாதர்-பர்வர்த்தினியை வணங்காதவர்கள் எவ்வளவு பேறு பெற்றிருப்பினும் குறை உடையவர்களே ஆவர்.

13 காசி கால் நடைப் பயணத்திற்கு முந்திய நாள்

16-2-1983 புதன்கிழமை வைகறையில் எழுந்து லெட்சுமணர் தீர்த்தம், சீதா தீர்த்தம், இராமர் தீர்த்தம் ஆடினோம். பிறகு அகஸ்திய தீர்த்தம் ஆடி அக்கினி தீர்த்தம் ஆகிய கடலில் நீராடினோம். பிறகு கோவிலுக்குள் உள்ள 22புண்ணிய தீர்த்தங்களிலும் வரிசையாக நீராடினோம். இராமநாத சுவாமி கோவில் நிர்வாக அதிகாரி (E.O.) திரு. **கந்தசாமி** அவர்கள் வழங்கிய கோடி தீர்த்தத்தை ஒரு பெரிய எவர்சில்வர் குடத்தில் நிறைத்துக் கொண்டோம். இக்குடம் திருத்தொண்டர் ஆர். வயிரவன் அவர்களுக்குப் பழநிக் கோயில் நிர்வாகத்தினர் வழங்கிய புண்ணிய குடமாகும், இக்குடத்தில் இராமநாதசுவாமி கோயில் கோடி தீர்த்தம் நிறைக்கப் பெற்று, நான்கு மாதம் கழித்துக் காசியில் விசுநாதருக்கு அபிஷேகம் செய்யப்பெற்றது என்றால் அக்குடம் செய்த புண்ணியத்தை அளவிட முடியுமா? இக்குடம் எங்களுடன் வந்த சைக்கிள் ரிக்‌ஷாவில் காசிக்கு வரும் சிறப்பினைப் பெற்றது.

எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடி முடிந்ததும் கெந்தமாதன பர்வதம் சென்று மலை ஏறி ஸ்ரீ இராமர் பாதம் வணங்கினோம். அங்கிருந்து பார்த்தால் இராமேசுவரம் தீவும், நாற்புறமும் சுற்றி உள்ள கடலும் நன்கு தெரிகின்றன. இந்த இடம் தான் இராமேசுவரத்திலேயே உயரமான இடமாகும்.

தீர்த்தங்கள் ஆடி முடிந்ததும் இராமநாதசுவாமி கோயிலில் இராமநாதர், விசுவநாதர், விசாலாட்சி, பர்வதவர்த்தினி தெய்வங்களை வணங்கி, எங்களது காசிப் பாதயாத்திரையினை இனிதே நிறைவு செய்து தரும்படி பிரார்த்தித்துக் கொண்டோம்.

அன்றுகாலை உணவு தனுஷ்கோடி வீர. சத்திரத்தினரும், மதிய உணவு என் மகள் பொன்முடி இராமசாமியும், இரவு உணவு SP. மணியன் — முத்துக்கருப்பன் ஆகியோரும் ''திரு அமுதாக'' வழங்கிச் சிறப்பித்தனர்.

இரவு தூங்கச் சென்றோம். விடிகாலை 5½ மணிக்கு விழிக்க வேண்டும். அது கூடச் சரியாகாது. ஏனெனில் இரவில் நாங்கள் உறங்கினால் தானே எழுவது என்பது சரியாகும். நாங்கள் தான் இரவில் உறங்காமல் காசி பற்றிய சரித்திர சிந்தனையில் மூழ்கிக் கிடந்தோமே. எப்படி எங்கட்கு தூக்கம் வரும்?

14. இரண்டாம் கட்டம்

(காசி நடைப் பயணம்-முதல்நாள் யாத்திரை தங்கச்சிமடம்-பாம்பன்-மண்டபம்)

சரித்திர முக்கியத்துவம் நிறைந்த 17-2-1983 வியாழக் கிழமை விடிந்தது. நாங்கள் பல்லாண்டுகளாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த காசி நடைப் பயணத் தொடக்க நாள் அல்லவா இது! எங்கள் உணர்ச்சிகளை எங்களாலேயே அடக்க முடியவில்லை. அனைவருமே உணர்ச்சிப் பிழம்பாக இருந்தோம். இன்று காசிக்குப் பாதயாத்திரை புறப்படப் போகிறோம். ஆனால் காசியோ இரண்டாயிரம் மைல் தொலைவில் இருக்கிறது. இடையில் நான்கு மாதங்கள் இருக்கின்றன. திட்டமிட்டபடி சென்று சேர்ந்தால் 12-6-1983 அன்று காசியில் இருக்க வேண்டும். இறைவன் திருவுள்ளம் எப்படியோ?

காலையில் எழுந்ததும் நாங்கள் பதின்மூன்று பேரும், எங்கள் குடும்பத்தினரும், வழியனுப்ப வந்தவர் களும் ஆக ஒரு பெரிய கூட்டமே கடலாடச் சென்றோம். பிறகு கடல் மணலைச் சேகரித்துப் பூசை செய்து அதனை ஒரு பையில் அடைத்துக் கட்டி எடுத்துக் கொண்டோம். இந்த மணலைக் காசியில் கங்கையாற்றில் சேர்க்க வேண்டும் அல்லவா? இந்த மணலும் எங்களுடன் நான்கு மாத காலம் வரும்.

இராமநாதசுவாமி கோயிலுக்குள் சென்று இராமநாதரையும், விசுவநாதரையும், விசாலாட்சியை யும், பர்வத வர்த்தினியையும், ஸ்ரீஇராமர், சீதை,

லெட்சுமணர், அனுமார் ஆகிய தெய்வங்களையும், பிற தெய்வங்களையும் வணங்கி, எங்கள் நெடும் பயணத்தை நிறைவேற்றித் தருமாறு பிரார்த்தனை செய்து கொண்டோம். கோயிலில் அபிஷேக ஆராதனை செய்து எங்களுக்குக் காளாஞ்சி தந்து மாலை சூட்டினார்கள். கோயில் நிர்வாக அதிகாரி திரு. கந்தசாமி அவர்கள் கோடி தீர்த்தம் அடங்கிய புண்ணிய குடத்தை எங்களது குருநாதர் திரு. சிதம்பரம் செட்டியார் தலையில் வைத்தார். அடியேன் வேல் ஏந்தி வந்தேன். தியாகராசன் கடல் மணலைத் தலையில் ஏந்திக் கொண்டார். மேள தாளத்தோடு கோயில் பிரகாரத்தில் வலம் வந்து அம்பாள் சந்நிதியில் உள்ள திருக்கல்யாண மண்டபம் வந்து சேர்ந்தோம். காலை 8 மணிக்குக் காசி நடைப் பயணத் தொடக்க விழா கோயில் நிர்வாகி திரு கந்தசாமி தலைமையில் நிகழ்ந்தது. ''திருத்தொண்டர்'' ஆர். வயிரவன் இறைவணக்கம் பாடி மாலை சூட்டினார் அடியேன் அனைவர்க்கும் வரவேற்புக் கூறி 13 பேர் சார்பாக விடை பெற்றேன். அப்பொழுது அடியேன் கூறியதாவது: ''இறைவன் ஆணைப்படி இன்று காசிக்குத் தீர்த்தக் குடம் தாங்கி நடந்து புறப்படுகிறோம். இதனை நிகழ்த்த எங்களுக்கு வலிமை இல்லை. எல்லாம் அவன் செயல். அவனது வலிமையை நம்பிப் புறப்படுகிறோம். நான்கு மாதத்தில் காசி சென்று, அதன்பின் கங்கை எடுத்துக் கொண்டு இராமேசுவரத்துக்கு மீண்டும் 13 பேரும் பத்திரமாக வந்து சேர்வோம். அதனை அவன் நிறைவேற்றுவான். யார் யார் நடந்து முடிப்போம் என்பது நமக்குத் தெரியாது. புறப்படுவது நம் கையில்! போய்ச் சேர்வது அவன் கையில்!! இந்தத் தீர்த்தக் குடத்தை ஒருவராவது நடந்து சென்று செலுத்தினால் அந்தப் பலன் இந்தக் குழு முழுவதற்குமே உரியதாகும். கட்டுப்பாட்டோடு இந்தத் தேவ காரியத்தில் ஈடுபடுகிறோம். இது அசுர தவம்! தேவகானம் பாடி இந்த

அசுர தவத்தை நிறைவேற்றுவோம். முருகனின் வேல் எங்கள் முன்னே வருகிறது, இதனை சைக்கிள் ரிக்ஷாவில் கொண்டு செல்கிறோம். இதற்குத் தினந்தோறும் நாங்கள் ஆராதனை செய்வோம். தீர்த்தக் குடத்துக்கும் கடல் மணலுக்கும், சைக்கிள் ரிக்ஷாவில் வைக்கப் பட்டுள்ள விநாயகர், முருகன், காசி விசுவநாதர், இராமர், சீதை, லெட்சுமணர், அனுமான் படங் களுக்கும் தினம் பூசை செய்வோம். இத்தெய்வங்கள் எல்லாம் எங்களை விட்டு விலகாமல் எங்களுடன் வருவ தால் எங்களுக்கு ஒரு ஆபத்தும் வராது. ஆனாலும் எங்களுக்காக நீங்கள் தினந்தோறும் ஒரு முறை பிரார்த் தனை செய்யுங்கள். நாங்கள் உங்கள் அனைவருக் காகவும், இந்த நாட்டின் நன்மைக்காகவும், ஒற்றுமைக் காகவும் தினந்தோறும் பிரார்த்தனை செய்கிறோம். நாலரை மாதம் கழித்து மீண்டும் இங்கே சந்திப்போம்'' என்று கூறி அனைவரிடம் இருந்தும் ஆசி பெற்றேன்.

சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரும் என் இனிய நண்பரும் ஆகிய திரு. **ந. செண்பகம்,** மேற்படி பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. **சங்கரப்பன்,** புலவர் **மீனவன்,** புலவர் **சேதுராம லிங்கம்** ஆகியோர் வாழ்த்துக் கூறினர். பிறகு தலைவர் திரு. கந்தசாமி அவர்கள் எங்களுக்கு ஆசிகூறி எங்களை வழியனுப்ப, நாங்கள் ஒவ்வொருவரும் சிறிது நேரம் குடத்தைத் தலையில் ஏந்தியவாறு கோயிலுக்கு வெளியே வந்தோம். அங்கு நாங்கள் 13 பேரும் நிற்க ஒரு புகைப்படம் எடுக்கப் பெற்றது. பிறகு திருத் தொண்டர் ஆர். வயிரவனிடம் தீர்த்தக் குடத்தைக் கொடுத்தோம். அவர் அதனைத் தலையில் தாங்கிவர நகரவிடுதிக்கு வந்து சேர்ந்தோம் நகரவிடுதியில் தீர்த்தக் குடம், வேல், கடல் மணல் ஆகியவற்றை வைத்து வணங்கினோம். எங்கள் 13 பேரையும் நிற்க வைத்து என் தம்பி **மு. இராம, இராசகோபாலும்,** மற்ற அன்பர்

களும் "ஓம் சக்தி" சொல்லித் திருஷ்டி கழித்துப் பூசணிக்காய் உடைத்து எங்களைக் காசிக்கு வழியனுப்பி வைத்தனர். எங்கள் கால் நடைப்பயணம் தொடங்கியது.

இராமேசுவரம் தீவில் உள்ள சாலை வழியாகத் தங்கச்சிமடம் நோக்கி நடக்கத் தொடங்கினோம். எங்களை இராமேசுவரம் ஊர் எல்லைவரை வந்து ஏராளமான அன்பர்களும் உறவினர்களும், வழியனுப்பி வைத்தனர். கண்ணீர்மல்கும் கண்களோடு அவர்கள் எங்களை வழியனுப்பிய காட்சி மறக்க முடியாததாகும். தீர்த்தக் குடத்தைத் திருத்தொண்டர் ஆர். வயிரவன் புகைவண்டி மூலம் தேவகோட்டைக்குக் கொண்டு வந்து, அங்குள்ள எங்களது சைக்கிள் ரிக்ஷாவில் வைத்துத் தினம் பூசிப்பார். நாங்கள் தேவகோட்டைக்கு நடந்து வந்தபின் குடம் வைத்த சைக்கிள் ரிக்ஷா எங்கள் பொறுப்புக்கு வந்து சேரும். அதுவரை சைக்கிள் ரிக்ஷா, தீர்த்தக்குடம், எங்களது உணவுப் பொருள், உடை முதலியன தேவகோட்டையில் இருக்கும்.

நாங்கள் தோளில் ஒரு பை மட்டும் தொங்க விட்டவாறு நடக்கலானோம். அதில் எங்களுக்கு வேண்டிய முக்கியமான பொருள்கள் மட்டும் இருக்கும்.

இராமேசுவரம் தீவில் நாங்கள் 13 பேர் மட்டும் நடக்கிறோம். நல்ல வெயில் கொளுத்துகிறது. தீர்த்த மாடியபொழுது தண்ணீர்ப்பசை உள்ள காலினால் இராமேசுவரம் முழுதும் முதல் நாள் நடந்ததால் எங்களது பாதம் தேய்ந்திருக்கிறது. எங்களது அளவு கடந்த உற்சாகத்தில் அதனை அப்பொழுது நாங்கள் கவனிக்கவில்லை. இப்பொழுது வெயில் ஏற ஏறக் காலில் வேதனை ஏற்பட்டது. ஒரு மர நிழலில் தங்கித் தேவகோட்டை பக்தர் திரு. சோம. நாராயணன் அவர்கள் வழங்கிய பலகாரம் உண்டோம்.

காலை 10½ மணிக்குத் **தங்கச்சிமடம் ஏகாந்தராமர்** கோவிலுக்கு வந்து சேர்ந்தோம். நடுத்தரமான முள் காட்டுப் பகுதியில் இக்கோயில் ஏகாந்தமாக அமைந் துள்ளது. ஒரு காக்கை குருவி கூட அங்கு இல்லை. அக்கோயிலின் தர்மகாத்தா ஆகிய திரு. நீ. ராம்நாத் பூசாரி (நடுத்தெரு. இராமேஸ்வரம்) நல்ல படிப்பாளி, வேதம் கற்ற விற்பன்னர். அவர் எங்களுக்காகவே அக்கோயிலுக்கு வருகை தந்து எங்களை வரவேற்று உபசரித்துச் சுவாமி தரிசனம் செய்து வைத்தார்.

இக்கோயிலில் இராமர் ஏகாந்தமாக இருந்து சீதையைப் பற்றிச் சிந்தனை செய்ததாக ஐதீகம். அதன் பின் இராமர் இராமேஸ்வரம் சென்றதாகக் கூறப்படுகிறது. இக்கோயிலில் உள்ள **அமிர்தவாமி தீர்த்தம்** இராமேஸ்வரம் தீவில் உள்ள முக்கிய தீர்த்தங் களில் ஒன்றாகும். அகஸ்தியர் தம்பி சுதீஷ்ண மகரிஷி இங்கு தவம் செய்ததாக ஐதீகம். இங்கு மூன்று வருடம் தங்கி இருந்தால் மறுபிறவி இல்லை என்று சொல்லப் படுகிறது. தலைமை ஆசிரியர் திரு. ந. செண்பகம், திரு. புலவர் சங்கரப்பன் ஆகியோர் இவ்வூர் வரை வந்து எங்களை வழிவிட்டுப் பிறகு விடைபெற்றுச் சென்றனர்.

தங்கச்சி மடம் என்பது ஒரு பழைய சிற்றூர். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு பாம்பன் ரயில்பாலம் கட்டப்படாதிருந்த காலத்தில் இராமேசுவரத்திற்கு வரும் யாத்திரிகர்கள் மண்பத்தில் படகு ஏறிக் கடலைக் கடந்து பாம்பன் என்ற ஊரில் கரை இறங்கி நடந்தே இராமேசுவரம் நோக்கி வருவர். அப்படி நடந்து வரும் பொழுது இரவு தங்குவதற்கு வசதி வேண்டுமே என்று தங்கச்சி மடத்தில் நம் நகரத்தார்கள் ஒரு விடுதி கட்டி அக்காலத்தில் பராமரித்து வந்துள்ளனர். அதுபற்றி ஒரு பெரியவர் என்னிடம் பல ஆண்டுகட்கு முன்பு கூறி

இருந்தார். ''எப்பொழுதாவது நீங்கள் தங்கச்சி மடம் சென்றால் அந்த விடுதிபற்றி அறிந்து, வாருங்கள்'' என்று எனக்குச் சொல்லி இருந்தார். அது இப்பொழுது என் நினைவுக்கு வந்தது. எனவே அதுபற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

நகரத்தார் விடுதி ஒரு பழைய கல்மண்டபமாக அமைந்துள்ளது. இதனை அக்காலத்தில் நகரத்தார்கள் இராமநாதபுரம் சேதுபதியிடம் இருந்து பெற்றுப் பராமரித்து வந்துள்ளார்கள். படகிலும் நடந்தும் இராமேசுவரம் செல்லும் கால கட்டத்தில் இந்த விடுதி பெரிதும் பயன்பட்டிருக்கிறது. ஆனால் புகைவண்டிப் பாலம் ஏற்பட்ட பிற்பாடு யாரும் படகில் வந்து, நடந்து செல்ல வாய்ப்பு இல்லாததால் கடந்த முக்கால் நூற்றாண்டாக நம் நகரத்தார் விடுதி தேடுவார் இல்லாமல் முன்பகுதி எல்லாம் இடிந்து கிடக்கிறது. இப்பொழுது இங்குள்ள நகர விடுதிக் கல்மண்டபத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது.

முதல் நாள் மாலைப் பயணம் 4-மணிக்குத் தொடங்கியது. $1\frac{1}{2}$ மணி நேரம் நடந்து பாம்பன் வந்து சேர்ந்தோம். அங்கு கடற்கரை ஓரத்தில் உள்ள பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் சென்று இறை வணங்கினோம். அங்குள்ள ''வைரவர் கோவில்'' ஆதியானது. கடல் தீர்த்தம் ''வைரவர் தீர்த்தம்'' என்று அழைக்கப்படுகிறது. கோயில் அருகில் ''கபிலர் தீர்த்தம்'' உள்ளது. முற்காலத்தில் நடந்து வருபவர்கள் இத் தீர்த்தங்களில் முறையாக நீராடி இராமேசுவரம் சென்றனர். ஆனால் இப்பொழுது அந்த நடைமுறைகள் மாறிவிட்டன.

முருகப் பெருமானை இந்த இருபதாம் நூற்றாண்டில் தன் கண்ணால் கண்ட சித்தரும், வரகவியும் ஆகிய **பாம்பன் சுவாமிகள்** பிறந்த ஊர் பாம்பன் ஆகும்.

இவர் பிறந்த வீடு மூன்று மாடி வீடாகும். இவரது தந்தை சாத்தப்பன் சேர்வை கட்டிய வீடு அது. இவ் வீட்டின் மாடியில் இருந்துதான் "பாம்பன் சுவாமிகள்" பாடினார், எழுதினார். இவர் பயன்படுத்திய கைப் பெட்டி இன்றும் அவ்வீட்டில் உள்ளது.

பாம்பன் பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக் குக் கோவிந்த நாடார் என்னும் பக்தர் தர்ம கர்த்தா வாகவும், சண்முகசாமி என்னும் பக்தர் பூசாரியாகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் பழநிக்குத் தைப்பூசத்தின் போது ஆண்டு தோறும் பாத யாத்திரை வருவதாக எங்களிடம் கூறி, எங்கட்குத் திருநீறு வழங்கி வாழ்த்தினர்.

பாம்பனில் இருந்து மண்டபம் வரை கடல் குறுக்கிடுகிறது. கடலை எப்படிக் கடப்பது என்று சிந்தித் தோம். "பாலத்தின் வழியாக நடக்கலாம் என்றால் அதற்கு முன் அனுமதி பெறவேண்டும். மேலும் பால இடைவெளியில் கால் வைத்தால் கடலுக்குள் விழ வேண்டும். இது மிக ஆபத்தானது. படகின் மூலம் செல்ல லாம் என்றால் காற்றின் வேகமும் அலையின் வேகமும் அதிகமாக உள்ளது. கடலில் உள்ள பாறைகளில் ப்டகு மோதினால் ஆபத்து ஏற்படும். மேலும் இச்சமயங்களில் படகு விடமாட்டார்கள். எனவே 6மணி ரயில்மூலம் கடலைக் கடந்து மண்டபத்திற்குச்செல்லுங்கள். அதுவே உத்தமம்." என்று பாலசுப்பிரமணிய சாமி கோயில் பூசாரி சண்முகசாமி எங்களிடம் கூறினார். அவரது வாக்கினை அந்த முருகனின் வாக்காகவே கருதி, அவரது ஆணைப்படி உடனே புகை வண்டி நிலையம் சென்றோம் புகைவண்டி புறப்பட்டுக் கொண்டிருந்தது, அதில் ஏறி மாலை 6½மணிக்கு மண்டபம் வந்து புகைவண்டிநிலையம் அருகில் உள்ள முருகன் கோயில் முற்றத்தில் தங்கினோம்.

இரவு 8 மணி இருக்கும். கோயில் முற்றத்தில் பத்துப் பதினைந்து மீனவர்கள் வந்து தங்கினர். அவர்கள் கடலில் மீன்பிடித்து விட்டுத் தினம்தோறும் அங்கு வந்து சிறிது நேரம் தங்குவார்களாம். அவர்கள் எங்களோடு பேச்சுக் கொடுத்தார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே நடந்த பேச்சு மிகவும் சுவையாக இருந்தது. அதை நீங்களும் சுவைக்கலாமே. **மீனவர்களில்**

ஒருவர்: ஐயா! நீங்கள் இராமேஸ்வரம் செல்ல வேண்டுமா?

நான்: இல்லை. நாங்கள் இராமேஸ்வரத்தில் இருந்து தான் வருகிறோம்.

மீனவர்: அப்படியானால் ரயில் வருவதற்காகக் காத்திருக்கிறீர்களா?

நான்: இல்லை. விடிவதற்காகக் காத்திருக்கிறோம்.

மீனவர்: அப்படியானால் நீங்கள் எங்கே போக வேண்டும்?

நான்: நாங்கள் காசிக்குப் போக வேண்டும்.

மீனவர்: காசியா? அது எங்கே இருக்கிறது?

நான்: அது இரண்டாயிரம் மைல் தொலைவில் இருக்கிறது.

மீனவர்: காசிக்கு இங்கிருந்தே ரயில் இருக்கிறதா!

நான்: இல்லை.

மீனவர்: பின்னே எப்படிக் காசிக்குப் போகப் போகிறீர்கள்?

நான்: நடந்தே போகப் போகிறோம்.

மீனவர்: நடந்தா? (ஆச்சரியமாக)

நான்: ஆம். நடந்துதான் போகிறோம். இப்பொழுது கூட இராமேஸ்வரத்தில் இருந்து காலையில் புறப்பட்டு நடந்துதான் வருகிறோம்.

மீனவர்: காசிக்கு 2000 மைலும் நடந்தே போகப் போகிறீர்களா?

நான்: ஆம்.

மீனவர்: (வியப்பாக) உங்களுக்கு என்ன லூசா? (பைத்தியமா?)

நான்: ஆம். லூஸ்தான்.

மீனவர்: இது என்ன லூஸ்?

நான்: இது ஒருவகையான லூஸ்!

மீனவர்: இது எப்பொழுது பிடித்தது?

நான்: இது பிடித்து ஆறாண்டு ஆகிவிட்டது. நாங்கள் முருகனின் ஆறுபடை வீட்டுக்கும் ஆயிரம் மைல் நடந்த பொழுது பிடித்துவிட்டது.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், இது வரை வேடிக்கையாகவும் வியப்போடும் பேசிவந்த மீன வர்கள் என் அருகில் பக்தியோடு வந்தனர். காசி பற்றிய விபரங்களைக் கூற வேண்டினர். உடனே நான் அவர் களுக்குக் காசிக்குச் செல்லும் சாலை அமைந்த பெரிய இந்தியாப் படத்தை விரித்துக்காட்டி நமது பயணத்தைப் பற்றிய விபரங்களைக் கூறினேன். அவர்களது கண்கள் வியப்பால் விரிந்தன.

"காசிக்கு எத்தனாவது நாள் போய்ச் சேர வேண்டும்" என்றனர்.

"நூற்றுப் பதினாறவது நாள்" என்றேன்.

"இன்று எத்தனையாவதுநாள்" என்றார்கள்.

"இன்றுதான் முதல் நாள்" என்றேன்.

"மொத்தம் எத்தனை மைல் நடக்க வேண்டும்?" என்றார்கள்.

"இரண்டாயிரம் மைல் நடக்க வேண்டும்" என்றேன்.

"இப்பொழுது எத்தனை மைல் நடந்திருக்கிறீர்கள்" என்றார்கள்.

"பதினைந்து மைல்" என்றேன்.

"இனி உள்ள மீதித்தூரம் முழுதும் நடந்தேதான் போகப் போறீர்களா!" என்றார்கள்.

"ஆம்" என்றேன் வைராக்கியமாக. அவர்களில் ஒருவர் சிரித்துக் கொண்டே

"இது சரியான லூஸ்தான்" என்று சொல்லி நடையைக் கட்டினார்.

அவர் எங்களிடம் சொல்லிக் கொள்ளவில்லை; எங்களுக்கு ஆசி சொல்லவும் இல்லை; அனுதாபப்படவும் இல்லை; அவர் எங்களை மதிக்காமலே புறப்பட்டதில் இருந்து எங்கள் பேச்சை அவர் நம்பவில்லை என்பது தெரிந்தது. அவர் எங்களை நம்பினாலும் நம்பாவிட்டாலும் நாங்கள் கடவுளை நம்பினோம்.

ஆனால் அந்த மீனவர்களில் இன்னொருவர் எங்களை நம்பினார். அவர் சொன்னார் "இதுதான் உண்மையான **இராமாயணயாத்திரை**" என்று. ஆம். இராமபிரான் வடக்கே இருந்து தெற்கே நடந்தார். நாங்கள் தெற்கே இருந்து வடக்கே நடக்கிறோம். எனவே இது இராமாயண யாத்திரைதான்.

15. இரண்டாம் நாள் பிரப்பன் வலசை (பாம்பன் சுவாமிகள் கோவில்)

முதல் நாள் சுமார் 15-மைல் நடந்து கால் பெரிதும் தேய்ந்திருந்ததால் மிகவும் களைத்துப் போய்த் தூங்கினோம். இரண்டாம் நாள் (18-2-1983 வெள்ளிக் கிழமை) காலை 5-மணிக்கு எழுந்து காலைக் கடன்கள் முடித்து $5\frac{1}{2}$ மணிக்கு நடக்கத் தொடங்கினோம். 11 மைல் நடந்து பிரப்பன் வலசை என்ற புகழ்மிக்க ஊருக்கு $10\frac{1}{2}$ மணி அளவில் வந்து சேர்ந்தோம். சாலை ஓரத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் பகற் பொழுது முழுதும் தங்கி இருந்தோம். நல்ல காற்றோட்டமான இடம். நீர் வசதியும் இருந்தது.

பிரப்பன் வலசை ஊருக்குள் சிறிது தூரத்தில் ''பாம்பன் சுவாமிகள் திருக்கோவில்'' உள்ளது. வெயில் கழிந்ததும் மாலை 5-மணிக்குப் புறப்பட்டுச் சிறிது நேரத்தில் அக்கோயிலைச் சென்று அடைந்தோம். அங்கு ஓர் அழகிய கொலு மண்டபம் இருக்கிறது. அம்மண்டபத்தில் தங்கினோம். கோயில் பூசாரி நாகரத்தினம் என்பவர் ஒரு நல்ல பக்தர். அவர் எங்களை நன்கு வரவேற்று வழிபாடு செய்வித்தார். அவர் மூலமாகப் பாம்பன் சுவாமிகளின் முழு வரலாற்றை யும் ஓரளவு தெளிவாக அறிய முடிந்தது.

பாம்பன் சுவாமிகள் வரலாறு

பாம்பன் சுவாமிகள் பாம்பனில் சாத்தப்ப சேர்வைக்கு மகனாகப் பிறந்தார். வசதியான மூன்று

மாடி வீட்டில் பிறந்த அவர் குழந்தைப் பருவத்திலேயே முருகன் மீது அளவு கடந்த பக்தி கொண்டார். பாடல் எழுதும் வரம் பெற்றார். மாடியில் இருந்து பாடல்கள் எழுதலானார். செம்பினால் செய்த சிறிய தண்டாயுத பாணி சிலையினை வைத்துப் பூசித்தார்.

பிரப்பன் வலசையில் இப்பொழுது கோயில் கருவறை கட்டி உள்ள இடத்தில் 35-நாள் தவம் செய்தார். 17-3-1894 முதல் 20-4-1894 முடிய அந்தத் தவம் நிகழ்ந்தது. கருவறை உள்ள இடத்தில் 4 அடி குழி வெட்டி சுவாமிகள் குழிக்குள் நிட்டையில் அமர்ந்தார். குழிக்கு மேலே பலகையைப் போட்டு மூடச் சொல்லி விட்டார். பலகையை யாரும் திறக்கக்கூடாது. சிறிது பழமும் பாலும் மட்டும் ஒருநாளைக்கு ஒரு முறை பலகையின் மேல் வைக்கப்பட வேண்டும். சுவாமிகள் நிஷ்டை கலைந்ததும் அதைக் குழிக்குள் இருந்தவாறே உண்ண ஏற்பாடு. மூன்று நாட்கள் வைத்த பழம், பால் எடுபட்டிருந்தது. பிறகு அது எடுபடவில்லை. வைத்த பொருள்கள் அப்படியே இருந்தன. எனவே புதிதாகப் பழமும் பாலும் பலகையின் மீது யாரும் வைக்கவில்லை. சுவாமிகள் தொடர்ந்து அன்ன ஆகாரம் இன்றி நிஷ்டையில் (குழிக்குள்) இருந்தார். அவ்வூரில் பேய்களின் நடமாட்டம் மிகுதி. ஒருநாள் சுவாமிகள் குழிக்குள் இருந்தவாறே பேய்களை விரட்டினார். அன்று முதல் அவ்வூரில் பேய்களின் தொல்லைகள் ஒழிந்தன. தவத்தின் முப்பத்தைந்தாவது நாள் பாம்பன் சுவாமிகளின் விருப்பப்படி முருகன் பால சுப்பிரமணியனாகக் காட்சி கொடுத்து, சென்னைக்கு அவரை வரும்படி உத்தரவு கொடுத்தார்.

முப்பத்தைந்து நாள் தவம் முடிந்ததும் பாம்பன் சுவாமிகள் பிரப்பன் வலசையில் இருந்து சென்னைக்குப் புறப்பட்டார். சென்னையில் திருவல்லிக்கேணியில்

சின்னச்சாமி ஜோசியர் வீட்டில் தங்கினார். சுவாமி களின் பெருமையினைக் கண்டறிந்த சின்னச்சாமி ஜோசியர், சுவாமிகளின் தலையாய சீடர் ஆனார்.

சிறிது காலம் சுவாமிகள் தங்கசாலை நம்பு லையர் தெருவில் உள்ள ஒரு மாடி வீட்டில் வசித்தார். அப்பொழுது அவரது கால் ஒன்று ஒடிந்தது. ஒடிந்த காலை ஒட்டுவதற்காகச் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு (G.H.) சுவாமிகளை அழைத்துச் சென்றார்கள். அங்கு பெரிய மருத்துவர்கள் சுவாமி களின் காலில் பிளாஸ்டர் போட்டு, மருத்துவம் செய் தார்கள். முப்பதாவது நாள் விடிகாலையில் சுவாமி களின் காலை முருகன் தடவிச் சேர்ப்பது போன்ற ஒரு காட்சி தெரிந்தது. அது சுவாமிகளுக்குத் தெரிந்த காட்சி அதே நேரத்தில் சின்னச் சாமி ஜோசியர் ஒரு கனவு கண்டார். அதாவது சுவாமிகளின் முறிந்த காலில் வேல் பூட்டி இருப்பது போல் கனவு தெரிந்தது. உடனே அவர் பொது மருத்துவமனைக்கு ஓடி வந்தார். மருத்துவர் களிடமும் சுவாமிகளிடமும் தான் காலையில் கண்ட கனவு பற்றிக் கூறினார். மருத்துவர்கள் சுவாமிகளின் காலைச் சோதித்துப் பார்த்தார்கள். கால் முறிவு முற்றிலும் மறைந்து நல்ல நிலைமையில் எலும்பு சேர்ந் திருப்பது தெரிந்தது. உடனே சுவாமிகளை நடக்கச் சொன்னார்கள். சுவாமிகள் எந்த வலியும் இல்லாமல் எளிதாக நடந்தார். தான் கண்ட காட்சி பற்றியும் சுவாமிகள் கூறினார். உடனே எல்லோரும் சுவாமிகளை வணங்கி ஆசி பெற்றனர். மருத்துவர்கள் அந்த அறையில் சுவாமிகளின் படத்தை வைத்தனர். சுவாமிகளின் கால் முறிவு சேர்ந்த நாளை "மயூரவாகன சேவன விழாவாக" பாம்பன் சுவாமிகளின் சீடர்கள் இன்றும் நம்புலையர் தெருவில் உள்ள மாடி வீட்டில் கொண்டாடி வருகின் றனர்.

பாம்பன் சுவாமிகள் 1929-ஆம் ஆண்டில் காலமானார். உடனே அவரது உடலைத் திருவான்மியூருக்குக் கொண்டு சென்றனர், அங்கு தியாகராசர் கோவிலுக்கு வடபுறத்தில் குப்புசாமி செட்டியார் என்னும் சீடரால் வழங்கப் பெற்ற நான்கு ஏக்கர் நிலத்தில் சுவாமிகளின் உடல் அடக்கம் செய்யப் பெற்று அங்கு ஒரு சமாதி எழுப்பப் பெற்றது.

பாம்பன் சுவாமிகளின் சீடர்கள் பாம்பன் பாலம் கட்டிய ஒப்பந்தக் காரர்களின்(Contractor) உதவியினால் பிரப்பன் வலசையில் உள்ள கோவிலையும் மண்டபத்தையும் அழகாக எழுப்பி உள்ளனர். கோயம்புத்தூரைச் சேர்ந்த ஊமைப் பையன் ஒருவனை அவனது பெற்றோர்கள் அண்மையில் பிரப்பன்வலசையில் உள்ள பாம்பன் சுவாமிகளின் கோயிலுக்குக் கொண்டு வந்து அவரது சந்நிதியில் நிறுத்தி வழிபாடு செய்யச் சொன்னார்களாம். வழிபாடு செய்தவுடன் அந்த ஊமைப் பையனுக்குப் பேச்சாற்றல் வந்ததாம். இப்படிக் கலியுகத்தில் முருகப்பெருமானைக் கண்ட மகானாக இருந்து, கவிபாடி, மக்களின் இடர் தீர்க்கும் தெய்வமாகத் திகழும் பாம்பன் சுவாமிகளின் சந்நிதியில் வழிபாடு செய்து ஓர் இரவு தங்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது நாங்கள் செய்த பெரும் பேறே ஆகும்.

இக்கோயிலின் தர்மகர்த்தாவாக இருக்கும் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பாம்பன் சுவாமிகளின் உறவினர் ஆவார். அவர் எங்களை நன்கு வரவேற்றுப் பாத்திரங்கள், உணவுப் பொருள்கள் தந்தார். எங்கள் பக்தர்கள் திரு. **தியாகராஜன்,** திரு. **சுப்பய்யா** திரு. **நல்லதம்பி** ஆகியோர் இரவு உணவு சமைத்து எங்களுக்கு முதன் முறையாக அருமையான உணவு வழங்கினார்கள் அன்று இரவு பாம்பன் சுவாமிகளின் சந்நிதி முன்பு உள்ள மண்டபத்தில் நிம்மதியாக உறங்கினோம். இப்படியாக எங்களது இரண்டாம் நாள் கழிந்தது.

16. மூன்றாம் நாள் - இராமநாதபுரம்

மூன்றாம் நாள் (19-2-83) காலை 5½ மணிக்குப் புறப்பட்டு 9 மைல் நடந்து உச்சிப்புளி, ஏந்தல், கடந்து வாலாந்தரைக்கு முன்னால் உள்ள உடைச்சியார் வலசை ஐயன் கோவில் குடிநீர்க் குளக்கரையில் தங்கினோம். உச்சிப்புளி சாலையில் நாங்கள் நடந்தபொழுது எங்களைத் தற்செயலாகச் சந்தித்த கடியாபட்டி **சத்திய மூர்த்தி** (மானேஜர். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி; உச்சிப் புளி) எங்கள் நடைப் பயணம் பற்றி அறிந்ததும் எங்களை வியந்து பாராட்டி, "நீங்கள் நடந்து கொண்டே இருங்கள். விரைவில் உணவு தயார் செய்து கொண்டு வருகிறேன்" என்று வீட்டுக்கு ஓடினார்.

நாங்கள் குளக்கரையில் தங்கிய சிறிது நேரத்தில் திரு. சத்திய மூர்த்தியும் அவரது மனைவியும் எங்கட்குக் காலை உணவும், மதிய உணவும் தயாரித்துக் கொண்டு வந்து வழங்கினர் அப்பொழுது நாங்கள் பெரும் பசியால் மெலிந்திருந்தோம். வழியில் எங்கட்கு உண்ண எதுவும் கிடைக்கவில்லை. எனவே குளக்கரையில் அமர்ந்ததும் நான் ஒரு வெண்பாப் பாடினேன். "பாராளும் எங்கள் பருவத வர்த்தினி தாராள மாகவே தா" என்று அந்த வெண்பா அமைந்தது. பாடி முடித்த சில மணித்துளி களில் சத்திய மூர்த்தியும், அவரது மனைவியும், பாகனேரி மணிவாசகம் அவர்களின் மனைவியும், திரு. பழ. பழநியப்பன் அவர்களும் வந்து சேர்ந்து உணவு, ரொட்டி எல்லாம் வழங்கி எங்கள் பசியை ஆற்றினர். அது முதல் இரண்டு மாத காலம் எங்கட்கு

உணவுப் பஞ்சம் ஏற்படவில்லை. பிறகு காட்டிலும் மலையிலும் நாங்கள் நடந்தபொழுது பட்டினியால் தொடர்ந்து வாடியது ஒரு பெரிய கதை.

மாலையில் 4 மணிக்குப் புறப்பட்டு 8 மைல் நடந்து இரவு 7 மணி அளவில் **இராமநாதபுரம்** வந்தோம். முதலில் குமரன் கோவில் வணங்கி, சாமிநாதசாமி கோவிலுக்கு வந்தோம். அங்கு இராமநாதபுரம்தேவஸ்தானத்தின் சார்பில் நிர்வாக அதிகாரி திரு. அழகுசுந்தரம், சத்திரம் அதிகாரி திரு. சீனிவாசராகவன், துணை அதிகாரி திரு. நாகசுந்தரம், சிரஸ்தார் ராஜாமணி ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர். பிறகு இராமநாதபுரம் சமஸ்தான அரண்மனைக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கு சமஸ்தானத்தின் சார்பில் **மகாராணி திருமதி இந்திரா தேவி** அவர்கள் எங்களை வரவேற்றுப் பாராட்டி ஆசி கூறினார்கள். அத்துடன் இராமநாதபுர சமஸ்தான சத்திரங்கள் அனைத்திலும் எங்கட்கு வரவேற்பும் விருந்தும் வழங்கப்படும் என்றார்கள். மேலும் நாங்கள் காசிப் பயணம் முடித்துத் திரும்புகையில் இராமநாதபுரத்தில் மற்றொரு வரவேற்பும் அளிக்கப்படும் என்று நல்வாக்குச் சொன்னார்கள். அவர்கள் வாக்குப் பலித்தது. அரண் மனையில் உள்ள ராஜராஜேஸ்வரி கோயிலில் எங்கட்கு வழிபாடு செய்து வைத்தார்கள். அத்துடன் நாங்கள் வசதியாக இரவு தங்க சமஸ்தானக் கல்யாண மண்டபத்தில் இடம் தந்து உதவினார்கள்.

கல்யாணமண்டபத்தில் எங்களை இராமநாதபுரம் கந்தர் சஷ்டி விழாக் குழுத் தலைவர் திரு. **எம். ஏ. நாராயணன்,** முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் திரு. **காசிநாத துரை,** அவர்களது மனைவியார் **திருமதி அன்னபூரணி** ஆகியோர் வரவேற்றுப் பாலும் பழமும் வழங்கினர். "காசிக்கு நடப்பவர்களுக்குக் காசிநாத துரை

ஆகிய நானும், அன்னபூரணியும் வாழ்த்தி அனுப்புவது பெரிய சிறப்பு'' என்று அந்தப் பெரியவர் ஆகிய காசிநாத துரை எங்களை மனமார வர்ழ்த்தினார். அவர் வாழ்த்து எங்களுக்கு உரமூட்டியது. இந்தத் தலைமுறையில் அவரைப் போன்ற ஒரு மகானைப் பார்ப்பது அரிது என்றால் மிகையாகாது.

பிறகு சமரச சன்மார்க்க சங்கத்திற்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கு சிதம்பரேஸ்வரியை வணங்கி ஆசி பெற்றோம். அங்கு சிதம்பரேஸ்வரர், பேராசிரியர் சேதுராமலிங்கம், பேராசிரியர் நேசமணி, கவிஞர் அக்கினி, நவசக்தி முதலியோர் எங்களை வரவேற்று, வாழ்த்துப் பா பாடி, ஆசிகூறி, இரவு உணவும் வழங்கினர். இவர்களது நல்லுரைகள் எங்களுக்கு நம்பிக்கை ஊட்டின.

அன்று இரவு இராமநாதபுர சமஸ்தான விருந்தாளியாகக் கல்யாண மண்டபத்தில் நிம்மதியாக உறங்கினோம்.

17. நான்காம் நாள்
(தேவிபட்டினம்-உப்பூர்)

நான்காம் நாள் (20-2-83) ஞாயிறு விடிகாலை 4½ மணிக்குப் பயணம் ஆனோம். சமஸ்தான அதிகாரிகள் எங்களை வழியனுப்பி வைத்தனர். காலை 5 மணி அளவில் சுவாமி தாயுமானவர் சமாதி ஆலயத்தில் வழிபாடு செய்தோம். **சுவாமி பரானந்தா** அவர்கள் எங்களை வரவேற்று, ஆசிகூறி ரொட்டி வழங்கினார்.

பிறகு நடக்க ஆரம்பித்தோம். வழியில் முனியசாமி கோயிலில் எங்களை வரவேற்றுத் தேவகோட்டை அன்பர் திரு. கும. மு. செல்லப்பன் அவர்கள் காலை உணவு வழங்கினார்கள்.

10 மைல் நடந்து காலை 9½ மணி அளவில் தேவி பட்டினம் பெருமாள் கோவிலுக்கு வந்து வணங்கி ராயர் சத்திரத்தில் தங்கினோம். காலை—மதிய உணவு இராம நாதபுர சமஸ்தான தேவஸ்தானம் சார்பில் வழங்கப் பெற்றது.

அங்கு தற்செயலாக வந்திருந்த சென்னை பொறியியல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (T.T.T.I.) பேராசிரியர் திரு. என். அழகப்பன் அவர்கள் எங்களைப் பாராட்டிக் "கோளறு பதிகம்'' பாடி அப்பதிகப் புத்தகம் வழங்கினார். சண்முகநாதபுரம் முருகபக்தரும் காரோட்டியும் ஆன திரு. கே. ஆர். கந்தப்பன் எங்களுக்கு இளநீர் வழங்கி உதவினார்.

மாலையில் 4 மணிக்குப் புறப்பட்டு 10 மைல் நடந்து இரவு 8 மணி அளவில் உப்பூர் வந்து சேர்ந்தோம். அங்கு உப்பூர் சத்திர தர்மகர்த்தா திரு. முருகப்பசெட்டியார், திரு. சோம. நாராயணன் செட்டியார், கோவில் நிர்வாக அதிகாரி ஆகியோர் எங்களை வரவேற்று வெயிலுகந்த விநாயகரை வழிபட ஆவன செய்தனர். அடுத்து உப்பூர் சத்திரத்தில் இரவு உணவு வழங்கினர்.

உணவு உண்டதும் ஓய்வுகொள்ள ஆரம்பித்தோம். எங்கள் கால் அளவுக்கு மீறி வலித்தது. பாதம் மிக மோசமாகத் தேய்ந்திருந்தது. சிறு கல் குத்தினால் கூடத் தாங்க வலுவில்லை. இந்நிலையில் காசிக்குச் சென்று சேர்வது எப்படி? தேவகோட்டைக்காவது நடந்து சென்று சேர்வோமா என்ற ஐயம் ஏற்பட்டது. அப்பொழுது எங்கள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அதனைக் கண்ட பக்தர்கள் சிலர் எங்கள் கால்களிலும் பாதங்களிலும் தேங்காய் எண்ணெய் கடுக்காய்ப்பொடி கலந்து தடவித் தேய்த்து விட்டனர். அது எங்களுக்குச் சிறிது சுகமாய் இருந்தது.

எங்களை அறியாமல் நன்கு தூங்கினோம். மறு நாள் காலையில் எழுந்தபொழுது இறையருளால் எங்கள் கால் வலி மறைந்து, புதிய தெம்பும் உற்சாகமும் ஏற்பட்டிருந்தன. முதல் நாள் இரவு இருந்த கால்வலி எங்கே போயிற்று? எல்லாம் அவன் அருள்!

18. ஐந்தாம் நாள்
(ஜனவேலி - திருவாடானை)

ஐந்தாம் நாள் (21-2-83) திங்கட்கிழமை காலை 3¾ மணிக்கே எழுந்து காலைக் கடன்களை முடித்தோம். 4¼ மணிக்கு உப்பூர் சத்திரத்தில் காலைப் பலகாரம் உண்டு புறப்படப் பணித்தனர். அவ்வாறே இனிப்புடன்கூடிய பலகாரம் உண்டு 4½ மணிக்கு பயணம் புறப்பட்டோம். 10 மைல் நடந்து ஜனவேலிக்குவந்து சேர்ந்தோம். அங்கு கவ்வூர் அருளாளர் திரு. **சுப்பிரமணியனார்**, அவரது மகன் **புலவர் நீலமேகம்**, ஆறுமுகக் கோட்டைப் பூசாரி துரைராஜ், ராஜசிங்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலர் திரு. முத்துராமலிங்கம், ஜனவேலி ஆறுமுகம், மற்றும் ஏராளமான பொதுமக்கள் எங்களைப் பூரண கும்பமரியாதையோடு வரவேற்றனர்.

சாலை அருகில் உள்ள அகஸ்தீஸ்வரர் கோவிலில் வழிபாடு செய்து அங்கே தங்கினோம். ஜனவேலி அன்பர்கள் உற்சாகமாக விருந்தோம்பி உபசரித்தனர். பாட்டும் கதையுமாகப் பொழுது கழிந்தது.

மாலையில் 4 மணிக்குப் புறப்பட்டு 8 மணி அளவில் பாடல் பெற்ற தலமாகிய திருவாடானை வந்து சேர்ந்தோம். இத்தலம் பழங்காலத்தில் ''ஆடும் ஆனையும் பூசை'' செய்து முக்தி பெற்ற தலமாகும்.

இவ்வூரில் உள்ள மாபெரும் கோயில் தேவகோட்டை ரெட்டை அரு. குடும்பத்தினரால் பல இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்ற சிறப்

பினை உடையது. இக்கோயிலில் ஆதிரெத்தினேஸ்வரர்-சிநேகவல்லி அம்மன் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர்.

திருவாடானை எல்லையில் கோயில் நிர்வாக அதிகாரி திரு. **ராஜமன்னார்** தலைமையில் திருவாடானை அன்பர்களும், தேவகோட்டை அன்பர்களும், "நித்திய கல்யாணி நூற்பாலை"ச் செயலர் திரு. சுந்தரம் அவர்களும் அரசுமேல் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், டாக்டர் கோவிந்தன் அவர்களும் எங்களை மேளதாளத்துடன் வரவேற்றுக் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். கோயில் நிர்வாக அதிகாரி எங்களுக்கு மாலை சூட்டினார். திருத்தொண்டர் ஆர். வயிரவன் சுவாமி சந்நிதியில் எங்களுக்கு நெற்றிப்பட்டம் கட்டி, அச்சிட்டிருந்த எனது காசிப் பயணப் பாடலாகிய "இராமேஸ்வரா-காசி-விஸ்வேஸ்வரா" என்ற பாட்டுத் தாளை வழங்கினார். அங்கு நடந்த வாழ்த்துக் கூட்டத்தில் **வன்றொண்டர் சங்கரனும்** பிறரும் எங்களை வாழ்த்தி, நன்கொடைகள் வழங்கி வழியனுப்பினர். அக்கூட்டத்தில் எங்கள் பதின்மூவரில் ஒருவராகிய சண்முகநாதபுரம் பி. சுப்பய்யா அவர்கட்கு அன்னார் 25 ஆண்டுகள் பழநிக்குப் பாதயாத்திரை செய்தமையைப் பாராட்டி, எங்களது திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவின் சார்பில் "திருமுருகன்" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றது.

கோயிலில் பணியாற்றும் நாகு என்பவர் ரொட்டிப் பொட்டலமும், டாக்டர் கோவிந்தன் அவர்கள் மருந்துகளும் வழங்கி உதவினர்.

பிறகு மேலும் 2 மைல் நடந்து "நித்திய கல்யாணி நூற்பு ஆலைக்கு" இரவு 10 மணி அளவில் சென்றடைந்தோம். அங்கு ஆலை முதலாளியின் மகன் திரு. **கண்ணன்** அவர்களும், செயலர் திரு. **சுந்தரம்** அவர்களும். மற்ற அலுவலர்களும் எங்களை அன்பாக வரவேற்று இரவு உணவு வழங்கித் தங்க வசதி செய்து கொடுத்தனர். இன்று 20 மைல் நடந்த அலுப்பில் 11 மணி அளவில் உறங்கத் தொடங்கினோம்.

19. ஆறாம் நாள் - தேவகோட்டை

ஆறாம் நாள் ஆகிய இன்று (22-2-1983] எங்களுக்கு மிகவும் முக்கியமான நாள். ஏனெனில் இன்று காலை எங்களது சொந்த ஊராகிய வளமிகு தேவகோட்டையில் நுழையப் போகிறோம். மேலும் எங்கள் பாதையில் இதுதான் முதலாவது செட்டி நாட்டு ஊர். அத்துடன் இது ஒப்பற்ற பக்திமான்களின் கோட்டையாகும். தேவ கோட்டையில் காலை 9 மணிக்கு எங்கட்கு ஊரின் எல்லையில் உள்ள ஆற்றுப் பாலத்தில் மிகப் பிரமாண்ட மான வரவேற்புக்கு அன்பர்கள் பல நாளாகவே ஏற்பாடு கள் செய்திருந்தார்கள். எனவே காலை 3 மணிக்குத் தேவகோட்டை நோக்கிப் பயணம் ஆனோம். நூற் பாலைச் செயலர் திரு. சுந்தரம் அவர்களும் பிறரும் எங்களை ஆலையின் எல்லைவரை வந்து வழியனுப்பினர். எங்கும் ஒரே இருட்டாக இருந்தமையால் அவர்களிடம் முகம் தெரியாமலே நன்றிகூறி விடை பெற்றோம்.

நான் எப்பொழுதும் பயணம் புறப்பட்ட உடனேயே இறைவன் மீது நான் எழுதியுள்ள பல பாடல்களையும், பிற பக்திப் பாடல்களையும் மெல்லப் பாடிக் கொண்டே செல்வது வழக்கம். அப்படி சுமார் ஒரு மணி நேரம் நான் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டே நடந் தேன். என் குழுவினர் அதனைக் கேட்டுக் கொண்டே வந்தனர். வழியில் **கோகணி** என்ற சிற்றூர் வந்தது. நல்ல இருட்டில் சாலையில் ஓர் அரிக்கன் விளக்கு வெளிச்சத்தைக் கண்டோம். அங்கே இரண்டு மூன்று அன்பர்கள் சாலையில் ஒரு ஜமுக்காளத்தை விரித்து

வைத்துக் காத்துக் கொண்டிருந்தனர். ஆட்டூரைச் சேர்ந்த பக்தர் மாரிமுத்து என்பவர் எங்கள் வருகையை முன் கூட்டியே அறிந்து பால் பழம் வைத்துக் கொண்டு காலை மூன்று மணி முதல் காத்துக் கொண்டிருக்கிறார். எங்களை 4 மணி அளவில் கண்டதும் அன்பாக வரவேற்று ஜமுக்காளத்தில் உட்காரச் சொன்னார். பாடல் பாடிக் கொண்டே வந்த நான் கீழே அமர்ந்தேன். மற்றவர் களும் அமர்ந்தனர்.

அதுவரை இருட்டில் நடந்ததால் ஒருவர் முகத்தை ஒருவர் காணாமல் நடந்து வந்தோம். இப்பொழுது அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில் எல்லோர் முகமும் தெரிந்தது. என் அருகில் பாண்ட், பூட்சுடன் நித்திய கல்யாணி நூற்பாலைச் செயலர் திரு. சுந்தரம் அவர்கள் அமர்ந்தார்கள். நான் வியப்புடன் ''நீங்கள் இவ்வளவு தூரம் இந்த இருளில் நடந்தா வந்தீர்கள்?'' என்று கேட்டேன். அவர்கள் ''ஆம். உங்கள் பாடல்களில் மெய்ம் மறந்தவாறே நடந்து வந்து விட்டேன். என்னால் உங்களை விட்டுப் பிரியவே மனமில்லை. அதனால் நூற்பாலை வாசலில் விடை பெற்றாலும், நிற்காமல் தொடர்ந்து நடந்து வந்தேன்'' என்றார்.

''காலில் பூட்சுடன் நடப்பது மிகவும் கடின மாயிற்றே. மேலும் நாங்கள் பாடலில் வேகம் தெரியா மல் நடப்போமே. உங்களுக்கு மிகவும் சிரமமாக இருந் திருக்குமே'' என்றேன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்கள் பாடல் வேகத்தில் நானும் சிரமம் தெரியாமல் வேகமாக நடந்து வந்து விட்டேன்'' என்றார்கள். பிறகு எங்களுடன் தேவகோட்டைவரை அவர்கள்நடந்து வந்தது குறிப் பிடத்தக்கது.

மேலும் வழியில் சில இடங்களில் இரவில் மெய் யன்பர்கள் பலர் காப்பி, பால், பழம் வழங்கியது மெய்மறக்கச் செய்தது.

காலை 7½ மணி அளவில் **மாவிடுதிக் கோட்டையில் பக்தர் சோமசுந்தரம்** இல்லத்தில் எங்களுக்குக் காப்பி பலகாரம் வழங்கினார்கள். தேவ கோட்டை **பட்டுக் குருக்கள்** எங்களை அங்கு வரவேற்று வாழ்த்துரைத் தார்.

15 மைல் நடந்து காலை 9 மணிக்குத் தேவ கோட்டை ஆற்றுப் பாலத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு எங்களது சைக்கிள் ரிக்ஷா எங்களது மூட்டை களையும் உணவுப் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு தயாராக நின்றது. ரிக்ஷாவின் மேற் பகுதியில் சுவாமி படங்கள் நன்கு பொருத்தப்பட்டிருந்தன. கடல்மணல், தீர்த்தக்குடம் ஆகியனவும் சரியாமல் பொருத்தப்பட் டிருந்தன. நாங்கள் அதுவரை தாங்கி வந்த வேலா யுதத்தை ரிக்ஷாவின் முன் புறத்தில் செருகி வைத்தோம். பிறகு எங்களது சைக்கிள் ரிக்ஷாவை மெதுவாக எங்கள் பதின்மூவரில் ஒருவராகிய அடைக்கப்பன் ஓட்ட, நாங்கள் பின்தொடர்ந்தோம். பாலத்தின் மறுமுனையை அடைந்த பொழுது மேள தாள வாண வெடி முழக்கத் துடன் ஆயிரக்கணக்கான மக்கள் எங்கள் பாதத்தில் விழுந்தும், கட்டித் தழுவியும், கண்ணீர் மல்கியும் வர வேற்றனர். நாங்கள் விடிகாலையில் 2½ மணிக்கு ஒரு முறை நீராடி இருந்தும், இப்பொழுது மறு முறை மக்களது ஆனந்தக் கண்ணீரில் நீராடி மகிழ்ந்தோம். அதுவரை நாங்கள் பட்டிருந்த சிரமம் எல்லாம் ஒரு நொடியில் மறைந்து போயிற்று. காசிப் பாதயாத்திரை யில் பங்கு பெறாவிட்டாலும், பாத யாத்திரை அமைப்பில் முழு ஈடுபாட்டுடன் பணி செய்த மூவர் **திருத்தொண்டர் ஆர். வயிரவன், இசைத்தொண்ட**

ந. காசிநாதன், இசைத்தொண்டர் இராம. இலக்குமணன் ஆகியோர் ஆவர். இவர்கள் மூவரையும் எங்கள் காசிப் பாதயாத்திரைக் குழுவில் உறுப்பினராகவே சேர்த்துக் கொண்டிருந்தோம். இவர்கள் மூவரின் ஒப்பற்ற வர வேற்பு ஏற்பாட்டினால் தேவகோட்டையே திருவிழாக் கோலம் பூண்டிருக்கக் கண்டோம்.

தேவ கோட்டை நகரில் சுமார் 5மைல் ஊர்வல மாக எங்களை அழைத்துச் சென்றனர். வீட்டுக்கு வீடு கோலம் போட்டு எங்களை வரவேற்றனர். ரொட்டி, மிட்டாய், பழம், பால், காப்பி, சர்பத் என்று ஏராள மான பொருள்களைத் தந்து எங்களை எல்லையற்ற அன்போடும் பக்தியோடும் உபசரித்தனர். எங்களுக்குப் பின்னால் ஒரு பெரிய அடியார் கூட்டமே வந்து கொண் டிருந்தது. தேவாரம் பாடிய மூவர் காலத்தில் இப்படி நடந்திருக்கலாம். இக்காலத்தில் பெரிய அரசியல் தலைவர்களுக்கு இப்படி வரவேற்புக் கிடைத்திருக் கலாம். அப்படி ஒரு வரவேற்பை அளித்துத் தேவ கோட்டை மாநகரம் எங்களை உற்சாகப் படுத்தி ஊக்குவித்தது.

காலையில் இசைத் தொண்டர் ந. காசிநாதன் இல்லத்தில் பலகாரம்—மதிய விருந்து மெய்யன்பர் கண. சிந்தாமணிச் செட்டியார் வீட்டில்— மாலைப் பலகாரம் திருத்தொண்டர் ஆர். வயிரவன் இல்லத்தில்—வழங்கப் பெற்றன. வெள்ளையன் ஊருணிப் பிள்ளையார் கோவில் குருக்கள் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களும் "இசைத் தொண்டர்" இராம. இலக்குமணன் அவர் களும் இரவு உணவு வழங்கினர்.

நகரப் பள்ளிக் கூடத்தில் எங்களுக்கு மஞ்சள் துண்டு போர்த்திச் சிறப்பித்தனர்.

இப்பயணத்தில் **பாங்க் ஆப் மதுரை** நிர்வாகத் தலைமையினர் (Chairman and Board of Directors) எங்கள் பயணப் பாதையில் எங்கெல்லாம் பாங்க் ஆப் மதுரை கிளை இருக்கிறதோ, அங்கெல்லாம் எங்களுக்கு வேண்டிய உபசாரம் உதவி செய்ய முன்வந்திருப்பதாக அறிவிப்புச் செய்திருந்தனர். அதன்படி எங்கள் பயணத்தில் முதல் கிளையாக அமையும் பேறு பெற்ற தேவகோட்டை பாங்க் ஆப் மதுரைக் கிளையின் மேலாளர் (Manager) திரு. பெரியணன் எங்களுக்கு ஒரு பெரிய பிஸ்கட் டின் அன்பளிப்பாக வழங்கினார்.

இப்பயண அனுபவங்கள் முழுவதையும் தொடர்ந்து 12 இதழ்களுக்கு 'நகரத்தார்மலர்' பத்திரிகையில் எழுத வேண்டும் என்று அப்பத்திரிகையின் சார்பில் திரு. **மீ. சு. அண்ணாமலை** என்னை வேண்டிக் கொண்டு, அதற்குத் தேவையான தாள், உறை, அஞ்சல் வில்லை ஆகியன வழங்கினார். அதன்படி மதுரையில் இருந்து வெளிவரும் **"நகரத்தார் மலர்"** மாத இதழில் 1983 மார்ச்சு முதல் 1984 மே முடிய 12 இதழ்களில் "கால் நடையாய்க் காசி செல்கிறோம்" என்ற தலைப்பில் என் பயணக் கட்டுரை மிகச் சுருக்கமாக வெளிவந்தது.

மதுரை "நகரத்தார் குரல்" பத்திரிகையும் அவ்வப்போது என் செய்திகளை வெளியிட்டது.

மாலையில் கந்தர் சஷ்டி விழாக் கழகக் கட்டடத்தில் தங்கி இருந்தோம். அங்கும் பிற இடங்களிலும் ஏராள மான அன்பர்கள் நன்கொடை வழங்கி உதவி செய்தனர். எங்களால் "பெரியவர்" என்று அன்புடன் அழைக்கப் படும் **வெ. நா. மு. இராமநாதன் செட்டியார்** அவர்கள் தள்ளாத வயதிலும் கந்தர் சஷ்டி விழாக் கழகக் கட்ட டத்திற்கு வந்து எங்களை வாழ்த்தி நன்கொடை வழங்கி னார்கள். அவர்கள் அப்பொழுது கூறிய வார்த்தை இன்றும் என் காதுகளில் ஒலிக்கின்றது. "சோம

சுந்தரம்! நீங்கள் திருச்செந்தூர்ப் பாதயாத்திரை முதல் ஆண்டு முதல் காசி யாத்திரை பற்றிக் கூறி வந்தீர்கள். மற்றவர்கள் நம்பினார்களோ இல்லையோ நான் முழுமையாக நம்பினேன். நீங்கள் எந்தக் காரியத்தை யும் திட்டமிட்டுச் செய்யக் கூடியவர்கள். ஏழாண்டுக்கு முன் கூறினீர்கள். இன்று இதனைச் செயற் படுத்துகிறீர் கள். நீங்கள் வெற்றிகரமாகக் காசிக்கு நடந்து போய் வருவீர்கள் என்பதில் ஐயமில்லை. நீங்கள் வணங்கும் செந்திலாண்டவன் உங்கள் அருகிலேயே வருகிறான். உங்கட்கு என் ஆசீர்வாதம்'' என்று கூறினார்.

நாங்கள் இனிதே திரும்பி வந்த பிறகும் அவர் எங்களை வரவேற்றுப் பாராட்டினார். இன்று அந்தப் பெரியவர் உயிரோடு இல்லை, என்றாலும் அவரது வாசகம் என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

இரவு 7½ மணிக்கு நகரச்சிவன் கோவிலில் வழி பாடு செய்தோம். பிறகு அங்கு நடந்த வாழ்த்துக் கூட்டத்தில் திரு. **சோம. நாராய்ணன்** அவர்களும், **டாக்டர் சபா. அருணாசலம்** அவர்களும் எங்களை வாழ்த்தியும் வழியனுப்பியும் உரை யாற்றினர். இரவு 11 மணி அளவில் உறங்கலானோம்.

20. ஏழாம் நாள்

[சண்முகநாதபுரம்-காரைக்குடி]

ஆறாம்நாள் (23-2-83) புதன் கிழமை வைகறை 5 மணிக்கு எழுந்து புறப்படத் தயாரானோம். அன்று சண்முகநரத புரத்தில் காலைப் பலகாரம் சாப்பிடுவ தாகத் திட்டம். ஆனால் காலை 5 மணிக்கே தேவ கோட்டை மெய்யன்பர் திரு. உ. மு. லெ. அழகப்ப செட்டியாரும் அவர் மனைவியும் காலைப் பலகாரம் செய்து கொண்டு வந்து அன்புடன் எங்களை அழைத் தனர். நேற்று முழுதும் ஏராளமாக உண்டதனால் வயிற்றில் இடம் இல்லாமல் இருந்தோம். என்றாலும் ''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்'' என்ற வள்ளுவம் எங்கள் நினைக்கு வந்தது. மறு பேச்சின்றி அவர்களது உணவினை உண்டு பயணம் புறப்பட்டோம். நேற்றுவரை சுமார் 100 மைல்கள் நடந்திருந்த களைப்பு இருந்தாலும், மக்கள் வெள்ளத்தின் அன்பு சுழலில் அகப் பட்டுக் கிடந்ததால் மிக உற்சாகத்தோடு நடக்க லானோம். இந்த மக்கள் வெள்ளத்தால் ஏற்படும் சக்தியைத்தான் **''சாநித்தியம்''** என்று புராணங்களில் குறிப்பிடுகின்றனர்.

தேவகோட்டை நகர மக்கள் எங்களை மேள தாளத்தோடு ஊர்வலமாக வந்து வழியனுப்பினர். **எஸ். வடிவேலு** என்னும் அன்பர் நிறைய விபூதிப் பொட்டலம் அன்பளிப்பாக வழங்கியதோடு அருமையாகப் பாடிக் கொண்டு எங்களுடன் பல மைல்கள் நடந்து வந்தார்.

தேவகோட்டைக் கருதா ஊருணிப் பிள்ளையார் கோயிலிலும், கண்டதேவி சொர்ண மூர்த்தி கோயிலிலும் வழிபாடு செய்தோம். கண்டதேவி ஒரு புகழ்மிக்க தலமாகும். அனுமன் இராமனிடம் "கண்டேன் தேவியை" என்று குறிப்பிட்ட இடம் இது தானாம். "கண்டேன் தேவி" என்பதுதான் "கண்ட தேவி" என்று மருவியதாகக் கூறப்படுகிறது. இத்தலத்தின் மகிமைபற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் "தல புராணம்" எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

4 மைல் நடந்து காலை 8 மணி அளவில் சண்முக நாதபுரம் சென்றோம். அங்குள்ள ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் வழிபாடு செய்து, ஊர்வலமாகச் சென்று, எங்கள் பதின்மூவரில் ஒருவராகிய திரு. பி. சுப்பையா அவர்களின் இல்லத்திற்குச் சென்று சேர்ந்தோம். அங்கு அவர்கள் எங்கட்குக் காலைப் பலகாரம், மதிய உணவு ஆகியன வழங்கிச் சிறப்பித்தார்கள்.

சண்முகநாத புரம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மானேஜரும் மற்ற அலுவலர்களும் எங்களை வரவேற்றுப் பழங்கள் இளநீர் வழங்கினர். இந்த வங்கிக் கிளை இவ்வூரில் நான் 1963-67 ஆம் ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய பொழுது என் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டதாகும். மேலும் இங்கு நான் நான்காண்டுகள் தலைமையாசிரிராகப் பணியாற்றிய "பி. எஸ். எஸ். உயர்நிலைப் பள்ளியின்" சார்பில் அதன் தலைமை ஆசிரியர் திரு. சண்முகம் அவர்களும், மற்ற ஆசிரிய நண்பர்களும் எங்களைச் சந்தித்துப் பழம் வழங்கி ஆசி பெற்றனர்.

ஊர்ப் பெரியவர் திரு. பெ. சித. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்களை நாங்கள் சந்தித்து ஆசி பெற்றோம்.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டு 5 மைல் நடந்து அமராவதி புதூர் என்னும் கிராமத்திற்கு 6½ மணி அளவில் வந்தோம். அங்குள்ள குருகுலம் உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. **திருவிக்கிரமன்** அவர்களும், ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் மரத் தடியில் கூடி அமர்ந்து எங்கள் வருகையை எதிர்பார்த்திருந்தனர். நாங்கள் முதலில் அங்கு சென்று பிள்ளைகளுக்கு நல்லுரை கூறிஆசிரிய அன்பர்களின் ஆசியினைப் பெற்றுக் கொண்டு, ஊருக்குள் சென்றோம். அங்கு வாழும் சிவபூசகர் திரு. **சோம. கருப்பன் செட்டியார்** இல்லத்தில் மாலை உணவு உண்டோம். இவர்கள் புகழ் மிக்க **''வயிநாகரம்''** குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் மதுரைக் கோயில் திருப்பணியினைச் சுமார் இருபது இலட்சம் ரூபாய் செலவில் செய்தவர்கள் இக் குடும்பத்தினர். இவர்களைப் பின்பற்றித்தான் மற்ற நகரத்தார்களும் பாடல் பெற்ற தலங்களையும், மற்ற தலங்களையும் ஆய்ந்து கோயில் திருப்பணிகள் செய்யலானார்கள்.

தொடர்ந்து 4 மைல் நடந்து இரவு 9 மணி அளவில் காரைக்குடிக்கு இனிதே வந்து சேர்ந்தோம். காரைக்குடி மேல மடத்தில் தங்கினோம். அங்கு மெய்யன்பர் திரு. **மெ. நா. சிதம்பரம் செட்டியார்** அவர்களால் எங்கட்கு இரவு உணவு வழங்கப்பட்டது. காரைக்குடி ''கனரா பாங்க்'' அலுவலர்கள் எங்கட்குக் ''குளுகோஸ்'' பொட்டலமும், பால் பவுடரும் வழங்கினர். பொதுமக்கள் பிறபிற தின்பண்டங்களும், உணவுப் பொருள்களும், ரொக்கமும் நன்கொடையாக வழங்கி ஊக்குவித்தனர்.

21. எட்டாம் நாள்-செட்டிநாடு

(கோட்டையூர்—பள்ளத்தூர்—வேலங்குடி கானாடுகாத்தான் நேமத்தான் பட்டி.)

எட்டாம் நாளாகிய இன்று (24—2—83) செட்டி நாட்டின் முக்கியமான பல ஊர்களின் வழியே எங்கள் பயணம் அமைந்தது. காலை 4½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். காரைக்குடியாளும் கொப்புடைய நாயகியை வணங்கி, முத்துப் பட்டணம் மூன்றாவது வீதியில் உள்ள செல்வ விநாயகரை வழிபட்டோம். காரைக்குடியில் கடந்த 18 ஆண்டுகளாக இந்த விநாய கரை நான் வழிபட்டு வருவதோடு ஒவ்வொரு வெள்ளிக் கிழமை இரவிலும் வாரவழிபாடு நடத்தி வருகிறேன். இந்த விநாயகர் தான் காசிக்குப் பயணம் வைக்கக் காசி விசுவநாதர் படம் காட்டி எனக்கு உத்தரவு கொடுத் தவர். செல்வ விநாயகரை வணங்கி, முத்துப்பட்டணம் மூன்றாவது வீதி (பெருமாள் செட்டியார் தெரு) வழி யாகச் சென்றோம். எங்கள் வீட்டுக்கு முன்னால் அனைவருக்கும் பூரண கும்ப மரியாதை செய்து என் மனைவி மக்களும், உற்றார் உறவினரும் வணங்கி ஆசி பெற்றனர். வீதியில் நின்றவாறே அவர்களிடம் விடை பெற்றுப் பயணம் தொடர்ந்தோம்.

4 மைல் நடந்து **கோட்டையூர்** வந்தோம். நிலம் தெளியாத அந்த வைகறை நேரத்தில் கோட்டையூர் எல்லையில் இருந்தே நகரத்தார்களும் நாட்டார்களும் வீதி கூட்டிச் சாணம் தெளித்துக் கோலம் போட்டுத்

தோரணம் கட்டி எங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். எங்கும் பூரண கும்ப மரியாதை தொடர்ந்தது. கோட்டையூர் நகரத்தார் சார்பில் அதன் காரியக்காரர் திரு. **சித. அருணாசலம்** அவர்களும், ஏராளமான நகரத்தார்களும், ஆச்சிமார்களும், குழந்தைகளும் எங்களை வரவேற்று நகர ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு இறை வணங்கியதும் அனைவருக்கும் விபூதி பிரசாதம் வழங்கி ஆசி கூறினோம். அப்பொழுது மணமாகாத ஒரு கன்னிக்கு மாலை வழங்கி ஆசி கூறினேன். நாங்கள் பெங்களூர் தாண்டிச் சென்ற பொழுது இறைவன் அப்பெண்ணின் திருமணத்தை இனிதே நிறைவேற்றிக் கொடுத்த செய்தி கேட்டு மகிழ்ந்தோம்.

கோட்டையூர் நகரத்தார்களின் விருந்தோம்பலைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டோம். மேலும் ஒரு மைல் நடந்து **வேலங்குடி**க் கோயிலை அடைந்தோம். நம் நகரத்தார்களின் ஒன்பது கோயில்களில் இதுவும் ஒன்று. நகரக் கோயிற் புள்ளிகளில் (மக்கள் தொகையில்) குறைந்த புள்ளிகளைக் கொண்டது வேலங்குடிக் கோயிலே ஆகும். இக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீசண்டேசுவரர்—காமாட்சி அம்மை திருவடிதொழுது பயணத்தைத் தொடர்ந்தோம்.

மேலும் 3 மைல் நடந்து காலை 8½ மணிக்குப் **பள்ளத்தூர்** சென்றோம். பள்ளத்தூர் நகரத்தார்களும், நாட்டார்களும், ஊர் மக்களும் திரண்டு நின்று எங்களை வரவேற்று ஸ்ரீ சவுந்தர ராஜப்பெருமாள் கோயிலில் தரிசனம் செய்து வைத்து, அங்கேயே நாங்கள் தங்கு ஏற்பாடு செய்தார்கள். அக்கோயில் தர்மகர்த்தா எங்கட்குக் காலை மதிய உணவு வழங்கினார்கள்.

பக்தர் **மருதமுத்து ஆசாரி** அவர்கள் எங்கள் பயணத்தில் பயன்படுத்தக் கூடாரம் (Tent) வாங்கும்

பொருட்டு ரூ 501/- நன்கொடை வழங்கி ஆசி கூறினார்கள்.

மாலை 4 மணிக்கு ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமத்தில் எங்களுக்கு ஒரு இனிய வரவேற்பு அளிக்கப் பெற்றது. காலஞ்சென்ற தொழிலதிபர் திரு. எம். ஏ. பழநியப்ப செட்டியார் அவர்களால் இந்த நிறுவனம் பல ஆண்டுகட்கு முன்பு தொடங்கப் பெற்றுப் பள்ளத்தூரில் உருப்படியான சேவை செய்து வருகிறது. ஏராளமான பெண்களுக்கும், கன்னியர்களுக்கும் இங்கு நூல் நூற்றல், நெசவு, சோப்பு செய்தல், பூக்கள் செய்தல், பின்னுதல், அச்சுத் தொழில் முதலியவற்றில் பயிற்சி கொடுத்து, சோறு போட்டு, வேலை தந்து ஆதரித்து வருகிறார்கள். இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் கதர்த்துறை மூலம் விற்பனை செய்யப் படுகின்றன. காந்தியடிகளின் குடிசைத் தொழில் திட்டமுறையில் இந்தப் பணி இங்கு அமைதியாக நடைபெற்று வருகிறது. இந்த நிறுவனம் பள்ளத்தூருக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

இங்கு ஸ்ரீ சாரதா அம்மையார் திரு உருவத்தின் முன்பு அமைதியான பிரார்த்தனை நடத்துகிறார்கள். இதில் பங்கேற்பது ஒரு பெரும் பேறாகும். இப்பிரார்த்தனையில் பங்கு கொண்டு, இங்கு பயிலும் மாணவிகள், பணியாற்றும் பெண்கள் இடையே எங்கள் பயணம் பற்றி உரை நிகழ்த்தி, நிறுவனம் சிறக்க வாழ்த்தினேன்.

மாலை 5 மணிக்குப் பெரியவர் திரு. **சொ. இராமசாமி செட்டியார்** இல்லத்தில் எங்கட்குத் தேநீர் விருந்து வழங்கினார்கள். அங்கு நடந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஊர்ப் பெரியவர்கள் சிலரும், மருதமுத்து ஆசாரி அவர்களும், வீர. முத்தையா ஆசாரி அவர்களும், என்னுடைய பேராசிரியர் திரு. க. தேசிகன் அவர்களும் வருகைதந்து சிறப்பித்தனர். எங்களை வாழ்த்திப் பேராசிரியர் தேசிகனார் அவர்கள் உரையாற்றினார்

கள். பிறகு நான் நன்றி கூறிப் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஓர் இனிய நிகழ்ச்சி நடந்தது.

எங்கள் குழுவில் என்னைத் தவிர மற்ற அனைவரும் கழுத்தில் மணிமாலை அணிந்திருந்தனர். ஆனால் நான் மட்டும் அணிந்திருக்கவில்லை. அதற்குக் காரணம் எந்த மணிமாலையினையும் நான் கடையில் இருந்து விலை கொடுத்து வாங்கி அணிய விரும்பவில்லை. நான் "முருக பக்தன்" ஆன நாள் முதல் அருணகிரி நாதரின் திருப்புகழ் என் நெஞ்சிலும் நினைவிலும் நிலைத்து விட்டது. அருணகிரி நாதரும் முதலில் ஜெப மாலை அணிந்திருக்கவில்லை. அது கண்ட முருகப் பெருமான் தானே அவருக்கு ஒரு ஜெபமாலை தந்தா னாம். அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் தானே குருநாதன். இதனைப் பழநித் திருப்புகழில் மிக அருமையாக அருணகிரிநாதர் பாடுகிறார்.

"அபகார நிந்தைபட்டு உழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருட் பெறுவேனே
இபமா முகன்தனக்கு இளையோனே
இமவான் மடந்தைஉத் தமிபாலா!
ஜெபமாலை தந்தசற் குருநாதா!
திருவாவி னன்குடிப் பெருமாளே!"

என்று அருணகிரிநாதர் பாடுகிறார். இந்தப் பாடல் நான் தினந்தோறும் பிரார்த்தனையில் பாடுவதாகும். இந்தக் கருத்து என் நெஞ்சத்தின் ஆழத்தில் பதிந்திருந்த தால் "முருகன் நமக்கு ஜெபமாலை தராமலா போய் விடுவான்? என்ற நம்பிக்கையில் இருந்தேன்.

என் கழுத்தில் மட்டும் ஜெபமாலை இல்லாததை உணர்ந்த **வீர. முத்தையா ஆசாரி** அவர்கள் உடனே தன்

வீட்டுக்கு ஓடிச் சென்று, தான் புதிதாக பெங்களூரில் இருந்து வாங்கி வந்திருந்த சந்தன ஜெபமாலையினை விரைந்து எடுத்து வந்தார். நான் நன்றி கூறி முடிக்கும் நேரம்—அப்பொழுது விரைந்தோடி வந்து, என் அருகில் இருந்த என் பேராசிரியர்—குருநாதர்—திரு. க. தேசிகன் அவர்களிடம் கொடுத்து எனக்கு அணிவிக்கச் செய்தார். அவர்கள் இதனைத் தற்செயலாகச் செய்தார்கள், ஆனால் இது என் தத்துவத்தை—நம்பிக்கையை—உறுதிப் படுத்துவதாக அமைந்தது. உடனே நான் இதுவரை ஜெபமாலை வாங்கி அணியாதிருந்த காரணத்தை விளக்கி, இன்று முருகப்பெருமான் என் நம்பிக்கையை நிறைவேற்றி இருக்கும் பாங்கினைக் கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தேன்.

"நான் ஆறுபடை வீட்டுக்கும் ஆயிரம் மைல் நடந்த பொழுதெல்லாம் முருகன் எனக்கு ஜெபமாலை தராமல் சோதித்திருக்கிறான். இப்பொழுது காசி நெடும் பயணத்தில் என் நம்பிக்கையை அருணகிரி நாதருக்கு நிறைவேற்றியதைப் போல நிறைவேற்றி இருக்கிறான். "ஜெபமாலை தந்த சற் குருநாதா!" என்று அருணகிரிப் பெருமான் முருகனைப் பாடுகிறார், அப்படி எனக்கு இன்றைக்கு ஜெபமாலை தருபவர் முத்தையா. முருகனுக்கு முத்தையா என்ற பெயர் உண்டு. கடவுள் நேரில் வர மாட்டார். மனித உருவில் தான் வருவார் என்பது புராணக் கருத்து. அப்படி முருகன் எனக்கு நேரில் குருவாக வந்து ஜெபமாலை தராமல் என் கல்லூரிப் பேராசிரியராகிய என் குருநாதர் திரு. தேசிகன் மூலம் ஜெபமாலையை வழங்கி இருக்கிறான். என் நீண்ட கால நம்பிக்கையை முருகப் பெருமான் பள்ளத்தூரில் இப்படி நிறைவு செய்திருக் கிறான்" என்று கூறிக் கண்ணீர் மாலையிட்டு முருகப் பெருமானுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி கூறினேன். இந்த உரை அனைவரையும் நெகிழ வைத்தது.

அனைவரும் ஆனந்தக் கண்ணீர் சிந்தி எங்களை வழி யனுப்பினர். என் குருநாதர் தேசிகன் என்னைக் கட்டி யணைத்து "சோமசுந்தரம்! எங்களை எல்லாம் விட நீ புகழ் பெற்றிருக்கிறாய். இவ்வளவு புகழுக்கும் நீ தக்கவன். இன்னும் பெரும் புகழும் பேறுகளும் உனக்கு எய்தும்" என்று மனப்பூர்வமாக வாழ்த்தி அனுப்பினார்.

அடுத்து சவுந்தரராஜப் பெருமாள் கோயிலுக்கு வந்தோம். அங்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடி இருந்தனர். அவர்கள் மத்தியில் சிறிது நேரம் உரை யாற்றி விட்டு, அனைவரின் வாழ்த்தையும் பெற்றுக் கொண்டு மாலை 6 மணிக்குப் பயணம் தொடர்ந்தோம்.

5 மைல் தொடர்ந்து **கானாடு காத்தான்** அடைந் தோம். எங்களுடன் ஆறுபடை வீடுகளுக்கும் பயணம் செய்த அன்பர் திரு. அடைக்கப்பன், இலக்கிய அன்பர் திரு. இராம. அண்ணாமலை ஆகியோர் நெடுந்தொலைவு முன்னரே எங்களை வரவேற்று ஊருக்குள் அழைத்துச் சென்றனர். கானாடுகாத்தனுக்குச் செட்டிநாடு என்று ஒரு பெயர் உண்டு. பொதுவாகச் "செட்டிநாடு" என்ற வார்த்தை நகரத்தார்கள் வாழ்கின்ற தொண்ணூற்றாறு ஊர்களையும் குறிக்கும் பொதுச் சொல். எனினும் டாக்டர் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர் கள் கானாடுகாத்தானில் பிறந்து ஒப்பற்ற புகழ் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவி, உள்நாட்டி லும் வெளிநாட்டிலும் பெருமளவுக்குத் தொழில் செய்து கோடீசுவரர் ஆகி, "செட்டி நாட்டு அரசர்" என்ற பட்டத்தை இந்திய வைசிராயிடம் இருந்து பெற்றது முதல் கானாடு காத்தானுக்குச் செட்டி நாடு என்ற பெயர் ஏற்பட்டது. அங்குள்ள புகைவண்டி நிலையத்துக் கும் "செட்டி நாடு" என்றே பெயரிடப்பட்டது. அண்ணாமலை அரசருக்குப்பின் அவரது மைந்தர் **ராஜா சர் முத்தையாச்செட்டியார்** அவர்கள் அரும்பணி ஆற்றி

வந்தார்கள். அவர்கள் தலைமையில்தான் 1961 ஆம் ஆண்டில் சென்னையில் எனது முதல் கவிதை நூல் (கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன்) தமிழகக் கல்வி அமைச்சர் திரு. **சி. சுப்பிரமணியம்** அவர்களால் வெளியிடப் பெற்றது. அப்பொழுது முத்தையா அரசர் அவர்கள் எனக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்கள். இந்தப் பழைய நினைவுகளோடு கானாடுகாத்தனில் நுழைந்தோம்.

இராம. அண்ணாமலை அவர்கள் வீட்டில் இரவு 7½ மணிக்கு இரவு உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் அங்கு செட்டிநாட்டரசர் திரு. முத்தையாசெட்டியாரின் தம்பியும், முன்னாள்பாராளுமன்ற உறுப்பினரும், பெருந்தலைவர் காமராசரின் அன்புக்குப் பாத்திரமானவரும் ஆகிய 'அறமனச் செம்மல்' திரு. **இராமநாதன் செட்டியார்** அவர்கள் வந்திருந்து எங்களை வரவேற்று வாழ்த்தினார்கள். உத்தரப் பிரதேச நிலைமை, மத்தியப் பிரதேச ரீவாக் காட்டின் நிலைமை பற்றி எல்லாம் எடுத்துரைத்தார்கள். "அப்பகுதியில் வனவிலங்குகள், கொள்ளைக் கூட்டம் எல்லாம் உண்டு. எனவே மிகவும் எச்சரிக்கையாகச் செல்லுங்கள்" என்று அறிவுரை கூறினார்கள். அவர்களும், மற்ற அன்பர்களும் நன்கொடை வழங்கினார்கள்.

இரவு 8 மணிக்கு நகர விநாயகர் கோவிலில் நகரத்தார் சார்பாகவும், ஊர்ப்பொதுமக்கள் சார்பாகவும் பெரிய வரவேற்பு வழங்கினார்கள். அங்கு விநாயகரை வணங்கிய பின் செட்டிநாட்டரசரின் தம்பி திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் எங்களுக்கு வாழ்த்துக்கூறி உரையாற்றினார்கள். பிறகு நான் எங்கள் பயணம் பற்றிச் சுருக்கமாகப் பேசி அனைவருக்கும் நன்றி கூறியதும் விடைபெற்றோம்.

இரவு 8½ மணிக்குப் பயணம் தொடர்ந்தது. மேலும் 3 மேல் நடந்து இரவு 9½ மணிக்கு நேமத்தான் பட்டிபோய்ச் சேர்ந்தோம். அங்கு நகரக்கற்பகவிநாயகர் கோவிலில் மாபெரும் வரவேற்பு வழங்கினார்கள். எங்களோடு ஆறுபடைவீட்டுக்கும் நடந்த "அருள் தொண்டர்" திரு. **லெ. சுப்பய்யா செட்டியார்** அவர்கள் முன்னின்று எல்லா ஏற்பாடுகளும் செய்திருந் தார்கள். இவர்கள் எங்களோடு காசிக்கு நடந்து வர வேண்டியவர்கள். ஆனால் எங்கள் பயணம் சில ஆண்டு கட்கு முன்பு நடந்திருந்தால் அவர்கள் எங்களுடன் வந் திருப்பார்கள். "காசிப் பயணம் எப்பொழுது? எப் பொழுது?" என்று பலமுறை பல ஆண்டுகள் என் வீட்டுக்கு இவர்கள் வந்து கேட்டார்கள். அப்பொழு தெல்லாம் பயண வாய்ப்பு அமையவில்லை. ஆனால் பயணம் அமையும் பொழுது அவர்கட்கு உடல் சிறிது தளர்ந்து விட்டது. வயது சுமார் எழுபது ஆகியும்கூட இன்றும் அவர்கள் கணீரென்று பாடுவதைக் கேட்டால் மெய்சிலிர்க்கும். இந்தப் பாதயாத்திரையானது இத் தகு பெரியோர்கள் பலரின் கூட்டுறவை எங்கட்குச் சம்பாதித்துக் கொடுத்தது நாங்கள் செய்த தவப்பயனே ஆகும். அதுபோல் திரு. குமரப்பன் அவர்களும் எங்களோடு காவடிதாங்கிப் பாதயாத்திரை செய்த சிறப்புடையவர்கள். அவர்களும் வரவேற்புக்கு ஆவன செய்திருந்தார்கள்.

கோவிலில் இறைவணங்கிய பின் அங்கு திரண் டிருந்த மக்கள் முன் உரையாற்றினேன். பிறகு பெரியவர் திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் வழக்கம் போல் எங்கட்கு ஒரு தந்தையின் பாசத்தோடு இரவு உணவு வழங்கினார்கள்- நாங்கள் மீண்டும் ஒரு முறை இரவு உணவு உண்டு இரவு 11 மணி அளவில் உறங்கலானோம். ஒரு நாளைக்கு எத்தனைமுறை

உணவு உண்டோம் என்று தயவு செய்து கேட்காதீர்கள். மக்களின் அன்புக்கு நாம் அடிபணிவதைத் தவிர வேறு வழியில்லை. அவர்கள் அடுத்தடுத்துக் கொடுத்ததை எல்லாம் உண்டோம். ஆனால் எல்லாம் இறையருளால் ஜீரணம் ஆயின. ஆனால் இந்த விளையாட்டு முதல் இரண்டு மாதங்கள் மட்டுமே. பிறகு வடநாட்டில் நடந்த இரண்டு மாதங்கள் பெரும்பாலும் பட்டினியாகவே நடந்தோம். அதுவும் அவனது திருவிளையாட்டே!

22. ஒன்பதாம் நாள் (புதுக்கோட்டை.)

ஒன்பதாம் நாள் பயணம் விடிகாலை 4½ மணிக்குத் தொடங்கியது. அருள்தொண்டர் திரு. சுப்பய்யா செட்டியார் அவர்கள் எங்களுக்கு ஆப்பிள் தந்து வழியனுப்பிய தோடு, காலை 9½ மணிக்கு நாங்கள் நமன சமுத்திரம் சென்று புகை வண்டி நிலையத்தில் தங்கிய பொழுது எங்களுக்குக் காலை, மதிய உணவுகளை அவர் களும், அவர்கள் மகள் வள்ளியம்மை ஆச்சியும் கொண்டு வந்து தந்தார்கள். மாலை உனவினைப் புதுக்கோட்டை ''சண்முகநாதன் ஸ்டோர்'' திரு. வயிரவன் செட்டியார் அவர்களும், நச்சாந்துபட்டி திருமதி மு. வீர. சொர்ணம் ஆச்சி அவர்களும் கொண்டு வந்து தந்தார்கள்.

காலையில் 10 மைல் நடந்து நமன சமுத்திரம் வந்த நாங்கள் மாலை 5 மணிக்குப் புறப்பட்டு 8 மைல் நடந்து இரவு 7 மணிக்குப் புதுக்கோட்டைக்கு இனிதே சென்ற டைந்தோம். ஒவ்வொரு பாதயாத்திரையிலும் எங்களை உற்சாகத்தோடு வரவேற்று உபசரிக்கும் தேவகோட் டைத் தம்பி திரு. **கே. எம். வெங்கடாசலம்** அவர்கள் புதுக் கோட்டை எல்லையில் பக்த கோடிகளோடு வந்து மேளதாளத் தோடு எங்களைத் தெற்கு நான்காம் வீதி யில் உள்ள ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சந்தனக் காப்பு அலங் காரம் உள்ளத்தை ஈர்த்தது. புதுக்கோட்டை·வழியாக நாங்கள் பாதயாத்திரை செல்லும் பொழுதெல்லாம் நாங்கள் அக்கோயிலில் தான் தாங்குவது வழக்கம்.

முன்பு அக்கோயில் மிகப் பழைமையானதாக இருந்தது. அதனைத் திருப்பணி செய்யும் படி முன்பு கூறியிருந் தோம். பிறகு சென்ற பொழுது திருப்பணி நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நாங்களும் ஓரளவு நன்கொடை கொடுத்து, அங்கு கிடந்த கல்லிலும் மண்ணிலும் படுத்திருந்து சென்றோம். இம்முறை அக் கோயில் மிக அருமையாகத் திருப்பணி செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றுப் பொலிவுடன் திகழக் கண்டு மகிழ்ந்தோம். அங்கு ஒரு மணி நேரம் பஜனை நடத்தினோம். என்னுடைய உரைக்குப் பின் அனை வருக்கும் திரு. வெங்கடாசலம் அவர்கள் உணவு வழங் கினார்கள்.

செட்டி நாட்டில் "மேலை வட்டகை" என்று அழைக்கப்படும் புதுப்பட்டி, பொன்னமராவதி, மேலைச் சிவபுரி, வலையபட்டி முதலிய பல ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்கள் புதுக்கோட்டையில் சிறப்பாகத் தொழில் செய்து வருகிறார்கள். அவர்களில் பல பேர் எங்களைக் கண்டு ஆசி கூறிச் சென்றார்கள்.

புதுக் கோட்டைக்கு அருகில் உள்ள ஆலங்குடி என்ற ஊரில் செட்டியார்கள் பல குடும்பத்தினர் வசிக் கிறார்கள். அவர்கள் நாம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து புறப்பட்ட பொழுது நம்மோடு வந்தவர்கள். ஆனால் ஆலங்குடியில் தங்கிவிட்டவர்கள். இப்பொழுது வியாபாரம், விவசாயம் முதலியவற்றில் ஆர்வமாக ஈடு பட்டு முன்னேறி வருகிறார்கள். எங்களது காசிப் பயணத் திட்டம் பற்றி அறிந்த சிலர் ஆலங்குடியில் இருந்து புதுக்கோட்டைக்கு வந்து எங்களிடம் விபூதி பெற்றுச் சென்றார்கள். ஒரு முறை அவர்கள் அழைப் பின் பேரில் ஆலங்குடி சென்று அங்குள்ள கோயிலில் "கந்தபுராணம்" தொடர் சொற் பொழிவு நிகழ்த்தி இருக்கிறேன்.

23. பத்தாம் நாள்
(நார்த்தாமலை—கீரனூர்)

பத்தாம் நாள் (26-2-1983) விடிகாலை 4 மணிக்குப் புறப்பட்டு 12 மைல் தொடர்ச்சியாக நடந்து 10 மணி அளவில் புகழ் மிக்க நார்த்தாமலை மாரியம்மன் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஆசிரியர் திரு. **என். நாகராஜன்** எங்களை அன்புடன் வரவேற்றுக் கோயிலில் அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் எல்லாம் நடைபெற வைத்து நல்லதொரு வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார். நார்த்தாமலை கலைகளுக்குப் பெயர் பெற்றது. "கலைமாமணி" பி. முத்து லட்சுமி அம்மாள் அவர்கள் அம்பாள் திருமுன்பு இனிய இசை பாடி, ஆர்மோனியம் வாசித்து எங்களை மகிழ்வித்தார்கள். பிறகு பரத நாட்டியம் ஆடி அதன் நுட்பங்களை எடுத்துரைத்தார்கள். இங்கு ஒரு சிறிய கலைவிழாவே நடந்தது என்றால் மிகையாகாது.

இராமையா குருக்கள் அவர்களும், ஆசிரியர் நாகராஜன் அவர்களும் நார்த்தாமலை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களைத் தெளிவாகக் கூறினார்கள். அன்று பகற் பொழுது அவ்வூர் பற்றிய ஆராய்ச்சியில் கழிந்தது.

"நகரத்தார் மலை என்பதுதான் நார்த்தா மலை என்று திரிந்திருக்கிறது. நகரத்தார் மலை என்றே இங்குள்ள ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. நார்த்தாமலை கி.பி. 810 ஆம் ஆண்டில் முத்தரையர் தலைநகரமாக இருந்திருக்கிறது. அப்பொழுது தஞ்சையில் பிற்காலச் சோழ பரம்பரை

தலையெடுத்திருக்கவில்லை. பிறகு விஜயாலய சோழன் தஞ்சையில் தலையெடுத்துப் பிற்காலச் சோழர் பரம்பரையைப் புகழோடு உருவாக்கிய காலத்தில் அவனது படையெடுப்பு நார்த்தாமலை மீது நிகழ்ந்தது. அப்பொழுது நடைபெற்ற கடும்போரில் முத்தரையர் அரசு வீழ்ந்தது. நார்த்தமலையின் கோட்டை கொத்தளங்கள் எல்லாம் இடிக்கப்பட்டன. அச்சிதைவுகளை இன்றும் நார்த்தாமலையில் கண்டோம். இடிந்து குவியல் குவியலாகக் கிடக்கும் பழங்காலக் கற்கள் மீது ஏறி இறங்கினோம். 1200 ஆண்டுக்கு முற்பட்ட "விஜயாலய சோழீச்சரம்" என்ற சிறிய கோயிலைக் கண்டோம். இதனை விஜயாலய சோழன் தன் வெற்றியின் சின்னமாக இங்கு கட்டியுள்ளான். இக்கோயில்மூலஸ்தானத்திற்கு மேலேயே ராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் தான் தஞ்சையில் புகழ்மிக்க "பெரிய கோயில்" என்று அழைக்கப் பெறும் "பிரகதீஸ்வரர் கோயில்" 200 ஆண்டுகள் கழித்துக் கட்டப்பட்டுள்ளது. எனவே பிற்காலச் சோழர் கட்டடக் கலையின் முன்னோடியாக நார்த்தாமலை விஜயாலய சோழீச்சரக் கோயில் கருதப்படுகிறது. இடிந்த பழைய கோட்டைக்குள் மங்கள நாயகி—கடம்பவனநாதர் கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் வழிபாடு செய்தோம். இப்பொழுது இப்புராதனமான கோயில்கள் எல்லாம் தொல் பொருள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

நார்த்தாமலையில் உள்ள சில மலைகளுக்குக் கடம்பன் மலை— கோட்டைமலை—ஆள் உருட்டிமலை என்ற பெயர்கள் வழங்குகின்றன. ஆசிரியர் திரு. நாகராஜன் இல்லத்தில் எங்களுக்கு உணவு வழங்கி உபசரித்தனர். அவரது வயதான பெற்றோர் எங்களை வாழ்த்தினர்.

மாலையில் 5½ மணிக்கு நார்த்தாமலையில் இருந்து 6 மைல் நடந்து இரவு 7½ மணி அளவில் **கீரனூர்**

சென்றடைந்தோம். அங்குள்ள இந்தியன் ஓவர் சீஸ் வங்கி மேலாளர் திரு. **சாமிநாதன்** (தேவகோட்டை), மற்றும் பத்திரிகை நிருபர் திரு. ஆர். ஜி. செல்வம், தமிழாசிரியர் திரு. பெருமாள் ஆகியோரும், உள்ளூர் அன்பர்களும் எங்களை வரவேற்று, பிரகதாம்பாள் உடனாய உத்தமநாத சுவாமி கோவிலுக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். பிறகு திரு. சுவாமிநாதன் வீட்டில் வேல்பூசை செய்து வழிபாடு செய்தபின் இரவு உணவு உண்டோம்.

நாங்கள் எங்களுடன் ஓர் உண்டியல் கொண்டு சென்றோம். அதில் பக்தர்கள் தமது நன்கொடைகளை இட்டு வழங்கினர். முதல் முறையாக அது நிறைந்து வழிந்த இடம் சண்முகநாதபுரம். அங்கு திரு. சுப்பையா இல்லத்தில் அதனைத் திறந்து எண்ணிய பொழுது 520/- வசூலாகி இருந்தது. இப்பொழுது கீரனூரில் உண்டியல் நிறைந்து வழிந்தது. அதனைத் திரு. சுவாமிநாதன் இல்லத்தில் திறந்து எண்ணிய பொழுது அதே 520/- வசூலாகி இருக்கக் கண்டு பெரு வியப்பு அடைந்தோம். இதுவரை செட்டி நாட்டுப் பகுதியில் நடந்து சென்றதால் இவ்வளவு ரூபாய் உண்டியலில் கிடைத்தது. இதன் பிறகு மூன்றாம் முறையாக ஹைதராபாத்தில் திறந்து எண்ணிய பொழுது ரூ. 230 மட்டுமே வசூலாகி இருந்தது அதன் பிறகு காட்டு வழி ஆகையால் உண்டியலுக்கு வேலையில்லாமற் போய் விட்டது.

24. பதினொன்றாம் நாள்

(மாத்தூர் — திருச்சி — திருவானைக்கா)

பதினொன்றாம் நாள் (27-2-83 ஞாயிறு) காலை 4½ மணிக்கு புறப்பட்டு 6¾ மணிக்கு மண்டையூரில் உள்ள "அசோகா கெமிக்கல்ஸ்" என்ற நிறுவனத்திற்கு வந்து சேர்ந்தோம். அதன் உரிமையாளர் திரு. பி. ஆர். சுப்பய்யா (ஆத்தங்குடி)வும், அவரது குடும்பத்தினரும் எங்களை அன்புடன் வரவேற்றுக் காலைப் பலகாரம் அளித்து, நன்கொடையும் வழங்கி உபசரித்தனர். அங்கு எங்களை ஒரு புகைப்படமும் எடுத்தனர். அதன்பிரதி ஒன்றைத் திரு. சுப்பய்யாவின் தாயார் அவர்கள் நாங்கள் காசியாத்திரை முடித்து 30-6-83 அன்று மதுரைக்கு வந்த பொழுது அங்கு நகரத்தார் சங்கச் சார்பில் நிகழ்ந்த பாராட்டுவிழாவின் போது என்னைச் சந்தித்து நினைவு படுத்தித் தந்தார்கள். அவர்களது பெருந் தன்மையை நான் மிகவும் வியந்து போற்றினேன்.

கீரனூரில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள மாத்தூரில் இருக்கும் "வீரப்பசாமி ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு" காலை 9½ மணி அளவில் சென்று சேர்ந்தோம். அந்த நிறுவனத்தினர் எங்களை அன்பாக வரவேற்று மதிய உணவும் தங்குமிடமும் தந்து உபசரித்தனர்.

மாலை 5 மணிக்கு புறப்பட்டு 12 மைல் நடந்து திருச்சி வழியாக இரவு 10 மணிக்குத் திருவானைக்கா வந்து சேர்ந்தோம். அங்கு "காரைக்குடி அ. மு. க. பாடசாலை" சத்திரத்தில் திருச்சி — திருவானைக்கா நகரத்தார்களும், திருச்சி நகரத்தார் சங்கத்தினரும்,

பொது மக்களும் உற்சாகமான வரவேற்பு வழங்கினர். சந்திர உரிமையாளர்கள் இரவு உணவு வழங்கினர். இன்று 22 மைல் நடந்ததால் மிகவும் களைத்துத் தூங்கினோம்.

தமிழ் நாட்டின் முக்கிய சிவத்தலங்களுள் ஒன்று திருவானைக்கா. சோலை சூழ்ந்த இடங்களைத் தெய்வமாக நம் முன்னோர்கள் கருதி வழிபட்டனர் என்பதற்குத் திருவானைக்கா ஒரு நல்ல சான்றாகும். இது ஐம்பூதத் தலங்களில் நீர்த்தத்தலமாகும். இங்கு கருவறையில் எப்பொழுதும் சிவலிங்கத்தைச் சுற்றி நீர் சூழ்ந்திருக்கக் காணலாம். அப்பர் பெருமான் இத்தலத்தின் பெருமையைப் பாடும் பொழுது,

“நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந்
தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே”

என்று ஆத்திகத்தையும் நாத்திகத்தையும் இணைத்துப் பாடுகிறார்.

நாங்கள் திருச்சியை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது சாலையில் சிலர் எங்கள் யாத்திரையைக் கேலி செய்து தூற்றக் கண்டோம். அவர்கள் சிறிது தொலைவில் நின்று கேலி பேசினர். ஆனால் நாங்கள் அது பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்குமாறு இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டோம்.

இது போல் ஒரு நிகழ்ச்சி தேவகோட்டை அருகிலும் நிகழ்ந்ததாம். அது எங்கட்குத் தெரியாது.

ஆனால் அண்மையில் தேவகோட்டை **ரெத்தினம் கொத்தனார்** என்பவர் இதுபற்றி என்னிடம் கூறினார். தேவகோட்டையின் எல்லை தாண்டும் இடத்தில் ரெத்தினம் கொத்தனார் எங்களை வணங்கி எங்களிடம் விபூதி பெற்றுச் சென்றாராம், அவர் புறப்பட்டுச் செல்லும் வழியில் சிறிது தூரத்தில் ஒருவர் எங்களைக் கேலி செய்து பேசக் கேட்டாராம். ''சும்மா சாப்பிட்டு விட்டுக் கிடக்காமல் காசிக்குப் போகிறான்களாம் காசிக்கு'' என்று தூற்றுதலாகச் சில மொழிகள் பேசி இருக்கிறார் அந்த அன்பர். அதைக் கேட்டவாறே ரெத்தினம் கொத்தனார் தன் வேலையாக ஆறாவயல் சென்றிருக்கிறார். பிறகு சிறிது நேரத்தில் தன் வேலை முடித்து அவர் திரும்பிய பொழுது, காலையில் காசி யாத்திரிகர்களைக் கேவலமாகப் பேசிய அன்பர் நீரில் விழுந்து பிணமாகக் கிடக்க அவரைச் சிலர் தூக்கிச் செல்வதைப் பார்த்திருக்கிறார். அப்பொழுது காசியாத்திரையின் மகிமையை ரெத்தினம் கொத்தனார் பெரிதும் உணர்ந்தாராம். இத்தகவல் அண்மையில் அவர் என்னிடம் சொல்லக் கேட்டு நான் அயர்ந்து போனேன்.

ஆத்திகரும் நாத்திகரும் அடைந்து வணங்க வேண்டிய இடமாகிய திருவானைக்காவில் ஓர் இரவு தங்கும் பேறு பெற்றோம்.

25. பன்னிரண்டாம் நாள்

(சிலையாத்தி — குணசீலம்)

பன்னிரண்டாம் நாள் காலையில் எழுந்து நீராடித் திருவானைக்கா அண்ணலாகிய ஜம்புகேஸ்வரரையும், அருள் பரப்பும் அம்பிகை அகிலாண்டேஸ்வரியையும் வணங்கினோம். திருச்சி (தேவகோட்டை) ஆ. வி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள் காலை உணவு வழங்கினார்கள்.

காலை 7½ மணிக்குப் புறப்பட்டு 8 மைல் நடந்து சிலையாத்தி என்ற சிற்றூருக்கு வந்தோம். சாலை ஓரத்தில் இருந்த பழங்காலப் பெருமாள் கோயிலில் இறை வணங்கித் தங்கினோம். திருவானைக்கா உமா ஐஸ் கம்பெனி உரிமையாளரும், என் சிறிய மாமனாரும் ஆகிய திரு. **ஏகப்ப செட்டியார்** (தேவகோட்டை) அவர்களும், அவர்கள் மனைவியார் திருமதி **வள்ளியம்மை ஆச்சி** அவர்களும் எங்கட்குத் திருவானைக்காவில் இருந்து மதிய உணவு கொண்டு வந்து வழங்கினர். அவ்வூரில் ஏராளமான ஏழை மக்களையும் குழந்தைகளையும் சந்தித்தோம். அவர்கள் எல்லாம் மிகக் குறைந்த கூலிக்கு வேலை செய்யும் கீழ்நிலைத் தொழிலாளிகள் ஆவர். அவர்கள் அனைவரும் எங்களைச் சந்தித்து விபூதி பெற்றனர்.

மாலையில் 4½ மணிக்குப் புறப்பட்டு வாத்தலை கடந்து முக்கொம்பு என்ற இடத்திற்கு வந்து சேர்ந்

தோம். அந்த **முக்கொம்பு** தமிழ் நாட்டின் பூகோளத்தில் ஒரு முக்கியமான இடம் வகிக்கிறது. இங்கு காவிரி, கொள்ளிடம் இரண்டும் சேர்கின்றன. இவற்றின் குறுக்கே மேலணை என்ற மிகப் பெரிய அணை கட்டப் பட்டுள்ளது. இந்த அணை கி. பி. 1836 ஆம் ஆண்டில் ஏ. டி. காட்டன், ஹெச். சி. காட்டன் (A. T. Cotton & H. c. Cotton) என்பவர்களால் கட்டப்பட்டது. இங்குள்ள பாலம் கி. பி. 1846இல் லாபோர்டு (Law ford) என்பவரால் இரண்டு இலட்சம் போய் செலவில் அமைக்கப்பட்டது.

முக்கொம்பு அணை நீரில் நீராடி அங்கு எழுந்தருளி இருக்கும் ஆஞ்சநேயரை வணங்கினோம். இங்குள்ள பூந் தோட்டம் கண்டு மகிழ்த்தக்கதாகும்.

அந்தி நேரத்தில் எங்கள் பயணம் தொடர்ந்தது. சிலையாத்தியில் இருந்து 7 மைல் தொலைவில் உள்ள **குணசீலம்** என்ற ஊருக்கு இரவு 7½ மணிக்குச் சென்றடைந்தோம். இங்குள்ள ஸ்ரீ பிரசன்ன வெங்கடா சலபதி கோயில் மிகப் புகழ் பெற்றதாகும். இந்த வெங்கடாசலபதி சுயம்பு மூர்த்தியாகும். இந்த மூர்த்தி தோன்றிய கதை வருமாறு: இவ்வூருக்கு வந்திருந்த சோழ மன்னருக்கு மக்கள் குடத்தில் பால் கொண்டு போன பொழுதெல்லாம், இக்கோயில் உள்ள இடத் திற்கு வரும் பொழுது குடத்தில் உள்ள பால் ஒவ்வொரு முறையும் குறைந்திருக்கிறது. அதன் காரணத்தை ஆராய்ந்த பொழுது இப்பொழுது வெங்கடாசலபதி விக்கிரகம் உள்ள இடத்தில் ஒரு பெரியபுற்று இருந்ததாக வும், அந்தப் புற்றைக் கடக்கும் பொழுது பால் குறைவ தாகவும் கண்டு பிடித்தனர். உடனே அந்தப் புற்றை இடித்துப் பார்த்த பொழுது உள்ளே வெங்கடாசலபதி விக்கிரகம் இருக்கக் கண்டு, அந்த இடத்தில் விக்கிர கத்தைப் பிரதிஷ்டை செய்து ஸ்ரீபிரசன்ன வெங்கடா

சலபதி என்று பெயரிட்டுக் கோயில் கட்டிக் கும்பாபி ஷேகம் செய்தனர்.

இக் கோயிலில் ஒரு சிறப்பு என்னவென்றால் சித்த சுவாதீனம் இல்லாதவர்கள் (பைத்தியங்கள்) இங்கு 45 நாட்கள் தங்கி இறை வழிபாடு செய்தால் பைத்தியம் தெளியும். இங்கு ஏராளமான மன நோயாளிகளைக் கண்டோம். இவர்கள் எல்லாம் சித்த சுவாதீனம் இல்லாதவர்கள்.

கோயிலின் அருகில் உள்ள சத்திரத்தில் இரவு தங்கினோம். திருச்சி அன்பர் திரு. **இராம. சிதம்பரம்** அவர்கள் எங்கட்கு இரவு உணவு திருச்சியில் இருந்து கொண்டுவந்து உபசரித்தார். மேலும் இவர் செய்த ஒரு பெருந்தொண்டுக்கு ஈடு இணை இல்லை. எங்களது சைக்கிள் ரிக்ஷாவில் வைக்க முடியாத அளவுக்கு மக்கள் உணவுப் பொருள்களை வழிநெடுக வழங்கியதால் இரண்டு டின் மாவைத் திருச்சியில் இவரிடம் ஒப்படைத் தோம். அவற்றை இவர் சேலத்துக்கு அனுப்பி அங்கு நாங்கள் பெற ஏற்பாடு செய்தார். சேலத்துக்கு நாங்கள் சென்ற பொழுதும்கூட எங்களது சைக்கிள் ரிக்ஷாவில் இடம் குறையவில்லை. ஏனெனில் அதில் உள்ள உணவுப் பொருள்களை எடுத்து உபயோகிக்க மக்கள் எந்த ஊரிலும் எங்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை. எனவே சேலத்தில் அப்பெரிய இரண்டு டின்களை அங்கு உதவி செய்த தேவகோட்டை அன்பர் திரு. **வள்ளியப்ப செட்டியார்** அவர்களிடம் ஒப்படைத்தோம். அந்த அன்பர் அவற்றை எங்களுக்கு அவரது காரில் பெங்களூ ருக்குக் கொண்டுவந்து தந்தார். பெங்களூரிலும் எங்கள் சைக்கிள் ரிக்ஷாவில் இடம் இல்லை. என்றாலும் வேறு வழியின்றி நாங்கள் தற்காப்புக்காக வைத்திருந்த அரிவாள், சிறிய ஈட்டி, கம்பு முதலிய கனமான பொருள்களை வெளியேற்றிவிட்டு சைக்கிள் ரிக்ஷாவின்

எடையைக் குறைத்து இரண்டு டின்களை ஏற்றிக்கொண்டோம். அப்பொழுதும் கூட எங்கள் ரிக்ஷாவின் எடை 500 கிலோ இருந்தது, அதன் எடை 300 கிலோவுக்கு மேல் போகக்கூடாது என்பது விதி. எனினும் அதன் எடையைக் குறைக்க எங்களால் ஒரு பொழுதும் முடியவில்லை. ரிக்ஷாவின் டயர் தரையோடு தரையாக ஒட்டி இருந்தது. எவ்வளவு காற்று அடித்தாலும் டயர் எழவே இல்லை. எப்பொழுதும் தரையோடு ஒட்டிய நிலையிலேயே டயர் இருக்க எங்களது சைக்கிள் ரிக்ஷா ஓடியது. அதனைக் கண்ட பலர் எங்களிடம் வியந்து கூறியதாவது...'' நீங்கள் காசிக்கு நடப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் இந்த ரிக்ஷா ஓடுவது விசுவநாதர் கிருபையினால்தான்'' என்றார்கள். இப்படி விசுவநாதரின் பேரருள் திறத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் நன்கு அறிய முடிந்தது.

26. பதின் மூன்றாம் நாள்

(அய்யம்பாளையம்—முசிறி)

காலை $4\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டோம். காவிரிக் கரை ஓரமாகவே எங்களது சாலை சென்றதால் நடப்ப தற்கு மிக இன்பமாக இருந்தது. எங்கு பார்த்தாலும், வயல், வரப்பு, தோட்டம், துரவு, ஆடு, மாடு, நீர், நிழல்-இத்தகு காட்சியை நம் இராமநாதபுர மாவட்டத் தில் பார்ப்பது அரிதல்லவா! ஐந்து மைல் நடந்து, காலை 7 மணிக்கு அய்யம் பாளையம் சென்று அங்குள்ள பழைய சத்திரத்தில் தங்கினோம். அய்யம்பழநி என்பது அய்யம்பாளையம் என மருவி உள்ளது. காவிரிக்கரை யில் இவ்வூர் இருப்பதால் மிகவும் செழிப்பாக இருக் கிறது. காவிரியில் பலமுறை நீராடி மகிழ்ந்தோம்.

இங்கு ஓர் அற்புதமான முருகன் கோயில் இருக் கிறது. பழநி முருகன்போலவே இங்கு தண்டாயுதபாணி காட்சி அளிக்கிறார். இக்கோயிலைக் கட்டிய வள்ளல் திரு. ஏ. பி. எஸ். தாண்டவராயபிள்ளை ஆவார். இக் கோயிலில் உள்ள மூர்த்திகள் பிரதிஷ்டை 19-4-1895 அன்று சிருங்கேரி சங்கராச்சாரிய மடாதிபதி உயர்திரு. சச்சிதாநந்த சிவ அபிநவ நரசிம்ம பாரதி சுவாமிகள் அவர்களால் செய்யப் பெற்றது. இக்கோயிலைக் கட்டிய வள்ளல் அவர்கள் இங்குள்ள மூர்த்திகளுக்குப் பல இலட்சம் ரூபாய் செலவில் தங்க ஆபரணங்கள் செய்து கொடுத்திருக்கிறார். அய்யம்பாளையத்திற்கு சிருங்கேரி சுவாமிகள் வந்திருந்தபொழுது 1008 முத்திரைப் பவுன் கொண்டு சுவாமிகளுக்கு இவ்வள்ளல் பாதபூசை செய்தி ருக்கிறார். அப்பொழுது சுவாமிகள் இவ்வள்ளலுக்குப் "பக்தரத்தினம்" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்திருக்

கிறார். சிருங்கேரி சுவாமிகளைத் தன் குருவாக ஏற்றுக் கொண்ட இவ்வள்ளல், சிருங்கேரி சுவாமிகளின் ஐம்பதாவது பிறந்த நாளன்று அவரது அனுமதியின் பேரில் அவரது உருவச் சிலை செய்து அவர் முன்னிலையில் இம் முருகன் கோயிவில் 28-3-1908 அன்று பிரதிஷ்டை செய்து பூசிக்கலானார். சிருங்கேரி சுவாமிகள் கரூர் வழியாகச் சிருங்கேரிக்குப் பயணமான பொழுது இவ்வள்ளல் பெருந்தகை சுவாமிகளைப் பின்பற்றிக் கரூர்வரை சென்றிருக்கிறார். அங்கே இருவரும் பிரிய நேர்ந்தபொழுது வள்ளல் அவர்கள் சுவாமிகளின் பிரிவு ஆற்றாமல் அழுது கண்ணீர் சிந்த, உடனே சுவாமிகள் ஸ்ரீராமபிரான் பரதனுக்கு வழங்கியதுபோல் தமது பாதரட்சைகளைக் கொடுத்தார். அவற்றைப் பெரிய செல்வமாகப் பெற்றுவந்த வள்ளல் அவர்கள் தமது முருகன் கோயிலில் ஓரிடத்தில் அவற்றையும் பயபக்தியுடன் வைத்துத் தினமும் பூசித்து வந்தார். அப்பாதுகைகள் இன்றும் முருகன் கோயிலில் காட்சி அளிக்கின்றன. **பரதனுக்குப் பிறகு மற்றொரு பரதனாக அவதரித்த வள்ளல் தாண்டவராயம் பிள்ளை** தமிழ் நாட்டு வரலாற்றில் முக்கிய இடம் பெற வேண்டிய பெரியவர் ஆவார். இவர் கி. பி 1856ஆம் ஆண்டில் பிறந்து, ஒப்பற்ற பணியாற்றி 13-1-1915இல் இயற்கை எய்தினார்.

அய்யம்பாளையத்தில் இருந்து மாலை 9 மணிக்குப் புறப்பட்டுக் காவிரிக்கரை ஓரமாகவே ஐந்து மைல் நடந்து இரவு 7 மணிக்கு முசிறி வந்து சேர்ந்தோம். அங்குள்ள அன்பர்கள் எங்களைப் பழைய கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். சந்திரமௌலீசுவரர்—கற்பக வல்லி அம்மனைத் தொழுது பக்திப் பாடல்கள் பாடினோம். அக்கோயிலின் நிர்வாக அதிகாரி திரு. கந்தசாமி எங்களை அன்பாக வரவேற்றுக் கோயில் கல்யாணமண்டபத்தில் நாங்கள் தங்க வசதி செய்து கொடுத்தார். காரைக்குடி திரு. கண. பெத்தபெருமாள் அவர்களும், வெ. லெட்சுமணன் அவர்களும் எங்களுக்கு இரவு உணவு கொண்டுவந்து வழங்கினர்.

27. பதினான்காம் நாள்

[திரு ஈங்கோய்மலை-காவிரி-தொட்டியம்]

இன்று மெதுவாக எழுந்து காவிரியில் நீராடிக் காலை 6½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். காவிரிக் கரை வழியாக நடந்து சென்றது மனத்துக்கும் உடலுக்கும் தெம்பு கொடுத்தது. கோடைக் காலமாக இருந்தும் அப்பொழுது காவிரியில் நிறையத் தண்ணீர் ஓடியது எங்களது அதிர்ஷ்டமே யாகும். எனவே வழியில் பல முறை காவிரியில் நீராடி மகிழும் வாய்ப்புக் கிடைத்தது. 4 மைல் நடந்து புகழ் மிக்க திருஈங்கோய் மலையினை 8 மணிக்கு அடைந்தோம்.

இது ஒரு புகழ்மிக்க பாடல்பெற்ற தலம். இங்குள்ளபெரிய மலைமீது ஏறிச் சென்றால் மரகதாசல ஈஸ்வரர் மரகதவல்லியை வணங்கலாம். இக்கோயிலில் தண்டபாணித் தெய்வமும் எழுந்தருளியிருக்கக் காண லாம்.

இங்கு நாங்கள் சென்று மலையடிவாரத்தை அடைந்ததும் ஒருஅதிசயம் கண்டோம். கே. அங்கமுத்து என்னும் வெளியூர் அன்பர் கண்பார்வை தெரியாமல் மிகவும் தொல்லைப்பட்டவர். திருஈங்கோய்மலை ஆண்டவனே கதி என்று கடந்த ஒருவருடமாக இக் கோயில் அடிவாரத்தில் இருந்து மலைக்கடவுளை வழிபட்டு வந்திருக்கிறார். ஒருவருடம் தவறாமல் பூசித்த அவருக்கு இறைவன் மனம் இரங்கிக் கண்பார்வை கொடுத்திருக்கிறான். அவருக்கு இப்பொழுது கண் பார்வை நன்கு தெரிகிறது. மலையடிவாரத்தில் அந்த அன்பரை முதலாவதாகத் தரிசிக்கும் பேறு எங்களுக்குக்

கிடைத்தது. அவர் எங்களது காசிப் பயணத்தை வியந்து போற்றி எங்கள் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

அவரோடு பேசி முடியுமுன்பு அவ்வூரில் உள்ள சில பையன்கள் எங்கள் அருகில் கூடிவிட்டார்கள். எங்கள் சைக்கிள் ரிக்ஷா அவர்களுக்கு ஒரு கவர்ச்சிப் பொருளாக அமைந்து விட்டது. எனவே அவர்கள் எங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். எங்கள் பயணம் பற்றி அறிந்ததும் உடனே அவர்கள் தம்பெற்றோர்க்கு இச் செய்தியைச் சொல்ல விரைந்தோடி இருக்கிறார்கள் நாங்கள் மலையில் ஏறி இறைவணங்கியபின் புறப்பட்டு விடுவோம் என்று அந்தப் பையன்களிடம் கூறியிருந்தோம். என்ன ஆச்சரியம்! நாங்கள் மலையில் ஏறி சுவாமிதரிசனம் செய்து திரும்பி அடிவாரத்திற்கு வந்த பொழுது அங்கு ஊரே திரண்டு நின்றது. ஊரில் உள்ள ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் திருவிழாப் போல் திரண்டு நிற்கிறார்கள். காசிக்கு நடந்து செல்லும் பக்தர்களைக் கண்டு வணங்குவதில் அவர்களுக்கு அவ்வளவு ஆர்வம். அந்த ஊரில் இருப்பவர்கள் எல்லையற்ற பக்தி உடையவர்கள் என்பது எங்களுக்கு அதன் பின்தான் தெரிந்தது. அதுவே ஒரு பெரிய தலமாக இருக்கும்பொழுது அவ்வூர் மக்களைப் பற்றிக் கேட்பானேன்.

அவ்வூரில் வாரவழிபாட்டு மன்றம் இருக்கிறது. அதன் தலைவர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் வாரவழிபாட்டு உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் வந்திருந்தனர். அவ்வூரில் இருப்பவர்களுக்கு நெசவுதான் தொழில். தமது தொழிலைக் கூட விட்டுவிட்டு எல்லா மக்களும் எங்களைக் காணக் குழுமி இருந்தனர்.

மலை அடிவாரத்தில் உள்ள போகர் மண்டபத்தில் இருந்த அவர்கள் அனைவரும் எங்களைக் கண்டதும் எழுந்து நின்று "அரஹர சிவசிவ", என்று சொல்லி

எங்களை வரிசையாக நிற்க வைத்து, எங்கள் பாதங் களைக் கழுவி, மஞ்சள் குங்குமம் இட்டு, பூ தூவிப் பாதபூசை செய்து கீழே விழுந்து வணங்கினர். அப் பொழுது அவர்களில் சிலர் தேவாரம் பாடினர். பாதபூசை முடிந்ததும் திரு. முத்துநாச்சியப்பன் என்ற அன்பர் இளநீர் வழங்கினார். அதற்குள் குமாரசாமி, ரெ. மணி என்ற அன்பர்கள் உப்புமா தயாரித்துக் கொண்டு வந்தனர். தங்கவேல் என்ற அன்பர் பசும்பால் காய்ச்சிக் கொண்டு வந்தார். எங்களுக்கு அருமையான உணவு பரிமாறி எங்கள் பசியைப் போக்கினர்.

அதற்குள் 2 மைலில் உள்ள **மணமேடு** என்ற ஊரைச் சேர்ந்த அன்பர்களுக்கு நாங்கள் திருஈங்கோய் மலையில் இருக்கும் செய்தி எப்படியோ தெரிந்திருக் கிறது. அவர்கள் ஓர் ஆள் அனுப்பி மாலையில் அவர்கள் ஊரில் நாங்கள் சிற்றுண்டி அருந்திச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு உடனே நாங்கள் மகிழ்ச்சியோடு இசைவு தெரிவித்து மாலை 5 மணிக்கு அவ்வூருக்கு வருவோம் எனவும், சாலையில் எங்களைச் சந்தித்துக் கொள்ளுமாறும் பதில் சொல்லி அனுப்பினோம்.

ஒரு பகல் திருஈங்கோய் மலை அடிவாரத்தில் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது இறையருளே! அப் பொழுது அவ்வூரைப் பற்றிய சிறப்புக்களை அறிந்து கொண்டோம்.

இத்தலத்திற்குப் பழைய பெயர் "தன்துருணி வனம்" என்பதாகும். அகத்தியர் ஈவடிவாய் இம்மலை மீது எழுந்தருளி இருக்கும் மரகதாசல ஈசுவரரை வணங்கித் தேன் அபிஷேகம் செய்ததால் இம்மலைக்குத் "திருஈங்கோய் மலை" என்ற பெயர் ஏற்பட்டது. அம்மலைப் பெயரே அவ்வூருக்கும் பெயராய் அமைந்தது

"காலைக் கடம்பர் (குளித்தலை)
கடும்பகல் சொக்கர் (ஐயர்மலை)
மாலைத் திருஈங்கோய்மலை''

என்பது பழமொழி. குளித்தலை, ஐயர்மலை, திருஈங்கோய்மலை ஆகிய மூன்று தலங்களும் அருகருகே உள்ளன. காலையில் குளித்தலைக் கடம்பரை வணங்கி, மதியத்தில் ஐயர்மலைச் சொக்கரை வணங்கி, மாலையில் திருஈங்கோய்மலை மரகதாசல ஈசுவரனை வணங்கி இப்படியாக ஒரே நாளில் மூன்று தெய்வங்களையும் வணங்கினால் புண்ணியம் மிகுதி என்பது ஐதீகம்.

திருஈங்கோய்மலைக்குத் திருஞான சம்பந்தர் எழுந்தருளிப் பதிகம் பாடி இருக்கிறார்.

மலைமீதுள்ள அம்பாள் கோயில் கோபுர கலசம் (சிகரம்) மூன்றாக அமைந்துள்ளது ஒரு சிறப்பு. மற்ற எல்லாக் கோயில்களிலும் ஒரு கலசமே இருக்கும். ஆனால் இங்கு மூன்று கலசம் இருப்பது அம்மை இச்சா சக்தியாகவும், கிரியா சக்தியாகவும், ஞான சக்தியாகவும் இருக்கிறாள் என்பதைக் குறிக்கிறது.

இங்குள்ள இறைவனும் இறைவியும் பச்சை நிற (மரகதம்) கல்லில் செதுக்கப்பட்டுள்ளார்கள். அதனால் தான் இவர்களுக்கு மரகதாசல ஈசுவரன் என்றும், மரகத வல்லி என்றும் திருநாமம் வழங்குகிறது. தீபம் காட்டும் பொழுது இறைவனின் நிறம் பசுமையாக ஒளிர்வதைக் கண்டு மகிழ்ந்தோம். "நிறங்கள் ஓர் ஐந்துடையாய்'' என்று சிவபெருமானை மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் போற்றுவார். இதில் இருந்து சிவபெருமானுக்கு ஐந்து நிறங்கள் இருப்பதாக உணர்கிறோம். கயிலாய மலையில் சிவபெருமான் பனிவடிவமாகக் காட்சி அளிக்கும் பொழுது வெள்ளை நிறம். சிதம்பரத்தில் நடராஜர் உருவில் மாணிக்க நிறத்தில் காட்சி அளிக்கும் சிவபெரு

மான் சிவப்பு நிறம். எல்லாக் கோயில்களிலும் கருங்கல் உருவில் காட்சி அளிக்கையில் அவன் கருநிறம். திருஈங் கோய் மலையில் மரகதாசல ஈஸ்வரனாகக் காட்சி தருவ தால் பச்சை நிறம். ஐந்தாவது நிறமாக அவன் எங்கே காட்சி தருகிறான் என்பது சிந்திக்க வேண்டிய இடமாகும்.

திருஈங்கோய்மலையில் தலவிருட்சம் புளியமரம் ஆகும். இக்கோயிலில் நெடுநேரம் இருந்து ஆசைதீர வழிபட்டோம்.

மாலையில் 4-45 மணிக்குப் புறப்பட்டு மணமேடு ஊருக்குள் நுழையும் பொழுது, மாலையில் எங்களுக்காக நான்கு மணி முதல் காத்திருந்த அன்பர்கள் நாங்கள் வரும் நேரம் பார்த்து ஏதோ வேலையாக ஐந்து நிமிடம் வெளியேறி இருந்தார்கள். அந்தச் சமயத்தில் நாங்கள் ஊருக்குள் நுழைந்து பெருஞ்சாலை வழியே பயணம் செய்யலானோம். வேறு வேலையாகப்போன அன்பர் கள் பிறகு நாங்கள் சாலையினைக் கடந்து சென்ற செய்தி அறிந்து சைக்கிளில் விரைந்து வந்து எங்களை வழியில் நிறுத்தி, மீண்டும் பழைய எல்லைக்கு வந்து அங்குள்ள பழம், பால் அருந்திச் செல்ல வேண்டும் என எங்களை மன்றாடி வேண்டினர். அதற்கு அடியேன், "ஓரிடத்தைக் கடந்து விட்டால் பிறகு பின்னேறக் கூடாது. ஆகவே தயவு செய்து எங்களை மன்னியுங்கள். நாங்கள் உங்களது உபசரிப்பை ஏற்றுக் கொண்டதாகக் கருதிக் கொள்ளுங்கள்" என்று குகனின் தேனையும், மீனையும் இராமன் ஏற்றுக் கொண்டதான நிகழ்ச்சியை உவமைப்படுத்தி நினைவு படுத்தினேன்.

அதற்கு அவர்கள், "அப்படியானால் நீங்கள் மெதுவாக முன்னேறிச் செல்லுங்கள். ஊரின் மறு எல்லையில் சித்தி விநாயகர் கோயில் இருக்கிறது. அங்கு

நயவு செய்து தங்குங்கள். எல்லாப் பொருள்களையும் சைக்கிளில் அங்கு விரைந்து கொண்டு வருகிறோம். நீங்கள் அவற்றை அருள் கூர்ந்து உண்ட பின் செல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டனர். அதற்குச் "சரி'' என்று இசைவு கூறினோம். அவ்வாறே ஊரின் மறு எல்லையில் உள்ள சித்தி விநாயகர் கோவிலில் தங்கினோம். அப்பொழுதுதான் எனக்கு ஒரு பேருண்மை புலப்பட்டது, ஒவ்வொரு ஊரிலும் சாலையின் இரு எல்லையிலும் ஏன் கோவில்கள் கட்டியிருக்கிறார்கள் என்று நினைத்தேன். யாராவது மகான்கள் தற்செயலாக ஊர்வழியே சென்றால், முதல் எல்லையில் அவர்களைத் தவறவிட்டு விட்டாலும், மறு எல்லையில் அவர்களை மன்றாடி நிறுத்திக் கோயில் வாசலில் உபசரிக்கலாம் என்ற எண்ணத்தில்தான் ஊரின் இரண்டு எல்லையிலும் கோயில்கள் கட்டியிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டேன்.

மணமேடு சித்தி விநாயகர் கோயிலில் (இக் கோயில் இருக்கும் இடத்தைக் கோடியாம்பாளையம் என்று அழைக்கின்றனர்) சிவநேசச்செல்வர்கள் திரு. வை. முத்துலிங்கம், திரு. மாத்தரை செட்டியார் ஆகியோர் எங்கட்குப் பழம், பால் முதலியன வழங்கி எங்களிடம் ஆசி பெற்றனர்.

திருஈங்கோய்மலையில் இருந்து 5 மைல் தொலைவில் உள்ள **தொட்டியம்** என்ற ஊருக்கு இரவு 8 மணிக்குச் சென்றடைந்தோம். காவிரிக் கரையில் இருப்பதனால் இவ்வூர் நிலவளம், நீர்வளம் உடையதாக இருக்கிறது. இவ்வூர் அன்பர்கள் எங்களை எல்லையிலேயே வரவேற்று, அனலாடீஸ்வரர் கோயிலுக்கு அழைத்துச் சென்று அற்புதமான தரிசனம் செய்து வைத்தனர்.

காரைக்குடி மெய்யன்பர் திரு. எம். பழநியப்பன் அவர்கள் எங்கட்கு ரொட்டி வழங்கினார்கள். தொட்டியம் அருட்செல்வர்காலஞ்சென்ற திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்களின் மனைவியார் திருமதி கருணாம்பாள் அவர்களும், சற்புத்திரர்கள் திரு. இராமச்சந்திரன், திரு பாலசுந்தரம் அவர்களும் எங்களை அவர்களது இல்லத்திற்கு அழைத்து சென்று சிவனடியார்களுக்கு வழங்குவது போன்ற மரியாதைகளை வழங்கி அமுது படைத்து, இரவில் அவர்கள் இல்லத்தில் தங்க வசதி செய்து தந்தனர். தொட்டியம் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் அன்பர் திரு. பி. கணபதி எங்கட்குச் செய்த பணி விடைகளை எங்களால் மறக்க இயலாது. இது போன்ற ஆதரவுகள், உபசாரங்கள், வரவேற்புக்கள் எங்களை மெய் மறக்கச்செய்து, எங்களது யாத்திரையில் உள்ள தன்னம்பிக்கையினை மிகுதிப்படுத்தின.

28. பதினைந்தாம் நாள்

(வலையப்பட்டி-நல்லூர்ப் பண்ணை)

பதினைந்தாம் நாள் (3.3.1983 வியாழன்) காலை 3½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். பாதை வறண்டு கிடந்தது. வெயில் மிகக் கொடுமையாக அடித்தது. வழியில் குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை. தண்ணீர்ப் பஞ்சம் நிலவியது. வழியில் வெங்காயம் நிறைய விளைந்திருக்கக் கண்டோம். 12 மைல் நடந்து காலை 10 மணிக்கு வலையப்பட்டி என்ற சிற்றூருக்குச் சென்று சேர்ந்தோம். அங்குள்ள செல்லாண்டி அம்மன் கோயிலில் தங்கினோம். அது ஊரின் முன்புறத்திலேயே இருந்தது. ஆகவே சந்தடி இல்லாத இடத்தில் உடலைக் கிடத்தினோம். அந்த இடத்தில் எங்களுக்கு உண்ண எதுவும் கிடைக்கவில்லை. பசியால் வாடிக் கிடந்தோம். அப்பொழுது கிரனூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் திரு. சாமிநாதன் (தேவகோட்டை) ஒரு பெரிய சட்டி நிறையச் சப்பாத்தி கொண்டு வந்து தந்து எங்கள் பசியினை ஆற்றினார். அப்பொழுது சப்பாத்தி எங்களுக்குத் தேவாமிர்தமாக இருந்தது. இந்த அன்பர் தான் கிரனூரில் எங்களை வரவேற்று உபசரித்தவர்.

மாலையில் நாங்கள் புறப்பட்டு நாமக்கல் போவதாகத் திட்டம். புறப்பட நாங்கள் தயாராகிக் கொண்டிருந்தபோது நல்லூரில் உள்ள "செட்டியார் பண்ணை" என்ற அருமையான தென்னந்தோப்பின் உரிமையாளர் திரு. **சித. பழநியப்ப செட்டியார்** (தேவகோட்டை) அவர்களின் ஆள் எங்களை அடைந்து, நல்லூர்ப் பண்ணைக்கு வந்து உணவுண்டு செல்ல வேண்டுமென

அழைத்தார். அவர்களின் அழைப்பினை மறுக்கமுடியாமல் ஏற்றுக் கொண்டோம். 'ஆனால் அங்கு வந்து அரைமணி நேரம் மட்டுமே தங்கிச் செல்ல முடியும் என்று கூறினேன். அன்று இரவு முழுதும் நாங்கள் அங்கு தங்க வேண்டும் என்பது அவர்களது விருப்பம். அவர்கள் ஆண்டுதோறும் பழநிக்கும், சபரிமலைக்கும் பாதயாத்திரை செய்யும் பக்தர் ஆவார்கள்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டு 4 மைல் நடந்து நல்லூர்ப் பண்ணைக்குச் சென்றடைந்தோம். அங்கு தேவகோட்டையைச் சேர்ந்த கவிஞர் திரு. வி. பழநியப்பன், திரு. எம். பாலசுந்தரம் ஆகியோரும், பண்ணை உரிமையாளர் திரு. பழநியப்ப செட்டியார் அவர்களும், அவகளது மனைவி மக்களும் எங்களை மிக அன்போடு வரவேற்று உபசரித்தனர். பண்ணையில் இருந்த ஏராளமான இளநீர்களை வெட்டி முதலில் எங்களுக்கு வேண்டிய மட்டும் வழங்கினர். அதில் எங்களது வேகம் தணிந்தது. பிறகு அருமையான சிற்றுண்டி, பால், பழம் உண்டோம். அரைமணிக்குப் பதிலாக ஒருமணி நேரம் கழிந்தது. நாமக்கல்லுக்குப் புறப்படுவதற்கு நேரமாகி விட்டது என்று கடிகாரத்தைப் பார்த்தேன். உடனே, திரு. வள்ளியப்ப செட்டியார் அவர்களும், மற்ற அன்பர்களும் ''இரவு தங்கி உணவு உண்டு மறுநாட் காலையில் நாமக்கல் போகலாம்'' என்றார்கள்.

''இப்பொழுது நாம் உண்ட உணவே இரவுக்குப் போதும். நம் திட்டத்தை இதுவரை மாற்றியதில்லை. ஆகவே அருள் கூர்ந்து எங்களைப் போக அனுமதியுங்கள்'' என்றேன்.

அதற்கு அவர், ''காசிக்கு நடப்பது சாதாரணக் காரியம் அன்று. நான் பழநிக்கும், சபரிக்கும் ஆண்டுதோறும் நடப்பவன். ஆகவே உங்கள் பாதயாத்திரையின் அருமையைப் பரிபூரணமாக அறிந்தவன். என்

பண்ணையில் ஓர் இரவு தங்கி, உணவு உண்டு, நீங்கள் ஆசிர்வதிக்க வேண்டும்'' என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்கள். எங்கள் குழுவினர்களும் அப்பொழுது அங்கே தங்கிச் செல்வதே சிறந்தது என்று கருதினார்கள். அன்று முழுதும் வெயிலில் அடிபட்டு, பசியில் களைத் திருந்ததால், அப்படி ஒரு பண்ணையில் ஓய்வும், நல்ல உணவும் தேவைப்பட்டது. என்றாலும், ''இன்று விடுபடும் மீதி மைலையும் நாளை சேர்த்து நடப்பதாக இருந்தால் தங்கலாம்'' என்றேன். அதற்கு எல்லோரும் இசைந்தனர். அதன்படி முதன் முறையாக எங்கள் பயணத் திட்டத்தில் (Programme) ஒரு சிறு மாறுதல் செய்து நாமக்கல்லுக்குப் பதிலாக நல்லூர்ப் பண்ணை யில் இரவு தங்க இசைந்தேன். சாதாரணமாக எந்த ஒரு திட்டத்தையும் மாற்ற நான் இசைபவன் இல்லை. என்றாலும் ''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்'' என்பது சத்திய வாக்கு ஆகும். சந்தர்ப்பங்களைச் சந்திக் கும்போது ரசிப்பதைத் தவிர வேறுவழி இல்லை அல்லவா?

நல்லூர்ப் பண்ணையில் அன்று இரவு அருமை யான உணவு உண்டோம். அருமையாக உறங்கினோம் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

29. பதினாறாம் நாள்

(நாமக்கல் — மூணு சாவடி)

காலை 6½ மணிக்குப் புறப்பட்டு 4 மைல் நடந்து குறுக்குப் பாதை வழியாக நாமக்கல்லுக்கு 8½ மணிக்கு வந்து சேர்ந்தோம்.

நாமக்கல் மலையடிவாரத்தில் உள்ள நரசிம்ம சுவாமி —நாமகிரித் தாயார் கோயிலில் வழிபாடு செய்தோம். இது மிகமிகப் பழைமையான கோயில். இக் கோயிலுக்கு எதிரில் மிக உயரமான ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. இது போன்ற ஒரு பெரிய விக்கிரகத்தை நாகர் கோவில் அருகில் உள்ள சுசீந்திரம் தாணுமாலயன் கோவிலில் காணலாம். நாமக்கல் ஆஞ்சநேயரையும் வழிபட்டோம். அப்பொழுது அங்கிருந்த சில பக்தர்கள் எங்களது பயண விபரத்தைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்து, "இதுதான் உண்மையான ராமர் யாத்திரை'' என்றனர். ஆம். அவர்கள் வாக்கு உண்மையானதாகவே எனக்குத் தோன்றியது. இராமபிரான் வந்த வழியும் நாங்கள் செல்லும் வழியும் ஒரே பாதையாக இருக்கலாம் தானே! ஆஞ்சநேயர் சந்நிதியில் கிடைத்த வாக்கு எனக்குச் சத்தியவாக்காகவே தோன்றியது.

தேவகோட்டைச் சத்திரத்தார் வீட்டைச் சேர்ந்த திரு. **லெட்சுமணன் செட்டியார்** இல்லத்தில் எங்கட்குக் காலை உணவும், மதிய விருந்தும் வழங்கப் பெற்றன. இந்த அன்பர் நூறு ஆண்டுகட்கு முன்பு சத்திரம் கட்டி அன்னதானம் பெருமளவில் செய்த

சத்திரம் சோமசுந்தரம் செட்டியாரின் பேரன் ஆவார். சத்திரம் கட்டிப் பெருந்தொண்டு செய்ததால் இக் குடும்பத்தினர் வீட்டுக்குச் ''சத்திரத்தார் வீடு'' என்ற பெயர் நெடுங்காலமாக அமைந்தது.

நாமக்கல் சரித்திரப் புகழ் மிக்க சிறு நகராகும். இங்குள்ள மலைமீது உள்ள கோட்டை திப்பு சுல்தான் கட்டியதாகும். இங்கு பழங்காலத்தில் போர்கள் எல்லாம் நடைபெற்றுள்ளன. இப்பொழுது நாமக்கல் ஒரு தொழில் நகரமாக வளர்ந்து வருகிறது. இங்கு ஏராளமான லாரிகள் உள்ளன. லாரிகளின் எண்ணிக்கை பதினாயிரக் கணக்கில் இருக்கலாம். தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் ஏராளமான பொருள்களை வட நாட்டுக்கு அனுப்ப நாமக்கல் லாரிகளையும், லாரி ஓட்டிகளையும் தான் நம் தொழில் அதிபர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். சிவகாசித் தீப்பெட்டி, பவானி ஜமுக்காளம்,மதுரைத் துணி முதலிய எந்தப் பொருளாக இருந்தாலும் நாமக்கல் லாரிகளில்தான் வடநாட்டுக்குப் போகின்றன. இவ்வூரில் உள்ள லாரி ஓட்டிகளுக்கு வடநாட்டுப் பாதை அத்துபடி.

இவ்வூரில் சில லாரி ஓட்டிகளைச் சந்தித்து எங்கள் பயணம் பற்றிச் சொன்னோம். அவர்கள் எங்களுக்குக் கூறிய அறிவுரை வருமாறு : ''பயப்பட வேண்டாம். மத்தியப் பிரதேசத்தில் மலையிலும் காட்டி லும் விலங்குகள் உண்டு. இருட்டு முன் நல்ல இடத்தில் தங்கி விடுங்கள். காலையில் விடிந்த பிறகு நடக்கத் தொடங்குங்கள். இருட்டில் புலி முதலியன நடமாடும். ஆகவே எங்கும் எச்சரிக்கையாக இருங்கள். காட்டுப் பகுதிகளில் சீக்கிய சர்தார்களின் டீக்கடைகள் இருக்கும். சர்தார்கள் மிகவும் யோக்கியமானவர்கள். எனவே அவர்கள் கடையில் சாப்பிட்டுவிட்டு, அவர்களிடம் சொல்லிவிட்டு அங்குள்ள கடை முன்பு படுங்கள்.

உங்களுக்குப் பயமே வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்துவந்தாலும் சர்தார்தன் உயிரைக்கொடுத்து அதைத் தடுப்பார். இதை நீங்கள் நம்பலாம்.'' என்று எங்களுக்கு நல்ல அறிவுரை சொன்னார்கள்.

மேலும், ''நாமக்கல் லாரிகள் அடிக்கடி வரும். அவர்களை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டால் அவர்கள் மூலம் ஊருக்கு நீங்கள் செய்தி சொல்லி விடலாம்'' என்றார்கள். லெட்சுமணன் செட்டியார் அவர்கள் எங்களுக்குப் பாலமாக இருக்க இசைந்தார்கள். எனவே மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசக் காட்டுப் பகுதிகளில் நாங்கள் நடந்த பொழுது நாமக்கல் லாரிகளை நாங்கள் அடையாளம் தெரிந்து செய்தி எழுதி திரு. லெட்சுமணன் செட்டியார் அவர் களுக்குக் கடிதம் அனுப்பினோம். அவர்களும் மீண்டும் திரும்பிவரும் லாரிமூலம் எங்ளுக்குச் செய்தி அனுப்பினார் கள். எந்த லாரி ஓட்டியும் ஒருவாரத்தில் வடக்கே சென்று மறுவாரத்தில் தெற்கே திரும்பி வந்து, மீண்டும் மூன்றாவது வாரத்தில் வடக்கே வரமுடியும். இவ் வாய்ப்பு நாமக்கல் லாரிகளுக்கு மட்டுமே உரியது. எனவே நாமக்கல் லாரி ஓட்டிகள் பலபேர் எங்களுக்கு வழித் துணையாகவும், உயிர் நட்பாகவும் அமைந்ததில் வியப்பில்லை.

நாமக்கல்லில் இருந்து மாலை 4 மணிக்குப் புறப் பட்டு 15 மைல் தொடர்ந்து நடந்து இரவு 11 மணிக்கு மூணு சாவடி என்ற சிற்றூர்க்குச் சென்றோம். அங்கு சேலம் பாங்க் ஆப் மதுரை நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அண. சோமசுந்தரம், எம். மீனாட்சிசுந்தரம், எஸ். சுப்பய்யா, சேலம் இந்தியன் வங்கியைச் சேர்ந்த ஆர். சோமசுந்தரம் ஆகியோர் முன்கூட்டியே வந்து எங்களுக்காக ''அரசாங்கப் பயணிகள் மாளிகையை'' ஏற்பாடு செய்து வைத்திருந்தனர். அங்கு எங்கட்கு உணவும் வழங்கினர். உண்டு இரவு 11 மணிக்கு மேல் உறங்கினோம். காலையில் 3 மணிக்குப் புறப்படத் திட்டமிட்டோம். அப்படிப் புறப்பட்டால்தான் காலை 10 மணிக்குச் சேலம் சென்று அங்கு காத்திருக்கும் மாபெரும் வரவேற்பை ஏற்க முடியும்.

30. பதினேழாம் நாள்-சேலம்

எங்கள் பயணத்தில் பதினேழாம் நாள் (5-3-83) ஒரு முக்கியமான நாள். ஏனெனில் சேலத்தில் நகரத்தார் சங்கம், நகரத்தார் இளைஞர் சங்கம், பாங்க் ஆப் மதுரை நிறுவனம் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மாபெரும் வரவேற்பு ஏற்பாடுகள் செய்து எங்கட்கு முன் கூட்டியே தெரிவித்திருந்தனர். எங்களை அங்கு 10 மணிக் குள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகச் சொல்லி அனுப்பி இருந்தனர். எனவே காலை 3 மணிக்குப் பயணம் புறப் பட்டோம். இவ்வளவு விடிகாலையில் நாங்கள் இதுவரை பயணம் புறப்பட்டதில்லை. முதல் நாளும் 11 மணிக்கு மேல்தான் உறங்கச் சென்றோம். 3 மணி நேரம்தான் தூங்க முடிந்தது. கண்கள் கெஞ்சின; கால்கள் கொஞ்சின. என்றாலும் திட்டமிட்டபடி சேலம் செல்லும் ஆவலால் அனைவரும் 3 மணிக்கே ஆர்வமுடன் நடக்கத் தொடங் கினோம்.

நாமக்கல்லில் இருந்து N. H. 7. (தேசீய நெடுஞ் சாலை எண் ஏழு) காசிக்குச் செல்கிறது. இச்சாலை கன்னியாகுமரியில் இருந்து காசிக்குச் செல்வதாகும். இதனை நாங்கள் நாமக்கல்லில் அடைந்தோம். இனி எங்கட்கு ஒரு கவலையும் இல்லை. நல்ல அகலமான சாலை, பழுதில்லாத சாலை. சாலையின் வலது புறத்தில் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ஒரு கல். அதில் வெள்ளை வண்ணம் அடித்து, உச்சியில் மஞ்சள் வண் ணம் அடித்து அதில் 7 என்று எழுதி இருப்பார்கள். அந்த ஏழு என்ற எண்ணைப் பார்த்துக்கொண்டே நடக்க வேண்டியதுதான்.

நாங்கள் புறப்படும் பொழுது சைக்கிள் ரிக்ஷா வில் உள்ள சுவாமிகள் படம், வேலாயுதம், மணல், தீர்த்தக் குடம் எல்லாவற்றுக்கும் தீபம் காட்டுவோம். பிறகு எங்கள் குருநாதர் திரு. சிதம்பரம் செட்டியார் எங்கட்கு விபூதி வழங்குவார். அதன்பின் அடியேன் ''அரோஹரா'' என்று சொல்வேன். உடனே எல்லோ ரும் ''அரோஹரா'' என்று சொல்வர். சொன்னதும் சைக்கிள் ரிக்ஷா முதலில் புறப்படும். N. H. 7 என்று எழுதி உள்ள கல் அருகில் 2கல்லுக்கு ஒருமுறை சைக்கிள் ரிக்ஷா நிற்கவேண்டும். சுமார் அரைமணி நேரத்தில் அந்த இடத்தை நாங்கள் அடைவோம். அடைந்ததும் சைச்கிள் ரிக்ஷா புறப்படலாம் என்பேன். உடனே அது புறப்படும். மருந்து, தண்ணீர், உணவு, மற்றும் ஏதாவது தேவை இருந்தால் அப்பொழுது சைக்கிள் ரிக்ஷாவில் இருந்து எடுத்துக் கொள்வோம். எங்காவது அது பழுதானால் அதனை சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் திரு. அடைக்கப்பன் கவனித்து ஓட்டி வரவேண்டும். உதவி தேவையானால் நாங்கள் தேவையான உதவி களைச் செய்வோம்.

காலை 3 மணிக்குப் பயணம் புறப்பட்ட நாங் கள் நெடுநேரம் அயராமல் நடந்து கொண்டிருந்தோம். அப்பொழுது வழியில் ஓரிடத்தில் நல்லூர்ப் பண்ணை திரு. வள்ளியப்ப செட்டியாரின் கார் எங்களை நோக்கி வருவதைக் கண்டோம். அதன்பிறகு எங்கள் கால்கள் நடக்கவில்லை. திரு. வள்ளியப்ப செட்டியார் அவர்களும் அவர்களது மனைவி, மகள், மகன், மருமகள், தோட்டக் காரர் எல்லோரும் காரில் பலகாரம் கொண்டு வந்து எங்களுக்குத் தந்தனர். நல்ல பசியினால் சட்டி சட்டி யாக இருந்த பலகாரங்களைச் சில நிமிடங்களில் தின்று தீர்த்தோம்.

நின்றும், இருந்தும், நடந்தும் 17 மைல்களைக் கடத்தி காலை 11 மணி அளவில் சேலம் வந்து சேர்ந்

தோம். கடுமையான வெயில் அடித்துக் கொண்டிருந்தது. நாங்கள் களைத்தோம் என்பதைவிட எங்களை வர வேற்கக் காத்திருந்தவர்கள் மிகவும் களைத்துப் போய் இருந்தார்கள். சேலத்தில் நாங்கள் நுழையும் இடத்தில் ''சேலம் நகரத்தார் சங்க''ச் சார்பில் நெற்குப்பை திரு. **டி சிதம்பரம் செட்டியார்** அவர்கள், மேலைச்சிவபுரி திரு. **இராம பழநியப்பன்,** பள்ளத்தூர் திரு. **எம். எஸ். ஓ. சொக்கலிங்கம்,** கண்டனூர் திரு. இராம-தண்ணீர் மலை,தேவகோட்டை திரு.என். பஞ்ச நதம்; காரைக்குடிக் கவிஞர் திரு, ஏ. நாராயணன் மற்றும் பலர் வரவேற்றனர். திரு. டி. சிதம்பரம் செட்டி யார் அவர்கள் பழம் வழங்கினார்கள். ''வள்ளிக்கண்ணு அண்கோ'' சார்பில் ரொட்டை டின் வழங்கப் பெற்றது. தேவகோட்டை திரு. **கா. லெட்சுமணன்** அவர்கள் ரொட்டி வழங்கினார்கள்.

கொஞ்ச தூரத்தில் நகரத்தார் இளைஞர் சங்கத் தின்சார்பில் அதன் தலைவர் திரு. **எம். ஏ. எம். சுப்பு** எங்கள் அனைவருக்கும் மாலை சூட்டி வரவேற்றார். திரு. வி. எல் இராமநாதன் அவர்கள் பாதாம் கீரும், கண்ட னூர் திரு. எல். ஆர். எம். முத்து அவர்கள் திராட்சைப் பழமும் வழங்கி உதவினர். ஏராளமான மக்கள் திரண்டி ருந்து எங்களை வரவேற்று நகர் நடுவே உள்ள ஸ்ரீசங்கரர் மடத்துக்கு அழைத்துச் சென்று தங்க வைத்தனர். அங்கு நாங்கள் நண்பகல் 12½ மணிக்குச் சென்று சேர்ந்தோம்.

சங்கரமடம் ஓர் அற்புதமான இடமாகும். அங்குள்ள நிர்வாகிகள் நல்ல பக்தியும், கல்வித் தேர்ச்சி யும் உடையவர்கள். எங்களை மிக அன்பாக வர வேற்றுப் பாராட்டி ஆசி கூறி அங்குள்ள ஸ்ரீசாரதா அம்பிக்கை கோவிலில் வழிபாடு செய்ய வசதி செய்து கொடுத்தார்கள்.

நாமக்கல் திரு. பழநியப்பன், தேவகோட்டை திரு. பாலசுந்தரம். சேலம் பாங்க் ஆப் மதுரை அன்பர்கள் எங்கட்கு மதிய உணவு வழங்கினர். சேலத்தில் நாங்கள் மட்டும் சாப்பிடவில்லை. ஒவ்வொரு வேளையும் பெரியநகரவிருந்தே நடைபெற்றது.

திரு. கே. ஆர். எஸ். சுப்பய்யா, திரு. எஸ். பி. சம்பந்தம் செட்டியார், திரு. பி. எம். சுந்தரம், திரு. வி. கருப்பன் செட்டியார் ஆகியோர் ரொட்டி, ஆப்பிள் வழங்கினர். மாலையில் பாங்க் ஆப் மதுரை நிறுவனத்தினர் [சிற்றுண்டி வழங்கினர். நேமத்தான்பட்டி திரு. ஏ. **ஆர். சுப்பிரமணியன்** அவர்களும், அவரதுமனைவியும் எங்கள் உயோகத்துக்காக ஒரு ஸ்டவ் அடுப்புத் தந்தனர்.

சேலம் வித்தியாமந்திர் மேல்நிலைப்பள்ளி முதல்வர் திரு. **உ. சிவராமன்** அவர்களும், அவர்களது மனைவியும் எங்களைச் சந்தித்து அன்போடு இனிய "'திராட்சைப் பழம்'' கையுறையாகக் கொடுத்தனர்-

எங்களது பயணத்திட்ட நிகழ்ச்சிநிரல் (Programme) நாங்கள் அச்சிட்டிருந்தது தீர்ந்து போய் விட்டதால், அதனை யாராவது அச்சிட்டுத் தரலாம் என்று சொல்லி இருந்தேன். திருத்தணிப் பாதயாத்திரைக் குழுப் பொருளாளர் திரு. **எம். எஸ். வி. சேவுகன்** (காரைக்குடி) அவர்கள் அதனைச் சென்னையில் அச்சிட்டு என் தம்பிகள் திரு. **எம். ஆர். எம். ஆண்டான் செட்டி, எம். ஆர். எம். இராசகோபால்** மூலம் அனுப்பி இருந்தார். அந்நிகழ்ச்சிநிரல் சேலத்தில் எல்லோருக்கும் வினியோகிக்கப்பட்டது. எங்களது காசிப்பயணம் பற்றிய இந்தி அறிக்கையினை எங்கள் குழுவில் ஒருவராகிய திரு. திருநாவுக்கரசு செட்டியாரின் மகன் திரு. **மாணிக்கம்** அச்சிட்டு வழங்கினார்.

மதியம் 12½ மணிக்குச் சென்று ஸ்ரீ சங்கர மடத்தில் உட்கார்ந்து அன்பர்களோடு பேசத்தொடங்கிய நான் மணிக்கணக்கில் அசையாமல் உட்கார்ந்திருந்து அனைவருடனும் பேசிக்கொண்டும், திருநீறு கொடுத்துக் கொண்டும், அவர்கள் தரும் பொருள்களையும் ரொக்கத்தையும் பெற்று எங்கள் குழுவினரிடம் ஒப்படைத்துக் கொண்டும் இருந்தேன்.

சேலத்தில் நாங்கள் ஒரு முக்கிய காரியம் செய்ய வேண்டி இருந்தது. அது என்னவென்றால் இன்னும் சிறிது தொலைவில் மலை ஏற்றம் வருகிறது. அதன்பின் மலைப்பகுதிகள் மிகுதி. இனிமேல் சைக்கிள் ரிக்ஷாவைக் காலால் ஓட்டிச் செல்ல முடியாது. எனவே அதற்கு எந்திரம் (மோட்டார்) பூட்டவேண்டும். அதற்குரிய செலவில் ஒரு பகுதியினைத் தேவகோட்டை அன்பர்களும் காரைக்குடி பாங்க் ஆப் மதுரை அன்பர்களும் தந்திருந்தனர். இன்னும் ஒரு பகுதித்தொகை தேவைப்பட்டது. அதனைச் சேலம் அன்பர்களின் நன்கொடை வேகம் தந்து கொண்டிருந்தது. எனவே சேலத்தில் எந்திரம் பூட்டும் பொறுப்பினைச் சேலத்தில் நுழைந்த உடனேயே, அங்குள்ள அரசினர்பொறியியற் கல்லூரியில் பணியாற்றும் **பேராசிரியர்** திரு. **லெட்சுமணன்** (தேவகோட்டை) அவர்களிடத்தில் ஒப்படைத்திருந்தேன். அவர் உடனே அதுபற்றிய கொட்டேஷன் வாங்கி வந்து என் அருகில் பிற்பகல் சுமார் 1 மணி அளவில் உட்கார்ந்திருக்கிறார். என் ஒப்புதல் பெற்று எந்திரம் பொருத்தும் பணியை மேற்கொள்ள அவர் முனைய வேண்டும். என்னோடு சுமார் 10 நிமிடம் பேசினால் முடிவு எடுக்க முடியும். ஆனால் இரண்டு மணிநேரம் அவர் என்அருகில் காத்திருந்தும் அந்தப் பத்துநிமிடம் அவருக்குக்கிடைக்கவில்லை. என்னோடு பேச அவர் முனையும் பொழுதெல்லாம் சேலத்தின் பிரமுகர் யாராவது அடுத்தடுத்து வந்து என்னோடு பேசியதால் அவர் தன்னை அமைதிப்

படுத்திக்கொண்டார். பிறகு மாலை 3 மணிக்கு என்னோடு அவர் பேசிய பொழுது அதனைக் குறிப்பிட்டார். நூற்றுக்கணக்கான பேரை நான் இருந்த இடத்தில் இருந்து அசையாமல் சந்தித்து ஆவன செய்த பாங்கினை அவர் மிகவும் போற்றினார். எல்லாம் இறைவன் கொடுத்த வரம்!

பிறகு எந்திரம் பொருத்த வேண்டிய தொகையினைப் பேராசிரியர் திரு. லெட்சுமணன் அவர்களிடம் கொடுத்து அந்தப் பெரும் பொறுப்பினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டேன். மேலும் எந்திரம் பொருத்தியதும், ரிக்ஷா ஓட்டும் அடைக்கப்பனுக்கு எந்திர ரிக்ஷா ஓட்டும் பயிற்சியும் கொடுத்து, அவன் எத்தனை நாள் பயிற்சிக்கு எடுத்துக் கொண்டாலும் அத்தனை நாள் அனுமதித்து, நல்ல நபர் மூலம் பயிற்சி கொடுத்து, அவனைத் திறமையான "மோட்டார் ரிக்ஷா" ஓட்டுநர் ஆக்கி எங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்படி கேட்டுக் கொண்டேன். அப்பெரும் பொறுப்பினை அவர் மிக அருமையாக நிறைவேற்றிக் கொடுத்தார். நல்ல மோட்டார் எந்திரம் பொருத்தி, அடைக்கப்பனுக்கு நல்ல ஓட்டுநரைக் கொண்டு அவர்களது பொறியியற் கல்லூரிப் பெரிய மைதானத்தில் தக்க பயிற்சி கொடுத்து, மூன்றே நாளில் அவனை நல்லதொரு ஓட்டுநராக ஆக்கி, அவனே மோட்டார் ரிக்ஷாவை ஓட்டி வரும்படி செய்தார். எண்ணி மூன்றாவது நாள் எங்களது மோட்டார் ரிக்ஷாவை அவன் திறம்பட ஓட்டி வந்த காட்சியை நாங்கள் கண்டபொழுது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சேலத்திற்கு என் மனைவியும், மகள் பொன்முடியும், மாப்பிள்ளை இராமசாமியும், பேரன் சுவாதிக் என்ற சோலையப்பனும், என் இளையமகள் மங்கையர்க்கரசி மீனாட்சியும் காரைக்குடியில் இருந்து வந்திருந்தனர்.

தேவகோட்டையில் இருந்து ''திருத்தொண்டர்'' வயிரவன், ''இசைத்தொண்டர்'' காசிநாதன் ஆகியோரும் வந்திருந்தனர். சென்னையில் இருந்து என் தம்பிகள் எம். ஆர். எம். ஆண்டான் செட்டியும், அவன் மனைவி மக்களும், எம். ஆர். எம். இராசகோபாலும், அவன் மனைவி மக்களும், மற்றும் பல அன்பர்களும், எங்கள் குழுவினைச் சேர்ந்த மற்றவர்களின் குடும்பத்தினரும் நண்பர்களுமாக நூற்றுக் கணக்கான பேர் சேலத்திற்கு வந்து முழு நாள் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டனர்.

இதுவரை நாங்சள் நடந்து வந்த வேகத்தையும், எங்கள் ஒழுங்கு, கட்டுப்பாட்டையும், காசிப் பயணத்தில் எங்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் பார்த்து மற்றவர்களுக்கும் ஒரளவு நம்பிக்கை ஏற்பட்டது.

தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் மாண்புமிகு **எம். ஜி. ஆர்.** அவர்கள் என் வேண்டுகோள் கடிதம் கிடைத்ததும், ஐ. ஜி. க்கு ஆணையிட்டு, எங்களுக்குத் தமிழகத்தில் இரகசியப் பாதுகாப்பு வழங்கச் சொல்லி இருக்கிறார். அதனைக் காரைக்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் எங்கள் வீட்டுத் தொலைபேசி மூலம் அழைத்து என் மகள் பொன்முடியிடம் ஒரு நாள் சொல்லி இருக்கிறார். மேலும் ஏதாவது ஆபத்து என்றோ, தேவை என்றோ எங்களிடம் இருந்து கடிதம் வந்தால் அதனை உடனே போலீசுக்குத் தெரிவிக்கும்படியும், இது எம். ஜி. ஆரின் ஐ. ஜி. சிறப்பு ஆணை என்றும் கூறி இருக்கிறார். இது எங்கட்குப் பிறகு தான் தெரிய வந்தது. ஆனால் சில இடங்களில் போலீஸ் அதிகாரிகள் எங்களைத் தற்செயலாகச் சந்தித்துப் பேசியதைக் கண்டோம். அந்த நிகழ்ச்சிகள் இரகசியப் பாதுகாப்பின் அங்கமாக இருந்திருக்கலாம் என்று பிறகு உணர்ந்தோம்.

சேலத்தில் இரவு உணவு நகரத்தார் இளைஞர் சங்கத்தினரால் வழங்கப் பெற்றது. இவர்களது ஏற்பாட்டினால் சங்கரமடத்தில் நாங்கள் பதின்மூன்று பேரும் சைக்கிள்ரிக்ஷாவும் பங்கு பெற்ற ஒரு புகைப்படம் எடுக்கப்பெற்றது. எங்களது சேலம் வருகை பற்றிய செய்தி பல பத்திரிகைகளில் விரிவாகப் பிரசுரம் ஆயிற்று.

சேலத்திலும் அதற்கு முன்பும், பின்பும் எங்கட்கு வேண்டிய ஏராளமான உதவிகளை ஒ.சிறுவயல் எஸ். பி. சேவியப்பன், காரைக்குடி எம். மீனாட்சி சுந்தரம், புது வயல் அழ. பழநியப்பன், தேவகோட்டை அரு. அருணாசலம், கண்டவராயன்பட்டி எஸ். சுப்பய்யா, ஒக்கூர் ஏ. ஆர். ஆதப்பன், சேலம் எம் கிருஷ்ணன், கோனாபட்டு பழ. வள்ளியப்பன் ஆகியோர் செய்ததை நாங்க மறக்க முடியாது.

எங்களுடைய பயணம் ஒரு இராமாயண யாத்திரை போன்றது. இராமரின் சேது அணை உருவாகும் பொழுது சிறு மணலை எடுத்து வந்த அணிலும் இராம காதையில் இடம்பெறுவது போல, எங்களது இராமாயண யாத்திரையில் சிறு உதவி செய்தவர்களின் பெயரைக் கூட விடாமல் தெரிவிப்பது எனது கடமை அல்லவா? இவர்களது உதவிகள் இல்லாவிட்டால் எங்கள் பயணம் வெற்றி பெற்றிருக்குமா?

31. பதினெட்டாம் நாள்

—கருப்பூர்

பாரதப்போர் பதினெட்டு நாள் நடந்தது. ஆகவே பதினெட்டாம் நாள் பயணம் நல்லவிதமாக நடைபெற வேண்டுமே என்று எண்ணினேன். காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். நேற்றுக் கடுமையான முறையில் தொடர்ந்து நடந்திருந்ததாலும், சேலத்தில் நண்பகல் கொளுத்தும் வெயிலில் ஊர்வலம் வந்ததாலும் சிங்கரமடம் வந்தது முதல் ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து அளவளாவியதாலும் பெரிதும் உடல் சோர்ந்து போயிருந்தோம். எனினும் மனம் தளராமல் நடக்கலானோம்.

சேலத்தில் ராஜவிநாயகரை வழிபட்டுக் கருப்பூர் நோக்கி முன்னேறினோம். கருப்பூரில் தான் அரசு பொறியியற் கல்லூரி உள்ளது. அங்குதான் எங்கள் அருமை நண்பர் திரு. இராம. லெட்சுமணன் பொறியியற் பேராசிரியராகப் பணி புரிகிறார். அவர் தேவகோட்டை ஊரினர். எங்களது ஒவ்வொரு பாதயாத்திரையிலும் முன்னின்று உதவி செய்பவர்.

மெதுவாக 7 மைல் நடந்து காலை 8 மணிக்குக் கருப்பூர் சென்றடைந்தோம். அங்கு பேராசிரியர் இலட்சுமணன் வீட்டில் எங்களுக்கு அருமையான வரவேற்பு வழங்கப்பெற்றது. பேராசிரியரும், அவர் மனைவியும், மகன் இராதாகிருஷ்ணனும் எங்களை எல்லையற்ற அன்போடு வரவேற்று அன்று முழுதும் விருந்தளித்தனர். நாங்கள் மிகவும் சோர்ந்திருந்ததால் அன்று அங்கேயே தங்கிவிட்டோம். தேவகோட்டை திரு. வி. எல். இராமநாதன் எங்கட்கு இரவு விருந்தளித்தார்.

32. பத்தொன்பதாம் நாள்-
(குதிரை குத்திப் பள்ளம்)

7-3-83 காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். ஓமலூர் வழியாக 8 மைல் நடந்து 7½ மணிக்குக் குதிரை குத்திப்பள்ளம் என்ற சிற்றூர்க்குச் சென்றோம். அங்கு ஒரு தென்னந்தோப்பில் தங்கினோம்.

"வெயில் நுழைபறியாக்
குயில் நுழை பொதும்பர்"

என்று சோலையினைப் பழைய புலவர்கள் வர்ணிப்பர். அப்படி வெயிலே தெரியாத ஒரு தென்னந்தோப்பில் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அத்தோப்பின் உரிமையாளர் திரு. மாரிமுத்து முதலியார் ஆவார்.

அங்கு எங்களுக்கு உரிய உணவு சேலத்தில் உள்ள அன்பர்களால் வேளா வேளைக்குக் காரில் கொண்டு வந்து தரப்பட்டது. பேராசிரியர் திரு. லெட்சுமணன் அவர்கள் காலை உணவும், திரு. கே. லெட்சுமணன், திரு. பழ. ராமநாதன் ஆகியோர் மதிய உணவும், திரு. லெட்சுமணன், திரு. சுப்பையா ஆகியோர் இரவு உணவும் வழங்கினர்.

மேட்டூர் அணைக்கட்டில் உள்ள "மேட்டூர் கெமிக்கல்ஸ்" பொது நிர்வாகி (G. M.) திரு. டி. சேஷசாயி அவர்கள் எங்கட்குச் சேலத்தில் இருந்து உணவு கொண்டு வரக் கார் உதவி செய்தார்கள். திரு. ஜெகநாதன் பலமுறை கார் ஓட்டி உதவி செய்தார். சேலம் பொறியியற் கல்லூரி மின்துறை மெக்கானிக்

திரு. பெரியசாமி எங்கள் அடைக்கப்பனுக்கு மோட்டார் ரிக்ஷா ஓட்டக் குறுகிய நாளில் திறமையான பயிற்சி அளித்தார். இத்தகு பயிற்சி அடைக்கப்பனுக்குக் கிடைத்திராவிட்டால் மோட்டார் ரிக்ஷாவை அவன் எளிதாக ஓட்டி வந்திருக்க முடியாதல்லவா?

ஒவ்வொருவரும் செய்துள்ள சேவையை - உதவியை - வரையறுத்துச் சொல்ல முடியாது. அதன் பலனையும் நிர்ணயிக்க முடியாது. இதன் விளைவை எடைபோட ஒரு திருக்குறள் வழிகாட்டுகிறது.

> ''உதவி வரைத்தன்று உதவி; உதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து''

''உதவி என்பது செய்யப்படுகிற அளவில் அன்று; செய்யப்படுகிற ஆளின் சால்பைப் பொறுத்தது'' என்பது வள்ளுவம். எனவே உதவி செய்யப்பட்ட ஆட்கள் நாங்கள். எங்கள் நோக்கம் காசிக்கு நடந்து போவது. இது ஈடேறியது என்றால் இத்தகு உதவி செய்தவர்களின் உதவியை எடைபோட முடியுமா? அளவிட முடியுமா?

நிலவுக்கு இருவர் சென்று வந்தனர். ஆனால் அவர்களின் சாதனை நிறைவேற உதவி செய்தவர்கள் எத்தனை பேர்? அதுபோன்றதுதான் எங்கள் சாதனைக்கு உதவி செய்தவர்களின் பெருமையும் என்றால் மிகையாகாது.

33. இருபதாம் நாள்
(தொப்பூர்)

காலை 5¼ மணிக்குப் புறப்பட்டுத் தீவட்டிப் பட்டி, பூசாரிப்பட்டி வழியாக 10 மைல் நடந்து காலை 10 மணிக்கு இனிதே தொப்பூர் வந்து சேர்ந்தோம். இந்த ஊர் அருகில் தொப்பையாறு நீர்த்தேக்கம் உள்ளது. தொப்பூரில் ஒரு சோதனைச் சாவடி (Check post) உள்ளது. அதன் அருகில் உள்ள பூங்காவில் தங்கினோம். இவ்வூர் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தது.

தேவகோட்டை ஆர். சோமசுந்தரம் சேலத்தில் இருந்து எங்கட்கு ரொட்டி, பன் முதலியன கொண்டு வந்து வழங்கினார்.

இரவு 8 மணி அளவில் பேராசிரியர் திரு. லெட்சுமணன் அவர்களும், அவர்கள் மனைவியும், மகனும் எங்களைப் பார்க்கக் காரில் வந்து வேண்டிய உதவிகள் செய்தனர். மேலும் எங்களது மோட்டார் ரிக்ஷாவை அடைக்கப்பன் திறமையாகக் கருப்பூரில் இருந்து ஓட்டிவர, இவர்களது கார் பின்னேவர, நல்ல விதமாக அடைக்கப்பனுக்குப் பயிற்சி கொடுத்து. சாதாரண ரிக்ஷாவை மோட்டார் ரிக்ஷா ஆக்கி, அடைக்கப்பனை மூன்றே நாளில் முதல் தர ஓட்டுநர் ஆக்கி, எங்களிடம் அழைத்து வந்து சேர்த்தனர். இது சேவைகளில் எல்லாம் மிகப் பெரிய சேவையாகும். ஏனெனில் எந்திரம் இல்லாமல் நாளை சைக்கிள்ரிக்ஷா ஓட முடியாது. அதற்குக் காரணம் நாளை மலைப் பகுதியைச் சந்திக்கப் போகிறோம் அல்லவா?

34. இருபத்தொன்றாம் நாள்

(நல்லம்பள்ளி—தருமபுரி)

காலை 5½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். இன்று எங்களுக்கு முதன் முறையாக மலை ஏறும் புதிய அனுபவம் கிடைத்தது. சுமார் 500 முதல் 800 அடி உயரம் உள்ள மலைப்பகுதி குறுக்கிட்டது. சமவெளியில் எங்கு பார்த்தாலும் அரசுக்குச் சொந்தமான சந்தனக் காடு காட்சி அளித்தது.

மலை ஏற்றத்தில் மோட்டார் ரிக்ஷா ஏற முடியாமல் திணறியது. எனவே நாங்கள் மூன்று மூன்று பேராக ரிக்ஷாவின் பின்புறம் இருந்து அதனைத் தள்ள லானோம். ரிக்ஷா ஓட்டுநர் தன் கையால் முன்புறம் அதனைப் பிடித்துத் தள்ளுவார். இப்படிப் பல மைல் தூரம் தள்ள நேர்ந்தது. சுமார் 4 மைல் தொலைவுக்கு மலைப் பிரதேசமாக இருந்தது. நாங்கள் தள்ள முடியா மல் தளர்ந்த நேரத்தில் தருமபுரி நண்பர்கள் எங்களைத் தேடி வந்து கண்டுபிடித்து, எங்களுக்கு உதவி செய்து ரிக்ஷாவைத் தள்ளினர். இல்லாவிட்டால் தொப்பூர் மலைப்பகுதியை எங்களால் கடந்திருக்கவே முடியாது. அந்த அளவுக்கு நாங்கள் களைத்துப் போயிருந்தோம். தருமபுரி நண்பர்கள் செய்த அந்த தருமத்திற்கு ஈடு இணையே கிடையாது.

10 மைல் நடந்து நல்லம்பள்ளி என்றுசிற்றூர்க்கு வந்து அங்கு சாலை ஓரத்தில் உள்ள ''தாமோதரன் அரிசி ஆலை''யில் தங்கினோம். தருமபுரியில் ''நாச் சம்மை அண் கோ'' நிறுவனத்தில் பணிபுரியும் நேமத்

தான்பட்டி சுப. திருநாவுக்கரசு அவர்களும், தேவ கோட்டை கரு. வீரப்பன் அவர்களும் எங்களுக்குத் தரும புரியில் இருந்து நல்லம்பள்ளிக்குக் காலைப் பலகாரம் கொண்டு வந்து தந்தனர். தருமபுரி பாங்க் ஆப் மதுரை நிறுவனத்தின் சார்பில் அதன் மேலாளர் திரு ஏ. கந்தப்ப னும் அங்கு பணியாற்றும் அன்பர்களும் எங்களுக்கு மதிய உணவு கொண்டு வந்து தந்து உபசரித்தனர்.

தருமபுரியில் இருந்து ஏராளமான பக்தர்கள் எங்களைப் பார்க்க நல்லம்பள்ளிக்கு வந்தனர். நாச்சியா புரம் சுப. சொக்கலிங்கம், இராமச்சந்திரபுரம் கே. சொக்கலிங்கம், கிழச்சிவல்பட்டி எம். பழநியப்பன் காரைக்குடி ஏ. ஆர். நாராயணன், கீழப்பூங்குடி எல். ஆர். எம். லெட்சுமணன், அரியக்குடி கே. பழநி யப்பன் ஆகியோர் எங்கட்கு வேண்டிய ஏராளமான உதவிகளைச் செய்தனர். வழியில் பழுதாகும் எங்களுடைய கைக்கடிகாரம், குடை, பேனா, பெல்ட்டு, முதலிய பொருள்களை உடனுக்குடன் செம்மை செய்து தருதல், எங்களது உடல்நலக்குறைவு தீரத் தேவையான மருந்துகளைத் தருதல், மஞ்சள் வேட்டி கிழிந்தால் உடனே மஞ்சள் வேட்டி வாங்கித் தருதல் முதலிய எண்ணற்ற கடமைகளை வழியில் அங்கங்கே பக்த கோடிகள் நிறைவேற்றியதை ஒரு கணமும் மறக்க முடியாது.

நல்லம்பள்ளியில் இருந்து மாலை 5 மணிக்குப் பயணமானோம். ஒரு மைல் தொலைவில் **அதியமான் கோட்டை** உள்ளது. கடையெழு வள்ளல்களில் பாரிக்குச் சமமாக எண்ணக்கூடிய வீரவள்ளல் — விவேகமிக்க வேந்தன் அதியமான் ஆவான். அவன் தகடூரைத் தலை நகராகக் கொண்டு ஒரு சிறு நிலப்பரப்பைச் சங்க காலத் தில் (2000 வருட முன்பு) ஆண்டு வந்தான். அவனது வீரத்தையும் வள்ளல் தன்மையையும் ஔவையார் மிக

அற்புதமாகப் பாடிப் பரவி இருக்கிறார். அப்பாடல்கள் புற நானூற்றில் இருக்கின்றன. தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அப்பாடல்களைப் படித்தறிய வேண்டிய கடமை உண்டு.

அதியமானுடைய வீரத்தைப் பற்றிப் பேசும் பொழுது பெருமிதப் பகட்டினை (எருது) அவனுக்கு உவமை ஆக்குவார் ஒளைவையார். கற்கள் பிளக்க, மணல் பறக்க எப்படி வழியில் உள்ள தடைகளை உடைத்துக் கொண்டு ஒரு வீரமிக்க காளைமாடு ஓடுமோ, அதுபோல எந்தப் பகையையும் சிதறடித்து முன்னேறுபவன் அதியமான் என்பார் ஒளவையார்.

"அரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ!" என்பது புறம்.

பெரிய மலைப் பிளவின் உச்சியில் உள்ள மரத்தின் கடைக் கொம்புவரை ஏறி அங்கே பழுத்திருந்த ஒரே நெல்லிக் கனியைப் பறித்து வந்து ஒளவை உண்ணக் கொடுத்தவன் அதியமான். அந்த நெல்லிக் கனியை உண்டால் சாவில்லை என்ற கருத்து அக்காலத்தில் இருந்தது. அத்தகு காலத்தில் ஏராளமான ஆபத்துக்களுக்கிடையே தானே முனைந்து ஒளவைக்கு ஆயுள் நீட்டிப்புக் கொடுக்கும் நெல்லிக் கனியைத் தந்த வள்ளல் அவன். அந்த முயற்சியில் சாவு வரும் என்று தெரிந்தும் தான் சாவை ஏற்க முன்வந்த பெருமை உடையவன் அதியமான். ஆனால் தமிழ் மூதாட்டி ஒளவைக்குச் சாகா வரம் தர நெல்லிக்கனி தர முன் வந்த பெருமை உடையவன். எனவே அவனைச் சிவபெருமானோடு ஒப்பிட்டு அவனைப் போல வாழுமாறு வாழ்த்துகிறார் ஒளவையார். தேவர்களின் சாவை நீக்கத் தான் செத்தாலும் பரவாயில்லை என்று அமிர்தத்தோடு வந்த நஞ்சைத் தான் உண்டு அமிர்தத்தைத் தேவர்களுக்குக்

கொடுத்தவன் அல்லவா சிவபெருமான்? அதுபோல் நெல்லிக்கனியைப் பறிக்கும் சாவு முயற்சியைத் தான் ஏற்று, சாவாப்பழத்தை ஔவைக்குத் தந்தவன் அதியமான்.

> "நீலமணிமிடற்று ஒருவன் போல
> மன்னுக பெரும நீயே!"

என்று அதியமானை ஔவையார் வாழ்த்துகிறார்.

"தான் நெல்லிக்கனியை உண்ண வேண்டும் என்று அதியமான் எண்ணுதல் இயல்பே. எனினும் மனித இயல்பான அந்த ஆசையை உள்ளே அடக்கிச் சாவு நீங்க எனக்கு நெல்லிக்கனியை வழங்கிய பெருந்தன்மை உடையவன் நீ" என்று ஔவையார் அதியமானைப் போற்றுகிறார். "ஆதல் நின்னகத்து அடக்கிச் சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே" என்கிறார்.

அதியமானின் வள்ளல் தன்மையைப் பற்றிப் பலபடப் பாராட்டுகிறார் ஔவையார். அதில் ஒரு கருத்து அடியேனுக்குப் பல ஆண்டுகளாகச் சரிவர விளங்காமல் இருந்தது. ஆனால் பாதயாரையில் ஈடுபட்ட இந்தப் பத்தாண்டுகளில் அதன் பொருள் தெளிவாகப் புலப்படலாயிற்று.

"அதியமான் நிறைய உணவு இருந்தால் எல்லோருக்கும் அள்ளிக் கொடுத்து அனுப்புவானாம். உணவு குறைவாக இருந்தால் பரிசலரோடு தானும் அமர்ந்து உண்டு அவர்களை அனுப்புவானாம். அத்தகு ஏழை பங்காளி அதியமான்" என்கிறார் ஔவையார்.

> "உண்டாயிற் பதம் கொடுத்து
> இல்லாயின் உடன் உண்ணும்
> இல்லோர் ஒக்கல் தலைவன்"

என்பது புறப்பாட்டு.

உணவு நிறைய உண்டானால் அள்ளிக் கொடுப்பானாம். இல்லையானால் தானும் பரிசலரோடு உண்பானாம். இது எப்படிப் பொருந்தும் என்று பத்தாண்டுகட்கு முன்பு சிந்தித்துப் பார்த்தபொழுது அர்த்தம் புரியவில்லை, சாதாரணமாக உலக வழக்கம் என்னவென்றால் உணவு சிறிதாக இருந்தால் ஆளுக்குக் கொஞ்சம் அள்ளிப் போட்டு அனுப்புவது. (கோயிலில் சுண்டல் கொடுப்பது போல) உணவு நிறைய இருந்தால் பரிசலர்களை அமர வைத்து வேண்டு மட்டும் உணவளிப்பது உலக இயல்பு. குறைவாக இருக்கும் பொழுது அமர வைத்து உணவளித்தால், பிறகு பற்றாக் குறை ஏற்படும் பொழுது சாப்பாட்டைப் பாதியிலே நிறுத்த நேரிடும். எனவே அன்னதானம் வழங்கும் எந்த இடத்திலும் உணவு குறைவாக இருந்தால், உணவுண்ண வந்திருப் போருக்கு அள்ளிப் போட்டு அனுப்புவது முறை. ஆனால் இதற்கு எதிர்மாறான முறையை அதியமான் கடைப் பிடித்திருக்கிறான். இதன் பொருத்தம் பத்தாண்டுகட்கு முன்பு புரியாதது எங்கட்குப் பிறகு புரிந்தது எப்படி? அது தான் பாதயாத்திரை எங்கட்குக் கற்பித்த பாடம்.

பாதயாத்திரை செல்லும் போது நாங்கள் 50 பேர் வருகிறோம் என்று ஓரிடத்திற்குத் தெரிவித்திருப்போம். அவர்கள் 50 பேருக்கு உணவு தயாரித்திருப்பார்கள். சில சமயம் வழியில் பலர் எங்களுடன் சேர்ந்து கொள்ள 100 பேராக அந்த இடத்திற்குச் சென்று சேர்வோம். உணவு நிறைய இருந்தால் நான் அனைவருக்கும் உணவளிக்கச் செய்து விட்டுக் கடைசியில் உண்பேன். உணவு குறைய இருந்தால் எச்சரிக்கையாக நான் முதலில் அமர்ந்து கொள்வேன். மற்ற அடியார்கள் என்னைத் தொடர்ந்து பந்தியில் அமர்வார்கள். இருக்கும் உணவை எல்லோர்க்கும் பங்கிட்டுப் பரிமாறுவர். எனக்கு வைக்கும் அளவு மற்றவர்களுக்கும் வைக்கப்படும் அதில் இருந்து மற்றவர்களும் குறிப்பறிந்து கொள்வர்

உள்ள உணவைப் பங்கிட்டு உண்ணும் தலைமைத் தத்துவம் இங்கே அடங்கி இருக்கிறது. நான் எழும் போது மற்றவர்களும் எழுந்து விடுவர். உணவு வழங்கு பவர்களுக்கு மனக்குறைவு ஏதும் ஏற்படாமல் சமாளிப் போம். இதுதான் "இல்லாயின் உடன் உண்ணும்" அதியமான் காட்டிய பாதை என்று எங்களது பாத யாத்திரை அன்பர்களுக்கு விளக்குவேன். அதனை எல் லோரும் ஏற்று ரசிப்பர். இதைத் தான் வள்ளுவரும் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்று குறிப் பிடுகிறார்.

பாதயாத்திரைப் பங்கீட்டு முறைக்கு வழி காட்டிய அதியமான் வாழ்ந்த கோட்டையினை நல்லம் பள்ளி தாண்டித் தருமபுரி அருகில் காணும் வாய்ப் பினை நாங்கள் பெற்றது இறைவனின் திருவருளே ஆகும். அதியமானின் கோட்டை இப்பொழுது இடிந்து மண்மேடாகக் காட்சி அளிக்கிறது. அப்பகுதியில் புளிய மரங்கள் வரிசை வரிசையாக வான்முட்ட வளர்ந்து நிற் கின்றன, இங்கு பழங்காலக் கோயில்கள் இரண்டு காட்சி அளிக்கின்றன. இப்பகுதி தொல்பொருள் துறை கட்டுப்பாட்டில் இருக்கிறது, இந்த இடத்திற்கு அருகில் **பாப்பாரப்பட்டி** என்ற கிராமம் உள்ளது. அது தேசபக்தர் **சுப்பிரமணிய சிவா** பிறந்து தொண்டு செய்த ஊராகும்.

தகடூர் என்ற பழம் பெயர் கொண்ட **தருமபுரி** நல்லம்பள்ளியில் இருந்து 7 மைல் தொலைவில் உள்ளது. இரவு 7½ மணிக்குத் தருமபுரி சேர்ந்தோம். தருமபுரி பக்தர் திரு. டி. மாதவன் அவர்களின் அரிசி ஆலையில் தங்கினோம். தருமபுரி அன்பர் திரு. பாலசுப்பிரமணியன் செட்டியாரும், அவரது மனைவியார் திருமதி சுந்தர மீனாட்சி அம்மையாரும் எங்களுக்கு "மாகேஸ்வரபூசை" நடத்தி உணவு பரிமாறினர். ஏராளமான மக்கள் சாரி சாரியாக வந்து எங்களை வணங்கி ஆசிபெற்றும் ஆசி கூறியும் சென்றனர்.

35. இருபத்திரண்டாம் நாள்

(தர்மபுரியில் ஓய்வு)

10-3-83 ஆகிய இன்று எங்களுக்கு முழு ஓய்வு நாளாக இயற்கையாக எங்கள் திட்டப்படி அமைந்தது. எனவே இருபத்தோரு நாள் சுமார் 312 மைல் (கிலோ மீட்டர் அல்ல) நடந்து வந்த அலுப்புத் தீர இன்று உறங்கியே பொழுதைக் கழித்தோம், களைப்புத் தீர்ந்ததும் எங்களது அடுத்தகட்டப் பயணம் பற்றித் தருமபுரி அன்பர்களுடன் ஆய்வு செய்தோம். இனி மீண்டும் மலைமீது ஏறி ஒசூர் செல்லவேண்டும். அதன்பின் தமிழக எல்லை கடந்து கர்நாடக மாநிலத்தில் நுழைய வேண்டும். எனவே எங்களுக்குப் புதிய பிரச்னைகள் பல முளைக்கலாயின. அதுபற்றி எல்லாம் முன்கூட்டியே சிந்தித்துத் திட்டமிடுவதில் ஈடுபட்டோம்.

இன்று காலை உணவும் மதிய உணவும் தருமபுரி பாங்க் ஆப் மதுரை நிறுவனத்தினர் வழங்கினர். மாலைச் சிற்றுண்டி ''நாச்சம்மை அண் கோ'' நிறுவனம் வழங்கியது. இரவு உணவு திரு வீரப்பன், திருநாவுக்கரசு, கே. என். சுப்பிரமணியன், கே. என். காளையப்பன், மூர்த்தி, நாகராசன் ஆகியோர் வழங்கினர். ''நாச்சம்மை பாங்கர்ஸ்'' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அரு. இராமநாதன் (சொக்கநாதபுரம்) எங்கள் பூசைக்கு ஊதுவர்த்தியும் பழமும் வழங்கினார். இரவில் நிம்மதியாகத் தூங்கினோம்.

இப்படியாக மூன்று வாரத்தில் ஒருநாள் எளிமையாக—ஓய்வாகக் கழிந்தது.

36. இருபத்து மூன்றாம் நாள்

(பெரியாம்பட்டி-காரிமங்கலம்)

காலை 4-45 மணிக்குப் பயணம் உற்சாகத்தோடு புறப்பட்டோம். நாங்கள் அனைவரும் புதிய மஞ்சள் உடையோடு புறப்பட்டோம். மூன்று வாரத்தில் எங்களது மஞ்சள் உடை சாயம் போய் ஏறத்தாழ அழுக்கு உடை மாதிரி ஆகி இருந்தது. எனவே தருமபுரியில் எங்கள் ஆடைகளுக்கு மீண்டும் மஞ்சள் தோய்த்துப் பளிச்சென்ற நிறத்தில் அணிவகுத்துப் புறப்பட்டோம். வழியில் ''காவேரி ரப்பர்ஸ்'' என்ற சைக்கிள் டயர் செய்யும் தொழிற்சாலையினைக் கண்ணுற்றோம்.

10-மைல் நடந்து காலை 9-மணிக்குப் **பெரியாம்பட்டி** என்ற சிறிய கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். இவ்வூர்ப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. பன்னீர் செல்வம் என்ற அன்பர் எங்களை அன்புடன் வரவேற்றுச் சாலை ஓரத்தில் உள்ள ஊராட்சி அலுவலகத்தில் தங்கச் செய்து அனைவருக்கும் பால் வழங்கி உபசரித்தார். உள்ளூர் மக்கள் பலர் ஆர்வமுடன் எங்களைச் சந்தித்துக் காசிப் பயணம் பற்றிய விவரங்களைக் கேட்டு வியந்தனர்.

மாலை 5-மணிக்குப் புறப்பட்டு 5-மைல் நடந்து இரவு 7-மணிக்குக் **காரிமங்கலம்** என்ற ஊருக்குச் சென்று அங்குள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் இரவு தங்கினோம். அங்கு தற்செயலாக எங்களைச் சந்தித்த ஆசிரியர் திரு. எம். அமிர்தலிங்கம் எங்களை வரவேற்று, வேண்டிய உதவிகள் செய்து கொடுத்தார். எங்களது ரிக்ஷாவில் உள்ள மோட்டார் வேலை செய்ய மறுத்தது. உடனே கே. எஸ். நவ்ஷத் என்ற மெக்கானிக்கிடம் சொல்லி எங்கள் வண்டியை இரவோடு இரவாகப் பழுது பார்க்கச் சொல்லி மறுநாள் எங்கள் பயணம் தடைப்படாமல் பார்த்துக் கொண்டார். அந்த மெக்கானிக் எங்கள் வண்டியை இரவு முழுதும் பழுது பார்த்துச் செப்பனிட்டு உதவி செய்ததோடு, கூலி எதுவும் வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார். ''உங்கள் பயணத்திற்கு இது என் கைங்கரியமாக இருக்கட்டும்'' என்றார். என்னே அவரது பண்பு!

37. இருபத்து நான்காம் நாள்
(காவேரிப் பட்டணம்-தென்பெண்ணை நதி-கிருஷ்ணகிரி)

இன்று **மகாசிவராத்திரி** புண்ணிய நாள். காலையில் எங்கள் வேலாயுதத்தையும், தெய்வங்களையும் பூசித்துக் காலை 5-மணிக்குப் புறப்பட்டோம். 5-மைலில் பையூர் என்ற ஊர் வந்தது. அங்கு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி நிலையத்தைக் கண்ணுற்றோம். அங்கு விதை நெல்-விதைகள் பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

10-மைல் நடந்து தென்பெண்ணை ஆற்றைக் கடந்து காவேரிப் பட்டணம் என்ற புண்ணியத் தலத்தை அடைந்தோம். தென்பெண்ணை ஆறு தமிழகத்தின் புண்ணிய நதிகளில் ஒன்று.

"காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி-என
மேவிய ஆறு பலஓடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

என்று பாரதியார் தமிழக நதிகளைப் பற்றிப் பாடுவார். காவிரியில் பலமுறை நீராடி மகிழ்ந்த நாங்கள் காவேரிப் பட்டணத்தில் தென்பெண்ணை ஆற்றில் மகாசிவராத்திரி அன்று நீராடி மகிழ்ந்தோம். ஆற்றோரம் உள்ள பயணிகள் மாளிகை மரத்தடியில் தங்கினோம். எங்கு பார்த்தாலும் சோலைகள் சூழ்ந்திருந்தன. அருகில் ஒரு

பெரிய சோலையில் "சாது தபோவனம்" இருக்கிறது. இங்கு சாது குழந்தைவேல்சாமி சமாதி அமைந்திருக்கிறது. இது "திருச்சி சுவாமிகள்" கட்டுப்பாட்டில் உள்ளது.

காவேரிப்பட்டணம் என்ற பெயரைக் கொண்டு இங்கு காவிரி ஓடுவதாகப் பலர் நினைக்கின்றனர். இங்கு காவிரி ஓடவில்லை. ஆனால் காவேரி என்ற புனித நங்கை இங்கு வாழ்ந்ததால் அவள் பெயரால் இவ்வூர் காவேரிப்பட்டணம் என்ற பெயரை அடைந்திருக்கிறது. இவ்வூரில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் மிகப் புகழ் பெற்றதாகும்.

மாலையில் 5½ மணிக்குப் புறப்பட்டு 10 மைல் நடந்து கிருஷ்ணகிரிக்கு இரவு 9½ மணிக்கு வந்து சேர்ந்தோம். அங்கு "டி. கே. கெமிக்கல்ஸ்" என்ற நிறுவன உரிமையாளர் தம் நிறுவனத்தில் தங்க இடம் அளித்து இரவு உணவு வழங்கினார்.

கிருஷ்ணகிரி தமிழ் நாட்டின் முக்கிய ஊர்களில் ஒன்றாகும்- இது தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தது. இப்பகுதி வளமற்றதாயினும் இங்கு இப்பொழுது ஏராளமான புதிய தொழிற்சாலைகள் தோன்றி வருகின்றன. இங்கிருந்தே ஏறத்தாழ மலைப்பகுதி தொடங்கி விடுவதால் இவ்வூருக்குக் கிரி (மலை) என்ற அடைச்சொல் கொடுத்திருப்பது பொருத்தமேயாகும். கிருஷ்ணர் பேரால் தமிழ் நாட்டில் உள்ள ஊர்கள் மிகக் குறைவு. இவ்வூர் கிருஷ்ணர் பேரால் அமைந்திருப்பதில் இருந்தே இவ்வூர் மக்களின் கிருஷ்ண பக்தியை உணரலாம். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் ஐந்து மைல் தொலைவில் கிருஷ்ணன் கோவில் என்ற ஊர் ஒன்று இருக்கிறது. அதுவும் கிருஷ்ணன் பேரால் அமைந்ததே ஆகும்.

38. இருபத்து ஐந்தாம் நாள்

(சாமல்பள்ளம்—சூலகிரி)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். குருரப் பள்ளி என்ற ஊரில் மலைமேடு தொடங்குகிறது. இது ஒரு மிகச் சிறிய ஊராக இருந்தாலும் இங்கு அரசினர் உயர்நிலைப்பள்ளி ஒன்று இயங்குகிறது. இதில் இருந்து தமிழக அரசின் கல்வித்துறை அடைந்திருக்கிற விரிவினை உணரலாம். இது போன்ற விரிவினை மற்ற மாநிலத்தில் காண முடியவில்லை.

மலைப்பகுதியில் வழக்கம் போல் சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு நடக்கத் தொடங்கினோம். எங்களில் இருவர் வயதானவர்கள். அவர்களை இவ்வேலைக்கு அழைப்பதில்லை. மீதிப்பேர்தான் மாற்றி மாற்றி சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ள வேண்டும். இதனால் சிலசமயம் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கும். என்றாலும் ''இராமநாதா! விசுவநாதா! முருகா! முருகா!'' என்று சொல்லிக் கொண்டே ரிக்ஷாவைத் தள்ளினோம். இன்னும் மலை உச்சிக்குப் போக நெடுந் தூரம் இருக்கிறது. இனிமேல் எங்களால் தள்ள முடியாது என்ற நிலையில், சோர்ந்து, தளர்ந்து, மலையில் உள்ள ஒரு மர நிழலில் அமர்ந்து விட்டோம். ரிக்ஷா பின்னே றாமல் கல்வைத்துத் தடுத்தோம். தண்ணீர் அருந்திச் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டோம். இனி எப்படித் தள்ளுவது என்று கலங்கி இருந்த நேரத்தில் ஓசூரில் உள்ள நகரத்தார் அன்பர்கள் சிலர் ஒரு காரில் வந்து சேர்ந்தனர். அவர்கள் எங்களைத் தேடி வந்திருக்கிறார்

கள். பிறகு அவர்கள் ரிக்ஷாவைத் தள்ள நாங்கள் உற்சாகமாக நடக்கலானோம். அப்பொழுது எங்களுக்கு ஏற்பட்ட சிந்தனை வருமாறு: ''இந்தச்சிறிய மலையில் ஏறவும், ரிக்ஷா தள்ளவும் இவ்வளவு சிரமமாக இருந்தால், வடநாட்டில் விந்திய சாத்பூரா மலைகளில் எப்படி தள்ளுவது? இங்கே ஒசூர் அன்பர்கள் உதவி செய்கிறார்கள். அங்கே யார் உதவி செய்வார்கள்? முருகன் தான் உதவி செய்ய வேண்டும்'' என்று எண்ணினோம். முருகன் அங்கும் எங்களைக் கைவிடவில்லை. விந்திய சாத்பூரா மலைகள் 1650 அடி உயரம் உடையவை, அவற்றின் மீது நாங்கள் இரவு நேரங்களில்கூடத் தனியாக ரிக்ஷாவைத் தள்ளிச் சென்றோம். அப்பொழுது எங்கட்கு அவ்வளவு பலம் எப்படி வந்தது என்று சிந்தித்துப் பார்த்தால் ஆச்சரியம் தான் மிஞ்சும். இங்கே எங்களுக்கு ஆளைத் தந்த முருகன், அங்கே எங்களுக்குப் பலத்தைத் தந்திருக்கிறான். இதை எல்லாம் படித்தோ, சொல்லியோ உணர முடியாது. அனுபவித்துத்தான் உணர முடியும். என் வார்த்தைகளை எல்லோரும் நம்புகிறார்கள் என்று நான் நம்ப முடியாது. ஏனெனில் நம்பிக்கை என்பது அவரவர்கள் அனுபவத்தைப் பொறுத்தது. இதுபோன்ற அனுபவம் உடையவர்கள் என் வார்த்தைகளை நம்புவார்கள். மற்றவர்கள் கற்பனை என்று தள்ளுவார்கள். அதனால்தான் ''கடவுளை நம்பு'' என்று நம் பெரியோர்கள் சொன்னார்கள். இந்தப் பயணத்தில் கடவுளை நாங்கள் நேரில் காணவில்லை. ஆனால் இது கடவுள் அருளால் தான் நடந்தது என்று நம்பும் படியான காரியங்கள் பல நடந்தன. எனவே தான் சொல்கிறேன். ''கடவுளைக் காண முடியாது. ஆனால் கடவுளை உணரலாம்.'' (We cannot see god; but we can feel god) காற்றைக் காண முடியாது. ஆனால் காற்றை உணர்கிறோம் அல்லவா? காற்றை நம்பும் மனிதன் ஏனோ கடவுளை நம்ப மறுக்

கிறான். அதற்குக் காரணம் அவன் கடவுள்ள உணரும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டாதது தான். வாழ்வின் இளம்பருவத்தில் கடவுளை நம்பாதவர்கள், முதுமையில் தம் அனுபவத்தினால் கடவுளை நம்புவதை நாம் காண்கிறோம் அல்லவா? சுமார் 40 வயதில் வியாதி வரத் தொடங்கும். அதைத் தொடர்ந்து கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் படிபடியாக நம்பிக்கை வரத் தொடங்கும். அதனால்தான் "நோய் உளார் வாய் உளான்" என்று கடவுளின் இருப்பிடத்தைச் சொல்வர். வியாதியால் வருந்துபவர்கள் அடிக்கடி கடவுளின் பெயரை உச்சரிப்பதைக் காணலாம். எங்கள் பயணத்தில் ஒவ்வொரு நாளும் நாங்கள் நோய்க்கு இடம் கொடுத்துக் கொண்டு தானே போனோம். எத்தனையோ நோய்களுக்கு நாங்கள் இலக்கானோம். அப்பொழுது மட்டும் இல்லை, எப்பொழுதுமே முருகன் நாமத்தையும், சிவ நாமத்தையும் தவிர நாங்கள் வேறொன்றையும் சொல்லவில்லை. இது எங்கட்கு இறைவன் தந்த பரிசு!

ஒசூர் அன்பர்கள் மலைமீது எங்களது ரிக்ஷாவைத் தள்ளி வர, **மேலுமலை** என்ற ஊரை அடைந்தோம். இதுதான் மலை உச்சியில் உள்ள ஊர். இதற்கு வைத்துள்ள பேர் மிகப்பொருத்தம். மலைமேலே இருப்பதை மேலுமலை என்று அழைப்பது நியாயம் தானே! கால்வாயை வாய்க்கால் என்று அழைப்பது தமிழ் மரபு தானே!

சுமார் 10 மைல் நடந்து 10 மணிக்கு மலைமீது உள்ள சாமல்பள்ளம் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். அங்குள்ள சிறிய ஒடையின் அருகில் மரத்தடியில் அமர்ந்தோம். ஒசூர் பாங்க் ஆப் மதுரை நிறுவனத்தினர் எங்கட்குக் காலை உணவும், மதிய உணவும் கொண்டு வந்து தந்தனர். உண்டு, ஒடை அருகில் கண்ணயர்ந்தோம். எங்களை அறியாமல் தூங்கினோம்.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டோம். மூன்று சிகரங்களை உடைய மலைமீது இருக்கின்ற **சூலகிரி** என்ற ஊருக்கு 7 மைல் நடந்து இரவு 8. 30 மணிக்கு இனிதே சென்றடைந்தோம். அவ்வூரில் உள்ள இந்தியன் பாங்க் மேலாளர் திரு. ஆர். எம். முருகப்பன் (பள்ளத்தூர்) எங்களை அன்பாகவரவேற்றுத் தங்க வசதி செய்து கொடுத்து இரவு உணவு வழங்கினார்.

அவ்வூரில் உள்ள வரதராசப்பெருமாள் கோயில் மிகப் பழைமையானது. ஒவ்வொரு நாளும் சூரியன் மறையும் போது அக்கோயிலில் உள்ள வரதராசப்பெருமாளின் பாதத்தில் சூரிய ஒளி படுமாம்,

வைணவத் தலமான சூலகிரியில் வாழும் மக்கள் பழுத்த வைணவர்கள். கன்னடம், தெலுங்கு, தமிழ் எல்லாம் பேசுகின்றனர். எங்கள் வருகை தெரிந்து, வயதான பெரியவர்கள் வந்து எங்களைச் சந்தித்து எங்கள் பயணம் வெற்றி பெற ஆசீர்வதித்தார்கள்.

39. இருபத்து ஆறு, இருபத்து ஏழாம் நாள்
(ஓசூர்)

14-3-1983 காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். காமன்தொட்டி, பேரண்டபள்ளி என்ற ஊர்களின் வழியாக 15 மைல் நடந்து 11 மணிக்கு ஓசூர் அருகில் இரண்டு மைல் தொலைவில் உள்ள ஒரு புதிய தொழிற் சாலையில் தங்கினோம். ''சாய் டிரானிக் கார்ப்பொரேஷன்'' (Sai Tronic Corporation) என்பது அந்த நிறுவனத்தின் பெயர். அங்கு முழுநாளும் தங்கும்படியான வாய்ப்புக் கிடைத்தது. ஓசூர் பாங்க் ஆப் மதுரை நிறுவனத்தினர் காலை உணவும், மதிய உணவும் வழங்கினர். ஓசூரில் உள்ள மிகப் பெரிய தொழிற் சாலையான ''ஏஷியன் பேரிங்ஸ் லிமிடெட்'' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. **பெரியணன் செட்டியார்** (ராயவரம்) அவர்கள் இரவு உணவு வழங்கினார்கள். ஓசூர் நகரத்தார்களும், ஊர் மக்களும் எங்களை ஊர் எல்லைக்கு வந்து நாங்கள் தங்கியிருந்த இடத்தில் சந்தித்து அளவளாவிச் சென்றனர்.

இருபத்து ஏழாம் நாள் (15-3-83) எங்களுக்கு ஒரு முக்கிய நாளாகும். ஏனெனில் இன்று தமிழ்நாட்டின் எல்லை நகரமும், மிக முக்கியமான தொழில் நகரமும் ஆன ஓசூரில் நுழையப் போகிறோம். மேலும் இன்றுடன் எங்களது தமிழகப் பயணம் நிறைவு பெறுகிறது. நாளை நாங்கள் இரண்டாவது மாநிலமான கர்நாடக மாநிலத்தில் நுழையப் போகிறோம். மாநிலம் கடந்து மாநிலம் நுழையும் கட்டத்திற்கு நாம் நடந்திருக்கிறோம் என்ற எண்ணமே எங்களுக்குப் பெருமிதம் அளித்தது.

காலை 7½ மணிக்குப் புறப்பட்டு 2 மைல் நடந்து 8 மணிக்கு ஓசூருக்குள் நுழைந்தோம். அங்கு ஓசூர் வாழ் நகரத்தார்களும், பாசமிகு செட்டி நாட்டு அன்பர்களும், உள்ளூர்ப் பக்த கோடிகளும் எங்களை வரவேற்று ஸ்ரீ ஐயப்ப சமாஜத்துக்கு அழைத்துச் சென்றனர். ஓசூரில் ஊர்வலமாக 4 மைல் நடந்து காலை 9 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சமாஜத்தை அடைந்தோம். அங்கு திரண்டிருந்த ஐயப்ப பக்தர்கள் எங்களை வரவேற்று, மாலை சூட்டி, பாதபூசை செய்து, வணங்கினர்.

அங்குள்ள ஐயப்ப சாமி கோயிலில் பஜனை செய்தோம். அதில் திரளான மக்கள் கலந்து கொண்டனர். இன்று முழுதும் ஓசூர் நகரத்தார்கள் எங்களுக்கு உணவு வழங்கிச் சிறப்பித்தார்கள். அத்துடன் எங்களுக்கு அவர்கள் வழங்கிய வரவேற்புக் கூட்டத்தில் தான் ""ஓசூர் நகரத்தார் சங்கம்'' அமைக்கப் பெற்றது. எங்களை வரவேற்க ஏற்பாடு செய்த பொழுதுதான் அவ்வூரில் எவ்வளவு பேர் நகரத்தார்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளி விபரமே அவ்வூரில் பலருக்குப் புரிந்ததாம். இவ்வளவு நகரத்தார்கள் இருப்பார்கள் என்று யாருமே நினைக்கவில்லையாம். பல நூறு பேர் அவ்வூரில் இருப்பதற்குக் காரணம் அது ஒரு பெரிய தொழில் நகரமாக வளர்ந்திருப்பது தான். மேலும் அவ்வூர் பெங்களூருக்கு அருகில் இருப்பதால் அங்கு செய்யும் உற்பத்திப் பொருள்களுக்குப் பெங்களூர் நல்ல சந்தையாகப் பயன்படுகிறது. பெங்களூரில் தொழில் தொடங்க முடியாதவர்கள் எல்லாம் ஓசூரில் தொடங்குகின்றனர். இங்கு டி.வி.எஸ், கார்பொரண்டம் யுனிவர்சல், கோவை லெட்சுமி குரூப் முதலிய பெரிய நிறுவனங்களின் கிளைகள் உள்ளன. மேலும் சிட்கோ, லால், அசோக் லேலண்ட் தொழிலகங்களும் இங்கு உள்ளன. இவ்வூரின் மக்கள் தொகை 2 இலட்சம். எனவே இங்கு சில நூறு நகரத்தார்கள் வந்து குடியேறி இருப்பதில் வியப்பில்லை. எனினும்

இவர்களை எல்லாம் ஒன்று திரட்டி "நகரத்தார் சங்கம்" அமைக்க எங்கள் வருகை ஒரு சிறந்த வாய்ப்பளித்தது. அச்சங்கத்தை அடியேன் பாராட்டி, வாழ்த்தி, அனைவர்க்கும் நன்றி கூறினேன்.

சண்முகநாதபுரம் திரு. வி. வேதாசலம் செட்டியார், தேனிபட்டி ஏ. விஜயகுமார், தேவகோட்டை டி. சொர்ண நாதன், தேவகோட்டை அழ. அரு. லெட்சுமணன் செட்டியார், கவிஞர் மெய்யப்பன் ஆகியோர் எங்களுக்கு எல்லையற்ற உதவிகளைச் செய்தனர்.

பெங்களூர் நகரத்தார் சங்கச் செயலாளர் திரு. என். கதிரேசன் செட்டியார் (ராயவரம்) ஓசூர் வரவேற்பு விழாவுக்கே வந்து எங்களை வரவேற்றார்கள். மேலும் பெங்களூர் எல்லையில் பெங்களூர் நகரத்தார்கள் எங்களை வாவேற்பதற்குச் செய்துள்ள ஏற்பாடுகள் பற்றியும் வர்ணித்தார்கள். இவர்கள் மிக அருமை யாகப் பாடக் கூடியவர்கள். இவர்களது இனிய பாடலைக் கேட்டு விழாக் கூட்டமே மெய்ம்மறந் திருந்தது.

நல்லூர்ப்பண்ணை திரு. வள்ளியப்ப செட்டியார் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் காரில் ஓசூருக்கு வந்து வரவேற்பு விழாவில் கலந்து கொண்டனர். ஏராளமான இளநீரும் காரில் கொண்டு வந்து எங்களுக்கு வழங்கினர்.

ஓசூர் ஒரு முக்கியமான சிவத்தலம் ஆகும். இங்குள்ள மலை மீது சந்திரசூடேஸ்வரர்-மரகதாம்பிகை கோயில் உள்ளது. முட்கலர், உட்சாயனர் என்ற முனிவர்கள் இங்கு தவம் செய்துள்ளனர். இக்கோவில் கிருஷ்ண தேவராயரின் தாத்தா காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இங்கு பஞ்சபாண்டவர்கள் பூசை செய்ததாக ஐதிகம். இங்கு ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை

செய்யப்பட்டுள்ளது. இங்கு திரௌபதி "அம்பாள் அஷ்டகம்" எழுதியதாகவும், அர்ச்சுனன் "சுவாமி அஷ்டகம்" எழுதியதாகவும் சொல்லப்படுகிறது. ஆண்டவனின் ஐந்து முகத்தைக் காட்டப் பஞ்சலிங்கம் இங்கு இருக்கிறது.

இங்கு ஜலகண்டேசுவரர் என்னும் விக்கிரகம் இருக்கிறது. அதன் அமைப்பு வருமாறு: ஒரு பெரிய தாமரைப்பூச்சிலை இருக்கிறது. அதற்குக் கீழே சிறு சுரங்கம்-அதில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. மழையில்லாத காலத்தில் ஒரு குடத்து நீரைச் சிவலிங்கத்தின் மீது அபிஷேகம் செய்வார்களாம். அந்த நீர் உடனே பூமிக்குள் மறைந்தால் மழை பெய்யாதாம். நீர் வற்றாமல் சுரங்கத்தில் நின்றால் உடனே மழை பெய்யுமாம். இப்படி மழை பெய்யும் குறிப்பைக் காட்டுவதால் இந்தச் சிவலிங்கத்துக்கு "ஜலகண்டேசுவரர்" என்று பெயராம்.

இக்கோயிலில் உள்ள நந்தி மிகப் பெரியது. அது சுதையால் செய்யப்பட்டிருக்கிறது. இங்குள்ள "கார்த்திகை தீபத் தூண்" பார்க்கத் தக்கதாகும்.

இக்கோயிலுக்கு மாலையில் புறப்பட்டுச் சென்றோம். அப்பொழுது எங்கள் பதின்மூவரில் ஒருவராகிய திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் (வயது 68) சோர்வு காரணமாகப் படுத்திருந்தார்கள். "கோயிலுக்கு வர இயலாது" என்று சொன்னார்கள். எனவே நாங்கள் மலையேறிக் கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு செய்து சுமார் 8 மணிக்குத் திரும்பினோம். நாங்கள் கோயிலுக்குப் புறப்பட்ட பொழுது நன்றாகப் படுத்திருந்த திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் நாங்கள் திரும்பி வந்த பொழுது குளிர் காய்ச்சலால் உடல் முழுதும் போர்த்திக் கொண்டு

படுத்திருந்தார்கள். "ஏன் இந்தத் திடீர் மாற்றம்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறிய பதில் என்னை வியப்பில் ஆழ்த்தியது. "என்னால் கோயிலுக்கு நடந்து வரக் கூடிய சக்தி இருந்தும், நான் வராமல் படுத்திருந்தது பெரிய தவறு. அதற்குத் தண்டனை யாகக் கடவுள் இந்தக் காய்ச்சலை எனக்குக் கொடுத் திருக்கிறார். என் தவற்றை உணர்ந்து நான் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விட்டேன். எனவே விரைவில் குளிர் காய்ச்சல் தீரும்" என்றார்கள். அவ்வாறே மறுநாட் காலை அவர்களது காய்ச்சல் பறந்தோடிவிட்டது. இது எங்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

பாதயாத்திரை செல்லும் பொழுது வழியில் உள்ள கோயில்களில் எல்லாம் வழிபட வேண்டியது மிகவும் முக்கியமாகும். சோம்பல் காரணமாகவோ, சோர்வு காரணமாகவோ அக்கடமையினைப் புறக் கணிக்கக் கூடாது. எஃவேதான் ஏழெட்டுக்குள்— அதாவது 56 வயதுக்குள் யாத்திரைகள் செல்ல வேண்டும் என்று நம் சாத்திரங்கள் சொல்கின்றன.

ஓரெட்டில் (8 வயது) ஊட்டாத உணவும், ஈரெட்டில் (16 வயது) கற்காத கல்வியும், மூவெட்டில் (24) செய்யாத திருமணமும், நாலெட்டில் (32) பெறாத பிள்ளையும், ஐயெட்டில் (40) ஈட்டாத பொருளும், ஆறெட்டில் (48) செய்யாத தர்மமும், ஏழெட்டில் (56) செல்லாத யாத்திரையும், எட்டெட்டில் (64) சாகாத சாவும் பயனில்லை என்பது சாஸ்திரம்.

40. இருபத்தெட்டாம் நாள்
(திருமால் பள்ளி—ஹெப்ப கோடி)

இருபத்தெட்டாம் நாளாகிய இன்று (16-3-83 புதன்கிழமை) எங்கள் பயணத்தில் ஒரு சிறப்பான நாளாகும். எவ்வாறெனில் இன்றுடன் தமிழகத்தில் சுமார் 400 மைல்நடந்து, இனிதே கர்நாடக மாநிலத்தில் நுழையப் போகிறோம் அல்லவா?

எங்கள் பயணத்தில் எப்பொழுதும் காலையில் நான் முதலில் எழுவேன். எழுந்ததும் "அரோகரா" என்று சொல்வேன். உடனே எல்லோரும் எழுவர். காலைக் கடன்களை முடித்து, நீராடி, சைக்கிள் ரிக்ஷா வில் உள்ள தெய்வங்களுக்குத் தீப ஆராதனை செய்து, குருநாதரிடம் விபூதி பெற்றுக் கொள்வோம். உடனே நான் என் குறிப்பேட்டை எடுத்து வைத்துக் கொண்டு, இன்று இது தேதி-இது கிழமை, இத்தனாவது நாள் பிரயாணம் என்று சொல்லிக் காலையில் சென்று சேர வேண்டிய இடமும், மைலும், மாலையில் சென்று சேர வேண்டிய இடமும் மைலும் சொல்வேன். பிறகு "அரோஹரா" என்பேன். எல்லாரும் "அரோஹரா" என்று கூறுவர். அப்பொழுதே நடக்கத் தொடங்கு வோம். நாங்கள் நடக்கும் பொழுது அவரவர் வேகத் திற்கு ஏற்ப முன்னும் பின்னும் நடப்போம். எங்களில் முன்னால் நடப்பவர்க்கும் கடைசியில் நடப்பவர்க்கும் இடையில் சுமார் ஒரு மைல் இடைவெளிகூட இருக்கும். கடைசியில் தங்கும் இடத்தில்தான் ஒன்று சேர்வோம். எங்களுக்கு மாதம், தேதி, கிழமை எது ஒன்றும் தெரி

யாது. பயணம் இன்று எத்தனாவது நாள் என்பது தெரியும். 116ஆவது நாள் காசி என்பது தெரியும். எனவே 116இல் நடந்த நாட்களைக் கழித்து மீதி நாட்களைக் கற்பனை செய்து காசியை மனக் கண்ணில் காண்போம். அப்படிக் கற்பனையில் நாங்கள் கண்ட ஒரு கட்டம் கர்நாடக மாநிலத்தில் நுழைவது என்பது. அந்தக் கற்பனை இன்று உண்மை ஆகப் போகிறது அல்லவா? எனவே மற்ற நாட்களைவிட இன்று எங்களிடம் துடிப்பு மிகுதியாக இருந்தது.

இன்று காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். "சிட்கோ தொழிற்பேட்டைக்குக் காலை 6½ மணிக்குச் சென்றோம். அங்கு மின்சார பல்பு செய்யும் "P.M.G, Industrial Enterprises" என்ற நிறுவனத்தின் சார்பில் அதன் மேலாளர் திரு. வி. வேதாசலம் செட்டியார் (சண்முகநாதபுரம்) எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். அங்கு "மின்சாரபல்பு" செய்யும் தொழில் நுட்பங்களை விளக்கினார்.

பிறகு தொடர்ந்து நடக்கத் தொடங்கினோம். எங்கு பார்த்தாலும் சாலையின் இருபுறமும் முசுக் கொட்டைச் செடிகள் வளர்ந்திருக்கும் இனிய காட்சியினைக் கண்டோம். பட்டுப் பூச்சி வளர்ப்புக்கு முக்கியமானது முசுக் கொட்டைச் செடி. இந்தச் செடியின் இலைகளைத் தின்றுதான் பட்டுப்புழு வளர்கிறது. பட்டுப்புழுவைக் கொன்று பட்டு எடுக்கிறார்கள். இத் தொழில் கர்நாடக மாநிலத்தில் பிரபலமாகும். எனவே முசுக் கொட்டைச் செடிகளைக் கண்டதும் கர்நாடக மாநிலம் நெருங்கி வருகிறது என்பதை உணரலானோம். எங்கள் கால்கள் மேலும் வேகமாக நடந்தன. ஜூஜூவாடி என்ற சிற்றூரை அடைந்தோம். இங்கு தமிழ் நாட்டு சோதனைச் சாவடி (Check post) இருக்கக் கண்டோம். இதுதான் தமிழ்நாட்டின் எல்லையில் உள்ள கடைசி

ஊராகும். தொடர்ந்து நடந்தோம். எங்கும் முசுக் கொட்டைச் செடிகள் அடர்ந்து பயிராகி இருந்தன.

கர்நாடகா மாநிலத்திற்குள் மகிழ்ச்சியோடு நுழைந்தோம். அப்பொழுது "இராமநாதருக்கு அரோகரா!" "காசிவிசுவநாதருக்கு அரோகரா!" "காசி விசாலாட்சிக்கு அரோகரா!" "அன்ன பூரணிக்கு அரோகரா!" "காலபைரவருக்கு அரோ கரா!" என்று கூறிக் கொண்டு, அடியேன் முன்னால் நடக்க, அருகில் சைக்கிள் ரிக்ஷா வர, தொடர்ந்து மற்ற அன்பர்கள் வரக் கர்நாடகா மாநில மண்ணில் கால் வைத்தோம். அப்பொழுது எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்டோம். பிறகு எல்லோருக்கும் இனிப்பு வழங்கினேன்.

கர்நாடகத்தில் நாங்கள் கண்ட முதல் ஊர் **அத்திபெல்லி** Attibelli என்பதாகும். அப்பொழுது காலை மணி 8-30. அவ்வூரில் ராஜராஜேஸ்வரி கோயில் உள்ளது. அங்கு அம்பாளை வணங்கி எங்கள் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றித் தருமாறு பிரார்த்தித்துக் கொண்டோம். அந்த ஊரில் உள்ள தபால் தந்தி நிலையத்திற்குச் சென்று தேவகோட்டை ஆர். வயிரவன் அவர்கட்கு "கர்நாடகாவில் பத்திரமாக நுழைந்துள்ளோம்" (Enterd Karnataka safe) என்று தந்தி கொடுத்தோம். ஆர். வயிரவன் அவர்கள்தான் எங்களுக்குத் தலைமை நிலையம். (control room-head quarters) எந்தச் செய்தியாக இருந்தாலும் அவருக்கு உடனுக்குடன் எழுதிவிடுவோம். அவர் சொல்வதுதான் தமிழகத்தில் அதிகாரபூர்வமான செய்தி என்று ஏற்பாடு செய்து கொண்டிருந்தோம். இல்லா விட்டால் ஆளுக்கு ஆள் செய்தி சொல்லி, வதந்திகள் பெருவாரியாக உலவத் தொடங்கி விடும் அல்லவா?

அதன்பின் எது உண்மை, எது பொய் என்றே ஊரில் உள்ள மக்களுக்குத் தெரியாமல் போய்விடும். எனவே இரண்டு நாளைக்கு ஒரு முறை வயிரவனுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். மேலும் காரைக்குடிக்கு என் மனைவிக்கும், சென்னைக்கு என் தம்பி ஆண்டானுக்கும் அடிக்கடி தகவல் எழுதிக் கொண்டிருந்தேன். அதுதவிர ஏராளமான நண்பர்களுக்கும் கடிதங்கள் அனுப்பிக் கொண்டிருந்தோம்.

அத்திபெல்லி தாண்டி மேலும் நடந்து **திருமால் பள்ளி** என்ற கிராமத்திற்குக் காலை 11-மணிக்குச் சென்றடைந்தோம். அங்குள்ள காசிவிசுவநாதர் கோயிலில் தரிசனம் செய்து தங்கினோம். ஓசூரில் இருந்து திருமால் பள்ளி 9 மைல் ஆகும்.

மாலை 5½ மணிக்குப் புறப்பட்டு 6மைல் நடந்து இரவு 7 மணி அளவில் **ஹெப்பகோடி** என்ற ஊருக்குச் சென்று சேர்ந்தோம். அங்கு ஒரு பள்ளியில் தங்கினோம். இன்று முழுதும் எங்கட்கு ஓசூரில் இருந்து தேவகோட்டை அன்பர் திரு. **அழ. அரு. லெட்சுமணன் செட்டியார்** அவர்கள் உணவு கொண்டுவந்து தந்தார்கள்- ஆகவே தொடர்பில்லாத மாநிலம் என்ற கவலையின்றித் தொடர்ந்து எங்களால் நடக்க முடிந்தது.

பெங்களூர், பெங்களூர் கன்டோன்மெண்டு பாங்க் ஆப் மதுரை நிறுவனங்களின் மேலாளர்கள் ஹெப்பகோடிக்கு வந்து எங்களை வரவேற்று, மறுநாள் பெங்களூரில் காத்திருக்கும் மாபெரும் வரவேற்புப் பற்றிய விபரங்களை எடுத்துரைத்தார்கள். அத்துடன் எங்கட்குச் சிற்றுண்டியும் வழங்கினார்கள். அவர்கள் வழங்கிய எல்லாமே எங்களுக்கு இனிப்பாகவும், உகப்பாகவும் இருந்தன. கர்நாடக மாநிலத்தின் முதல்நாள் இரவு பல கற்பனைகளோடு கழிந்தது.

41. இருபத்தொன்பதாம் நாள்.

(பெங்களூர்)

இன்றும் ஒரு முக்கியமான நாள் (17-3-1983). ஏனெனில் இன்று தான் கர்நாடகமாநிலத்தின் தலை நகரான பெங்ளூரில் கால் வைக்கப் போகிறோம். மேலும் அங்கு "கர்நாடக நகரத்தார் சங்கம்" ஒரு பெரிய வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனவே எல்லையற்ற உற்சாகத்தோடு நடக்கலானோம். காலை 5 மணிக்குப் புறப்பட்டு 15 மைல் இடைவிடாமல் நடந்து காலை 11 மணிக்கு பெங்களூர் சென்றடைந்தோம். அங்கு எங்கு பார்த்தாலும் மரங்களும், செடி கொடிகளும், பூங்காக்களுமாக இருந்தன. அதனால் தான் இந்நகருக்குப் "பூங்கா நகரம்" (City of Parks) என்று பெயர் வந்தது போலும்.

லால்பாக் பூங்காவின் அருகில் கர்நாடகா நகரத்தார் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் திரண்டு நின்று எங்களை வரவேற்றனர். நகரத்தார் சங்கத் தலைவர் திரு. **கே. எம். சி. டி. நாராயணன்** (கானாடுகாத்தான்) அவர்கள் எங்களை வரவேற்று மாலை சூட்டினார்கள். பாங்க் ஆப் மதுரை, இந்தியன் பாங்க், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் அன்பர்களும், பொது மக்களும் ஊர்வலமாக எங்களை திரு. நாராயணன் அவர்களது அழகிய இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு செட்டிநாடே திரண்டு வந்திருந்தது என்றால் மிகையாகாது. காலை உணவு திரு. பெரி. பெரிய கருப்பன் (ராங்கியம்) அவர்களாலும், மதிய உணவு கோட்டையூர் திரு. மு. அழ. முத்தையா அவர்களாலும் அனைவருக்கும் பெண் அழைப்புச் சாப்பாடு போல் வழங்கப்பட்டன.

மாலையில் சத்தியநாராயணா கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தோம். பிறகு கலாசிபாளையப்

முருகன் பஜனைக்கூட பஜனையில் கலந்து கொண்டோம். இங்கு வாரந்தோறும் திரு. டி. பஞ்சநதம் அவர்கள் முயற்சியால் முருகன் வழிபாடும், பஜனையும் நடத்தப் பெறுகிறது. இங்கும் ஏராளமான பக்தர்கள் வந்திருந் தனர். இந்த பஜனையில் கலந்து கொண்டு, சிறிய உரை நிகழ்த்தினோம்.

காலை உணவு திரு பெரி. பெரிய கருப்பன் அவர் களாலும், மதிய உணவு கோட்டையூர் திரு. மு. அழ. முத்தையா அவர்களாலும் வழங்கப்பட்டன.

முருகன் பஜனைக் கூடத்தில் இரவு உணவு உண்டோம். அரிமளம் அண்ணாமலை அவர்கள் ரொட்டி வழங்கினார்கள்.

நல்லூர்ப் பண்ணை திரு. வள்ளியப்ப செட்டி யார் அவர்களும், அவர்களது குடும்பத்தினரும் சிறு காரில் எங்களது இரண்டு டின் உணவுப் பொருள்களை நாமக்கல்லில் இருந்து கொண்டு வந்து தந்ததோடு, பெங்களூர் வரவேற்பிலும் கலந்து கொண்டு எங்களைப் பெருமைப் படுத்தினர். எங்களது இந்த யாத்திரையில் அவர்கள் பெரும்பங்கு கொண்டு பணிபுரிந்த பாங்கினை மறக்க இயலாது.

ரொட்டி, புரூ, நெஸ், பால் ஆகியன இராமச் சந்திரபுரம் திரு. எஸ். டி .எஸ். சொக்கலிங்கம் அவர் களால் வழங்கப் பெற்றன. கல்லுப்பட்டி திரு. வி. மனோகரன் அவர்கள் ரொட்டி வழங்கினார்கள். தேவ கோட்டை திரு. சித- நாககுப்பிரமணியம் அவர்கள் இள நீரும், நூறு தபால்கார்டும் வழங்கினார்கள். நகரத் தார் சங்கச் செயலர் திரு. கதிரேசன் செட்டியார் (ராயவரம்) அவர்களும், நகரத்தார் சங்கத் தலைவர் திரு. நாராயணன் அவர்களும், தேவகோட்டை செம்பொன் என்று அழைக்கப்படும் திரு. எம். வி. அருணாசலம் அவர்களும் இன் முகத்தோடு, இனிக்க இனிக்கப் பேசி எங்களுக்குச் செய்த எல்லையற்ற சேவை களை எப்பிறப்பிலும் மறக்க இயலாது.

42. முப்பதாம் நாள்.

(பெங்களூர் - கஞ்சன ஹள்ளி கைலாச ஆசிரமம்)

இன்று (18-3-83 வெள்ளிக்கிழமை) முழுதும் பெங்களூரில் ஓய்வு நாளாக அமைத்திருக்கலாம். எங்களால் நடக்க இயலுமானால் இன்று சுஞ்சனஹள்ளி கைலாச ஆஸ்ரமத்தில் திருச்சி சுவாமிகள் ஒரு இனிய வரவேற்பு வழங்க விரும்பினார்கள். நடப்பது சிரமமாக இருக்குமானால் கைலாச ஆசிரமத்தின் சார்பாகப் பெங்களூருக்கு விபூதி பிரசாதம் அனுப்பி வைக்கத் தயாராக இருந்தார்கள். கைலாச ஆசிரமத்திற்குப் போய் வருவதானால் 15மைல் நடந்து சென்று வரவேண்டும். இது எங்கள் பாதையில் இல்லாத பயணத் திட்டம். "இதை எப்படிச் செய்ய விருப்பம்?' என்று பெங்களூர் நகரத்தார் சங்கத்தலைவர் திரு. கே. எம். சி. டி. நாராயணன் அவர்கள் அடியேனை வினவினார்கள்.

பொதுவாக நாங்கள் காசியை ஒரே நோக்கமாக வைத்து நடப்பதால் வழியில் சாலையில் இருக்கும் கோவில்களை மட்டுமே வணங்குவது; சாலை ஓரத்திலேயே தங்குவது; அனாவசியமான நடையைத் தவிர்ப்பது; தொலைவில் உள்ள பிற தலங்களின்பால் படரும் ஆசையை விலக்குவது என்பதான எண்ணங்களைக் கொண்டிருந்தோம். காசி என்ற ஒரு குறிக்கோள் தவிர வேறு எங்கும் நாங்கள் எங்கள் கவனம் செல்ல அதுவரை அனுமதிக்கவில்லை. எனவே அதிகமாகப் பதினைந்து மைல் நடந்து கஞ்சனஹள்ளி ஆசிரமம் போய் வருவது பற்றி எங்களால் உடனடியாக ஒரு தீர்மானத்திற்கு வர இயலவில்லை. எனினும் நேரம் ஆக

ஆகத் திருச்சி சுவாமிகள் நகரத்தார் பால் காட்டும் அன்பும், இராஜ ராஜேஸ்வரி அன்னையின் கடைக்கண் பார்வையும் எங்களை ஈர்த்தன. எனவே கஞ்சன ஹள்ளிக்குச் சென்று திரும்புவது என்று முடிவெடுத் தோம். பெங்களூர் அன்பர்களும் எங்களோடு நடந்து வருவது என்று தீர்மானித்தார்கள்.

காலை 6 மணிக்கு பெங்களூரில் இருந்து கஞ்சன ஹள்ளி கைலாச ஆசிரமம் நோக்கிப் பயணம் ஆனோம். வழியில் சர்ஜன்ராவ் சர்க்கிள் வட்டத்தில் உள்ள முருகன் கோயில், பாபுஜி நகரில்உள்ள ஆஞ்சநேயர் கோயில் ஆகியவற்றில் வழிபாடு செய்தோம். இடை வழியில் கைலாச ஆசிரம அன்பர் (தேவகோட்டை) திரு. லெ. சோமசுந்தரம் அவர்கள் எங்களுக்குப் பால் வழங்கினார்கள். தேவகோட்டை திரு. வ. மு. உடையப்பன் அவர்கள் இனிப்பு வழங்கினார்கள்.

காலை 8½ மணிக்குக் கயிலாச ஆசிரமம் சென்றடைந்தோம். அங்கு அற்புதமாக எழுந்தருளியுள்ள இராஜராஜேஸ்வரி அம்பிகையைத் தரிசனம் செய்தோம். அம்பிகையைக் காணக் கோடிக்கண்கள் வேண்டும்.

கைலாச ஆசிரமத்தில் காலை உணவு உண்டபின் இவ்வளவு பெரிய ஆஸ்ரமத்தைத் தோற்றுவித்து ஒப்பற்ற தொண்டாற்றும் **ஸ்ரீலஸ்ரீ திருச்சிசுவாமிகளின்** அறையில் அவர்களைச் சந்தித்து, அடி வணங்கி, ஆசிபெற்றோம். அவர்கள் எங்களை மிக மிக அன்பாக வரவேற்று, ஒருநாள் முழுதும் உபசரித்து, ஆசிகூறிய தோடு, என் வேண்டுகோளை ஏற்று என் கேள்விகளுக்குப் பதில்கூறி நல்லதொரு "பேட்டி" அளித்தார்கள். அப்பொழுது அவர்கள் அளித்த பேட்டி விவரம் வருமாறு:

"தமிழகம் கோயில்களுக்குப் புகழ்பெற்றது. கர்நாடகம் மடங்களுக்குப் பெயர் பெற்றது. தமிழ கத்தில் 36,000 கோயில்கள் உள்ளன, கர்நாடகத்தில்

36,000 மடங்கள் உள்ளன. புராண காலத்தில் துருவாசர் நிறுவியது இந்தக் கைலாச ஆசிரமம். இது முற்காலத்தில் அத்திமரவனமாக இருந்தது. இன்றும் இங்கு வெட்ட வெட்ட அத்திமரம் தழைக்கிறது. இங்கு தலவிருட்சம் அத்திமரம். இடைக்காலத்தில் இந்த மடம் மறைந்து போய்விட்டது. பிறகு இதனைக் கண்டு பிடித்துப் புனருத் தாணம் செய்தவர்கள் ஸ்ரீதிருச்சி சுவாமிகள். அவர்கள் சுமார் 30 வருடம் முன்பு கைலாசத்துக்கு யாத்திரை சென்று வந்த பின் இந்த மடத்தை இங்கு நிறுவி இருக் கிறார்கள்.

சைவக் குருக்கள் மடம் பதினாறில் இது ஒன்று. சைவர்களுக்காக இது நிறுவப் பட்டது. ராஜேஸ்வரி, சாமுண் டீஸ்வரி, சாரதாம்பிகை, வாதாபி வனசங்கரி என்ற பெயர்களில் அம்பிகை இம்மடங்களில் கொலு வீற்றிருக்கிறாள்.

இம்மடத்தின் கோயிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீராஜராஜேஸ்வரியின் பாதம் தரைமட்டத்தில் இருந்து நூறு அடிஉயரத்தில் உள்ளது. அப் பாதத்தின் கீழே தான் பெங்களூர் நகரம் உள்ளது, எனவே பெங்களூர் நகரம் எல்லா வளமும் நலமும் இயற்கை எழிலும் இனிய தட்ப வெப்பமும் உடையதாக இருக்கிறது.

இம்மடம் உள்ள இடம் தங்கம் விளையும் பூமியாகும். இம்மடத்தில் இருந்து சுமார் 30 மைலில் கோலார் இருக்கிறது. அங்கு தங்கம் வெட்டி எடுக்கப் படுகிறது.

கர்நாடக மாநிலம் சங்கீதத்துக்குப் பெயர் பெற்றதாகும். அதனால்தான் இங்கு தோன்றிய சங்கீதத்துக்குக் "கர்நாடக சங்கீதம்" என்ற பெயர் ஏற்பட்டது. இப்பெயரை வைத்தவர்கள் வித்தியானந்த சுவாமிகள் ஆவார்கள். கனகதாசர், புரந்தரதாசர் ஆகி

யோர் கர்நாடக சங்கீதத்துக்கு உரமூட்டி வளர்த்துள்ளார்கள். கர்நாடக மாநிலத்தில் சுமார் பத்தாயிரம் கர்நாடக சங்கீத நிறுவனங்கள் இருந்து இசை வளர்க்கின்றன.

சப்த (ஏழு) நதிகளில் காவிரி ஒன்றாகும். இது கங்கைக்குச் சமமானது. இது பொன் விளையும் கர்நாடக மாநிலத்தில் (குடகில்) தோன்றுவதால் இதற்குப் பொன்னி என்று பெயர். இது ஸ்ரீமந்நாராயணன் மடியில் உள்ளது.

ஆதிரெங்கம் ஸ்ரீரங்கம்; அந்தரங்கம் சிவசமுத்திரம்; மத்தியரங்கம் ஸ்ரீ ரங்கப் பட்டணம் — இவற்றில் ஸ்ரீரங்கம் தமிழ்நாட்டிலும், சிவசமுத்திரமும், ஸ்ரீ ரங்கப் பட்டணமும் கர்நாடகத்திலும் இருக்கின்றன.

ஹரித்துவாரில் கங்கை ஹரியின் காலைக் கழுவுகிறது, இங்கே காவிரி ஹரியின் மடியில் தவழ்கிறது.

கங்கைக் கரையில் 5 சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றில் காசி சிறப்பானது. காவிரிக் கரையில் ஏராளமான சிவஸ்தலங்கள் இருக்கின்றன. காவிரி உற்பத்தியாகும் இடம் தலைக்காவேரி ஆகும். இங்கு நகரத்தார்கள் கட்டியுள்ள சத்திரம் இருக்கிறது.

குடகில் காவிரி உற்பத்தி ஆவதால் குடகில் உள்ள பெண்கள் காவிரி தங்களை விட்டு விலகாமல் இருப்பதற்காகப் பின் கொசுவம் வைத்துச் சேலை கட்டுகின்றனர். அவர்கள் காவிரி உற்பத்தியான காலத்தில் முன் கொசுவம் வைத்துக் கட்டிய சேலையுடன் காவிரியில் குளித்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்களது முன் கொசுவம் விலகித் தானே பின் கொசுவம் ஆகி இருக்கிறது. அது முதல் குடகுப் பெண்கள் பின் கொசுவம் வைத்துக் கட்டும் பழக்கத்தை மேற்கொண்டனர்.

கைலாச ஆசிரமம் உள்ள இடத்தில் புராண காலத்தில் அத்திரி-அனுசூயா வாழ்ந்திருக்கின்றனர். பீருபைரவர் வாழ்ந்திருக்கிறார்.

தட்சன் யாகத்தை வீரபத்திரக் கடவுள் அழித்த பொழுது காது விழுந்த இடம் இதுவாகும். எனவே இங்கு எழுந்தருளி உள்ள ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரிக்கு "ஞானாட்சி" என்று பெயர்.

தங்கம் விளைவதோடு இப்பகுதியில் சந்தன மும் விளைகிறது. ஆதிசங்கரர் முதலில் மடம் நிறுவிய சிருங்கேரி இம்மாநிலத்தில் உள்ளது. காவிரி, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு, பவானி, அமராவதி ஆகிய ஆறு புண்ணிய நதிகள் இம்மாநிலத்தில் உற்பத்தி ஆகின்றன, வைணவ ஆசாரியர்களில் ஒருவ ராகிய ஸ்ரீ ராமானுஜர் இம்மாநிலத்தில் மேல்கோட்டை யில் 18 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்.

இம்மாநிலத்தில் ராயர்கள், வீர சைவர்கள் என்ற லிங்காயத்துக்கள் உள்ளனர். இவர்கள் சிவலிங்க உருவத்தைத் தம் கழுத்தில் அணிந்திருப்பர். இந்த லிங்காயத்துக்களுக்குப் பெரிய புராணமே பிரமாணம். இவர்கள் அனைவருக்கும் கன்னட மொழியில் எழுதப் பட்டுள்ள பெரிய புராண சுலோகங்கள் மனப்பாடம் ஆகும். சுமார் 900 ஆண்டுகட்கு முன்பு இலந்தூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த நிஜகுண ஈஸ்வரர் என்னும் புலவர் பெரிய புராணத்தைக் கன்னட மொழியில் மொழி பெயர்த்தார். அது முதல் லிங்காயத்துக்களுக்குக் கன்னடப் பெரிய புராணம் மனப்பாடம். அந்த அளவுக்குத் தமிழ்ச் சைவர்கள் பெரிய புராணத்தை மனப்பாடம் செய்திருக்கிறார்களா என்றால் ஐயமே. கர்நாடகத்தில் ஒரு கோடி எண்பது இலட்சம் வீர சைவர்கள் உள்ளனர். நஞ்சன் கூடு என்ற ஊரில்

அறுபத்து மூன்று நாயன்மார்கட்குப் பெரிய சிலைகள் உள்ளன.

கைலாச ஆசிரமம் உள்ள பகுதி நீர்வளம் மிகுந்த இடமாகும். இங்கு அத்திமரம் அருகில் உள்ள கிணறு ஒரு புண்ணிய தீர்த்தம் ஆகும். இக்கிணற்றில் வட கயிலாய மலையில் உள்ள மான சரோவர் ஏரித் தீர்த்தம் ஐக்கியம் ஆகி இருப்பதாக ஐதீகம்.

இந்த ஆசிரமத்தில் ஏராளமான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. பிரார்த்தனை மண்டபத்தில் அமர்ந்து தியானமும், பிரார்த்தனையும் செய்வது ஒரு பெரும் பேறாகும். இங்கு ஆகம பாடசாலை நிறுவப் பட்டுள்ளது. இதில் வேதம், வேதாந்தம், தர்க்கம், மீமாம்சம், ஆகமம், சங்கீதம் ஆகிய அனைத்தும் மாணவர்களுக்குக் கற்பிக்கப் படுகின்றன. இங்கு ஏராளமான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர் களுக்கு உணவு, உடை, உறைவிடம், பால் ஆகிய அனைத்தும் ஆசிரமத்தில் இருந்து இலவசமாக வழங்கப் பெறுகின்றன, இங்கு படித்த மாணவர்கள் பலர் ஜெகத் குருவாகி உள்ளனர். நகரத்தார்களின் தலைமைப் பீட மாகிய **கோயிலூர் மடாதிபதிகள்** இங்கே பலமாதம் தங்கி இருந்திருக்கின்றனர். நகரத்தார் ஆண்கள் குருபீட மாகிய கலாமடம்—பாதரக்குடி ஆதீனகர்த்தராகிய **தவத்திரு இரவீந்திர சுவாமிகள்** இங்கு பலமாதம் தங்கிக் கல்வி பயின்றவர்கள்.

கைலாச ஆசிரமத்திலும், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி கோயிலிலும் எல்லா வேளைகளிலும் நகரத்தார்களுக்கே முதல் மரியாதை வழங்கப் பெறுகிறது. இந்தப் பாரத நாட்டில் நகரத்தார்களுக்கு முதல் மரியாதை வழங்கும் இடம் இந்தக் கைலாச ஆசிரமமே ஆகும். அதற்குக் காரணம் நகரத்தார்களின் தர்மம், பண்பு ஆகியவற்றைத் திருச்சி சுவாமிகள் நன்கு அறிந்தவர்கள். மேலும் அவர்

களோடு நெருங்கிப் பழகியவர்கள். அவர்களது உதவிகளை இம்மடத்துக்கு இந்நாளிலும் முன்னாளிலும் பெற்றவர்கள். அவர்களுக்கு நகரத்தார்கள் பால் இருக்கிற ஈடுபாட்டுக்கு எல்லையே இல்லை.

கர்நாடக அரசு மத விஷயங்களில் தலையிடுவதில்லை, ஆயினும் கர்நாடக முதல் அமைச்சர் முதல் மற்ற அமைச்சர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் இம்மடத்தின்பாலும், திருச்சி சுவாமிகள் பாலும் அளவு கடந்த மரியாதை காட்டி, எல்லா விதமான உதவிகளும் செய்கின்றனர்,

இங்குள்ள இராஜராஜேஸ்வரி கோயில் நகரத்தார்களின் மேற்பார்வையில் அற்புதமாகக் கட்டப்பட்டுள்ளது. இங்கு நவராத்திரி விழா அருமையாகக் கொண்டாடப்படுகிறது. அடிக்கடி சண்டிஹோமம் முதலியன சாங்கோபாங்கமாக நடத்தப்படுகின்றன. இக்கோயிலுக்கு முடிப்பிரார்த்தனை, பாதயாத்திரை, பால்குடம் எடுப்பு முதலிய நேர்த்திக் கடன்களை மக்கள் செலுத்துகின்றனர்.

இம்மடத்துக்கு அருகில் நகரத்தார் சங்கத்தின் சார்பில் "நகரவிடுதி" கட்ட சுவாமிகள் இடம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீசுவாமிகள் தங்கி உள்ள அறையில் எல்லா மதத்துச் சான்றோர்கள், தெய்வங்களின் படங்கள் உள்ளன. இவர்கள் சமரச மனப்பான்மை உடையவர்கள். மதங்களுக்குள் ஒற்றுமை இருக்க வேண்டுமே ஒழிய வேற்றுமை கூடாது; அடிதடி கூடாது என்ற கருத்துடையவர்கள். இவர்களை இந்திய நாட்டின் எல்லாப் பகுதி மக்களும் வந்து வணங்கி ஆசிபெற்றுச் செல்கின்றனர். நாங்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது வடநாட்டில் இராணுவத்தில் பணியாற்றும் பல

அதிகாரிகள் வந்து வணங்கி, வாழ்த்துப் பெற்றுச் சென்றதை நேரில் கண்டோம். இங்கு தினந்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள், வந்து அம்பாளை வணங்கி, ஸ்ரீசுவாமிகளின் அருள் பெற்றுச் செல்கின்றனர்.

திருச்சி சுவாமிகள் எங்களது காசி நடைப் பயணத்தை மிகவும் போற்றினார்கள். ''இது மாதிரி ஒரு நெடிய பயணத்தை யாரும் மேற்கொள்ளத் துணிய மாட்டார்கள். நகரத்தார்கள் கோயில் வழிபாட்டில் மிக நம்பிக்கை உடையவர்கள். ஆகவேதான் இத்தகு பெரிய யாத்திரையை நகரத்தார்களாகிய நீங்கள் துணிவோடு மேற்கொண்டிருக்கிறீர்கள். இங்கு எழுந் தருளி இருக்கும் ஸ்ரீராஜராஜேஸ்வரிக்கு முதன்முறை யாகப் பெங்களூரில் இருந்து நகரத்தார்கள்தான் பால் குடம் எடுத்துப் பாதயாத்திரையாக வந்து அபிஷேகம் செய்தனர். அதன் பிறகு மற்றவர்களும் பால்குடம் எடுத்து வருகின்றனர். இப்பொழுது நகரத்தார்களாகிய நீங்கள் காசிக்குப் பாதயாத்திரை செல்கின்றீர்கள். இனிமற்றவர்களும் இவ்வழியில் ஈடுபடுவார்கள். நீங்கள் நடந்து செல்லும் இக்காலம் மிகக்கொடிய வெயிற் கால மாகும். அனல்காற்று தொடர்ந்து அடிக்கும். எனவே உங்கள் மடியில் ஒரு பெரிய வெங்காயத்தைக் கட்டிக் கொள்ளுங்கள். அந்த வெங்காயம் அனல் காற்றின் வெப்பத்தை ஈர்த்துக் கொண்டு, உங்களை வெப்பம் தாக்காமல் காக்கும். ஒருகால் வெப்பத் தாக்குதல் (Sunstroke) ஏற்பட்டு, வயிற்றுப்போக்கு உண்டானால், மடியில் உள்ள வெங்காயத்தை நசுக்கி, இடித்து, அதன் சாற்றைப் பருகுங்கள். வயிற்றுப் போக்கு நின்றுவிடும். அதிகமான கார உணவைச் சாப்பிடாதீர்கள். பால் மோர், இளநீர், பழம் இவற்றை அதிகமாக உண்ணுங்கள். இரவில் நடக்காதீர்கள். நீங்கள் பத்திர மாகக் காசிக்கு நடந்து போய்க் கடவுளை வணங்கி இனிதே வீடு திரும்புவீர்கள். உங்கள் அனைவர்க்கும்

என் ஆசிர்வாதம்'' என்று எங்களை அன்போடு வாழ்த்தினார்கள். அவர்களது மனமார்ந்த வாழ்த்து பலித்தது. அத்துடன் அவர்களது அறிவுரைகள் எங்கட்கு மிகவும் பயன் அளித்தன. அன்று மாலையிலேயே எங்கள் மடியில் ஒரு பெரிய வெங்காயத்தைக் கட்டிக் கொண்டோம்.

கைலாச ஆசிரமத்தில் காலையில் நாங்கள் நுழைந்த போது பெங்களூர் ''தினச்சுடர்,' பத்திரிகை நிருபர் எங்களைப் படம் பிடித்தார். மாலையில் நாங்கள் பெங்களூருக்குத் திரும்பிய பொழுது ''தினச்சுடர்'' பத்திரிகை மாலைப் பதிப்பில் எங்களைப் பற்றிய செய்தியும் புகைப்படமும் அச்சாகி இருக்கக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தோம்.

19-3-83 காலைப் பதிப்பும் 18-3-83 மாலைப் பதிப்பும் ஆகிய ''தினச் சுடரில்'' நாங்கள் நடந்து வருகின்ற புகைப்படத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டு அதன் கீழே, கீழ்க்கண்டவாறு செய்தி வெளியிட்டிருந்தார்கள். ''ராமேசுவரத்தில் இருந்து காசிக்கு நடந்தே செல்லும் இவர்கள் பெங்களூர் வந்தார்கள். திருச்சி சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றார்கள். செய்தி விபரம் 4-ஆம் பக்கம்'' என்று முதல் பக்கத்தில் அச்சிட்டு 4-ஆம் பக்கத்தில் வெளியிட்டிருந்த விபரம் வருமாறு:

ராமேசுவரத்திலிருந்து நடந்தே வந்த 13 பேர் காசி வரை பாதயாத்திரை

பெங்களூர் மார்ச் 18-: தமிழ் நாட்டில் ராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டுக் காசி வரை நடந்தே செல்கிறார்கள் 13 பேர். தமிழ் நாட்டில் செட்டி நாட்டைச் சேர்ந்த 13 பேர் ராமேசுவரம் முதல் காசி வரை நடந்தே செல்கிறார்கள். 25 வயது முதல்

65 வயது வரை உள்ளோர் இக்குழுவில் உள்ளார்கள். நேற்று மாலை பெங்களூர் எல்லையில் இவர்களை இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு வட்டார நிர்வாகி நாராயணன் வரவேற்று அழைத்து வந்தார்.

இன்று திருச்சி சுவாமிகளின் கைலாச ஆசிரமம் சென்றார்கள். நாளை பெங்களூரில் இருந்து புறப்பட்டு எலகங்கா வழியாகச் செல்கிறார்கள்.

இந்தக் குழுவில் கவிஞர் சோம சுந்தரன், சிதம்பரம் செட்டியார், ராகவன், தேனிமலை, பழனி யாண்டி, ராசாங்கம், அடைக்கப்பன், நல்லதம்பி, தங்கவேல், அய்யாமி, தியாகராசன், சுப்பையா ஆகியோர் உள்ளார்கள்.'' என்பதாக பெங்களூர் தினச் சுடர் பத்திரிகை சுடச் சுடச் செய்தி வெளியிட்டிருந்தது. இதைப் படித்துவிட்டு எங்களை வரவேற்ற பொதுமக்கள் ஏராளம்.

மாலையில் திருச்சி சுவாமிகள் எங்களுக்கு ஆப்பிள் பழம் வழங்கி ஆசி கூறி வழி அனுப்பினார்கள். அவர்கள் எங்களுடன் அமர்ந்து சமபந்திபோஜனம் உண்டதையும், எங்களுக்கு ஒரு தாயாக இருந்து ஆசி கூறியதையும் எங்களால் மறக்கவே இயலாது. அந்த இனிய நினைவுகளோடு கைலாச ஆசிரமத்தில் இருந்து புறப்பட்டோம். அன்று ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அமபிகை சந்நிதியில் அடியேன் இயற்றிய பாடலைப் பாட லானேன்.

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

உலகாளும் ஞானாட்சி ராஜேஸ்வரி
உன்பாதம் பணிகின்றோம் பரமேஸ்வரி
விலகாமல் அருள்வாயே புவனேஸ்வரி
வினையாவும் !பொடியாக்கும் ராஜேஸ்வரி
(உலகாளும்)

அண்டங்கள் எல்லாமுன் அடியாகுமே
அருளாளர் உள்ளங்கள் முடியாகுமே
கண்டங்கள் தொழுதோர்க்குப் பொடியாகுமே
கலையாவும் கலசத்தில் கொடியாகுமே.
(உலகாளும்)

வேதங்கள் காணாத பொருளானவள்
வெற்றிக்கு மேலான அருளானவள்
பாதங்கள் நோவோர்க்குப் பலமானவள்
பாட்டாலே தொழுவோர்க்குக் கலமானவள்
(உலகாளும்)

கருநாட கம்கண்ட புவனேஸ்வரி
கயிலாய ஆசிரம ராஜேஸ்வரி
இருள்நீக்கி உலகுக்கு வழிகாட்டவே
எழுந்தோடி வாஅம்மா ராஜேஸ்வரி
(உலகாளும்)

கண்கண்ட திருச்சிசாமிக் குயிரானவள்
கயிலாய ஆசிரமப் பயிரானவள்
பொன்கொண்ட தீர்த்தங்கள் தினம் கண்டவள்
புகழ்கொண்ட பாடல்கள் மனம்
கொண்டவள்
(உலகாளும்)

அடியேன் பாடி முடித்ததும் தேவகோட்டை அன்பர் திரு. லெ. சோமசுந்தரம் தான் இயற்றிய "காலமெலாம் நினைவிருக்கும் காசியாத்திரை" என்ற அற்புதமான பாடலைப் பாடினார். அப்பாடலை நாங்களும் சேர்ந்து பாடினோம்.

கால்நடைப் பயணத்திலே காசியாத்திரை—காசி
விஸ்வநாதர் கோவிலுக்குப் பாதயாத்திரை
அலைகடலான் செந்தூரான் வேலும் ஏந்தியே—பல
அன்பர்களை வழிநடத்திச் செல்லும்யாத்திரை

பார்த்ததுண்டு பலவருடம் பழனியாத்திரை—இன்று
பார்ப்பதுதான் முதன்முதலில் காசியாத்திரை
செல்வவளம் பெருகவேண்டிச் செல்லும்யாத்திரை—நமது
செட்டிகுலம் தழைக்கச்செய்யும் பக்தியாத்திரை
கஷ்டமெல்லாம் தீர்த்துவைக்கும் காசியாத்திரை—நமது
கவலையெல்லாம் போக்கிநம்மைக் காக்கும்யாத்திரை
சித்தர்களும் முனிவர்களும் செய்தயாத்திரை—இன்று
செட்டிமக்கள் கூடிச்செல்லும் காசியாத்திரை
திருமுருகன் அருள்துணையில் தீர்த்தயாத்திரை—ஸ்ரீ
திருச்சிஸ்வாமி ஆசிபெற்றுச் செல்லும்யாத்திரை
பாரதத்தாய் அருளைப்பெற பக்தியாத்திரை—தெய்வ
பக்திநலம் பெருக்கும்நல்ல பாதயாத்திரை
பெங்களூரில் நகரத்தார்கள் ஒன்றுகூடியே—மிக்க
பெருமையுடன் வழியனுப்பும் பாதயாத்திரை
கங்கையிலே நீராடும் புனிதயாத்திரை—நமது
காலமெல்லாம் நினைவிருக்கும் காசியாத்திரை

இப்பாடல்களை உருக்கமாகப் பாடிக்கொண்டே நாங்கள் நடந்து பெங்களூருக்கு இனிதே இரவு 9-மணிக்கு வந்து சேர்ந்தோம். திரு. நாராயணன் இல்லத்தில் இரவு உணவு பெங்களூர் இந்தியன் பாங்க் வட்டார மேலாளர் திரு. சித. சுப்பையா (தேவகோட்டை) அவர்களால் வழங்கப் பெற்றது.

மறுநாட்காலை நாங்கள் பயணம் புறப்பட வேண்டும். இரண்டு நாட்களாகப் பெங்களூர் அன்பர்களின் அரவணைப்பில் இனிதாகப் பொழுது கழிந்தது. அத்துடன் எங்கள் பயணத்துக்கு வேண்டிய கனமான கூடாரத்தை (Tent) சென்னையில் சிறப்பாகத் தயார் செய்து என் தம்பி **மு. இராம. மெய்யப்பன்** கொண்டு வந்து தந்தான். அவன் மனைவி மக்களும் அவனுடன் வந்து எங்களிடம் ஆசி பெற்றனர். மேலும் எங்கள் குழுவைச் சேர்ந்த பலரின் குடும்பத்தினரும் பெங்களூருக்கு வந்திருந்தனர். அனைவருடனும் அன்று இரவு முழுதும் உரையாடி மகிழ்ந்து விடிகாலையில் சிறிது நேரம் மட்டுமே உறங்கலானோம்.

43. முப்பத்தொன்றாம் நாள்

(எலகங்கா)

காலை 6 மணிக்குப் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டோம். பெங்களூரில் உள்ள **ரமண மகரிஷி** ஆசிரமம் கண்டு மகிழ்ந்து, பயணம் தொடர்ந்தோம், வழியில் வேளாண்மைப் பல்கலைக் கழகம், இராணுவப் பண்ணை, கிர்லோஸ்கர் தொழிற்சாலை, இந்தியா கோட்டட் கார்ட்டன்ஸ் (பி) லிமிடெட் முதலியவற்றை கண்ணுற்றோம். பெங்களூர் கண்டோன்மெண்டு பாங்க் ஆப் மதுரை திரு. வி. முத்தையா அவர்களும், கண்டனூர் அன்பர் திரு. இராம. இராமநாதன் அவர்களும் எங்களுக்குக் காலைப் பலகாரம் பாதையில் கொண்டு வந்து தந்தனர். காரைக்குடி திரு. எம். தியாகராஜன் அவர்களும் அவர் மனைவியும் ரொட்டி, காப்பி முதலியன வழங்கினர். பகல் 12½ மணிக்கு "பியாட்டராயணபுரம்" என்ற ஊருக்குச் சென்று அங்கிருந்த பெருமாள் கோயிலில் தங்கினோம். வெயில் இல்லாமல் சாரலாக இருந்ததால் 12 மைல் தூரம் தொடர்ந்து நடக்க எங்களால் முடிந்தது. காலை உணவு தந்தவர்களே மதிய உணவும் கொண்டு வந்து தந்து எங்களது கடும்பசி போக்கினர். பெங்களூர் அன்பர்கள் பெங்களூருக்கு நாங்கள் வருவதற்கு முதல் நாளில் இருந்து, கர்நாடக மாநிலத்தில் நாங்கள் பயணம் செய்யும் நாள் வரை எங்களுக்குத் தொடர்ந்து உணவு வழங்கி வந்தார்கள். மேலும் எங்கட்குக் கர்நாடக நகரத்தார் சங்கத்தின் சார்பாக ரூ. 701- நன்கொடையும் வழங்கினார்கள்.

பியாட்ட ராயணபுரம் பெருமாள் கோயிலில் இருந்து மாலை 5½ மணிக்குப் புறப்பட்டு சுமார் 4 மைல் நடந்து இரவு 7 மணி அளவில் **எலகங்கா** என்ற ஊரில்

உள்ள ஸ்ரீ ஐயப்ப சமாஜம் கோயிலுக்கு வந்து சேர்ந்தோம், அக்கோயில் ஒரு பெரிய தென்னந்தோப்பில் இருக்கிறது. அங்கு வந்து தென்னை மரத்தடியில் தங்கினோம். நாங்கள் உட்கார்ந்த மறுவினாடி சில தென்னை மட்டைகள் மரத்தில் இருந்து உதிர்ந்து விழுந்தன. எங்கள் தலை அருகே வந்தவை, எங்கள் தலைக்கு மேல் கட்டியிருந்த ஒரு கொடிக் கம்பி தடுத்துச் சில அங்குல தூரம் தள்ளி விழுந்தன. நல்லவேளை தப்பினோம்! இல்லாவிட்டால் மட்டையின் தாக்குதலைத் தாங்க எங்களுக்கு வலுவில்லாமல் நாங்கள் விழுந்திருப்போம். அப்பொழுது எனக்கு மலையாளப் பழமொழி ஒன்று நினைவுக்கு வந்தது. மலையாளத்தில் பெரம்பாவூரில் வாழ்ந்த பொழுது என் பெரிய மாப்பிள்ளை திரு. சி. இராமசாமி அந்தப் பழமொழியை அடிக்கடி கூறுவார். "மனுஷன் சதிச்சாலும் தெங்கு சதிக்காது." அதாவது "மனிதன் தீங்கு செய்தாலும் தென்னை தீங்கு செய்யாது" என்பது மலையாளப் பழமொழியாகும். தென்னை மட்டை, காய் முதலியன மனிதன் மீது ஒரு காலும் விழாவாம். அது உண்மையானதை எலகங்காவில் கண்டோம்.

"இந்தியா கோட்டட் காட்டன்ஸ்" (I. C. C) என்ற நிறுவனத்தில் பணியாற்றும் திரு. அரு. வள்ளியப்பன், இராமசாமி, இராமநாதன், இராமய்யா ஆகிய அன்பர்கள் எங்கட்குப் பொன்னாடை போர்த்தி இரவு உணவு வழங்கினார்கள். உள்ளூர் அன்பர்களும், கோயில் உரிமையாளர் திரு. பில்ராமய்யா அவர்களும் ஸ்ரீ ஐயப்ப பஜனை செய்து எங்களை ஆசீர்வதித்தார்கள். பஜனையில் நாங்களும் கலந்து கொண்டோம். எலகங்காவில் துணித் தொழில் புரியும் தமிழகத்தைச் சேர்ந்த திரு. கே. செய்யத் முகமது என்பவர் எங்கட்கு இளநீர் வழங்கியதுடன், அவரும், திரு. வள்ளியப்பன் அவர்களும் தொடர்ந்து பல நாட்கள் எங்களை இடை இடையே வந்து சந்தித்துப் பல உதவிகள் செய்தது மறக்கமுடியாததாகும்.

44. முப்பத்திரண்டாம் நாள்—

(சிக்கஜாலா - தேவனஹள்ளி)

காலை 5½ மணிக்குப் புறப்பட்டோம். வழியில் எல்லைப் பாதுகாப்படை நிலையம், எலகங்கா விமானப் படை நிலையம், எலகங்கா கேந்திர வித்தியாலயம் ஹன்ஸ்மாரனஹள்ளி ஜூனியர் கல்லூரி (அதாவது நம் தமிழகத்தில் உள்ள மேல் நிலைப் பள்ளி போல்—ஆனால் 11, 12 வகுப்பு மட்டுமே உள்ள கல்வி நிலையம்) ஆகிய வற்றைக் கண்ணுற்ற வாறே நடந்தோம்.

ஹன்ஸ் மாரனஹள்ளி ஒரு பெரிய சிவஸ்தலம் ஆகும். அங்குள்ள சந்திரமௌலீஸ்வரர் கோயிலில் விநாயகர், சண்முகம், சிவன், பார்வதி, திரிசூலம், நந்தி மீதுள்ள சிவலிங்கம் ஆகிய தெய்வங்களை வணங் கினோம்.

பெட்டல்சார் (Bettahalsor) என்ற இடத்தில் உள்ள மலைப் பகுதியில் சுமார் 5000 பேர் கல்லுடைக்கின்றனர் இவர்களில் ஏராளமான தமிழர்களும் இருக்கின்றனர். இவர்கள் எங்களைக் கண்டு அன்புடன் உரையாடினர்.

சுமார் 9 மைல் நடந்து காலை 9 மணிக்கு சிக்கஜாலா என்ற ஊருக்குச் சென்று அங்கிருந்த ஆஞ்சநேயர் கோயிலில் தங்கினோம். பெங்களூருக்கு வடக்கே உள்ள இப் பகுதிகளில் ஏராளமான புதிய தொழிற்சாலைகள் தோன்றி உள்ளன. இவற்றில் எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் பணிபுரிகின்றனர். இத்தகு தொழிற்சாலை

ஒன்று "எஸ் அண்ட் எஸ் புஷ்ஷிங்ஸ் லிமிடெட்" என்னும் தொழிற்சாலையாகும். இதில் பணிபுரியும் திரு. S. பழநிசாமி (பூலாம்பட்டி) சேலம் மாவட்டம், திருஞானம் (கிருஷ்ணகிரி) நடராசன் (திருச்சி), செல்லம் (அளவிடங்கான்) நாகராசன் (அளவிடங்கான்) ஆகிய தொழிலாள இளைஞர்கள் எங்களைத் தற்செயலாகச் சந்தித்தார்கள். விடாப் பிடியாக எங்களை அவர்கள் வாழும் சிறிய அறைக்கு அழைத்துச் சென்று, அமர வைத்து **அவல் உணவு** தயாரித்து எங்களுக்கு வழங்கினர். அவர்களது அன்பு எங்களை நெகிழவைத்தது. கிருஷ்ண பரமாத்மாவுக்குக் குசேலர் அவல் உணவு வழங்கிய அன்புக் காட்சி எங்கட்கு நினைவுக்கு வந்தது.

திரு. செய்யது முகமது அவர்களும், திரு. கோபால் என்னும் அன்பரும் எலகங்காவில் இருந்து திராட்சைப்பழம் வாங்கி வந்து எங்கட்குத் தந்து எங்களோடு நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

மாலை 5 மணி அளவில் புறப்பட்டு 7 மைல் நடந்து இரவு 8 மணி அளவில் **தேவனஹள்ளி** என்ற ஊரை அடைந்து அங்குள்ள ஒரு சிறிய ஆஞ்சநேயர் கோவிலில் வாழிபாடு செய்து எதிரில் உள்ள அரசாங்க அலுவலகத்தில் தங்கினோம். இவ்வூர் வரலாற்றுப் புகழ் மிக்க இடமாகும். இவ்வூரில் தான் **திப்புசுல்தான்** பிறந்தான். மைசூர் ராஜ்யத்தை இந்து மன்னர்கள் ஆண்ட காலத்தில் ஹைதர் அலி தேவனஹள்ளியில் வசித்த காலத்தில், இங்குள்ள ஒரு சிறு குடிசை வீட்டில் திப்பு பிறந்தான். அப்பொழுது திப்பு வறுமையில் தவழ்ந்தான். திப்பு பிறந்த வீடு சுமார் 400 சதுர அடி பரப்பு உடையதாக இருக்கலாம். ஏழைகள் நிறைந்த பகுதியில் அது இருக்கிறது. இப்பொழுது அந்த இடத்தில் ஒரு நினைவுத் தூண் நாட்டி இருக்கிறார்கள். அது

வரலாற்றுச் சின்னமாக அரசாங்கத்தால் பராமரிக்கப் படுகிறது.


ஹைதர் அலி ஒரு போர் வீரனாக இருந்த காலத்தில் இந்து ஜோஸ்யர் ஒருவர் ஒருநாள் அவனது கை ரேகைகளைப் பார்த்து "நீ விரைவில் மைசூர் ராஜ்யத்தின் மன்னன் ஆவாய்'' என்றாராம். அவன் அப்பொழுது ஒரு ஏழைப் படைவீரன். எனவே அவன் அந்த ஜோஸ்யத்தை நம்பாமல் சிரித்தானாம். உடனே அந்த ஜோசியன் அவனைப் பார்த்து "நீ மன்னன் ஆனால் எனக்கு என்ன தருவாய்'' என்றானாம். "நீ என்ன கேட்டாலும் தருகிறேன்'' என்று கூறிவிட்டு ஹைதர் தன் குதிரையில் ஏறிப் போய் விட்டானாம்.

பிறகு வெகு விரைவில் ஹைதர் அலி குதிரைப் படைத் தலைவனாகி, படைத்தளபதியாகி, அதன் பின் இந்து அரசை வீழ்த்தி மன்னனாகிவிட்டான். மைசூரில் முஸ்லிம் அரசை நிறுவினான். எனினும் பூரணய்யா போன்ற சிறந்த அறிவாளிகளை அமைச்சராக வைத்துக் கொண்டு அவர்கள் ஆலோசனைப்படி நீதியோடு அரசாண்டான். அவன் அரசன் ஆனதும் தேவனஹள்ளியில் இருந்த ஜோசியரைக் கண்டுபிடித்து அவருக்கு வேண்டிய நிலங்களை மானியமாகக் கொடுத்தான்.

ஏழையாகப் பிறந்த திப்பு ஹைதருக்குப் பிறகு மைசூர் அரசைக் கட்டிக் காத்தான். திப்பு ஒரு சிறந்த போர்வீரன். அத்துடன் நல்ல நீதிமானும் ஆவான். அவன் ஆங்கிலேயருக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தான். இந்தியாவில் மதவேறுபாடு கருதாமல் அரசாண்டவன் திப்பு ஆவான். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு (National Integration) முதல் விதை ஊன்றியவன் திப்பு ஆவான்.

திப்பு பிறந்தது கி.பி. 1751ஆம் ஆண்டில். அவன் பிறந்த வீட்டுக்கு அருகில் ஒரு கோட்டை இருக்கிறது. கோட்டைக்குள் **சித்தேஸ்வரா கோயில்** என்ற பெரிய அழ கான கோயில் காட்சி அளிக்கிறது. எங்கும் பளிங்குத் தரை போட்டிருக்கிறார்கள். இங்கு சிவனுக்கு மேலே உள்ள அழகிய நாகாபரணம் கண்ணைப் பறிக்கிறது. இக்கோயிலுக்கு அருகில் வேணுகோபலசாமி கோயில் திகழ்கிறது.

கோட்டை அருகில் வயல்களில் ஏராளமாக காரட், பீட்ருட், காலிபிளவர், நூக்கோல், கேப்பை முதலியன விளைகின்றன. இங்கு உள்ள கிணற்றுக் குழாய் நீரில் குளித்து இறை வணங்கினோம். இங்கு இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த சத்திரக்குடி என்ற ஊரைச் சார்ந்த முத்துசாமி என்பவர் முறுக்கு வியாபாரம் செய்யக் கண்டோம். அவர் எங்களுக்கு முறுக்கு வழங்கி உபசரித்தார்.



45. முப்பத்து மூன்றாம் நாள்

(வெங்கடகிரிக்கோட்டை-நந்திமலை-சிக்பலப்பூர்)

இன்று காலை தேவனஹள்ளி கோட்டைக்குள் சென்று சிவ-விஷ்ணு வழிபாடு செய்து புறப்பட்டோம். தோட்டத்தில் பணியாற்றும் ஊழியர்கள் எங்களுக்குக் காரட், பீட்ரூட் முதலிய காய்கறிகளை அன்பளிப்பாகத் தந்தார்கள். அவற்றைச் சமையலுக்கு வைத்துக் கொண்டோம். பச்சைக் காரட்டைத் தின்றுகொண்டே பயணம் புறப்பட்டோம்.

வழியில் அரசாங்கப் பட்டுப் பண்ணை, முசுக் கொட்டைச் செடி விளையும் தோட்டங்கள், திராட்சை விளையும் தோட்டங்கள் ஆகியவற்றைக் கண்ணுற்ற வாறே நடந்தோம்.

சிறிது தொலைவில் மலைச் சூழலில் ஆவத்தி, கோரமங்கலம் என்ற ஊர்களுக்கு அருகில் அரசாங்கத் திறந்த வெளிச் சிறையும் (Open air jail), பண்ணையும் கண்டோம். இப்பகுதி வழியாக நாங்கள் சென்ற பொழுது சாலையின் இரு மருங்கும் திராட்சைத் தோட் டங்களைக் கண்டோம். இங்கு ஹைதராபாத் இனிப்புத் திராட்சை கூடை ஆறு ரூபாய்க்குக் கிடைத்தது. இத் தோட்டக்காரர்கள் சாலைவழியே நடக்கும் வழிப்போக் கருக்குப் பயன்படும் வகையில் தோட்டத்துக்கு வெளியே தொட்டி கட்டிவைத்திருக்கின்றனர். அதில் சுத்தமான குடிநீர் இருக்கிறது. எனவே எங்கட்கு இப்பகுதியில் குடி நீர்ப் பஞ்சம் ஏற்படவில்லை.

8 மைல் நடந்து காலை 10 மணிக்கு வெங்கட கிரிக்கோட்டை என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அங்குள்ள சென்ன கேசவப் பெருமாள் கோயிலில் தங்கினோம். அக்கோயில் கும்பாபிஷேகம் ஆகி மூன்று நாட்கள்தான் ஆகி இருந்தது. எனவே அவ்வூர் மக்கள் காசியாத்திரிகர் ஆகிய எங்களை மிகவும் பக்தியோடு வரவேற்று, உபசாரங்கள் செய்தனர்.

இவ்வூருக்கு அருகில் ஒரு பெரியமலை இருக்கிறது. இங்குள்ள தோட்டங்களில் திராட்சை, கத்தரிக்காய், பீன்ஸ், தக்காளி முதலியன ஏராளமாக விளைகின்றன. இவ்வூர் திரு. எஸ். பில்லப்பா என்பவர் எங்கட்குத் தமது தோட்டத்தில் இருந்து திராட்சைப் பழம் கொண்டுவந்து தந்தார். பொதுமக்கள் அரிசி, கத்தரிக்காய், பீன்ஸ், தக்காளிப்பழம் தந்தனர். ஒரு பெண்மணி அவற்றைச் சமையல் செய்து எங்கட்கு மதிய உணவு வழங்கினார். கே. எம். ரத்தினம்மா என்ற அம்மையார் மாலையில் பால், காப்பி வழங்கினார்.

எலகங்கா அன்பர் திரு. செய்யத் முகமது, எலகங்கா திரு. பி. காளிமுத்து, அரு. வள்ளியப்பன் ஆகியோர் இங்கும் வந்து எங்கட்கு ரொட்டி வழங்கினர். அப்பொழுது திரு. செய்யத் முகமது கூறிய கருத்துக்கள் எங்களை மிகவும் கவர்ந்தன. "நான் ஒரு முஸ்லிமாக இருந்தாலும் இந்திய கலாசாரத்தில் மிகவும் ஈடுபாடு உடையவன். முன்பு நான் புகைபிடிப்பது (சிகரெட்) உண்டு. பிறகு அறிவு தெளிந்த பின் அல்லா பேரில் சபதம் செய்து புகை பிடிப்பதை நிறுத்தினேன். காந்தி, நேரு போன்ற இந்தியத் தலைவர்கள் இறந்த நாளில் நான் நோன்பு இருந்து உபவாசம் இருக்கிறேன். இந்திய ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் மிகவும் ஈடுபாடு உடையேன். உங்கள் யாத்திரை இந்திய ஒருமைப்பாட்டுக்கு மிகவும் பயன்படக் கூடியது. எனவேதான் உங்களைப் பிரிய மனமில்லாமல் ஒவ்வொரு நாளும் எலகங்காவில் இருந்துவந்து உங்களைத் தரிசிக்கிறேன். உங்களைத்

தரிசித்தால் இந்தியாவைத் தரிசித்தது போல'' என்று அவர் கூறிய வார்த்தைகள் எங்கட்கு மெய் சிலிர்க்க வைத்தன. அவர் புரிந்து கொண்ட இந்த உண்மையை எத்தனைபேர் புரிந்து கொண்டார்களோ தெரியாது. எங்கள் இறைவணக்கப் பாடலில் தினமும்,

''ஒரு நாடாய் எல்லோரும் உயர்வாகவே
ஒன்றாகப் பூசித்தோம் விஸ்வேஸ்வரா''

—என்று நாங்கள் பாடியதும், வழிபட்டதும் உண்மை யாயிற்று அல்லவா?

நாங்கள் காசியாத்திரை புறப்பட்டுச் சென்ற நான்கு மாதத்திலும் சரி, பிறகு திரும்பிவந்த 3 வார காலத்திலும்சரி எங்கள் குடும்பத்திலோ, அல்லது இந்தி யாவிலோ, அல்லது தமிழகத்திலோ, அல்லது உலகம் பூராவிலுமோ எங்குமே பெரிய பிரச்னைகள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் நாங்கள் யாத்திரையெல்லாம் முடித்து ஜுலை 2 ஆம் நாள் ஊருக்குத் திரும்பிய சில நாட்களில் இந்தியாவில் பஞ்சாப் பிரச்னை பூதாகார மாக உருவெடுத்தது. இலங்கைத் தமிழ் ஈழப் பிரச்னை அதைவிடப் பெரிய உலகப் பிரச்னையாக வளர்ந்தது. என்றாலும் எங்கள் பிரார்த்தனை வீண்போக வில்லை. இந்தியாவில் ''காலிஸ்தான்'' உருவாகக் கூடிய நேரத் தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் துணிவாக இராணுவ நடவடிக்கை எடுத்துக் காலிஸ் தான் ஏற்படாமல் தடுத்தார். பிறகு தன் உயிரையே இந்திய ஒற்றுமைக்காக ஈந்து இந்திய மக்கள் அனைவ ருக்கும் இந்திய ஒருமைப்பாட்டு உணர்வை ஏற்படுத் தினார். எனவே எங்கள் பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்த்திருக்கிறான் என்பதில் ஐயமில்லை. அதனை திரு. செய்யத் முகமது போன்ற அன்பர்கள் பரிபூரண மாக உணர்ந்து பாராட்டியது எங்களுக்குத் தெம்பூட்டியது.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டு நந்திமலை அடைந்து அடிவாரத்தில் உள்ள **போக நந்தீஸ்வரர்** கோவிலில் வழிபட்டோம். மலைக்குமேல் உள்ள கோயிலில் யோகநந்தீஸ்வரர் காட்சி அளிக்கிறார். மலை அடிவாரத்தில் உள்ள அற்புதமான கோயிலில் போகநந்தீஸ்வர் காட்சி அளிக்கிறார். இக்கோயிலுக்கு ஒரு பெரிய வரலாறே இருக்கிறது. பல்லவ, சோழ, ஹொய்சள, ராஷ்ட்ரகூட, விஜயநகர மன்னர்கள் இங்கு பல திருப்பணிகள் செய்துள்ளனர். உமாமகேசுவரர் சந்நிதியில் உள்ள சிற்பங்கள் மிக அருமையானவை. நான்கு தூண் சிற்பம் அற்புதமாக இருக்கிறது. கோயில் சுவர் முழுவதும் கண்ணையும் கருத்தையும் கவரும் ஏராளமான சிற்பங்கள் காட்சி அளிக்கின்றன. தூண்களைத் தட்டினால் பல ஒலிகள் எழுகின்றன.

இங்குள்ள சிம்மமுகவிநாயகர் பார்க்கத்தக்கது. கோயிலின் முன் உள்ள **கல்சக்கரத்தேர்** மகாசிவராத்திரி நாளில் ஓடுமாம். எல்லா ஊரிலும் தேர் மரத்தால் இருக்கும். ஆனால் இங்கு மட்டும் தேர்ச்சக்கரம் கல்லால் ஆகி இருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் வடம் பூட்டி இழுக்கக் கல்சக்கரத்தேர் மிக எளிதாக ஓடுமாம். மகாசிவராத்திரி அன்று சுவாமி திருக்கல்யாணம் நடைபெறுமாம்.

இங்குள்ள **அருணாசலேஸ்வரர் கோயில்** சோழ மன்னர்கள் கட்டியதாகும். இங்கு (திருவண்ணாமலையில் உள்ளது போல்) அருணாசலநாதர் (அண்ணாமலையார்) அபிகுஜாம்பாள் (உண்ணாமலை அம்மன்) முதலிய தெய்வங்களும் கிரிஜாம்பாள், கட்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளும், அருள் பாலிக்கக் காண்கிறோம். இக்கோயிலின் வெளிச் சுவரில் நடராஜர் சிற்பம் இரண்டு கால்களும் ஊன்றி நிற்கும் முறையில் காட்சி அளிக்கிறது. கோபுரம்

முழுதும் கருங்கல் திருப்பணியாகும். கோயில் பிரகாரம் முழுதும் சிற்பங்கள் நிறைந்துள்ளன.

மிகப் பெரிய கல்யாண மண்டபம் உள்ளது. இங்கு சுவாமி திருக்கல்யாணம் நடைபெறுமாம். இங்கு ஒருஊஞ்சல் திகழ்கிறது. இதில் சுவாமி ஊஞ்சல் ஆடுவாராம். சுற்றி நின்று மக்கள் வழிபட மண்டபம், தெப்பக்குளம் எல்லாம் உள்ளன.


போகநந்தீஸ்வரர் கோயிலும், அருணாசலேஸ்வரர் கோயிலும் சிற்ப அமைப்பில் வேறுபட்டவை. வடபுறம் உள்ள போகநந்தீஸ்வர் கோயில் மிகப் புராதனமானது. அலங்காரமான சிற்பங்களை உடையது.

இக்கோயிலில்நொளம்பர், ஹொய்சளர், சோழர் காலக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை சுமார் 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. நந்திமலை உள்ள ஊரில் சில மணி நேரம் தங்கி எல்லா அற்புதங்களையும் பார்த்துவிட்டு அந்தி நேரத்தில் பயணம் தொடர்ந்தோம்.

நந்திமலை கடந்து ஒரு மைல் தொலைவில் மேதை **விஸ்வேஸ்வரய்யா** பிறந்த ஊராகிய **முடனஹள்ளி** கிராமம் உள்ளது. டாக்டர் விஸ்வேஸ்வரய்யா அவர்கள் கர்நாடகம் தந்த மிகப் பெரிய பொறியியல் மேதை ஆவார். அவர் மைசூர் அரசில் திவானாகப் பணிபுரிந்த பொழுது மாபெரும் கிருஷ்ணராஜ சாகர் அணையைக் காவிரிக்குக் குறுக்கே கட்டினார். அதன் மூலம் மைசூர் மாநிலத்தைத் தொழில் வளம் உடையதாக ஆக்கினார். கர்நாடக மாநிலத்தில் இன்று இந்த அளவுக்குத் தொழில் வளர்ந்திருப்பதற்கு அவரே காரணம் ஆவார். அவர் நூறு ஆண்டுகட்கு மேலே வாழ்ந்தார். அவரது நூற்றாண்டு விழாவை அரசாங்கமே கொண்டாடிச் சிறப்

பித்தது. அவருக்கு இந்திய அரசு ''பாரதரத்தினம்'' என்ற பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. அவர் பிறந்த முடனஹள்ளி என்ற கிராம வீடு நினைவுச் சின்னமாக மாற்றப்பட்டிருக்கிறது.

வெங்கடகிரிக் கோட்டையில் இருந்து 8 மைல் தொலைவில் உள்ள சிக் பலப்பூர் (Chik Balapur) என்ற ஊருக்கு இரவு 9 மணிக்குச் சென்று அங்குள்ள சீனிவாசப் பெருமாள் கோயிலில் தங்கினோம்.



46. முப்பத்துநான்காம் நாள்

(பெரசந்திரா)

காலை 5½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். "பெரசனஹள்ளி" என்ற ஊர் வழியாக நெடுஞ்சாலையில் நடந்து கொண்டிருந்தோம். அப்பொழுது சிறியபன் விற்கும் வியாபாரி ஒருவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அவர் எங்களைப் பார்த்ததும் சைக்கிளை நிறுத்தி எங்களைப் பற்றிய விபரம் கேட்டறிந்தார். பிறகு அவர் எங்களை நோக்கிக் கன்னடத்தில் கூறியதாவது: "நான் ஒரு ஏழை வியாபாரி. ஊர் ஊராய்ச் சைக்கிளில் சென்று பன், வர்க்கி விற்றுப் பிழைக்கிறேன். உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய விரும்புகிறேன். என்னிடம் பன், வர்க்கி தவிர வேறு எதுவும் இல்லை. எனவே நான் அதைத் தந்தால் தயவு செய்து ஏற்று உண்பீர்களா?" என்று கேட்டார். நாங்கள் அவரது பக்தியை வியந்து பாராட்டி, அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டோம். அவர் எங்களுக்கு நிறைய பன், வர்க்கி தந்தார். ஆனால் நாங்கள் அவரது ஏழ்மை நிலைகருதி ஆளுக்கு இரண்டு பன்வாங்கித் தின்றதோடு போதும் என்று மறுத்துவிட்டோம். அவர் மேலும் மேலும் தந்தார். ஆனால் நாங்கள் ஏற்கமறுத்து விட்டோம். அப்பொழுது புறநானூறு வரி இரண்டு எனக்கு நினைவுக்கு வந்தது.

"கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று
அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும்
உயர்ந்தன்று."

அதாவது "வறியவர்கள் கேட்பதற்கு முன்பே அவர்கட்கு வேண்டியதைக் கொடுப்பது உயர்வு; ஆனால் கொடுக்கப்படுவதை வேண்டாம் என்று மறுப்பது அதை விட உயர்வு" என்று புறநானூறு கூறுகிறது. அது இங்கே உண்மையாயிற்று.

இன்று மதியம் நாங்கள் சமையல் செய்து சாப்பிடுவதாக முடிவு செய்தோம். எனவே நீரும் நிழலும் உள்ள ஓர் இடத்தைக் கண்டதும் சைக்கிள் ரிக்ஷாவை நிறுத்துமாறு கூறி இருந்தோம். அவ்வாறே "ரெட்டி கொலார்ப்பள்ளி" என்ற ஊருக்கு முன்னால் ஒரு பெரிய மாந்தோப்பு அருகில் ரிக்ஷா நின்றது. மாந்தோப்பு நிழலில் தங்கினோம். அங்கு அருமையான தண்ணீர் கிடைத்தது. அற்புதமான சமையல் செய்து உண்டோம். மாந்தோப்பு உரிமையாளர் எங்களுக்கு ஏராளமான மாங்காய்கள் தந்தது சமையலுக்கு மிகவும் பயன் பட்டது.

எலகங்காவில் இருந்து அரு. வள்ளியப்பன், செய்யது முகமது, அழகன் ஆகியோர் இங்கும் வந்து எங்களைச் சந்தித்து ரொட்டி, பழம் ஆகியன வழங்கி எங்கட்கு உற்சாகம் ஊட்டினர். அவர்களைக் காணும் போதெல்லாம் எங்கட்குத் தெம்பு ஏற்பட்டது. ஏனெனில் தெரியாத பகுதியில் தெரிந்தவர்களைக் காண்பது மனத்துக்கு ஊக்கம் அளிக்கக் கூடியதுதானே!

மாலையில் மாந்தோப்பில் உள்ள பெரிய குழாய்த் தண்ணீரில் மனம் போன போக்கில் நீராடி மகிழ்ந்தோம். அப்பொழுது என் தோளில் வேகமாகப் பொழிந்த நீர்பட்டுத் தோள்வலி ஏற்பட்டது. எனினும் மறுநாள் இறையருளால் அது தீர்ந்தது.

மாலையில் பெரசந்திரா என்ற ஊரை நோக்கிப் புறப்பட்டோம். இப்பகுதியில் மலை ஏற்ற இறக்கம் மிகுதியாக இருந்தது. மக்கள் நடமாட்டம் இல்லை. யூகாலிப்டஸ் மரங்கள் வழியெங்கும் பயிராகி இருந்தன.

பெரிய சந்தை என்ற பொருள்படும் பெரசந்திரா என்ற ஊருக்கு இரவு 7½ மணிக்கு வந்து சாலை ஓரத்தில் தங்கினோம். அங்கும் சில தமிழர்களைச் சந்தித்தோம். அவர்கள் எங்கட்குச் சில உபயோகமான யோசனை களைக் கூறினர். இன்று சுமார் 15 மைல் நடந்த களைப்பில் சாலையில் நன்கு அயர்ந்து தூங்கினோம்.



47. முப்பத்தைந்தாம் நாள்

(பரகோடு - ஆந்திர எல்லை)

முப்பத்தைந்தாம் நாளாகிய இன்று (23.3.83 புதன்) எங்கட்கு மீண்டும் ஒரு முக்கிய நாளாகும். ஏனெனில் இன்று கர்நாடக மாநிலம் கடந்து ஆந்திர மாநிலத்தில் கால் வைக்கப் போகிறோம். ஆக மூன்றாவது மாநிலத்தில் நுழையப் போகிறோம். இது எங்களது பயணத்தில் மற்றொரு வெற்றிப்படி! எனவே காலை 5 மணிக்கு மிக ஆர்வத்தோடு பயணம் புறப்பட்டோம். இப்பகுதியில் பெட்ரோல் கிடைக்கவில்லை யாகையால் பெரசந்திராவில் ஒரு பெட்ரோல் நிலையத்தில் கெஞ்சி எங்களது சைக்கிள் ரிக்ஷாவில் உள்ள டாங்கு முழுவதும் பெட்ரோல் நிரப்பிக் கொண்டதோடு, மேலும் இரண்டு கேன்களில் பெட்ரோல் வாங்கி நிரப்பி சைக்கிள் ரிக்ஷாவில் வைத்துக் கொண்டோம். இது நாங்கள் முதல் நாள் செய்த வேலையாகும்.

நாங்கள் பயணம் செய்த பகுதியில் இன்று மலை ஏற்ற இறக்கம் மிகுதியாக இருந்தது. இது போன்ற பகுதியில் ரிக்ஷா அடிக்கடி பழுதாகிவிடும். அப்பொழுது நாங்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் நின்று வண்டியைப் பழுது பார்த்து அதனைக் கிளப்பிவிட்டுப் பிறகு புறப்பட வேண்டும். இப்படி எங்கட்குப் பல சோதனைகள் ஏற்பட்டு, ஒருவாறு இதுவரை சமாளித்து வந்தோம்.

இன்று காலையிலேயே வெயில் மிகக் கடுமை யாக அடித்தது. என்றாலும் ஒருவாறு தாங்கிக் கொண்டு பெம்மனஹள்ளி, லட்சுமி சாகரா என்ற ஊர்கள் வழியாக 11 மைல் நடந்து 9 மணிக்குப் **பரகோடு** என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்தோம். வழியில் மலை ஏற்ற இறக்கம் அதிகமாக இருந்ததால் இறக்கமான ஓர் இடத்தில் சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்தப் பட்டிருந்த விநாயகர் படம் கீழே விழுந்தது. உடனே நாங்கள் ஓடிப் போய் அதனை எடுத்தோம். இறையருளால் அது உடைபடாமல் இருந்தது. உடனே அதனை ரிக்ஷாவில் பலமாகப் பொருத்தினோம். இதுபோல்தான் சேலத்தில் முருகன் படம் கீழே விழுந்தது. அப்பொழுதும் அது உடையவில்லை. ஆனாலும் ஏதோ ஒரு தீமையின் அறிகுறியோ என்று மனம் பேதலித்தோம்.

இன்று நாங்கள் சமையல் செய்யவில்லை. நேற்று வடித்த சோறு இன்று கஞ்சியாக இருந்தது. அதனைக் குடித்துப் பசியினை அடக்கினோம். இன்று முதல் நாங்கள் பழைய கஞ்சி குடிக்கப் பழகிக் கொண்டோம். பொது மக்கள் கொடுத்த ரொட்டிப் பொட்டலங்கள் (Biscuit Pockets) கைவசம் இருந்தன. அவற்றில் ஒவ்வொரு பொட்டலம் காலையிலும் மாலையிலும் சைக்கிள் ரிக்ஷாவில் இருந்து எடுத்துத் தின்றோம். கஞ்சிக்கு நாங்கள் தயாரித்த மாங்காய் ஊறுகாய் அமிர்தம் போல் பயன்பட்டது.

மாலையில் புறப்பட்டுப் பாகேபள்ளி என்ற ஊர் வழியாகச் சென்று இருட்டும் நேரத்தில் (7 மணி) கர்நாடக எல்லைக் கம்பத்தை அடைந்தோம், இங்கு ஒரு அழகான சின்னம் அமைத்திருக்கிறார்கள். பிறகு மேலும் 3 மைல் நடந்து கர்நாடக மாநிலச் சோதனைச் சாவடியை அடைந்தோம். பிறகு சிறிது தூரம் மேலும் நடந்து ஆந்திரச் சோதனைச் சாவடி (Andhra Check

post) கடந்து ஆந்திராவுக்குள் மகிழ்ச்சியோடு இரவு 7.45 மணி அளவில் நுழைந்தோம். அப்பொழுது எங்களை அறியாமல்''காசிவிசுவநாதருக்கு அரோகரா!'' ''காசிவிசாலாட்சிக்கு அரோகரா!'' ''அன்னபூரணிக்கு அரோகரா!'' ''காலபைரவருக்கு அரோகரா!'' ''இராமநாதருக்கு அரோகரா!'' ''பர்வத வர்த்தினிக்கு அரோகரா!'' என்று முழங்கிக் கொண்டே ஆந்திர மண்ணில் கால்வைத்தோம்.

அங்கு ஊர் என்று எதுவும் இல்லை. எனினும் அது பரிசோதனைச் சாவடி ஆகையால் ஒரு பர்லாங்கு தூரத்துக்குச் சாலையில் லாரிகள் வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்தன. லாரிக்காரர்களுக்கு உதவிசெய்வதற்காகச் சாலையின் இருபுறமும் ஓலைக் குடிசைகள் அமைத்து அதில் பலர் பலகாரம், காப்பி, சாப்பாடு வியாபாரம் செய்து கொண்டிருந்தனர்.

நாங்கள் ஒரு பலகாரக் குடிசையின் அருகில் இருந்த சிறு மரத்தின் கீழே எங்கள் ரிக்ஷாவை நிறுத்திப் பூட்டிவிட்டு, பலகாரக் கடையில் இட்லி, பால் சாப்பிட்டோம். எங்கள் குழுவினர் அனைவருக்கும் ஆந்திராவில் நுழைந்த மகிழ்ச்கியைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு அடியேன் பலகாரச் செலவினை ஏற்றுக்கொண்டேன்.

தமிழ் நாட்டில் சுமார் நானூறு மைல்களும் (28 நாள்) கர்நாடகாவில் சுமார் நூறு மைல்களும் (7 நாள்) நடந்து களைத்துச் சோர்ந்து போயிருந்த நாங்கள் சைக்கிள் ரிக்ஷா நின்ற இடத்திற்கு அருகில் இருந்த ஒரு புதிய குடிசையில் படுத்து உறங்கினோம். அங்கு ஒரு புதிய கடை வரப் போகிறதாம். அதற்காகத் தென்னை ஓலை வேய்ந்து குடிசை அமைத்திருந்தார்கள். அங்கு யாரும் இல்லாததால் நாங்கள் சுதந்திரமாக அயர்ந்து உறங்கினோம். சைக்கிள் ரிக்ஷாவைப் பூட்டி

விட்டு அதன் அடியில் கால் நீட்டியவாறு அதன் ஓட்டுநர் ஆகிய அடைக்கப்பன் படுத்துறங்கினான். இரவு 1 மணி இருக்கும். ஏதோ கத்தல் போன்ற சப்தம் திடீரென்று கேட்டது. நாங்கள் கண் விழிக்க இயலாமல் படுத்துறங்கினோம். ஏதேதோ சப்தங்கள் கேட்டன. கன்னடம், இந்தி, தெலுங்கு, பஞ்சாபி என்று என்ன என்னவோ மொழிகளின் ஒலிகேட்டது. நாங்கள் எழாமல் தூங்கிக் கொண்டிருந்தோம். அப்பொழுது யாரோ "தீ தீ" என்று கத்தும் சப்தம் கேட்டது, உடனே நாங்கள் அனைவரும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தோம். எங்கள் தலையணை என்பது எங்களது பைதான். அதைக் கையில் எடுத்துக் கொண்டு, விரிப்பைத் தூக்கிக் கொண்டு அனைவரும் குடிசைக்கு வெளியே ஓடி வந்தோம். வெளியே பார்த்தால் எங்களது குடிசைக்குப் பக்கத்துக் குடிசை "ஜே ஜே" என்று தீயில் எரிந்து கொண்டிருக்கிறது. கடைக்காரர்கள் மணலையும், தண்ணீரையும் எறிந்து தீயை அணைக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். சரக்கு ஏற்றிய லாரிகள் எல்லாம் சோதனைச் சாவடிக் கம்பை விலக்கி விட்டுக் காற்று வேகத்தில் பறந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தடியில் நாங்கள் எங்கள் ரிக்ஷாவை நோக்கி ஓடினோம். அதில் ஏராளமான பெட்ரோலை வேறு ஏற்றி இருக்கிறோமே. இந்தப் பயத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ரிக்ஷாவை இழுத்தோம். அதுபூட்டி இருக்கிற எண்ணமே எங்கட்கு ஏற்படவில்லை. நாங்கள் இழுத்த வேகத்தில் இரண்டொரு போக்ஸ் கம்பிகள் தெறித்தன. பூட்டும் தெறித்து விழுந்தது. சைக்கிள் ரிக்ஷா சிறிது அசைந்தது. எனினும் ஓடவில்லை. அப்பொழுதுதான் மேலே மரக் கிளை ஒன்று ரிக்ஷாவைத் தடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பக்கத்துக் குடிசை எரியும் தீ வெளிச்சத்தில் இதனைக் கண்டோம். பக்கத்துக் குடிசை வெடித்துச் சிதறும் பொறிகள் எங்கும் பறந்தன. அதில் ஒரு பொறி

எங்கள் ரிக்ஷா மீது விழுந்தால் போதும்; ரிக்ஷாவில் உள்ள பெட்ரோல் தீப்பிடித்து, ரிக்ஷாவே எரிந்து போகும். ரிக்ஷா இல்லாமல் எங்கள் பயணம் நடக்காது. அத்துடன் பயணத்தை நிறுத்த நேரிடும். எனவே ஒரே பரபரப்பில் எல்லோரும் சேர்ந்து ரிக்ஷாவை இழுத்தோம். ஒருவர் மரக்கிளையை விலக்கினார். அப்பொழுது ரிக்ஷா ஓட்டுநர் அடைக்கப்பன் தன் வலது கையை ரிக்ஷாவின் ரிம்முக்குள் நுழைக்க, நாங்கள் இழுக்க, அவனது கை மணிக்கட்டில் இருந்து முழங்கை வரை அரைக்கப்பட்டு, சதை பிய்ந்து, ரத்தம் ஒழுகுகிறது. இதை யாரும் கவனிக்கவில்லை. பல நூறு அடி தூரம் ரிக்ஷாவை இழுத்துச் சென்று அதனைக் காப்பாற்றியபின் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். அப்பொழுது அடைக்கப்பன், ''அண்ணே! கை வலிக்கிறது, எரிகிறது'' என்றான். உடனே டார்ச்சு விளக்கை அவன் கைமீது திருப்பி அதன் ஒளியில் பார்த்தோம். என்ன வியப்பு! சதையே காணோம். ரத்தம் வடிகிறது. உடனே என்னிடம் இருந்த ''நேபாசல்பு'' பொடியைக் காயத்தில் தூவி, கட்டுக் கட்டி, மாத்திரை கொடுத்துப் படுக்கப் போட்டோம். பிறகு நாங்களும் ஒருவாறு படுத்து உறங்கினோம். இப்படியாக ஆந்திர மாநிலத்தில் நாங்கள் நுழைந்த நாள் மறக்க முடியாத நாளாக அமைந்தது. ஒரு பெரிய திவிபத்தில் இருந்து எப்படியோ இறையருளால் தப்பினோம். எங்கள் பயணம் நடைபெற வேண்டியது இறைவனது தீர்ப்பாக இருந்திருக்கிறது. அதனால் அனைவரும் குடிசைத் தீயில் இருந்து உயிர் பிழைத்தோம். பிறமொழிச் சொற்களுக்கு நாங்கள் எழவில்லை. ''தீ தி'' என்று தமிழில் கத்தி எங்களை எழுப்பியது அந்த விசுவநாதரே என்று நம்பினோம்.

48. முப்பத்தாறாம் நாள்.

(தவனேபள்ளி—பாலசமுத்திரம்)

முதல் நாளாக இன்று (24-3-1983) காலை 5½ மணிக்கு ஆந்திராவில் பயணம் புறப்பட்டோம். எங்கள் பயணத்திட்டத்தில் அதிகமான நாட்களைக் கொண்டது ஆந்திராவே ஆகும். தென்னாட்டில் இது மிகப்பெரிய மாநிலம் ஆகும்.

இதுவரை 500 மைல் நடந்து களைத்திருந் தாலும், நேற்றிரவு நெருப்புக் கண்டத்தில் இருந்து பிழைத்திருந்தாலும், மூன்றாவது மாநிலத்தில் நுழைந் திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியோடு புறப்பட்டோம். எங்கள் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் அடைக்கப்பனுக்கு முதல்நாள் இரவு கை அடிப்பட்டிருந்ததால் அவனால் சைக்கிள் ரிக்ஷாவைப் பிடித்து ஓட்ட இயலைவில்லை. எனவே அவனை நடக்கச் சொல்லிவிட்டு, எங்கள் பக்தர் களில் மற்றொருவராகிய தியாகராாசனை ரிக்ஷாவில் அமர்த்தி ஓட்டச் சொன்னோம். அவர் ஓட்டத் தொடங்கினார். ரிக்ஷா சாலைநடுவில் ஓட ஆரம்பித்து, சாலை ஓரமாகச் சென்று, கீழே இறங்கிவிட்டது. தியாகராசனுக்கு ரிக்ஷா ஓட்டிப் பழக்கமில்லாததால் நாங்கள் மிகவும் திணற நேரிட்டது, ரிக்ஷாவை மீண்டும் சாலையில் ஏற்றினோம். பிறகு அது சாலையை விட்டு விலகாமல் பார்த்துக் கொண்டே சென்றோம். பின்னால் இருந்து சிலசமயம் ரிக்ஷா விழாமல் பிடித்துக் கொண்டோம். சில சமயம் ரிக்ஷாவில் இருந்து அவன் விழாமல் பிடித்துக் கொண்டோம்.

ரிக்ஷா வேகமாகச் சில சமயம் ஓடும். உடனே நாங்களும் ஓடுவோம். திடீரென்று நிற்கும்; நாங்களும் நிற்போம். இப்படியாக மிகவும் தமாஷாக எங்கள் ரிக்ஷா இரண்டு நாள் ஓடியது. பிறகு இறைவன் எங்கள் சிரமத்தைக் கண்டு அனுதாபப்பட்டு அடைக்கப்பனின் கைப் புண்ணை விரைவில் ஆற்றி, ரிக்ஷாவினை அடைக்கப்பன் ஓட்டுமாறு செய்தான். அதனால் நாங்கள் ஒருவாறு நிம்மதி அடைந்தோம்.

24-3-1983 ஆந்திரா முதல் நாள் பயணத்தில் தும்முடு கொண்டா என்ற ஊர்வழியாக கோடுரு என்ற ஊருக்குச் சென்றோம். அங்கிருந்து வேறொரு கிளைப் பாதை வழியாகச் சென்றால் 30 மைலில் **சாயிபாபாவின் புட்டபர்த்தி** என்ற பெரிய தலம் இருப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் கோடூரில் இருந்தே சாயிபாபாவை மானசிகமாக எண்ணி வணங்கினோம். எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். 11 மைல் நடந்து காலை 9½ மணிக்குத் **தவனேபள்ளி** என்ற ஊருக்கு இனிதே சென்று அங்கிருந்த ஓர் அழகான மாந்தோப்பில் தங்கினோம். தோப்புக்காரர் எங்களுக்குக் கத்தரிக்காய், மிளகாய், வெங்காயம், தக்காளி முதலியன பறித்துத் தந்தார். சமையல்செய்து மூன்றாம்நாளாக வயிறார உண்டோம். மாந்தோப்பு நிழலில் எங்களை அறியாமல் உறங்கி எழுந்தோம்.

மாலை 6 மணிக்குப் புறப்பட்டு 7 மணியளவில் பால சமுத்திரம் என்ற சிற்றூருக்குச் சென்று அங்கு சாலை ஓரமாக உள்ள ''சத்திய நாராயணா என்டர் பிரைசஸ்'' என்ற கடலை நிறுவனத்தில் இரவு தங்கினோம்.

49. முப்பத்தேழாம் நாள்
(சோமண்டபள்ளி - பெனு கொண்டா)

காலை 5 ¼ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். இன்னும் நிலம் தெளியவில்லை. இருள் சூழ்ந்திருந்தது. சுற்றிலும் பாறைகளும், குன்றுகளும், மலைகளுமாக இருந்தன. செடி கொடிகளோ மரங்களோ, புல் பூண்டோ எதுவுமே இல்லை. சாலை மேடு பள்ளமாக இருந்தது. மனித நடமாட்டமே கிடையாது. தண்ணீர் என்பது மருந்துக்கும் கிடையாது. எட்டுமைலுக்கு இடையில் எந்த ஊரும் கிடையாது என்று முதல் நாளே கேள்விப் பட்டு மலைத்திருந்தோம். காக்கை குருவி கூடப் பறக்க வில்லை.

வழியில் நாங்களே காப்பி தயாரித்து அருந்தி விட்டு நடக்கலானோம். நளகொண்டராயன் பள்ளி என்ற ஊர்வழியாக நடந்து 8 மைல் கடந்து **சோமண்ட பள்ளி** என்ற ஊருக்குச் சென்று சேர்ந்தோம். அங்கு காலை உணவு உண்டு, தந்தி அலுவலகத்திற்குச் சென்றோம். "பத்திரமாக ஆந்திர மாகாணத்திற்குள் நுழைந்திருக்கிறோம்" என்ற இனிய செய்தியினைத் தேவகோட்டைத் தலைமை நிலையமாகிய திருத் தொண்டர் ஆர். வயிரவனுக்குத் தெரிவித்தோம். அத்துடன் "திருத்தணிப் பாதயாத்திரை" சிறப்பாக நடைபெற அக்குழுவின் துணைத் தலைவர் திரு. முத்துராமனுக்கு சென்னைக்குத் தந்தி கொடுத்தோம். சென்னைத் தந்தி இன்று வரை போய்ச் சேரவில்லை.

வெயில் மிகக் குறைவாக இருந்ததால் சோமண்ட பள்ளியில் இருந்து தொடர்ந்து 5 மைல்

நடந்து 11 மணி அளவில் **பெனுகொண்டா** என்ற சரித்திரப் புகழ் பெற்ற ஊரின் எல்லைப் பகுதிக்குச் சென்றடைந்தோம். அங்குள்ள "இளைய இந்தியா சீரமைப்புப் பணி" (young India Project) என்ற சேவை நிறுவனக் கட்டடத்தில் தங்கினோம். அந்நிறுவன அன்பர்கள் எங்களை வரவேற்று உதவிகள் பல புரிந்தனர். பெனுகொண்டா பற்றிய வரலாற்றினையும் கூறினர்.

பெனு கொண்டாவில் ஒரு கோட்டை இருக்கிறது. அக்கோட்டை கிருஷ்ணதேவராயர் காலத்தில் பெரிதாகக் கட்டப் பட்டது. நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் ஒரு பெரியமலை இருக்கிறது. அம்மலையின் மீது "கோடைக்கால அரண்மனை" (Summer palace) ஒன்று கட்டிக் கொண்டு, அங்குதான் கிருஷ்ணதேவராயர் கோடைக் காலத்தில் வாழ்ந்திருக்கிறார். அரண்மனையில் வெயில் தெரியாதாம். குளிர்காற்று எப்பொழுதும் வீசிக் கொண்டிருக்குமாம். இத்தகு சிறப்பான முறையில் குளிர்சாதன அமைப்புடையதாக அக்காலத்திலேயே அரண்மனை கட்டியிருக்கிறார்கள். ஊருக்குள் உள்ள கோட்டைக்குள் சிவன் கோவில் இருக்கிறது. இவ்வூரைச் சுற்றிப் பாறை மலைகள் மிகுதி. எனவே கோடையில் வெப்பம் (radiation) தாங்க முடியததாக இருக்கிறது.

இன்று மதியம் நாங்கள் உணவு சமைத்து உண்டோம். வழியில் நாங்கள் திருஅமுது உண்பதற்காக எங்கட்குவழியில் பல அன்பர்கள் ரொக்கம் கொடுத்திருந்தார்கள். அந்தத் தொகையில் இருந்து உணவுப் பொருள்கள் வாங்கிச் சமையல் செய்து உண்டு, அந்த நன்கொடையாளர் குடும்பத்திற்கு நல் வாழ்த்துக் கூறுவோம். அதன் படி இன்று இரவு "தேவகோட்டை சிதம்பர விநாயகர் கோவிலில் உள்ள ஸ்ரீ தண்டாயுதபாணி கார்த்திகை அர்ச்சனைக் குழு" சார்பில் திரு. **விசுவநாதன்** வழங்கியிருந்த நன்கொடையில் இருந்து

இரவு உணவு உண்டோம். அந்நன்கொடையாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எல்லா நலமும் வளமும் அருள இறையடி தொழுது வாழ்த்தினோம்.

இன்று மதியம் எங்களில் ஒருவராகிய **நல்ல தம்பி** என்பவருக்கு உடல் நலமில்லை. வயிற்றுப் போக்கு மிகுதியாக இருந்தது. காசிவிசுவநாதரைப் பிரார்த்தித்து மருந்து கொடுத்தோம். அவன் அருளால் அவருக்கு மறு நாட்காலை பூரண குணமாகி விட்டது.

இளைய இந்தியா சீரமைப்புப் பணியில் படித்த இளைஞர்கள் பலர் பணிபுரிகின்றனர். அவர்கள் கிராமங் களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குக் கல்வி கற்பித்தல், நாட்டின் நிலை பற்றிக் கூறுதல், பொது அறிவை வளர்த்தல் முதலிய அறிவுப்பணி செய்வதோடு அவர்களது வருவாய் பெருகவும் வழிகாட்டுவர். வீண் பொழுது போக்கும் நேரத்தில் குடிசைத் தொழில் செய்து பொருள் ஈட்ட உதவி செய்வர். நாட்டின் நிர்மாணப் பணியில் அவர்களது பங்கு எவ்வளவு முக்கிய மானது என்பதை உணர்த்துவர். "கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு, உயிர்நாடி'' என்பதைக் கிராமமக்களுக்கு உணர்த்தி அவர்களை எழுச்சிகொள்ளச் செய்வர் — இத்தகு பணி இன்று நாடு முழுதும் தேவையே.

★

50. முப்பத்தெட்டாம் நாள்
(குட்டுரு-சென்னை கொத்தபள்ளி)

காலை 6 மணிக்குப் புறப்பட்டோம். எங்கும் மலைப் பகுதியாகவே இருந்தது. வழியில் ஆஞ்சநேயர் கோயில் ஒன்று இருந்தது. அங்கு வணங்கிவிட்டு மேலும் தொடர்ந்து நடந்தோம். அரசாங்கப் பட்டுப்பண்ணை (Govt silk Farm) ஒன்று இருந்தது. அதனையும் கண்ணுற்று மகிழ்ந்தோம். 8 மைல் நடந்து, காலை 6¾ மணிக்குக் **குட்டுரு** சென்று, அங்கு எல்லையில் உள்ள ஒரு தோப்பில் தங்கினோம்- இவ்வூரில் "கோனமல்லிகார் ஜுனா சாமி" கோயிலுக்கு ஒரு கிளைப்பாதை பிரிந்து செல்லக் கண்டோம்.

மாலை 4¾ மணிக்குப் புறப்பட்டோம். வறண்ட மலைப்பகுதி-எங்கும் ஒரே காய்ச்சற்பாடு-செடி கொடி, மரம் புல் பூண்டு எதுவுமே இல்லை. ஈ காக்கை குருவி கூடப் பறக்கவில்லை. எங்களுக்கு முதன் முறையாகச் சிறிது திகில் ஏற்படும் படியாக இப்பாதை இருந்தது. இங்கு கள்வர் பயம் உண்டு என்று கேள்விப் பட்டிருந்தோம்.

இத்தகு வறண்ட பகுதியில் உள்ள ஆறலை கள்வர்கள் பற்றிப் பழங்காலக் கலித்தொகையில் ஒரு பாடல் உண்டு. அதில் உள்ள வர்ணனை வருமாறு: "நடந்து செல்லும் வழிப்போக்கர்களைக் கள்வர்கள் வழிமறித்து அவர்களிடம் உள்ள பொருள்களைப் பறித்துக் கொள்வார்களாம். அவர்களிடம் ஒரு பொரு

ளும் இல்லாமல் வெறும் ஏழைகளாக இருந்தால் அவர்களது உயிரைப் பறித்து, அவர்களது உடம்பு எப்படித் துள்ளுகிறது என்று வேடிக்கை பார்ப்பார்களாம். வசதியுள்ளவர்களிடம் இருந்து பொருளையும், ஏழைகளிடம் இருந்து உயிரையும் பறிக்கும் கொடுமனம் உடைய கள்வர்கள் நடமாடுவதால் இத்தகு பகுதியில் பறவைகள் கூடப் பறக்க மாட்டா'' என்று கலித்தொகை கூறுகிறது.

''கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வவ்வலின்
புள்ளும் வழங்கா''

—அத்தகு பகுதியில் நாங்கள் முதன் முறையாக நடந்தோம்.

6 மைல் நடந்து இரவு 8 மணிக்குச் சென்ன கொத்தபள்ளி என்ற ஊரை அடைந்து சாலையில் உள்ள மிகச்சிறிய ஸ்ரீராமர் கோயிலில் வணங்கி, 'மாட்டு மருத்துவமனை'' ஒன்றில் தங்கினோம். இவ்வூர் ஒரு தாலுக்காவின் தலை நகரமாகும். எனவே கடைகளும், அரசு அலுவலகங்களும் நிறைய இருந்தன.

இன்று இரவு எனக்குச் சிறிது வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. இரவில் நான்கு முறை தொல்லைப்பட்டேன். ஆனால் காசிவிசுவநாதர் அருளால் வயிற்றுப் போக்கு நின்றது. எல்லாம் அவன் அருள்!

51. முப்பத்தொன்பதாம் நாள்

(மாமில்லபள்ளி—மருரு)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். இன்று நாங்கள் 14 மைல் தொடர்ந்து நடந்தால்தான் மாமில்ல பள்ளி என்ற ஊரை அடைய முடியும். வழியில் எந்த ஊரும் கிடையாது. மலைப்பகுதி வழியாக நடந்தோம். ஓரிடத்தில் மூன்று சாலைகள் சந்தித்தன. அதில் வலது புறச்சாலை தர்மாவரம் என்ற ஊருக்குச் செல்கிறது. (14 கி. மீ.) இடது புறச்சாலை பெருரு என்ற ஊருக்குச் செல்கிறது (40 கி. மி) நேர்சாலை ஹைதராபாத் (397 கி. மீ) செல்கிறது. இந்த நேர் பாதையில் நாங்கள் நடக்கலானோம். இன்னும் 397 கிலோ மீட்டர் அதாவது 300 மைல் தொலைவில் ஹைதராபாத் இருக்கிறது. நாங்கள் ஹைதராபாத்தை அடைந்தால் சரி பாதித் தூரம் கடந்ததாக அர்த்தம். இதுவரை சுமார் 550 மைல் நடந்துள்ளோம். இப்பொழுது எங்களுக்குக் கால் வலி, கை வலி, தலை வலி எதுவும் கிடையாது. ஏனெனில் நடப்பது என்பது எங்கள் உடம்புக்குப் பழக்கமாகி விட்டது.

காலை 10 மணிக்கு மாமில்ல பள்ளிக்குச்சென்று அங்கிருந்த ஒரு மண்டபத்தில் தங்கினோம். வழியில் ஓரிடத்தில் ஆந்திர அரசு குடி நீர்க் குழாய் அமைத்திருந்தது. அதனால் தண்ணீர்த் தாகத்தைத் தீர்த்துக் கொண்டோம். நாங்கள் நடக்கும் பகுதி ஆந்திராவின் மிக வறட்சியான ராயலசீமைப் பகுதியாகும். கர்நூல், கடப்பை, அனந்தப்பூர் ஆகிய மாவட்டங்கள் ராயல

சீமைப் பகுதியாகும். எங்கள் பயணம் அப்பகுதி வழியாக அமைந்தது மிகப்பெரிய சோதனையாகும். காசிக்கு இதுதான் ஒரே பாதை! இதனைக் கடப்பது அவன் அருளால் மட்டுமே முடியும்.

மாமில்லபள்ளியில் மதிய உணவு தயாரித்து உண்டோம். தேவகோட்டை சிதம்பர விநாயகர் கோயில் ஸ்ரீ தெண்டாயுத பாணி கார்த்திகைக் குழுவினர் இன்று திருஅமுது வழங்கினர். அவர்கட்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவித்துக் கடிதம் எழுதினோம்.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டு 3 மைல் நடந்து 6 மணிக்கு மரூரு என்ற ஊருக்குச் சென்று, அங்கிருந்த அரசாங்கப் பயணிகள் மாளிகையில் தங்கினோம். ஆந்திரப் பிரதேச அரசின் சார்பில் அதன் அற நிலைய அமைச்சர் திரு. **எலி ஆஞ்சநேயலு** எங்களுக்கு ஆதரவுக் கடிதம் எழுதி இருந்தார். அதனைக் காட்டி, வழியில் இருந்த அரசாங்கக் கட்டடங்களில் நாங்கள் தொடர்ந்து தங்கலானோம். ஆந்திர அரசாங்க அலுவலர்களும் எங்களுக்கு இயன்ற உதவிகள் செய்தனர்.

தேவகோட்டையைச் சேர்ந்த திரு. **அரு. அழகப்ப செட்டியார்** அவர்கள் அனந்தப்பூரில் துணி வியாபாரம் செய்து வருகிறார்கள். அனந்தப்பூரில் உள்ள ஒரே ஒரு நகரத்தார் அவர்தான். அவருக்குப் பெங்களூரில் இருந்து திரு **மு. வீ. அருணாசலம்** தொலை பேசி மூலம் செய்தி தெரிவித்தார். உடனே திரு. அழகப்ப செட்டியார் ஓர் ஆள் மூலம் எங்கட்குப் பலகாரம் கொடுத்தனுப்பினார். அந்த ஆள் எங்களை மரூரு பயணிகள் மாளிகையில் அந்திப் பொழுதில் சந்தித்துப் பலகாரம் வழங்கினார். அன்று இரவு அந்தச் சுவையான பலகாரத்தை உண்டு மகிழ்ந்தோம். மறுநாள் அனந்தப்பூரில் காத்திருக்கும் வரவேற்புப் பற்றிய செய்தியும் கேட்டு மகிழ்ந்தோம்.

52. நாற்பதாம் நாள்

[பரமேட்டி நதி—அனந்தப்பூர்]

இன்று **பங்குனிஉத்தரம்**. பார்வதி — பரமசிவன் திருமணம், சீதை திருமணம் நிகழ்ந்த நாள்-எங்கள் திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவின் சார்பில் சென்னையில் இருந்து நடந்து சென்ற பக்தர்கள் திருத்தணியில் காவடி செலுத்தும் இனிய காட்சியினைக் கற்பனைக் கண்ணால் கண்டவாறே காலை 4½மணிக்கே நடக்கத்தொடங்கினோம். 15மைல் தொடர்ந்து நடந்து (walk at a stretch) அனந்தப்பூர் செல்லவேண்டும். எனவே மிகவும் உற்சாகத்தோடு நடக்கலானோம். 6 மணி அளவில் ''ஹம்பாபூர் மின்நிலையம்'' Hampapur Electric Power Station) அடைந்தோம். பிறகு பயணம் தொடர்ந்தது.

ரமணபள்ளி, ரப்டாடு என்ற ஊர்களின் வழியாக நடந்தோம். **பரமேட்டி நதியில்** குளித்தோம். இதன் கரையில் உள்ள வெங்கடரமண சுவாமியை வணங்கினோம். அனந்தப்பூர் எல்லையில் காலை9½ மணிக்கு நுழைந்தோம். இது ஒரு பெரிய நகரம். ஆந்திராவின் மிக முக்கிய தொழில் நகரங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு ஏராளமான தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், அரசாங்கக் கட்டடங்கள் எல்லாம் உள்ளன.

அரசாங்க பாலிடெக்னிக், பாலயோகி ஆஸ்ரமம், அரசாங்கப் பொறியிற்கல்லூரி, மாவட்ட

ஆட்சியாளர் (Collector) அலுவலகம், எண்ணெய்த் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் (Oil Technology Research Institute') ஸ்ரீகிருஷ்ணதேவராய பல்கலைக் கழகம், நேரு தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், துங்கபத்திரா கால்வாய் ஆகியவற்றைக் கண்ணுற்ற வாறே நடந்தோம்.

அனந்தப்பூரில் உள்ள பிரம்மாண்டமான ஆயிரவைசிய கல்யாண மண்டபத்தில் எங்களை திரு. அழகப்ப செட்டியாரும், அவரது மனைவியாரும், நண்பர்களும் கூடி நின்று அன்புடன் வரவேற்றுத் தங்க வைத்தனர். இம்மண்டபத்தில் நான்கு கல்யாண மண்டபங்கள் உள்ளன. எனவே நான்கு திருமணங்கள் இங்கு ஒரே நேரத்தில் நிகழ முடியும். இம்மண்டபத்தில் **ஸ்ரீகன்னிகா பரமேஸ்வரி** கோயில் உள்ளது. இத்தெய்வத் திற்குப் பழங்காலத்தில் **ஸ்ரீ ஆனந்த நாயகி** என்று பெயர். இத்தெய்வத்தின் பெயரால் தான் இந்நகருக்கு அனந்தப்பூர் என்ற பெயர் வந்தது.

இன்று முழுதும் திரு. **அழகப்ப செட்டியார்** அவர்கள் காலைப் பலகாரம், மதிய உணவு, மாலைத் தேநீர் விருந்து, இரவு உணவு ஆகியன வழங்கினார்கள். இரவு சோறு சமைப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் இட்லி சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகியிருந்ததால் இட்லி சாம்பார் தயாரித்துத் தரும்படி கேட்டோம். உடனே அவர்களும், அவர்களது மனைவியாரும் ஆவன செய்து இரவு அவர்கள் வீட்டில் இட்லி சாம்பார் சட்னி வழங்கி உபசரித்தார்கள். இட்லியைக் காணாமல் பலநாட் களாக நாங்கள் ஏங்கியிருந்த ஏக்கம் இன்று ஒரு நாள் மட்டும் தீர்ந்தது. இனி இட்லி எப்பொழுதோ?

எங்கள் சைக்கிள் ரிக்ஷா மிகவும் பழுதாகி இருந்தது. இன்று அதனையும் திரு. அழகப்ப செட்டியார் அவர்கள் தனக்குத் தெரிந்த இடத்தில் தனது செலவில் பழுது

பார்க்கச் செய்து உதவினார்கள். மேலும் ஆர். ரெங்கசாமி ஐயங்கார் என்ற அன்பரை எங்கட்கு அறிமுகப்படுத்தினார்கள். அவர் "ஜெயா டிராவல் சர்வீஸ்" என்ற பயண நிறுவனம் நடத்துகிறார். எனவே அவர் எங்கட்குப் பயனுள்ள ஆலோசனைகள் பல வழங்கினார். ஹைதராபாத்தில் இருந்து வெளிவரும் "ஆந்திரப் பத்திரிகா" என்ற பத்திரிகையின் நிருபரும், அகில இந்திய வானொலியின் நிருபரும் ஆகிய திரு. என். இராமராவ் எங்களைச் சந்தித்தார். அவர் எங்களது பயண அனுபவங்களைக் கேட்டறிந்து ஆந்திரப் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பியதோடு, வானொலியிலும் எங்களது அனந்தப்பூர் வருகை பற்றிய செய்தியினை அறிவிக்கச் செய்தார். திரு. அழகப்ப செட்டியார் எங்களை எல்லாம் ஒரு புகைப்பட நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று ஒரு புகைப்படமும் எடுத்து வெளியிட்டார். அதில் அவர்களை நடுவில் இருக்கச் செய்து சிறப்பித்தோம்.

அனந்தப்பூர் பற்றிய செய்திகளை அங்கு கேட்டறிந்தோம். அனந்தப்பூரில் மலையடிவாரத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரி நீரால் சாத்துக்குடி, திராட்சை, மிளகாய், நிலக்கடலை முதலியன அங்கு நிறைய விளைகின்றன. சாத்துக்குடி ஒன்று விலை 10 காசு. திராட்சை கிலோ ரூ 2.75, வற மிளகாய் கிலோ ரூ 1-50 என்று கேள்விப்பட்டு மகிழ்ந்தோம்,

முன்னாள் ராஷ்ட்ரபதி (ஜனாதிபதி) திரு **சஞ்சீவ ரெட்டியின்** சொந்த ஊர் அனந்தப்பூர். இங்கு அவரது பங்களா இருக்கிறது. இன்று நாங்களும் அவரும் சந்திக்க ஏற்பாடுகள் செய்யத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்கள். ஆனால் அவர் ஊரில் இல்லாததால் சந்திப்பு ஏற்படவில்லை. சஞ்சீவ ரெட்டியின் விவசாயப்பண்ணை அனந்தப்பூரில் இருந்து 8 மைல்

தொலைவில் உள்ள இல்லூர் என்ற ஊரில் இருக்கிறது. இது 40 ஏக்கர் கொண்ட மிக அருமையான பண்ணை யாகும்.

அனந்தப்பூரில் கோமுட்டிச் செட்டியார்கள் 40% ரெட்டியார்கள் 30% முஸ்லிம்கள் 37% ஜனத் தொகையாகும். இவ்வூரில் இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் பிறந்த கலப்பின மக்கள் இருக்கிறார்கள். இந்தக் கலப்பினத்திற்கு ''நூதே குல'' என்று பெயர். இவ்வூர் ஜனத்தொகை சுமார் 2 இலட்சம் ஆகும்.

இவ்வூரில் ஆந்திரப் பிரதேசப் போலீஸ் பயிற்சிக் கல்லூரி உள்ளது. இந்நகரில் உள்ள ''சஞ்சீவ ரெட்டி ஸ்டேடியம்'' மிகப் பெரிய விளையாட்டு மைதானம் ஆகும்.

அனந்தப்பூரில் சுமார் 5000 தமிழர்கள் கூலி வேலை பார்க்கின்றனர். அவர்களில் சிலரைச் சந்தித் தோம்.

இந்நகரில் ஆஞ்சநேயர் கோவில், பெருமாள் கோவில், சிவன் கோவில், வீரபிரமேந்திரசாமி கோயில் ஆகியன உள்ளன.

இந்நகரிலும், சுற்றுப்புறத்திலும் கற்றாழை நிறைய விளைகிறது. இதன் நார் பல தொழில்களுக்குப் பயன்படுகிறது.

53. நாற்பத்தொன்றாம் நாள்

(கார்லடின்னா-கல்லூரு- வடபெண்ணை நதி)

அனந்தப்பூரின் இனிய வரவேற்பினை மறக்க முடியாமல் 29-3-83 காலை 5¼ மணிக்குப் புறப்பட்டோம். 10 மைல் தொடர்ந்து நடந்து காலை 10 மணிக்குக் கார்லடின்னா என்ற ஊருக்குச் சென்றோம். நல்ல வேப்பமரத்து நிழலில் தங்கிச் சமையல் செய்து திருஅமுது உண்டோம். தேவகோட்டை எம். பொன்னுசாமி செட்டியார் அவர்களின் திருஅமுது இன்று படைக்கப் பெற்றது.

மாலை4½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். பாதையில் மலைப்பாங்கு மேடுபள்ளம் மிகுதியாக இருந்தது. சில இடங்களில் மட்டும் திராட்சை, சாத்துக்குடி பயிராகக் கண்டோம்.

கார்லடின்னா ஊரில் இருந்து 6 மைல் தொலைவில் உள்ள **கல்லூரு** என்ற ஊருக்கு இரவு 7 மணி அளவில் சென்றோம். அங்கு நாங்கள் தங்கிடக் கோயில் போன்ற பொது இடம் எதுவும் காணப்படவில்லை. எனவே அதிகமான களைப்பின் காரணமாக ஒரு வீட்டின் முற்றத்தில் அமர்ந்தோம். அந்த வீடு ஒரு ஏழைப் பெண்மணியின் வீடு. அந்த வீட்டு அம்மாள் எங்களின் பயணம் பற்றிய செய்திகளை அறிந்ததும், உடனே காப்பிப்பொடி, கருப்பட்டி விலைக்கு வாங்கித் தன் வீட்டில் காப்பி போட்டு எங்களுக்கு அன்புடன் வழங்கினார். அவர் எங்களுக்கு அன்புடன் காப்பி வழங்கிய காட்சி ஸ்ரீ இராமபிரானுக்கு

அன்று சபரி உணவு வழங்கிய எளிய காட்சியினை நினைவுபடுத்தியது.

அந்த ஏழைப் பெண்மணி எங்கட்குக் கூறிய ஆலோசனைப்படி அவ்வூரில் உள்ள "இராதாகிருஷ்ணா எண்ணெய் ஆலை" யை அடைந்தோம். அதன் உரிமை யாளர் எங்களை அன்புடன் வரவேற்று அங்கு இரவு தங்க அனுமதித்தார். சபரி காட்டிய வழியில் இராமபிரான் சென்று சுக்கிரீவனை அடைந்தது போல நாங்களும் இந்த ஆலைக்குச் சென்றோம் என்றால் மிகையாகாது. இந்த ஆலை ஒரு மிகப்பெரிய ஆலை. இங்கு வனஸ்பதி, ரிபைன்ட் ஆயில் முதலியன உற்பத்தி செய்யப்படு கின்றன.

வடபெண்ணை ஆற்றுக்கு இக்கரையில் **கல்லூரு** இருக்கிறது, அக்கரையில் (வடகரையில்) பாமிடி என்ற ஊர் இருக்கிறது. கல்லூரு அருகில் துங்கபத்திரா கால் வாய் ஓடுகிறது. கல்லூரு அருகில் சஞ்சீவ ரெட்டியின் விவசாயப்பண்ணை இருக்கிறது.

54. நாற்பத்திரண்டாம் நாள்
(மிடித்தூர்—கூத்தி)

30-3-83 புதன் காலை 5½ மணிக்குப் புறப்பட்டு சிறிது தூரம் நடந்து வடபெண்ணை ஆற்றை அடைந்தோம். அதில் சிறிது தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. காவேரிப்பட்டணம் அருகில் தென்பெண்ணை ஆற்றில் நீராடிய நாங்கள் கல்லூரு அருகில் **வடபெண்ணை** ஆற்றில் இன்று நீராடி மகிழ்ந்தோம். பிறகு பாலத்தின் வழியே நடந்து வடகரையை அடைந்தோம். வட கரையில் பாமிடி என்ற சிற்றூர் இருக்கிறது. அங்கு காலைப்பலகாரம் உண்டோம். 8 மைல் நடந்து மிடித்தூர் (Mitithur) என்ற ஊரை அடைந்து அங்கிருந்த தோப்பில் தங்கினோம். இவ்வூருக்கு அருகில் 5-மைல் தொலைவில் மாமண்டூர் நீர்த்தேக்கம் உலக வங்கி உதவியுடன் கட்டப்பட்டுள்ள செய்தியினை அறிந்தோம்.

மாலையில் புறப்பட்டு 7-மைல் நடந்து கூத்தி (Goothi) என்ற ஊரினை இரவு 7½ மணிக்கு அடைந்தோம். இவ்வூர் இப்பொழுதுதான் தொழில் வளர்ச்சி பெற்று வருகிறது. இங்கு மர அறுவை ஆலைகள் நிறைய உள்ளன. இவ்வூரில் ஓர் ஆஞ்சநேயர் கோவில் உள்ளது.

இவ்வூரில் எங்கே தங்கலாம் என்று பார்த்துக் கொண்டே நடந்தோம். பள்ளிக்கூடம் போன்ற ஒரு புதிய கட்டடம் சாலை ஓரத்தில் கட்டப்பட்டு, ஆள் அரவம் இன்றி இருந்தது. அச்சமயம் அப்பகுதியில்

ஆள் நடமாட்டமே இல்லை. யாரையும் கேட்டு அங்கு இரவுக்குத் தங்கலாம் என்றால் யாரையுமே அப் பகுதியில் காணோம். நாங்களோ மிகவும் களைத்திருந் தோம். எனவே அக்கட்டடத்தில் நுழைந்து நடை பாதையில் எங்களது அரிக்கன் விளக்கை ஏற்றி வைத்து விட்டுக் கஞ்சியைக் குடித்தோம். மறுநிமிடம் நாங்கள் எல்லோரும் உறங்கலானோம்.

இரவு 11 மணிக்குத் திடீரென்று எனக்கு உறக்கம் கலைந்தது. எப்பொழுது உறக்கம் கலைந் தாலும் உடனே நான் என் அருகில் வைத்திருக்கும் எனது டார்ச் விளக்கை ஒரு முறை சுற்று முற்றும் அடித்து, எல்லோரையும் சரிபார்த்து விட்டு, மீண்டும் உறங்கத் தொடங்குவேன். அந்த முறைப்படி இன்றும் எனது டார்ச் விளக்கை எடுத்துச் சுற்றிலும் வெளிச்சம் படும்படியாக அடித்தேன். என்ன ஆச்சரியம்! விளக்கு வெளிச்சம் முதலில் பட்ட இடத்தில் ஒரு பெரிய பூரான் நெளிந்தது. உடனே என்னுடைய விரிப்பை எடுத்துக் கொண்டு எழுந்தேன். நான் எழுந்த சப்தம் கேட்டதும் "அருள்தொண்டர்" திரு. இராகவன் எழுந்தார். அவரும் இரவில் மிகவும் விழிப்போடு இருப்பார். அவர் எழுந்ததும் மற்றவர்களும் அடுத்தடுத்து எழுந்தனர். அதற்குள் அந்தப் பூரான் விரைவாக ஊர்ந்தது. ஓர் அன்பரின் தலையணைக்குக் கீழே புகுந்தது. உடனே ஓடிச் சென்று அந்தப் பூரானை அடித்துக் கொன்றோம். அதன்பின் நாங்கள் தூங்க முனைந்தோம். ஆனால் பூரான் நினைப்பு எங்கள் தூக்கத்தைப் போக்கிவிட்டது. எப்படியோ அன்று இறைவன் திருவருளால் விஷக் கண்டத்தில் இருந்து தப்பினோம். ஆந்திராவில் நுழைந்த அன்று நெருப்புக் கண்டம்! இன்று விஷக் கண்டோம்!! எல்லாவற்றில் இருந்தும் எங்களைக் காத்து வழி நடத்திச் செல்பவன் அவன் அல்லவா?

55. நாற்பத்துமூன்றாம் நாள்

(பியாபுள்ளி—ஏனுகாமாரி)

காலை 2½மணி அளவில் புறப்பட்டோம். ஒரே மலைப் பகுதியாக இருந்தது. ஏற்ற இறக்கம் அதிகம். அதனால் சைக்கிள் ரிக்ஷாவுக்குத் தொல்லை மிகுதியும் ஏற்பட்டது. 11 மைல் நடந்து கரிடிகொண்டா, போத்து டோடி என்ற ஊர்களைக் கடந்து, பியாபுள்ளி என்ற ஊருக்குச் சென்று சேர வேண்டும். பாதை மிக மோசமானது. ஆகையால் மிகவும் சீக்கிரமாகவே நடக்கத் தொடங்கினோம்.

காலையில் நாங்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில் எங்காவது தேநீர்க் கடை இருந்தால் எங்கள் பக்தர்கள் அங்கு காப்பி, தேநீர் அல்லது பால் பருகுவது பழக்கம். எங்கும் கிடைக்காவிட்டால் நாங்கள் சைக்கிள் ரிக்ஷாவை நிறுத்திச் சாலை ஓரத்தில் மூன்று கல் வைத்து அருகில் கிடக்கும் மரச் சுப்பிகளை எடுத்து நெருப்பு மூட்டி, எங்கள் ரிக்ஷாவில் உள்ள பால், தண்ணீர், காப்பிப் பொடி, சீனியை உபயோகித்து நாங்களே, காப்பி போட்டு காப்பியோ, பாலோ அருந்துவது வழக்கம். இன்று வழியில் எங்குமே கடை இல்லாததால் காலை 4½ மணி அளவில் ரிக்ஷாவை ஓரிடத்தில் நிறுத்தினோம். மூன்று கல்லை எடுத்து அடுப்பாக அமைத்தோம். எங்கும் இருட்டாக இருந்ததால் எங்களிடம் இருந்த டார்ச் விளக்கின் ஒளியில் வேலை செய்யத் தொடங்கினோம்.

ரிக்ஷாவில் உள்ள தண்ணீர், பால்பொடி, காப்பிப் பொடி, சீனி எல்லாவற்றையும் தரையில் இறக்கி வைத்தோம். இனி எங்களுக்குத் தேவை மரச்சுப்பி அல்லது சாணம். டார்ச் விளக்கின் ஒளியால் எங்களைச் சுற்றித் தேடினோம். எங்குமே கல்தான் கிடைத்ததே ஒழிய விறகோ, சுப்பியோ, எருவோ, எதுவுமே கிடைக்க வில்லை. எப்படியோ இதுவரை சமாளித்து வந்த எங்களுக்கு ஓர் இடையூறு வந்து விட்டது. விறகுக்கு நாங்கள் எங்கே போவோம்? எங்கள் ரிக்ஷாவில் இல்லாதது விறகுதான். இனி அதனையும் ரிக்ஷாவில் ஏற்ற வேண்டுமா? விசுவநாதா! இது என்ன சோதனை என்று தளர்ந்து ரிக்ஷா அருகில் சோர்ந்து உட்கார்ந் தோம்,

அப்பொழுது சற்று தொலைவில் ஒரு மாட்டு வண்டி வருவது போல் இருளில் தெரிந்தது. உடனே அதைக் கவனிக்கத் தொடங்கினோம். சிறிது நேரத்தில் அது எங்கள் அருகில் வந்து சேர்ந்தது. அது என்ன வண்டி என்று ஆவலோடு பார்த்தோம். என்ன வியப்பு! அது ஒரு விறகு வண்டி. அவ்வண்டி எங்கள் அருகில் வந்ததும் நின்றது. உடனே அந்த வண்டிக்காரனிடம் எங்கள் பொருள்களைக் காட்டிக் காப்பி தயாரிக்க விறகு வேண்டும் என்று எங்களுக்குத் தெரிந்த தெலுங்கில் சொன்னோம். உடனே அவன் ஒரு விறகுக் கட்டுத் தந்தான். நாங்கள் அவனுக்கு நன்றி சொல்லி விட்டு, அவனுக்கும் சேர்த்துக் காப்பி போட்டோம்.

எங்கள் வேலையில் நாங்கள் மூழ்கி இருந்ததால் நாங்கள் மாட்டு வண்டியையோ, வண்டிக்காரனையோ சிறிது நேரம் கவனிக்கவில்லை. காப்பி போட்டதும் முதலில் அவனுக்குக் கொடுக்க ஒரு டம்ளரில் காப்பி எடுத்துக் கொண்டு இராகவன் அவனைத் தேடினார். அப்பொழுது சிறிது விடிந்திருந்தது. என்ன ஆச்சரியம்!

அவனையும் காணோம்; மாட்டு வண்டியையும் காணோம்: நாங்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அவன் சொல்லிக் கொள்ளாமல் வண்டியை ஓட்டிச் சென்றிருக்கிறான். அது ஒரு நீளமான சாலை. எனவே வண்டி எங்கே என்று அந்த நேரத்தில் எங்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பார்த்தோம். எங்குமே வண்டி தென்படவில்லை. எனவே அந்த விசுவநாதர் தான் வண்டி ஓட்டியாக அங்கு வந்து எங்கள் தேவையை அந்த நேரத்தில் நிறைவு செய்திருக்கிறார் என்றுநினைத் தோம். ஏனெனில் மரமே இல்லாத அப்பகுதியில் விறகு எப்படிக் கிடைக்கும்?

பெரிய புரணத்தில் சுந்தரருக்கு வழியில் ஆண்டவன் காட்டியதாகச் சொல்லப்படும் கருணைத் திறன் எங்கள் பாலும் காட்டப்பட்டிருப்பதாக உணர்ந் தோம், சுந்தரமூர்த்திசுவாமிகள் ஊரூராக நடந்து சென்று வழிபட்ட பொழுது திருக்குருகாவூர் நோக்கி ஒருநாள் சென்ற பொழுது, வழியில் வெயிலின் கொடுமை தாங்காமல் தண்ணீர்த் தாகத்தால் வாடினார். எங்குமே தண்ணீர் இல்லை. இந்த நிலையில் சுந்தரர் வாடிய பொழுது சற்றுத் தொலைவில் ஒரு தண்ணீர்ப் பந்தல் காட்சியளிக்கக் கண்டு சுந்தரர் அங்குச் சென்றார். இறைவனே அங்கு ஒரு தண்ணீர்ப் பந்தல் வைத்துக் காத்திருந்து சுந்தரருக்குத் தண்ணீர் வழங்கினான். சுந்தரர் தண்ணீர் குடித்துத் தாகம் அடங்கியதும் புறப்பட்டார். அவர் போன சிறிது நேரத்தில் தண்ணீர்ப் பந்தல் மறைந்து விட்டது. இது "பெரிய புராணம்,' காட்டும் காட்சி! இந் நிகழ்ச்சி பொய்யில்லை என்பதை நாங்கள் மெய்யாக உணர்த் தோம்.

அக்காலத்தில் தேவாரம் பாடிய சுந்தரருக்கு இறைவன் வழியில் தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தண்ணீர்

வழங்கினான். இக்காலத்தில் காசி அடியார்களாகிய எங்களுக்கு விறகு வண்டியில் வந்து விறகு வழங்கினான். அன்றும் தண்ணீர்ப்பந்தல் மறைந்தது; இன்றும் அதுபோல் விறகு வண்டி மறைந்தது. நாங்கள் அடைந்த பெருமிதத்துக்கு அளவே இல்லை. உபயோகித்த விறகு போக மீதி விறகினை ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டோம். "விறகினில் தீயினன்" ஆக விளங்கும் இறைவன் காசிப்பயணத்திற்கு விறகும் தேவை என்பதை எங்கட்கு உணர்த்தியதாகவே உணர்ந்தோம்: மீதி விறகு எங்களுக்குச் சில இடங்களில் பயன்பட்டது. நாங்கள் காசிக்குச் சென்று சேர்கிறவரை இறைவன் தந்த சில விறகுகள் எங்கள் ரிக்ஷாவில் எஞ்சி இருந்தன.

காலை 9½மணிக்கு பியாபுள்ளி என்ற ஊருக்குச் சென்று அங்கிருந்த தோப்பில் தங்கினோம். நாங்கள் சமையல் செய்து தேவகோட்டை திரு. சு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்களின் "திருஅமுது" உண்டோம்.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டோம். மலைப் பகுதி ஏற்ற இறக்கம் மிகுதியாக இருந்தது. மிகவும் எச்சரிக்கையாக நடந்தோம். வழியில் எண்ணெய் ஆலைகள், பூச்சி மருந்துத் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள் கண்டோம். 7 மைல் நடந்து இரவு 8 மணிக்கு ஏனுகாமாரி என்ற ஊருக்கு வந்து அங்குள்ள ஈசுவரன் கோவிலில் தங்கினோம். அது ஒரு பழங்காலக் கட்டடம், அதைப் பார்த்ததும் எங்கள் கற்பனை பல நூற்றாண்டுகளுக்கு முன்னோக்கிச் சென்றது. அந்தக் கற்பனையில் திளைத்தவாறே ஆழ்ந்து தூங்கினோம்.

56. நாற்பத்து நான்காம் நாள்
(துரோணாசலம்-உடுமலப்பாடு)

இன்று (1-4-83 வெள்ளி) உலகப்புகழ் மிக்க ஏப்ரல் முதல் நாள்—தெரிந்தவர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றி மகிழும் நாள். ஆனால் நாங்கள் யாரையும் ஏமாற்ற விரும்பவில்லை. எங்களுக்கு இறைவன் ஏமாற்றம் தராமல் எங்கள் பிரார்த்தனையை நிறை வேற்றித் தரவேண்டும் என்று பூசித்தவாறு காலை 5-45 மணிக்குப் புறப்பட்டோம். மலை, மேடு பள்ளம், ஏற்ற இறக்கம் மிகுதியாக இருந்தது. 10 மைல் நடந்து கொத்தப்பள்ளி என்ற ஊர் வழியாகக் காலை 9¼ மணிக்குத் துரோணாசலம் (Dhone) என்ற புகழ்மிக்க நகருக்குச் சென்றடைந்தோம். அங்குள்ள புகைவண்டி நிலையத்தில் சிறிது நேரம் தங்கினோம். அப்பொழுது கிருஷ்ணமூர்த்தி என்ற தமிழரை அங்கு சந்தித்தோம். அவ்வூரில் தர்மபுரி, கிருஷ்ணகிரிப் பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் பலர் துணி வியாபாரம் செய்வதாக அவர் கூறினார்.

அவரைப் பற்றிய வரலாற்றைக் கேட்டோம். அவரது தகப்பனார் ஈரோட்டைச் சேர்ந்தவராம். கிருஷ்ணமூர்த்தி சிறுபிள்ளையாய் இருந்த போதே அவரது தகப்பனார் ஈரோட்டை விட்டுத் துரோணா சலத்துக்குப் பிழைக்க வந்து விட்டாராம். இங்கு ஒரு உணவு விடுதியில் அவர் வேலை பார்த்தாராம். தகப்பனார் காலமாகியதும் அவரது வேலையைக் கிருஷ்ணமூர்த்தி செய்கிறாராம். இவருக்கு வயது சுமார்

30. இவருக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதாம். ஆனால் ஓரளவுக்குப் பேசத் தெரியுமாம். இவருக்குத் தெரிந்த தமிழில் தெலுங்கு கலந்து எங்களுடன் உரையாடினார்.

துரோணாசலத்தில் காலிகள் மிகுதி என்றும், ஆகவே எச்சரிக்கையாக இருக்கும்படியும் கூறினார். சிறிது தொலைவில் உள்ள இராமர் கோவிலில் போய்த் தங்குமாறு ஆலோசனை கூறினார். ஒவ்வொரு ஊரின் தூரத்தையும் இவரிடம் கேட்டேன். அதன்பின் இவரது தமிழ் அறிவைச் சோதிக்கக் "கிழக்கு எந்தப் பக்கம்?" என்று கேட்டேன். அதற்கு இவர் "கிழக்கு ரொம்ப தூரம் இருக்கிறது" என்றார். அதன்பின் இவரது தமிழறிவைச் சோதிக்க நாங்கள் விரும்பவில்லை.

துரோணாசலத்தில் ஒரு பெரிய மலை இருக்கிறது. அந்தமலைமீது துரோணர் தவம் செய்ததால் அந்த மலைக்குத் துரோணாசலம் (துரோணர்+அசலம்) என்ற பெயர் ஏற்பட்டு, அதுவே ஊர்ப்பெயராகவும் ஆகிவிட்டது. துரோணாசலத்தில் இப்பொழுது நிறையத் தொழில்கள் ஏற்பட்டு வருகின்றன.

மலைமீது ஒரு ஆஞ்சநேயர் கோவில் இருக்கிறது. துரோணாசலத்தில் ஒரு சிவன் கோவிலும், கன்னிகா பரமேஸ்வரி கோவிலும் உள்ளன.

புகைவண்டி நிலையத்தில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள இராமர் கோவிலுக்கு நாங்கள் நடக்கலானோம். அப்பொழுது எங்கள் ஊர்வலத்தைக் கண்ட உள்ளூர் மக்கள் வியப்புடன் ஒரு பெரிய அதிசயத்தைப் பார்ப்பது போல எங்களைப் பார்த்தனர்.

இராமர் கோவில் மிக அழகாகக் கட்டப்பட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் வண்ண வண்ணச் சலவைக் கற்கள்! கண்களைப் பறிக்கும் காட்சி! இராமர்

முதலியோரின் சலவைக் கற்சிலைகள்—நல்ல மண்டபம்—இவை எல்லாம் எங்களை மிகவும் ஈர்த்தன. இங்குள்ள மண்டபத்தில் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் தங்கலாம். பக்தர்கள் சில பேர் வந்து கோயிலை வணங்கிச் சென்றனர். அவர்களில் சிலர் எங்களுக்கு நல்ல அறிவுரை கூறினர். "இரவில் இங்கே தங்காதீர்கள் இது காலிகள் தங்கும் இடமாகி விட்டது. கஞ்சாக் குடிப்பவர்கள் நிறைய இங்கே வருகிறார்கள். ஆகவே மாலையில் புறப்பட்டு வேறு எங்காவது சென்று தங்குங்கள்" என்றார்கள். நாங்கள் சலவைக்கல் மண்டபத்தில் இரவு தூங்கலாம் என்று கருதிக் கொண்டிருந்தோம். என்ன செய்வது என்று புரியாமல் முடிவு எடுக்க முடியாமல் தத்தளித்தோம்.

சிறிது நேரத்தில் ஐந்து ஆறு இளைஞர்கள் அங்கு வந்தார்கள். அவர்கள் எங்களுடன் பேச்சுத் தொடங்கினர். பிறகு அவர்கள் தாங்களாகவே தெலுங்கில் ஏதோ பேசி எங்களை நோக்கி அடிக்கடி சிரித்தனர். அவர்கள் நடந்து கொண்ட முறை எங்களைக் கேலி செய்வது போலவும், சண்டைக்கு இழுப்பது போலவும் இருந்தது. இராமர் கோயிலில் இப்படி ஒரு நிலைமை! "இராமா! இது என்ன சோதனை!" என்று நாங்கள் மிகவும் பொறுமையாக இருந்தோம்.

நேரம் ஆக ஆக மேலும் பல இளைஞர்கள் அங்கு வந்தனர். அவர்களில் பலர் கஞ்சாக் குடித்துத் தாறு மாறாகப் பேசியும் நடந்தும் குழப்பம் விளைவிக்க முயன்றனர். எனவே வெயில் தணிந்ததும் மாலை 5 மணிக்கு நாங்கள், துரோணாசலத்தில் தங்கும் திட்டத்தை மாற்றிக் கொண்டு "கடவுள் விட்ட வழி", என்று புறப்பட்டோம். இதுபோல் ஒரு நிலைமை எங்களுக்கு ஹைதராபாத் கடந்து "ராமண்டபூர்"

என்ற ஊரிலும் ஏற்பட்டது! அப்பொழுதும் கடவுள் அருளால் பிழைத்தோம்.

ஏப்ரல் முதல் நாளாகிய இன்று இரவு எங்கே தங்குவது என்று தெரியாமலே நடக்கலானோம். 3 மைல் நடந்ததும் உடுமலப்பாடு என்ற சிற்றூரை அடைந்தோம் அக்கிராமத்தினர் மழை பெய்யும் பொருட்டுக் காமன் பண்டிகை கொண்டாடிக் கொண்டிருந்தனர். நாங்கள் ஊர் எல்லையில் இருந்த ஒரு சிறு சிவன் கோவிலில் இரவு தங்கினோம். ஊர் மக்கள் எங்களுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்காமல் இரவு முழுதும் காமன்பண்டிகை கொண்டாடி மழை நோக்கிப் பிரார்த்தனை செய்தனர். இத்தகு தெய்வ நம்பிக்கைகளைக் கிராமங்களில் தான் நாம் காண முடிகிறது. நகரங்களில் தெய்வ நம்பிக்கை குறைந்து, தெய்வீகத்தை வியாபாரம் ஆக்கும் போக்கு பெருகி வருகிறது.

57. நாற்பத்தைந்தாம் நாள்
(வெல்டுர்ட்டி-பொம்மிரெட்டிபள்ளி)

2-4-83 சனிக்கிழமை ஆகிய இன்று எங்கள் பயணத்தின் நாற்பத்தைந்தாம் நாள் ஆகும். இதனை ஒரு மண்டலம் என்று சொல்வர். சுமார் 650 மைல்கள் நடந்திருந்தாலும், காலை 5 மணிக்கு உற்சாகமாகப் புறப்பட்டோம். இன்று நாங்கள் எல்லோரும் ஒன்றாக ஒரே கூட்டமாக நடந்தோம். அதற்குக் காரணம், கஞ்சாக் குடிக்கும் காலிகள் மத்தியில் நேற்று ஏற்பட்ட தொல்லையே ஆகும்.

நாங்கள் நடந்த பகுதி மலைப்பாங்காக இருந்தாலும், சாலை ஒரே சீராக இருந்தது. ராயலசீமைப் பகுதி முழுவதுமே மாமரம் மிகுதியாக இருக்கக் கண்டோம். 8 மைலில் ''மடர்புறம்'' என்ற ஊர் சென்று அங்கிருந்த ஆஞ்சநேயரை வணங்கி, மேலும் 2 மைல் நடந்து வெல்டுர்ட்டி என்ற ஊருக்குக் காலை 9 மணிக்குச் சென்று அங்கு புகைவண்டி நிலையம் அருகில் உள்ள பயணிகள் மாளிகையில் (T.B.) தங்கினோம்.

இவ்வூரில் ஒரு **சிற்றாறு** ஓடுகிறது. ஊர் மக்கள் அன்பாக நடந்து கொண்டனர். கிணற்றில் இருந்து எங்களுக்குத் தண்ணீர் எடுத்துத் தந்தனர். நாங்கள் வேப்ப மரத்து நிழலில் சமையல் செய்து திருஅமுது உண்டோம். இதனைத் தேவகோட்டை திரு. சு. செ, பழ. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் வழங்கினார்கள்.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டு 3 மைல் நடந்து **பொம்மிரெட்டிபள்ளி** என்ற ஊரை அடைந்தோம்.

அங்குள்ள ஈசுவரன்-பார்வதி கோயிலை வணங்கி, ஆஞ்சநேயர் கோயிலில் தங்கினோம். இவ்வூர் எங்கே இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது. வெல்டூர்ட்டி உயர்நிலைப் பள்ளியில் படித்து மாலையில் பொம்மிரெட்டிபள்ளி என்ற ஊருக்குத் திரும்பும் சில மாணவர்கள் எங்களுடன் நடந்து வந்தனர். அவர்கள் எங்களைப் பற்றி அறிந்ததும் தங்களது ஊருக்கு வந்து தங்குமாறு அன்புடன் வேண்டினர். உடனே அவர்களது வேண்டுகோளை ஏற்று, அவர்களுடன் ஊருக்குள் சென்றோம். அம் மாணவர்கள் ஊர்ப் பெரியவர்களை அழைத்து வந்து, நாங்கள் இரவு தங்குதற்குக் கோயிலில் வசதிகள் செய்து கொடுத்தனர்.

இவ்வூரில் டீக்கடை, காப்பிக் கடை கிடையாது. பல கிராமங்களில் மக்கள் தேநீர், காப்பி அருந்துவது கிடையாது என்ற செய்தியினை அறிந்தோம்.

நாங்கள் தங்கி இருந்த கோயில் அருகில் இருந்த தையற்காரர் ஒருவர் எங்களது கிழிந்த துணிகளை எல்லாம் இலவசமாக இரவோடிரவாகத் தைத்துத் தந்து உதவினார். ஊர் மக்கள் நாங்கள் சாப்பிட ஒருவகையான அப்பளம் முதலியன தந்து உதவினர்.

இவ்வூரில் உள்ள ஆண்களும் பெண்களும் தம் தோளில் தண்ணீர்க்குடம் தூக்கிச் செல்லும் பாங்கினைக் கண்டு வியந்தோம்.

58. நாற்பத்தாறாம் நாள்

(பெட்ட டெக்குரு—கர்நூல்-துங்கபத்திரா நதி)

இன்று நாங்கள் 18 மைல் நடக்க வேண்டும். இன்று இரவு நாங்கள் கர்நூலை அடைந்து, நகரத்தில் மேலும் பல மைல்கள் நடக்க வேண்டும். எனவே காலை 4½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். 5 மைல் நடந்து 7 மணி அளவில் உனிந்தகொண்டா என்ற வளமான ஊருக்குச் சென்றோம். அங்கு ஊர் எல்லையில் மலைச் சூழல்—உயர்ந்த சாலை— (ஏரி) அணை போன்ற இயற்கை அமைப்பு—ஏரி முழுதும் தண்ணீர்—எதிர்ப் புறம் பசுமையான வயல்கள்—ராயல சீமைப் பகுதியில் இவ்வூர் ஒரு பாலைவனச் சோலை (ஒயா சீஸ்) போலக் காணப்பட்டது. ஏரி நீரில் குளித்து, கரையில் இருந்த இராமர் கோயிலில் தரிசனம் செய்தோம்.

மேலும் 6 மைல் நடந்து சின்ன டெக்குரு என்ற ஊரை அடைந்தோம். அங்கு ஒரு சிற்றாறு ஓடுகிறது. எங்கு பார்த்தாலும் மல்லிகைப் பூந்தோட்டங்கள் மணக்கின்றன.

மேலும் ஒரு மைல் நடந்து (பெரிய) பெட்ட டெக்குரு என்ற ஊரைக் காலை 9½ மணிக்கு அடைந்தோம். அங்குள்ள கோழிப் பண்ணையில் தங்கினோம். எங்கள் ரிக்ஷாவை நிறுத்த நிழல் இல்லை. எனவே எங்களது கூடாரத்தைப் பொருத்தி, அந்த நிழலில் ரிக்ஷாவை நிறுத்தினோம். வெயில் கொடுமை தாங்க முடியாததாய் இருந்தது.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டு 6 மைல் நடந்து இருட்டும் நேரத்தில் **கர்நூல்** என்ற மாபெரும் நகரின் எல்லையினை அடைந்தோம். ஏ. பி. கார்பைட்ஸ் லிமிடெட், அலுமினியம் இண்டஸ்ட்ரீஸ் ''துங்கபத்திரா இண்டஸ்ட்ரீஸ்'' ஆகிய தொழிற்சாலைகளைக் கண்ணுற்றோம். துங்கபத்திரா கால்வாய் அருகில் **''பிர்லாமந்திர்''** எனப்படும் **சத்தியநாராயணா கோவிலுக்குள்** சென்று வழிபட்டோம். இது தொழிலதிபர் பிர்லாவினால் பல கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சலவைக்கல் கோவிலாகும். இங்குள்ள சலவைக்கல் விக்கிரகங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பசி கூடத் தோன்றாது. இது போன்ற பல கோவில்களை பிர்லா டில்லி, காசி முதலிய நகர்களில் கட்டி இருக்கிறார்.

கர்நூல் நகருக்குள் **அந்திரி நதி** ஓடுகிறது. கர்நூலில் உள்ள ராயலசீமா பேப்பர் மில்ஸ் புகழ் பெற்றது. அரசு மருத்துவமனை, பேருந்து நிலையம் எதிரில் பழைமையான கொண்டாரெட்டி கோட்டை எல்லாம் கண்ணுற்ற வாறே நடந்து சாயிபாபா கோயிலை அடைந்தோம். இக்கோயில் **துங்கபத்திரா நதி**க் கரையில்இருக்கிறது. இதன் அருகில் பழங்கால நவாப் கோட்டை கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

நாங்கள் சாயிபாபா கோயிலை அடைந்த பொழுது இரவு சுமார் 9 மணி ஆகிவிட்டது. மிகவும் களைத்துப் போயிருந்தோம். கோயிலின் வெளிப்புறக் கதவு சாத்தப்பட்டிருந்தது. நாங்கள் கதவைத் தட்டியதும் ஒரு கிழவி கதவைத் திறக்கக் கண்டோம். அந்தக் கிழவிக்கு வயது 60 இருக்கும். நாங்கள் அங்கே தங்க விரும்புகிறோம் என்று தெலுங்கில் சொன்னோம். அதே நேரத்தில் நாங்கள் எங்களுக்குள் தமிழில் உரையாடிக் கொண்டிருந்தோம். எங்கள் தமிழைக் கேட்டதும் அந்தக் கிழவி எங்களைப் பார்த்து நீங்கள்

எங்கிருந்து வருகிறீர்கள் என்று தமிழில் கேட்டாள். அதன் பிறகுதான் எங்களுக்கு உயிர் வந்தது. நாங்கள் கூறிய விபரங்களைக் கேட்டதும் அந்த அம்மாள் எங்களை உள்ளே அனுமதித்தாள். ஆனால் சைக்கிள் ரிக்ஷா உள்ளே போக வசதி இல்லாமல் இருந்தது. எனவே வீதியிலேயே ரிக்ஷா நிற்கட்டும் என்று கூறியதோடு, களவுபயம் நிறைந்த அப்பகுதியில் அந்த அம்மாளே இரவு முழுதும் அந்த ரிக்ஷாவுக்குக் காவலாக இருந்து பாதுகாத்த செயலையும் நாங்கள் மறக்க முடியாது. அந்த அம்மாளின் வரலாற்றினைக் கேட்போம்.

அந்த அம்மாள் பெயர் ஆவுடையம்மாள் என்பதாகும். எட்டு வயதில் அவள் இவ்வூருக்கு வந்திருக்கிறாள். எங்கெங்கோ வேலை பார்த்து, முனிசாமி என்ற தமிழரை மணந்து பிள்ளைகளைப் பெற்று, இப்பொழுது வயதான காலத்தில் இக்கோயிலில் காவற்காரியாக வேலைபார்க்கிறாள்.

தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ள எங்களை எந்த விதச்சிரமமும் இல்லாமல் அனுப்பவேண்டும் என்ற முயற்சியில் அந்த அம்மா இரவு முழுதும் உறங்கவில்லை. அவள் உறங்கினால் எங்கள் ரிக்ஷாவில் இருந்த பொருள்கள் நிமிடத்தில் களவு போய் விடுமாம். எனவே கண் இமைக்காமல் அவள் காவல் காத்த நிகழ்ச்சி கங்கைக் கரையில் இராமபிரானைக் கண் இமையாது காத்த குகனை நினைவுபடுத்தியது.

59. நாற்பத்தேழாம் நாள்
(புல்லூர் சிவரஸ்தா-ஜல்லாபுரம்)

4-4,83 திங்கள் காலை 5½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். ''மாமிடாலபாடு'' கிராமம் வழியாகச் சென்ற பொழுது அங்கு சாலையில் ஏராளமான பெண்கள் மோர்விற்றனர். நல்ல மோராகக் கிடைத்தது, வயிறு குளிர மோர் பருகினோம். அவ்வூர் எல்லையில் **துங்கபத்திரா** நதியில் நீராடினோம். இந்நதி இந்தியாவின் புண்ணிய நதிகளில் ஒன்றாகும். இதில் ஏராளமாகத் தண்ணீர் ஓடியது. நீச்சல் அடித்து மகிழ்ந்தோம். எங்கள் உடலில் ஏறி இருந்த வெப்பம் ஓரளவு தணிந்தது. ரொட்டி-ஜாம் காலை உணவு உண்டோம். 8-மைல் நடந்து நான்கு மிகப் பெரிய சாலைகள் சந்திக்கின்ற ஒரு சந்திப்புக்கு (Road Junction) வந்து சேர்ந்தோம். அந்த இடத்திற்குப் புல்லூர் சிவரஸ்தா என்று பெயர் வழங்குகிறது. நாங்கள் நடந்து வந்த வழியில் ஒருமரம் கூட இல்லை. அப்படிப்பட்ட பாலைவனமாக அது இருந்தது.

கூடாரம் போட்டு சைக்கிள் ரிக்ஷாவை நிறுத்தினோம். அதன் அருகில் அமர்ந்தோம். வெயில் கடுமையாக இருந்தது. சுமார். 110°F. வெயில் அடித்தது. இனி நாங்கள் சமையல் செய்ய வேண்டும். அந்த இடத்தில் **உப்புநீர்** தான் கிடைத்தது, அதனைக் கொண்டு சமையல் செய்யத் தொடங்கினோம். எங்குமே நிழல் இல்லை. எனவே கொளுத்தும் வெயிலில் நின்றவாறே சமையல் செய்தோம். தலையிலும் கடுமை

யான வெயில் அடிக்கிறது; தரையும் சுடுகிறது. இந் நிலையிலும் தளராமல் ஒருவழியாக மதியம் ஒருமணி அளவில் சமையல் செய்து முடித்தோம். இன்றையத் "திரு அமுது" தேவகோட்டை இந்தியன் வங்கி அலு வலர்கள் சார்பில் வழங்கப் பெற்றது.

இங்கு மதிய உணவு தயாரான சமயத்தில் மகாராஷ்டிராவில் உள்ள ஷோலாப்பூரில் இருந்து ஆந்திராவில் உள்ள ஸ்ரீ சைலத்துக்குப் பாதயாத்திரை யாக நடந்து வந்த ஐந்து பக்தர்கள் எங்கள் கூடாரத் துக்கு வந்து சேர்ந்தனர். அவர்களில் ஒருவர் ஷோலாப்பூர் ஈஸ்வரன் கோயிலில் அர்ச்சகர் ஆவார். மகாராஷ்டிரத்தில் இருந்து ஸ்ரீ சைலம் சுமார் 500மைல் தூரத்தில் இருக்கிறது. இத்தலத்துக்கு மகாராஷ்ட்ர மக்கள் நடந்து வந்து தரிசிக்கும் பழக்கம் பண்டுதொட்டு இன்று வரை இருக்கிறதாம். மகாராஷ்ட்ரமும் ஆந்திர மும் பக்கத்து மாகாணங்கள் ஆகையால் இது எளிதில் நடைபெறுகிறது. ஆனால் காசி-இராமேஸ்வரம் பாத யாத்திரைதான் ஏனோ இதுவரை ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தடைப்பட்டு நிற்கிறது. அதனைப் புதுப் பிக்கும் பணிக்கு இறைவன் எங்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறான். நாங்கள் என்ன தவம் செய்தோமோ?

மகாராஷ்ட்ரப் பாதயாத்திரிகர்கள் எங்களுடன் தங்க இடம் கொடுத்தோம். பால் வழங்கினோம். அவர்கள் எங்களது காசியாத்திரை பற்றி அறிந்ததும் எங்களது பாதங்களில் விழுந்து வணங்கி விபூதி பெற்றனர். சில மைல் தொலைவில் உள்ள ஸ்ரீசைலத் துக்குத் தங்களுடன் வந்து போகுமாறு எங்களை அன்புடன் அழைத்தனர். ஸ்ரீ சைலம் ஆத்மலிங்கம் ஜோதிர்லிங்கம் பன்னிரண்டில் ஒன்றாகும். அங்கு சென்று வழிபட எங்கட்கு ஆசை மிகுதிதான். எனினும் எங்கள் நோக்கம் காசி ஆகையால் "ஈசனோ டாயினும் ஆசை அறுமின்" என்ற வாக்குப்படி ஸ்ரீசைலம் ஈசன்

மீது கொண்ட ஆசையைத் தடுத்து, நாங்கள் இருந்த இடத்தில் இருந்தே எழுந்து நின்று ஸ்ரீசைலம் இருக்கும் திக்கு நோக்கித் தொழுதோம். பிறகு மகாராஷ்ட்ர அன்பர்களையும் எங்களுடன் அமரவைத்து உணவு உண்டோம். மகாராஷ்ட்ரப் பாதயாத்திரைக் குழுவக்குத் தலைமை தாங்கி வந்த அர்ச்சகர் பெயர் ''ரவிபாலச் சந்திரபதி'' என்பதாகும். உணவுண்டு முடித்ததும் அவர் எங்களிடம் ஏதோ ஒன்று கேட்டார். அவர் என்ன கேட்கிறார் என்பது எங்களுக்கு விளங்க வில்லை. பிறகு அவர் சைகை மூலம் தெரிவித்தார். இடது உள்ளங்கையில், வலது சுட்டு விரலையும் பெரு விரலையும் சேர்த்து வைத்துத் தேய்த்து, பிறகு உள்ளங் கையில் இருந்து எதையோ எடுப்பது போலப் பாவனை செய்து எடுத்து வாய்க்குள் போட்டார். அதன் மூலம் அவர் ''கஞ்சா'' இருக்கிறதா என்று வினவுகிறார் என்பதை உணர்ந்து ''கஞ்சாவா'' என்றோம். அவர் ''ஆம்'' என்றார். ''அதை நாங்கள் உபயோகிப்பது கிடையாது.'' என்றோம். அவர் மிகவும் ஆச்சரியப் பட்டார். ''வடநாட்டில் பலர் அதனைப் பயன் படுத்து வார்கள்'' என்று கூறி, எங்களது ஒழுக்கத்தை அவர் மிகவும் பாராட்டினார். அவர் கூற்று முற்றிலும் உண்மை என்பதை நாங்கள் மகாராஷ்ட்ர மாநிலத்தில் பல இடத்தில் கண்டோம்.

பிறகு அவரும் அவரது குழுவினரும் எங்களிடம் விடைபெற்றுக்கொண்டு சிறிது தூரம் சென்று ஒரு கடைக்கு முன்னால் இருந்த வெளியிடத்தில் தூங்க லாயினர். நாங்கள் மாலை 4½ மணிக்குப் புறப்பட்ட பொழுது அவர்களிடம் சொல்லிக் கொள்வதற்காக அவர்கள் அருகில் சென்று அவர்களை எழுப்பினோம். என்ன ஆச்சரியம். ஐந்து பேருமே எழுந்திருக்கவில்லை. அப்பொழுதுதான் கடைக்காரர் ஓர் உண்மையினைச் சொன்னார். ''இவர்கள் ஐவரும் கஞ்சாக் குடித்துவிட்டு

வெயிலில் உறங்குகிறார்கள். இனி வெகுநேரம் கழித்துத் தான் நினைவு வந்து எழுவார்கள். நீங்கள் புறப் படுங்கள்'' என்று தெலுங்கில் சொன்னார். எங்கட்குக் கன்னடம், தெலுங்கு, இந்தி முதலிய மொழிகள் தெரியாது. அவற்றில் சில வார்த்தைகளே தெரியும். எனினும் ஒருவாறு வார்த்தைகளாக நாங்கள் பேசக் கற்றுக்கொண்டிருந்தோம். மற்றவர்கள் பேசுவது எங்கட்கு நன்கு புரிந்தது. அதற்குக் காரணம் உள்ளங் களில் ஏற்பட்டிருக்கும் ஐக்கியமே ஆகும். இரண்டு உள்ளங்கள் இணைந்திருக்குமேயானால் அங்கு மொழி தேவையில்லை, விழியே போதும் என்பார் வள்ளுவர்.

''கண்ணோடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல''

என்பது குறள். இது அகத்துறைக்குச் சொல்லியது. என்றாலும் இது புறத்துறைக்கும் பொருந்துவதைப் பாதயாத்திரையில் பரிபூரணமாக உணர்ந்தோம். எங்களிடம் அன்பும் பக்தியும் மரியாதையும் உடைய மக்கள் எந்த மொழியில் பேசினாலும் எங்களுக்குப் புரிந்தது. அவர்களது மொழி பாதியும் விழிபாதியும் சைகைமீதியுமாக அவர்களது உள்ளக் கருத்தை எங்கட்கு நன்கு உணர்த்தின. அவ்வாறே எங்கள் கருத்தும் அவர்கட்குப் புரிந்தது. இது நாங்கள் இப் பாதயாத்திரையில் கற்ற புனிதப் பாடமாகும்!

மாலையில் நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடங்கிய பொழுது நான்கு சாலைகளில் வலதுபுறச் சாலை ''அல்லம்புறம்'' என்ற ஊருக்குச் செல்வதைக் கண்டோம். அங்கு புகழ்மிகு ''பாலபிரமேஸ்வர தேவாலயம்'' இருப்பதாக அறிந்தோம். அது ஜோதிர் லிங்கத்துக்குச் சமமான கோடிலிங்கமாகும். அதனையும் இங்கிருந்தவாறே மானசிகமாகத் தரிசித்து எங்களது

(N. H. 7) தேசீய நெடுஞ்சாலை ஏழில் தொடர்ந்து பயணமானோம். 7 மைல் நடந்து **ஜல்லாபுரம்** என்ற சிற்றூருக்கு வந்து சேர்ந்தோம். இவ்வூருக்கு முன்னால் ஓர் ஊரில் தங்க நினைத்தோம். ஆனால் அந்த ஊர் நெடுஞ்சாலையில் இருந்து சிறிது விலகி உட்புறம் ஓரிரண்டு மைல் தொலைவில் அமைந்திருந்தது. பல ஊர்கள் இவ்வாறு நெடுஞ்சாலையை விட்டு உட்புற மாகவே அமைந்திருக்கக் கண்டோம். அதற்குக் காரணம் என்ன என்று பலரை வினவினோம். அதற்கு அவர்கள் சொன்ன பதில் வருமாறு:

"இப்பகுதிகளில் நெடுஞ்சாலையில் ஊர்கள் இரா. இரண்டு மூன்று மைல் உட்புறம் விலகியே இருக்கும். அதற்குக் காரணம் இந்த நெடுஞ்சாலை யானது பழங்கால ராஜபாட்டையாகும். இதன் வழி யாகப் படையெடுப்புக்கள் நடக்கும். அப்பொழுது சாலையில் ஊர்கள் இருந்தால் அவை அழிக்கப்படும். விலகி இருந்தால் படைகள் அங்கு வரா. மேலும் ராஜாக்கள் பார்வையில் ஊர்ப்பெண்கள் பட்டால் அவர்கள் தப்புவது அக்காலத்தில் அரிது. எனவே ஊர்கள் விலகி இருந்தன. மேலும் இப்பகுதியில் கொள்ளைக்காரர்களின் தொல்லையும் உண்டு. ஊர்கள் சாலையை விட்டு விலகி இருந்தால் கொள்ளைக் காரர்கள் ஊருக்குள் வராமல் நெடுஞ்சாலை வழியே போய்விடுவார்கள். எனவேதான் பெரும்பகுதி ஊர் களை அக்காலத்தில் எச்சரிக்கையாக நெடுஞ்சாலையில் இருந்து விலகி அமைத்திருக்கிறார்கள்" என்றார்கள். இது எங்கட்கு உண்மையாகவே பட்டது.

இக்காலத்தில் சாலைப் போக்குவரத்து மிகுதி யாக இருப்பதாலும், ராஜாக்களின் தொல்லை இல்லாத தாலும், கொள்ளைக்காரர்கள் பெரும்பகுதி ஒழிக்கப் பட்டு விட்டதாலும் ஒரு சில முக்கியமான இடங்களில்

நெடுஞ்சாலையில் சிலர் தைரியமாகக் கடைவைத்து வாணிபம் செய்கின்றனர். அவர்களது வீடுகள் சாலையில் இருக்கின்றன. பயணிகள் அங்கு தங்கு கின்றனர். எனவே அந்த இடங்கள் இப்பொழுது புதிய ஊர்களாக எழுச்சி பெற்று வரக் காண்கிறோம்.

ஜல்லாபுரம் என்பது அப்படி ஏற்பட்ட ஒரு புதிய ஊர். ஒரு கால்வாய்க்கரை ஓரத்தில் அந்த ஊர் தோன்றி உள்ளது: ''ஒரு மரம் தோப்பாகாது.'' என்பார்கள். ஆனால் அந்த ஊரில் ஒருமரம்தான் தோப்பு! எப்படி என்றால் கால்வாய்க்கரை அருகில் சாலையின் ஒரு புறத்தில் ஒரு கடை. அந்தக்கடையின் உட்புறம் ஒரு பெரியவரும் அவரது மனைவியாகிய ஒரு கிழவியும் மட்டும் வசிக்கின்றனர். கூரை வேய்ந்த கடை இது! இக்கடையில் எந்தப் பொருளுமே இல்லை. எல்லாம் விற்றுவிட்டதாம். இனிமேல்தான் பொருள்கள் வாங்கி வரவேண்டுமாம். அதுவும் இவர்களது மகனும் மரு மகளும் வெளியூர் சென்றிருப்பவர்கள் திரும்பியபின்தான் கடைக்குரிய பொருள்கள் வாங்கவேண்டுமாம்.

நாங்கள் ஏதாவது அங்கு வாங்கித் தின்று அவர் களது பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, இரவில் அக் கடையின் முன்னால் படுத்துத் தூங்க அனுமதி பெற வேண்டும். அந்த நினைப்பில் முயன்றோம். ஆனால் அங்கு ஒன்றுமே வாங்குவதற்கு இல்லை. ஆகையால் எங்கள் திட்டம் முளையிலேயே படுத்துவிட்டது. உடனே எதிர்புறத்தில் இருந்த கடையினை நோக்கி நடந்தோம். அது இதைவிட மிகச்சிறிய கடை. அங்கு சென்று அவர் வைத்திருந்த பொட்டுக் கடலை மட்டும் வாங்கித்தின் றோம். வேறு எதுவும் நாங்கள் தின்னக்கூடிய முறையில் அங்கு இல்லை. எனினும் அவருடன் பேசத் தொடங்கி னோம். எங்கள் காசியாத்திரை பற்றி அவரிடம்கூறி, இரவில் அங்கு தங்க அனுமதி கேட்டோம். அப்பொழுது

மணி 7½ ஆகி இருந்தது. அவர் சொன்ன பதில் எங்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "இரவில் இங்கு யாரும் தங்குவதில்லை. திருடர்கள் பயம் இங்கு உண்டு. இதோ கடை அடைக்கப் போகிறேன். இப் பொழுது நடக்கத் தொடங்கினால்தான் என் சொந்த ஊருக்கு நான் பத்திரமாகப் போய்ச்சேர முடியும். ஆகவே நீங்கள் விலகி வெளியே போங்கள். நான் கடை அடைக்க வேண்டும்" என்றுகூறி, கடையினை அடைத்துப் பூட்டி நடையைக் கட்டினார். ஒருகால் அவர் எங்களையே திருடர்கள் என்று நினைத்து விட்டாரோ என்னவோ?

இனி எங்களுக்கு வேறு வழியில்லை. ஏனென்றால் அங்கு வேறு கடையில்லை. எனவே திட்டமிட்டு எங்கள் சைக்கிள் ரிக்ஷாவை அந்தக் கிழவரின் பார்வையில் படுமாறு கடையின் முற்றத்தில் நிறுத்தினோம். அதில் இருந்த உணவுப் பொருள்களை வெளியே எடுத்து வைத்தோம். கால்வாயில் இருந்து தண்ணீர் கொண்டு வந்தோம். முற்றத்தில் சுற்றி உட்கார்ந்து கொண்டோம். எங்களது அரிக்கன் விளக்கு வெளிச்சம் தவிர அங்கு வேறு விளக்கின் ஒளியில்லை. அந்த ஒளியில் நாங்கள் மிகவும் புனித உணவாகிய கஞ்சியினைக் குடித்து, வழியில் நாங்கள் தயாரித்த மாங்காய் ஊறுகாயினைச் சுவைத்து ஒருவாறு பசி தீர்ந்தோம். இக்காட்சியைக் கிழவரும், கிழவியும் பார்த்துக் கொண்டிருந்தனர். பிறகு கிழவரிடம் நான்பேசத் தொடங்கினேன்.

இன்று இரவு இந்தக் கடைக்கு முன்னால் உள்ள தரையில் நாங்கள் படுத்து தூங்க அனுமதிக்க வேண்டும்" என்றேன். அவர் "சரி" என்று தலையசைத்தார். உடனே எங்களது ("டென்டை") கூடாரத்துணியைத் தரையில் விரித்துப் படுத்தோம். வானமே கூரை! தரையில் நிலச்சூடு மிகுதியாக இருந்தது. நிலச்சூட்டில்

என்னால் தூங்க இயலாது. அப்படித் தூங்கினால் சற்று நேரத்தில் கண்கள் சிவந்து எரிச்சல் வந்துவிடும். எனவே நான் மெல்ல மெல்ல நகர்ந்து கடைக்குள் போய் அங்கிருந்த கொஞ்ச இடத்தில் படுத்தேன். என்னைத் தொடர்ந்து ஒவ்வொருவராக உள்ளே நகர்ந்து [illegible] கடையின் இடத்தை ஆக்கிரமித்துக் கொ[illegible]. கடையின் வடபுறமும் தென்புறமும் இரண்டு [illegible]டைச் சுவர்கள் இருந்தன. அவற்றில் இ[illegible] படுத் திருந்தனர். நாங்கள் கடைக்குள் [illegible]. அவர்கள் இருவரும் எழுந்து வீட்டுக்குள் [illegible]டனர். உடனே எங்கள் பக்தர்கள் இருவர் [illegible] அந்த இரு இடங் களையும் ஆக்கிரமித்துக் கொண்[illegible]. இப்படியாக நாங்கள் கடைக்குள் அடுத்தடு[illegible] படுத்துத் தூங்கினோம்.

''அருள் தொண்டர்'' இராகவ[illegible] ''திருமுருகன்'' சுப்பையா, அய்யாசாமி, அடைக்கப்ப[illegible]கியோர் நில[illegible] வெளிச்சத்தில் வெளிப்புறம் ப[illegible]ருக்கின்ற[illegible]. மற்றவர்களாகிய நாங்கள் உட்புறம் ப[illegible]ருக்கி[illegible]. கடைக்குக் கதவோ தாழ்ப்பாளோ எ[illegible]. இரண்டு அடி உயரமான ஒரு சிறு கட்ட[illegible]தான் எங்கட்கு இடையே உள்ள ஒரு தடை! இ[illegible]லையில் நாங்கள் மெய்ம் மறந்து தூங்கினோம்.

இடையில் எப்பொழுதாவது எ[illegible]த் தூக்கம் கலைந்தால் நான் உடனே என்னுடைய [illegible] விளக்கை சுற்றிலும் அடித்து அந்த வெளிச்சத்தில் ஒ[illegible]சோதனை செய்வது வழக்கம். அதுபோல் இன்றும் [illegible]லை ஒரு மணி வாகில் என் தூக்கம் கலைந்தது. உ[illegible] வழக்கம் போல் டார்ச் விளக்கின் ஒளியினால் [illegible]முற்றும் பார்த்தேன். எல்லோரும் நன்கு தூங்கி[illegible]ண்டிருந்த னர். எங்களில் ஒருவர் நல்ல சிவப்[illegible]யினால் உடலைப் போர்த்துத் தூங்கிக் [illegible]டிருப்பது

தெரிந்தது. குளிருக்கு நம்மவர் யாரோ நன்குபோர்த்துக் கொண்டு தூங்குவதாக நான் நினைத்து, விளக்கை அணைத்து விட்டு, அயர்ந்து தூங்கலானேன். நான் எப்பொழுதும் தூங்கத் தொடங்கினால் கடவுளைப் பிரார்த்திப்பேன். மறுவிநாடி தூங்கி விடுவேன். இது எனக்கு இறைவன் அளித்த வரப்பிரசாதம்! அந்த முறையில் எனது தூக்கம் தொடர்ந்தது.

சற்று நேரத்தில் ஏதோ மோட்டார் சைக்கிள் வரும் ஒலி, நிற்கும் ஒலி, எங்களில் யாருடனோ பேசுகின்ற ஒலி, பிறகு மோட்டார் சைக்கிள் புறப்படும் ஒலி எல்லாம் கேட்டது. ஆனால் என்னால் கண்விழிக்க முடியவில்லை. களைப்பினால் கண் இமைகள் கனத்தன. எனவே அந்தப் பேச்சுக்களில் நான் தலையிடாமல் தூங்கி விட்டேன். என்ன நடந்தது என்பது விடிகாலையில் திரு. இராகவன் சொல்லத்தான் தெரிந்தது.

விடிகாலையில் வழக்கம் போல் 4 மணிக்கு நான் எழுந்தேன். உடனே பிரார்த்தனை செய்துவிட்டு எங்கும் டார்ச் விளக்கினை அடித்து, எழுந்தேன். அப்பொழுதும் எங்கள் பக்தர்களில் ஒருவர் சிவப்புப் போர்வையினால் போர்த்திக் கொண்டு நன்கு தூங்குவது தெரிந்தது. நான் "அரோஹரா" என்று சொல்கிறவரை அவர்கள் தூங்குவார்கள். "அரோஹரா" சொன்னால் உடனே அவர்கள் எழுந்து காலைக் கடன்களை முடிப்பார்கள். பிறகு ரிக்ஷாவில் உள்ள படங்கள் வேல், தீர்த்தக்குடம் ஆகியவற்றுக்குத் தீபம் காட்டிக் குருநாதரிடம் விபூதி வாங்கிக் கொள்வோம். உடனே மறுமுறையாக நான் "அரோஹரா" சொன்னதும் எங்கள் பயணம் தொடங்கும். படையில் "மார்ச்" (March) என்று சொன்னால் படை நடக்கும். பாதயாத்திரையில் "அரோஹரா" என்று சொன்னால் எங்கள் அணி நடக்கும். இது தான் எங்கட்கும் படைக்கும் உள்ள ஒரே

ஒரு வேறுபாடு. மற்றபடி எகங்ள் அணி ஒரு படையினும் மேலான கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் சத்தியத்தையும் கடைப்பிடித்தது. அதனால் தான் நாங்கள் வெற்றி பெற்றோம் என்றால் அது மிகையாகாது.

நான் காலைக் கடன்களை முடித்துக் கால்வாய் நீரில் குளித்து விட்டு வந்தேன். அப்பொழுது சிவப்புச் சேலை அணிந்த ஒரு பெண் நாங்கள் தூங்கிய இடத்தில் இருந்து எழுந்து வெளியே வரக் கண்டேன். சரிதான். கடைக்காரக் கிழவரின் மகனும் மருமகளும் நள்ளிரவில் திரும்பி வந்து விட்டார்கள் போலும். அவர்கள் இடம் இல்லாமல் எங்கள் பக்தர்கள் அருகிலேயே தூங்கி இருக்கிறார்கள் போலும். இப்பொழுது மருமகள் எழுந்து கால்வாய்ப்பக்கம் போகிறாள் போலும் என்று கற்பனை செய்து கொண்டேன். சிவப்புச் சேலை உடுத்திய பெண் கால்வாய்ப்பக்கம் போனவள் நெடு நேரம் ஆகியும் திரும்பவில்லை.

நான் வழக்கம் போல் ""அரோஹரா'' என்று சொன்னேன். உடனே எங்கள் பக்தர்கள் மின்னல் வேகத்தில் எழுந்து காலைக் கடன்களை முடித்தார்கள். அப்பொழுது ஒரு மோட்டார் சைக்கிள் வேகமாக வந்து எங்கள் முன் நின்றது. அதில் இருந்த இருவர் எங்களைப் பார்த்தார்கள். அவர்கட்கு ஏதோ நம்பிக்கை ஏற்பட்டது போலும். உடனே வந்த வழியே திரும்பி விட்டார்கள். நான் உடனே திரு. இராகவனைப் பார்த்துக் கேட்டேன் ""இவர்கள் யார்?'' என்று. உடனே அவர் நள்ளிரவில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி வர்ணித்தார்.

""இரவு ஒரு மணி இருக்கும். நீங்கள் எல்லாம் நன்கு தூங்கினீர்கள். அப்பொழுது இந்த மோட்டார் சைக்கிள் வந்தது. அதில் இவர்கள் இருவரும் வந்து எனக்கு அருகில் நின்றனர். நான் விசாரித்தேன். உடனே அவர்கள் நம்மைப் பற்றி விசாரித்தார்கள். நான் நமது

காசியாத்திரை பற்றிச் சொன்னேன். பிறகு அவர்கள் இங்கு ஒரு இளம் பெண் வந்தாளா? என்று என்னை விசாரித்தார்கள். நான் அப்படி யாரும் இல்லை என்று கூறினேன். உடனே அவர்கள் கடையைச் சுற்றி வந்து டார்ச் விளக்கின் ஒளியால் பரிசோதித்தார்கள். பிறகு கடைக்குள்ளும் விளக்கு ஒளியால் பார்த்தார்கள். நம் யாத்திரிகர்கள் போர்த்துக் கொண்டு தூங்குவதைக் கண்டதும் அவர்கள் சரி என்று போய்விட்டார்கள். இப்பொழுது மீண்டும் அந்தப் பெண்ணைத் தேடி வந்திருக்கிறார்கள் போலும். ஒருகால் நாம் தான் கடத்திப் போகிறோம் என்று நினைத்தார்களோ என்னவோ?'' என்றார்.

உடனே நான் இரவில் ஒரு சிவப்புப் போர்வை நம்மோடு தூங்கிய காட்சியினைச் சொல்லி, சற்றுமுன் ஒருபெண் சாவதானமாகக் கால்வாயை நோக்கிச் சென்ற காட்சியினையும் கூறினேன். ''அப்பெண் இவ் வீட்டுக் கிழவரின் மருமகள் என்று நினைத்தேன். அப்படி இல்லை போலும். அப்பெண் இந்த மோட்டார் சைக்கிள்காரர்களிடம் இருந்து தப்பி வந்தவள் போலும். எவ்வளவு தைரியமாக நம் கூட்டத்துக்கு நடுவில் நள்ளிர வில் படுத்துக் கொண்டு சிவப்புச் சேலையினால் போர்த் துக் கொண்டு தூங்கியிருக்கிறாள். இப்பொழுதும் எல் லோரும் எழுமுன் எழுந்து வெளியேறி இருக்கிறாள். பெரிய சாகசக்காரியாக இருப்பாள் போலும். நல்ல வேளை! நேற்று இரவு மோட்டார் சைக்கிள் வீரர்கள் கடைக்குள் விளக்கு அடித்த பொழுது இவள் சுவர் ஒரத்தில் படுத்திருந்ததனால் இவள் மீது வெளிச்சம் பட வில்லை போலும். மேலும் நம்மவர்கள் பலர் மஞ்சள், சிவப்பு உடை அணிந்திருப்பதனாலும், இவளது சேலை நிறம் சிவப்பாக இருந்ததனாலும் வித்தி யாசம் தெரியவில்லை. எனவே இவளைப் பற்றி யாரும் ஐயப்படவில்லை. எளிதாகத் தப்பி இருக்கிறாள்.

கடவுள் அவளையும் நம்மையும் காப்பாற்றி இருக்கிறார். நள்ளிரவில் இவளை நம் கூட்டத்தின் நடுவே அவர்கள் கண்டு பிடித்திருந்தால், நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எவ்வளவு பெரிய விபரீதம் ஏற்பட்டிருக்கும்? விசுவநாதர் அருளால் நாம் தப்பினோம். ''அஞ்சாமல் காப்பாயே விஸ்வேஸ்வரா'' என்ற வரி உண்மையாகி விட்டது'' என்றேன். எல்லோரும் என் வார்த்தையை ஒப்புக் கொண்டனர்.


அப்பொழுது எங்கள் பக்தர்களில் ஒருவராகிய அய்யாசாமி கால்வாய் நீரில் குளித்து விட்டு வேகமாக என்னை நோக்கி ஓடி வந்தார். கால்வாய்க் கரையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது என்று கூறினார். என்ன என்று கேட்டேன். அவர் கூறிய விபரம் வருமாறு.

''நான் கால்வாயில் குளித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது சிவப்புச் சேலை கட்டிய ஒரு இளம் பெண் ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்திருந்தவள் வெளியே வந்து, நெடுஞ்சாலையை நோக்கி வேகமாக நடந்தாள். சில வினாடிகளில் எங்கிருந்தோ ஒரு மோட்டார் சைக்கிள் வேகமாக வந்து அவள் அருகில் நின்றது. அதில் இருந்த இருவர் கீழே இறங்கி, அவளைப் பலாத்காரமாகப் பிடித்து மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு விரைந்து போயினர். அந்தப் பெண் அழுது போராடினாள். ஆனால் அவர்கள் அவளை மடக்கி இழுத்துச் சென்று விட்டனர்'' என்றார். அப்பொழுது தான் எங்களுக்கு முழுக்கதையும் விளங்கியது.

இரவில் அப்பெண் எப்படியோ அவர்களிடம் இருந்து, எங்கள் நடுவே புகுந்து தப்பினாலும், மறுநாள் காலை அவள் வெளியேறும் சமயம் பார்த்து அவளது எதிரிகள் அவளை மடக்கிப் பிடித்திருக்கிறார்கள்.

எப்படி இருந்தாலும் அவள் இப்பகுதியில் தான் ஒளிந் திருக்கிறாள் என்பதை எதிரிகள் உணர்ந்து, அவர்களும் மோட்டார் சைக்கிளில் எங்கோ ஒளிந்திருந்து காத்திருந் திருக்கின்றனர்.

''வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு'' என்பது உண்மையாகிவிட்டது. சாகசம் நிறைந்த அப்பெண் பிடிபட்டு விட்டாள் என்று உணர்ந்தோம். என்றாலும் எங்களுக்கு எந்தக் கெட்ட பெயரும், ஆபத்தும் வராமல் காத்த இறையருளுக்கு நன்றி செலுத்தினோம்.



60. நாற்பத்தெட்டாம் நாள்
(ஜிங்கலாபள்ளி-பீச்பள்ளி-கிருஷ்ணா நதி)

நள்ளிரவில் நடந்த சாகச நிகழ்ச்சிகளை மறந்து, இறை வழிபாடு செய்து காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். 8 மைல் நடந்து கோதண்டாபுரம் என்ற ஊருக்குச் சென்று காலைப் பலகாரம் உண்டோம். பிறகு மேலும் 3 மைல் நடந்து முனிகால் என்ற ஊரின் அருகில் உள்ள ஜிங்கலாபள்ளி என்ற ஊரை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். வழியில் எங்குமே பழம் கிடைக்கவில்லை. "பழம் சாப்பிட்டு நாளாகிவிட்டது. முழங்கால் வலிக்கிறது. பாதயாத்திரையில் பழம் சாப்பிட்டால் முழங்கால் வலி தீரும். இளநீர் சாப்பிட்டால் உடல் வெப்பம் தணியும். எனவே எங்காவது பழம் கிடைத்தால் சைக்கிள் ரிக்ஷா நிற்கட்டும். நாம் எல்லாம் பழம் வாங்கிச் சாப்பிட வேண்டும்" என்றேன். உடனே திரு. இராகவன், "கவிஞரே! இங்கே எங்கே பழம் கிடைக்கப் போகிறது? நாம் வேண்டுமானால் ஒரு தாளில் எல்லாப் பழங்களின் பெயரையும் எழுதிப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்" என்றார். நான் நம்பிக்கை இழக்கவில்லை. எங்காவது பழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நடந்தேன். "நம்பினார் கெடுவதில்லை—இது நான்குமறைத் தீர்ப்பு" அல்லவா?

எதிர்த் திசையில் இருந்து ஒரு லாரி வேகமாக வந்து கொண்டிருந்தது, அது ஹைதராபாத்தில் இருந்து பெங்களூர் நோக்கி விரைந்து கொண்டிருந்தது. ஹைதராபாத்-பெங்களூர் சாலையில் ஒரு வினாடிக்கு

ஒரு லாரி வீதம் விரைந்து ஓடக் கண்டு நாங்கள் வியந்திருக்கிறோம். இந்த நெடுஞ்சாலையில் ஹைதராபாத் பெங்களூர் இடையே உள்ள அளவுக்கு லாரிப் போக்கு வரத்து வேறு எங்குமே இல்லை. எனவே லாரிகள் ஓடும் போது நாங்கள் எச்சரிக்கையாக நடப்போம்.

ஹைதராபாத்தில் இருந்து பெங்களூர் நோக்கி ஓடிய ஒரு லாரி என் அருகில் வந்தபோது அதில் இருந்து சாத்துக்குடிப் பழங்கள் விழக் கண்டேன். லாரி ஓடிக் கொண்டே இருந்தது. பழங்கள் விழுந்து கொண்டே இருந்தன. முன்னும் பின்னுமாக நடந்த எங்கள் அனைவருக்கும் அன்று சாத்துக்குடிப் பழங்கள் இறைவன் திருவருளால் கிடைத்தன. வழியில் மேலும் பல சாத்துக்குடிப் பழங்கள் விழுந்து கிடக்கக் கண்டு எடுத்து வயிறார உண்டோம். முழங்கால் வலி தீர்ந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பாதையில் தண்ணீர்ப் பந்தல் வைத்து நீர் ஊற்றிய இறைவன், இக்கால நாயன்மார்களாகிய எங்களுக்குப் பாதையில் ஓரிடத்தில் விறகும், இந்த இடத்தில் பழமும் தந்தான் என்றால் அது மிகையாகாது.

காலை 10 மணி அளவில் ஜிங்கலாபள்ளி என்ற ஊருக்குச் சென்று ஓரிடத்தில் தங்கினோம். அருகில் உள்ள தொழிற் சாலை ஊழியர்கள் பலர் எங்களைச் சந்தித்து ஆசி பெற்றுச் சென்றார்கள்.

மாலையில் 4½ மணிக்குப் புறப்பட்டு ''எர்ராவாலி'' என்ற ஊர் வழியாக நடந்தோம். அந்த ஊரின் இடதுபுறத்தில் 20 மைலில் ''ரேவுலபள்ளி'' அருகில் ''பிரியதர்சினி ஜுராலா அணை'' கிருஷ்ணா நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டிருப்பதாக அறிந்தோம். 71 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த அணையினால் ஒரு இலட்சம் ஏக்கர் வறண்ட நிலம் பாசன வசதி பெறுமாம்.

நாங்கள் நெடுஞ்சாலை வழியே நேராக நடந்தோம். இடதுபுறம் திரும்பினால் 20 மைல் நடந்து அணையினைப் பார்க்கலாம். அது எங்கள் நேக்கம் அல்லவே. நேரானபாதையில் 5 மைல் நடந்து மாலை 6 மணிக்கு **பீச்பள்ளி** என்ற சிற்றூர்க்கு வந்து சேர்ந்தோம். இவ்வூர் மாபெரும் **கிருஷ்ணாநதி**க் கரையில் இருக்கிறது. கிருஷ்ணரின் நிறம் போன்று நீலநிறமாக இந்நதி நீர் ஓடுகிறது. எனவேதான் இதற்குக் கிருஷ்ணாநதி என்று பெயர் வந்ததோ!

புனிதப் பாரதத்தின் புண்ணிய நதிகளில் ஒன்றாகிய கிருஷ்ணாவில் நெடுநேரம் நீராடி மகிழ்ந்தோம். இந்தப் பாதயாத்திரையில் எங்களுக்குக் கிடைத்த ஒப்பற்றபேறு இது போன்ற நாற்பதுக்கு மேற்பட்ட புண்ணிய நதிகளில் நீராடியதே ஆகும். இராமனை காட்டுக்குப் போகச் சொன்ன கைகேயி

"பூழி வெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வா என்று
இயம்பினன் அரசன் என்றாள்"

என்று சொன்னாள் அல்லவா? இந்தியாவில் வடக்கே இருந்து தெற்கே வரை ஏராளமான புண்ணிய நதிகள் இருக்கின்றன. அவற்றில் நீராடும் பேறு இராமபிரானுக்கும் இலக்குமணப் பெருமாளுக்கும் கிடைத்தது. சீதா பிராட்டிக்குக் கூட அப்பேறு முழுதும் கிடைக்கவில்லை. பிறகு பாதயாத்திரை செய்த மகான்களுக்குக் கிடைத்தது. இந்த இருபதாம் நூற்றாண்டில் எங்களுக்குக் கிடைத்தது.

கிருஷ்ணா நதியில் நீராடியதும் நதிக்கரையில் அமைந்துள்ள அழகான ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வணங்கினோம். அங்கு இருந்த உள்ளூர் பக்தர்

கள் எங்களை வரவேற்று, இரவு அங்கேயே தங்கலாம் என்று சொன்னார்கள். இரவு அர்த்த ஜாமப் பூஜையின் போது உள்ளூர் அன்பர்கள் தெலுங்கில் அற்புதமான கீர்த்தனைகள் பாடினார்கள். நாங்கள் தமிழில் பஜனைப் பாடல்கள் பாடினோம். ஏராளமான தெலுங்கு மக்கள் மெய்ம் மறந்து கேட்டு மகிழ்ந்து எங்களைப் பாராட்டினர். மேலும் இக்கோயிலில் ஒரு சிறப்பு இங்கு **மேளம் நாதசுரம்** ஆகியன உள்ளன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இக்கோயிலில் மேள ஒலியும், நாதசுர ஒலியும் கேட்டு மகிழ்ந்தோம்.

இக்கோயிலில் விநாயகர், சிவலிங்கம், இராமர், சீதை, இலட்சுமணர், ஆஞ்சநேயர் ஆகிய விக்கிரகங்கள் உள்ளன. எல்லா மூர்த்திகளையும் தொழுது அன்று இரவு அங்கே நிம்மதியாகத் தூங்கினோம்.

கிருஷ்ணா நதிக் கரையில் பழங்கால நவாப் கோட்டை ஒன்று இருக்கக் கண்டோம்.

61. நாற்பத்தொன்பதாம் நாள்

(தோமலப் பள்ளி — வில்லியம் கொண்டா)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். மிகப் பெரிய கிருஷ்ணா நதிப் பாலத்தைக் கடந்து சென்றோம். இது ஒரு மைல் நீளம் உடையது. 1953ஆம் ஆண்டில் அருமையாகக் கட்டப்பட்டிருக்கிறது. 5 மைல் நடந்து ரங்கப்பூர் வழியாக பெபேர் என்ற ஊருக்குச் சென்றோம். அங்கு காலை உணவு உண்டோம். மேலும் 3 மைல் நடந்து தோமலப்பள்ளி என்ற சிற்றூருக்குச் சென்றோம். அங்கே உள்ள பெரிய வீட்டுக்காரராகிய **ரெட்டி** என்பவர் எங்களை அன்புடன்வரவேற்று அவரது வீட்டில் தங்க அனுமதித்தார். அவருக்கு வயது 96. சுறுசுறுப்பாக இயங்குகிறார். அவர் எங்களது பயணம் சிறக்க ஆசி கூறினார். அப்பொழுது ராம பக்தியினால் அவரது கண்களில் இருந்து நீர் வழிந்தது.

அவரது வீட்டு முற்றத்தில் உணவு சமைத்தோம். இன்றையத் ''திரு அமுது'' தேவ கோட்டை வரவேற்புக் குழுவினரால் வழங்கப் பெற்றது. ரெட்டியின் பேரன் திரு. சுகுமார் என்பவர் எங்கட்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு, இன்று இரவு நாங்கள் வில்லியம் கொண்டா என்ற கிராமத்தில் தங்க ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். அவரே தன் மோட்டார் சைக்கிளில் சென்று ஆவன செய்து வந்த காட்சி இன்னும் என் நெஞ்சில் பசுமையாக நிற்கிறது.

ஆந்திராவின் பல கிராமங்களில் **தீண்டாமை** உணர்வு மக்களிடையே இருப்பதைக் கண்டோம். அந்த உணர்வு

இந்த ஊர்களிலும் பிரதிபலிக்கக் கண்டு மிகவும் வருந்தினோம். இந்த நாடு என்றுதான் தீண்டாமை உணர்வுகளையும், சாதி, மதம், மொழி, மாகாணம், என்ற தளைகளையும் தகர்த்தெறிந்து நாடு, மனித இனம் என்ற பரந்த உணர்வோடு முன்னேறுமோ தெரியவில்லை. காந்தியடிகள் செய்த தொண்டு எல்லாம் வீணாகாமல் பார்த்துக் கொள்வது வருங்காலத் தலைமுறையின் கடமையாகும்.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டு நாட்டெலி, மிராசிபள்ளி முதலிய ஊர்களைக்கடந்து, 5 மைல் நடந்து இருட்டு முன்பு வில்லியம் கொண்டா என்ற கிராமத்திற்குச் சென்று சேர்ந்தோம். அக் கிராமத்தின் அருகில் ஒரு பெரிய மலை இருக்கிறது. அம்மலை மீது ஒரு சிறு தேவாலயம் காணப்படுகிறது. மலையடிவாரத்தில் உள்ள வில்லியம் கொண்டா என்ற இக்கிராமம் புதிதாகத் தோன்றி உள்ள கிராமம் ஆகும். இங்கு நம் பக்கத்துச் சேரி வீடுகள் போலப் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அப்படி ஒரு சிறு வீட்டில் தங்கினோம். அது உள்ளூர்ப் பூசாரியின் வீடாம். அவ்வீட்டில் விநாயகர் முதலிய தெய்வங்கள் ஒரு மூலையில் இருந்தன. அன்று பூசாரி ஊரில் இல்லை. எனவே அவ் வீட்டில் நாங்கள் தங்க ஏற்பாடு செய்தார்கள். ஊர் மக்கள் பரம ஏழைகளாக இருந்தார்கள்' அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று உதவிகள் செய்தனர். நாங்கள் படுத்துறங்க கயிற்றுக் கட்டில்கள் எல்லாம் வழங்கினர். அன்று இரவு கயிற்றுக் கட்டிலில் சிலரும், வீட்டுக்குள் சிலருமாக உறங்கினோம்.

62. ஐம்பதாம் நாள் பொன் விழா

(பாளையம் — அட்டாகுலா)

7-4-1983 வியாழக்கிழமை ஆகிய இன்று எங்கள் பயணத்தில் ஒரு மகத்தான நாளாகும். நாங்கள் இராமேசுவரத்தில் இருந்து நடக்கத் தொடங்கி இன்று ஐம்பதாவது நாள் ஆகும். எனவே இன்று **பாயசம், அப்பளத்**துடன் சமையல் செய்து உண்டு, இந்த நாளைக் கொண்டாடுவதாகத் தீர்மானித்தோம். இன்று காலை பயணம் புறப்படும் பொழுது எல்லோருக்கும் மிட்டாய் வழங்கிப் பொன் விழாவைத் தொடங்கி வைத்தேன். காலை 4¾ மணிக்குப் புறப்பட்டோம். பாயசம் என்ற மகிழ்ச்சியான எண்ணத்தோடும், பொன்விழா என்ற களிப்போடும் வேகமாக நடந்தோம். பாயசம் சாப்பிட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. ஆகவே அதற்கு வேண்டிய பொருள்களைக் கர்நூலில் விலைக்கு வாங்கிச் சேகரித்திருந்தோம். அவை எங்களது ரிக்ஷாவில் இருந்தன. அவற்றைப் பார்க்கும் பொழுதெல்லாம் எங்கட்குப் பாயசம் நினைவு வந்தது. இன்று அதனை உண்மையிலேயே உண்ணப் போகிறோம் அல்லவா?

7 மைல் நடந்து காலை 7½ மணிக்குக் கொத்த கோட்டா என்ற சிற்றூர்க்கு வந்து சேர்ந்தோம். இன்று காலைப் பலகாரம் எங்கள் பதின்மூவரில் ஒருவராகிய **க. தேனிமலை** வழங்கிச் சிறப்பித்தார். அவ்வூரில் அருமையான பலகாரங்கள் கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டமே!

காலையில் நாங்கள் புறப்பட்டால் ஒவ்வொரு வராக அவரவர் வேகத்திற்கு ஏற்ப நடந்து செல்வது வழக்கம். நாங்கள் சிலபேர் வேகமாக நடப்போம். சிலர் மெதுவாக நடப்பர். எங்களில் 68 வயதுடைய **திருநாவுக்கரசு செட்டியார்** அவர்கள் சில சமயம் வேகமாக வும் சில சமயம் மெல்லவும் நடந்து வருவார்கள். இன்று அவர்கள் மிகவும் மெதுவாக நடந்து வந்தார்கள். வழியில் அவர்களுக்கு உறக்கம் வந்திருக்கிறது. எனவே சாலை ஓரத்தில் ஓரிடத்தில் அவர்கள் கீழே படுத்து உறங்கிவிட்டார்கள். அவர்கள் கடைசியாக வந்ததால் எங்களுக்கு இது தெரியாது. நாங்கள் 7½ மணிக்கே கொத்தகொட்டா வந்துவிட்டோம். அடுத்தடுத்து வந்தவர்கள் அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். திருநாவுக்கரசு செட்டியாரைக் காலை பத்து மணி வரை காணோம். எங்களுக்குப் பயம் வந்து விட்டது. இனி அவர்களைத் தேட வேண்டும் என்ற எண்ணம் தோன்றி யது. நாங்கள் பின்னோக்கி நடக்க மாட்டோம். "முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை" என்பது எங்கள் சபதம். எனவே சைக்கிள் ரிக்ஷாவைப் பின்னோக்கி அனுப்பிப் பார்க்கலாம் என்று முடிவு கட்டினோம். ரிக்ஷா புறப்பட்ட பொழுது நெடுஞ்சாலையில் மிகத் தொலைவில் திருநாவுக்கரசு செட்டியார் மெதுவாக நடந்து வருவது தெரிந்தது. எனவே ரிக்ஷாவை நிறுத்தி னோம். சிறிது நேரத்தில் திருநாவுக்கரசு செட்டியார் வந்து சேர்ந்தார். "ஏன் இவ்வளவு தாமதம்?" என்று கேட்டபொழுது அவர்கள் கூறிய பதில் வருமாறு:

"நான் உங்களுடன் விடியற்காலையில் புறப் பட்டேன். பல மைல் நடந்து விட்டேன். ஆனால் ஓரிடத்தில் எனக்குத் தூக்கம் வந்து கண்களைச் சுழற்றி யது. இனிமேல் தூங்காமல் நடக்க முடியாது என்ற நிலையில் சாலை ஓரத்தில் என் துண்டை விரித்துப்

படுத்துத் தூங்கலானேன். விடியுமுன்பு தூங்கத் தொடங்கினேன். வெயில் சுள்ளென்று என் முகத்தில் அடித்தது. அப்பொழுது கூடத் தூக்கம் கலையவில்லை. தொடர்ந்து தூங்கினேன். சிறிது நேரத்தில் யாரோ ஒரு பெரியவர்- அங்கு நடந்து வந்தவர்- என்னைப் பார்த்து, எழுப்பி "என்ன நீயாகத் தனியே தூங்குகிறாய். போ" என்றார். உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தேன். விரைந்தும் மெதுவாகவும் நடந்து வந்து சேர்ந்தேன். என்னை எழுப்பிய அந்தப் பெரியவர் எந்தப் பக்கம் போனாரோ தெரியவில்லை" என்றார். காசிவிசுவநாதரே அவரை எழுப்பி விட்டு, எங்கள் கலக்கத்தைப் போக்கியதாக உணர்ந்தோம். இப்படி ஒருவரைப் பிரிந்து, மனம் கலங்கிப் பிறகு சேர்ந்தது இதுதான் முதல் முறையாகும்.

பிறகு மேலும் 2 மைல் நடந்து பாளையம் என்ற ஊருக்கு வந்து அங்கிருந்த மாந்தோப்பில் தங்கினோம். சில கறிகள் சமைத்து, பாயசம் தயாரித்தோம். இன்றையப் பொன்விழாத் "திரு அமுது" தேவகோட்டை திரு. **இராம. மாணிக்கம் செட்டியார்** அவர்களால் வழங்கப் பெற்றது. நன்கு உண்டு மாமர நிழலில் உறங்கி எழுந்தோம்.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டு கனிமேட்டா, வெல்ட்டூர் என்ற ஊர்களின் வழியாக 7 மைல் நடந்து இரவு 8 மணி அளவில் அட்டாகுலா என்ற கிராமத்தை அடைந்து அங்கிருந்த அரசு உயர்நிலைப்பள்ளியில் இரவு தங்கினோம். நாங்கள் நடந்து வந்த பகுதியில் வயல்கள் சில காணப்பட்டன. மலைப் பாங்கு குறைவாக இருந்தது. இப்பகுதியில் நெடுஞ்சாலையில் மாட்டு வண்டிகள் சில காணப்பட்டன. இம்மாடுகளுக்கு மூக்கணாங்கயிறு போடப்படவில்லை. மூக்கணாங்கயிறு இல்லாமலே மாடுகள் வண்டியை இழுத்துச் சென்றது அதிசயமாக இருந்தது.

63. ஐம்பத்தொன்றாம் நாள்

(ஜனாம் பேட்-புத்பூர்)

காலை $4\frac{3}{4}$ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். ஷாகபுரம், கோம்ரெட்டி பள்ளி வழியாக 9மைல் நடந்து $8\frac{1}{2}$ மணிக்கு ஜனாம்பேட் என்ற ஊரை அடைந்தோம். இங்கு **ஈஸ்வரன் கோயில்** உள்ளது.

மாலை $4\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டோம். அன்னசாகர், ஷெர்ப்பள்ளி, பொத்துலமாடுகு என்ற ஊர்களின் வழியே நடந்தோம். இன்று மாலை நாங்கள் அனைவரும் இடைவெளி இல்லாமல் ஏறத்தாழ அடுத்தடுத்து நடந்தோம். அப்பொழுது ஒரு நிகழ்ச்சி நடந்தது.

எங்களில் மிகப் பெரியவர் எங்களது குருநாதராகிய சிதம்பரம் செட்டியார் அவர்கள். அவர்கட்கு வயது 69. அவர்களது எழுபதாவது பிறந்த நாளை வழியில் சிறப்பாகக்கொண்டாடி மகிழ்ந்தோம். அடுத்ததாக திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் 68 வயதினர். அவர்கள் இன்றுமாலை எனக்கு முன்னால் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள். நாங்கள் சாலை ஓரத்திலேயே நடப்போம். ஆனால் அவர்கள் பெரும்பாலும் சாலையின் மையத்திலேயே நடப்பார்கள். போக்குவரத்துக் குறைவாக இருந்ததால் இது வரை ஆபத்து எதுவும் நிகழவில்லை. இப்பொழுது எங்களுக்குப் பின்னால் இருந்து ஒரு பேருந்து (பஸ்) வேகமாக வந்து கொண்டிருந்தது. நாங்கள் வழிவிட்டு நடந்தோம். ஆனால் திருநாவுக்கரசு செட்டியார்

சாலை நடுவில் நடந்ததால் நாங்கள் சப்தம்போட்டோம் அவர்கள் விலகினார்கள். என்றாலும் பின்னால் வந்த பேருந்தின் கதவு திறந்திருந்ததால் அது இவர்களது வலக்கைமீது ''படார்'' என்ற சப்தத்தோடு மோதியது. பேருந்து நிற்காமல் போய்விட்டது. சப்தம் கேட்ட நாங்கள் ஓடி வந்து திருநாவுக்கரசு செட்டியாரைப் பார்த்தோம். கை கழன்றிருக்கும் என்ற எண்ணத்தோடு நாங்கள் பயந்து ஓடிவந்தோம். ஆனால் அவர்கள் எந்தச் சலனமும் இல்லாமல், தனக்கே உரிய நிதானத் தோடு நின்றார்கள். ''கை வலிக்கிறதா?'' என்று கேட்டோம். அதற்கு அவர்கள் கூறியபதில் வருமாறு: ''இன்று காலை முதல் நேரம் சரியில்லை, காலையில் ஒருமாடு என்னை முட்ட வந்தது. உடனே தெய்வாதீன மாக அதன் கொம்பைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்பினேன். இப்பொழுது பேருந்து என் வலக்கைமீது வேகமாக மோதியது. நானே கைபோய்விட்டது என்று தான் நினைத்தேன். ஆனால் காசி விசுவநாதர் கிருபை யால் கை பத்திரமாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? நான் 25 வருடங்களாகப் பழநிக்குப் பாதயாத்திரை சென்று வருகிறேன். அப்படிச் செல்லும் பொழுது ''ஓம் முருகா!'' ''ஓம் முருகா'' என்று முருகனின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே செல்வேன் அந்த நாமாவளியை என் வலக்கை விரல்களால் எண்ணிக் கொண்டே செல்வேன். நூறு, ஆயிரம், இலட்சம் என்று எண்ணிக்கை வரும்போது அந்த எண்ணிக்கையை என் இடது கைவிரல்களால் அடையாளமாக எண்ணிக் கொள்வேன். இருபத்தைந்து ஆண்டுகள் பழனிக்கு நடந்துள்ள நான் முப்பத்தைந்து இலட்சம் முருகன் நாமாவளி சொல்லி உள்ளேன். இந்தக் காசியாத்திரை யில் மீதி அறுபத்தைந்து லட்சம் நாமாவளியும் சொல்லிக் ''கோடி அர்ச்சனை'' பூர்த்தி செய்ய வேண்டும். இராமேசுவரத்தில் இருந்து புறப்பட்டது

முதல் இதுவரைபல லட்சம் நாமாவளி பூர்த்தி செய்துள்ளேன். எனவே என்வாய் முருகன்நாமாவளி சொல்ல என் வலக்கை எண்ணுகிறது அல்லவா? அந்தக் கை மீது பேருந்து மோதினால் என்ன? வேறு எது மோதினால் என்ன? முருகன் காப்பாற்ற மாட்டானா? அவன் காப்பாற்றிவிட்டான்'' என்று கூறினார். கடவுளின் பேரருளை வியந்தவாறு நடந்தோம்.

வழியில் ஒரு காய்ந்த நிலத்தை வயதான ஒருவர் உழுது கொண்டிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டோம். உழுபவர் கலப்பைமீது நின்று கொண்டு உழுதார். நம் ஊர்களில் கலப்பை முன்னால்போகும். உழுபவர் பின்னால் நடந்து செல்வார். ஆனால் இங்கே உழுபவர் கலப்பைமீது நின்று கொண்டு வயலில் உழவுப் பயணம் செய்து கொண்டிருக்கக் கண்டோம். இப்படித்தான் அப் பகுதியில் உழுவது என்பதைப் பிறகு அறிந்தோம்.

காய்ந்த நிலத்தை அந்த வயதான உழவர் உழுத காட்சி வருணன் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையைப் புலப்படுத்தியது. எப்படியும் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் அவர் உழுது கொண்டிருந்தார். அப் பொழுது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வந்தது.

நம் ஊர்களில் எல்லாம் மழை பெய்யாத பொழுது ''மகா பாரதம் விராடபருவம்'' படிப்போம். மமை பெய்யும். நானே பல ஊர்களில் விராடபருவம் தொடர் சொற்பொழிவு செய்து மழைபெய்யக் கண்டிருக்கிறேன். குளத்து நீரில் நின்று கொண்டு ''வருணஜபம்'' செய்தாலும் மழை பொழியும்.

ஒரு சிறு கிராமத்தில் அவ்வூர் மக்கள் மழை வேண்டி வருணஜபம் ஒருவாரத்திற்கு வைத்தனர். அவ்வூர்க் கோயில் குருக்கள் அந்த ஜபத்தைச் செய்தார். ஆறுநாள் அவர் கோயில் குளத்து நீரில் நின்று வருண

ஜபம் செய்தும் மழை பெய்யவில்லை. ஏழாவது நாள் கடைசிநாள். அன்று அவர் வருண ஜபத்துக்காக வீட்டைவிட்டுப் புறப்பட்ட பொழுது அவரது மனைவி அவரிடம் ஒரு குடையைக் கொடுத்தாளாம். அவர் "குடை எதற்கு" என்று கேட்டார். "இன்று மழை வரும். ஆகவே குடையைக் கொண்டு செல்லுங்கள்." என்றாள் மனைவி நம்பிக்கையோடு. ஆனால் குருக்கள் நம்பிக்கை இல்லாமல் சிரித்துக் கொண்டே குடையை வாங்காமல் போய்விட்டார். என்றாலும் அவரது மனைவிக்கு மனது சரியில்லை. எனவே வீட்டு வேலை களை விரைவில் முடித்து, வருணஜபம் முடியுமுன் குடையை எடுத்துக்கொண்டு கோயிற் குளம் நோக்கி ஓடினாள். அப்பொழுதுதான் வருணஜபம் முடியும் நேரம். அதுவரை மழை பெய்விக்காமல் இருந்த வருணன் குடையோடு ஓடிவரும் பெண்ணையும், அவளது நம்பிக்கையையும் கண்டு உடனே மழை பெய்வித்தானாம். அப்பொழுது தேவர்கள் சிலர் வருணனைப் பார்த்து "இத்தனை நாளாக மழையைத் தடுத்த நீ இப்பொழுது மட்டும் ஏன் திடீர் என்று மழை பெய்வித்தாய்?" என்று கேட்டார்களாம். அதற்கு வருணன் "நம்பிக்கையோடு ஓடி வந்த அந்தப்பெண்ணின் நம்பிக்கையை வீணாக்க என்மனம் விரும்பவில்லை" என்றானாம். எனவே நம்பிக்கையோடு செய்யும் எந்தத் தேவகாரியமும் வீண்போவதில்லை. அந்தத் தத்துவம் இங்கே பலிக்கக் கண்டோம். நம்பிக்கையோடு ஒரு பெரியவர் காய்ந்த நிலத்தில் உழுகிறார். சற்று சற்று நேரத்தில் ஒரு சிறு மழை விழக்கண்டோம்.

7 மைல் நடந்து இரவு 7 மணி அளவில் புத்பூர் என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு ஒரு கை காட்டி நின்றது. அதில் இடதுபுறம் சென்றால் 5 மைலில் மஹபூப்நகர். 100 மைலில் ஸ்ரீசைலம் என்றிருந்தது. இவ்வூர் வழியாக ஸ்ரீசைலத்துக்குப் பலர் நடந்து போவார்களாம். ஸ்ரீசைலம் ஜோதிர் லிங்கத்தை புத்பூரில் இருந்தே மனத்தால் வழிபட்டோம். மனத்தால் வழிபடும் முறையை நமக்குப் பூசலார் நாயனார் காட்டி இருக்கிறாரே!

64. ஐம்பத்திரண்டாம் நாள்

(ஜட்சேர்லா — பாலநகர்.)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். இன்று காலையில் 8 மைலும் மாலையில் 12 மைலும் ஆக 20 மைல் நடக்க வேண்டும். இன்று கடும் பயணம். எனவே அயராமல் நடந்தோம். டிவிட்டிபள்ளி, மல்லபோன் பள்ளி வழியாகக் காலை 8 மணிக்கு ஜட்சேர்லா சேர்ந் தோம். அங்கு ஒரு வெங்கடேசப் பெருமாள் கோயில் இருந்தது. தரிசித்து அங்கேயே தங்கினோம். உடனே உள்ளூர் அன்பர்கள் சிலர் சிறிது தொலைவில் அரசாங்கப் பயணிகள் மாளிகை (H.B) இருப்பதாகவும் அங்கு வசதியாகத் தங்குமாறும் சொன்னார்கள். அவ் வாறே நாங்கள் நடந்து பயணிகள் மாளிகைக்குச் சென் றோம். அங்கே மஹபூப் நகர மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி (R.D.O.) திரு. எம். தர்மையா என்பவர் முகாம் இட்டிருந்தார். அவர் எங்களை அன்புடன் வர வேற்றுத் தங்க இடம் கொடுத்தார். எங்களுக்கு ஏதா வது வழங்க வேண்டும் என்று விரும்பிய அவர் உடனே பழசர்பத் தயாரித்து எங்களுக்குத் தந்தார். அவருடன் இருந்த திரு. சீதாராமுடு என்ற பொறியாளர் (A.E.) சிறிது நேரத்தில் எங்களுக்குத் தேநீர் வழங்கினார். எங்கள் பக்தியை அவர்கள் அனைவரும் போற்றிப் பாராட்டினர். அத்துடன் எங்களிடம் விபூதியும் வாங்கி அணிந்து கொண்டனர். இன்று சமையல் செய்து "திரு அமுது" உண்டோம். இத்திருஅமுது

தேவகோட்டை திரு. ந. அருணாசலம் (Ex.M.P) அவர்களால் வழங்கப் பெற்றது.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். காய்ந்து கிடந்த பாதை வழியாக நடந்து சென்றோம். ஓரிடத்தில் சிறுசிறு குன்றுகள் காணப்பட்டன. அந்த இடத்தை நாங்கள் அடைந்த பொழுது ஒரு சிறுகார் எதிர்த்திசையில் இருந்து எங்களை நோக்கி வந்து நின்றது. அந்தக் காரில் இருந்து ஹைதராபாத் நகரத்தார்கள் சிலர் ''அரோஹரா'' ''அரோஹரா'' என்று சொல்லிக் கொண்டே இறங்கினார்கள். எங்களை அறியாமல் நாங்களும் அரோகரா என்று கூவினோம். அந்த அன்பர்கள் எங்கள் கால்களில் விழுந்து வணங்கி விபூதி வாங்கிப் பூசிக் கொண்டனர். பிறகு அங்கிருந்த மலைப்பாறைகளில் அமர்ந்தோம். அவர்கள் கொண்டு வந்திருந்த தின்பண்டங்களை எங்களுக்குத் தந்து உண்ணச் செய்தனர். அவர்கள் எங்களை வரவேற்பதற்காக எங்கள் நிகழ்ச்சி நிரல்படி (Programme) எங்களைக் காண வந்தார்களாம், ஆனால் இவ்வளவு சரியாக — திட்டம் தவறாமல் — நிகழ்ச்சிநிரல்படி நாங்கள் வருவோமென்று அவர்கள் நம்பவில்லையாம். திட்டப்படி நாங்கள் நடந்து வரும் பாங்கினை அவர்கள் பாராட்டி, ''எல்லாம் இறைவன் செயல்'' என்று கூறி வியந்தனர்.

பிறகு ஹைதராபாத்தில் எங்களுக்குப் பெரிய வரவேற்புக் காத்திருப்பதாகவும், இன்று இரவு முதல் ஹைதராபாத் நகரத்தார்களும் அங்குள்ளசெட்டி நாட்டு அன்பர்களும் ஒவ்வோர் ஊருக்கும் காரில் உணவு கொண்டு வந்து தருவார்கள் என்றும் சொன்னார்கள். மேலும் இன்று இரவு பாலநகர் என்ற ஊரில் உள்ள அரசுப் பயணிகள் மாளிகையில் நாங்கள் தங்க ஆவன செய்வதாகவும் கூறினார்கள்.

அத்துடன் இன்று இரவுப் பலகாரம் ஆத்தங்குடி அன்பர் திரு. பெரிச்சியப்பன் உபயம் என்றும் கூறினர். திரு. பெரிச்சியப்பன் (ஆந்திரா பாங்க்) அருமையான பலகாரங்கள் தந்தார். அவற்றை வழியில் உண்டோம். களைத்திருந்த நேரத்தில் காசி விசுவநாதரே வந்தது போல ஹைதரபாத் நகரத்தார்கள் வந்து எங்களுக்கு உற்சாகம் ஊட்டினார்கள்.

இருள் சூழ்ந்ததால் அவர்களுக்கு நாங்கள் விடை கொடுத்து அனுப்பிவிட்டு நடக்கத் தொடங்கினோம். இடையில் ரிக்ஷா பழுதாயிற்று. அதனைச் சரிசெய்து மேலும் நடந்தோம். மச்சாரம் வழியாக இரவு $10\frac{1}{2}$ மணிக்குப் பாலநகர் சென்று அங்கிருந்த பயணிகள் மாளிகையில் இரவு தங்கினோம். அம்மாளிகைக்கு எதிரில் பழங்காலக் கோட்டை ஒன்று பிரமாண்டமாகக் காட்சி அளித்தது.



65. ஐம்பத்து மூன்றாம் நாள்
(ஷாட் நகர் — பால்மாகுல்)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். இன்றும் காலையில் 10 மைல், மாலையில் 10 மைல் நடக்க வேண்டும். ஒரு நாளைக்கு இருபது மைல் நடப்பது என்பது அசுர தவமாகும். அதனைச் சில நாட்கள் நாங்கள் செய்யத் தான் வேண்டியிருந்தது. ஏனெனில் தங்கும் இடத்தைப் பொறுத்தே எங்கள் நடைத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. இப்படி நாங்கள் நடந்து நான்கு மாதத்திற்குள் காசிக்குச் சென்றால்தான் முடியும். இன்றேல் ஜுன் மாதம் மழை வந்து பயணம் தடைப்படும். எனவே விரைந்து பல மைல் நடக்கப் பழகிக் கொண்டோம்.

வழியில் ஹைதராபாத் அன்பர்கள் காரில் வந்து எங்களைச் சந்தித்து ஷாட்நகர் வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு வந்து சேரும்படி சொன்னார்கள். அவ்வாறே நாங்கள் ரெய்கால்வழியாக நடந்தோம். வழியில் "'ராடார் நிலையம்'' ஒன்றைக் கண்டோம். (National Remote Sensing Agency-satelite earth Receiving station) இதுஒரு முக்கியமான விஞ்ஞான நிலையம் ஆகும். ஷாட் நகர் வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்குக் காலை 9½ மணிக்கு வந்து சேர்ந்தோம்.

இங்கு தேவகோட்டை திரு. எஸ். முத்துக் கருப்பன் அவர்களும் மற்றும்பல நண்பர்களும்வந்திருந்து

எங்களை வரவேற்றனர். காலைப் பலகாரம் கல்லல் நாச் சியப்பன் (ஆந்திரா பாங்க்) அவர்களாலும், மதிய உணவும் இரவு உணவும் தேவ கோட்டை திரு.எஸ். முத் துக்கருப்பன் (விங்கமாண்டர், விமானப்படை, ஹைதரா பாத்) அவர்களாலும் வழங்கப் பெற்றன. ஹைதராபாத் அன்பர்கள் அன்று நெடுநேரம் எங்களோடு அளவளாவி, எங்களது பயணம் பற்றிய பல அனுபவங்களைக் கேட்டு வியந்தனர்.

ஷாட்நகர் வெங்கடேசப் பெருமாள் கோயில் மிகப் பழைமையானது. வரலாற்றுப் புகழ்மிக்கது; மிகப் பெரியது. இங்கு தமிழ் நாட்டுக் கோபுர அமைப்பில் கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

காலையில் நாங்கள் நடந்து வந்த பொழுது, வழியில் **சமணமத** வெள்ளைத் துணிச் சாமியார்கள் இருவரைச் சந்தித்தோம். அவர்கள் இருவரும் அண்ணன் தம்பிகள். அவர்கள் சரவண பெலகோலாவில் இருந்து மகாராஷ்ட்ரத்துக்குப் பாதயாத்திரை செல்கிறார்கள். அவர்கள் வழியில் எங்கும் சாப்பிட மாட்டார்கள். தாங்கள் சமையல் செய்ததைத் தான் உண்பார்கள். அதுவும் இருட்டுமுன் இரவுஉணவை உண்டுவிடுவார்கள். அவர்கள் தலையிலோ முகத்திலோ முடியில்லை. முடி முளைத்தால் அதைத் தம் விரலாலேயே பிடுங்கி விடுகி றார்கள். உண்மையான மதப்பற்று உடையவர்களாக அவர்கள் இருந்தார்கள். அவர்களது சாமான்களைத் தொண்டர்கள் இருவர் சைக்கிளில் கொண்டுசென்றனர்.

நாங்கள் நட ந்த பொழுது இந்தச் சமண மதச் சாமியார்களும் எங்களுடனே நடந்து வந்தார்கள். அதனால் பல கருத்துக்களை நாங்கள் பரிமாறிக் கொண் டோம். எங்கள் பயணம் பற்றி அவர்கள் மகிழ்ச்சி தெரி வித்தார்கள். ஷட்நகர் வெங்கடேசப் பெருமாள்

கோயிலின் ஒரு பகுதியில் வந்து அவர்களும் பகல் நேரத்துக்குத் தங்கி இருந்தார்கள். அவர்கள் மிக அமைதியாகவும், அதே நேரத்தில் மிகவும் வைராக்கியமாகவும் நடந்து கொண்டது எங்களை மிகவும் ஈர்த்தது.

மாலை 4 மணிக்கு நாங்கள் புறப்பட்டோம். நந்திகாவோ என்ற ஊர்வழியாகச் சென்றோம். "கிளே மில்ஸ்" "ஸ்டீல் ரீ ரோலிங் மில்ஸ்" "கோயாபைப்ஸ்" முதலிய பெரிய நிறுவனங்களைக் கண்ணுற்றவாறே நடந்தோம். இரவு 9 மணி அளவில் பால்மாகுல் என்ற ஊரை அடைந்து அங்கு சாலை ஓரத்தில் உள்ள "லால்ஜீ சேட்" என்பவரின் கடை வீட்டில் தங்கினோம். அங்கு நாங்கள் தங்குவதற்கு உரிய முன்னேற்பாடுகளை ஹைதராபாத் நகரத்தார்கள் செய்து வைத்திருந்தார்கள்.

லால்ஜீசேட் எங்களை மிகவும் அன்பாக வரவேற்றுப் பால் முதலியன வழங்கினார். அவர் வட நாட்டைச் சேர்ந்தவராக இருந்தும் எங்கள்பால் எல்லையற்ற அன்பு உடையவராகத் திகழ்ந்தார். எங்கள் பயணத்தை வெகுவாகப் பாராட்டினார்.

66. ஐம்பத்து நான்காம் நாள்

(ஷாம் சபாட்—ஹைதராபாத்)

இன்று (11-4-1983 திங்கள்) எங்கட்கு ஒரு மிக முக்கியமான நாளாகும். ஏனெனில் எங்கள் பயணத்தில் மிக முக்கியமான ஓர் ஊராகிய ஹைதராபாத் நகரை இன்று மாலை அடையப் போகிறோம். மேலும் எங்கள் பயணத்தில் ஹைதராபாத் நடு இடத்தில் இருக்கிறது. இராமேசுவரத்திற்கும் காசிக்கும் இடையே உள்ள தூரம் 1650 மைல் (கிலோ மீட்டர் 2000) இதில் சுமார் 800 மைல் (1000 கி. மீ) ஹைதராபாத் ஆகும். மேலும் மொத்தம் நாங்கள் நடக்கும் 116 நாட்களில் 54 ஆவது நாள் நாங்கள் ஹைதராபாத்தை அடைகிறோம். எனவே நாள் கணக்கிலும் இது ஏறத்தாழச் சரி பாதி ஆகும்.

நாங்கள் இராமேவேரத்துக்கும் காசிக்கும் இடையே நடந்த நெடுஞ்சாலைத் தூரம் 1650 மைல். அது தவிர ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊரிலும் நாங்கள் கணக்கில் வராமல் நடந்தது தனி. இந்த நடையையும் சேர்த்தால் நாங்கள் 4 மாதத்தில் நடந்த தூரம் சுமார் 2000 மைல் (3000 கிலோ மீட்டர்) ஆகும்.

இன்று காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். இன்றும் காலையில் 10 மைலும், மாலையில் 10 மைலும் ஆக 20 மைல் நடக்கவேண்டும். இன்றும் கொளுத்தும் வெயிலில் கடுமையான நடை! எனவே வேகமாக நடந்தோம்.

தொண்டப்பள்ளி சோதனைச் சாவடி வழியே நடந்து ஷாம் சபாட் என்ற ஊருக்குக் காலை 8 மணிக்கு வந்து சேர்ந்தோம். ஹைதராபாத் சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் மேலாளர் திரு. கிருஷ்ணன் (தேவ கோட்டை), அவரது மனைவி, மற்றும் குழந்தைகளும் வேறு சில நண்பர்களும் எங்களை வரவேற்று ஆஞ்ச நேயர் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர், அது ஒரு சிறிய கோயில்—அங்கு ஆஞ்சநேயரை வணங்கிய பின் திரு. கிருஷ்ணன் ஹைதாரபாத்தில் இருந்து கொண்டு வந்திருந்த பலகாரம் உண்டோம். அன்று மதிய உணவும் இரவு உணவும் அவர்களாலேயே வழங்கப்பட்டன.

காலைப் பலகாரம் உண்டதும் ஹைதராபாத் அன்பர்களுடன் சிறிது நேரம் அளவளாவி விட்டுப் பயணத்தினைத் தொடர்ந்தோம். ஹைதராபாத் நெருங்குகிறது என்பதனைப் பல மைல்களுக்கு முன்னா லேயே உணர்ந்தோம். புதிய கட்டடங்கள், தொழிற் சாலைகள் எல்லாம் தோன்றிக் கொண்டிருக்கும் காட்சி யினைக் கண்டோம். சாலையில் போக்கு வரத்து மிகுதி யாக இருந்தது. எனவே எச்சரிக்கையாக நடந்தோம்.

மணி 11 ஆகியது. வெயில் கொடுமை தாங்க முடியவில்லை. எனவே முஸ்லிம்கள் நிறைந்த ஒரு பகுதி யில் நாங்கள் தங்கினோம். பிறகு பக்கத்தில் ஒரு சிறிய புதிய வீடு காலியாக இருந்தது கண்டு அதில் தங்கினோம் பகல் வெயில் மிகக் கொடூரமாக இருந்தது.

மாலை 4 மணிக்குப் பயணம் தொடர்ந்தது. ஹைதராபாத் நகரில் நுழைந்து மிருகக் காட்சி சாலை யின் வாயில் கதவு அருகே சென்றடைந்தோம். அங்கு ஹைதராபாத் நகரத்தார்களும் மற்றவர்களும் திரளாகக் கூடி இருந்து எங்களை அன்புடன் வரவேற்றனர். என் சிறிய தாயார் மகனாகிய புதுவயல் திரு. நா. நாராயணன்

எங்கட்கு மாலைப் பலகாரம் வழங்கினான். எங்கள் பயணம் மேலும் தொடர்ந்தது. வழியில் விவசாயப் பல்கலைக் கழகம், வல்லபாய்படேல் தேசியக் கல்விக்கழகம் கடைத் தெரு, மீசுநதி, நிசாம் அரண்மனை, உயர்நீதி மன்றம், அரசு மருத்துவமனை, சார்மினார் கோபுரம், முதலியவற்றைக் கண்ணுற்றவாறே நடந்தோம்.

ஹைதராபாத் நகரில் இந்து முஸ்லிம் கலவரம் அடிக்கடி நடைபெறுவதால், எந்தத் தொல்லையும் எங்கட்கு நிகழாதவாறு ஹைதராபாத் அன்பர்கள் ஏராளமான பேர் அங்கங்கே நின்று எங்கள் ஒவ்வொருவர் கையையும் ஒவ்வொருவர் பிடித்துக் கொண்டு, கலகம் நிகழ இயலாத பாதை வழியாக எங்களை விரைந்து அழைத்துச் சென்றது, மயிர்க் கூச்செறிந்தது. இவ்வளவு வேகமாக நாங்கள் நடந்ததே இல்லை. மணிக்கு சுமார் ஆறு கி.மல் வேகத்தில் நடந்து, ஹைதராபாத்தின் கலகப் பகுதிகளைக் கடந்து அமைதியான பகுதியினை அடைந்தோம். இரவு 7 மணிக்குப் "பழநியப்பா அண்கோ" என்ற காகித நிறுவனத்திற்கு (Paper co) வந்து சேர்ந்தோம். நாங்கள் ஹைதராபாத் நகரினை அடைந்த செய்தியினைத் தேவகோட்டை தலைமை நிலையத்திற்கு உடனே தந்தி மூலம் தெரிவித்தோம்.

கௌலிகுடா என்ற பகுதியில் உள்ள "பழநியப்பா அண்கோ"வில் எங்களுக்குக் கனிவான வரவேற்பு வழங்கப் பெற்றது. அங்கு அன்று இரவு தங்க ஏற்பாடாகி இருந்தது. அங்கு அதன் மேலாளர் திரு. நமசிவாயம், நேஷனல் மினரல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் துணைப் பொதுமேலாளர் (Dy. G.M.) ஆகிய கடியாபட்டி திரு. ஏ. சுதானந்தன், சரஸ்வதி டியூப் கார்ப்பொரேஷன் உரிமையாளர் திரு. ரு. முத்தையா செட்டியார் (தேவகோட்டை), அவர்கள்

தம்பி திரு. ந. அழகப்பன், பள்ளத்தூர் திரு. ராம. முத்தையா செட்டியார், கோட்டையூர் சேது அழகப்பன் லட்சுமிபுரம் அரு. அருணாசலம் செட்டியார், பாங் ஆப் மதுரை ஹைதராபாத் கோட்டி கிளை மற்றும் பாங்க் ஆப் மதுரை செகந்தராபாத் கிளை ஆகியவற்றின் மேலாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஏராளமான அன்பர்கள் ஆகியோர் கூடியிருந்து எங்களை உற்சாகமாக வரவேற்று உபசரித்தனர். அவர்களோடு நீண்ட நேரம் உரையாடி மகிழ்ந்தோம். ஒரு நாள் அதிகமாக ஹைதராபாத் செகந்தராபாத்தில் நாங்கள் தங்க வேண்டும் என்றும், திருவிழாப் போல் இந்த நாட்களைக் கொண்டாடி மகிழ விரும்புவதாகவும் ஹைதராபாத் நகரத்தார்கள் கூறினர். மேலும் "செட்டிநாட்டில் இருந்து ஹைதராபாத்துக்குப் புகை வண்டி மூலம் வருவதற்கே நாங்கள் பெரும் சிரமப்படுகிறோம். நீங்கள் 2 மாதம் நடந்தே வந்திருக்கிறீர்கள். இந்தச் சாதனையை நாங்கள் எவ்வளவு போற்றினாலும் ஈடாகாது. ஆகவே இங்கு ஒரு நாள் அதிகமாகத் தங்கும் வாய்ப்பை நீங்கள் தரவேண்டும்" என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். எங்கள் திட்டப் படி ஹைதராபாத் செகந்தராபாத்தில் இரண்டு நாட்கள் தங்க வேண்டும். என்றாலும் அவர்கள் வற்புறுத்தலை மறுக்க மனமில்லாததாலும், தொய்வு விழும் தூரத்தை நாலைந்து நாளில் சேர்த்து நடந்து சரிக்கட்டுவது என்று நாங்கள் முடிவு கட்டியதாலும், ஹைதராபாத்-செகந்த ராபாத் ஆகிய இரட்டை நகர்களில் மூன்று நாட்கள் தங்கத் தீர்மானித்து இரவு நிம்மதியாகத் தூங்கினோம். இன்று திட்டப்படி 20 மைலும், ஊருக்குள் பல மைலும் நடந்திருந்ததால் உடல் மிகவும் களைத்து விட்டது.

ஹைதராபாத்துக்குச் செட்டிநாட்டில் இருந்தும் அன்பர்கள் பலர் எங்களை வரவேற்க வந்திருந்தனர்.

திருச்சி நகரத்தார் சங்க முன்னாட் செயலர் திரு. கரு. கருப்பன் செட்டி (காரைக்குடி) அவர்களும் ஹைதராபாத் வந்து எங்களை வரவேற்றார்கள்.

என் மனைவி **நீலா,** என் கடைசி மகள் **செல்வி மங்கையர்க்கரசி மீனாட்சி** ஆகியோரும் காரைக்குடியில் இருந்து வந்திருந்தனர். என் மனைவி எனக்கு வந்திருந்த ஏராளமான கடிதங்களை ஒரு மூட்டை கட்டிக் கொண்டு வந்திருந்தாள். அவற்றைப் படிக்கவே எனக்கு இரண்டு நாள் போதவில்லை. அவற்றில் ஒன்று மிக முக்கியமான கடிதம். மத்தியப் பிரதேச அரசாங்கம் என் வேண்டுகோளை ஏற்று மத்தியப் பிரதேசக் காடு, மலைப் பகுதிகளில் எங்களுக்குப் போலீஸ் பாதுகாப்புத் தர முன் வந்திருப்பதாக, மத்தியப் பிரதேச அரசாங்க ஐ.ஜி.யிடம் இருந்து ஒரு இரகசியக் கடிதம் வந்திருந்தது. அது எங்கட்கு எல்லையற்ற உற்சாகம் அளித்தது. மத்தியப் பிரதேசக் காடு, மலைப்பகுதிகளில் வன விலங்குகள், கொள்ளைக் கூட்டங்கள் மிகுதி. அது பற்றி நாங்கள் சிறிது பயந்திருந்தோம். எங்கள் பயத்தை அது பெருமளவு போக்கியது. என்னை விட என் மனைவி அக் கடிதத்தால் மிகவும் நிம்மதி அடைந்தாள். நான் பயணம் புறப்பட்ட நாளாக அவள் ஒவ்வோர் ஊராகப் பின்தொடர்ந்து வந்து மன ஆறுதல் பெற்று வந்தாள். எல்லா இடங்களிலும் நிகழ்ந்த வரவேற்பு அவளுக்கும் உற்சாகம் அளிக்கத்தான் செய்தது. என்றாலும் இருதயத்தின் ஒரு மூலையில் இருந்த பயம் இடை யிடையே தலை தூக்கத்தானே செய்யும். நாங்கள் பதின்மூன்று பேரும் அந்தப் பயத்தை ஒழித்துப் பரமன் மீது பாரத்தைப் போட்டு விட்டோம். எங்கள் குடும்பத்தார்கள் அனைவரும் அப்படி இருக்க முடியும் என்று நாங்கள் நினைக்க முடியுமா? எல்லாம் அவன் அருள்!

என் மனைவியும் கடைசி மகள் மங்கையர்க்கரசியும் பல ஊர்களுக்கு என்னைப் பார்க்க வந்தார்கள். அதற்கே பல ஆயிரம் போய் நான் செலவு செய்ய நேர்ந்தது. என்றாலும் அவர்களது பயம் நீங்க அச்செலவு தேவைப்பட்டது.

67. ஐம்பத்துஐந்து ஐம்பத்தாறாம் நாள்

(செகந்தராபாத்)

காலை 4 மணிக்கு எழுந்தோம். நீராடி இறை வணங்கினோம்.

ஹைதராபாத்தை நேற்று நாங்கள் அடைந்த பொழுது எங்களில் முதியவராகிய திரு. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் மிகவும் சோர்ந்திருந்தார்கள். எனவே தொடர்ந்து எப்படிக் காசிக்கு நடக்கப்போகி றோம் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நேற்று இரவு அவர்கள் கனவில் பழநியாண்டவர் தோன்றி, அவர்கள் கையைப் பிடித்துக்கொண்டு, ''ஏன் மலைக்கிறாய்? தைரியமாக நட'' என்றார். இன்று அவர்கள் அந்தக் கனவுபற்றி எங்களிடம் கூறினார்கள். அத்துடன் அவர்கள் காசி நடைப்பயணத்தில் ஈடுபடுமுன் பழநிப் பூசயாத்திரையின்போது பழநியாண்டவரிடம் உத்தரவு கேட்டு வந்த கதையையும் நினைவுபடுத்தி னார்கள். இவர்களது நண்பர்கள் இவர்களைக் காசி நடைப்பயணத்தில் ஈடுபடுமாறு வற்புறுத்தியதால் இவர்கள் ''பழநியாண்டவரிடம் உத்தரவு கேட்கிறேன். அவர் உத்தரவு தந்தால் காசி நடைப்பயணத்தில் ஈடுபடு கிறேன்'' என்று கூறி இரண்டு பூக்கட்டி, ஒரு பூவில் ''பழநியாண்டவர் துணை'' என்றும், இன்னொரு பூவில் ''காசிக்கு நடந்து செல்லவும், நான் துணை இருக் கிறேன்'' என்றும் எழுதிவைத்துப், பழநியாண்டவருக்கு அபிஷேகம் செய்து, அவர் பாதத்தில் இரு பூக்களையும்

வைத்து, குருக்கள் மூலம் ஒரு பூவை எடுக்கச் சொல்ல, அவர் ஒரு பூவை எடுத்து அதில் இருந்த வாசகத்தைப் படித்தார். அந்த வாசகம், ''காசிக்கு நடந்து செல்லவும். நான் துணை இருக்கிறேன்'' என்று வந்தது. குருக்கள் ஆசி கூறி விபூதி அளித்து அனுப்பினார். ''பழநியாண்டவர் உத்தரவு பெற்று வந்ததால் நடைப் பயணம் தடைப்படாமல் இப்பொழுதும் அவர் அருளால் நடக்கிறேன்'' என்று 68 வயதான திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் கூறி நடந்தது இறையருளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

காலை நாலரை மணிக்கு ஹைதராபாத்தில் இருந்து செக்கந்தராபாத் நோக்கி நடக்கத் தொடங்கினோம். ஹைதராபாத்துக்குப் பாக்கிய நகர் என்று ஒரு பெயர் உண்டு. இரட்டை நகர்களாகிய ஹைதராபாத்தையும் செக்கந்தராபாத்தையும் **மீசு நதி** பிரிக்கிறது. நம் தமிழகத்தில் திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்கும் இடையே தாமிரபரணி நதி ஓடக் காண்கிறோம். எனவே, மேற்படி நகர் இரண்டையும் தாமிரபரணி நதி பிரிக்கக் காண்கிறோம் அல்லவா?

ஹைதராபாத்துக்கும் செக்கந்தரா பாத்துக்கும் இடையில் உள்ள தூரம் 7 மைல். ஹைதராபாத் நகரத்தார்கள் எங்களை அன்புடன் வழிநடத்திச் சென்றார்கள். செக்கந்தராபாத் புகைவண்டி நிலையம் அருகில் உள்ள விநாயகர் கோவில், பாண்டுரங்கன் கோயில் ஆகியவற்றில் தரிசனம் செய்தோம். **பாண்டு ரங்கன் கோயில்** பட்டாச்சாரியார் **திவ்வியப்பிரபந்தம்** எல்லாம் பாடி இனிய தமிழில் அர்ச்சனை செய்தது எங்களை மிகவும் மகிழ்வித்தது. காலை 8 மணி அளவில் செக்கந்தராபாத் அடைந்து, செட்டிநாட்டு அரசருக்கு உரிய சவுத் இந்தியா கார்ப்பொரேஷன் விருந்தினர் மாளிகையில் தங்கினோம். இன்று காலை, மதியம்

உணவு, கோட்டி பாங்க் ஆப் மதுரை, செகந்தராபாத் பாங்க் ஆப் மதுரை கிளைகளால் வழங்கப்பட்டன. மேற்படி கோட்டி கிளையில் மேலாளராகப் பணிபுரியும் திரு. **எஸ். வி. சுப்பய்யா** (தேவகோட்டை) அவர்கள் எங்களுடன் இருந்து அரிய தொண்டுகள் பல செய்தது மறக்க இயலாதது. இரவு உணவு சவுத் இந்தியா கார்ப்பொரேஷன் நிறுவனத்தினர் வழங்கினர்.

இன்று மாலையில் இங்கு ஹைதராபாத் நகரத்தார் சங்கத்தின் சார்பில் எங்களுக்கு மாபெரும் வரவேற்புக் கூட்டம் நடத்தினர். அதற்கு இவ்வூரில் உள்ள நகரத்தார்கள் அனைவரும் தம் குடும்பத்துடன் வந்து சிறப்பித்தனர். இங்கு நகரத்தார் சுமார் 70 குடும்பத்தினர் உள்ளார்கள். இவ்விழாவில் எங்கட்கு அவர்கள் வழங்கிய வரவேற்புப்பா வருமாறு.

உடலைவருத்தி உறவைமறந்து
உள்ளம்நைந்து உருகும்போது
கடலைக்கடைய வந்தநஞ்சைக்
கண்டமதில் கொண்டசிவன்
மழலைபக்தி நமதுஎனினும்
மனமகிழ்ந்து ஏற்கையில்
குடலைவருத்தும் பசியைமறந்து
கூடிஅவனைக் காண்கின்றோம்!
அரையாய்க்குறையாய்ப் பக்தியுடன்
அங்கும்இங்கும் மனம்அலைய
நிறையாய் இறைவனை ஒருநாளும்
நினையாஉலக மக்களிடம்
குறையாநிதியம் அவனென்றும்
குன்றாஅவனருள் பெறுவென்றும்
உரையாய்உரைத்து அவர்மனத்தை
ஒளிமயமாக்குதல் தொண்டன்றோ!

சேதுக்கரையில் மாசிமாதம்
சேர்ந்துபதின்மூவர் புறப்பட்டுக்
காசிச்சேத்திரம் வைகாசியில்
காலால்நடந்து சென்றடையச்
சாதிக்கும்திறன் மிகஉடைய
சோமசுந்தரனார் தலைமையில்
பாதிக்கும்மேலாம் வழிநடந்து
பாக்கியநகரம் வந்தடைந்தார் !
செய்யும்பயணம் சிறியதல்ல
சேர்த்துவைக்கும் மூலதனம்
உய்யும்வழியை உலகினர்க்கு
உணர்த்தும்பயணம் இதுவாகும் !
ஐயாஉங்கள் பதின்மூவரையும்
ஐதராபாத்தில் வரவேற்க
மெய்யாய் நகரத்தார் நாங்களின்று
மேன்மைமிகு பேறுபெற்றோம் !
காசியில் உறையும் விஸ்வநாதர்
கருணைமிக்க விசாலாட்சி
தேசத்தில் பாதியை நடந்துவந்து
தெரிசனம்காணும் உங்களுக்குக்
காசினியில்உயர் பதம்தருவார்
கண்ணெனக்காத்துப் புகழ்தருவார்
பாசமாய் உமக்கு உதவுவோரும்
பாத்திரமாவார் அருள் தமக்கே !

அன்புடன்

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூக
கலாசார சங்கம் ஐதராபாத்-செகந்தராபாத்
(பாடல் : இராம.பழ. அருணாசலம்; உபதலைவர்)

அடுத்து கல்லல் தியாகு நாச்சியப்பன் அவர்கள் வழங்கிய வாழ்த்துப்பா வருமாறு :

வேதவழி அறியவொணா விழுப்பொருளை இனிதேத்திப்
பாதவழி மேற்கொண்ட பெரியோரே; இறையருளை
ஓதவழி அறியாது உலகியலில் புரண்டோம்-நும்
பாதமலர் புனைந்தேத்தும் பேறடைந்தோம் இந்நாளில்
பாதவழி யாத்திரையின் பயன்குறித்து இந்நாளில்
பகுத்தறிவு வாதங்கள் பற்பலவாய் வருவதுண்டு
ஏதமிலா இதயத்தில் எழுந்தருளும் நாயகனை
எளிதாகக் காணாமல் ஏனிந்த உடல்வாதை ?
காதவழி நடந்தாலே கால்நோகும் நமக்கெல்லாம்
காசிநகர் செல்வதற்குக் கார்வண்டி வாகனங்கள்
ஏதுமிலாக் காலத்தில் இயன்றவர்கள் நடந்திட்டார்
இன்றெதற்கு நடக்கின்றார் ? என்றுசிலர் கேட்கின்றார்
கற்றுணர்ந்த பெரியோர்கள் காசிக்கு நடப்பதற்குக்
காரணங்கள் அத்துணையும் கச்சிதமாய் நானுரைப்பேன்
புற்றுயாப் புறம்மறந்து பெருந்தவங்கள் புரிந்தாலும்
பரமனவன் திருக்கோலம் பார்த்தவர்கள் வெகுசிலரே !
நற்றவங்கள் யாவையுமே நாடுதற்குக் கடினமென
நம்மவர்கள் கண்டுவைத்த நல்லவழி பாதவழி ! !
உற்றதொரு மனைநீங்கி உலகியலைத் தான்மறந்து
இற்றுவிழும் காலணிகள் ஏக்கமுடன் பார்த்திருக்கப்
பற்றுடனே தினம்பாடிப் பாதவழி நடப்போர்க்குப்
பாவமெலாம் நீங்கிடுமே ! பரமனருள் சேர்ந்திடுமே !
சற்றுமனம் தளராமல் சிரித்தாடி நடப்போரை
நற்றமிழால் புனைந்தேத்த நம்பாவம் நீங்கிடுமே !
கோவிலுக்குச் செல்கையிலே குரங்குமனம் தனையடக்கிக்
கோலமிகு நாயகனைக் கும்பிடுவோர் எத்துணைபேர்?
ஏவலுக்கு ஓடிவரும் எண்ணரிய நாயகனை

இன்னல் வரும்வேளையில்தான் எல்லோரும்
நினைக்கின்றோம்
நெடுஞ்சாலைப் பயணத்தில் நடப்போர்கள்
மனமெல்லாம்
நொடிகூட மறவாது நாமாவளி பாடிவரும்
நடப்பதிலே ஆனந்தம் நடந்தவர்க்குத் தான்புரியும்
நாள்கிழமை நேரமெலாம் நினைவின்றி மறந்திருக்கும்
கடந்துவரும் பாதையிலே காணுகிற இன்னலெலாம்
காற்றாகிக் கனவாகிக் கணப்போதில் பறந்துவிடும்
திடமான மனத்தோடு திருவாளர் நடந்துவந்த
தடம்பார்த்துக் கைகுவிக்கத் தவப்பயனும் நமக்குவரும்
சின்னாளில் பதிவாகிச் சீராக வளர்ந்து வரும்
சிறுவயதுச் சங்கமிதில் சேர்ந்திருக்கும் அன்பரெலாம்
முன்னாளில் செய்தவத்தின் முதற்பலனாய் எம்மிடையே
மகிழ்வோடு வந்திருந்து மகிழ்விக்கும் தொண்டர்குழாம்
இன்னாளில் மனவலிவோ(டு) ஏற்றிருக்கும் இப்பயணம்
இனிதாக நிறைவேறி இப்பிறவிப் பயனடையக்
கண்ணுதலான், தன்கருணைக் கரம்நீட்டிக் காத்திடவே
கங்கைவளர் விசுவேசா! கரம்கூப்பி வேண்டுகிறோம்.''

ஏராளமான அன்பர்கள் எங்களைப் பாராட்டியும் வாழ்த்தியும் பேசினர். பிறகு ''அருள்தொண்டர்'' இராகவன் அவர்களும், அடியேனும் எங்கள் பயண அனுபவங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தோம். ''அருள்தொண்டர்'' இராகவனின் பேச்சு இங்கே மிக அற்புதமாக அமைந்தது. அடியேன்பேசுகையில் ''மாசியில் புறப்பட்டு வைகாசியில் காசி'' என்று நீங்கள் வாழ்த்துப்பாவில் கூறியிருப்பது பலிக்கட்டும் என்றேன். ஹைதராபாத் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. ந. முத்தையா செட்டியார் அவர்கள் சங்கத்தின் சார்பில் ரூ 651/ நன்கொடை வழங்கிச் சிறப்பித்தார்கள். இச் சங்கத் தலைவரும், உறுப்பினர்களும் அவர் தம் குடும்பத்தினரும் எங்களுக்குச் செய்த உபசரிப்புக்கு எல்லையே

இல்லை. திருமண வீட்டில் பெண் அழைத்த விருந்துச் சாப்பாடுபோல், ஒவ்வொரு வேளையும் உணவு வழங்கி எங்கள் வருகையை விமரிசையாகக் கொண்டாடினார் கள். நாங்கள் இங்கு வருவதற்கு மூன்று நாள் முன்பே அவர்கள் எங்களைத் தேடி வந்து உபசரித்தார்கள். இங்கும் மூன்று நாட்கள் ஒப்பற்ற விருந்தளித்தார்கள். பிறகு நாங்கள் புறப்பட்டுச் சென்ற பொழுது வழியில் மூன்று நாட்களுக்குக் காரில் உணவு கொண்டுவந்து வழங்கினார்கள். இப்படி அவர்கள் செய்த உதவிக்கு எல்லையே இல்லை. நாங்கள் இங்கு நன்றாகச் சாப்பிட் டாலும் சாப்பிட்டோம், இவர்களைப் பிரிந்த பின் எவ்வளவு தூரம் பட்டினி கிடக்கலாமோ அவ்வளவு பட்டினிகிடந்து வாடினோம். அதுவும் அவன் திருவருள்!

56 ஆம் நாள் முழுதும் செக்கந்தாரபாத்தில் எங்கட்கு முழுஓய்வு. ஏராளமான உள்ளூர்ப் பெரிய வர்கள், பிரமுகர்கள் ஆகியோர் எங்களை வந்து சந்தித்துச் சென்றனர். இன்று மாலை அருகில் உள்ள மேற்கு மாரட்பள்ளி **சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குச்** சென்று முருகப் பெருமானை வணங்கி வந்தோம்.

ஹைதராபாத்தில் மத்திய அரசாங்கத்தில் மிகப் பெரிய பதவியில் இருக்கும் திரு. **சுதானந்தம்** அவர்கள் முருகன் கோவில் வழிபாட்டுக்கு உதவி செய்தார்கள். அவர்கள் நல்ல தமிழ்ப்பற்று உடையவர்கள். சுத்தானந்த பாரதியின் பெயரே அவருக்கு இடப்பட்டிருக்கிறது.

காசிக்குச் சரிபாதி தூரத்தைக் கடந்து வந்த நாங்கள் மறுபாதி தூரத்தைக் கடக்கும் முயற்சியில் நாளை முதல் ஈடுபட வேண்டும். இனி வழியில் எங்கட்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. எங்களுக்கு இதுவரை ஹைதரபாத் சரசுவதி டியூப்கார்ப்பொரேஷன் திரு. ந. முத்தையா செட்டியார் அவர்களின் முகவரி உதவி செய்தது. இந்தியா முழுதும் இருந்து பலர்

எங்கள் கடிதங்களை அவர்கள் முகவரிக்கு எழுதி வந்தனர். அவர்கள் அக் கடிதங்களைச் சேகரித்துப் பத்திரமாக எங்கட்குத் தந்தார்கள். இனி யார்முகவரிக்கு எங்கள் கடிதங்களை எழுதுவது என்று சிந்தித்த பொழுது அவர்களே நாகபுரியில் உள்ள ஒரு நண்பரின் முகவரி யினைத் தந்தார்கள். இனி அந்த முகவரிக்கு எங்களுக்கு உரிய கடிதங்களை எழுதுமாறு எல்லோருக்கும் தெரிவித் தோம். இன்னும் இருபது நாளில் மகாராஷ்டிர மாநிலத் தின் முக்கிய நகராகிய நாகபுரி சென்று சேர்வோம். அதன்பின் நாற்பது நாளில் காசி சென்று சேர்வோம். நாகபுரி தாண்டினால் காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் தான் எங்கள் முகவரி. எங்கட்கு ஏதாவது எழுத விரும்புபவர்கள் காசிக்கு எழுதினால் அங்கேபோய் அக்கடிதங்களைப் பெற்றுக் கொள்வோம். இதுதான் எங்கள் நிலைமை! இதற்கிடையில் எங்களோடு யாரும் தொடர்பு கொள்ள முடியாது. நாங்கள் எங்கே இருப்போம் என்பதை எங்கள் பயண நிகழ்ச்சிநிரலில் இருந்து அறியலாம். மற்றபடி நாங்கள் கடிதம் போட் டால்தான் எங்களைப் பற்றிய செய்தியைப் பிறர் அறியலாம். பிறர் எழுதும் செய்தி எங்களுக்குக் கிடைக்காது. நாங்கள் எவ்வளவு அனாதையாகச் செல்கிறோம். என்பதை நினைக்கவே மனம் நடுங்கியது. ஆனால் காசி விசுவநாதர்எங்கள் அருகிலேயே வருகிறார் என்ற உணர்வும், முருகப் பெருமான் எங்களை வழி நடத்திச் செல்கிறார் என்ற நம்பிக்கையும் எங்கட்குத் தெம்பூட்டின.

68. ஐம்பத்தேழாம் நாள்

(மேச்சல்—அத்தி வெல்லி)

நாங்கள் எங்கள் குழுவுக்குப் பல வேலைகளைப் பிரித்துக் கொடுத்திருந்தோம். பொது நிர்வாகம் என்னைச் சேர்ந்தது. நன்கொடைக் கணக்கை (General a/c) எழுதிக் கவனிப்பது திரு. பழநியாண்டியின் வேலை. "திரு அமுது" கணக்கை எழுதிக் கவனித்துத் திருஅமுது படைக்கச் செய்வது திரு. இராகவனின் பணி. சமையற் பணியினைக் கவனிப்பது திரு. சுப்பய்யா, தியாகராசன், நல்லதம்பி, தங்கவேலு ஆகியோரைச் சேர்ந்தது. தண்ணீர் கொண்டு வருவது, காய்கறி, அரிசி முதலிய எல்லாப் பொருள்களையும் வாங்கிக் கொண்டு வந்து சேர்ப்பது தேனிமலை, அடைக்கப்பன், அய்யாச்சாமி, இராசாங்கத்தின் பணி. புறப்படும்பொழுது எங்களுக்கு விபூதி கொடுப்பது எங்களில் முதியவர்களாகிய திரு. சிதம்பரம் செட்டியார், திருநாவுக்கரசு செட்டியார் ஆகியோரின் பணி. இப்பணிகளை எல்லோரும் மிகச் செம்மையாகச் செய்தது குறிப்பிடத்தக்கது.

எந்தப் பொருள் வேண்டுமானாலும் என்னுடைய அனுமதி பெற்று எங்கள் இளைஞர்கள் சென்று வாங்கி வருவர். அதற்குரிய தொகையினை அக்கணக்கினைக் கையாள்பவர் வழங்கி, இரசீது பெற்றுக் கணக்கில் எழுதிக் கொள்வார். எனவே கணக்கினை மேற்பார்வை யிடுவதோடு என் பணி முடிவடையும். மீதி நேரத்தில் திட்டமிடுதல், தபால் எழுதுதல், வந்தவர்களோடு

பேசுதல், அடுத்துச் செய்ய வேண்டிய பணிகளை அறிவித்தல் ஆகியவற்றுக்கு என் நேரம் சரியாகச் செலவழிந்தது. இப்படி நாங்கள் மொத்தமாகச் செயற் பட்டதால் எங்கள் பயணம் முழுவெற்றி பெறமுடிந்தது.

எங்கள் அமைப்பினையும், அது செயற்படும் முறையினையும் பார்த்து வியக்காதவர்கள் இல்லை. நாங்கள் எங்கள்திட்டப்படி சென்றபாணியினைக்கண்டு, எங்கள் பணி வெற்றி பெறுவது உறுதி என்றே எல் லோரும் சொன்னார்கள். அத்த அளவு எங்கள் பாணி எல்லா மக்களின் நம்பிக்கையினையும் பெற்றிருந்தது.

இன்று (14-4-1983 வியாழன்) ஒரு புண்ணிய மான நாளாகும். இன்று தமிழ், தெலுங்கு, மராத்தி, வருடப்பிறப்பாகும். எனவே காலைக் கடன்கள் முடித்து, நீராடிச் சரியாக 4 மணிக்கு வேல் பூசை தொடங் கினோம். ஏராளமான உள்ளூர் அன்பர்கள் அப்பூசை யில் பங்கு கொண்டார்கள். வேலுக்கு அபிஷேக ஆராதனை செய்து பஜனைகள் பாடிச் சரியாக 4½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம். ஹைதராபாத் நகரத்தார்கள் எங்களை ஊர் எல்லை வரை வந்து வழிய னுப்பி வைத்தார்கள். நேற்று அவர்கள் எமது சைக்கிள் ரிக்ஷாவைத் தமது செலவில் பழுது பார்த்துத் தந்ததால் இன்று சைக்கிள் ரிக்ஷா ஒழுங்காக ஓடியது.

12 மைல் நடந்தும் மேச்சல் என்ற ஊர் வர வில்லை. வெயில் கடுமையாக அடித்தது. கடந்த இரண்டு நாட்கள் ஓய்வாக இருந்ததால் உடம்பு ஒத்துழைக்க மறுத்தது. கால்கள் சொன்னபடி நடக்க மறுத்தன. எனவே மேச்சல் என்ற ஊருக்கு முன்பாக இருந்த ஓரிடத்தில் மர நிழலில் தங்கிவிட்டோம்.

ஹைதராபாத் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. முத்தையா செட்டியாரின் தம்பி திரு ந. அழகப்பன்

தன் குடும்பத்தாருடன் ஒரு காரில் எங்கட்குக் காலைப் பலகாரம், மதிய உணவு, இரவு உணவு எல்லாம் வீட்டில் தயாரித்துக் கொண்டு வந்து தந்தார். அந்த உணவு எங்கட்கு அமிர்தமாக இனித்தது.

காலை 4½ மணிக்குப் புறப்பட்டு மேச்சல் வழி யாக 5 மைல் நடந்து அத்திவெல்லி என்ற ஊருக்கு வந்தோம். அங்கே சாலையில் இருந்த ஒரு சிறிய அம்பாள் கோயிலில் பெண்களும், குழந்தைகளும் வருடப் பிறப்புக்காகக் **கரகம்** செலுத்தி வழிப்படக் கண்டோம். அம்பாளை நாங்களும் வணங்கினோம்.

அத்திவெல்லி கிராமத் தலைவரைச் சந்தித் தோம். அவர் அவ்வூர்ப்பள்ளியில் தங்க எங்கட்கு அனுமதி அளித்தார். இக்கிராமங்களில் வெளியூர்க்காரர் யாரும் கிராம அதிகாரியின் அனுமதி இல்லாமல் இரவில் தூங்கக் கூடாதாம். நாங்கள் ஊர்த் தொடக்கப் பள்ளியை அடைந்தோம். அங்கே கிராமப் பஞ்சாயத்துக்குரிய டி. வி. பொருத்தப்பட்டிருந்தது. அதில் ஆந்திர முதலமைச்சர் மாண்புமிகு **என். டி. ராமாராவ்** பேசுகிற நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ஊர்மக்கள் திரண்டிருந்து அந்த நிகழ்ச்சியை டி. வி. யில் பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்களும் பார்த்து மகிழ்ந்தோம்.

இரவு 10 மணிக்குமேல் மக்கள் கலைந்த பின் தூங்கினோம்.

69. ஐம்பத்தெட்டாம் நாள்

(துப்ரான் - ராமண்டபூர் - வாடியாராம்)

காலை 4 மணிக்குப் புறப்பட்டோம். இன்று கடுமையான நடை எங்களுக்குக் காத்திருந்தது. காலையில் 12 மைலும், மாலையில் 12 மைலும் நடக்க வேண்டும். ஹைதராபாத்தில் ஒரு நாள் அதிகமாகத் தங்கியதால் தொய்வு ஏற்பட்டிருக்கும் சுமார் 20 மைல் தொலைவை 5 நாட்களுக்குள் சேர்த்து நடக்க வேண்டும். கோடை வெயில் வேறு கடுமையாக வீசியது. என்றாலும் வைராக்கியத்தோடு விரைந்து நடந்தோம். கள்ளக் கால், மனோகராபாட் முதலிய ஊர்களின் வழியாக நடந்து துப்ரான் என்ற ஊருக்கு இரண்டு மைல் முன்னால் மரநிழலில் தங்கினோம். அப்பொழுது மணி 10. ஹைதராபாத்தில் இருந்து திரு. என். சிதம்பரம் எங்களுக்குக் காரில் காலைப் பலகாரம், மதிய உணவு, இரவு உணவு கொண்டு வந்து தந்தார். அவருடன் அன்பர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களுடன் பேசி மகிழ்ந்து கடும் பகற் பொழுதைக் கழித்தோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். பாதை சிறிது மலைப் பாங்காக இருந்தது. ''மாசைப்பெட்ட'' புகைவண்டி நிலையம் வழியாக நடந்தோம். ராமண்டபூர் என்ற சிற்றூர்க்கு இரவு எட்டு மணிக்கு வந்து சேர்ந் தோம். அங்கு சாலை ஓரமாக உள்ள பேருந்துப் பயணிகள் தங்குமிடத்தில் தங்கினோம். ஆள் அரவமே இல்லை. எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. சிறிது

தொலைவில் ஒரே ஒரு மகூதி காணப்பட்டது. நாங்கள் எங்களது அரிக்கன் விளக்கை ஏற்றி வைத்தோம். இரவு உணவை உண்ணலாம் என்று உணவுப் பொட்டலங்களை ரிக்ஷாவில் இருந்து எடுத்தோம். தண்ணீர்க் குடத்தைக் கீழே வைத்தோம். சாப்பிட்டு விட்டு, அந்த இடத்திலேயே தூங்குவது என்பது எங்களது திட்டம்.

சாப்பாட்டுப் பொட்டலங்களைப் பிரிக்க ஆரம்பித்தோம். அப்பொழுது ஒரு **பைத்தியக் காரன்** நிர்வாண மாக வந்து நின்று வாய்க்கு வந்தபடி ஏதேதோ தெலுங்கில் பேசினான், அவன் பிச்சை கேட்கிறான் என்று நினைத்துக் காசுகள் கொடுத்தோம். அந்தக் காசுகளை எங்களை நோக்கி எறிந்து, ஏதேதோ கன்னா பின்னாவென்று பேசினான். அவனது நடவடிக்கை களைப் பார்த்தஎனக்கு அதனைச்சாதாரணநிகழ்ச்சியாக எண்ண முடியவில்லை. இனி அங்கே தங்கினால் அவன் தூங்க விடமாட்டான்; மேலும் ஏதாவது அசம்பாவிதம் நடக்கலாம் எனநினைத்துஎங்கள்திட்டத்தைச் சிறிது மாற்றி அடுத்தஊரில் தங்கலாம் என்று தீர்மானித்தேன். எல்லோரும் அதனை ஆமோதித்தனர். எங்கள் கால்கள் ஏற்கெனவே தள்ளாடினாலும் மனம் தளரவில்லை. எமது சாப்பாட்டுப் பொட்டலங்களையும் குடிதண்ணீர்க் குடத்தையும், ரிக்ஷாவில் ஏற்றிப் பூட்டினோம். ரிக்ஷா ஓட்டி உட்பட நாங்கள் எல்லோருமே சேர்ந்து நடக் கலானோம். நாங்கள் எல்லோரும் சேர்ந்து நடந்த சமயம் இது ஒன்றுதான்.

அந்த நிர்வாணப் பைத்தியக்காரன் எங்களைப் பின்பற்றி ஒருமைல் தூரம் வந்தான். நாங்கள் விரைந்து நடந்ததால் அவன் ஒய்ந்து தங்கிவிட்டான் நாங்கள் மேலும் 2மைல் நடந்துவாடியாராம்என்ற கிராமத்திற்கு இரவு பத்து மணி அளவில் வந்து, அங்கே எங்கு தங்குவது என்று ஆராய்ந்தோம். வழியில் தென்பட்ட

சிலரைக் கேட்டோம். அவர்கள் சாலை ஓரமாக உள்ள ஒரு சிறு, ஓட்டுக் கட்டடத்தைக் காட்டி "இதுதான் பஞ்சாயத்து அலுவலகம், இங்கே தங்குங்கள்'' என்றார்கள். உள்ளே சென்று பார்த்தோம். யாருமே இல்லை. ஒரே ஒரு காஸ்விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. சில கம்புகள், மண்வெட்டி, சட்டி முதலியன இருந்தன. நாங்கள் உடனே வெளியே வந்து முற்றத்தில் தங்கினோம். வெளி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தரையில் எங்கள் கூடாரத் துணியை விரித்து, அமர்ந்து, உணவு உண்டோம். பிறகு வானமே கூரையாக இருந்த அந்த இடத்திலேயே சாய்ந்து தூங்க ஆரம்பித்தோம். அவ்வளவு அசதி எங்களுக்கு. ஈசல், கொசு, எறும்பு, முதலியன எங்களைப் பிடுங்கி எடுத்தாலும் நாங்கள் அசைய வில்லை.

நள்ளிரவு இருக்கும். யாரோ எங்களைஅதட்டும் சப்தம் கேட்டு எழுந்து பார்த்தோம். இரண்டு வீரர்கள் கையில் வேல் வைத்துக்கொண்டு, "நீங்கள் யார்''?என்று தெலுங்கில் கேட்டனர். நாங்கள் பதில் சொல்லி, நமது சைக்கிள்ரிக்ஷாவைக் காட்டினோம். அவர்கள் அதில் எழுதி இருந்த தெலுங்கு எழுத்துக்களைப் படித்துத் திருப்தி அடைந்து எங்களைப் படுத்துறங்க அனுமதித்தனர். அவர்கள் அந்த ஊரில் பஞ்சாயத்தால் நியமிக்கப் பட்டிருக்கும் ஊர்க்காவலர்களாம். இரவில் அவர்கள் வேலோடு ஊர்சுற்றிக் காவல் செய்வார்களாம். கள்வர்களைக்கண்டால் உடனே வேலால் குத்திக் கொல்வார்களாம். அப்பகுதியில் இரவில் கள்வர்பயம் உண்டாம். நாங்கள் எந்தப்பயமும் இன்றித் தூங்கினோம்.

70. ஐம்பத்தொன்பதாம் நாள்

(செங்குண்டா—ராமாயண்பெட்—பிக்னூர் சித்தராமேஸ்வரம்.)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். இன்னும் நாங்கள் 19 மைல் நடக்க வேண்டும். ஒரு மைலில் செங்குண்டா என்ற பெரிய ஊர் வந்தது. அதனைக் கடந்து நடந்தோம். சிறிது மலைப்பாங்காகவும், காடாகவும்வழி அமைந்திருந்தது. நரசிங்கி என்ற ஊர்கடந்து ராமாயண் பெட்டுக்கு 2 மைல் முன்னால் சாலை ஓர மர நிழலில் தங்கினோம். ஹைதராபாத்தில் இருந்து திரு. ந. முத்தையா செட்டியார் அவர்கள் ஒரு காரில் காலை, மதிய, இரவு உணவு கொண்டு வந்து தந்தார்கள். உண்டு மகிழ்ந்து, உரையாடிக் களித்தோம். "மறுநாள் மட்டும் ஹைதராபாத்தில் இருந்து உணவு வராது. அதற்கு அடுத்த நாள் உணவு வரும்" என்று திரு. முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் அவர்களைப் பார்த்து, "இனிமேல் எவ்வளவு தூரத்திற்கு உணவு கொண்டு வரப் போகிறீர்கள்? இப்பொழுதே ஹைதராபாத்தில் இருந்து நெடுந் தொலைவு வந்து விட்டோம். இனியும் நீங்கள் எங்களைப் பின் தொடர்ந்து வந்து உபசரிப்பது சரி யில்லை" என்றோம்.

அதற்கு அவர்கள், "உங்களை எல்லாம் பிரிய எங்களுக்கு மனம் இல்லை. எங்கள் அன்பர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் தாமே முன் வந்து

உணவு தயாரித்து அனுப்புகிறார்கள். ஒருவர் கார் தருகிறார்; இன்னொருவர் பெட்ரோல் செலவு ஏற்கிறார். வாய்ப்பு இருப்பவர்கள் காரில் உங்களைக் காண வருகிறோம். இனி நீங்கள் காடு, மலை முதலிய கடுமையான பகுதி வழியாகப் பயணம் செய்யப் போகிறீர்கள். அங்கெல்லாம் உங்களுக்கு யார் உணவு தரப்போகிறார்கள்? ஆகவே நாளை மறுநாள் மட்டும் நாங்கள் யாராவது உணவு கொண்டு வந்து தருவோம். அதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்'' என்று கூறினார். அவரது கண்கள் கசிந்தன. எங்கள் கண்களும் குளமாயின.

மாலையில் அவர்கள் 4 மணிக்குப் புறப்பட்டார்கள். நாங்களும் புறப்பட்டோம். 7 மணி அளவில் பிக்னூர் என்ற முக்கிய நகரத்தின் எல்லையை அடைந்தோம். அப்பொழுது சாலையில் நாங்கள் தமிழில் பேசிக்கொண்டே நடந்தோம். எங்கள் தமிழ்ப் பேச்சைக் கேட்டதும் எங்களைக் கடந்து சென்ற ஒரு **மோட்டார் சைக்கிள்** நின்றது. அதில் பயணம் செய்து கொண்டிருந்த அன்பர் எங்களை நோக்கி வந்து, ''தமிழில் பேசிக்கொண்டே செல்கிறீர்களே, நீங்கள் யார்?'' என்று தமிழில் கேட்டார். நாங்கள் பதில் சொன்னோம். உடனே அவர் மிகவும் மகிழ்ந்து எங்கள் கைகளைக் குலுக்கி, ''மிகப் பெரிய சாதனையைச் செய்கிறீர்கள். நீங்கள் எல்லாம் கடவுள் அருளைப் பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை'' என்று கூறித் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டார்.

அவர் காரைக்குடிக்கு அருகில் உள்ள பி. அழகாபுரி என்ற ஊரைச் சேர்ந்த நகரத்தார். **கருப்பையா** என்பது அவர் பெயர். அவர் தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்தின் பிரதிநிதியாகக் காமரெட்டி என்ற பக்கத்து ஊரில் பணிபுரிகிறாராம். அவர் அண்மையில்தான் இங்கு வந்தாராம். எனவே அவர் முகவரி ஹைதராபாத்

நகரத்தார்களுக்குத் தெரியாதாம். இனிமேல்தான் அவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமாம். அலுவலக வேலையாய்ச் சாலையில் செல்லும்பொழுது எங்களைச் சந்தித்ததற்கு எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்த அவர், எங்களிடம் விபூதி பிரசாதம் பெற்றுக் கொண்டு, அருகில் உள்ள ஒரு தேநீர்க்கடைக்கு எங்களை அழைத்துச் சென்று பால் வாங்கித் தந்தார். அக்கடையில் பாலும் தேநீரும் மட்டுமே இருந்தன.

பால் பருகியபின் அவரோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் "இடதுபுறச் சாலையில் இரண்டு மைல் தொலைவில் **சித்தராமேஸ்வரம்** என்ற புனிதமான கோயில் இருக்கிறது. அங்கு சென்று வர அதிகமாக 4 மைல் ஆகலாம். இன்று இரவு நீங்கள் இங்கே பிக்னூரில் எங்காவது தங்குவதைவிடச் சித்தராமேஸ்வரம் கோயிலுக்குச் சென்று, கடவுளை வணங்கி அங்கேயே தங்குங்கள். இராமேஸ்வரத்தில் இருந்து வரும் நீங்கள் சித்தராமேஸ்வரத்தில் தங்குவது சிறப்பு. நான் அங்கு முன்னால் சென்று ஏற்பாடு செய்கிறேன். நாளை நீங்கள் காமரெட்டியில் தங்க ஏற்பாடுகள் செய்கிறேன்." என்று கூறினார். இது அந்த இராமநாதரே வந்து வழிகாட்டியதுபோல இருந்தது. எனவே மகிழ்ச்சியோடு அதற்கு இசைந்தோம்.

மோட்டார் சைக்கிள் பறந்தது. அடுத்து எங்களது ரிக்ஷாவும் பறந்தது. நாங்களும் பறந்தோம் என்று தான் சொல்ல வேண்டும். அவ்வளவு விரைவாக நடந்து இரவு 7½ மணிக்குச் **சித்த ராமேஸ்வரம்** என்ற கோயிலுக்குச் சென்று சேர்ந்தோம். அங்குள்ள கோவில் அதிகாரியிடம் திரு. கருப்பையா அவர்கள் எங்களைப் பற்றிக் கூறி இருந்தார். எனவே அந்த அதிகாரி எங்களை வரவேற்றுத் தரிசனம் செய்து வைத்துக் கோவிலைப் பற்றிய எல்லா விபரங்களையும் கூறினார்.


"இது ஒரு பழங்காலக் கோவில். சுமார் இரண்டா யிரம் வருடத்திற்கு முன்பு சித்தகிரி, ராமகிரி என்னும் அந்தணர் இருவர் இங்கே தானே தோன்றிய சிவலிங் கத்தைநெடுங்காலம் பூசித்தனர். பிறகு கருவறை மட்டும் கட்டி வணங்கினர். காகதீய அரசின் காலத்தில் சுமார் முந்நூறு ஆண்டு கட்கு முன்பு இக்கோயில் மிகப் பெரி தாகக் கட்டப்பட்டது. இங்குள்ள சிவலிங்கம் தானே முளைத்தது. (சுயம்பு) இச் சிவலிங்கத்தை எல்லோரும் தொட்டு வணங்கலாம் (காசிபோல). இச் சிவலிங்கத்துக் குப் பின்புறம் உள்ள கிணற்று நீர்தான் இங்கு புனித தீர்த்தம். இங்கு (ஒரு மண்டலம்) 45 நாள் தங்கி இருந்து இக்கிணற்றுத் தீர்த்தத்தில் காலை 4 மணிக்கு நீராடி, இச் சிவலிங்கத்தைப் பூசித்தால் எந்த வியாதியும் தீரும். எனவே இங்கு எப்பொழுதும் நூற்றுக் கணக்கான நோயாளிகள் தம் குடும்பத்துடன் வந்து ஒரு மண்டலம் தங்கி இருந்து, இறை வணங்கி, வியாதி தீர்ந்து செல் கின்றனர்." என்றார் கோயில் அதிகாரி.

அவர் கூறியது முற்றிலும் உண்மை. கோயிலைச் சுற்றி உள்ள பல்வேறு மண்டபங்களில் நூற்றுக் கணக் கான மக்கள் தங்கியிருந்தனர். நாங்கள் சிவலிங்கத்தைத் தொட்டு வணங்கியதும் ஏராளமான மக்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு, எங்களிடம் விபூதி பிரசாதம் வாங்கிக் கொண்டனர். அவர்களை எல்லாம் நாங்கள் எங்கள் கைகளால் அவர்களது தலையைத் தொட்டு ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் வேண்டினர். அவ்வாறே ஆசி கூறினோம். பிறகு அவர்கள் எங்கள் பாதங்களைத் தொட்டு வணங்கினர்.

நாங்கள் இரவு உணவை உண்டபின் கருப்பையா விடை பெற்றார். கோயில் முற்றத்தில் உள்ள மண்ட பத்தில் இரவு தங்கினோம். அப்பொழுது ஓர் உண்மை எங்களுக்கு வெளிப்பட்டது.

ஆந்திராவில் நாங்கள் பயணம் செய்யும் பொழுது எங்களைத் தெலுங்கர் பலர் "நீங்கள் எந்த ராமேஸ்வரத்தில் இருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டனர். அந்தக் கேள்வி சரியாக எங்களுக்கு விளங்க வில்லை. எந்த ராமேசுவரம் என்று கேட்கிறார்களே. இராமேசுவரம் என்றால் காசி வரை புரிகிறதே. இராமேஸ்வரம் ஒன்று தானே. இவர்கள் ஏன் இப்படிக் கேட்கிறார்கள்? என்று எண்ணினோம். ஆந்திராவில் இராமேஸ் வரம் என்றால் சித்தராமேஸ்வரத்தைத்தான் குறிக்குமாம். நமது இராமேஸ்வரத்தைச் "**சேதுபந்தன ராமேஸ்வரம்**" என்று குறிப்பிடு வார்களாம். இந்த உண்மை கோயில் அதிகாரி மூலம் தெரிந்தது. அது முதல் நமது இராமேஸ்வரத்தை நாங்கள் சேதுபந்தன ராமேஸ் வரம் என்றே சொல்லலானோம்.

சித்த ராமேஸ்வரரை மறுநாள் காலையிலும் வணங்கும் பாக்கியம் கிடைத்துள்ள மகிழ்ச்சியோடு இரவு தூங்கினோம்.



71. அறுபதாம்நாள்—மணிவிழா

காமரெட்டி

இன்று (17-4-83 ஞாயிறு) ஒரு முக்கியமான நாள். நாங்கள் புறப்பட்டு இன்று அறுபதாம்நாள் மணிவிழா—எனவே காலை 3½ மணிக்கே எழுந்து, மற்ற ஆந்திர பக்தர்கள் நீராடுமுன் கிணற்றுநீரில் தீர்த்தமாடி சித்தராமேஸ்வரரைத் தொட்டு வணங்கி, எங்களது பிரார்த்தனையை நன்கு நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கொண்டோம். காலை 4¾ மணிக்குக் காமரெட்டி நோக்கிப் பறப்பட்டோம். காலையில் 12 மைல் நடக்க வேண்டும். மாலையில் 8 மைல் நடந்து சதாசிவநகர் அடையவேண்டும். இன்றும் அதிகமான தூரம் நடக்கவேண்டும். அயராமல் நடந்து, பிக்னூர் கடந்து, காமரெட்டி என்ற ஊர்க்குக் காலை 9½ மணிக்குப் போய்ச் சேர்ந்தோம்.

திரு. கருப்பையா எங்களை ஊர் எல்லையில் வரவேற்றுப் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று தங்க வைத்தார். இன்று ஐதராபாத் நகரத்தார் உணவு கொண்டு வந்து தர வாய்ப்பில்லை என்றார்கள். அதற்குக் காரணம் கருப்பையா இந்த மணி விழா நாள் முழுவதும் உபசாரம் செய்ய வேண்டும் என்பது விதி போலும். எனவே ஹைதராபாத் நகரத்தார் வராத இந்த நாளில் கருப்பையா வருகிறார், இதுதான் இறைவனின் திருவிளையாடல். "ஒரு கதவை அடைத்த கடவுள் மறு கதவைத்திறந்து வைக்கிறார். அடைபட்ட

கதவு நமக்குத் தெரிகிறது. ஆனால் திறக்கப்பட்டுள்ள மற்றொரு கதவு நமக்குத் தெரிவதில்லை'' என்று எனது நாடகம் ஒன்றில் பல்லாண்டுகட்கு முன்பு குறிப்பிட்டிருந்தேன். அது எவ்வளவு தூரம் உண்மை என்பது எங்களுக்கு இங்கே புரிந்தது. அடைக்கப்பட்ட கதவு அந்த இடத்திலேயே தெரியும், திறக்கப்பட்ட கதவு போகப்போகத்தான் தெரியும்.

காமரெட்டியில் காலை உணவு, மதிய உணவு எல்லாம் கருப்பையா வழங்கி உபசரித்தார். மேலும் உள்ளூர்ப்பிரமுகர்கள் பலரை அழைத்துவந்து எங்கட்கு அறிமுகப்படுத்தினார். காமரெட்டி சிண்டிகேட் வங்கியில் பணி புரியும் கே. எம். தியாகராஜன், உள்ளூர்ப் பஞ்சாயத்துத் தலைவர், மற்றும் உள்ளூர்க் கல்லூரியில்பணிபுரியும் பேராசிரியர்கள் பலர்எங்களோடு உரையாடி மகிழ்ந்தனர். தேவகோட்டை சிலம்பணி விநாயகர் கோவிலில் பல்லாண்டுகட்கு முன்பு அர்ச்சகராகப் பணிபுரிந்த இராமரத்தின குருக்களின் பேரன் திரு. ஆர். ராஜரத்தினம் என்பவர் எங்களைச் சந்தித்தார். அவர் காமரெட்டி கல்லூரியில் (Degree College) பேராசிரியராகப் பணிபுரிகிறார். அவர் செட்டிநாட்டைப் பற்றி ஏராளமான கேள்விகள் கேட்டுச் செய்தி அறிந்து மகிழ்ந்தார். இங்கு சில தமிழர்கள் பணிபுரிகின்றனர். அவர்களும் எங்களைக் கண்டு ஆசி பெற்றனர்.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். இரவு 7½ மணிக்கு சதாசிவநகர் என்ற சிறிய கிராமத்திற்குச் சென்று அங்குள்ள அரிசிஆலையில் (Rice Mill) தங்கினோம். திரு. கருப்பய்யா அங்கு இரவு உணவு கொண்டு வந்து தந்து பிரியா விடைபெற்றார்.

72. அறுபத்தொன்றாம் நாள்

(சந்திராயன் பள்ளி—டிச்சி பள்ளி—நடுப்பள்ளி)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். பத்மாஜி வாடா, கல்வராால் ஆகிய ஊர்களைக் கடந்து சென்றோம். ஆந்திரப் பிரதேச அரசாங்கம் 1955 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அதற்கு முன்பு அது தமிழ் நாட்டோடு இணைந்திருந்தது. ஆந்திரா தனியாகப் பிரிய வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி நடந்தது. பொட்டி ஸ்ராமுலு என்ற ஆந்திரத் தலைவர் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். அதனால் வன்முறை ஏற்பட்டது. ரயில்கள் உடைக்கப்பட்டன. புகைவண்டி நிலையங்கள் கொளுத்தப்பட்டன. எனவே நம் பிரதமர் திரு. ஜவகர்லால் நேரு அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து தனியாக ஆந்திரப்பிரதேச அரசாங்கம் அமைக்க இசைந்தார். அதன்படி 1955 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச அரசு பிறந்தது. சென்னையை ஆந்திரர்கள் கேட்டனர். ராஜாஜி அவர்களின் முயற்சியினால் சென்னை தமிழ் நாட்டில் தங்கியது. திருப்பதி ஆந்திராவில் சேர்ந்தது. ஆந்திர அரசு பிறந்து இருபத்தைந்து ஆண்டு ஆன வெள்ளிவிழா நினைவாக ஒரு பூங்காவினை அழகான முறையில் ஆந்திர அரசு அமைத்திருக்கக் கண்டோம். அதனைத் தொடர்ந்து கனமான காடு (Thick Forest) குறுக்கிட்டது. பிரம்மாண்டமான மரங்கள், புதர்கள் அடர்ந்த ஒரு பயங்கரமான காட்டுப் பகுதியில் முதல் முறையாக நாங்கள் நடக்கத் தொடங்கினோம். சுமார்

4 மைல் தொலைவுக்கு இக்காடு நீடித்தது. காட்டுப் பகுதியில் வேட்டை நாய்களுடன் நடந்த வேடர்களைப் பார்த்தோம். அவர்கள் எங்கட்குத் தீங்கு எதுவும் செய்யவில்லை. எனினும் நாங்கள் அவர்களை விட மிக விரைவாக நடந்து காட்டுப் பகுதியைக் கடந்தோம்.

9 மைல் நடந்து காலை 9½ மணிக்குச் சந்திராயன் பள்ளி என்ற சிற்றூரை அடைந்து, அங்கு முதலில் உள்ள அம்பிகை கோயிற் குடிசையில் தங்கினோம். அம்பாளை வணங்கி அமர்ந்தோம். ஹைதராபாத்தில் இருந்து கார் வந்தது. அதில் பல அன்பர்கள் வந்தனர். செக்கந்தரா பாத்தில் செட்டிநாடு சிமிண்டு கார்ப்பொரேஷனில் பணிபுரியும் திரு. பழ. அழகப்பன் அவர்கள் எங்கட்குக் காலை, மதிய, இரவு உணவுகள் கொண்டு வந்து வழங்கினார்.

நாங்கள் காலை உணவு உண்ட பொழுது காம ரெட்டிக் கருப்பையாவும், அவரது நண்பர்களும் எங்களைப் பார்க்க மோட்டார் சைக்கிளில் வந்து சேர்ந் தனர். அவர்கட்கு ஹைதராபாத் அன்பர்களை அறி முகப்படுத்தினோம். எங்களால் அவர்கள் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ந்தனர். ''கூட்டுவித் தால் யாரொருவர் கூடாதாரே?'' என்பது உண்மை ஆயிற்று.

மதகுபட்டி திரு. அழ. வெங்கடாசலம் அவர்கள் அதிரசம், மிக்சர் எல்லாம் வழங்கினார். இவை எங்கட்கு வழியில் மிகவும் பயன்படும் என்று கூறினார். அத்துடன் ''இனி நாங்கள் உங்களை வந்து சந்திக்க வாய்ப்பில்லை. எனவே இனிப்பு வழங்கி இனிமையாகப் பிரிகிறோம். கடவுள் உங்கள் அனைவரையும் காப்பாற்று வார்,' என்று கூறினார். எல்லோர் கண்களும் கண்ணீர் சிந்தின. ''இனி எங்கட்கு யார் உணவு தருவார்'' என்ற கேள்வி எழுந்தது. ''கடவுள் தருவார்'' என்ற நம்பிக்கை பிறந்தது.

மாலை 4½ மணி வரை எல்லோரும் மனம் விட்டுப் பேசி மகிழ்ந்தோம். இனி புறப்பட வேண்டிய நேரம்வந்தது. காமரெட்டிஅன்பர்களும், ஹைதராபாத் அன்பர்களும் பிரியா விடை பெற்றுச் சென்றனர். நாங்கள் புறப்பட்ட சமயத்தில் ஒரு தெய்வப்படம் ரிக்ஷாவில் இருந்து விழுந்து கண்ணாடி உடைந்தது. எனினும் மனம் தளராமல் மீண்டும் அதனைப் பொருத்தி தீபம் காட்டி வணங்கிப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

''தண்டா'' என்ற ஊரின் வழியாக 8 மைல் நடந்து டிச்சிபள்ளி அருகில் உள்ள நடுப்பள்ளி என்ற ஊரில் இருக்கும் ''பெட்ரோல் பங்கு'' முன்னால் சைக்கிள் ரிக்ஷாவை நிறுத்தினோம். அப்பொழுது நாங்கள் மிகவும் சோர்ந்திருந்தோம். எனவே பெட்ரோல் நிலையத்தின் முன் உள்ள திறந்த வெளியில், பெட்ரோல் நிலைய உரிமையாளரின் பாதுகாப்பில் தங்க அனுமதி கேட்டோம். அவர் இசைந்தார். அத்துடன் குடிநீர் முதலியனவும் வழங்கினார்.

இரவு உணவு உண்டோம். வானமே கூரையாக உள்ள அந்த இடத்தில் பொட்டலில் படுத்து உறங்கி கினோம். இரவில் ஒருமுறை நான் விழித்தபோது ஒரு பெரிய பூரான் ஓடுவது கண்டேன். அது பக்தர் ஒருவரின் தலையணைக்குள் புகுந்தது. உடனே அதனை அடித்து விட்டுப் படுத்தோம். எங்களை அறியாமல் தூங்கினோம். மறுநாட் காலை என் கண்கள் திறக்க மறுத்தன. நிலச் சூட்டால் கண்கள் சிவந்து கோழை தள்ளிக் கண் இமைகள் மூடி இருக்கக் கண்டேன். நிலச்சூட்டில் துயின்ற தன் விளைவு இது!

எங்களுக்கு ஒரு மகிழ்ச்சி! ஐதராபாத்தில் நாங்கள் ஒரு நாள் அதிகமாகத் தங்கியிருந்ததால் தொய்வு விழுந்த தூரத்தை இந்த ஐந்து நாட்களில் ஐதராபாத் அன்பர்கள் கண் முன்னாலேயே நடந்து கடந்து, எங்கள் திட்டப்படியான ஊருக்கு வந்து சேர்ந்து விட்டோம் அல்லவா! இதுவும் அவன் செயல்!

73. அறுபத்திரண்டாம் நாள்

(பட்கல் - மாமிடிப் பள்ளி)

காலை 4½ மணிக்குப் பயணம் புறப்பட்டோம் சிறிது தொலைவில் தோபள்ளி என்ற ஊரில் இராமர் கோவிலில் வழிபாடு செய்து நடந்தோம். சூடாபள்ளி, சிக்கிந்திராபூர் வழியாக 7 மைல் நடந்து காலை 8 மணிக்கு பட்கல் என்ற ஊருக்குச் சென்று தங்கினோம். எங்கள் கொள்கைப்படி **நீரும் நிழலும்** சிறப்பாக அமைந் திருந்ததால் விறகு பொறுக்கிச் சமையல் செய்தோம். இன்றைய ''திரு அமுது'' திருவாடானைநூற்பு ஆலைச் செயலர் திரு. பி. ஆர். எம். சுந்தரம் அவர்களால் வழங்கப் பெற்றது. உணவு உண்டு நன்கு தூங்கினோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். வழியெல் லாம் ஆயிரக்கணக்கான மாமரங்கள் காட்சி அளித்தன. நாங்கள் புறப்பட்ட பொழுதே கனமான கருமேகம் ஒன்று எங்களை விரட்டிக் கொண்டும், மிரட்டிக் கொண்டும் புறப்பட்டது. 8 மைல் நடந்து மாமிடிப் பள்ளி என்ற ஊருக்கு நாங்கள் செல்ல வேண்டும். வழியில் மழையினால் பயணம் தடைப்படுமோ என்ற பயத்தினால் விரைந்து நடந்தோம். கருமேகம் சூழ்ந்தது. மின்னல் ஒளி பாய்ச்சியது. இடி இடித்தது. சிறு தூறல் விழத் தொடங்கியது. எனினும் நாங்கள் அயராமல் நடந்தோம். ஜக்ராம்பள்ளி, அர்குல் ஆகிய ஊர்களைக் கடந்து விரைந்தோம். மழை சிறிது கனமாகவே விழத் தொடங்கியது. எனினும் எங்கும் தங்காமல் நடந்தோம். எங்கள் சக்கிள் ரிக்ஷா எங்களுக்கு முன்னால் மாமிடிப்

பள்ளி போய்ச் சேர்ந்தது. ஊர் மக்கள் சைக்கிள் ரிக்ஷா தங்க இடம் அமைத்துக் கொடுத்தனர், எங்கள் வருகையினை அறிந்து அவ்வூர் ஆசிரியர் கே. கங்காராம் என்பவரும், தானிய வியாபாரி சி. நாராயணன் என்பவரும் ஊர்ப் பஞ்சாயத்துக்கட்டடத்தைத்திறந்துவைத்து எங்களுக்காகக் காத்திருந்தனர். நாங்கள் ஓட்டமும் நடையுமாக மாலை 6 மணிக்கு மாமிடிப் பள்ளி ஊருக்குள் நுழைந்தோம். ஊர் மக்கள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக நின்று எங்களை வரவேற்றனர். பஞ்சாயத்து அலுவலகத்துக்குள் நுழைந்தோம். கன மழை கொட்டத் தொடங்கியது. சுமார் இரண்டு மணி நேரம் மழை கொட்டி எங்கும் வெள்ளக் காடாகி விட்டது. அவ்வூரில் கடந்த ஆறுமாதமாக மழை இன்றி மக்கள் வாடி இருந்த வேளையில் எங்கள் வருகையும் மழையும் அமைந்ததால், எங்களால் தான் மழை வந்தது என்று மக்கள் நியாயமாக நம்பி எங்களை மிகவும் கொண்டாடினர். எங்களோடு மிக அன்பாகப் பேசிக் கொண்டிருந்து, எங்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளும் செய்தனர். பால், மோர், காய்கறி, அரிசி முதலியன கொண்டு வந்து தந்து உபசரித்தனர்.

நாங்கள் தங்கியிருந்த பஞ்சாயத்து அலுவலகத்துக்கு எதிரில் "ஆந்திரா ஹோட்டல்" என்ற பெயரில் **மனோகரம்மா** என்ற ஆந்திர மாது ஒருவர் சிறு உணவு விடுதி நடத்திக் கொண்டிருந்தார். நம் ஊரில் உள்ள ஒரு பெட்டிக்கடை அளவுக்கே அது இருந்தது. கணவனை இழந்த அந்த அம்மாவுக்கு இரண்டு பெண்கள் —மூத்த பெண்ணுக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. அந்தப் பெண் தனது கணவனால் புறக்கணிக்கப் பட்டு இங்கு தன் தாயுடன் குழந்தைகளை வைத்துக் கொண்டு வாழ்கிறாள். இளைய பெண்ணுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. தாயும், இரு பெண்களுமாகச் சேர்ந்து உழைத்து ஆந்திரா ஹோட்டல்

என்ற பெயரில் சிறு உணவு விடுதி நடத்தி வாழ்கின்றனர். காலை 4 மணி முதல் இரவு 12 மணி வரை கடுமையாக உழைக்கின்றனர். அது சிறு கிராமம் ஆகையால் அதிக விற்பனையோ வருமானமோ கிடையாது. லாரிகள் வந்து நின்றால் வியாபாரம் உண்டாம். இல்லா விட்டால் வறுமை தானாம். இந்த வறுமை நிலையிலும் அந்தத் தாயும் பெண்களும் எல்லையற்ற அன்போடு எங்களுக்குப் பால், மோர், தக்காளி, கத்தரிக்காய், அரிசி, மிளகாய்ப் பொடி முதலியன ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து தந்தனர். அந்தத் தாய் தன் இரு பெண் களையும் வாழ்த்தும்படி எங்களை உருக்கமாக வேண்டி னாள். அவளது சோகமான கதை எங்கள் உளளங்களை நெகிழவைத்தது. அந்தத் தாயும் பெண்களும்தெலுங்கில் தம் கதைகளைக் கூறினர். எங்களுக்குத் தெலுங்கு அவ்வளவு தெரியாது. என்றாலும் கதை புரிந்தது. மூத்த பெண் தன் கணவன் திருந்தி வரவேண்டும் என்றும், தன் கணவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்றும் விரும்பினாள். இரண்டாவது பெண் நல்ல கணவனாக அமைந்து திருமணம் நிகழ வேண்டும்; இன்றேல் திருமணமே வேண்டாம் என்றும் கூறினாள், அவர்கள் இருவரின் கண்ணீர் எங்கள் நெஞ்சைப் பிளந்தது. அவர்கள் எங்கள் காலடியிலேயே கிடந்தார்கள். அவர் களுக்கு ஆறுதல் சொல்லி விபூதி வழங்கி ஆசிகூறினோம். மூத்த பெண்ணின் கணவன் திருந்தி வந்து நன்கு குடும்பம் நடத்த வேண்டும் என்றும், இரண்டாவது பெண்ணுக்கு விரைவில் நல்ல இடத்தில் திருமணம் நிகழ வேண்டும் என்றும் விசுவநாதரிடம் பிரார்த்தித்தோம். எங்கள் பிரார்த்தனை பலித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அந்தத் தாயும் பெண்களும் மறுநாள் காலை தங்கள் கடைக்கு வந்து, தேநீர் அருந்தி ஆசீர்வதித்துச் செல்லுமாறு எங்களை வேண்டினர். நாங்கள் இசைந்து அவர்களை அனுப்பினோம். மிகச் சிற்றூராக இருந்த மாபிடிப் பள்ளி மக்களின் அன்பும் உபசாரமும் எங்கள் நெஞ்சு பிணித்தது என்றால் மிகையாகாது.

74. அறுபத்து மூன்றாம் நாள்

(முப்கால்—போச்சம்பாடு—கோதாவரிநதி)

காலை 5 மணிக்குப் பயணம் புறப்பட்டதும் மனோகரம்மாவின் "ஆந்திரா ஹோட்டல்" என்ற சிறு உணவு விடுதிக்குச் சென்றோம். தாயும், பெண்களும் தேநீர் தயாரித்து வைத்துக்கொண்டு எங்கள் வருகைக்காகக் காத்திருந்தனர். நாங்கள் அங்கு சென்றதும், எங்கள்பாதங்களில்விழுந்து பணிந்து விபூதி வாங்கிக் கொண்டனர். அன்போடு தேநீர் வழங்கினர். அவர்களது ஏழ்மைநிலை எங்கள் உள்ளத்தை வெதுப்பியது. தேநீருக்கு அவர்கள் காசு பெற மறுத்தனர். என்றாலும். "காலை வியாபாரம் ஆகையாலும், காசிவிசுவநாதரின் ஆசியுள்ள காசு என்பதாலும் எங்களிடம் காசு ஏற்க வேண்டும்" என்று வற்புறுத்திக்கூறி அவர்களிடம் உரிய காசு கொடுத்தோம். நன்கு வணிகம் நடக்க ஆசி கூறினோம். தேநீர்க்காசு எங்கள் பக்தர் திரு. அய்யாச் சாமியினால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

எழுச்சியோடு நடக்கத் தொடங்கினோம். பெர்கெட், ஸ்ரீராம்பூர் ஆகிய ஊர்களைக் கடந்து, பால் கொண்டா என்ற ஊரினை அடைந்தோம். அங்கு சிறு கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து அடுக்கிக் கட்டியது போன்ற ஒரு மலை மிக அற்புதமாகக் காட்சி அளித்தது. இறைவனின் அந்த இயற்கைப் படைப்பை—தெய்வீகக் காட்சியை மெய்மறந்து ரசித்தோம். அந்த மலையின் அடிவாரத்தில் உள்ள இராமர்கோயிலில் வழிபாடு செய்து மேலும் நடந்தோம். காலையில்

நாங்கள் 12 மைல் நடந்து முப்கால் என்ற ஊருக்குச் செல்ல வேண்டும். வழியில் கிசான்நகர் தொழிற் பேட்டை, கல்யாணராமசாமி கோயில் கண்டு 9½ மணிக்கு முப்கால் என்ற ஊரின் எல்லையை அடைந்து தங்கினோம்.

மாலை 3¾ மணிக்கு மீண்டும் புறப்பட்டோம். ஒரு மைலில் உள்ள புசாநகர் என்ற சிற்றூரில் காணப் பட்ட பெருமாள் கோயிலில் வணங்கினோம். அங் கிருந்து 3 மைலில் உள்ள புசாபூர் என்ற கிராமத்துப் பெருமாள் கோயிலில் வழிபாடு செய்தோம். மேலும் 3 மைல் நடந்து கோதாவரி நதியின் தெற்குக் கால்வாயை (Godavari South Canal) அடைந்தோம். இந்த இடம் **போச்சம்பாடு** என்ற ஊரின் எல்லையாகும். மேலும் 3 மைல் நடந்து புகழ்மிக்க கோதண்ட ராமசாமி கோயிலை அடைந்தோம். கோயிலுக்கு அருகில் புனிதமும் தெளிவும் புகழும் மிக்க **கோதாவரிநதி** ஓடிக்கொண்டிருந்தது. எல்லையற்ற ஆர்வத்தோடு ஓடிச்சென்று அந்தி நேரத்தில் கோதாவரி ஆற்றில் விளையாடி, நீந்தித் திளைத்து மகிழ்ந்தோம். எங்கள் உடம்பில் இருந்த நோவெல்லாம் தீர்ந்தது. புத்துயிரும் புத்துணர்வும் பெற்றோம்.

நாசிக் பஞ்சவடியில் கோதாவரி ஆற்றை இராமபிரான் கண்டகாட்சியினைக் **கம்பர்** மிக அழகாக வர்ணிப்பார். அடக்கமாகவும், ஆழமாகவும், தண்மை யாகவும், அகத்துறைகள் உடையதாகவும் இருந்த கோதாவரி கம்பருக்குச் சான்றோர்களின் கவிதையைப் போல் காணப்பட்டதாம். "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்" என்கிறார் கம்பர். இந்தக் கோதாவரியில் இராமபிரானும், சீதையும், இலட்சுமணப் பெருமாளும் பல மாதங்கள்

நீராடி மகிழ்ந்தனர். நாங்கள் ஒருநாள் நீராடி மகிழும் பேறு பெற்றோம்.

கோதாவரியில் குளித்த பின் ஈரவேட்டியோடு கோதண்ட ராமசாமி கோயிலுக்குச் சென்றோம். அது ஒரு பெரிய கோவில். அப்பொழுது அங்கு 'ஸ்ரீராம நவமி உற்சவம்' சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான மக்கள் கிராமங்களில் இருந்து வந்து விழாக் கண்டு கொண்டிருந்தனர். சுவாமி சந்நிதியில் ஏராள மான பட்டாச்சாரியார்களின் வேதமுழக்கம் ஒலித்துக் கொண்டிருந்தது. சுவாமிக்கு ஆராதனைகள் அமோக மாக நடந்து கொண்டிருந்தன. கோயிலைச் சுற்றி பிர மாண்டமான கொட்டகை போட்டிருந்தார்கள். ஒரு பக்கம் "இராமாயண உபன்யாசம்" தெலுங்கில் நிகழ்ந்து கொண்டிருந்தது. இன்னொருபக்கம் "தியாகப் பிரம்மம்" பாடியுள்ள கீர்த்தனைகளைப் பாகவதர்கள் நெஞ்சுருகப் பாடிக் கொண்டிருந்தனர். எல்லா நிகழ்ச்சி களிலும் மெய்மறந்து ஈடுபட்டோம். எங்களை அங்கு தற்செயலாகச் சந்தித்து அறிமுகம் செய்து கொண்ட திரு. **கே. சங்கர்** என்னும் தெலுங்கு அன்பர் ஒருவர் எங்களை மிகவும் பாராட்டி இரவு உணவு வழங்கினார். அவர் திருவிழாக் காண வந்திருந்தவர் ஆவார். அவர் இராமபிரானைத் தரிசித்தது போன்ற உணர்வை எங்களைத் தரிசித்ததன் மூலம் அடைந்தாராம். அவரது அன்பு உணர்ச்சிக்கு எல்லையே இல்லை. கண்களில் நீர் பெருக எங்களைக் கொண்டாடி மகிழ்ந்தார். எங்க ளையே சுற்றிச் சுற்றி வந்தார். கோதண்ட ராமசாமி கோயிலில் வழிபாடு செய்து வைத்தார். அருகில் உள்ள ஸ்ரீ இராமலிங்கேஸ்வர கோயிலுக்கும் அழைத்துச்சென்று வழிபாடு செய்து வைத்தார். அக்கோயில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணி செய்யப்பட்ட விபரங் கள் எல்லாம் கூறினார். இரவு நாங்கள் கோயிலின் ஒரு

பகுதியில் தூங்க ஆவன செய்தார். அவர் எங்களுக்கு எல்லையற்ற அன்போடும், கண்களில் ஆனந்தக் கண்ணீரோடும் செய்த சேவைகளைக் கண்டபொழுது அவரை நாங்கள் **ஆஞ்சநேயனாகவே** கருதினோம்.

ஆஞ்சநேயன் பிறந்த காலத்தில் அவனுக்கு அவனது தந்தையாகிய வாயு பகவான் ஒரு வரம் அளித்தார். "நீ இராமபிரானைக் காண்பாய். இராமனுக்குச் சேவை செய்வாய்" என்றாராம். "இராமனை நான் எப்படி அடையாளம் காண்பேன்?" என்று அனுமன் கேட்டிருக்கிறான்.

அதற்கு வாயு பகவான், "இராமபிரானைக் காணும் பொழுது உன் இதயத்தில் எல்லையற்ற அன்பு பெருகும். கண்களில் இருந்துஆனந்தக் கண்ணீர் வடியும். அதில் இருந்து நீ இராமபிரானை அடையாளம் காணலாம்" என்றாராம்.


அங்ஙனமே கிஷ்கிந்தை நோக்கி வில்லேந்திய கையராய் இராமபிரானும், இலட்சுமணப் பெருமாளும் வந்தபொழுது, இரிசிய மூகமலையில் ஆஞ்சநேயன் இராம பிரானைக் காண்கிறான். உடனே அவனது உள்ளத்தில் எல்லையற்ற அன்பு ஊற்றெடுக்கிறது. இரு கண்களும் ஆனந்தக் கண்ணீர் பொழிகின்றன. "இதோ வருகிற இவர்களில் ஒருவர்தான் இராமபிரானாக இருக்க வேண்டும்'? என்று மனத்துள் கருதிய ஆஞ்சநேயன், அந்தணச் சிறுவனின் வடிவில் அவர்கள் முன் சென்று, தரையில் வீழ்ந்து, அவர்களது பாதங்களைப் பற்றிக் கொண்டான். இராமரும் இலட்சுமணரும் ஒத்த வயதினராகவும், ஒரே தோற்றம் உடையவராகவும், அண்ணன் யார் தம்பியார் என்ற வித்தியாசம் தெரியாதவராகவும் இருந்ததால் ஆஞ்சநேயன் இருவருக்கும் நடுவில் கீழே பணிந்து ஒருவரின் இடப் பாதத்தையும், இன்னொருவரின் வலப்பாதத்தையும் தன் இருகைகளால் பற்றிக்

கொண்டு "உங்கள் வரவு தீதில்லாத நல்வரவு ஆகுக" என்றான். உடனே இராமபிரான் தன் தம்பியை நோக்கி "தம்பி இலட்சுமணா! கல்லாத கலையில்லை என்னு மாறு நிற்கின்ற கல்விமானாகிய இச்சொல்லின் செல்வன் யார் என்று கேள்" என்றான். அதில் இருந்து இராம பிரான் தான் மூத்தவன் என்று அறிந்த ஆஞ்சநேயன் அவனை மீண்டும் வணங்கித் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். "அடியேன் அஞ்சனை புதல்வன்; வாயு புத்திரன்; அனுமன் என்ற பெயரினை உடையேன். சுக் கிரீவனின் அமைச்சன்" என்று கூறி இராமபிரானின் அன்புக்குப் பாத்திரம் ஆனான். இராமபிரானுக்கு அனுமன் செய்த சேவைக்கு இணையில்லை. அதுபோல் அடிலாபாட் மாவட்டம், கானாபூர் தாலுகா, மாடி பாடுகை என்ற ஊரைச் சேர்ந்த கே. சங் கர் என்ற இராம பக்தர், இராம நவமி விழாக்காண வந்தவர், எங்கள் மீது அன்பு பெருக எங்களையே இராமனாகப் பாவித்துக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக எங்களுக்கு உபசாரங்கள் செய்து, எங்களை விட் டுப் பிரியாமல், இரவு முழுவதும் எங்களோடு இருந்து மறுநாட்காலை எங்களை வழியனுப்பிய பக்திக் காட்சி யும், பரவச நிகழ்ச்சியும் எழுத்தால் எழுதக் கூடியதன்று. உள்ளத்தால் மட்டுமே உணர முடியும். இதனைப் படிக் கும் எத்தனை பேர் இந்த உணர்ச்சியைப் பெறுவார் களோ எனக்குத் தெரியாது. ஆனால் இந்த உணர்ச்சி யினை எய்துவோர்க்கு இராமபிரானின் அருள் பரிபூரண மாக உண்டு என்று நம்பலாம்.

போச்சம்பாடு அருகில் 2 மைல் தொலைவில் ஸ்ரீ ராமசாகர் அணைக்கட்டு' 318 கோடி ரூபாய் செல வில் கோதாவரி நதிக்குக் குறுக்கே கட்டப் பட்டுள்ளது. இந்த அணையின் உயரம் 140 அடி. இதில் இருந்து "காகாத்திய கால்வாய்" 200 கிலோ மீட்டர் தூரத்

துக்கு வெட்டப் பட்டுள்ளது. இதனால் 7 இலட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

இந்த அணை கட்டப்பட்டுள்ள இடத்தில் பழைய இராமலிங்கேஸ்வரர் கோயில் இருந்ததாம். ஆனால் அணையில் நீர் பெருகியதும் அணைப் பகுதிக்குள் இருந்த கோயில் மூழ்கிவிட்டது. எனவே அங்கிருந்த விக்கிரகங்களைப் பத்திரமாக எடுத்து வந்து கோதண்ட ராமசாமி கோயில் அருகில் புதிதாக ஒரு கோவில் கட்டி அங்கு இராமலிங்கேஸ்வரரைப் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் முதலியவற்றை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சிருங்கேரி சங்கராச்சாரியார் மூலம் செய்து வைத்தது குறிப்பிடத்தக்கது.



75. அறுபத்து நான்காம் நாள்

(நிர்மல்—சாத்பூரா மலை—வாங்கிடி)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். கம்ஜால் என்ற ஊரைக்கடந்து, கட்தால் என்ற ஊருக்குச் சென்றோம். அங்கிருந்த இராமர் கோயிலில் வழிபாடு செய்தோம். 10 மைல் நடந்து "நிர்மல்" என்ற மாபெரும் நகருக்குக் காலை 9 மணிக்குச் சென்று சேர்ந்தோம். இந்நகர் ஆந்திராவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகும். நிர்மல் நகரின் இரண்டு எல்லையிலும், கோட்டை— வாசல்— அகழி— எல்லாம் இருக்கக் கண்டோம். இது வரலாற்றுப் புகழ் கொண்ட நகராகும். இங்கிருந்து சுமார் 5 மைலில் இந்தியாவின் மிகப் பெரிய விந்திய சாத்பூரா மலைகளில் ஒன்றாகிய **சாத்பூரா மலைத் தொடர்** கிழக்கு மேற்காக இந்தியாவின் குறுக்கே கிடக்கிறது. இந்தத் தொடரும் இதற்கு வடக்கே மத்தியப் பிரதேசத்தில் **கோரை** என்ற ஊருக்கு அருகே கிழக்கு மேற்காகக்கிடக்கும் விந்திய மலைத்தொடரும் தான் இந்தியாவை வட இந்தியா—தென் இந்தியா என்ற இரு பெரும் பூகோளப் பிரிவுகளாகப் பிரிக்கின்றன. இவற்றின் உயரம் சுமார் 1650 அடி வரை உள்ளன. இந்த மலைகள் தான் இந்தியாவில் வடக்கு—தெற்குப் பிரயாணத்திற்கு இடையூறாக இருக்கின்றன. வட இந்தியாவில் வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடும் கங்கை, யமுனை, பிரமபுத்திரா, கோசி முதலிய ஆறுகளின் நீரை, வெப்பத்தால் வாடும் தென்னிந்தியாவிற்குக்

கொண்டு வர இயலாமல் தடுப்பதும் இம் மலைத் தொடர்களே ஆகும்.

தெற்கில் இருந்து வடக்கே பயணம் செல்பவர்களும், வடக்கில் இருந்து தெற்கே பயணம் செய்பவர்களும் இம் மலைத் தொடர்களின் மீது ஏறிச் செல்வதைத் தவிர வேறு வழி இல்லை. பேருந்து, கார், லாரி, முதலி யனவும் இவற்றின் மீது ஏறித்தான் செல்லவேண்டும். வடநாட்டுப் பொருள்கள் தென்னாட்டுக்கும், தென் னாட்டுப் பொருள்கள் வட நாட்டுக்கும் விரைவில் செல்ல முடியாமல் தடுப்பது இம் மலைத் தொடர்களே. இருவேறு கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள் இந்தி யாவில் நிலவுவதற்கு இம்மலைத் தொடர்களே முக்கிய காரணம் ஆகும்.

விந்திய சாத்பூரா மலைகளின் காரணமாக மத்திய இந்தியாவில் ஒரு பெரிய பீடபூமிப் பிரதேசம் அமைந் துள்ளது. இப் பீடபூமிப் பிரதேசமானது கடல் மட்டத் திலிருந்து சுமார் ஆயிரம் அடி முதல் இரண்டாயிரம் அடி வரை அமைந்திருப்பதால் இப்பகுதியில் போக்குவரத்து எளிதாக நடைபெற இயலவில்லை. இப் பீடபூமிப் பிரதேசமானது ஆந்திராவில் நிர்மல் நகரம் அருகில் சாத் பூரா மலைத் தொடரில் தொடங்கி, கோரை அருகில் மத்தியப் பிரதேசத்தில் விந்தியமலை கடந்து, உத்தரப் பிரதேசத்தில் அனுமானா, பைகோட் என்ற ஊர்கள் கடந்து மலை இறங்கி டிரமாண்ட் கஞ்ச் என்ற ஊரில் சமவெளி அடைகிற வரை சுமார் 43 நாள் நடைப் பயணத் தூரம்— அதாவது சுமார் 600 மைல் தொலைவு விரிந்து படர்ந்திருக்கிறது. இவ்வளவு தொலைவுக்கு நீண்டு கிடக்கும் மாபெரும் பீடபூமிப் பிரதேசத்தில் மலையும் பள்ளத்தாக்கும், காடும், நதியும், வனவிலங்கு களும் கொள்ளைக் கூட்டமும், தண்ணீர்ப் பஞ்சமும், வெள்ளப் பெருக்கமும், வெப்பமும் குளிரும் என்ற இரு

வேறு இயற்கைகள் நிலவுவதால் இப்பகுதியில் போக்கு வரத்து மிக அருகிக் கிடக்கிறது. இங்கிருக்கும் மக்கள் ஆதி வாசிகள் போல் தான் வாழ்கின்றனர் எனலாம். இவர்கட்கும் வெளியுலக்கும் தொடர்பே இல்லை. இம்மக்களுக்கு இந்து மதம் தவிர வேறு மதம் தெரியாது. இங்கு பிற மதங்கள் பரவவில்லை. இங்கு இராமனைத் தவிர வேறு தெய்வம் தெரியாது. மூன்று வயதுச் சிறு பிள்ளை முதல் 90 வய்துக் கிழவர் வரை ''ராம் ராம்'' 'சீதாராம்'' என்று ஒருவரை ஒருவர் வரவேற்று நலம் விசாரிக்கக் காணலாம். இவர்களிடம் இருக்கும் தெய்வ பக்தி அபாரமானது. இவர்களுக்குத் தெரிந்த தெல்லாம் காசியும் இராமேசுவரமுமே ஆகும். இப்பகுதியில் 43 நாட்கள் நாங்கள் வாழக் கொடுத்து வைத்தது எங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட அரிய அனுபவம் என்றால் மிகை யாகாது.

நிர்மல் நகரில் பல தொழில்கள் நடைபெறுகின் றன. மக்கள் சுறுசுறுப்பாக இயங்குகின்றனர். வியாபாரம் நன்கு நடைபெறுகிறது. நாங்கள் ''வெங்கடேஸ்வரா மந்திர்'' என்ற கோயிலில் வழிபட்டுப்பேருந்து நிலையம் அருகில் ஓர் உணவு விடுதியில் வயிறார உண்டோம். இப்படி நாங்கள் உணவுண்டு பல நாட்கள் ஆகிவிட்டன. உண்ட பின் பேருந்து நிலைய வளாகத்தில் தங்கினோம். எங்கள் சைக்கிள் ரிக்ஷா மிகவும் பழுதாகி இருந்தது. பின் சக்கர போக்ஸ் கம்பிகள் பல உடைந்து விட்டன. ஹைதராபாத்தில் நாங்கள் வாங்கிய தனிக் கம்பிகள் (Extra) வழியில் உடைந்த கம்பிகளுக்குப் பதிலாகப் போடப்பட்டதால் தீர்ந்து விட்டன. எங்கள் ரிக்ஷா வுக்குத் தேவை கனமான போக்ஸ் கம்பிகள். ஆனால் அவை நிர்மலில் கிடைக்கவில்லை. எனவே கம்பிகளுக்கு என்ன செய்வது என்று ஆழ்ந்து சிந்திக்கலானோம். இனி மலை மீது வேறு ஏற வேண்டும். கம்பியோ கிடைக்க வில்லை. இச்சூழ்நிலையில் எங்கள் பக்தர்களில் ஒருவ

ராகிய **க. தேனிமலை** நல்ல யோசனை சொன்னார். அதன்படி ரிக்ஷாவின் முன் சக்கரத்தைக் கழற்றி அதில் இருந்த கம்பிகளைப் பயன்படுத்திக் கொண்டு மீதிக்கம்பி களை வழித் தேவைக்கு வைத்துக் கொண்டோம். முன் சக்கரம் கனமான கம்பிகளைக் கொண்டிருந்ததால் எங்களுக்கு இப்பொழுது அது பயன்பட்டது. அதற்குப் பதிலாகச் சாதாரண சைக்கிளின் சக்கரம் ஒன்றை வாங்கி முன்பக்கம் பூட்டினோம். அதில் கனமில்லாத சாதாரண போக்ஸ் கம்பிகள் போடப்பட்டிருந்தன. ரிக்ஷாவில் இருந்த பொருள்களை ஓரளவு எடுத்துப் பயன்படுத்தி இருந்ததால் அதன் எடையும் இப்பொழுது சிறிது குறைந்திருந்தது. மேலும் சில பொருள்களை வெளியேற்றி சைக்கிள் ரிக்ஷா ஆபத்தில்லாமல் ஓட வழி செய்தோம். இப்படியாக எங்கள் ரிக்ஷாவின் முன்சக் கரம் அவசரத் தேவைக்குப் பயன்பட்டது.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்-அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.

என்பார் வள்ளுவர் ''அன்புடையவர்கள் தமது எலும் பையும் பிறர்க்கு ஈவர்'' என்பது வள்ளுவம். எங்கள் ரிக்ஷாவின் முன் சக்கரம் தன் எலும்புகளாகிய போக்ஸ் கம்பிகளைப் பின்சக்கரங்களுக்குத் தந்து தான் மறைந்து எங்கள் பயணம் தொடர்ந்து நடக்க வழி செய்தது. சக்கரம் உயிரில்லாத பிராணியாக இருந்தாலும் உயி ருள்ள எங்கள் பயணம் தொடர இக்கட்டான வேளை யில் பெருத்த உதவி செய்ததை எங்களால் மறக்கவே இயலாது.

எங்கள் ரிக்ஷா பேருந்து நிலையம் அருகில் நின்றது. நாங்கள் நிலையத்திற்குள் ஓய்வாக இருந்தோம். அன்று முழுதும் எங்கள் திட்டப்படி நாங்கள் நிர்மல் நகரிலேயே தங்கவேண்டும். மறுநாட்

காலை பயணமாகிச் சாத்பூரா மலைமீது ஏறி இறங்க வேண்டும். ஆனால் இத்திட்டத்திற்கு ஓர் இடையூறு வந்து சேர்ந்தது.

எங்கள் ரிக்ஷாவைப் பார்த்த உள்ளூர் இளைஞர் பலர் அதனைச் சூழ்ந்து கொண்டனர். இப்படி ரிக்ஷா அவ்வூரில் கிடையாது. இது ஓர் அரிய காட்சியாக இருந்தது. எனவே ஊரின் இளைஞர்கள், சிறுவர்கள் எல்லாம் அதனைச் சுற்றிநின்று கொண்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கியவர்கள் பிறகு சிறுகச் சிறுக அதன் பாகங்கள் ஒவ்வொன்றையும் தொடவும், ஆராயவும், தலைப்பட்டனர். எங்கள் ரிக்ஷா ஓட்டுநர் அடைக்கப் பன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் அடங்கவில்லை. அவன் ஏதாவது சொன்னால் அவனைக் கேலி செய்யவும் பிறகு சண்டைக்கு இழுக்கவும் தலைப்பட்டனர். இதனால் விபரீதம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. "இந்த ஊரைவிட்டு உடனே புறப்பட்டால்தான் சைக்கிள் ரிக்ஷா பிழைக்கும். இல்லாவிட்டால் இவர்கள் ரிக்ஷாவைப் பழுதாக்கி விடுவார்கள்" என்று அவன் எங்களிடம் கண்டிப்பாகச் சொன்னான். எனவே அங்கிருந்து புறப்பட்டு வேறு எங்கே தங்கலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டோம். பல லாரிக்காரர்களை விசாரித்ததில் அவர்கள் சிஞ்சோன்லி, தெங்காபூர், ராணாபூர் ஆகிய ஊர்களில் ஏதாவது ஒன்றில் தங்கி, நாளை மலையேறலாம் என்று அறிவுரை கூறினர். அதன்படி நாங்கள் புறப்படத் தயாரானோம்.

எங்களில் சிலருக்கு உடல்நலம் இல்லாதிருந்தது. அவர்கள் டாக்டர் எம். சத்திய நாராயணா M. B. B. S. அவர்களைச் சந்தித்துத் தம் உடல்நிலை பற்றிப் பரிசோதித்து ஊசி போட்டுக் கொண்டு, மருத்துவம் செய்து கொண்டனர். எங்கள் யாத்திரை பற்றி அறிந்த அவர்யாதொரு கட்டணமும் வாங்க மறுத்து இலவசமாக

வைத்தியம் செய்து அவர்களை அனுப்பினார். அவர்கள் எல்லாம் உற்சாகத்தோடு வந்து சேர்ந்ததால் மாலை 4 மணிக்கு நிர்மல் நகரில் இருந்து வலுக்கட்டாயமாகப் புறப்பட்டோம். 6 மணிக்குள் அதாவது இருட்டு வதற்குள் ஏதாவது ஓர் ஊரில் தங்கலாம் என்ற திட்டத்தோடு பயணம் ஆனோம். ஆனால் ஆண்டவன் வேறுவிதமாகத் திட்டம் போட்டிருக்கிறான். ''மனிதன் திட்டம் போடுகிறான்; கடவுள் அதனைக் கலைக்கிறான்'' என்பது பழமொழி (Man Proposes God Disposes).

நாங்கள் ஏதாவது நல்ல கிராமம் வராதா? தங்க மாட்டோமா? என்ற சிந்தனையிலேயே நடந்தோம். 3 மைலில் சிஞ்சோன்லி என்ற ஊர்எல்லை வந்தது. ஆனால் அந்த ஊரே நெடுஞ்சாலையில் இருந்து இடது புறத்தில் உட்புறமாக இரண்டு மைல் தொலைவில் இருப்பதாகக் கை காட்டி கூறியது. எனவே உட்புறம் நடக்கும் பழக்க மில்லாத நாங்கள் சாலை வழியே அடுத்த ஊரை நோக்கி நடந்தோம். ஒரு மைலில் தேங்காபூர் என்ற ஊர் எல்லை வந்தது. ஆனால் அதுவும் வலதுபுறத்தில் உட்புறமாக 2 மைல் தொலைவில் உள்ள செய்தியினைக் கை காட்டி அறிவித்தது. இப்போது நாங்கள் சோர்ந்து போனோம். வானம் இருட்டிக்கொண்டு வருகிறது. மழை வந்தாலும் வரலாம் என்ற நிலையும் தென்பட்டது. எங்காவது தங்கத்துடித்த எங்கட்குத் தங்குமிடம் தென்படவில்லை.

சாலையின் உட்புறம் நடக்கும் பழக்கமில்லாத நாங்கள் என்ன செய்வது என்று அறியாமல் நெடுஞ் சாலையிலேயே சற்று நேரம் நின்றோம். அப்பொழுது ஒரு லாரி வந்தது. அதில் இருந்து ஒரு போலீஸ்காரர் இறங்கினார். அவர் அந்த ஊரின் பாதுகாப்பு நிலை யினை அறியும் பொருட்டு அங்கு செல்ல இங்கு வந்து இறங்கினாராம். அவர் எங்கள் பயணம் பற்றி அறிந்

ததும் எங்கட்கு நல்லதொரு ஆலோசனையை வழங்கினார். "நீங்கள் இங்கு எங்கும் தங்க வேண்டாம். இப்பகுதியில் லம்பாடிகள் அதிகம். மேலும் இங்கு திருட்டு மிகுதி. கொள்ளைக் கூட்டங்கள் திடீரென்று வந்து தாக்கும் வாய்ப்புள்ளது. இங்கு மலைப் பகுதியில் செல்லும் அரசாங்கப் பேருந்துகளில் இரண்டு போலீஸ் காரர்கள் துப்பாக்கியோடு செல்வது பழக்கம். இல்லா விட்டால் பேருந்துகள் கொள்ளையடிக்கப்பட்டு விடும். மேலும் சாத்பூரா மலையில் கொள்ளையர் நடமாட்டம் காணப்படலாம். மிருகங்களும் நடமாடலாம். இங்கே கிழே நீங்கள் தங்குவதற்குத் தக்க பாதுகாப்பான ஊர் கிடையாது. மலையடிவார ஊரிலும் ஆபத்து உண்டு. அங்கும் தங்க வேண்டாம். ஆகவே இரவானாலும் தொடர்ந்து நடந்து மலையேறிச் சென்று, இறங்கி, மலையின் அப்புறம் உள்ள ஏதாவது ஊரில் தங்குங்கள்" என்று தெளிவாகச் சொன்னார். அவர் தெலுங்கில் பேசினாலும் எங்களுக்குப் புரிந்தது. எனவே எங்களுக் கிருந்த சோர்வை மறந்து வேகத்தோடு நடக்கத் தொடங்கினோம்.

ஒரு மைலில் **ராணாபூர்** என்ற ஊர் வந்தது. அதுதான் மலையடிவார ஊர். அங்கிருந்து சாத்பூரா மலை தொடங்குகிறது. மலையடி வாரத்தில் சில குடிசைகள் மட்டுமே இருந்தன. அதுதான் ராணாபூர். அங்கிருந்த மக்கள் "லம்பாடி" இனத்தைச் சேர்ந்தவர் கள். அவர்களிடம் தண்ணீர் வாங்கிப் பருகினோம். எங்கள் கால்கள் எங்காவது தங்கக் கெஞ்சின. ஆனால் மனமோ "அயராதே, நட. கடவுள் காப்பார்" என்று கூறியது.

எங்கள் பக்தர்களுக்கு இப்பொழுது என்ன செய் வது என்றே தெரியவில்லை. எதிரில் பிரமாண்டமாகக் குறுக்கே கிடக்கும் சாத்பூராமலை! இதன்மீது சைக்கிள்

ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு நடப்பது சாதாரணக் காரியமில்லை. மேலும் நன்கு இருட்டி விட்டது. இருட்டில் புலிகள் எளிதாக நடமாடும். பாம்பு முதலியன சாதாரணமாக ஊர்ந்து திரியும். மலையில் ஏறத் தொடங்கினால் நடுவில் நிற்க முடியாது. ஒரே மூச்சாக நடந்து சென்று மலை ஏறிப் பிறகு இறங்கி, அடுத்த ஊரை அடைவது வரை தளரக்கூடாது. எந்த ஆபத்து வந்தாலும் அஞ்சாமல் சந்திக்கவேண்டும். இருட்டு வேறு எங்கட்குப் புறப்பகையாக இருந்தது. ''விஸ்வேஸ்வரா! இது என்ன சோதனை!'' என்று களைத்திருந்தோம்.

சைக்கிள் ரிக்ஷா நிற்கிறது. எதிரில் சாத்பூரா மலை. எங்கள் பக்தர்கள் இப்பொழுது என்னைப் பார்த்துக்கேட்கிறார்கள்; ''தலைவரே! நாம் தங்குகிறோமா? அல்லது தொடர்ந்து நடக்கிறோமா!'' என்று கேட்கிறார்கள். அவர்கள் கேள்வி நியாயமானது. இன்று எங்கள் திட்டப்படி நாங்கள் நிர்மல் நகரில் தங்கியிருக்க வேண்டும். ஆனால் அங்கு தங்க முடியாமல் விதி எங்களைப் பிடர் பிடித்து உந்த 5 மைல் நடந்து மலை அடிவாரம் வரை வந்து விட்டோம். இவ்வளவு தூரம் வந்தும் எங்குமே தாங்க வாய்ப்பு அமையவில்லை. விஸ்வநாதா! இது என்ன சோதனை என்று நானும் தளர்ந்தேன். எனினும் அடுத்துச் செய்ய வேண்டியது என்ன என்று எல்லோரும் கேட்கிறார்கள். முடிவு கூறும் தலைமைப் பொறுப்பு என்னிடம் இருக்கிறது. நான் என்ன கட்டளை இருக்கிறேனோ அதற்குக் கட்டுப்பட்டு நடக்கும் இராணுவ வீரர்கள் எங்கள் பக்தர்கள். எனவே ஒரு முறைக்கு இருமுறை நான் ஆழ்ந்து யோசிக்கலானேன்.

''தங்குகிறோம்'' என்று நான் அறிவித்தால் உடனே எல்லோரும் தரையில் விரிப்பை விரித்துப் படுத்திடுவர். மறுவினாடி தூங்கியும் போவர். யாருக்கும்

பயம் என்பது இல்லை. என்றாலும் ஏதாவது ஆபத்து வந்தால்.........?

''புறப்படுகிறோம். அரோகரா'' என்று நான் சொன்னால் உடனே எல்லோரும் மலைமீது ஏறத் தொடங்குவர். அப்படி ஏறினாலும் மலையில் இரவில் ஆபத்து வரலாமே. எந்த முனையில் பார்த்தாலும் ஆபத்து நிச்சயம். அப்படித்தான் போலீஸ்காரர் வழியில் எங்களிடம் சொன்னார். இருந்தாலும் ஆபத்து; நடந்தாலும் ஆபத்து. எனவே நடந்தே செல்வோம். எப்படிப் பார்த்தாலும் ஆபத்தான சூழ்நிலை! எனவே நடப்போம். வருகிற ஆபத்து வரட்டும்.

''அயராமல் நடக்கின்றோம் இராமேஸ்வரா!
அஞ்சாமல் காப்பாயே விஸ்வேஸ்வரா''

என்ற சத்தியவாக்கு நமக்கு வழிகாட்ட நடப்போம். விஸ்வேஸ்வரர் காப்பார் என்று நம்பினேன். மேலும் போலீஸ்காரர் நடந்து மலையேறிக் கீழே இறங்கித் தங்குங்கள் என்றுதானே கூறினார். அவரை நாம் எதிர் பார்க்கவில்லை. அவர் தானாகவே வழியில் எதிர்ப் பட்டு நமக்கு ஆலோசனை கூறி இருக்கிறார். எனவே அவர் போலீஸ்காரராக இருக்க முடியாது. அந்த விஸ்வ நாதராகவே இருக்க வேண்டும்'' என்று எண்ணினேன். இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள ஒரே ஆலோசனை அதுதான். எனவே அதன்படி நடக்க வேண்டியதுதான் என்று மனதுக்குள் தீர்மானித்தேன்.

அசோகவனத்தில் சீதை அல்லற்பட்டபொழுது அங்கு வந்து ஆறுதல் கூறிய அனுமனைச் சீதாபிராட்டி அனுமனாகக் கருதவில்லை; இராம தூதனாகக் கருதி னாள். அப்படியே இப்பொழுது போலீஸ்காரர் எனக்குப் போலீஸ்காரராகத் தெரியவில்லை. விஸ்வநாதராகவே தென்பட்டார். அவர் காட்டிய வழியே கடவுள் காட்டிய

வழி என்று முடிவெடுத்தேன். இவ்வளவு ஆலோசனை களும் (Pros and Cons.) என் உள்மனத்திற்குள் சில வினாடிகளுக்குள் நிகழ்ந்து தீர்மானமும் ஏற்பட்டு விட்டது. இது மாதிரி இக்கட்டான வேளைகளில் என் மனம் விரைந்து சிந்திக்கும்; முடிவுகள் மின்னல் வேகத் தில் உருவாகும். இது இறைவன் எனக்கு அளித்த வரப் பிரசாதம். எனவே "நாம் தொடர்ந்து நடக்கிறோம்" என்று கூறினேன். உடனே எல்லோர் முகத்திலும் ஒரு களை ஏற்பட்டது. வருவது வரட்டும் என்ற மனநிலை யில் யுத்த வீரர்களாக எல்லோரும் மாறினர்.

இது வரை நாங்கள் தினந்தோறும் காலையில் புறப்படும்பொழுதும், மாலையில் புறப்படும்பொழுதும் ரிக்ஷாவில் உள்ள தெய்வங்களுக்குத் தீபம் காட்டிக் குரு நாதரிடம் விபூதி பெற்றுப் பயணம் ஆவோம். இன்று முதலில் காலையில் புறப்பட்ட பொழுதும், பிறகு மாலையில் புறப்பட்ட பொழுதும் அந்தச் சடங்கு நடந் திருந்தது. ஆனால் இப்பொழுது மீண்டும் தெய்வப் படங்களுக்கும் வேலுக்கும் தீபம் காட்டச் செய்தேன். அனைவரும் மூன்றாவது முறையாக வழிபாடு செய் தோம். குருநாதரிடம் விபூதி வாங்கி அணிந்து கொண் டோம். உடனே "அரோகரா" என்று சொன்னேன். எங்கள் அணி புறப்பட்டது. மலைமேல் ஏறத் தொடங் கினோம். எங்கள் முகத்தில் வேர்வைத் துளிகள் தோன்ற லாயின. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நடந்தோம். சைக்கிள் ரிக்ஷாவை மூன்று பேர் பின்புறம் இருந்து தள்ள, சைக்கிள் ஓட்டுநர் முன்னால் இருந்து தள்ள வண்டி பயணமாயிற்று. இருவர் பாதையில் டார்ச் விளக்கு அடித்து வழிகாட்டினர். பின்புறம் இருந்தோ முன்புறம் இருந்தோ வாகனங்கள் வந்தால் எங்களுக்கு ஒருவர் எச்சரிக்கை செய்து வந்தார். இப்படியாக நாங்கள் செம்மையான முறையில் மலை ஏறலானோம்.

எங்கள் பாதையில் வாகனங்கள் இரண்டொன்றே வந்தன. ஏனெனில் இரவில் அப்பகுதியில் வாகனப் போக்குவரத்து பெரும்பாலும் இல்லை. அவ்வளவு பயங்கரமான பிரதேசம் அது!

எங்களுக்குப் பயம் இல்லை. ஏனெனில் எங்கள் பாரத்தை விசுவநாதர் மீது போட்டு விட்டோமே. அவரைக் காணத்தானே இவ்வளவு முயற்சியும்!

சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு நாங்கள் சர்வ சாதாரணமாக இப்பொழுது நடக்க லானோம். சிறிது நேரத்தில் இது பழகிவிட்டது. ரிக்ஷாவைத் தள்ளுவது எங்களுக்குச் சுலபமாகிவிட்டது. உண்மையைச் சொன்னால் முருகப் பெருமானே அப்பொழுது பின்னால் இருந்து ரிக்ஷாவைத் தள்ளி யிருக்க வேண்டும். இல்லாவிட்டால் **ஆயிரம் மைல்** நடந்து களைத்திருந்த எங்களால் ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு மலைமீது நடக்க முடியும் என்று என்னால் நம்பக் கூடவில்லை.

வழியில் இரண்டு பெரிய வளைவுகள் வந்தன. அவற்றில் வளைந்து, ரிக்ஷாவை முயன்று தள்ளினோம். சுமார் 3 மைல் தள்ளியவாறு நடந்து மலையின் உச்சியை அடைந்தோம். அந்த இடத்தில் "மஹபூப் மலையில் உயர்ந்த இடம் 1680 அடி" (Highest Point on Mah boob Ghat — 1680 Feet) என்று எழுதியிருந்த பலகை எங்கள் கண்களில் பட்டது. இப்பொழுது வானில் படர்ந்திருந்த கருமேகங்கள் விலகி ஓரளவு நிலவொளி வீசியது. குளிர்காற்று எங்கட்கு இத மூட்டியது. உச்சியை அடைந்ததில் எங்கட்கு ஒரு வியப்பு! ஆறுதல்!! இனி ரிக்ஷாவைத் தள்ள வேண்டாம் என்ற நிம்மதி!!? இந்நிலையில் மலை உச்சியில் 10 நிமிடம் உட்கார்ந்து ஓய்வு கொண்டோம். எங்களைத் தவிர அங்கு வேறு

யாரும் இல்லை. கள்வர்கள் உலவும் பூமி! அல்லது கடவுளர் அமரும் பூமி! கடவுளர் உலவும் இடத்தில் கயவர்களும் உலவுவர் என்பதால்தான் "தேவர் அனையர் கயவர்" என்றாரோ வள்ளுவர்.

மலை உச்சியில் நாங்கள் மட்டுமே நிம்மதியாக இரவு 9 மணி அளவில் உட்கார்ந்திருக்கிறோம். அதை இப்பொழுது நினைத்தாலும் புல்லரிக்கிறது.

தண்ணீர் அருந்தி விட்டு மலையை விட்டுக் கீழே இறங்கத் தொடங்கினோம். சைக்கிள் ரிக்ஷா மிக வேகமாக மலைவிட்டு இறங்கியது. நாங்களும் அதை விட வேகமாக இறங்கினோம் என்றால் மிகையாகாது.

மலையடிவாரத்தில் கால்வைத்தோம். சைக்கிள் ரிக்ஷா எங்கட்காக நின்று கொண்டிருந்தது. அதனை ஓட்டுநர் மெதுவாக ஓட்ட, நாங்கள் முருகா! முருகா! என்று முழங்கியவாறு இரவில் மலை விட்டுக் கீழறங்கிச் சமவெளியில் நடக்கலானோம். சாலையின் இருபுறமும் மாமரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. நாங்கள் சம வெளியில் நடக்கத் தொடங்கியதும் எங்கிருந்தோ "வீரமுரசு" ஒலிக்கத் தொடங்கியது. முரசொலி எங்கிருந்து கேட்கிறது என்று பார்த்தோம். ஒரு மரத்தின் மேலே இருந்து ஒலி கேட்டது. யாரோ ஒருவர் மாமரத்தின் மேலே இருந்து முரசொலிக்கிறார். இதன் பொருள் என்ன? யாருக்கோ இது எச்சரிக்கை ஒலி என உணர்ந்தேன். உடனே எங்களது முழக்கங்களை நிறுத்தச் சொன்னேன். கூர்மையாகக் கவனிக்கத் தொடங்கினோம். எங்கள் கூட்டத்திற்குள் இரண்டு இளைஞர்கள் எங்கிருந்தோ வந்து, கலந்து, எங்களையே கூர்ந்து கவனித்தவாறு எங்களுடனே நடந்து வரக்கண்டோம். வீர முரசு தொடர்ந்து முழங்கிக் கொண்டே இருந்தது. சாத்பூரா மலையை விட்டுக்

கீழே இறங்கியதும் உள்ள முதல் ஊர் "கௌலி கொண்டா" என்பதாகும். அவ்வூர் நெடுஞ்சாலையில் இருந்து இடதுபுறம் சுமார் அரைமைல் தொலைவில் உள்ளது. இங்கே வீர முரசின் ஒலி! அங்கே வீட்டுக்கு வீடு மக்கள் திரளும் காட்சி தெரிந்தது! அவர்கள் கைகளில் கம்பு, வாள் முதலிய ஆயுதங்கள்! அவர்கள் ஒரு போருக்குத் தயாராகும் காட்சி தெரிகிறது.

மலையில் இருந்து வழக்கமாகக் கொள்ளைக் கூட்டத்தினர் வருவதும், மலையடிவாரத்தில் உள்ள முதல் ஊராகிய கௌலிகொண்டா அவர்களால் தாக்கப் பட்டுக் கொள்ளையடிக்கப்படுவதும் சாதாரண நிகழ்ச்சி யாம். எனவே ஊர் மக்கள் மலையடிவாரத்தில் மாமரத்தின் உச்சியில் முரசு கட்டி, அருகில் முரசறை பவரை நியமித்து ஊருக்கு எச்சரிக்கை செய்ய வழிவகுத் துள்ளனர். மலையில் இருந்து கூட்டமாக இறங்கிய எங்களைக் கண்டதும் முரசு அறைபவன் கொள்ளைக் கூட்டம்தான் வருகிறது என்று நினைத்திருக்கிறான். அவன் நினைத்ததில் தவறில்லை. ஏனெனில் அப்பொழுது இரவு 9½ மணி; மேலும் நாங்கள் ஒரே கூட்டமாக இறங்கி வந்தோம். எங்கள் கைகளில் கம்பு இருந்தது. சைக்கிள் ரிக்ஷா வேறு வருகிறது. இந்த ரிக்ஷாவானது கொள்ளை யடித்த பொருள்களைக் கொண்டு செல்லப் பயன் படுத்தும் வாகனம் என்று அவன் கருதி இருக்கலாம். எனவே அரைமைலில் உள்ள ஊருக்கு அவன், எச்சரிக்கை செய்ய வீர முரசை முழங்கி இருக்கிறான். அவனைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள், மரத்தில் ஒளிந்திருந்தவர்கள், எங்கள் கூட்டத்தோடு கலந்து வந்து எங்கள் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க எண்ணி எங்களோடு நடந்து வந்திருக்கலாம்.

வீரமுரசு இன்னும் ஒலித்துக் கொண்டிருக் கிறது. அதன் ஒலிகேட்ட மக்கள் அரை மைலில் உள்ள

ஊரில் திரண்டு கொண்டிருக்கிறார்கள். இதனைக் கண்ட எனக்குப் புறநானூற்றில் பேசப்படும் அதியமானின் நினைவு வந்தது. ஔவையார் பாடுகிறாள் :

அதியமானின் ஊர் எல்லையில் உள்ள மரத்தில் வீரமுரசு கட்டப்பட்டிருக்குமாம். சாதாரணக் காற்று அந்த முரசின் மீது மோதிச் சிறிது ஓசை எழுந்தால் கூட "அதோ போர் வந்து விட்டது" என்று கூறிக் குதித்து எழுவானாம் அதியமான்.

"அதுபோர் என்னும் என்னையும் உளனே."

என்பது ஔவையார் வாக்கு. காற்றின் மோதுதலால் வீரமுரசு முழங்கினும் அதிகமான் எழுந்தது தமிழ்நாடு. எங்களைப் போன்ற பக்தர்களின் வருகையினால் முரசு முழங்கினும் பயத்தால் தற்காப்புக்கு மக்கள் திரள்வது சாத்பூரா மலையடிவார ஆந்திரப் பிரதேசம் என்பதனை எண்ணிப் பார்த்தேன். நாட்டின் நடப்பு எனக்கே வியப்பினை விளைவித்தது.

நாங்கள் எந்தவித முழக்கமும் இன்றி அமைதியாகவும் வேகமாகவும் நடந்தோம். நெடுஞ்சாலையின் ஓரிடத்தில் இடதுபுறம் ஒரு சிறு சாலை பிரிந்தது. அதன் வழியாகச் சென்றால் சற்றுத் தொலைவில் "கௌளி கொண்டா" என்ற ஊர் இருக்கிறது. அங்கு மக்கள் கொள்ளைக் கூட்டத்தை எதிர்க்க ஆயத்தமாக நிற்பது தெரிகிறது. நாங்கள் மனத்துள் சிரித்தவாறே அமைதியாக எங்களது நெடுஞ்சாலை நேர்வழியில் சென்றோம். பாதைபிரியும் அந்த இடத்தில் எங்களுடன் வந்த இளைஞர்கள் இருவரும் நின்றனர். பிறகு இடதுபுறக் கிளைச் சாலையில் அவர்கள் சென்று விட்டனர். அத்துடன் வீர முரசு ஒலிப்பதும் நின்றது. ஊருக்கு வந்த ஆபத்து நின்று விட்டதாக முரசு அறைபவன் நினைத்திருக்கலாம் கொள்ளைக் கூட்டம் நேராகச் சென்று விட்டது என்று

ஊரார்கள் நினைத்திருக்கலாம். எப்படி இருந்தாலும் நாங்கள் ஒரு கொள்ளைக் கூட்டத்தைச் சந்திப்பதற்குப் பதிலாக எங்களையே கொள்ளைக் கூட்டமாகப் பிறர் எண்ணும்படியான ஒரு செயல் நிகழ்ந்தது அற்புதமே. "அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது பழமொழி அல்லவா? இன்றையச் சமுதாயமும் இப்படித்தான் ஒருவரை ஒருவர் எடை போடுகிறது. மனித நேய உணர்வு பெருகும்பொழுது மனித சமுதாயம் பால்போல் மிளிரும் அல்லவா? அப்படி ஒருநிலை இனி ஏற்படுமா?

தேசிய நெடுஞ்சாலையில் தொடர்ந்து நடந்தோம். எங்கே ஊர்வரும்? தங்கலாம் என்ற நினைவோடு நடந்தோம். கால்கள் வலிஎடுக்கத் தொடங்கின. அப்பொழுது தொலைவில் மின் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. அது ஒரு சிற்றூர் என்பது புரிந்தது. அந்த ஊரை அடைந்தோம். அவ்வூருக்கு **"வாங்கிடி"** (Wankidi) என்பது பெயர். ஊர் முனையில் ஒரு சிறு கடை திறந்திருந்தது. அக்கடைக்காரரிடம் எங்களைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டு, ஏதோ பொருள் வாங்கி உண்டோம். பிறகு எங்கே தங்கலாம் என்று கேட்டோம். அதற்கு அவர் அருகில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைக் காட்டி அங்கு தங்கச் சொன்னார். பெரும் ஆறுதலோடு அந்தப் பள்ளிக் கட்டடத்தில் தங்கினோம். பள்ளிக்கு முன்னால் ஓர் "அடிபைப்" இருந்தது. தண்ணீர் அடித்துப் பார்த்தோம். எவ்வளவு முயன்றும் தண்ணீர் வரவில்லை. அங்கு தண்ணீர் மிக ஆழத்தில் இருக்கிறதாம். எங்கள் கை ஓய்ந்து விட்டது. எங்கள் நிலை அறிந்த உள்ளூர் வாசிகள் சிலர் எங்கள் உதவிக்கு வந்து நெடுநேரம் அடிபைப்பில் அடித்து எங்கட்குத் தண்ணீர் தந்தனர். பிறகு நாங்கள் அமர்ந்து எங்களது உணவாகிய பழைய கஞ்சியினைக் குடித்தோம். அப்பொழுது அது தேவாமிர்தமாகத் தித்தித்தது. கஞ்சி குடித்த மறு நிமிடம் எங்கள் கண்கள் பொருதின. நாங்கள் தூங்கியதே எங்கட்குத் தெரியவில்லை.

76. அறுபத்தைந்தாம் நாள்

(நெரிடி கொண்டா—சிற்றாறு—வட்டைமலை—இச்சோடா)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். 9 மைல் தொடர்ந்து நடந்து 8¾ மணிக்கு நெரிடி கொண்டா என்ற ஊருக்குச் சென்றோம். அது மலைப் பகுதி. அவ்வூரில் சிற்றுண்டி கிடைத்தது. உண்டு மகிழ்ந்து மேலும் தொடர்ந்து 2 மைல் நடந்தோம். ஒரு அழகிய சிற்றாறு குறுக்கிட்டது. ஆற்றின் இருபுறமும் அடர்த்தியான மரங்கள் இருந்தன. சிறு சிறு பாறைகள் அங்கங்கே காணப்பட்டன. வெயில் இல்லாமல் வானிலையும் சிறப்பாக அமைந்திருந்தது. எனவே ஆற்றோரம் பாறைகளில் மர நிழலில் தங்கினோம். முதல் நாள் சாத்பூரா மலை ஏறி இறங்கிவந்த களைப்புத் தீரச் சலசலக்கும் ஆற்று நீரில் குளித்து மகிழ்ந்தோம்.

மரநிழலில் சமையல் செய்யத் தொடங்கினோம். முதலில் ''ஹார்லிக்ஸ்'' போட்டு அருந்தினோம். சிறிது தெம்பு ஏற்பட்டது. அப்பொழுது ஒரு சிறு கார் (van) நெடுஞ்சாலையில் வடக்கே இருந்து வந்தது நின்றது. அதில் இருந்து சுமார் பத்துப்பேர் ஆண்களும் பெண்களும் இறங்கினர். ஆற்று நீரில் முகம் கழுவித் தண்ணீர் எடுத்துக் கொண்டனர். அவர்கள் தமிழில் பேசுவது தெரிந்தது. ஆற்றின் கரையில் சமையல் செய்து கொண்டு தமிழில் பேசிக் கொண்டிருந்த எங்களைக் கண்டதும் அவர்களுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது.

நாங்கள் தங்கி இருந்த பிரதேசம் ஆந்திராவின் எல்லைப் பகுதி. இன்னும் 3 நாளில் நாங்கள் ஆந்திராவைக் கடந்து மகாராஷ்டிராவில் நுழையப்போகிறோம். எனவே இப்பிரதேசத்தில் தெலுங்கு, இந்தி, உருது ஆகிய மொழிகளைத் தவிரத் தமிழ் கேட்க முடியாது. இந்நிலையில் எங்களது தமிழைக் கேட்ட அவர்கள் எங்களிடம் ஓடிவந்தார்கள். "தமிழ் பேசுகிற நீங்கள் யார்? இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று ஆர்வமுடன் கேட்டனர். நாங்கள் எங்களைப் பற்றிச் சொன்னோம். அவர்கள் மிகவும் வியந்து, எங்களை வணங்கிவிட்டுத் தங்களைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டனர்.

அவர்கள் நாமக்கல்லைச் சேர்ந்தவர்களாம். கார் (van) மூலம் காசிக்கு யாத்திரை சென்று விசுவநாதரைத் தரிசித்துவிட்டுத் திரும்பி வருகிறார்களாம். சிறிய ஆற்றைக் கண்டதும் தண்ணீர் எடுப்பதற்காக இறங்கினார்களாம்.

அவர்களுக்குப் பாதையில் ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா என்று கேட்டோம். அதற்கு அவர்கள் கூறிய பதில் வருமாறு: "மத்தியப் பிரதேசத்தில் கடவுள் கிருபையால் தப்பிவிட்டோம். உத்தரப் பிரதேசத்தில் ஓர் ஊரில் ஒரு லாரியைக் கொள்ளைக்காரர்கள் மடக்கிப் பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்று விட்டனர். லாரியின் டயர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டிருந்தன. லாரியில் இருந்த ஓட்டுநரும், உதவியாளரும் சுடப்பட்டுக் கிடந்தனர். பிறகு போலீஸ் சோதனை போட்டுக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியைக் கண்டவாறு நாங்கள் உத்தரப்பிரதேசத்தில் நுழைந்தோம். இப்பகுதி பயணம் செய்வதற்கு உரியதாக இல்லை. எப்படியோ இதுவரை நல்லவிதமாக வந்து சேர்ந்தோம். இனி சாத்பூரா மலையை ஆபத்தில்

லாமல் கடந்து செல்ல வேண்டும்'' என்று கூறினார்கள். பிறகு அவர்களுக்கெல்லாம் ஹார்லிக்ஸ் போட்டுக் கொடுத்தோம். அவர்கள் குடித்தபிறகு காரில் இருந்த வர்களுக்கும் கொண்டு போய் ஹார்லிக்ஸ் கொடுத் தார்கள்.

காரில் இருந்தவர்கள் தாமதிக்காமல் புறப்பட வேண்டும் என்று அவசரப்படுத்தி இருக்கிறார்கள். எனவே எங்களுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள், தங்கள் உறவினர்களின் குரல் கேட்டதும் இதோ வரு கிறோம் என்று கூறிக் கொண்டே கார்நோக்கிப் புறப் பட்டனர். எழுந்த அவசரத்தில் அவர்கள் எங்களிடம் விடை பெறாமல் போயினர். அது என் மனத்தில் பட்டது. என்றாலும் நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் பத்திரமாகப் போய்ச் சேரட்டும் என்று மனத் திற்குள் ஆசிர்வாதம் செய்தேன்.

ஆனால் எங்கள் குழுவில் மிகவும் இளைஞர்களாக வும், சுமார் 20 முதல் 22 வயதிற்கு உட்பட்டவர்களாக வும், திருமணம் ஆகாதவர்களாகவும் இருந்த அடைக் கப்பன், தியாகராசன், தேனிமலை ஆகிய மூவருக்கும், கார்க்காரர்கள் விடைபெறாமல் போனது என்னவோ போல் இருந்திருக்கிறது. உடனே அவர்கள் மூவரும் சிறிது வருத்தத்துடன், ''நம்மோடு இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, நமது ஹார்லிக்சைக் குடித்துவிட்டு நம்மிடம் சொல்லிக் கொள்ளாமல் (விடை பெறாமல்) போகிறார்களே'' என்றார்கள். நான் அவர்களை நோக்கி ''ஒன்றும் சொல்லாதீர்கள். சும்மா இருங்கள்'' என்றேன்.

அதற்குள் அடைக்கப்பன், ''இவர்கள் புறப் பட்டாலும் கார் புறப்பட்டால்தானே'' என்றார்.

உடனே தேனிமலை ''காருக்குள் விசுவநாதர் உட்கார்ந்து கொண்டுவிட்டார்'' என்றார்.

நான் அவர்களைப் பார்த்துச் சொன்னேன்: "நாம் நெடிய யாத்திரையில் இருக்கிறோம். இப் பொழுது என்ன சொன்னாலும் பலிக்கும். எனவே எதுவும் தீயதாகச் சொல்லாதீர்கள்" என்றேன். அவர்கள் உடனே தம் பேச்சை நிறுத்தி விட்டனர்.

ஆனால் கார் புறப்படவில்லை. காரை ஓட்ட எவ்வளவோ முயற்சி செய்தார்கள். கீழே இறங்கித் தள்ளினார்கள். சுமார் அரைமணி நேரம் அவர்கள் போராடியும் கார் ஓடவில்லை. இதுவரை நன்றாக ஓடி வந்த கார் இப்பொழுது ஓட மறுத்து விட்டது. காரில் இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. விஞ்ஞானம் தளர்ந்த பொழுது மெய்ஞ்ஞானம் பிறந் திருக்கிறது. காரில் இருந்த யாரோ ஒருவர் சொல்லி யிருக்கிறார், "நாம் காசிப் பாதயாத்திரிகர்களிடம் விடை பெறாமல் வந்து விட்டோம், அதனால் கார் கிளம்பவில்லை போலும். ஆகவே எல்லோரும் அவர் களிடம் சென்று ஆசியும் விடையும் பெற்றுப் புறப்படு வோம்" என்றிருக்கிறார். என்ன ஆச்சரியம்! உடனே காரில் இருந்த அனைவரும் இறங்கி எங்களை நோக்கி வருகின்றனர். நோயால் வாடுபவர்கள் மருத்துவரிடம் நம்பிக்கை இழக்கும் பொழுது கடவுளை நம்புகிறார் கள் அல்லவா? அது போல்தான் அவர்கள் நிலையும்! எந்திரம் வேலை செய்யத் தவறிய பொழுது மந்திரம் வேலை செய்யத் தொடங்கியது. எங்கள் அருகில் வந்தார்கள். எங்கள் இளைஞர்களுக்கு ஒரே ஆனந்தம். அருகில் வந்த கார் அன்பர்கள் எங்களிடம் "நாங்கள் போய் வருகிறோம். ஆசிர்வதியுங்கள்" என்றார்கள். நாங்கள் "**மங்களகரமாகப் போய் வாருங்கள்**" என்றோம். அவர்கள் காரை நோக்கி நடந்தார்கள். அப்பொழுது எங்கள் இளைஞர்கள் "இனி கார் புறப்பட்டு விடும். விசுவநாதர் நம்மிடம் வந்து விடுவார்" என்றார்கள்.

என்ன ஆச்சரியம்! காரில் எல்லோரும் ஏறி அமர்ந்ததும் பொத்தானை அழுத்தக் கார் எப்பொழுதும் போல் ஓடத் துவங்கியது. கார் போய் விட்டது. நாங்கள் மட்டுமே ஆற்றங்கரையில் இருந்தோம். எங்கள் சமையல் வேலை தொடர்ந்தது. மதியம் ஒருமணி அளவில் சமையல் செய்து இறை வணங்கி உலகெலாம் வாழ வாழ்த்துரைத்து உண்டோம். இன்றையத் "திரு அமுது" தேவ கோட்டை திரு. (செல்லம்) அ. முருகப்ப செட்டியார் அவர்களால் வழங்கப்பட்டது.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. ஒரு பெரிய கருமேகம் எங்கள் தலைக்குமேல் நின்று கொண்டிருந்தது. அது எப்பொழுது வேண்டுமாயினும் கன மழை பொழியக்கூடிய வாய்ப்பு இருந்தது. எனவே மாலை 3½ மணிக்கே பயணம் புறப்பட்டோம். 2 மைல் நடந்து குப்திரோடு (Gupti Road) என்ற இடத்தை அடைந்தோம். அங்கே ஒரு **வட்டையான நீண்ட பெரிய மலை** குறுக்கே கிடந்தது. மலை ஏற்றமும் சிறிது செங்குத்தாக அமைந்திருந்தது. சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு நடக்கத் தொடங்கினோம். சாரல் வீசியதால் களைப்பின்றித் தள்ளினோம். முருகப் பெருமான் இம்முறையும் எங்கள் உதவிக்கு வந்திருக்க வேண்டும். பல மைல் தூரம் மலை ஏற்றத்தில் நடந்தோம். இம்மலைப் பகுதிகளின் வழியாகத்தான் **அப்பர்சுவாமிகள்** (திருநாவுக்கரசர்) ஸ்ரீசைலம் கடந்து காசிக்கு நடந்து சென்றிருக்கிறார் என்பது பெரிய புராணத்தில் இருந்து தெரிகிறது.

அப்போது நடந்து சென்ற பாதைபற்றிச் சேக்கிழாரின் **பெரியபுராணம்** வருணிப்பதாவது: கருநாடகம் கழிந்து, காடுகள், நதிகள் கழிந்து, நெடுந் தொலைவில் உயர்ந்த **வட்டைமலையும்** கடந்து, நாடுகள் பல கடந்து, வெப்பம் மிக்க சோலை அளவிய மாளவம்

அடைந்து, பிறகு தொடர்ந்து கொடிய கானகங்கள் கடந்து, இலாடபூமி கழிந்து, மேகம் படிந்த மலைகளும், வனங்களும், ஆறுகளும், பழச் சோலைகளும் நிறைந்த மத்தியப்பிரதேசத்தினை அடைந்தார். பிறகு அதனையும் கடந்து, கங்கைச் சமவெளியினை அடைந்து, வலப்புறமாக (கிழக்கே) நடந்து **வாரணாசி** ஆகிய காசியினை அடைந்து சடைமுடிப் பெம்மான் ஆகிய விசுவநாதரை வழிபட்டார். பிறகு கற்கள் நிறைந்த கயிலையை நோக்கி நடந்தார்.'' என்று பெரிய புராணம் மிக அழகாக அப்பர் சென்ற பாதையினை வருணிக்கிறது. இதுதான் நாங்கள் நடந்து சென்ற பாதையும் ஆகும். இதுதான் காரைக்கால் அம்மையாரும், ஆதி சங்கரரும், மற்ற மகான்களும் நடந்து சென்ற பாதையாக இருந்திருக்க வேண்டும். இந்தப் பாதை பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் அப்படியே இருப்பதற்குக் காரணம் விந்திய சாத்பூரா மலைகளும், கடுமையான காடுகளும், ஆழமான நதிகளும், கொடிய மிருகங்களும் அப்படியே இருப்பதே ஆகும்.

அப்பர் சென்ற பாதைபற்றிய பெரிய புராணப் பாடல்கள் வருமாறு :

''கருநடம் கழிவாக ஏகிய
பின்கலந்த வனங்களும்
திருநதித்துறை யாவையும்பயில்
சேண் **நெடுங்கிரி வட்டையும்**
பெருநலம் கிளர் நாடும் எண்ணில
பிற்படச் செறி பொற்பினால்
வருநெடுங்கதிர் கோலுசோலைய
மாளவத்தினை நண்ணினார்.
அங்கு முற்றி அகன்றுபோகி
அருஞ் சுரங்கள் கடந்து சென்று
எங்கும் மிக்க அறங்கள் நீடும்
இலாட பூமி இகந்துபோய்

மங்குல் சுற்றிய வெற்பினோடு
வனங்கள் ஆறு கடந்து அயல்
பங்கயப் பழனத்து **மத்திய**
பைதரத்தினை எய்தினார்
அன்ன நாடு கடந்து **கங்கை**
அணைந்து சென்று **வலம்கொளும்**
மின்னு வேணியர் **வாரணாசி**
விருப்பி னோடு பணிந்துடன்
பின் அணைந்தவர் தம்மை அங்கண்
ஒழிந்து கங்கை கடந்துபோய்
மன்னு காதல்செய் நாவின் மன்னவர்
வந்து கற்சுரம் முந்தினார்.''

அப்பர் சுவாமிகள் நடந்து சென்ற அதே பாதையில் ''நெடுங்கிரி வட்டை'' ஆகிய வட்ட மலையைக் கடந்து, மலை உச்சி அடைந்து மலைப் பகுதியில் சாத் நம்பர்கான் (Sath Number gaon), இஸ்லாம் நகர் ஆகிய ஊர்களின் வழியாக சுமார் 10 மைல் நடந்து இரவு சூழும் 7 மணி அளவில் **இச்சோடா** என்ற ஊருக்கு இனிதே வந்து சேர்ந்தோம். எங்கள் தலைக்கு மேலே அணிவகுத்து மிரட்டிக் கொண்டுவந்த கரியமேகம் இப்பொழுது கன மழையினைக் கொட்டத் தொடங்கியது. நாங்கள் அவ்வூரில் இருந்த பயணர்கள் மாளிகைக்குள் நுழைந்து பாதுகாப்பாகத் தங்கினோம். இரவு கஞ்சி குடித்து விட்டுத் தூங்கலானோம்.

77. அறுபத்தாறாம் நாள்

(கோடி ஹட்னூர்)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். மலைப் பகுதி தொடர்ந்தது. நாங்கள் மலைப்பகுதிக்கு எங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்ததால் உற்சாகத்தோடு நடந்தோம். காந்திநகர், மண்ணூர், தோஆங்கிரகான் (Doangre gaon) என்ற ஊர்கள் வழியாக சுமார் 10 மைல் தொடர்ந்து நடந்து கோடி ஹட்னூர் (Godi Hatnoor) என்ற ஊரினை அடைந்தோம். அங்கு அரசாங்கப் பயணிகள் மாளிகை இருந்தது ஆந்திர அரசின் அறநிலைய அமைச்சரின் கடிதத்தினைக் காட்டியதும் அங்கு தங்க அனுமதித்தனர். இன்று சமையல்செய்து உண்டு முழுநாளும் இங்கே தங்கினோம். இவ்வூரில் உள்ள "ஈசுவரன் கோயிலில்" வழிபாடு செய்து மகிழ்ந்தோம். இந்த நாள் மிக அமைதியாகக் கழிந்தது.

பஞ்சபாண்டவர்கள் காட்டில் வாழ்ந்த பொழுது ஒவ்வொரு நாளும் ஏதாவது இடையூறு ஏற்படுமாம். "யாருக்கும் தீங்கின்றி, காய், கனி, கிழங்கு தின்று காட்டில் வாழ்கையில் இப்படி ஒவ்வொரு நாளும் துயரம் வந்தால் இனி நாங்கள் எங்கே போவது? என்ன செய்வது?" என்று தர்மன் புலம்புகிறான்.

"காடுறை வாழ்க்கை எய்திக்
காய்கனி மூலம் தின்று

நீடுறு காலம் போக்கி
நீங்கலா திருக்கும் எம்மை
நாடொறும் இடையூ றின்றி
நண்ணுவ தில்லை ஆயின்
ஏடுறு தாராய் செய்வது என்கொல்?
என்று இயம்பினானே''

என்று வில்லிபுத்தூரார் தர்மனின் அவலநிலையைப் பாடுவார். அப்படித்தான் நாங்களும் காட்டில் அல்லற்பட்டோம். ஆனால் இன்று ஒரு நாள் அல்லல் இன்றி அமைதியாகக் கழிந்தது இறையருளே?

78. அறுபத்தேழாம் நாள்

(மாவலா — அடிலாபாடு)

மலைப் பகுதியில் தங்கி இருந்த நாங்கள் காலை 4 மணிக்குப் புறப்பட்டோம். பயங்கரமான காட்டின் வழியாக சுமார் 5 மைல் நடந்து மலையடிவாரம் அடைந்தோம். அங்கு **சீதா கோண்டி** என்ற கிராமம் இருந்தது. அங்கு சிறிது நேரம் தங்கிப் பிறகு நடந்தோம். மீண்டும் சுமார் 3 மைல் கடுமையான காட்டின் வழியாக நடந்தோம். இக்காடுகளில் எத்தகைய பயங்கர மிருகமும் வாழ முடியும்; கொள்ளைக் கூட்டமும் உலவ முடியும். ஆனால் எதுவும் எங்கள் கண்ணுக்குத் தென்படவில்லை. அது இறைவன் திருவருளே!

''காட்டிலாகா நூற்றாண்டு விழாப் பூங்கா'' (Forest centenary park — 1961) ஒன்றைக் கண்டு மகிழ்ந்தோம். சீதாகோண்டி கிராமத்தில் இருந்து 4 மைல் தொலைவில் உள்ள **மாவலா** என்ற சிற்றூரை அடைந்து நீரும் நிழலும் உள்ள இடத்தில் தங்கினோம். இரண்டு நாட்களுக்கு உரிய உணவு சமைத்தோம். இன்றையத் ''திரு அமுது'' சண்முக நாதபுரம் திரு. செ. ராம. ராம. பெ. முத்துக் கருப்பன் அவர்களால் வழங்கப் பெற்றது.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டு தாசனாபூர் (Dasanapur) வழியாக 5 மைல் நடந்து அடிலாபாடு (Adilabad) என்ற முக்கியமான தொழில் நகருக்கு வந்து சேர்ந்தோம். இதுதான் ஆந்திராவின் எல்லை நகரம்.

இங்கு இந்திய அரசின் சிமிண்டுத் தொழிற்சாலை இருக்கிறது. நாளை நாங்கள் மகாராஷ்ட்ர மாநிலத்தில் நுழையப் போகிறோம். இந்த ஆர்வத்தில் நாங்கள் உற்சாகமாக நடந்து அடிலாபாடு நகருக்குள் நுழைந்தோம். ஊரின் எல்லையில் ஒரு மரத்தில் ஓர் அறிவிப்புப் பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அதில் ''மார்வாடி பஞ்சாயத்து பவன் டிரஸ்டு சத்திரம். அம்பேத்கார் சௌக்; அடிலாபாடு — இங்கு யாத்திரிகர்கள் இலவசமாகத் தங்கலாம்'' என்று எழுதி இருந்தது. எனவே அந்தச் சத்திரத்தை நோக்கி நடந்தோம்.

மாலை 6 மணி அளவில் அச்சத்திரத்திற்குச் சென்றுசேர்ந்தோம்.அங்கிருந்த கணக்குப்பிள்ளையாகிய யஷ்வந்தராவ் என்பவர் எங்களை அன்பாக வரவேற்றுத் தங்க வசதி செய்து கொடுத்தார். அது ஒரு பிரமாண்டமான சத்திரம். பல நூறு பேர் மிக வசதியாகத் தங்கலாம். ஏராளமான அறைகள், மண்டபங்கள், குளியல்—கழிவறை — மின்சார — குடிநீர் — வசதிகள் எல்லாம் இருந்தன. முஸ்லிம்கள் அதிகமாக உள்ள அடிலாபாடில் இந்துக்கள் தங்க வசதியே இல்லாததால் 1969 ஆம் ஆண்டில் ராஜஸ்தான் மார்வாடிகள் ஏழுபேர் இந்தச் சத்திரத்தைப் பெரும் பொருட் செலவில் கட்டி, இந்து யாத்திரிகர்கள் தங்க வசதி செய்து கொடுத்துள்ளனர். அந்த மார்வாடி வள்ளல்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்கள் தமிழகத்தின் கடையெழு வள்ளல்களோடு ஒப்பிடத்தக்கவர்களே ஆவர்.

இச்சத்திரத்துக்குள் ஓர் அழகான **பெருமான் கோயிலும்** மார்வாடிகள் கட்டி உள்ளனர். இங்குள்ள விக்கிரகங்கள் எல்லாம் வெள்ளைச் சலவைக் கற்களால் ஆனவை. பார்ப்பதற்கு மிகவும் அற்புதமாக இருக்கின்றன. இக்கோயிலில் பெருமாளைத் தரிசித்து ஒரு மண்டபத்தில் தங்கினோம்.

எங்கள் சைக்கிள் ரிக்ஷா பெருமாள் கோயில் அருகே நின்றது. கோயிலுக்குத் தினம் தோறும் ஏராளமான இந்துக்கள் வந்து வழிபடுவது வழக்கமாம். அப்படிவந்த ஓர் அன்பர், எங்கள் வருகை பற்றி அறிந்து, அனுமதி பெற்று என்னைக் காண வந்தார். அவர் பெயர் **பி. ராமுலு** என்பதாகும். அவர் ஒரு பட்டதாரி. இந்தியில் புலமை மிக்கவர். ''போச்சரா'' (Pochera) என்ற ஊரில் உயர் தொடக்கப் பள்ளியில் இந்தி ஆசிரிய ராகப் பணி புரிகிறார். அவர் தன்னைப் பற்றி அறிமுகப் படுத்திக் கொண்டு தனது வாழ்க்கையில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சிகளை வர்ணித்தார். அவர் கூறியவற்றை அப்படியே எழுதுகிறேன்.

''நான் அரசாங்க உயர் தொடக்கப் பள்ளியில் இந்தி ஆசிரியராகப் பணிபுரிகிறேன். மாதம் ரூ. 1016 சம்பளம் பெறுகிறேன். வருமானம் எனக்குப் போது மானது. நான் மிகவும் தெய்வபக்தி உள்ளவன். உண்மையானவன். இந்த ஊரில் உள்ள எல்லாக் கோயில் களிலும் காலையிலும் மாலையிலும் தவறாமல் வழிபாடு செய்யும் பழக்கம் உடையேன். சிவராத்திரி அன்று தண்ணீர் கூடக் குடிக்காமல் முழுவிரதம் இருப்பேன். அந்த அளவுக்கு நான் தெய்வபக்தி உடையவன். ஆனால் கடவுள் ஏனோ என்னைச் சோதிக்கிறார்.

எனக்கு வயது 35 ஆகிறது. பத்துவருடங்களுக்கு முன்பு எனக்குத் திருமணம் ஆயிற்று. சில நாட்களில் என் மனைவி திடீரென்று இறந்தாள். பிறகு இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன். அவள் பைத்தியம் பிடித்து இறந்தாள். அதன்பின் என் உறவினர்கள் வற் புறுத்தியதால் மூன்றாவது திருமணம் செய்து கொண் டேன். அவளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. இரண்டாவது குழந்தை பிறந்ததும் அவள் பிரசவத்தில் இறந்து போனாள். இனி எனக்குத் திருமணமே வேண்

டாம் என்று இரண்டு குழந்தைகளையும் வளர்த்து வந்தேன். நான் பள்ளிக்குச் சென்று விடுவதால் குழந்தை களைப் பாதுகாக்கும் பொறுப்பு என் பெற்றோர்களுக்கு ஏற்பட்டது. அவர்களால் அந்தப் பாரத்தைச் சுமக்க முடியவில்லை. எனவே குழந்தைகளை வளர்ப்பதற்காக நாலாவது திருமணம் செய்து கொள்ளும்படி என் பெற் றோர் என்னை வற்புறுத்தினர். அவர்களது பேச்சை மறுக்கமுடியாமல் நாலாவது திருமணம் செய்து கொண் டேன். சிலநாட்கள் தான் அவளுடன் இல்லற வாழ்க்கை யில் ஈடுபட்டேன். அதற்குள் அவளுக்குக் காசநோய் ஏற்பட்டு அவளை மருத்துவ விடுதியில் சேர்க்கும்படி ஆகிவிட்டது. அதனால் எராளமான செலவும் சிரமமும் ஏற்பட்டு விட்டன. அவள் உடல் நிலை சரிவரத் தேற வில்லை. எனவே மருத்துவர்கள் அவளோடு நான் அக வாழ்க்கை நடத்தலாகாது என்று கூறி விட்டனர். அவளை வேறொரு வீட்டில் நோயாளியாக வைத்துப் பராமரிக்க நேர்ந்தது. என் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு மீண்டும் என் முதிய பெற்றோர்களுக்கு ஏற் பட்டது, எனவே அவர்கள் என்னை மறுபடியும் வற் புறுத்தி ஐந்தாவது முறையாகத் திருமணம் செய்து வைத்தனர். அவர்களது ஆணையை மீற முடியாமல் அவர்கள் பார்த்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். அவளோடு ஓர் இரு வாரங்கள் கூட நான் மகிழ்ச்சியோடு வாழமுடியவில்லை. அவள் என்வீட்டுக்கு வந்தது முதல் என் பெற்றோரோடு வல்லடிச்சண்டை போடுகிறாள். இதனால் வீடு தினம் போர்க்களம் போல் திகழ்கிறது. வீட்டில் இப்பொழுது என் பெற்றோர் உட் பட யாருக்குமே நிம்மதி இல்லை. எனக்கு இல்லற வாழ்க்கை அமையவே இல்லை. என் ஐந்தாவது மனைவி ஏன் இப்படிச் சண்டை போடுகிறாள் என்றே தெரிய வில்லை. பலரிடம் நான் விசாரித்தும் எனக்குத்தக்கபதில் கிடைக்கவில்லை. ஆகவேதான் உங்களிடம் விடை

கிடைக்கலாம் என்று தேடி வந்துள்ளேன். நீங்கள் தான் விடைகூற வேண்டும். என்னை ஆசீர்வதிக்க வேண்டும்'' என்றுகூறி என் பாதங்களில் பணிந்து கிடந்தார்.

அவர் ஓரளவு நல்ல ஆங்கிலத்தில் என்னோடு பேசினார். எனவே நானும் அவரோடு சரளமாக ஆங்கிலத்தில் பேச முடிந்தது. அவரை எழச் செய்து அவருக்கு விபூதி வழங்கி ஆசீர்வதித்து நான் எனக்குத் தெரிந்த பதிலைக் கூறலானேன்:

''ஏன் அன்பான நண்பரே! உங்கள் சோகக் கதை என்னை மிகவும் மனம் வருத்தமடையச் செய்து விட்டது. இப்படிச் சோதனை வேறு யாருக்காவது வந்திருந்தால் அவர் பைத்தியம் பிடித்து அலைந் திருப்பார். ஆனால் நீங்கள் தெய்வ பக்தியும், இந்தி தெலுங்கு ஆங்கில இலக்கியப் புலமையும் பெற்றிப்பதால் ஜீரணிக்க முடிகிறது. ஆகவே இதுவரை நீங்கள் இல்லற வாழ்க்கைக்கு ஏற்பட்ட சோதனைகளைத் தாங்க முடிந்தது. உங்கள் மனைவிகள் ஒருவர் பின் ஒருவராகச் சாகச் சாக நீங்கள் எதையோ ஒன்றை எதிர் பார்த்து மறுமணம் செய்து கொண்டீர்கள். ஆனால் அது உங்களுக்கு எட்டாத தாகவே இருந்தது. உங்கள் ஜாதகப்படி நீங்கள் சந்நியாச வாழ்க்கை வாழ வேண்டும். உங்களுக்கு இல்லற வாழ்க்கை உரியதன்று. அதனை நீங்கள் தொடக்கம் முதலே புரிந்து கொள்ளவில்லை. எனவே தான் விதி உங்கள் மனைவியரை அடுத்தடுத்துச் சாய்த்தது. அப்பொழுதும் நீங்கள், விதியைப் புரிந்து கொள்ளாமல் மறுமணம் புரிந்து கொண்டே வந்தீர்கள். எனவே இப்பொழுது விதி வேறு முனையில் இருந்து உங்களைத் தாக்கத் தொடங்கி உள்ளது. உங்கள் ஐந்தாவது மனைவியை விதி சாய்க்காமல் உயிரோடு வைத்து உங்கட்கும் உங்கள் பெற்றோருக்கும் முரட்டுத் தனமாகத் தொல்லை கொடுக்க வைத்துள்ளது.

இவளையும் புறக்கணித்து ஆறாவது மணம் புரிந்து கொள்வீர்களேயானால் இன்னும் பெரிய ஆபத்துக்கள் ஏற்படும் எனவே இல்லற ஆசையை ஒதுக்கித் துறவற வாழ்க்கையை வீட்டில் இருந்தே மேற்கொள்ளுங்கள். துன்பம் தீரும்'' என்றேன்.

உடனே அவர் மீண்டும் என் பாதத்தில் வீழ்ந்து, ''நீங்கள் சொல்வது முற்றிலும் சரி. என் ஜாதகத்தைப் பார்த்த ஒருவர் அப்படித்தான் சொன்னார். நான் சன்னியாசி ஆக வேண்டும் என்றார். நான் அதை நம்ப வில்லை. இப்பொழுது நீங்கள் சொல்வது சரி என்று எனக்குப் படுகிறது. எனக்கும் இல்லற வாழ்க்கை வெறுத்து விட்டது. வீட்டில் இருந்தே இனித் துறவு வாழ்க்கை வாழ்கிறேன். என்னால் இயன்ற தொண்டு களைச் செய்கிறேன். என்னை மீண்டும் ஆசீர்வதி யுங்கள்'' என்றார். அவர் நெற்றியில் விபூதி பூசி ஆசீர் வதித்து அனுப்பினேன். அவர் நிம்மதியோடு விடை பெற்றார். ஓர் உள்ளத்திற்கு நிம்மதி கொடுக்க முடிந்த தற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எல்லாம் அவன் அருள்!

79. அறுபத்தெட்டாம் நாள்

(கமாய்—பென்கங்கா நதி—மகாராஷ்ட்ரா பிம்பல்குடி)

25-4-1983 திங்கட்கிழமை ஆகிய இன்று எங்கட்கு மிகமிக முக்கியமானநாள். ஏனெனில் மிக நீண்ட ஆந்திரப் பிரதேசமாநிலத்தில் முப்பதிரண்டு நாட்கள் நடந்து அலுத்துப் போன நாங்கள் இன்று மகாராஷ்டிர மாநிலத்தில் நுழையப்போகிறோம் என்ற எண்ணத்தில் எங்களையும் அறியாமல் எங்கள் உள்ளம் உற்சாகத்தில் மிதந்தது. காலை 4 மணிக்குப் பயணம் புறப்பட்டோம். 13மைல் நடந்து மகாராஷ்ட்ர மாநிலத்தில் நுழைய வேண்டும். எனவே வேகமாக நடந்தோம். பாதை பாலைவனம்போல் இருந்தது. வெள்ளைப் பாறைகள் நிறைய இருந்ததால் வெயில் பாறைகளில் எதிரொளித்து வெக்கை மிகுதியாக இருந்தது. தளராமல் நடந்தோம். கரஞ்சில், போர்தம் முதலிய ஊர்களின் வழியாகக் காலை 10 மணி அளவில் **கமாய்** என்ற ஊருக்குச் சென்றோம். இதுதான் ஆந்திராவின் கடைசி ஊர். அந்த ஊருக்கு விடை கொடுத்துவிட்டு மேலும் நடந்தோம். சிறிது தொலைவில் பென்கங்கா நதிப்பாலம் தெரிந்தது. எங்கள் உற்சாகத்திற்கு எல்லையில்லை. விரைந்து நடந்து பாலத்தின் தென்முனையை அடைந்தோம். அங்கு ஆந்திர அரசாங்கத்தின் சோதனைச் சாவடி (Check Post) இருந்தது. பென்கங்காநதிப் பாலத்தின் தென்முனை ஆந்திர அரசாங்கத்தைச் சேர்ந்ததாம்.

பாலத்தில் இருந்து மகாராஷ்ட்ர மாநிலம் தொடங்கு கிறதாம். பென்கங்காநதியும், பாலமும் மகாராஷ்ட் ராவைச் சேர்ந்தனவாம். மாலையில்தான் நாங்கள் மகாராஷ்ட்ர மாநிலத்தில் நுழைய வேண்டும். எனவே பாலத்தின்மீது யாரும் நடக்க வேண்டாம் என்று எங்கள் குழுவினர்க்குக் கூறினேன். பாலத்தின் கீழேயே எல்லோரும் தங்கலாம் என்று அறிவித்தேன். அவ் வாறே மாபெரும் பென்கங்காநதிப் பாலத்தின் கீழே வாய்ப்பான ஓரிடத்தில் எங்கள் ரிக்ஷாவை நிறுத்தி, நிழலில் தங்கினோம்.

கோதாவரிக்கு அடுத்து மகாராஷ்ட்ர மாநிலத் தில் மிக முக்கியமானது **பென்கங்கா** நதியாகும். நாங்கள் அங்கு சென்றிருந்தபொழுது நதியில் ஓரளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. மழைக்காலத்தில் பாலத்திற்குமேல் வெள்ளம் ஓடுமாம். எனவே அங்கு பாலத்தின் வடபக்கம் மத்திய அரசின் நீர்வாரிய அமைப்பு (C. W. C.) இருக்கிறது. அதில் பணியாற்றும் பொறியியல் அதிகாரிகளுக்கு அப்பாலத்தைக் கவனிப் பதும், பாலத்தின்கீழும், மேலும் செல்லும் தண்ணீரின் அளவு, அழுத்தம் ஆகியவற்றை அரசுக்குத் தெரிவித்து ஆவன செய்வதும் தினசரிக் கடமையாகும். பாலத்தின் மீது வெள்ளம் ஓடினால் படகில் சென்று நீரின் அளவை யும் அழுத்தத்தையும் கண்டுபிடிப்பார்களாம். பென் கங்கா நதியில் நீராடி, நீச்சல் அடித்து மகிழ்ந்தோம். பாலத்தின்கீழ் சமையல் செய்து உண்டோம். சிறிது நேரம் தூங்க விரும்பினோம். சரியான இடம் அமைய வில்லை. பாலத்தின் தென்முனை ஓரத்தில் ஒரு சிறு குடிசை இருந்தது. அது ஆந்திர அரசின் சோதனைச் சாவடியில் ஊழியராகப் பணிபுரியும் **''குன்சலா போச்சன்னா''** என்பவர் வாழும் இடமாகும். அதற்குள் நுழைந்தோம். அவர் எங்களை மிகவும் அன்பாக

வரவேற்று அவரது கயிற்றுக் கட்டில்களை எங்களுக்குத் தந்து தூங்க அனுமதித்தார்.

மாலை 4.30 மணிக்குப் புறப்பட்டோம். பாலத்தின்மீது முதலில் வேலேந்திச் சென்றோம். வழக்கம்போல் "காசிவிசுவநாதருக்கு அரோகரா!" "விசாலாட்சிக்கு அரோகரா!" "அன்னபூரணிக்கு அரோகரா!" "காலபைரவருக்கு அ ரோ க ரா !" "இராமநாதசுவாமிக்கு அரோகரா!" "பர்வதவர்த்தினிக்கு அரோகரா" என்று கூறியவாறு முதலில் அடியேன் நடக்கப் பிறகு எல்லோரும் தொடர மகாராஷ்ட்ர மாநிலத்தில் மகிழ்ச்சியோடு நுழைந்தோம். பாலத்தைக் கடந்ததும் எங்கள் குழுவினர்களுடன் கை குலுக்கி அனைவர்க்கும் சுவையான ரொட்டி (பிஸ்கட்) வழங்கி மகிழ்ந்தேன்.

மகாராஷ்ட்ர மாநிலத்தில் ஒரு மைல் நடந்தோம். **பிம்பல்குடி** என்ற ஊர் வந்தது. அங்கு நாமக்கல்லைச் சேர்ந்த **K. அர்ஜுனன்** என்ற அன்பர் மத்திய அரசின் நீர்வாரிய அமைப்பில் (c. w. c) பணிபுரிகிறார். கே.அர்ஜுனன்(c.w.c.)பென்கங்கா பாலம் பட்டன்போரி (p.o.) பண்ட்ரகோடா (TK) யவட்டமால் (மாவட்டம்) மகாராஷ்ட்ர மாநிலம் என்பது அவரது முகவரியாகும். அவரது அலுவலகத்தில் கம்பியில்லாத் தந்தி (ஒயர்லெஸ்) இருக்கிறது. அவருக்கு பலநாட்களுக்கு முன்பே ஹைதராபாத் நகரத்தார்கள் ஹைதராபாத்தில் உள்ள மத்திய அரசின் நீர்வாரிய அமைப்பில் பணிபுரியும் நண்பர்கள் மூலம் எங்களது வருகை பற்றி அறிவித்திருக்கிறார்கள். எனவே திரு. அர்ஜுனன் இன்று காலை முதலே எங்களை எதிர்ப்பார்த்திருக்கிறார்.மேலும் அவரது இனிய நண்பர்கள் பலரையும் தன் வீட்டில் வரவழைத்து எங்களைச் சந்திப்பதற்காக நிறுத்தி வைத்திருக்கிறார். நாங்கள் காலையில் வராததால் மாலையில் அவர் தன் மோட்

டார் சைக்கிளில் எங்களைத் தேடிப்புறப்பட்டிருக்கிறார். தன் வீட்டிலிருந்து வரும் கிளைச்சாலையில் இருந்து அவர் நெடுஞ்சாலைக்கு மோட்டார் சைக்கிளில் வந்து ஏறும் பொழுது நாங்கள் இறையருளால் அந்த இடத்தை அடைகிறோம். அவர் உடனே மோட்டார் சைக்கிளை நிறுத்தி, ''நீங்கள் காசியாத்திரிகர்களா? தமிழ்நாட்டில் இருந்து வருகிறீர்களா?'' என்று கேட்டார். நாங்கள் ''ஆம்'' என்றோம். உடனே அவர் எங்களை வணங்கி ''உங்களுக்காகக் காலையில் இருந்து காத்திருக்கிறேன். நண்பர்களும் காத்திருக்கிறார்கள். ஏன் காலையிலேயே வரவில்லை?'' என்று கேட்டார்.

''நாங்கள் வரும் செய்தி உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டேன். ''ஹைதராபாத்தில் உள்ள எங்கள் அலுவலகத்து நண்பர்கள் கம்பியில்லாத் தந்தி மூலம் பல நாட்களுக்கு முன்பே சொன்னார்கள். உடனே தேதியினைக் குறித்து வைத்தேன். என் மனைவியும், நண்பர்களும் உங்கள் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துள்ளனர். உங்களுக்காக மதியம் சமையல் செய்து நீங்கள் வராததால் நாங்கள் சாப்பிட்டோம். பரவாயில்லை. வாருங்கள். வீட்டுக்குச் செல்வோம்'' என்றார்.

நாங்கள் அன்று இரவு அடுத்த ஊர்க்குச் சென்று தங்குவதாகத் திட்டம். ஹைதராபாத்தில் இருந்து இங்கு செய்தி அனுப்புவதாக நகரத்தார்கள் சொல்லி இருந்தார்கள். ஆனால் அது இவ்வளவு தூரம் வேலை செய்திருக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. என்றாலும் சிறிது நேரம் அர்ஜுனன் அவர்கள் வீட்டில் தங்கியிருந்து ஏதாவது சாப்பிட்டு விட்டுப் பயணம் தொடர்வது என்று எண்ணி அவரது வீட்டிற்குச் சென்றோம்.

அங்கு அவரது மனைவி எல்லையற்ற பேரன் போடு வரவேற்றார். எங்களோடு நெடுநாள் பழகியது

போல அவர்கள் பழகினார்கள். தொலைதூரப் பிரதேசத்தில் வாழ்வதால் "தமிழர்கள் யாரையும் காணமாட்டோமா? தமிழில் பேச மாட்டோமா? தமிழர்களுக்கு உணவளிக்க மாட்டோமா?" என்று அந்த சகோதரி பல மாதங்களாகக் காத்திருந்திருக்கிறார். எங்களைக் கண்டதும் தம் அன்பையெல்லாம் கொட்டி வரவேற்றார். தமிழில் பேசி மகிழ்ந்தார். அவரது தமிழ்ப்பற்று எங்களைக் கொள்ளைக் கொண்டது. நாங்கள் எல்லோரும் தமிழில் பேசிச் சிரித்து மகிழ்ந்தோம். சில நிமிடங்கள் கழிந்ததும் எங்கள் பேச்சு நின்றது. அப்பொழுது நாங்கள் முதலில் பேசிய பேச்சு எதிரொலித்தது. அது எங்கிருந்து கேட்கிறது என்று பார்த்தோம். மேஜை மீது இருந்த ஒரு **"டேப்ரிக்கார்டர்"** ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. நாங்கள் அங்கு வந்தது முதல் நாங்கள் பேசிய எங்கள் பேச்சு எல்லாம் அதில் பதிவாகி இருக்கிறது. "இது ஏன்?" என்று கேட்டேன். "நீங்கள் விரைவில் போய்விடுவீர்கள். அதன் பின் தமிழை எப்போது கேட்போமோ? ஆகவே உங்கள் பேச்சை நான்தான் பதிவு செய்ய ஆவன செய்தேன். இதை நான் இனி மேல் தினந்தோறும் ஒலிபரப்பச் செய்து தமிழைக் கேட்டு மகிழ்வேன்" என்று அந்த சகோதரி கூறினார். என்னே அவரது தமிழ்ப்பற்று!

இதை நினைக்கையில் எனக்கு ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. உலகம் சுற்றிய முதல் தமிழராகிய திரு. **ஏ. கே. செட்டியார்** அவர்கள் அமெரிக்காவில் பயணம் செய்த பொழுது பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்த தமிழர் ஒருவர் இவரைத் தொலைபேசி மூலம் அழைத்தாராம். என்ன என்று கேட்ட பொழுது "தமிழில் பேச ஆசை ஏற்பட்டது. அதனால் தொலை பேசியில் பேசுகிறேன். நீங்கள் அமெரிக்காவை விட்டுப் போய் விட்டால் பிறகு பேச முடியாதல்லவா?

ஆகவே பேசுகிறேன்'' என்று பல நிமிடம் தொலை பேசியில் பேசினாராம். இப்படியும் தமிழ்ப் பற்று உடையவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் தமிழ்ப் பற்று தமிழகத்தை விட்டு வெளியேறியவர்களுக்குத்தான் அதிகமாக இருக்கிறது. ''நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும்''.

அருகில் உள்ள **பட்டன்போரி** என்ற ஊரைச் சேர்ந்த **சையத்மீர்** என்ற தானிய வியாபாரி, **ஆர். என். பாட்டீல்** என்ற ஆசிரியர், **எம். ஜே. மிர்சா** என்ற இராணுவ வீரர் ஆகியோர் அங்கு வந்திருந்தனர். அவர்கள் எங்களுடன் ஆங்கிலத்தில் மிக நட்பாக உரையாடி மகிழ்ந்தனர். அவர்கள் எங்களுக்கு வடமாநிலங்கள் பற்றிய பல செய்திகளை விரிவாக எடுத்துரைத்தனர். கொள்ளைக் கூட்டங்களைப் பற்றி விசாரித்தோம். அப்பொழுது அவர்கள் கூறிய செய்திகள் எங்கட்கு வியப்பளித்தன. அச் செய்திகள் வருமாறு.—

மத்தியப் பிரதேசத்தில் மட்டுமே முன்பு இருந்த கொள்ளைக் கூட்டம் இப் பொழுது உத்தரப் பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களுக்கும் பரவி உள்ளது. கொள்ளையர்கள் குதிரை, ஜீப் முதலிய வாகனங்களில் வருவர். அவர்களிடம் துப்பாக்கி முதலிய நவீன ஆயுதங்கள் உண்டு. அவர்கள் காட்டு வழியில் செல்லும் வாகனங்களைக் கொள்ளையடிப்பர். சில சமயம் கிராமங்களில் புகுந்து வீடுகளில் கொள்ளையிடுவர். இன்னும் சில சமயங்களில் போலீஸ் நிலையங்களில் புகுந்து அங்குள்ள ஆயுதங்களையும் கொள்ளையடித்துச் செல்வர். போலீஸ் மேலதிகாரிகள்போல உடையணிந்து ஜீப்பில் வந்து போலீஸ் நிலையங்களைக் கொள்ளையடிப்பதும் உண்டு. கொள்ளையர்களை அடக்குவது அரிது. ஏனெனில் அடர்ந்த காட்டுக்குள் அவர்கள் போய் விட்டால் அவர்களைக் கண்டு பிடிப்பது

இயலாது: சில சமயங்களில் கொள்ளைக்காரர்கள் சிறு கிராமங்களில் தர்பார் நடத்துவதும் உண்டு. பல கொள்ளைக் காரர்கள் அரசாங்கத்திடம் சரண் அடைந் திருந்தாலும் இன்னும் பல நூறு கொள்ளைக் கூட்டங்கள் இருக்கின்றன. ஏராளமான கொள்ளைக் காரிகளும் இருக்கிறார்கள். கொள்ளைக் கூட்டம் ஒரு அரசாங்கம் போலவே இயங்குகிறது.''

பூலான் தேவியைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்ன பதில் வருமாறு: ''பூலான் தேவி (பச்சா) மிகச் சிறிய கொள்ளைக்காரி தான். அவளை விடப் பெரிய (படே) கொள்ளைக்காரிகள் எல்லாம் இங்கு இருக்கின்றனர்'' என்றனர். இப்பதில் எங்களுக்கு என்னவோ போல் இருந்தது. இதனைக் கேட்டும் நாங்கள் அஞ்சாமல் இருந்தது இறையருளே.

''இராணுவத்தைக் கொண்டு ஏன் இவர்களை அடக்கக் கூடாது?'' என்று கேட்டேன். அதற்கு அந்த இராணுவ வீரர் கூறிய பதில் வருமாறு. ''இது உள் நாட்டுப் பிரச்னை. போலீஸ் சமாளிக்க வேண்டியது. இதில் இராணுவத்தைப் பயன்படுத்தக் கூடாது. இராணுவம் வெளிநாட்டு எதிரிகளை அழிக்கவும், எல்லை யைக்காக்கவுமே இருக்கிறது.'' என்றார். அவர் சொன்னது முற்றிலும் உண்மை.

நாங்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது எங்கள் ரிக்ஷா ஓட்டுநர் அடைக்கப்பன் அங்கிருந்த டேப் ரிக்கார்டரைக் கையாளத் தொடங்கினார். நான் ''அதைத் தொட வேண்டாம்'' என்று கண்ணால் குறிப்புக் காட்டினேன். உடனே அடைக்கப்பன் டேப்ரிக்கார்டரில் இருந்து தன் கையை எடுத்து விட்டார். என் கண் குறிப்பைக் கவனித்த இராணுவ வீரர், ''பரவாயில்லை. அவர் இளைஞர். ஆகவே டேப்ரிக்கார்டரைக் கையாண்டு மகிழட்டும்'' என்று

என்னிடம் கூறி, அடைக்கப்பனை நோக்கி "விருப்பப் படி டேப்ரிக்கார்டரைப் பயன்படுத்துங்கள்" என்றார். ஆனால் அடைக்கப்பன் மறுத்துவிட்டார். மீண்டும் அந்த இராணுவ அதிகாரி அடைக்கப்பனிடம் "டேப் ரிக்கார்டரை விருப்பம் போல் திருப்பி வேண்டிய பாடல் கேளுங்கள்" என்றார். ஆனால் அடைக்கப்பன் மீண்டும் மறுத்துவிட்டார். உடனே அந்த இராணுவ அதிகாரி என்னைப் பார்த்து மகிழ்ச்சியோடு "உங்கள் குழு இராணுவப் பட்டாளத்தைவிட மிகவும் கட்டுப் பாடானது. ஆகவே நீங்கள் உங்கள் திட்டத்தில் உறுதி யாக வெற்றி பெறுவீர்கள்" (Your Band is more disciplined than an army. So you will surely succeed in your project) என்று வாழ்த்தினார். அவர் ஒரு இராணுவ அதிகாரி. கட்டுப்பாடுகளை நன்கு அறிந்தவர். அவர் எங்கள் கட்டுப்பாட்டு முறைகளை அறிந்து வாழ்த்திப் பாராட்டியது **"வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி"** என்று வசிஷ்டரிடம் இருந்து விசுவாமித்திரர் பாராட்டுப் பட்டம் பெற்றது போல இருந்தது. **"கட்டுப்பாடு இல்லாத எந்தக் குழுவும் வெற்றி பெற இயலாது"** என்பதே என் எண்ணம். தனிமனிதனும் சரி, குடும்பமும் சரி, அல்லது ஒரு குழுவும் சரி, அல்லது ஓர் இயக்கமாக இருந் தாலும் சரி, கட்டுப்பாடாக இருந்தால் அல்லது, வெற்றி பெறவே முடியாது. அந்த முறையில் எங்கள் குழு மிகக் கட்டுப்பாட்டோடு இயங்கியது; அதனால் தன் முயற்சி யில் வெற்றி பெற்றது; இறைவன் அருள் புரிந்தான்.

இரவு எங்களுக்கு திரு. அர்ஜுனன் அவர்களும், அவர் மனைவியும் அருமையான உணவு தயாரித்து வழங்கினர். அங்கு வந்திருந்த நண்பர்களும் எங்களோடு அமர்ந்து உணவு அருந்துவதைப் பெரிய பேறாகக் கருதினர். அவர்கள் அனைவரின் விருப்பப்படி அன்று இரவு அங்கேயே தங்கினோம். எங்களையும் அவர்

களையும் கூட்டுவித்த இறையனுக்கு நன்றி செலுத்தினோம். நாங்களும் திரு. அர்ஜூனன் அவர்களும் சாலையில் சந்தித்திராவிட்டால் இந்த நல்ல வாய்ப்பு நழுவிப் போய் இருக்கும் அல்லவா? நாங்கள் நெடுஞ் சாலையில் சிறிது முன்னேறிச் சென்றிருந்தால் கூடப் பிறகு அர்ஜூனன் வீட்டுக்குவர இசைந்திருக்க மாட்டோம். ஏனெனில் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்பது எங்கள் விரதம். எனவே கடவுள் எங்களைச் சாலைகள் சந்திக்கும் இடத்தில் சந்திக்க வைத்து அர்ஜூனன் வீட்டுக்கு எங்களைத் திருப்பி இருக்கிறார். இது அவர்களது அன்புக்கும் தமிழ்ப்பற்றுக்கும் இறைவன் அளித்த பரிசாகவே கருதுகிறேன்.

80. அறுபத்தொன்பதாம் நாள்

(பட்டன் போரி-சிற்றாறு-பண்ட்ரகௌடா சித்திராபௌர்ணமி)

இன்று நாங்கள் மிகவும் புனிதமாகக் கருதும் **சித்திரா பௌர்ணமி** தினம். இன்றுதான் திருச்செந்தூரில் ஏழாம் ஆண்டாகக் காவடி செலுத்தும் நாள். அந்தக் காரியத்தை எங்கள் திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவைச் சேர்ந்த "திருத்தொண்டர்" ஆர்-வயிரவன், "அருள் தொண்டர்" திரு. சிந்தாமணிச் செட்டியார் "இசைத் தொண்டர்கள் "திரு. ந. காசிநாதன். இராம இலக்குமணன், சொக்கலிங்கம் ஆகியோர் சிறப்பாகச் செய்து கொண்டிருப்பார்கள். நாங்கள் சுமார் 1100 மைலுக்கு அப்புறம் இருந்தாலும் திருச்செந்திலாண்டவனுக்குக் காவடி செலுத்தும் அந்த இனிய நிகழ்ச்சியை மனக்கண்ணால் கண்டவாறு காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். திருச்செந்தூர் தானே எங்கள் காசியாத்திரைக்கு மூலம்!

3 மைல் நடந்து காலை 6 மணிக்குப் "பட்டன் போரி" என்ற ஊரை அடைந்தோம். இந்த ஊரினைச் சேர்ந்த அன்பர்கள்தான் நேற்று அர்ஜுனன் வீட்டில் எங்களை வரவேற்றவர்கள். இன்று காலை இங்கு அவர்கள் எங்கட்குத் தேநீர் வழங்கினர். பிறகு தொடர்ந்து நடந்தோம். வழியில் ஒரு லாரி எங்களைக் கண்டதும் நின்றது. அதில் இருந்த டிரைவர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் எங்கள் பயணம் பற்றிக் கேட்டு

அறிந்ததும் எங்களைப் பாராட்டி, அவரது உபயோகத்துக்காக வைத்திருந்த அரிசி, பருப்பு, கோதுமை மா எல்லாம் தன் அன்பளிப்பாகத் தந்தார். அவரது தெய்வ பக்தியும் மனிதாபிமான உணர்வும் எங்களை மிகவும் ஈர்த்தன. அவர் பெயர் ''பெய்திநாத்'' (Baithinath) என்பதாகும். அவரது ஊர் சிஹாரமு. (வழி) லக்னோ. ரெய்பரேலி மாவட்டம் உ. பி. அன்புக்கு முன்னே மாகாணம், மொழி முதலிய எல்லைகள் எல்லாம் அடைபட்டுப் போகின்ற காட்சியினைப் பலமுறை கண்டோம்.

10 மைல் நடந்தோம். ஒரு **சிற்றாறு** குறுக்கிட்டது. அதில் நீண்டநேரம் குளித்து மகிழ்ந்தோம். ஆற்றங்கரையில் மரநிழலில் தங்கினோம். பழைய கஞ்சி எங்கள் ரிக்ஷாவில் இருந்தது. அதனை உண்டு நிம்மதியாக உறங்கினோம். **பச்சைத்தேரை தாலாட்டும் பண்ணை'** என்று கம்பன் வர்ணிப்பான். அப்படித் தவளைகள் தாலாட்ட நாங்கள் எங்களை அறியாமல் உறங்கினோம். சுகமான தென்றல் எங்கள் உடம்புக்குத் தெம்பூட்டியது.

மாலையில் நாலரை மணிக்கு நடக்கத் தொடங்கினோம், வழியில் நாமக்கல் லாரிகள் எங்களைக் கண்டு நின்றன. அவற்றில் இருந்த லாரி ஓட்டுநர்கள் ஆகிய திரு. கே. சத்தியசீலன் (நாமக்கல்), என். பழநியப்பன் (பில்லிபாளையம்) எல். கிருஷ்ணன் (பட்டத்தையன் குட்டை), எஸ். சுப்பிரமணியன் (கணக்கன்பாளையும்) ஆகியோர் எங்கள் முயற்சியினைப் பாராட்டி ரூபாய் ஐந்து வீதம் நன்கொடை வழங்கினர். மேலும், ''மத்தியப் பிரதேசத்தைப் பற்றிப் பயப்பட வேண்டாம். மகாராஷ்ட்ரா கழிந்ததும் வெயில் குறைந்து விடும்! மத்தியப் பிரதேசத்தில் சாலை நெடுக இருபுறமும் தேக்கு மரங்கள் வானளாவ நின்று நிழல் தரும்: தண்ணீர்ப் பஞ்சமும் அங்கு கிடையாது. தெய்வ அடியார்களாகிய உங்களிடம் கொள்ளைக் கூட்டமோ

அல்லது காட்டுமிருகங்களோ அணுகா! கொள்ளைக் கூட்டம் உங்களிடம் வந்தாலும் உங்களை வணங்கி உதவிசெய்துவிட்டுச்செல்லும். கொள்ளைகாரர்களுக்குக் காவி உடை அணிந்துள்ள சாமியார்களிடம் பக்திமிகுதி சாமியார்களை அவர்கள் ஒன்றும்செய்ய மாட்டார்கள் அதுபோல் சாமி கும்பிடப்போகும் பஸ், கார்களைஅவர்கள் கொள்ளையிட மாட்டார்கள் லாரிகளை மட்டுமே கொள்ளையிடுவார்கள். மிருகங்களும்உங்களிடம் வாரா. புலி முதலியன காட்டுப் பாதையில் உண்டு. ஆனாலும் உங்கள் பாதையில் இருந்து கடவுள் அவற்றை விலக்கி விடுவார். தைரியமாகச் செல்லுங்கள்.நாங்கள் திரும்பும் பொழுதெல்லாம் உங்களைச் சந்திக்கிறோம்'' என்றார்கள்.மேலும்''இன்று இரவு **பண்ட்ரகௌடா** நகரில் நீங்கள் நுழைந்த உடனே அங்குள்ள ''பெட்ரோல் பம்பு'' அருகில் ''ராஜு ஹோட்டல்'' என்ற சிறிய உணவுக் கடைக்கு வாருங்கள். ராஜு திருச்சியைச் சேர்ந்த தமிழர். நல்ல விதமாகத் தமிழ்நாட்டு உணவு தருவார். நாங்கள் எப்பொழுதும் அங்குதான் உணவு உண்போம். நாங்கள் முதலில் அங்கு சென்று அவரிடம்சொல்லிவிட்டு உண்டு, செல்கிறோம். உங்களை அவர் எதிர்பார்த்திருப்பார். நீங்கள் அங்கேயே உணவு உண்டு, இரவு தங்கிச் செல்லுங்கள்'' என்று அரிய ஆலோசனைகள் கூறிப் புறப்பட்டனர். அவர்களது ஆலோசனைகள் எங்கட்கு மிகவும் ஆறுதல் அளித்தன.

இரவு 7½ மணி அளவில் **பண்ட்ர கௌடா** என்ற நகரில் நுழைந்தோம். நுழைவாயிலிலேயே ''பெட்ரோல் பம்பு'' இருந்தது. விசாரித்தோம், ''ராஜுகடை'' பக்கத்திலேயே இருந்தது. திருச்சிக்காரர் ஆகிய திரு. **என். ராஜு** எங்களை மிகவும் அன்பாக வரவேற்றார். ''லாரிக்காரர்கள் சொன்னார்கள். உங்களுக்காகத் தனியே சுத்தமான உணவு தயார் செய்து வைத்திருக்கிறேன். சாப்பிடுங்கள்'' என்று, வீதியிலேயே இலை

போட்டு எங்களுக்குச் சுடச்சுட உணவு பரிமாறினார். இறைவன் எப்படியெல்லாம் எங்களுக்கு வழிகாட்டி உதவி செய்கிறான் என்பதை நினைக்கும் பொழுது அவனது பெருங்கருணைத்திறத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.

சாப்பிட்டு முடிந்ததும் ராஜுவுக்கு ரூபாய் கொடுத்தோம். ஆனால் அவர் வாங்க மறுத்து விட்டார். இருபது ஆண்டுகளாக நான் இங்கு கடை வைத்திருக்கிறேன். தினந்தோறும் எத்தனையோ லாரிக்காரர்கட்கு உணவுபரிமாறுகிறேன். ஆனால் இப்பொழுதுதான் அடியார்களுக்கு உணவு படைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது'' என்று கூறிக் கண்ணீர் சிந்தினார் அவரது தூய்மையான பக்தி எங்கள் உள்ளத்தைத் தொட்டது.

அவரது அன்பைக் கண்ட ''பெட்ரோல்பம்பில்'' பணிபுரியும் ''உப்லான்ஜவல்'' என்ற அன்பரும். ''ஏ. பி. சுரேஷ்'' என்ற அன்பரும் தங்களால் இயன்ற உணவுப் பொருள்களைத் தந்து உதவினர்.

''மகாராஷ்ட்ரம், மத்தியப்பிரதேசம் முதலிய மாகாணங்களில் நாங்கள் எப்பொழுது நடக்க வேண்டும் எங்கே தங்க வேண்டும்'' என்பன போன்ற அறிவுரைகளையும் திரு. ராஜு கூறினார். மேலும் இனிவரும் லாரிக்காரர்களிடம் எல்லாம் உங்களைப்பற்றிக் கூறி அனுப்புகிறேன். அவர்கள் உங்களைக் கண்டதும் லாரியை நிறுத்தி இயன்ற உதவிகள் செய்வார்கள். எல்லா லாரிக்காரர்களும் என் நண்பர்கள். இனிமேல் அவர்கள் அனைவரும் உங்கட்கும் நண்பர்கள். இனி நீங்கள் பாதையில் உதவிக்கு ஆள் இல்லை என்று அஞ்ச வேண்டாம். லாரிகளின் உதவி உங்கட்கு உண்டு'' என்று தைரியம் கொடுத்தார். அவரது வார்த்தைகள்

எனக்கு இராமபிரான் சுக்கிரீவனுக்குச் சொன்ன ஆறுதல் மொழிகள் போன்று இருந்தன.

''சுக்கிரீவா! உனக்கு உதவி இல்லை என்று கருத வேண்டாம். இனி உன் நண்பர்கள் என் நண்பர்கள் உன் பகைவர்கள் என் பகைவர்கள். உன் உதவிக்கு இராம பாணம் உண்டு. என் தம்பி இலட்சுமணன் உன் உதவிக்கு இருக்கிறான், அஞ்ச வேண்டாம்'' என்று இராமபிரான் கிஷ்கிந்தைக் காட்டில் சுக்கிரீவனுக்கு அருள்மொழிபுகன்றதுபோல் ராஜு எங்கட்கு அருள்மொழி புகன்றார். உண்மையிலேயே சுக்கிரீவனுக்கு இராமபாணம் ஆதரவாக இருந்தது போல, லாரிகள் எங்கட்குக் காட்டு வழியில் பெருத்த ஆதரவாக அமைந்தன. கடைசி 10 நாட்கள் எங்களிடம் காசே இல்லை. எல்லோரிடமும் இருந்த காசுகள் தீர்ந்துவிட்டன. இனிக் காசி சென்றால் தான் காசு என்ற நிலையில் இருந்தோம். அப்பொழுது லாரிக்காரர்கள் எங்களுக்குக் கொடுத்த காசும், உணவுப் பொருள்களுமே எங்களைக் காப்பாற்றின. ராஜு சொன்ன வார்த்தைகள் முற்றிலும் உண்மையானதை எண்ணி எண்ணி நாங்கள் பலமுறை நெகிழ்ந்து போனோம். அவர் எங்களைப்பற்றிச் சொல்லி அனுப்பாத லாரிக்காரர்களே இல்லை. அவ்வளவு லாரிகளும் எங்களைக் கண்டதும் நிற்கும்; ''ராஜீ சொன்னார்'' என்று லாரி ஓட்டிகள் சொல்வர். பிறகு இயன்ற உதவி செய்துவிட்டுச் செல்வர். நம்மிடம் கையில் காசு இருக்கும் பொழுது எல்லோரும் உதவி செய்ய முன்வருவது இயற்கை. ஆனால் காசு இல்லாதபொழுது உதவி செய்ய முன்வருவது தெய்வீகப்பண்பு. **''மானுடம் வென்றதம்மா''** என்று கம்பன் காட்டிய மானிட உயர்வினைக் காட்டு வாழ்க்கையில் நாங்கள் கண்டோம்.

உணவு உண்டபின் இரவு ராஜுவின் கடை அருகில் நிம்மதியாகத் தூங்கினோம்.

81. எழுபதாம் நாள்

[சிற்றோடை—கரஞ்சி]

காலை 4¼ மணிக்குப் புறப்பட்டோம். வழியெல்லாம் மலைப்பாங்காக இருந்தது. 10மைல் நடந்து காலை 9 மணிக்குக் கரஞ்சி என்ற சிற்றூர்க்கு வந்தோம். அங்கிருந்த ஒரு சிற்றோடையில் குளித்தோம். ஊரின் எல்லையில் இருந்த சிறிய ஓட்டுக் கூட **ஆஞ்சநேயர்** கோவிலில் தங்கினோம். இரண்டு நாட்களுக்கு வேண்டிய உணவு தயாரித்தோம். இப்பகுதியில் உள்ள உழவர்கள் எங்களுக்குமிகவும் உதவி செய்தனர். தண்ணீர், விறகு முதலியன தந்தனர். இக்கோயிலுக்கு உரிய மராத்தி உழவர் எங்களுக்குச் செய்த உதவிகளுக்கு எல்லையில்லை. பகல் உணவு சுமார் 1 மணி அளவில் உண்டோம்.

இரவு ஆஞ்சநேயர் கோவிலிலேயே பஜனை செய்து தங்கினோம். மகாராஷ்ட்ரா, மத்தியப் பிரதேசப்பகுதிகளில் வழிநெடுக ஆஞ்சநேயர் கோயில்கள் ஏராளமாக இருக்கக் கண்டோம். இராமபிரானுக்கு ஆஞ்சநேயனைப் போல் உதவி செய்தார் யாருளர்? எனவே இராமபக்தர்கள் இராமதாசனாகிய ஆஞ்சநேயனை வழிபடுவது சாலப் பொருத்தமே.

82. எழுபத்தொன்றாம் நாள்
(வாக்டி-கொடிய வெயில்)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். காலை 7 மணிக்கே வெயில் ''சுள்'' என்று அடித்தது. இப்பொழுதெல்லாம் வடநாட்டில் கொடிய வெயில் காலம். காலை 9 மணிக்குமேல் நடக்க முடிவதில்லை. அவ்வளவு கொடிய வெயில்! ஆள் நடமாட்டமே இருப்பதில்லை. மகாராஷ்டிராவில் இப்பகுதியில் வெயில் 112 டிகிரி. நாகபுரியில் 116 டிகிரி. 12 மைல் தொடர்ந்து நடந்து காலை 9½ மணிக்கு வாக்டி என்ற சிறு கிராமத்தை அடைந்தோம். ஊரின் முகப்பில் இருந்த ஒரு மர அறுவை ஆலைக்குள் நுழைந்தோம். அங்கே இருந்த ஒரு கிழவரும் கிழவியும் எங்களை வரவேற்றனர். அந்த ஊரில் நாங்கள் தங்க வேறு இடம் இல்லாததால் அந்த ஆலையில் தங்க அனுமதி கேட்டோம். அவர்கள் இசைந்தனர்.

தகரக் கொட்டகை போட்டிருந்த இடத்தில் தங்கினோம். வெயில் ஏறஏற நாங்கள் சுண்ணாம்புக் காளவாயில் இருப்பது போன்று வெந்தோம். வியர்வை ஊற்றியது. அவ்வூரில் தண்ணீர்ப் பஞ்சம் நிலவியது. சுமார் ஒரு மைல் சென்று எங்கள் இளைஞர்களும், நல்ல தம்பியும் தண்ணீர் கொண்டு வந்தனர். தண்ணீரை மிகவும் சிக்கனமாகப் பயன் படுத்தினோம். வெக்கையில் வெந்ததால் எங்கள் உடம்பு மிகவும் நொந்து போய் விட்டது. பழநியாண்டி உணவுகூட உண்ணாமல் உடல் சோர்ந்து கிடந்தார். அந்த நாளை நினைத்தாலே உடல் நடுங்குகிறது. அன்று இரவும் அங்கேயே தங்கினோம். தங்கினோம் என்பதைவிட வதங்கினோம் என்பது பொருந்தும்.

83. எழுபத்திரண்டாம் நாள்

(வார்தாநதி—போகனா—பெரிய சிவன் கோவில்)

29-4-83 காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். இன்று எங்கள் "குரு" திரு. சித. சிதம்பரம் செட்டியார் அவர்களின் எழுபதாவது பிறந்தநாள்! எனவே அவர் நீண்ட நாள் வாழப் பிரார்த்தித்து அனைவருக்கும் மிட்டாய் வழங்கினேன். 3 மைல் நடந்ததும் **வார்தா நதி** கண்டோம். இந்நதி மிக அகலமானது. இதன் மீது உள்ள பெரியபாலம் 1966 ஆம் ஆண்டில் கட்டப் படத் தொடங்கி 1971 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப் பட்டது. அப்பொழுது இதற்குச் செலவு 31 இலட்சம் ரூபாய்தான், இப்பாலத்தின் அகலம் 718 அடி. உயரம் 76 அடி.

புனித மிக்க வார்தா நதியில் குளித்தோம். இங்கிருந்து சுமார் 25 மைலில் **வார்தா** என்ற ஊர் இருக்கிறது. அங்குதான் **மகாத்மா காந்தி அடிகளின் ஆசிரமம்** உள்ளது. பாலத்தில் இருந்தவாறே காந்தி அடிகளின் ஆசிரமம் நோக்கித் தெண்டனிட்டுத் தொழு தோம்.

பிறகு 5 மைல் நடந்து அழகான **போகனா** என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். இங்கு ஒரு பெரிய **சிவன் கோவில்** உள்ளது. இது ஒரு புராதானமான கோயில். இங்குள்ள சிவலிங்கம் மிகப் பெரியது, எல்லோரும் இதனைத்தொட்டு வணங்கலாம். மகாராஷ்ட்ர மாநிலத் திலேயே இந்தச் சிவன் கோவில் தான் மிகப் பெரிய தாம். இக்கோவிலுக்கு "சங்கர் மந்திர்" என்று

பெயர். இங்குள்ள சிவபெருமானுக்கு "ருத்திரேஸ்வரர்" என்பது பெயர். இக்கோயிலின் முகப்பில் சதுர்முக பிரமாவின் சிலை இருக்கிறது. இதுமாதிரி இன்னொரு சிலை டில்லி அருகில் "புஷ்கர் கோயிலில்" இருக்கிற தாம். சாதாரணமாகப் பிரமாவின் சிலை எந்தக் கோவிலிலும் இராது. பிரமா செய்த தவறு காரணமாக அவருக்குக் கோயிலோ, வழிபாடோ இல்லாமல் போய் விட்டது என்று புராணம் கூறுகிறது.

வார்தா நதிக்கரையில் உள்ள இந்த போகனா என்ற ஊர் சரித்திரப் புகழ் மிக்கது. இங்கிருந்து **போகன்** என்ற அரசன் பழங்காலத்தில்ஆண்டிருக்கிறான். வார்தா ஆற்றின் கரையில் அவன் கட்டிய கோட்டைச்சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன. "சங்கர் மந்திர்" கோயிலும் அவன் கட்டியதே. அவன் நினைவாக இவ் வூருக்குப் "போகனா" என்ற பெயர் ஏற்பட்டது. இக் கோயிலில் உள்ள சிவலிங்கம் மீது தினந்தோறும் சூரி யோதய ஒளி படுகிறது. மக்கள் பக்தியோடு வந்து புண்ணிய நதி நீரால் அபிஷேகம் செய்து பூப்போட்டு, வழிபாடு செய்கின்றனர்.

நாங்கள் கோயிலில் தங்கினோம். ஊர் மக்கள் வந்து எங்களை வரவேற்று, வணங்கிச் சென்றனர். "தாதாஜி பவார்" (போகவா, ஹிங்காகாட் தாலுகா. வார்தா மாவட்டம்) என்ற அன்பர், ஊர் மக்களிடம் இருந்து கோதுமை மாவு வசூலித்து எங்களுக்குத் தந்தார்.

இன்று இக்கோயில் முற்றத்தில் நாங்கள் உணவு சமைத்து உண்டோம். இன்றைய "திருஅமுது" காரைக்குடி திரு. பிச. சுப. கண்ணன் செட்டியார் அவர் களால் வழங்கப் பெற்றது.

இன்று முழுதும் கோயிலில் நாங்கள் தங்கியிருந்த பொழுது, எண்ணற்ற பக்தர்கள் எங்களுடன் இந்தியில் உரையாடி மகிழ்ந்தனர். எங்களுக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் பேசினோம். முழு அளவு இந்தி தெரிந்திருக்குமேயானால் நம் தமிழ் நாட்டின் வரலாற்றையும், பண்பாட்டையும் பற்றி அவர்களுக்கு நன்கு விளக்கி இருக்க முடியும். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை; எங்களுக்கு இந்தி தெரியவில்லை. ஆனால் எங்களுக்கிடையே இருந்த அன்பும், பக்தியும் எங்கட்கு அகமொழிகளாகப் பயன்பட்டன. புற மொழிகள் பொய்த்துப் போயின.

இன்று இரவு எங்களை மகிழ்விக்க ஊர்மக்கள் பலர் பல வாத்தியங்களைக் கொண்டு வந்து வாசித்துப் பஜனைப் பாடல்கள் பாடினர். நாங்களும் தமிழில் பாடினோம். அவர்களும் நம் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர். மறுநாள் நாங்கள் ஹிங்கன்காட்டில் தங்குவதற்கு ஒரு சிபாரிசுக் கடிதம் தந்து அவர்கள் விடை பெற்றனர்.



84. எழுபத்துமூன்றாம் நாள்
(குட்கி-வாணாநதி)
(சிவலிங்க உற்பத்தி-ஹிங்கன்காட்)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். வாட்னர், டருடா என்ற ஊர்களின் வழியே 12 மைல் நடந்து காலை 9½ மணிக்குக் **குட்கி** என்ற சிறிய ஊரை அடைந்தோம். அங்கு தங்குவதற்குத் தக்க இடம் இல்லை. எனவே மரநிழலில் தங்கினோம். வெயில் கடுமையாக அடித்தது; அனல் காற்று வீசியது. எங்கள் துணிகளால் முகத்தை மூடிக் கொண்டு, அனல் காற்றுத் தாக்காமல் முகத்தைப் பாதுகாத்தோம். மடியில் நாங்கள் கட்டியிருந்த பெருவெங்காயம் காய்ந்து உதிர்ந்த பின், புதிய வெங்காயம் வாங்கிக் கட்டிக்கொண்டோம். வெயில் தாக்குதலால் மிகவும் சோர்ந்த பொழுதெல்லாம் வெங்காயத்தை நைத்துச் சிறிது சாறு பருகினோம். பகல் உணவாகப் பழங்கஞ்சி குடித்தோம். சூரிய ஒளியில் மரநிழல் விலக விலக நாங்களும் விலகி விலகி அமர்ந்து ஒருவாறு கடும் பகலைக் கழித்தோம்.

மேடான பகுதிகளில் மாட்டு வண்டிகள் சாதாரணமாக ஏறி இறங்கி ஓடும் அதிசயத்தைக் கண்டு களித்தோம். 4 அடி உயரமான மேடுகளில் கூட மாடுகள் சர்வசாதாரணமாக ஏறித் திடீரென்று கீழே இறங்குகின்றன. இது மனிதர்கள் உயரத்தாண்டுவது போல இருக்கின்றது.

நாங்கள் எல்லோருமே வெயிலால் மிகவும் சோர்ந்திருந்த நிலையில் மாலை 4½ மணிக்குப் புறப் பட்டோம். 6 மைலில் **வாணாநதி** (Wunna river) குறுக் கிட்டது. வாணாநதிப் பாலத்தில் நின்று நதியைக் கண்டோம். சுமார் 75 அடி கீழே தண்ணீர் சிறிது ஓடிக் கொண்டிருந்தது. மிகவும் எச்சரிக்கையாகப் பாலத்தில் இருந்து கீழே இறங்கினோம். நன்றாக இருட்டிக் கொண்டிருந்தது. அப்பொழுது புண்ணிய வாணாநதியில் நீராடிக் கரையேறினோம். அந்த இடத்தில் ஒரு சிறிய **சிவலிங்கத்தைக்** கண்டேன். உடனே அதை எடுத்து மகிழ்ந்தேன். நான் கால் வைத்த இடத்தில் இன்னொரு சிவலிங்கம் உற்பத்தியாகும் காட்சியினைக் கண்டு மெய் சிலிர்த்தேன். வாணாநதிக் கரையில் பாறைகள் உள்ளன. அப் பாறைகளில் முட்டை வடிவக் கற்கள் உள்ளன. அக்கற்களைச் சுற்றி ஆமை ஓடுகள் போன்ற சிறு பாறைத் தகடுகள் போர்த்துள்ளன.

தாமரை மலர் இதழ்களின் நடுவே உள்ள மொட்டுப் போலச் சிவலிங்கம் சிறு பாறைத் தகடுகளின் நடுவே உள்ளது.

பாறைத் தகடுகள் உடைந்து விழ, விழ, நடுவில் உள்ள முட்டை வடிவமான சிவலிங்கம் உற்பத்தியாகி வருகிறது. எல்லாத் தகடுகளும் விழுந்த பிறகு சிவலிங்கக் கல் தானே கீழே விழுகிறது. நதி நீரில் சிவலிங்கக்கல் அடித்துச் செல்லப்படும் பொழுது அது மக்கள் கையில் அகப்படுகிறது. மகாராஷ்ட்ராவில் நர்மதை நதியில் சிவலிங்கம் உற்பத்தி ஆவதாகச் சொல்வார்கள். ஆனால் அதற்கு முன் வாணாநதியில் சிவலிங்கம் உற்பத்தியாகும் கண்கொள்ளாக் காட்சியினைக் கண்டு பெருமிதம் அடைந்தோம். பிறவிப்பயன் எய்திய உணர்வினை எய்தினோம். அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமன் பிறவிப் பயன் எய்திய உணர்வினை அடைந்த தாகக் கம்பர் வருணிக்கிறார் அல்லவா! அப்படிப்பட்ட

மனநிலை எங்கட்கும் ஏற்பட்டது. எங்கள் சோர்வு அகன்றது. தெம்பு பிறந்தது. இப்படிப்பட்ட காட்சிகளால்தான் நாங்கள் எங்களை மறந்து நடக்கமுடிந்தது.

பிறகு தொடர்ந்துநடந்தோம். பாலம் அருகில் ஒரு கிளைப்பாதை வார்தா நோக்கிச் சென்றது. அங்கிருந்து 32 கிலோ மீட்டரில் வார்தா நகரம் இருப்பதாகக் கைகாட்டி கூறியது. காசி செல்லும் நோக்கத்தால் நாங்கள் வார்தா செல்லவில்லை. இப்பொழுது மகாத்மாகாந்தி அடிகள் அங்கு இருந்தால், நாங்கள் வார்தா சென்று அவரைத் தரிசித்து விட்டுத் தான் காசி செல்வோம். எங்கள் துரதிர்ஷ்டம் அவர் இல்லையே! இனி ஒரு காந்தியடிகளை இந்த மனித சமுதாயம் பிறப்பிக்குமா? ஐயாயிரம் ஆண்டுகளு முன்பு ஒரு இர்ாமர்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வள்ளுவர். 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு காந்திஅடிகள்!!! இனி யாரோ?

3 மைல் நடந்து **ஹிங்கன்காட்** என்ற பெரிய நகரை அடைந்தோம். இது தாலுகா தலைநகரம் ஏராளமான அலுவலகங்கள் இருந்தன. ஊர்ச்சாலையில் நடந்து "மகாலட்சுமி கோயிலை" அடைந்தோம். இது ஒரு சிறிய கோயில். இங்கு தங்கலாம் என்று அங்கிருந்த குருக்களுக்குச் சிபாரிசுக் கடிதம் ஒன்று போகனா அன்பர்கள் தந்திருந்ததால் இக்கோயிலுக்கு சென்றோம். மகாலட்சுமியைத் தரிசித்தோம். ஆனால் அந்த இரவு வேளையில் அங்கிருந்த இளைஞர்கள் சிலர் கஞ்சாப் போதையில் திளைத்து இருந்தது போன்ற ஒரு காட்சியினைக் கண்டோம். ஆந்திராவில் துரோணாசலத்தில் இராமர் கோவிலிலும் இதே நிலையைக் கண்டு தான் அன்று அங்கிருந்து புறப்பட்டோம். அதே போல் இன்றும் மகாலட்சுமி கோயிலை விட்டுக் கிளம்பி ஒரு "பெட்ரோல்பங்க்" அருகில் இருந்த மரத்தடியில் இரவு தூங்கினோம். விசுவநாதர் எங்களுக்குத் துணையிருந்தார்.

85. எழுபத்து நான்காம் நாள்
(ஜாம்-மேதினம்-கண்ட்ஹள்ளி)

1-5-83 ஞாயிறு காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். 7 மைல் நடந்து காலை 8 மணிக்கு ஜாம் என்ற சிற்றூருக்கு வந்து சேர்ந்தோம், இன்று **மேதினம்.** தொழிலாளர் நன்மைக்காக இறைவனைப் பிரார்த்தித்தோம். மர நிழலில் தங்கிச் சமையல் செய்து உண்டோம். எப்பொழுது நாங்கள் சமையல் செய்தாலும் இரண்டு நாளைக்கு வருமாறு உணவு சமைப்போம். இதற்கு எங்களுக்கு 10 லிட்டர் குடுவையில் (Water cane) 32 தடவை தண்ணீர் கொண்டு வர வேண்டும். அப்பொழுது தான் நாங்கள் சமையல் செய்து உண்டு, பாத்திரம் கழுவி, சைகிள் ரிக்ஷாவில் 3 கேனில் தண்ணீர் நிரப்பி வைக்க முடியும். இவ்வளவு தண்ணீர் கிடைக்கும் இடத்தில்தான் நாங்கள் தங்கிச் சமையல் செய்வோம்.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டு 9 மைல் நடந்து இரவு 8½ மணி அளவில் **கண்ட்ஹள்ளி** என்ற ஊருக்கு வந்து அங்கிருந்த ''விகாஸ் வித்தியாலயா உயர்நிலைப் பள்ளியில்'' தங்கினோம். எங்களுடன் புறப்பட்ட திரு. கு. பழநியாண்டி மிகவும் சோர்ந்திருந்ததால் நெடுநேரம் ஆகியும் வரவில்லை. எனவே அவரைத் தேடிச் சைக்கிள் ரிக்ஷாவை அனுப்ப முனைந்த பொழுது அவர் மிகவும் களைத்த நிலையில் வந்து சேர்ந்தார். வெயில் தாக்குதல் அவரை மிகவும் பாதித்திருந்தது. பிறகு அவருக்கு மருத்துவ உதவிகள் செய்து ஒருவாறு தூங்கினோம்.

86. எழுபத்தைந்தாம் நாள்

(வயிரவிழா-பாமினி-போரி)

2-5-83 திங்கள் ஆகிய இன்று எங்கள் பயணத்தின் எழுபத்தைந்தாவது நாள். எனவே இன்று அப்பளம் பாயசத்துடன் சமையல் செய்து வயிறார உண்டு வயிர விழாக் கொண்டாட முடிவு செய்தோம். பாயச நினைவோடு காலை 4½ மணிக்குப் பயணம் தொடங்கினோம். "சுனேகா" என்ற ஊர் வழியாக நடந்தோம். கீழ்வானா அணைக்கட்டைச் சேர்ந்த ஆர்.பி. கால்வாய் குறுக்கிட்டது. (Lower Wunna Project R.B. Canal Crossing) 8 மைல் நடந்து பாமினி புகைவண்டி நிலையத் தண்டவாளம் (Level Crossing) கடந்து ஒரு பெரிய மாந்தோப்பில் தங்கினோம். தடபுடலாகச் சமையல் செய்து அப்பளம் பாயசத்துடன் உண்டோம். இன்றையத் "திரு அமுது" காரைக்குடி திரு. கரு. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்களால் வழங்கப் பெற்றது.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டு 6 மைல் நடந்து போரி என்ற சிற்றூரை அடைந்தோம். இருட்டும் நேரம் வந்துவிட்டால் எங்கே தங்கலாம் என்று பார்த்துக் கொண்டே செல்வோம். சாலை அருகில் ஒரு சிறு குடிசை தென்பட்டது. அதன் அருகில் எங்கள் ரிக்ஷாவை நிறுத்தித் தண்ணீர் கேட்டோம். அங்கிருந்த ஒரு கிழவர் எங்களைப் பார்த்து "ராம்ராம்" என்றார். உடனே நாங்கள் "சீதாராம்" என்றோம். தண்ணீர் தந்தார். குடித்தோம். இரவு அங்கே தங்க அனுமதி கேட்டோம். அனுமதித்தார். அவர் பாதுகாப்பில் வீட்டு முற்றத்தில் நிலச் சூட்டில் படுத்து உறங்கினோம். மறுநாள் எங்கள் கண்கள் திறக்க வரவில்லை.

87. எழுபத்தாறு எழுபத்தேழாம் நாள்

நாகபுரி

இன்று (3-5-83) எங்கள் பயணத்தில் ஒரு முக்கியமான கட்டம்- ஏனெனில் இன்று இந்தியாவின் மிகப்பெரிய நகர்களில் ஒன்றாகிய **நாகபுரி**யை அடையப் போகிறோம். அங்கு ஆறஞ்சுப்பழம் மிகமலிவாகக் கிடைக்கும் என்று கேள்விப்பட்டிருந்தோம். ஒரு கூடைப் பழம் ஐந்து ரூபாய்க்குக் கிடைக்கும் என்றெல் லாம் சொல்லி இருந்தார்கள், எனவே ஆறஞ்சுச் சாற்றில் மிதப்பதாகக் கற்பனை செய்துகொண்டு காலை 4-மணிக்குப் பயணம் புறப்பட்டோம். இங்கிருந்து 18 மைலில் நாகபுரி இருக்கிறது. எனவே விரைந்து நடந்தோம்.

காலை 5 மணி அளவில் நன்றாக விடிந்து விடுகிறது, 5¾ மணிக்குச் சூரிய உதயம் ஆகிறது. இரவு 7½மணிக்கு இருள் சூழ்கிறது. எனவே காலை 4 மணிக்கு நடப்பதில் எங்களுக்குத் தொல்லை ஒன்றுமில்லை. 10 மைல் நடந்து நாகபுரி எல்லையில் உள்ள "மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின்" (Central institute of cotton research) அருகில் உள்ள ஒரு தோப்பில் தங்கினோம். நம் காரைக்குடியில் "மத்திய மின்—இரசாயன ஆராய்ச்சி நிலையம்" (Central electro-chemical research institute) இருக்கிறதல்லவா? அது போல் நாகபுரி எல்லையில் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இதுபோல் இந்தியாவில் பன்னிரண்டு விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன,

நாங்கள் தங்கியிருந்த தோப்பில் மா, பலா, வாழை, தென்னை, ஆறஞ்சு, எலுமிச்சை, கொய்யா, முதலிய மரங்கள், செடி கொடிகள் எல்லாம் இருந்தன. பெரிய கிணற்றில் இருந்து நீர்பாய்ந்தது. நன்கு குளித்தோம். தென்னை மரநிழலில் தங்கினோம். தென்னை நிழல் மாறிமாறி அமைந்தது. இதனால்தான் முற்காலத்தில் ''தென்னம்பிள்ளை நிழலும் சின்னப் பிள்ளை சகவாசமும் ஆகாது'' என்றார்கள். இந்த இரண்டும் நிரந்தரம் இல்லாதது.

தோட்டக்காரர் எங்களுக்கு நிறைய எலுமிச்சம் பழம் வழங்கினார். சர்பத் செய்து சாப்பிட்டோம். இங்கிருந்து மதுரை ''நகரத்தார் மலர்'' பத்திரிகைக்கு நமது காசியாத்திரை பற்றிய கட்டுரை எழுதி அனுப்பி னேன். அது தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது,

மாலை 5 மணிக்குப் புறப்பட்டு 8 மைல் நடந்து சாயிபாபா கோயில் வழியாக நாகபுரி நகருக்குள் நுழைந்தோம். அங்கு எங்கு தங்குவது என்றே தெரிய வில்லை. ஹைதராபாத் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. முத்தையா செட்டியார் அவர்கள் எங்கட்கு சி.எம். டங்ககாக்.

C. M. Dangagach,
Kandalwal Brothers Limited
43 Central Avenue Road,
Nagpur 18 Phone: 42992

என்பவரின் முகவரியினைக் கொடுத்திருந் தார்கள். அந்த முகவரிக்கு எங்களது கடிதங்களை அனுப்பும்படி எல்லோருக்கும் தெரிவித்திருந்தோம். எனவே தொலைபேசி மூலம் டங்ககாக் என்பவரோடு பேசினேன். அவர் எங்களை மருத்துவக் கல்லூரி அருகில் உள்ள ''காட்கி மகராஜ் தர்மசாலைக்கு'' வரும்படி

சொன்னார். நாங்கள் சந்தடிமிக்க போக்குவரத்துக்கு நடுவே பெருந்தொல்லையோடு நெடுந்தூரம் நடந்து அடையாளம் தெரியாமல் வேறொரு தர்மசாலையை அடைந்தோம். அங்கு செல்லும் பொழுதே மணி 9 ஆகிவிட்டது. தங்கலாம் என்ற ஆர்வத்தோடு சென்றோம். கால்கள் கெஞ்சின. தர்மசாலைக்குள் நுழைந்து அங்கிருந்த தலைமை நிர்வாகியோடு பேசினேன்.

அவர் கூறிய பதில் எங்களுக்கு அதிர்ச்சி அளித்தது. ''மன்னிக்க வேண்டும் திரு. சோமசுந்தரம்! இங்கு இடம் தீர்ந்துவிட்டது. ஆகவே நீங்கள் வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார். எனவே வேறு வழியின்றி அங்கிருந்து 9 மணிக்கு மேல் புறப்பட்டோம். அப்பொழுதும் சாலையில் மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்ததால் எங்கள் அன்பர் திரு. அய்யாச்சாமியைக் கூட்டத்தில் எங்கோ தவற விட்டு விட்டோம்.

''நாகபுரி டைம்ஸ்'' (Nagpur Times) என்ற பத்திரிகையில் எங்களைப் பற்றிய செய்தி அன்று காலையில் வந்திருந்ததால் அதனைப் படித்திருந்த **''அனில்''** முதலிய மூன்று கல்லூரி மாணவர்கள் எங்களை வரவேற்றுக் காட்கி மகராஜ் தர்மசாலைக்கு அழைத்துச் சென்று உதவினர். அவர்கள் விடைபெற்றதும் நான் தர்மசாலை நிர்வாகியை அணுகி எங்கள் யாத்திரை பற்றிக்கூறித் தங்க இடம் கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் மேலும் அதிர்ச்சி அளித்தது. ''என் இனிய நண்பரே! இங்கு மருத்துவ சிகிச்சை பெறும் நோயாளிகள் மட்டுமே இலவசமாகத் தங்கலாம். யாத்திரிகர்கள் தங்க இயலாது'' என்றார். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அப்பொழுது மணி 10 ஆகி விட்டது. இன்று நாங்கள் சுமார் 25 மைலுக்குமேல் நடந்து பெரிதும் களைத்திருந்தோம். எங்காவது

படுத்துத் தூங்க வேண்டும். சந்தடிமிக்க வீதியில் தூங்க முடியாது. அது நம் பொருள்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்க முடியாது. எனவே சத்திரத்தின் முற்றத்தில் உள்ள மரநிழலில் தூங்க அனுமதி கேட்டேன். அதற்கும் புண்ணியவான் மறுத்து விட்டார்.

நாங்கள் சத்திரத்தின் முற்றத்தில் சைக்கிள் ரிக்ஷாவைத் தைரியமாக நிறுத்தி, கஞ்சிப்பானையைக் கீழே இறக்கிக் கஞ்சி குடித்தோம். வயிறு காய்ந்து கிடந்தது! இப்படி எங்கள் வயிறு காய்ந்து கிடந்த நாட்களுக்குக் கணக்கு வழக்கில்லை. அரை வயிற்றுக்குக் கஞ்சி குடித்து மீதி வயிற்றைத் தண்ணீரால் நிரப்பினோம். இனி நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வீதிக்குச் சென்று படுக்க வேண்டும். அப்பொழுது மணி 10½. "இறைவா! இது என்ன சோதனை!" என்று விசுவநாதரை நினைத்தேன். என்ன ஆச்சரியம்! அப்பொழுது கையில் சில கடிதங்களுடன் ஒருவர் ஆட்டோ ரிக்ஷாவில் இருந்து இறங்கினார். அவர்தான் "டங்ககாக்" ஆக இருக்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு சொல்லியது. உடனே ஓடிச் சென்று "நீங்கள் தான் டங்ககாக்கா!" என்று கேட்டேன்.

"ஆம் நான்தான் டங்ககாக். நீங்கள்தான் கவிஞர் சோமசுந்தரமா" என்று கேட்டார். "ஆம்" என்றேன். பிறகு நடந்த கதை எல்லாம் சொன்னேன். அவர் தர்ம சாலையின் நிர்வாகியை அணுகிப் பேசினார். அவர் நாங்கள் தங்க அனுமதிக்க விதி இடம் தரவில்லை என்று சொல்லிவிட்டார். பிறகு முற்றத்தில் மணலில் தங்க அனுமதி கேட்டார். அதற்கும் நிர்வாகி மறுத்து விட்டார். உடனே டங்ககாக் தனக்குத் தெரிந்த ஒரு (எம்.எல்.ஏ) சட்ட மன்ற உறுப்பினரைத் தொலை பேசி மூலம் அழைத்துச் சிபாரிசு செய்யச் சொன்னார். எங்கள் நல்ல நேரம்! அந்தச் சட்டச்சபை உறுப்பினர்

அன்று ஊரில் இருந்தார். எங்களைத் தர்ம சாலையின் முற்றத்து மணலில் அன்று இரவு மட்டும் தங்க அனுமதிக்குமாறு தர்மசாலை நிர்வாகிக்குச் சிபாரிசு செய்தார். என்ன வியப்பு! விதிவளைந்து கொடுத்தது!! நிர்வாகி எங்களைத் தர்மசாலை முற்றத்து மணலில் தங்க அனுமதித்தார். மறுநாட் காலை ராம்மந்திர் அருகில் உள்ள "சேட் ஜம்னாதாஸ் போதாதார் தர்ம சாலை"க்கு வருமாறு எங்களிடம் கூறிவிட்டு டங்ககாக் விடைபெற்றார். மணலில் படுத்த மறுநிமிடமே நாங்கள் தூங்கிப்போனோம். டாங்ககாக் கொடுத்த கடிதங்கள் எங்கள் பைக்குள் உறங்கின.

77-ஆம் நாள் விடிந்தது. நேற்று இரவு முதல் காணாமல் போன அய்யாச்சாமியை இன்னும் காணோம். எங்கள் இருப்பிடம் அவருக்கு எப்படித் தெரியும். அவரை எங்கே என்று நாங்கள் தேடுவது? இந்த நிலையில் நாங்கள் மனம் தடுமாறிய பொழுது எங்கள் பக்தர்களில் ஒருவராகிய திரு. தங்கவேலுபிள்ளை "நான் போய் அவரைக் கண்டு பிடித்து வருகிறேன்" என்று தைரிய மாகப் புறப்பட்டார். அப்பொழுது மணி 7. "ஒரு மணி நேரத்திற்குள் வாருங்கள். விசுவநாதர் அருள்புரிவார்" என்று அவரை அனுப்பினேன்.

சரியாக மணி 8 அடித்தது. தங்கவேலுபிள்ளை யும் அய்யாச்சாமியும் உள்ளே நுழைந்தனர். எங்களுக்கு ஒரே ஆச்சரியம்! எப்படி இவரைக் கண்டு பிடித்தீர்கள்?' என்று கேட்டேன். அதற்குத் தங்கவேலுபிள்ளை கூறிய பதில் எங்களைமிகவும் வியப்பில் ஆழ்த்தியது. "கடவுளே! என்று கூறிக் கொண்டு நடந்தேன். ரயில் நிலையம் வந்தது. அதற்குள் இவர் இருக்கலாம் என்று நுழைந்து பார்த்தேன். இவர் அங்கே ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்தார். அழைத்து வந்தேன். எல்லாம் கடவுள் கிருபை!" என்றார்.

அய்யாச்சாமியைப் பார்த்துக் கேட்டேன் ''என்ன நடந்தது?'' என்று. அதற்கு அவர்கூறிய பதில் வருமாறு;

''ஒரு சத்திரத்தில் இடமில்லை என்றதும் வெளியே வந்த பொழுது கூட்டத்தில் பாதை மாறிப் போய்விட்டேன். பிறகு உங்களைக் காண முடியவில்லை. ரயில் நிலையத்தைக் கண்டேன். அங்கே தங்கிவிட்டேன். இன்று எப்படி உங்களைக் கண்டு பிடிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுது கடவுள் போலத் தங்கவேலுபிள்ளை வந்து என்னைக் கண்டு பிடித்தார். எனக்குத் தமிழ் கூடச் சரியாகப் பேசத் தெரியாது. ஆங்கிலம் இந்தி எதுவும் தெரியாது. உங்களைப் பிரிந்து நான் படாத பாடுபட்டு விட்டேன். இனி என் உயிர் போனாலும் உங்களை விட்டுப் பிரியமாட்டேன்'' என்று கூறி அழுதார். இதைவிடப் பெரிய ஆச்சரியம் என்ன வென்றால் அவரது பையில் திரு. இராகவன், திரு. சுப்பையா ஆகியோரின் பல நூறு ரூபாய்த் தொகை வேறு இருந்தது. அந்தப் பை தொலைந்திருந்தால் பெரிய தொல்லை ஏற்பட்டிருக்கும். ஆனால் அய்யாச் சாமி இரவு முழுதும் தூங்காமல் அந்தப் பையைப் பாதுகாத்திருக்கிறார். ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.'' என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு நல்ல உதாரணம் ஆகும்

4-5-83 காலை 8 மணிக்குப் புறப்பட்டு 7 மைல் நடந்து ''சேட் ஜம்னாதாஸ் போதார் தர்மசாலை''க்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஒருநாள் தங்கக் கட்டணம் ரூ 7-50 செலுத்தித் தங்கினோம். இந்தச் சத்திரம் சென்ட்ரல் அவெனியூ சாலையில் நாகபுரி கிழக்கு ரயில் நிலையம் அருகில், போதாரேஸ்வரர் ராம் மந்திர் சமீபம் இருக்கிறது. இங்கு சமையல் செய்து உண்டோம். இன்று முழுதும் எங்களுக்குத் ''திரு அமுது'' படைத்தவர்கள்

சண்முகநாதபுரம் திரு. சி. அ. லெ. லெட்சுமணன் செட்டியார், சண்முகநாதபுரம் திரு. மு. பெ. ராம. முத்துராமன், தேவகோட்டை திரு.ஆர்.எம். மாணிக்கம், அமராவதி புதூர் குருகுலம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் அலுவலர்கள் ஆவர். நாகபுரியில் செலவுகள் மிகுதி. ஆகையால் இவர்கள் செலவில் இன்று முழுதும் திரு அமுது வழங்கப் பெற்றது. இன்று தேவகோட்டைக்கு எமது நாகபுரி நுழைவு பற்றித் தந்தி கொடுத்தோம்.

சத்திரம் அருகில் உள்ள இராமர் கோயில் மிக அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. கண்ணைப் பறிக்கும் சலவைக் கற்களால் அது கட்டப்பட்டுள்ளது. அங்குள்ள இராமர்-இலட்சுமணர்-சீதையின் சலவைக்கல் சிலைகள் ராஜா-ராணி அலங்காரத்தில் உள்ளன. அந்தத் தெய்வீக உருவங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். பசி தெரியாது. அங்கு ஏராளமான மக்கள் வந்து அமைதியாக வழிபாடு செய்து செல்கின்றனர். அனைவர்க்கும் வெள்ளைப் பொறி போன்ற சீனி மிட்டாய் பிரசாதமாக வழங்கப்படுகிறது. அக்கோயி லின் கோபுரம் கூரிய ஊசி போன்று உள்ளது. இப்படித் தான் வடநாட்டுக் கோபுரங்கள் அனைத்தும் இருக்கும்.

சத்திரத்தில் நாங்கள் தங்கி இருந்த பொழுது அங்கு **சின்னராஜ்** என்ற ஒரு தமிழரைச் சந்தித்தோம். அவரும் அவர் தாயாரும் அங்கு வேலை செய்கிறார் களாம். அவர்கள் எங்கட்கு நிறைய உதவிகள் செய் தார்கள். உணவுப் பொருள்கள், காய்கறிகள் எல்லாம் வாங்கி வந்து தந்தனர். எங்கள் மஞ்சள் ஆடைகள் கிழிந்துவிட்டதால் மஞ்சள் துணிகள் வாங்கித் தந்தனர். எங்கள் சைக்கிள் ரிக்ஷா முழுவதுமாகப் பழுதாகி இருந்தது. அதனைச் செப்பனிடவும் உதவி செய்தனர். இப்படி எங்கட்கு இறைவன் அங்கங்கே உதவி செய்திரா விட்டால் எங்கள் பயணம் திட்டமிட்டபடி நிறைவேறி இருக்குமா? இதற்குப் பதில் யாரால் சொல்ல முடியும்?

88. எழுபத்தெட்டாம் நாள்

(பிள்ளிநதி-காம்ப்டி-இராணுவப் பாசறை)

காலை 4 மணிக்குப் புறப்படுவதாகத் திட்டம் தீட்டி இருந்தோம். காலை 4 மணிக்கே எழுந்து நீராடிப் புறப் பட்டோம். ஆனால் சத்திரத்தின் வெளி வாயிற் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. காலை 6 மணிக்குத் தான் கதவு திறக்கப்படும் என்று சொல்லி விட்டார்கள். எனவே கதவு திறப்பதற்காகக் காத்திருந்தோம். நாங்கள் மேலும் 2 மணி நேரம் நாகபுரியில் தங்கி இருக்க வேண்டும் என்பது விதி போலும்! எனவே வெளியூர் களுக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களை எழுதலானோம்.

நாங்கள் புறப்பட்ட பொழுது டங்ககாக் வந்து, எங்களுக்கு ஜபல்பூரில் உள்ள ஒரு நண்பரின் முகவரி யினைத் தந்தார். அந்த ஜபல்பூர் நணபரின் முகவரிக்கும் கடிதம் எழுதி எங்கள் வருகைபற்றி அறிவித்தோம். இனி எங்கட்கு உரிய கடிதங்களை எல்லாம் ஜபல்பூரில் உள்ள நண்பரின் முகவரிக்கு அனுப்பும்படி எல்லா ஊர் களுக்கும் கடிதம் மூலம் தெரிவித்தோம். "இன்னும் 16 நாளில் ஜபல்பூர்! அதன்பின் 22 நாளில் காசி" எனவே எங்கள் பயணம் காசியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தது.

நேற்று நாகபுரி "ஸ்டேட் பாங்கில்" எங்கள் "பயணச் செக்குகளை" ரூபாயாக மாற்றிக் கொண் டோம். அப்பொழுது அங்கு பணியாற்றிய ஓர் அன்பர் கூறியதாவது...'' இப்படி ரூபாய் வெளியே தெரியும் படியாக எண்ணாதீர்கள். பைக்குள் மறைத்து வைத்துக்

கொள்ளுங்கள். நீங்கள் காட்டுப் பாதை வழியாக நடந்து செல்கிறீர்கள் என்பதும், உங்களிடம் ரூபாய் இருக்கிறது என்பதும் தெரிந்தால் உடனே திருடர்கள் உங்களைப் பின்பற்றி வந்து கொள்ளையிடுவர். கொள்ளைக்காரர்களுக்குத் தகவல் தரக் கூடியவர்கள் நாகபுரியில் நிறையப் பேர் உண்டு. எனவே எச்சரிக்கை யாகச் செல்லுங்கள்'' கடிகாரத்தைக் கூடக் கழற்றி உள்ளே வையுங்கள்'' என்று கூறினார். அவர் சொற்கள் எங்கள் காதுகளில் எதிரொலித்தன. எனவே ரூபாய் களைப் பத்திரமாக வைத்துக் கொண்டு நடந்தோம். எங்களுக்கு முன்னால் சைக்கில் ரிக்ஷா புறப்பட்டது. அது நாங்கள் குறிப்பிட்ட இடத்தில் இல்லை. எங்கோ வழி மாறிச் சென்று விட்டது. எனவே 3 மைல் நடந்து நாகபுரியின் வட எல்லையினை அடைந்த நாங்கள் அங்கிருந்த ஒரு தொழிற்சாலை முற்றத்து நிழலில் தங்கினோம். நெடுஞ்சாலையில் நின்று ரிக்ஷாவையே எதிர்பார்த்துக் காத்திருந்தோம். நீண்ட நேரம் கழித்து சைக்கிள் ரிக்ஷா அங்கு வந்து சேர்ந்தது. ஒரு வழிப்பாதையில் (one way) அது வர நேர்ந்ததால் பாதை மாறி—திசை மாறி—எங்கெங்கோ சென்று இறை யருளால் எங்களிடத்திற்கு வந்து சேர்ந்தது.

நாகபுரியில் நுழைந்த அன்று ஓர் ஆளைத் தவற விட்டோம். நாகபுரியை விட்டுப் புறப்பட்ட அன்று சைக்கிள் ரிக்ஷாவைத் தவற விட்டோம். என்றாலும் விசுவநாதர் எங்களை எப்படியோ சேர்த்து வைத்தார்.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டோம். வழியில் **பிள்ளி நதி**யில் நீராடினோம். 8 மைல் நடந்து இரவு 8 மணி அளவில் **காம்ப்டி** என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம் இங்கு இந்திய அரசாங்கத்தின் **இராணுவப் பாசறை** இருக் கிறது. அதனைப் பார்த்தவாறு நடந்தோம். ஊரின் எல்லையில் உள்ள சரஸ்வதி கோயிலை வணங்கிச் சிறிய

சிவன் கோவிலை அடைந்து வழிபட்டோம். அங்கு இரண்டு இந்துக்கள் இருந்தனர். அவர்கள் எங்களை வரவேற்றுத் தண்ணீர் முதலியன தந்தனர். இப்பகுதியில் முஸ்லிம்கள் மட்டுமே உள்ளனராம். இவர்கள் இரண்டே இரண்டு இந்துக் குடும்பங்கள் மட்டும் தான் இங்கு உள்ளனராம். இவர்கள் உதவியினால் சமையல் செய்து உண்டோம்.

இன்றைய மதியத் ''திருஅமுது'' அமராவதி புதூர் (ஓட்டுமில்) திரு எஸ். அழகப்ப செட்டியார், கோட்டையூர் நகரத்தார்கள் ஆகியோரால் வழங்கப் பெற்றது. இரவுத் ''திருஅமுது'' பள்ளத்தூர் வி.ஏ.ஆர். அழகப்பச்செட்டியார் அவர்களால் வழங்கப்பெற்றது.

எங்கள் கைக் கடிகாரங்களைக் கழற்றிப் பைக்குள் வைத்துக் கொண்டோம். இனி எங்கட்கு மணிகூடத் தெரியாது. மத்தியப்பிரதேசத்தைப் பற்றி அவ்வளவு பயம்!

89. எழுபத்தொன்பது நாள்

(கன்ஹான் நதி—கருங்குரங்கு புழுதிப் புயல் - மன்சார்)

காலை 4¾ மணிக்குப் பயணம் தொடங்கினோம். 3 மைலில் **கன்ஹான் நதி**யினைக் கண்டோம். அது ஒரு பெரிய நதி என்றாலும் கடும் கோடை ஆகையால் நதியின் நடுவே 4 அடி ஆழத்திற்குத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. களைப்புத் தீர நதியில் நீராடி மகிழ்ந்தோம். அந்நதிக் கரையில் கன்ஹான் என்ற பெயரில் ஓர் ஊர் இருக்கிறது. அங்கு உணவுப் பொருள்கள் விலைக்கு வாங்கிச் சேகரித்துக் கொண்டோம். மேலும் நடந்து ஒரு கிராமத்தில் ஒரு விவசாயியின் வீட்டின் பின்பக்க மாட்டுக் கொட்டகையில் தங்கினோம். சமையல் செய்து உண்டோம். இன்றைய மதியத் "திரு அமுது" பள்ளத்தூர் திரு. ஆர். எம். ஏ. ஆர். ஏ. சிதம்பரம் அவர்களாலும். கானாடுகாத்தான் திரு. ஏ. பழநியப்பன் களாலும் வழங்கப் பெற்றன.

இவ்வூரில் இன்று மாலை மாட்டு வண்டிப் பந்தயம் நடைபெற இருப்பதாகச் சொன்னார்கள். அதனால் ஏராளமான மாட்டு வண்டிகள் அவ்வூர்க்கு வரக்கண்டோம். நூற்றுக் கணக்கில் மக்களும் திரண்டு வந்து ஊர் மைதானத்தில் குழுமினர். மாலையில் அந்த மைதானம் முழுவதும் மக்கள் வெள்ளமாகக் காட்சி அளித்தது. அதைப் பார்த்தவாறே மாலையில் நாங்கள் 4½ மணிக்குப் புறப்பட்டோம். மைதானத்தில் மாட்டு வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன. நாங்கள்

மைதானக் காட்சியைக் கண்டு களித்தவாறே நெடுஞ் சாலையில் நடந்து கொண்டிருந்தோம். இருந்து களிக்க நேரம் இல்லை.

''ஆரியக்கூத் தாடினாலும் தாண்டவக் கோனே—காசுக் காரியத்தில் கண் வையடா தாண்டவக் கோனே!''
என்பது பழமொழி அல்லவா?

வழியில் நிலக்கரிச் சுரங்கம் (Western Coal Fie'ds Ltd.) ஒன்று இருக்கக் கண்டோம். அதன் தொழிலாளிகளையும் சந்தித்தோம். சிறிது தொலைவில் நெடுஞ்சாலையில் சுமார் பத்துப் பதினைந்து பெரிய **கரும் குரங்குகள்** பாதையை மறித்துக் கொண்டு நின்றன. ஒவ்வொரு குரங்கும் சுமார் ஆறடி உயரம் இருக்கும். பார்க்க எருமை போலவே இருந்தன. அவை தாவிச் செல்வது பார்க்க ஆச்சரியமாக இருந்தது. நீண்ட தூரத்திற்குத் தாவிச் செல்லும் ஆற்றல் அவற்றுக்கு இருந்தன. பல குரங்குகள் சாலையை விட்டு அகலவே இல்லை. என்ன செய்வது என்று அறியாமல் ஒரு வினாடி திகைத்தோம். மறு வினாடி ''ராம் ராம்'' என்று கூறிக் கொண்டு, கைகூப்பியவாறு சென்றோம். குரங்குகள் சிறிதும் அசையாமல் அப்படியே நின்றன. நாங்கள் ஓரமாக விலகி நடந்து அவற்றின் அருகே சென்றோம். அவை எங்களை ஒன்றும் செய்யவில்லை. எல்லாம் அந்த ஆஞ்சநேயன் அருள்!

வழியில் பெரிய **புழுதிப் புயல்** சிறிது நேரம் அடிந்து ஓய்ந்தது. ஓர் இடத்தில் ஆறஞ்சுச் செடிகள் நடப்பட்டிருந்த காட்சி கண்டோம். நாகபுரியில் இந்த ஆண்டு ஆறஞ்சுப்பழ விளைவு சரியில்லாததால் ஆறஞ்சுப் பழமே கிடைக்கவில்லை. எங்கள் கற்பனை நாகபுரியில் பொய்த்துவிட்டது. இங்கு இப்பொழுதுதான் ஆறஞ்சுச்

செடிகள் பயிர் செய்யப்படுகின்றன. எங்களுக்கு வழியில் பழம் சரிவரக் கிடைக்கக் கூடாது என்பது விதிபோலும்.

இரவு 7 மணிக்கு **மன்சார்** என்ற ஊரை அடைந்தோம். அங்கு முதலில் சென்ற எங்கள் ரிக்ஷாவைக் கண்ட ஒரு சேட் எங்கள் முயற்சியை மிகவும் பாராட்டி இருக்கிறார். எனவே ஊரின் தொடக்கத்தில் உள்ள சேட் வீட்டில் எங்கள் ரிக்ஷா நிற்கக் கண்டோம். சேட்டும், அவர் மனைவியும் எங்களை அன்புடன் வரவேற்று மோர் தந்தனர்.

இரவு அவர் வீட்டு முற்றத்தில் தங்கினோம். இன்று இரவு ''திரு அமுது'' கானாடு காத்தான் திரு. ந. நா. ராம. நாராயணன் செட்டியார் அவர்களால் வழங்கப்பெற்றது. இரவு கனமழை பெய்தது. கடுங் குளிரும் இருந்தது. இரண்டையும் தாங்கிக் கொண்டோம்.

90. எண்பதாம் நாள்
(சோர்பாவ்லி—பவனி)

காலை 5½ மணிக்குப்புறப்பட்டோம். பாதை மலைப்பாங்காக இருந்தது. காடும் பயங்கரமாக இருந்தது. எச்சரிக்கையாக நடந்து சென்றோம். "**சோர்பாவ்லி**" என்ற கிராமம் வழியாக 7 மைல் நடந்தோம். அரசாங்கப் பயணிகள் மாளிகை அருகில் மரத்தடியில் பகல் தங்கினோம். இன்று "திரு அமுது" கானாடுகாத்தான் திரு. கு. முரு. சிவ. முருகப்ப செட்டியார் அவர்களாலும், திரு. சொ. வீர. இராம நாதன் செட்டியார் அவர்களாலும் வழங்கப்பெற்றது.

மாலை 5 மணிக்குப் புறப்பட்டு நடந்தோம். சரியான மலைக்காட்டுப் பாதை தொடர்ந்தது. 4 மைல் நடந்து மாலை 6½ மணிக்கு **பவனி** என்ற சிற்றூர்க்கு வந்து சேர்ந்தோம். அங்கு எங்கே தங்குவது என்று ஆராய்ச்சி செய்தவாறு நடந்தோம். நாங்கள் சாலையில் தமிழில் பேசிக்கொண்டு நடந்தபொழுது எங்களை ஒருவர் பார்த்து ஓடிவந்து "நீங்கள் தமிழ் நாட்டில் இருந்து வருகிறீர்களா?" என்று தமிழில் கேட்டார். எங்கட்கு மிகவும் வியப்பாக இருந்தது. "ஆம்" என்று பதில் சொல்லி எங்கள் பயணம் பற்றிக் குறிப்பிட்டோம். உடனே அவர் தன்னைப் **பழனிச்சாமி** என்று அறிமுகம் செய்துகொண்டார். அங்கு "சென்னை வங்கி" **(Madras Bank)** என்ற பெயரில் தமிழக முஸ்லிம் அன்பர்கள் பலர் கூடித் தொழில் நடத்துவதாகவும்,

அதில் தானும், யூசப், அழகு என்ற தமிழக இளைஞர் களும் பணி புரிவதாகவும் கூறி, எங்களை அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

அவர்கள் ஒரு சிறு சந்தில், ஒரு சிறிய மண் வீட்டில் வசிக்கிறார்கள். அங்கிருந்து நாள்தோறும் வட்டித் தொகைகளைக் கிராமம் கிராமமாகச் சென்று வசூலித்து வருவார்களாம். அப்பகுதியிலும் கொள்ளைக் கூட்டம் உண்டாம். என்றாலும் இவர்கள் மிகவும் எச்சரிக்கையாகப் பணம் வசூலித்து வருவார்களாம்.

எங்களை அவர்கள் அன்பாக உபசரித்தார்கள். சப்பாத்தி சுட்டுத் தந்து காப்பி போட்டுத் தந்தார்கள். அவர்கள் ஏழ்மையான நிலையில் இருந்தாலும் எங்களை அன்பாக விருந்தோம்பியது மறக்க முடியாதது. இரவு அங்கே நாங்கள் தூங்க வசதி செய்து கொடுத்தார்கள். நாங்கள் தூங்கத் தொடங்கும் பொழுது யூசப் எங்களிடம் ஒரு முக்கிய ஆலோசனை கூறினார்... "நாளை நீங்கள் மத்தியப் பிரதேசத்தில் நுழையப் போகிறீர்கள். நாளை மறுநாள் நீங்கள் விந்திய மலை மீது ஏறப்போகிறீர்கள். நாளை முதல் தொடங்கும் மலையிலும், மத்தியப்பிரதேசக் காடுகளிலும் சிங்கம், புலி, கரடி, யானை, காட்டெருமை முதலிய மிருகங்கள் நிறைய உள்ளன. புலிகள் தண்ணீர் குடிப்பதற்காகச் சாலையோரமாகச் சிலசமயம் வரலாம். எனவே எச்சரிக்கையாகச் செல்லுங்கள். எல்லோரும் ஒன்றாகச் செல்லுங்கள். கொள்ளைக் கூட்டம் வந்தாலும் வரலாம். அப்பொழுதும் எச்சரிக்கையாகச் செயற் படுங்கள். நன்கு விடிந்த பிறகு செல்லுங்கள்'' என்று கூறினார். அவரது ஆலோசனையைக் கேட்ட பிறகு எங்கள் தூக்கத்தில் புலியும், கரடியும் கொள்ளைக் கூட்டமும் கனவில் வராமல் இருந்தது விசுவநாதர் திருவருளே!

91. எண்பத்தொன்றாம் நாள்

(மோர்பட்டா - சிறுஓடை-மத்தியப் பிரதேசஎல்லை-கவாசா)

காலை 5½ மணிக்கு நன்கு விடிந்தது. அதன் பிறகு புறப்பட்டோம். சிறிது தூரத்தில் மலையும் பயங்கரக்காடும் ஆரம்பித்தன. ஓரளவு மழையும் பெய்தது. மழையில் நனைந்தவாறே நடந்தோம். தங்க இடம் இல்லை. எனினும் கவலையில்லாமல் நடந்தோம். வெயில் போல மழையும் எங்கள் உடம்புக்கு ஒத்துப் போய்விட்டது. மலைக்காட்டில் நுழைந்தபோது அங்கே ஓர் அறிவிப்புப்பலகை தொங்கிக்கொண்டிருந்தது. "இப் பகுதியில் புலி முதலிய காட்டு மிருகங்கள் உண்டு. ஜாக்கிரதை" என்று இந்தியிலும், ஆங்கிலத்திலும் எழுதப் பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் எங்கள் முன் புலி உறுமிக் கொண்டு நிற்பது போலவே தெரிந்தது. எனவே தனித்தனியாக நடந்த நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நடக்கத் தொடங்கினோம்.

வழியில் "டோட்லோடோ அணைக்கட்டு" கட்டப்பட்டு வரும் செய்தியினை அரசாங்க அறிவிப்புப் பலகை மூலம் அறிந்தோம். "டிவாலாபார் வழியாக 10 மைல் நடந்து சுமார் 10 மணி அளவில் **மோர்பட்டா** என்ற ஊரில் உள்ள தர்ஹா முன்பு தங்கினோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். இன்று எங்களுக்கு ஒரு முக்கிய நாள். ஏனெனில் இன்று மாலை

இன்னும் சிறிதுநேரத்தில் **மத்தியப்பிரதேசத்தில்** நுழையப் போகிறோம். அதை நினைத்த பொழுது எங்களுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது. சுமார் மூன்று மைல் நடந்தோம். ஒரு **சிறிய ஓடை** ஓடிக் கொண்டிருந்தது. அதன் மீது ஒரு சிறிய பாலம் இருந்தது. இந்தப் பாலம் தான் மகாராஷ்ட்ராவின் எல்லை. இதனைக் கடந்தால் மத்தியப்பிரதேச மாநிலம் தொடங்குகிறது. 14 நாட்கள் மகாராஷ்ட்ர வாழ்க்கை இன்றுடன் முடிகிறது.

பாலத்தின் மீது மகிழ்ச்சியுடன் நடந்தோம். ''காசி விசுவநாதருக்கு அரோகரா'' முதலிய முழக்கங்களை வழக்கம்போல் எழுப்பிக்கொண்டு, பாலம் கடந்து, மத்தியப் பிரதேச மண்ணில் மாலை 6 மணிக்குக் கால் வைத்தோம். அப்பொழுது எங்கள் உள்ள உணர்வு களை வர்ணிக்க வார்த்தையில்லை. எங்கள் குழுவினர் அனைவர்க்கும் சாக்லெட் மிட்டாய் கொடுத்து மகிழ்ந் தேன்.

சுமார் 2 மைல் நடந்து இருள் சூழு முன்பு மத்தியப்பிரதேசத்தின் முதல் ஊராகிய **கவாசா** சென்ற டைந்தோம். அங்கு ஒரு சிறிய சிவன்கோலில் இருந்தது. அங்கு சென்று இறைவணங்கிக்கோயில் முற்றத்தில் தங்கினோம். கோயிலுக்கு முன்னால் ஒரு தேநீர்க் கடை இருந்தது. அங்கு சென்று தேநீர் பருகினோம். எங்கள் யாத்திரைபற்றி அறிந்த அக்கடைக்காரர் **திலீப்** என்பவர் எங்கட்கு இலவசமாகத் தேநீர் வழங்கிப் பாராட்டினார் பிறகு அவர் எங்கட்கு ஓர் ஆலோசனை வழங்கினார். அது வருமாறு.

''நான் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற் றுள்ளேன். பல ஆண்டுகளாக இங்கு தேநீர்க் கடை நடத் துகிறேன். இதுவரை உங்கள் பயண அனுபவம் வேறு. இனிமேல் புதிய அனுபவங்களை நீங்கள் பெற நேரலாம்.

வழியில் கொள்ளைக்கூட்டம் உண்டு. எனவே இதோ அருகில் உள்ள போலீஸ் நிலையத்தில் உங்கள் பெயர், முகவரி சைக்கிள் ரிக்ஷா எண் முதலியவற்றைப் பதிவு கொள்ளுங்கள். அது உங்களுக்குப் பிறகு மிகவும் பயன்படலாம்'' என்றார். அவரது பேச்சில் ஓர் எச்சரிக்கைக் குறிப்பு இருந்தது. எனவே நேராகப் போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்து எங்கள் அனைவரின் பெயர், முகவரி, சைக்கிள் ரிக்ஷா எண் முதலிய எல்லா விபரங்களையும் பதிவு செய்து எங்கள் பயண நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் கொடுத்து வந்தேன். அங்கிருந்த போலீஸ் அதிகாரிகள் எங்களைச் சிவன் கோயிலில் இரவு படுத்திருக்கச் சொன்னார்கள். நன்கு விடிந்ததும் மறுநாள் பயணம் செய்யச் சொன்னார்கள்.

நாங்கள் சிவன் கோவில் முற்றத்தில் தங்கினோம். இன்றைத் ''திரு அமுது'' நேமத்தான்பட்டி திரு. பழ குமரப்ப செட்டியார், வலையட்டி திருமதி ராம. ராஜாமணி ஆச்சி ஆகியவர்களால் வழங்கப் பெற்றது.

92. எண்பத்திரண்டாம் நாள்

(கோரை)

விடிகாலை 3 அளவில் கனமழை பெய்தது. கோயிலில் பாதுகாப்பாகப் படுத்திருந்தோம். என்றாலும்நல்ல குளிர். விசுவநாதர் அருளால் அந்தக்குளிரைத் தாங்கினோம். ஆர்வமுடன் காலை 5 மணிக்குப் பயணம் புறப்பட்டோம். பாதையில் மழை பெய்தது. எனினும் தளராமல் நடந்தோம். சரியான காட்டுப் பாதை — பிரமாண்டமான தேக்கு மரகள், மாமரங்கள் சாலையின் இருபுறமும் வரிசை வரிசையாக நின்றன. சாலையின் இருபுறமும் பயங்கரமான காடு இருந்தது. வழியில் மனித நடமாட்டமோ வாகன நடமாட்டமோ இல்லை. நாங்கள் மட்டுமே தனியாக நடந்தோம்.

பிப்பாரியா என்ற ஊர் வழியே 10 மைல் நடந்து காலை 9 மணிக்குக் **கோரை** என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்குள்ள அரசாங்க உயர் நிலைப் பள்ளியில் அன்று முழுதும் தங்கினோம். போலீஸ் நிலையத்திற்குச் சென்று எங்கள் முகவரிகளைப்பதிவு செய்தோம். போலீஸ் நிலையத்தில் ஒரு பெரிய ஆச்சரியம் என்னவென்றால் அங்கிருந்த போலீஸ்காரர்கள் அனைவரும் நல்ல தெய்வபக்தி உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் எழுந்து நின்று பக்தியுடன் எங்களை வரவேற்றார்கள். மேலும் போலீஸ் நிலையத்தில் அவர்கள் பிரதிஷ்டை செய்துள்ள சிவலிங்கத்தையும் காட்டினர். அந்தச் சிவலிங்கம் பார்ப்பதற்கு மிக அழகாகவும்

அருமையாகவும் இருந்தது. மத்தியப் பிரதேசப் போலீஸ் காரர்களின் தெய்வபக்தி கண்டுவியந்தோம்.

பிறகு தேவகோட்டைத் தலைமை நிலையத்துக்குத் தந்தி கொடுப்பதற்காகக் கோரையில் உள்ள தந்தி நிலையத்திற்குச் சென்றோம். அங்கு தந்திக் கருவி வேலை செய்யவில்லை. ஆனால் அந்த நிலைய அதிகாரி எங்களை அன்புடன் வரச்சொல்லி, இருக்கை அளித்து, எங்கள் பயண அனுபவங்களைக் கேட்டறிந்தார். பிறகு அவரிடம் மத்தியப் பிரதேசக் கொள்ளைக் காரர்களைப் பற்றிக்கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு.

"என் அன்பான சோமசுந்தரம்! நீங்கள் கொள்ளைக்காரர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மத்தியப் பிரதேசம்தான் உங்களுக்கு இந்தியாவிலேயே மிகவும் பாதுகாப்பான இடம். இங்குள்ள எங்கள் மக்கள் மிகவும் ஏழைகள்; ஆனால் நல்ல பக்திமான்கள்." என்றார். (My dear Mr. Somasundaram Please don't worry about decoits. Madya Pradesh is the safest place for you [in India. Our people here are poor but pious):— இந்த வார்த்தைகளைக் கேட்டதும் எங்கட்குக் கொள்ளைக்காரர்கள் மீது கொஞ்ச நஞ்சம் இருந்த பயமும் போய்விட்டது.

அதன் பிறகு நாங்கள் மத்தியப் பிரதேசத்தில் நடந்த பொழுது அவர் கூறிய வார்த்தைகள் நூற்றுக்கு நூறு உண்மையாக இருந்ததைக் கண்டோம். அங்கு வாழும் மக்களைப் போல ஏழ்மையும், பக்தியும் உடைய மக்கள் வேறு எங்குமே இல்லை எனலாம்.

இன்றுடன் சுமார் 1250 மைல் நடந்துள்ளோம். இன்று எங்கட்குத் "திரு அமுது" மதுரை திருமதி

S. சவுந்தரம் ஆச்சி, குழிபிறை திரு. டி. எம். ஆர். எம். இராமநாதன் செட்டியார் ஆகியோரால் வழங்கப் பெற்றது.

இன்று இரவு நாங்கள் இங்கே பள்ளி முற்றத்தில் தூங்கத் தொடங்கிய பொழுது உள்ளூர் அன்பர் ஒருவர் எங்களிடம் கூறியதாவது...'' எச்சரிக்கையாகத் தூங்குங் கள். பள்ளியின் பின்புறம் பிரமாண்டமான காடு உள்ளது. அங்கு புலி நடமாட்டம் உண்டு. இரவில் மனித வாடை அடித்தால் அது மெதுவாக வரும். காலைப் பிடித்து ஆளை இழுத்துச் சென்று விடும். யாரை இழுத்துச் சென்றது என்ற விபரம் விடிந்தால் தான் தெரியும். எனவே அடுத்தடுத்துப் படுத்துத் தூங்குங்கள்'' என்றார். அவ்வாறே அரிக்கன் விளக்கை இலேசாக எரிய வைத்து விட்டு அடுத்தடுத்துத் தூங்கி னோம். எவ்வாறு தூங்கினோம் என்பதே தெரியாமல் ஆழ்ந்து தூங்கினோம். மறுநாள் விடிந்ததும் எல்லோ ரையும் எண்ணிப் பார்த்தேன். எண்ணிக்கை சரியாக இருந்தது. விசுவநாதருக்கு நன்றி செலுத்தினேன். இரவில் புலிவராதது இறையருளே!

93. எண்பத்து மூன்றாம் நாள்

(விந்தியமலை—மலை உச்சியில் பர்வத வாசினி கோயில்—மாகௌன்)

காலை 5½ மணிக்குப் புறப்பட்டோம். சிறிது தொலைவில் மாபெரும் **விந்தியமலைத் தொடர்** குறுக்கிட்டது. வழக்கம்போல் "முருகா! முருகா!" என்று முழங்கிக் கொண்டு, சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளியவாறு மலையில் ஏறினோம். 7 மைல் தொலைவுக்கு மலை வளைந்து வளைந்து சென்றது. மலை உச்சி 1400 அடி உயரம். அங்கு **பர்வதவாசினி** என்ற அம்மனின் கோயில் உள்ளது. கோயிலுக்கு எதிரில் அழகான தாமரைப் பொய்கை இருந்தது. பொய்கையில் நீராடி அம்மனை வணங்கினோம். கோயில் பூசாரி எங்களை ஆசீர்வதித்து சீனி மிட்டாய்ப் பிரசாதம் வழங்கினார்.

மலை உச்சியில் இருந்து கீழே இறங்கத் தொடங்கினோம். சுமார் 2 மைல் இறங்கி **மாகௌன்** என்ற ஊருக்கு வந்து அங்கிருந்த "சங்கர்மந்திர்" என்ற சிவன் கோவிலில் தங்கினோம். அங்கிருந்த பூசாரி எங்களை அன்புடன் வரவேற்றுச் சிவலிங்கப் பூசை செய்து எங்கட்கு ஆசி கூறினார். சற்று நேரத்தில் பர்வத வாசினி கோயில் பூசாரியும் அங்கு வந்து சேர்ந்தார். இரண்டு பூசாரிகளும் எங்கள் பயணம் வெற்றி பெற வாழ்த்தி, ஊர் மக்களுக்கு எங்களை அறிமுகப்படுத்தினர். பூசாரிகள் எங்களுக்குத் தேநீர் தந்தனர்.

நாங்கள் மத்தியப் பிரதேசத்தில் பத்திரமாக நுழைந்துள்ள செய்தியினை எங்கள் தலைமை நிலையமாகிய தேவகோட்டைக்குத் தந்தி மூலம் தெரிவித்தோம்.


மதியம் ஒரு மணி அளவில் கோயில் அருகே **கிராமச் சந்தை** கூடியது. மாலை 4 மணி அளவில் சந்தை கலைந்து எல்லோரும் இருட்டுமுன் வீடுகளுக்குச் சென்று விடுகின்றனர். அதற்குக் காரணம் கொள்ளைக் கூட்டப் பயமே! வியாபாரிகள் தங்கள் பொருள்களை ஒட்டகத்தின் மீதும், மாட்டு வண்டிகளிலும் கொண்டு வருகின்றனர்.

கோயில் அருகே "பாக் சந்த் கதால்" (Bhag chand kathal) என்ற சேட் ஒரு உணவு விடுதி நடத்துகிறார். அவர் நல்ல தெய்வ பக்தர். அவர் எங்களை அன்பாக வரவேற்றுப் பலகாரம், பால் எல்லாம் வழங்கினார். மேலும் அரிசி, காய்கறி முதலியனவும் தந்தார். அவரது கடையில் மிகப் பெரிய சிமிண்டு அடுப்பு இருக்கிறது. அதில் விறகோ, விராட்டியோ எரிக்க வில்லை. அதற்குப் பதிலாக சுமார் 20 அடி முதல் 30 அடி நீளம் உள்ள ஒரு பெரிய காய்ந்த தேக்கு மரமே அடுப்புக்குள் வைக்கப் பட்டிருக்கிறது. மரம் தொடர்ந்து எரிகிறது; சமையல் நடைபெறுகிறது. மரத்தை அடுப்புக்குள் தள்ள வெண்டுமானால் 20 அடி பின்னால் சென்று மரத்தைத் தள்ளுகின்றனர். இந்தக் காட்சி பார்ப்பதற்கு மிகவும் விநோதமாக இருந்தது.

நம் மாகாணத்தில் மரங்கள் குறைவு, எனவே விறகு விலை மிகுதி. ஆனால் மத்தியப் பிரதேசத்தில் காடுகள் மிகுதி. எங்கு பார்த்தாலும் தேக்கு மரங்களாக உள்ளன. எனவே விறகுப் பஞ்சம் இல்லை. மரங்களையே அடுப்பில் வைத்து எரிக்கிறார்கள். அதுவும் தேக்கு மரம் அடுப்பில் எரிகிறது. இங்கு தேக்குக்கு

மதிப்பு இல்லை. இங்கு விளையும் தேக்கை யாரும் வெளிப்பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வது எளி தில்லை. எனவே இவற்றுக்கு விலை இல்லை. இதை நினைக்கும் பொழுது "பத்துப் பாட்டில்" உள்ள ஒரு வரி என் நினைவுக்கு வருகிறது.

"சோழ நாட்டில் தாய்மார்கள் தானியங் களைக் காய வைப்பார்களாம். அவற்றைக் கோழி கள் கொத்த வருமாம். கோழிகளை விரட்டக் கல் கிடைக்காததால், தாய்மார்கள் தம் காதுகளில் இருக்கும் வயிரக் குழைகளைக் கழற்றிக் கோழிகள் மீது எறிந்து அவற்றை விரட்டுவார்களாம். அந்த அளவுக்கு அங்கு செல்வம் இருந்ததாம். தங்கம் வயிரத்துக்கு மதிப்பு இல்லையாம். "கோழி எறிந்த கொடுங்காற் கனங் குழை" என்பது பாடல் வரி. அதுபோல் மத்தியப் பிரதேசத்தில் தேக்கு மரத்துக்கு மதிப்பில்லை.



94. எண்பத்து நான்காம் நாள்

(சியோனி - இரகசிய போலீஸ் சந்திப்பு)

காலை 4½ மணிக்குக் கனமழை பெய்தது. எனவே காத்திருந்து மழைவிட்டதும் 5¼ மணிக்குப் புறப்பட்டோம். ''கோபால்கஞ்ச்'' என்ற ஊர் வழியாக 13 மைல் தொடர்ச்சியாக நடந்து **சியோனி** என்ற பெரிய நகருக்குக் காலை 10 மணிக்குவந்து சேர்ந்தோம். இப்பொழுது மத்தியப்பிரதேசக் காடுகளில் எங்களுக்கு நடப்பது எளிதான காரியமாகவே இருந்தது. மகாராஷ்ட்ராவின் 116 டிகிரி வெயில் கொடுமை இங்கு இல்லை. வெயில் மிகவும் குறைந்துவிட்டது. சாலைகளின் இருபுறமும் பிரமாண்டமான தேக்குமரங்களும், மாமரங்களும், பிறமரங்களும் குடைபிடிப்பதுபோல் நிழல்பரப்பின. இடையிடையே மழையும் மழைச்சாரலும் இருந்தன. எனவே எந்த நேரத்திலும் நாங்கள் மகிழ்ச்சியோடு மத்தியப்பிரதேசத்தில் நடக்க முடிந்தது. அங்கங்கே ஆறுகளும், ஓடைகளும் குறுக்கிட்டதால் தண்ணீர்ப் பஞ்சமும் இல்லை. ஆனால் மத்தியப்பிரதேசம் முழுவதும் பயங்கரமான காடு என்பதுமட்டும் நினைவு கூரத்தக்கது. மிருகங்களும் கொள்ளைக் கூட்டமும் எதிர்ப்பட்டால் உயிருக்கு ஆபத்துத்தான்!

சியோனி மாவட்டத் தலைநகர் ஆகும். இங்கு பெரிய பெரிய வீடுகள், அலுவலகங்கள் உள்ளன. ஒரு இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இங்குள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தங்கினோம். சமையல் செய்து

உண்டோம். இன்றையத் "திருஅமுது" குழிபிறை திரு. வி. ஆர். எம். இராமநாதன் செட்டியார் அவர்களால் வழங்கப்பெற்றது.

மாலையில் சியோனியில் உள்ள இராமர்கோவில் சிவன்கோயில், ஜைனர்கோவில் ஆகிய கோவில்களுக்குச் சென்று இறைவணங்கி மீண்டோம். அப்பொழுது சியோனி மத்தியப்பிரதேசப் போலீஸ் இலாகாவின் இரகசியத்துறையில் துணைக் கண்காணிப்பாளராக (Dy. Supt) பணிபுரியும் திரு. ஏ. சி. வி. எம். மிஸ்ரா என்பவர் எங்களைத் தேடிவந்து என்னோடு பேச வேண்டும் என்று அனுமதி கேட்டார். நான் வரச் சொன்னேன். அவர் பக்தியுடன் வணக்கம் கூறித் தன்னை அறிமுகம் செய்துகொண்டார். அவர் கூறியது வருமாறு:

"மத்தியப்பிரதேச அரசுக்கு நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. உங்கள் குழுவுக்கு எங்கள் அரசு போலீஸ் பாதுகாப்புக்கொடுக்க இசைந்து எங்கள் ஐ.ஜி. எழுதிய கடிதம் உங்களுக்குக் கிடைத்திருக்கலாம் என்று எண்ணுகிறேன். நீங்கள் உங்கள் திட்டப்படி (புரோகிராம்) வருகிறீர்களா என்பதை முதலில் எங்கள் இலாகா மூலம் கண்காணித்தோம். நீங்கள் திட்டம் மாறாமல் நடந்துவருவது குறித்து நாங்கள் ஆச்சரியம் அடைந்து உங்கள் சாதனையைப் பாராட்டுகிறோம். நீங்கள் மத்தியப்பிரதேச எல்லையில் நுழைந்தபோதும் பிறகு கோரையில் நுழைந்தபோதும் போலீஸ் நிலையத்தில் பெயர் பதிவு செய்தது எங்கள் கவனத்திற்கு வந்தது. இப்பொழுது நீங்கள் திட்டப்படி இந்த ஊருக்கு வந்திருக்கும் செய்தியும் அறிந்தோம். ஆகவே உங்களைப் பாராட்டவும், உங்களுக்கு எமது உதவி எத்தகு முறையில் தேவை என்று அறிந்து செல்லவும் வேண்டி உங்களைச் சந்திக்க வந்தேன். எங்கள் பாதுகாப்பு உங்க

ளுக்கு நேரடியாகத் தேவையா? அல்லது இரகசியப் பாதுகாப்பு வேண்டுமா'' என்று கேட்டார்.

நான் அவரது பாராட்டுக்கும் உதவிக்கும் நன்றி கூறி, மத்தியப்பிரதேச அரசுக்கும் நன்றிகூறி ''இரகசியப் பாதுகாப்பு போதும்'' (Secret Service) என்று கூறினேன். அதற்கு அவர் ''சரி. எங்கள் இலாகா இரகசியமாக உங்களைக் கவனித்துப் பாதுகாக்கும். நீங்கள் பயமின்றி நடந்து செல்லலாம். வாழ்த்துக்கள்'' என்று கூறிச் சென்றார். எங்களுக்கு மத்தியப்பிரதேசத்தைப் பற்றிய பயம் ஏற்கெனவே போய்விட்டது.

இன்னும் சொல்லப்போனால் எங்கள்மனத்துக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது மத்தியப்பிரதேசம்தான். இப்பொழுது போலீஸ்துறையின் உதவியும் கிடைத்த தால் மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

அதன்பிறகு போலீஸ்காரர்கள் சிலர் சாதாரண உடையில் எங்களைச் சிலநாட்கள் யாரும் அடையாளம் காணாதவாறு மக்கள் நடமாடும்பொழுது பின் தொடர்ந்து எங்களுக்குப் பாதுகாப்பாக வருவது தெரிந் தது. ஆனால் அவர்கள் பொதுமக்கள்போல் நடந்து கொண்டனர். எங்களோடு பேசுவதில்லை. மக்கள் இல்லாத பகுதிகளில் நாங்கள் மட்டுமே காட்டில் நடப் போம். அப்பொழுது போலீஸ் துறை வாகனங்கள் மூலம் எங்களைக் கண்காணித்திருக்கிறது.

95. எண்பத்தைந்தாம் நாள்

(சமவெளி—பண்டோல்—பொறி உருண்டை)

12-5-83 வியாழன் காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். மலைப்பகுதி குறைந்து இப்பொழுது சமவெளிப் பகுதி மிகுதியாக இருந்தது. கடல் மட்டத்திற்குமேல் மிக உயர்ந்த பீடபூமிப் பிரதேசத்தில் இது சமவெளிப் பகுதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சாலை நெடுகிலும் மாங்காய்கள் பதினாயிரக் கணக்கில் கொட்டிக் கிடந்தன. தொடக்கத்தில் நாங்கள் அவற்றை ஆர்வமுடன் பொறுக்கியதுண்டு. ஆனால் இப்பொழுது நாங்கள் மாங்காய்களுக்கு நடுவிலேயே பயணம் செய்ததால் அவற்றைத் தொடுவதில்லை. இப்பகுதிகளில் ஆள் நடமாட்டமே கிடையாது. எங்காவது ஒரு சிறு கிராமம் இருக்கும். அங்கே சிலபேர் மட்டும் வசிப்பார்கள். அவர்களும் குடிசைகளில் வாழும் ஏழை மக்கள். அவர்கள் காலையில் சப்பாத்தியைத் தண்ணீரில் சுட்டு உண்பார்கள். இரவில் அதே காய்ந்த சப்பாத்தியைத் தண்ணீரில் நனைத்து மாங்காய் ஊறுகாயைத் தொட்டுக் கொண்டு சாப்பிடுவர். இதுதான் அவர்களது எளிய உணவு—அதுவும் இரண்டு வேளைதான்! ஆனால் திடகாத்திரராக இருந்தனர்.

இவர்களது வீடுகளுக்கு வேண்டிய மரங்களைக் காட்டில் இருந்து வெட்டி எடுத்துக் கொள்வர். சில இடங்களில் விபரம் அறிந்து தொழில் தெரிந்தவர்கள் இருந்தால் செம்மண்ணை வெட்டிக் குழைத்து, சீமை

ஓடு போன்று சிறிது அகலமான ஓடு, கையால் செய்து காயவைத்து. ஓட்டு வீடு கட்டிக் கொள்கின்றனர். மக்கள் கையால் ஓடு செய்து காயவைக்கும் காட்சியினைக் கண்டோம்.

பாதையில் ஏராளமான பீடி இலைச் செடிகள் வளர்ந்திருந்தன. சில ஊர் மக்கள் அந்த இலைகளைப் பறித்து மூட்டை கட்டி வெளியூர் வியாபாரிகளிடம் விற்றுப் பிழைப்பதையும் பார்த்தோம்.

வழிநெடுக நாங்கள் நடந்தபொழுது ஒவ்வோர் இடத்தில் ஒரு பெரிய மரம் கரிந்து எரிந்து கிடந்த காட்சியினைக் கண்டோம். பசு மரங்களுக்கு இடையே இப்படி ஒரு மரம் நிற்பது ஏன் என்று எங்கட்கு முதலில் புரியவில்லை. இடிவிழுந்து எரிந்திருக்குமோ என்று நினைத்தோம். ஆனால் அதன் காரணம் எங்களுக்குப் பிறகுதான் புரிந்தது. ஓர் ஊரை நாங்கள் அடைந்தபொழுது ஊரின் எல்லையில் ஒரு காய்ந்த மரம் இலேசாக எரிந்து கொண்டிருந்தது. அது ஏன் என்று விசாரித்தோம். அதற்கு அவ்வூர் மக்கள் கூறிய பதில் எங்களுக்கு ஆச்சரியம் அளித்தது.

"வீடுகட்ட எங்களுக்குச் சுண்ணாம்பு தேவை. சுண்ணாம்புக்கல் நாங்கள் பல இடங்களில் இருந்து சேகரித்து வருவோம். அதை நீத்துச் சுண்ணாம்பு ஆக்கப் பழங்காலம் தொட்டு நாங்கள் கடைப்பிடிக்கும் முறை இதுவாகும். ஒரு பெரிய பொந்து விழுந்த மரத்தின் பொந்துக்குள் சுண்ணாம்புக் கற்களைத் திணித்து அடி மரத்துக்குத் தீ வைத்து விடுவோம். மரத்தின் இலை, கிளைகளை முன் கூட்டியே வெட்டி விடுவோம். காய்ந்தும் பச்சையாகவும் இருக்கக் கூடிய அடிமரம் இலேசாக நின்று எரியும். இதன் தீ மற்ற மரங்களுக்குப் பரவாது. புகைந்தே எரியும். உள்ளே இருக்கும்

சுண்ணாம்பு நெருப்பின் வெப்பத்தில் நீந்து சாம்பலாகும். மரம் முழுதும் எரிந்ததும் சுண்ணாம்பை எடுத்துப் பயன் படுத்துவோம்'' என்றார்கள்.

''சுண்ணாம்புக் காளவாய்'' முறையில் அதனைச் செய்தால் என்ன என்று கேட்டேன். அந்த முறை பற்றி எல்லாம் அவர்களுக்குத் தெரியாதாம்.

இது கற்காலத்தில் பன்றியைச் சுட்டுத் தின்ன ஒரு குடிசைக்குள் பன்றிகளை அடைத்து மொத்தமாகக் குடிசைக்குத் தீ வைத்துப் பன்றியினைச் சுட்டுப் பிறகு தின்ற பழங்கால முறையினை எனக்கு நினைவு படுத்தியது.

இன்னும் சில உட்பகுதி மக்களுக்கு இந்தியா சுதந்திரம் பெற்றது கூடத் தெரியவில்லை. அவர்கள் எழுத்தறிவற்றவர்கள். எந்த ஊருக்கும் போனதில்லை. பிறந்து வாழ்கின்ற ஓர் ஊர் தவிர அவர்களுக்கு வெளி யுலகமே தெரியாது. ஆனால் அவர்களுக்குத் தெரிந்தது ''ராம்ராம்'' ''காசி'' ''இராமேஸ்வரம்''. இம்மக்கள் எங்களைக் கண்டதும் அளவு கடந்த பக்தியுடன் எங்களை வரவேற்றதும், எங்கள் பாதங்களில் முட்டி ஆசி பெற்ற தும் மறக்க முடியாத நிகழ்ச்சிகள்.

சில ஊர் மக்களிடம் ''தேர்தல்'' பற்றிக் கேட்டோம். அப்பொழுது அவர்கள் கூறிய பதில் இது தான். ''தேர்தல் வந்ததும் சில பெரிய மனிதர்கள் கார் களில் வருவார்கள். அவர்கள் சொல்கிறபடி ஓட்டுப் போடுவோம். அதற்குப் பிறகு எங்களுக்கு எதுவும் தெரியாது'' என்றனர். இதில் இருந்து அவர்கள் எவ்வளவு தூரம் அறியாக் குழந்தைகள் (innocent child) போல இருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பாதையில் நடந்து கொண்டிருந்தபொழுது பசி வந்தது. எனவே ஒரு டம்ளர் கஞ்சி குடிக்கும் பொருட்டு ரிக்ஷாவை நிறுத்தினோம். கஞ்சிப் பானையைக் கீழே இறக்கி வைத்தேன். அப்பொழுது என் முதுகில் நன்றாக வாயுப்பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. நம் ஊராக இருந்தால் என்னால் இரண்டு நாளைக்கு அசையக்கூட முடியாது. ஆனால் இங்கு நடுவழியில் என்ன செய்ய முடியும்? உடனே ஒரு மாத்திரையை உண்டேன். விபூதி தடவினேன். கஞ்சி குடித்தேன். பிறகு "விசுவநாதா!" என்று கூறிக்கொண்டே மெதுவாக நடக்கலானேன். "விசுவநாதா" என்ற மந்திரம் பலிக்கத் தொடங்கியது. சிறிது நேரத்தில் முதுகுவலி மறைந்தது. பிறகு வழக்கம்போல் வேகமாக நடக்கலானேன்.

காலை 9½ மணிக்குப் பண்டோல் என்ற சிறிய ஊருக்குச் சென்று அங்கிருந்த அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் தங்கினோம். அப்பள்ளியில் சுமார் 100 மாணவ மாணவிகள் படிக்கிறார்களாம். எந்த வகுப்பிலும் இருக்கைகள் கிடையா. மண்தரை! கீற்றுக் கொட்டகை! மண்சுவர்! மண்சுவரில் கரும்பலகைகள் வண்ணப் பூச்சில் அமைக்கப்பட்டிருந்தன! இதுபோல மிக ஏழ்மையான முறையில் பல உயர்நிலைப்பள்ளிகள் இயங்கக் கண்டோம். இதைப் பார்க்கும் பொழுது நம் மாநிலம் எவ்வளவோ உயர்வு!

இதுபோல் ஆந்திராவிலும் ஒருநாள் ஒரு தொடக்கப் பள்ளியில் தங்கினோம். அப்பள்ளியில் ஒரு கல் பதிக்கப்பட்டிருந்தது. அக் கல்லின்படி அப்பள்ளி உயர்திரு. சஞ்சீவரெட்டி அமைச்சராக இருந்த காலத்தில் அவரால் திறக்கப்பட்டதாம். ஆனால் பிறகு அவர் 25 ஆண்டுகளில் ஜனாதிபதி முதலிய பெரிய பதவிகளில் இருந்துஓய்வு பெற்று விட்டார். கால் நூற்றாண்டு ஆகியும் அப்பள்ளி இன்னும் தொடக்கப்பள்ளியாகவே

இ—27

இருக்கும் நிலையறிந்து வியந்தோம். இதுதான் மற்ற பல மாநிலங்களின் கல்வி நிலை! இவற்றை ஒப்பீட்டுப் பார்க்கும் பொழுது நம் தமிழகத்தின் கல்விவளர்ச்சி பெரிதும் போற்றத்தக்கது! ஆனால் நம் தமிழகக் கல்வித் துறையின் பரப்புக்கு ஏற்ப ஆழமும் ஏற்பட்டால் மிகச் சிறப்பாக இருக்கும்.

நாங்கள் பண்டோல் கிராமத்தில் தங்கியிருந்த பொழுது அவ்வூரில் சந்தை கூடியது. ஏராளமான பக்கத்துக் கிராமமக்கள் சந்தைக்கு வந்துபொருள்கள் வாங்கிக் கொண்டு மாலை 4 மணிக்குள் கலைந்து போயினர். 4 மணிக்குமேல் அங்கு சந்தை கூடிய அடையாளமே தெரியவில்லை, நாங்களும் சந்தையில் பல பொருள்கள் வாங்குவதுஉண்டு. தமிழ்நாட்டின் ''**பொறி உருண்டை**'' இங்கு கிடைப்பது மிக ஆச்சரியம். யாரோ தமிழ்நாட்டுக்காரர் இங்கு வந்து இதனைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். எனவே திருவிழாவிலும், சந்தையிலும் பொறி உருண்டை ஏராளமாகக் கிடைத்தது. நான் நிறைய வாங்கி வைத்துக் கொண்டேன்.

இங்கு இன்னொரு ஆச்சரியம்! '' இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குச் செல்லும் சாமியார்கள் வந்திருக்கிறார்கள்'' என்ற செய்தி சந்தையில் பரவியதும் ஏராளமான மக்கள் எங்களிடம் வந்து ஆசிபெற்றுச் சென்றனர். சில முதியவர்களும், இளைஞர்களும் தம் உள்ளங்கைகளை எம்மிடம் காட்டி ஏதோ கேட்டனர். பிறகுதான் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்பது புரிந்தது. அவர்களது கைரேகையைப் பார்த்துப் பலன் சொல்லச் சொல்கிறார்கள் என்று தெரிந்து கொண்டோம். ''எங்கட்குக் கை ரேகை பார்க்கத் தெரியாது'' என்று சொன்னோம். முதலில் அவர்கள் நம்பவில்லை. பிறகு வருத்தத்துடன் சென்றார்கள். வடநாட்டில் பயணம்

செய்யும் சாமியார்கள் பலர் கைரேகை பார்ப்பார்களாம். இதனால் அவர்களுக்கு நல்ல வருமானம் உண்டாம். இப்பொழுதும் கூட மலேசியா, சிங்கப்பூரில் கைரேகை, ஜாதகம், ஜோஸ்யம் பார்ப்பவர்களுக்கு நல்ல மரியாதையும், வருமானமும் கிடைப்பதைக் காண்கிறோம். மக்கள் எவ்வளவுதான் ஏழையாக இருந்தாலும், அல்லது பணக்காரராக இருந்தாலும் மனநிலை ஒன்றுதான் என்பதற்கு இது நல்ல உதாரணம் ஆகும்.

பண்டோலில் ஒரு நாள் "திரு அமுது" புதுக்கோட்டையைச் சேர்ந்த திரு. பி. எல். எம். வெங்கடா செட்டியார், திரு. பி.எல்.எம்.எம். முத்துராமன் செட்டியார் ஆகியோரால் வழங்கப் பெற்றது.

96. எண்பத்தாறு-எண்பத்தேழாம் நாள்

(வெயின்கங்காநதி—சபாரா)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். எங்களுக்கு வடநாட்டில் எங்குமே "ஹார்லிக்ஸ்" பாட்டில் விலைக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் அது கோதுமை மாவினால் தாயரிக்கப்படுவது. தென்னாட்டில் "ஹார்லிக்ஸ்" நிறைய விற்பனை ஆகிறது. ஏனெனில் இங்கு வாழும் மக்கள் அரிசி உணவு உண்பவர்கள். இவர்களுக்குக் கோதுமை மாவினால் செய்யும் "ஹார்லிக்ஸ்" மருந்தாகப் பயன்படுகிறது. ஆனால் வடநாட்டு மக்கள் கோதுமையையே உணவாகக் கொள்பவர்கள். அவர்களுக்கு "ஹார்லிக்ஸ்" மருந்தாகப் பயன்படாது. எனவே வடநாட்டில் அது விற்பனைக்கு வெளியிடப் படுவதில்லை. ஆகவே ஹார்லிக்ஸ் இல்லாமலே நாங்கள் வடநாட்டில் பயணம் செய்ய நேர்ந்தது. அதற்குப் பதிலாகக் கோதுமை மாவைப் பயன்படுத்தத் தொடங்கி இருந்தோம். மட்டமான பச்சை அரிசி எங்களுக்குச் சில இடங்களில் கிடைத்தது. கிடைத்தவரை கல்பொறுக்கி அரிசி உணவு உண்டோம். இடையிடையே சிறிது கோதுமை மாவையும் பயன்படுத்தி உண்ணப் பழகிக் கொண்டோம்.

10 மைல் தொடர்ச்சியாக நடந்து 9½ மணிக்கு **சபாரா** என்ற ஊரின் எல்லையில் உள்ள **வெயின் கங்கா** என்ற நதிப் பாலத்தை அடைந்தோம். நாங்கள் சிறிது களைத்திருந்ததால் பாலத்தின் தென்முனையில் இருந்த

மரநிழலில் ஒய்வுக்காகச் சிறிது நேரம் படுத்தோம். ஒரு ரூபாய்க்கு ரொட்டிப் பொட்டலங்கள் விலை மலிவாகக் கிடைத்ததால் ரிக்ஷாவில் நிறைய வாங்கி வைத்திருந் தோம். ஊரில் இருந்து நாங்கள் புறப்பட்ட பொழுது மக்கள் தந்த உணவுப் பொருள்கள் எல்லாம் தீர்ந்து வண்டியின் கனம் இப்பொழுது குறைந்து விட்டது. நாங்கள் தேவையான பொருள்களை மட்டும் விலைக்கு வாங்கி வண்டியில் வைத்துக் கொள்வோம். ''சபாரா'' எல்லையில் ஆளுக்கு ஒரு ரொட்டிப் பொட்டலம் உண்டு நீர் பருகினோம். சிறிது தெம்பு பிறந்தது. நதியில் குளிக்க விரும்பினோம். நதியின் கரையை அடைந்து பார்த்தோம். சுமார் 100 அடி உயரமான கரை இருந்தது. கரையில் இறங்கப் பாதை இல்லை. கரை செங்குத்தாக இருந்தது. நூறு அடிக்குக் கீழே சிறிது தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. பாலத்தைச் செப்பனிடு வதால் அங்கங்கே குழிதோண்டி அதன் மணலைக் கரை யில் செங்குத்தாகப் போட்டிருந்தார்கள். எனவே கரை சரிவாக இல்லாமல் செங்குத்தாக இருந்தது. இதனைக் கரை ஓரம் சென்றதும் நாங்கள் புரிந்து கொண்டோம்.

திரு. இராகவன் அவர்கள் வட கரையை நோக்கி, ''அங்கு கரை சரிவாக இருக்கிறது. ஆகவே நாம் பாலத்தைக் கடந்து வடகரை சென்று அங்கிருந்து ஆற்றுக்குள் சென்று குளிப்போம்'' என்றார். நாங்கள் ''சரி'' என்று தென் கரையில் இருந்து திரும்பிய பொழுது, எங்களில் முதியவராகிய திருநாவுக்கரசு செட்டி யார் அவர்கள் (வயது 68) தென்கரை ஓரத்தில் தெரியா மல் கால் வைத்து விட்டார்கள். உடனே மண் சரிந்து அவர்கள் கால் தவறி நூறு அடி ஆழத்திற்குச் சரிந்தே சென்று கீழே விழுந்தார்கள். எங்களுக்கு ஒரே பயமாகி விட்டது. கீழே விழுந்த அவர்கள் எழாமல் கிடந்தார் கள். உடனே நாங்கள் ''விசுவநாதா'' ''விசுவநாதா''

என்று கூறிக் கொண்டே பாலம் கடந்து வடகரை வழியாக ஆற்றுக்குள் இறங்கி ஓடிச் சென்று அவர்களைத் தூக்கினோம். அவர்கள் மெதுவாக எழுந்து நின்று ''விசுவநாதர் காப்பாற்றி விட்டார். பழநியாண்டவர் என்னைக் கைவிட வில்லை'' என்றார். நடக்கச் சொன்னோம். மெதுவாக நடந்தார். என்ன ஆச்சரியம்! உடலில் எங்குமே அடிபடவில்லை. ஒருவாறு நிம்மதி அடைந்தோம்.

வெயின் கங்கா நதியில் நீராடி ''சபாரா'' என்ற ஊருக்குள் நுழைந்து அங்கிருந்த ஒரு தோப்புக்குள் சென்றோம். அங்கே சிறிய ''சங்கர் மந்திர்'' இருந்தது. அங்கிருந்த சிவலிங்கத்தை வணங்கிவிட்டு, பிறகு பொறுக்கிச் சமையல் செய்து உண்டோம். அந்தத் தோப்பில் உள்ளூர் இளைஞர்கள் சிலர் கஞ்சாக் குடித்து விட்டு ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். எங்களால் அவர்களுக்கு இடையூறு என்று நினைத்து எங்கள் அருகில் வந்து ஏதேதோ பேசிச் சிரித்தனர். இவர்களோடு நமக்கு எதற்கு வம்பு என்று அவர்களை நோக்கி நான் கூறினேன், ''சற்று நேரத்தில் சாப்பிட்டு விட்டுப் போய் விடுவோம். நீங்களும் சாப்பிட வாருங்கள்'' என்று கையெடுத்துக் கும்பிட்டுச் சொன்னேன். உடனே அவர்கள் ''வேண்டாம், வேண்டாம்'' என்று சொல்லி விட்டுச் சிறிது விலகிச் சென்று விட்டார்கள். விசுவநாதர் தான் அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுத்திருக்க வேண்டும்.

பிறகு ஊருக்குள் சென்று அங்கிருந்த ''அரசாங்க மருத்துவமனை'' அருகில் காணப்பட்ட சிறிய ''சக்தி கோயிலில்'' தங்கினோம். அக்கோயிலில் கலைமகள், திருமகள், கொற்றவை ஆகிய எல்லாத் தெய்வங்களும் இருப்பதால் பஜனை செய்து வழிபட்டோம். இதுவரை சுமார் 1300 மைல்கள் நடந்து மிகவும் சோர்ந்திருந்த

தால், அவ்வூரில் உள்ள அரசாங்க மருத்துவமனை டாக்டர்களைச் சந்தித்து வேண்டிய மருத்துவ உதவிகள் பெறவும், தக்க முறையில் ஓய்வு கொள்ளவும் வேண்டி சபாராவில் ஒருநாள் அதிகமாகத் தங்கத் தீர்மானித்தோம்.

மாலை நேரத்தில் ஏராளமான குழந்தைகளும், பெரியவர்களும் எங்களைச் சந்தித்து ஆசி பெற்றனர். 90 வயதுடைய கிழவர் ஒருவர் கண் தெரியாத நிலையில் தட்டுத் தடுமாறி நடந்து வந்தார். எங்கள் பயணம் பற்றி அவரது பேரன்கள் கூறக் கேட்டு நடந்து வந்தாராம். அவரது சிறிய பேரன் ஒருவன் அவரது கையைப் பிடித்து நடத்தி வந்தான். அவர் எங்களது யாத்திரை பற்றி மிகவும் பாராட்டிச் சொன்னார். அவர் கூறியது வருமாறு: ''எனக்கு வயது தொண்ணூறு ஆகிறது. என்னுடைய பாட்டனார் காலத்தில் இராமேசுவரத்தில் இருந்து காசிக்கும், காசியிலிருந்து இராமேசுவரத்துக்கும் யாத்திரிகர்கள் நடந்து போனதுண்டாம். அப்படி நடந்து போனவர்களை அவர் பார்த்திருக்கிறாராம். ஆனால் என் தகப்பனார் காலத்தில் யாரும் அப்படி நடந்து போனதில்லை. காசி—இராமேஸ்வரம் பாத யாத்திரிகர் யாரையும் காணாமலே அவர் காலமானார்.

நானும் இவ்வளவு காலமாக அப்படி யாத்திரிகர்களைக் காணாமல் மனம் சோர்ந்திருந்தேன். ஆனால் இன்றைக்கு உங்களைப் பார்த்துவிட்டேன். இனி மனத் திருப்தியோடு காலமாவேன்'' என்று உருக்கமாகக் கூறினார். அவரது பேச்சு எங்களை மிகவும் ஈர்த்தது. பிறகு அவர் ''நான் மிகவும் ஏழை. என்னால் இயன்ற ஏதோ ஓர் உதவியினைச் செய்கிறேன். திருப்தியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறி ஒரு கால் ரூபாய்க் காசைத் தொட்டுப் பார்த்து எங்களிடம்

தந்தார். அதனை அவர் கையாலேயே உண்டியலில் போடச் சொன்னோம். அதன்பிறகு காசிக்கு நடக்கும் எங்கள் பாதங்களைச் சிறிது அமுக்கிவிட்டுப் ''பாக்கியம் செய்த பாதங்கள்'' என்றுகூறிக் கண்களில் ஒற்றிக் கொண்டு எங்களை வாழ்த்திவிட்டுச் சென்றார். மத்தியப்பிரதேச மக்களின் தெய்வபக்திக்கு இந்த உதாரணம் ஒன்று போதும்.

ஒரு சமயம் இரண்டு சிறுவர்கள் வந்தார்கள். ஒருவன் தன்னிடம் இருந்த ஐந்து காசை எங்கட்கு நன்கொடையாகத் தந்தான், அதனை உண்டியலில் போடச் சொல்லி விபூதி கொடுத்தோம். இன்னொரு சிறுவன் ஒரு பத்துக்காசு வைத்திருந்தான். அது அவன் தின்பண்டம் வாங்கித் தின்பதற்காக அவன் தாய் கொடுத்தது. அதனை அவன் எங்களிடம் கொடுத்து ''இதில் ஐந்துகாசு எடுத்துக்கொண்டு மீதி ஐந்துகாசை எனக்குத் தாருங்கள். இன்று எனக்குத் தின்பண்டம் வாங்க ஐந்துகாசு போதும்'' என்றான். அவனிடம் பத்துக்காசைப் பெற்று அவனுக்கு இரண்டு ஐந்துகாசுகள் கொடுத்தோம். ஒரு ஐந்துகாசை அவன் உண்டியலில் போட்டு, மறு ஐந்துகாசைத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டான்.

ஒரு சிறுமி எங்களை அணுகினாள். தன்னிடம் எதுவும் இல்லை என்றும், ஆனாலும் ஏதாவது தான் கொடுக்க விரும்புவதாகவும் கூறி ஓர் ஊக்கைக் கொடுத்தாள். அதனையும் நாங்கள் அன்புடன் பெற்றுக் கொண்டோம். ஊக்கும் எங்களுக்கு எப்பொழுதாவது பயன்படும் அல்லவா! இக்குழந்தைகளின் பக்தி புராண காலப் பிரகலாதனின் பக்திக்குச் சமம்தானே!

சபாராவில் முதல்நாள் மதியத் ''திரு அமுது'' கொப்பனாட்டி திரு. தியாகராசன், புதுக்கோட்டை திரு. ராம. சுப. இராமய்யா செட்டியார் ஆகியோரால் வழங்கப்பெற்றது. மறுநாள் மதியத் ''திரு அமுது'' வலையபட்டி திரு. வ. மு. மு. ராம. முத்துராமன் செட்டியார் அவர்களால் வழங்கப்பெற்றது.

97. எண்பத்தெட்டாம் நாள்

(மலைஉச்சியில் பஞ்சாரிமா—துர்காதேவி)

காலை 7 மணிக்குப் பயணம் புறப்பட்டோம். ஓரளவு செங்குத்தானமலை குறுக்கிட்டது. வழக்கம் போல் சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளியவாறு மலையில் நடந்தோம். 6 மைல் இவ்வாறு நடந்து மலைஉச்சியை அடைந்தோம். மலைஉச்சிக்குப் **பஞ்சாரிமா** என்று பெயர். அங்கு ஒரு **துர்காதேவி**யின் கோயில் அமைக்கப் பட்டுள்ளது. அக்கோயில் மிகவும் சிறியது. கோயிலுக்கு அருகில் ஒரு கிணறு, நந்தவனம் எல்லாம் உள்ளன. இக்கோயிலைக் கட்டியுள்ள பக்திமிகு பூசாரி எங்களை வரவேற்று, அம்பாள் தரிசனம் செய்வித்துப் பொறிமிட்டாய் வழங்கி ஆசிகூறினார். அவர் இக் கோயிலை அமைத்த வரலாற்றை எங்களுக்கு வர்ணித் தார். அது வருமாறு:

"மலை உச்சிக்கு வருகின்ற பஸ், லாரிக்காரர் ஏதாவது தேவையானால் உதவி இன்றி வாடினர். வாகனங்கள் பழுதானால் சிறிதுநேரம்கூட இங்கு தங்க வசதிஇல்லை. கிராம மக்களும் சில சமயம் இப்பகுதிக்கு வருவதுண்டு. இங்கு ஒரு கோயில் இருந்தால் நல்ல தென்று நினைத்து இங்கு இக்கோயிலைச் சிறிதாகக் கட்டத் தொடங்கினேன். ஒரு கிணறும் வெட்டினேன். அம்பாள் அருகில் இந்த உயரமான மலைஉச்சியில் நல்ல தண்ணீர் கிடைத்தது. கோயில் கட்டிக்கொண்டிருந்த பொழுது அம்மன் படத்தை வைத்து உண்டியலையும் வைத்தேன். பஸ், லாரி, கார்க்காரர்கள் இங்கு நின்று, சுவாமி தரிசனம் செய்து, தண்ணீர் பருகி, என்னைப்

பாராட்டி உண்டியலில் பணம் போட்டனர். அந்த உண்டியல் பணத்தைக் கொண்டே இக்கோயிலை இந்த அளவுக்கு நல்லமுறையில் கட்டினேன். அம்மனை பிரதிஷ்டை செய்தேன். கிணற்றில் எந்த நாளும் வற்றாத தண்ணீர் இங்கு வரும் பக்தர்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. இந்த இடம் மிகவும் புனிதமான இடம் என்பதற்கு இந்தத் தண்ணீரே நல்ல உதாரணம் ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று பெருமையும் உடைய இடம் இது, இங்கு நீங்கள் அம்பாளை வணங்கியிருப்பதால் இனி உங்களுக்கு ஒரு குறையும் இராது'' என்று ஆசீர்வதித்தார்.

அன்று முழுதும் நாங்கள் அங்கு தங்க விரும்பினோம். அதற்கு அவர் ''இங்கு ஒன்றும் பயமில்லை. தாராளமாகத் தங்குங்கள்'' என்று கூறினார். அருகில் சிறிய ஓட்டுக்கட்டடம் ஒன்று கட்டிவைத்துள்ளார். அதற்கு முன்னால் சில நீள சிமிண்டு நாற்காலிகள் அமைத்துள்ளார். ஓட்டுக் கூடத்தில் அவர் வசிப்பாராம். ஆனால் அன்று அந்தக் கூடத்தை எங்களுக்குக் கொடுத்துவிட்டு, அவர் கோயிலிலேயே தங்க முன் வந்தார். நாங்கள் ஓட்டுக் கூடத்தில் தங்கினோம். சமையல் செய்து உண்டோம். அன்று ஏராளமானலாரிகளும், கல்யாணப் பேருந்துகளும் அங்கு வந்தன. பலகிராமங்களில் திருமணம் செய்து கொண்ட மணமக்களும், உறவினர்களும் அங்கு வந்து அம்பாளை வணங்கிப் பூசாரியின் ஆசி பெற்று உண்டியலில் பணம் போட்டுச் சென்றனர். பல லாரிக்காரர்கள் அங்கு வந்து அம்பாளை வணங்கி, தண்ணீர்பருகி, சிறிது நேரம் நாற்காலியில் தூங்கி விட்டுச் சென்றனர். ''பாலைவனச்சோலை'' போல இந்தக் கோயில் ''மலைவனச் சோலை''யாக மக்களுக்குப் பயன்படுகிறது.

மலை உச்சியில் நின்றவாறு சுற்றுப்புறக் காட்சி களைக் கண்டு ரசித்தோம். இருட்டியதும் ஓட்டுக் கூடத்திற்கு வெளியே தாழ்வாரத்தில் படுத்தோம். நல்ல தென்றல் காற்று வீசியது. எனவே எங்களை அறியாமல் தூங்கினோம். இரவு 10 மணி இருக்கும். பூசாரி எங்களை எழுப்பினார். எல்லோரும் ஓட்டுக் கூடத் திற்குள் சென்று தாழ் போட்டுக் கொண்டு பத்திரமாகப் படுக்குமாறு கூறினார். ''ஏன்?'' என்று கேட்டோம். அதற்கு அவர், ''இங்கு சில சமயங்களில் புலிகள் வரும்'' அப்பொழுது ஆபத்து ஏற்படும். இப்பொழுது புலிகள் வரக்கூடியதான சில சந்தேகங்கள் ஏற்பட்டன. அதனால் தான் உங்களை எச்சரிக்க வந்தேன்'' என்றார். காலை யில் நீங்கள் இங்கு பயம் இல்லை என்றீர்களே. அது ஏன்?'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''புலி இருக் கிறது என்றால் நீங்கள் பயப்படுவீர்கள். அதனால்தான் என்றார்.'' உடனே நாங்கள் ஓட்டுக் கூடத்திற்குள் சென்று தாழ் போட்டுக் கொண்டு, கதவருகில் சில சாமான்களை வைத்துக் கதவு திறக்க முடியாதவாறு பலப்படுத்தினோம்''. அதன் பிறகே பூசாரி செ றார்.

''புலி புலி'' என்பது மத்தியப்பிரதேசத்தில் எங்களுக்கு மிகவும் பழகிப்போன வார்த்தையாகி விட்டது. புலி எங்கள் திக்கில் வந்தாலும், விசுவநாதர் அதன் பார்வையில் ஒரு மானைக்காட்டி எதிர்த்திக்கில் இழுத்துச் சென்று விடுவார் என்று எங்களுக்குத் தெரியும் எனவே நாங்கள் புலி பற்றிக் கவலைப்படாமல் நன்கு தூங்கினோம்.

98. எண்பத்தொன்பதாம் நாள்

[செங்குத்தானமலை—பிஜிநாநதி
லக்னடவ்ன்]

காலை 5 மணிக்குப் பூசாரியிடம் சொல்லிக் கொண்டு, அம்பாளை வணங்கிப் புறப்பட்டோம். மலையில் இருந்து சிறிது இறங்கினோம். மிக அடர்த்தியான காட்டுப் பகுதியில் நடந்தோம். மீண்டும் ஒரு செங்குத்தான பாறைமலை குறுக்கிட்டது. அதன் மீது சைக்கிள் ரிக்ஷாவைத் தள்ளியவாறு நடந்தோம். சில மைல்கள் நடந்ததும் **பிஜிநாநதி**யினைக் கண்டோம். அதில் ஓரளவு அதிகமாகவே தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. நீச்சல் அடித்துக் குளித்தோம். பிறகு நடந்தோம்.

வழியில் "**மழை**" என்ற பெயரில் ஒரு சிற்றூரை அடைந்தோம். அங்கு "அரசாங்க ஓராசிரியர் பள்ளி" இயங்கக் கண்டோம். அப்பள்ளிக்குள் சென்று பார்த்தோம். சிறிய ஓட்டுக் கட்டடத்தில் பள்ளி நடந்தது. சுமார் அறுபது பிள்ளைகள் 1 முதல் 5 வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்பள்ளிக்கு ஒரே ஒரு ஆசிரியர். அவர் பெயர் **அசோக்குமார்** என்பதாகும். அவர் எம். ஏ பி. டி, பட்டம் பெற்றவர். எம். ஏ. யில் அவர் வரலாறு படித்திருக்கிறார். அவர். உற்சாகமிக்க இளைஞராகக் காணப்பட்டார். அவரோடு பேசிக் கொண்டிருந்த பொழுது பல புதிய செய்திகள் தெரிந்து கொண்டோம். அவை வருமாறு,

"மத்தியப் பிரதேசத்தில் இப்பொழுது படித்தவர்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் மிகுதியாக

இருக்கிறது. முன்பெல்லாம் இங்கு படித்தவர்கள் குறைவு. இப்பொழுது எல்லா வேலைக்கும் எம். ஏ. படித்தவர்கள் வருகின்றனர். எனவே மத்தியப் பிரதேச அரசு சமீபகாலமாக ஓராசிரியர் பள்ளிகளைக் கிராமங்களில் திறந்து எம். ஏ. பி. டி. பட்டம் பெற்றவர் களை ஓராசிரியர்களாக நியமித்து வேலை கொடுத்து வருகிறது. இதனால் படித்தவர்களுக்கு வேலை கிடைக் கிறது; கிராமங்களில் கல்வி பரவுகிறது. எனக்கு 18 மாத அனுபவம் ஆகிறது. என் சம்பளம் ரூ 700'' என்று கூறினார்.

''நீங்கள் திருப்தியோடு வேலை செய்கிறீர் களா?'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''ஆம். கிராமப் புறக் கல்வி வளர்ச்சிக்கு என்னை நான் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். இது போன்ற மலைக்காட்டுப் பகுதிக்கு யாரும் பணியாற்ற வரமாட் டார்கள். ஆனால் இதனை நான் ஒரு தேசீயக் கடமை யாகவும் தெய்வப் பணியாகவும் ஏற்று இங்கு வந்து பணி புரிகிறேன்'' என்றார்.

அவரது தேசப்பற்று என்னை மிகவும் கவர்ந்தது. அவர் தமிழ்நாட்டின் கல்வி நிலை பற்றி என்னை விசா ரித்தார். ''இது மாதிரி ஓராசிரியர் பள்ளிகளைச் சுமார் இருபது வருடம் முன்பே திரு. **காமராஜ்** முதலமைச்சராக இருந்த பொழுது தமிழ்நாட்டில் ஏற்படுத்தினார். எனவே இப்பொழுது தமிழ்நாட்டில் பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லை எனலாம்'' என்றேன். அதற்கு அவர் ''நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்'' என்று பாராட் டினார்.

பிறகு நாங்கள் பலமைல் நடந்து **லக்னடவ்ன்** என்ற பெரிய ஊருக்கு 11 மணியளவில் வந்து சேர்ந்தோம். இது பஞ்சாரிமாவில் இருந்து 10 மைல் தொலை வுடையது. வெயில் இல்லாமல் மழைச்சாரலாக

இருந்ததால் நாங்கள் தொடர்ந்து நடக்க முடிந்தது. இங்கு ''அரசாங்க வனப்பயிற்சிப் பள்ளி'' இருக்கிறது. இதன் எதிரில் ஒரு மரத்தடியில் தங்கினோம். மரத்தின் அருகில் வரிசையாக நான்கு வீடுகள் இருந்தன. அவற்றில் முதல் வீட்டின் கதவு திறந்தே இருந்தது. அங்கு யாரும் இல்லாததால் நாங்கள் ஒருநாள் அதில் தங்கலாமா என்று சிலரைக் கேட்டோம். பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரும் அதனை மறுக்கவில்லை. எனவே நாங்களாக அந்த வீட்டுக்குள் குடி புகுந்தோம். நாங்கள் ஒருநாள் அங்கு வாழ அவ்வீடு என்ன தவம் செய்ததோ?

வீட்டில் எந்தப் பொருளும் இல்லை. எனவே நாங்கள் எங்கள் பைகளை அங்கு வைத்துக் கொண்டோம். சமையல் செய்து உண்டோம். இன்றையத் ''திரு அமுது'' நச்சாந்து பட்டி திருமதி பெரி. பெ. பார்வதி ஆச்சி அவர்களால் வழங்கப்பெற்றது.

ஒருநாள் முழுதும் அவ்வீட்டில் தங்கினோமே. யாராவது எங்களை ஏதாவது கேட்பார்கள் என்று நினைத்தோம். அங்கு வந்த யாருமே எங்களை எதுவுமே கேட்கவில்லை. மக்கள் காசிச்சாமியார்கள் ஆகிய எங்களை வணங்கி விபூதி பெற்றுச் சென்றார்களே ஒழிய, திறந்த வீட்டை நாங்கள் பயன்படுத்திக் கொண்டதற்கு எந்த ஆட்சேபணையும் எழுப்பவில்லை. அதற்குக் காரணம் அவர்களது தெய்வ பக்தியேயாகும்.

''மழை'' என்ற ஊர் கடந்து வந்த பொழுது காட்டில் ஓரிடத்தில் 'ஒரு ஜீப் கார்'' கவிழ்ந்து கிடந்தது பலர் அடிபட்டுக் கிடந்தனர். நாங்கள் ''நேபாசல்ப்'' பவுடர் தூவி, கட்டுக்கட்டி. வைத்தியம் செய்தோம். அடிப்பட்டுக் கிடந்தவர்களில் ஒரு போலீஸ்காரரும் இருந்தார்.

99. தொண்ணூறாம் நாள்-டூமா

காலை நாலேமுக்கால் மணிக்குப் புறப்பட்டோம். மலைப்பாங்கான பிரதேசத்தில் நடந்தோம். சிறிது மேடான பாதையில் சைக்கிளைத் தள்ளியவாறு நடந்தோம். 13 மைல் நடந்து காலை 10 மணிக்கு டூமா என்ற ஊரின் எல்லையை அடைந்து ஆலமர நிழலில் தங்கினோம். மக்கள் மத்தியில் தங்குவதை விட இப்படி மர நிழலில் தங்குவதுதான் எங்கட்கு நிம்மதியாக இருந்தது. மத்தியப் பிரதேசத்தின் ஆள் அரவமற்ற காட்டில் நாங்கள் வாழத் தொடங்கியது முதல் எங்களுக்கு, ஆளில்லாத மரத்தடிகளில் தங்குவதே விருப்பமாக இருந்தது. சிறுகச் சிறுக எங்கள் உள்ளம் துறவு நிலைநோக்கி நகர்ந்தது என்பதற்கு இதுவே நல்ல உதாரணம்; காட்டு வாழ்க்கை எங்கள் மனோ நிலையினைப் பெரிதும் பக்குவப்படுத்தி எங்களைத் தவசீலர்கள் ஆக்கியது என்றால் சிலர் நம்ப மறுக்கலாம்; ஆனால் அதுதான் உண்மை.

இருள் சூழ்ந்ததும் ஊருக்குள் சென்று அங்கிருந்த இராமர் கோவிலில் வழிபாடு செய்து, "ஜன்படா தொடக்கப் பள்ளி"யில் தங்கினோம். அப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. பி. பி. பபே (B.P.Bubey; Jan Pada Primary school Dhooma; seoni Dt) என்பவரும், அவருடன் பணியாற்றும் ஆசிரியர்கள் சிலரும் எங்களை அன்புடன் வரவேற்றுத் தேநீர் வழங்கினர். உள்ளூர் அன்பர்கள் சிலரும் வந்து சேர்ந்தனர். அவர்கள் எல்லோரும் எங்களது யாத்திரையின் நோக்கம் பற்றிக் கேள்விகள் கேட்டனர். "இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு (National

integration) வழிபடுவதே எங்கள் நோக்கம்'' என்றேன். அவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். ''ஒரு காலத்தில் பிரிவினை பற்றிப் பேசிய தமிழ்நாட்டில் இருந்து இப்பொழுது தேசிய ஒருமைப் பாட்டுக்குச் சோதனை ஏற்பட்டுள்ள நேரத்தில் தேச ஒற்றுமைக்காக முதல் குரல்—முதல் நடைப்பயணம் நிகழ்வது கண்டு பெரிதும் பாராட்டுகிறோம்.'' என்று கூறி எங்கள் பாதங்களைத் தொட்டு வணங்கினர். ஆனால் எங்களால் இந்தி மொழியில் நிறைய பேச முடியவில்லையே என்பதற்காக மிகவும் வருந்தினர். ''மொழி நம் ஒருமைப்பாட்டுக்குத் தடையில்லை. தமிழ்நாடு எப்பொழுதும் ஒருமைப்பாட்டின் பக்கம் தான்'' என்று கூறினேன்.

''அது எப்படி?'' என்றார்கள். அதற்கு நான் கூறிய பதில் வருமாறு; ''இந்தியாலின் வடமுனையில் காசி: தென்முனையில் இராமேஸ்வரம்-இவை இரண்டையும் நம் முன்னோர்கள் தெய்வீகக் கோட்டின் மூலம் இணைத்துள்ளார்கள். இந்த இரண்டையும் இரண்டு ஜோதிர்லிங்கங்களின் ஒளி இணைக்கிறது. இவற்றுக்கு இடையே உள்ள பிரதேசங்கள் எக்காலத்திலும் பிரியமுடியா. மேற்குப் பஞ்சாப் ஒரு காலத்தில் பாகிஸ்தானாகப் பிரிந்தது. கிழக்கு வங்காளம் பிறகு வங்காள தேசமாகப் பிரிந்தது. ''ஆசாத் காஷ்மீர்'' பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்டது. நேபா பிரதேசத்தில் ஒரு பகுதி சீனப் படையெடுப்பால் பறிக்கப்பட்டது. இனி எதிர்காலத்தில் சோதனைகள் ஏற்படலாம். ஆனால், காசி, இராமேஸ்வரம் பகுதிகள் இடையே ஒரு காலத்திலும் பிளவுஏற்படமுடியாது'' என்றேன். என் கருத்தை அவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

100. தொண்ணூற்று ஒன்றாம் நாள்

(அற்புதமான சிறிய ஹுல்கி பள்ளத்தாக்கு)

18-5-83 காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். மலைப்பாங்கான பிரதேசம் தொடர்ந்தது. காடு மிகமிக அடர்த்தியாக இருந்தது. ஆள் நடமாட்டமே இல்லை. "பஞ்சாரி மலை" எனப்படும் ஒரு மலையில் சைக்கிள் ரிக்‌ஷாவைத் தள்ளியவாறு ஏறினோம். இது மலைத் தொடர்ப் பிரதேசமாகும். நாங்கள் மலையேறிய பொழுது எங்களைச்சுற்றி மூன்றுபுறமும் மலைவளைந்து வருவதுபோல் தெரிந்தது. அந்த இயற்கைக் காட்சியைக் கண்டு ரசித்தோம். தொடர் மலையின் உச்சியை அடைந்து, பிறகு மலைத் தொடரில் இறங்க ஆரம்பித்தோம். எங்களைச்சுற்றி முப்புறமும் மலை சூழ, நாங்கள் ஏறியமலை இறங்கும் நிலையினைக் கண்டதும் நான் மகிழ்ந்தவாறு கூறலானேன்:

"இந்தப் பூகோளக் காட்சியைப் பார்க்கும் பொழுது நாம் இறங்கும் மலை நடுவிலேயே நின்றுவிடலாம். முப்புறமும் மலைசூழ்ந்து வருவதால், நாம் இறங்கும் மலையின் அடிவாரத்தில் ஒரு சிறிய பள்ளத்தாக்கு ஏற்பட்டிருக்க வழியுண்டு. பார்க்கலாம்" என்றேன். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்!

வேகமாக மலைவிட்டு இறங்கினோம். சிறிது நேரத்தில் அடிவாரம் வந்து சேர்ந்தோம். என்னவியப்பு! இப்பொழுது எங்களைச் சுற்றி நாற்புறமும் மலைகள் சூழ்ந்துள்ளன. நாங்கள் ஒரு சிறிய பள்ளத்தாக்கில்

இருப்பதை உணர்ந்தோம். (அதாவது ஒரு குளத்தில் இருப்பது போல)''இப்படித் தான் பள்ளத்தாக்குகள் ஏற்படுகின்றன'' என்ற பூகோள உண்மையினை எங்கள் பக்தர்களுக்கு விவரித்தேன்.

''இது போல் வேறு பள்ளத்தாக்கு பார்த்திருக்கிறீர்களா?'' என்றார்கள்.

''ஆம். உலகிலேயே இரண்டு பெரிய பள்ளத்தாக்குகள் மிகவும் புகழ்பெற்றவை. அவற்றில் ஒன்று காஷ்மீர்ப் பள்ளத்தாக்கு. அது நம் இந்தியாவில் இமயமலையில் இருக்கிறது. இன்னொன்று ஜெனீவாப் பள்ளத்தாக்கு.அது சுவிட்சர் லாந்தில் இருக்கிறது. அந்த இரண்டு பள்ளத்தாக்குகளுக்கும் சென்று பார்த்து வரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவை மிகவும் பெரிய பள்ளத்தாக்குகள். ஆனால் இது ஒரு **சிறிய பள்ளத்தாக்கு**'' (Mini valley) என்றேன்.

சிறிது நடந்து **ஹுல்கி (Hulki)** என்ற ஊருக்கு வந்தோம். இது வரை நாங்கள் 11 மைல் நடந்து 11 மணி அளவில் இந்த ஊர் வந்து சேர்ந்தோம். இந்த ஊரை உள்ளடக்கிய சிறிய பள்ளத்தாக்கினை ஹுல்கி பள்ளத்தாக்கு என்று அழைப்போம். மத்தியப் பிரதேச அரசு முயன்றால் இப்பள்ளத்தாக்கினை மிகப்பெரிய சுற்றுலாத்தலம் ஆக்கலாம்.

மலையில் வரும் பொழுது எங்கள் ரிக்ஷாவின் ரிம் வளைந்துவிட்டது. அதனைப் பழுது பார்க்க முயன்றும் இயலவில்லை. மறுநாள் சிறிது தூரம் அது வளைந்த ரிம்மோடு ஓடியது விசுவநாதர் திருவருளே!

ஹுல்கியில் அரசாங்கத் தொடக்கப்பள்ளியில் தங்கினோம். அது ஒரு சிறிய கட்டடம். மரநிழலில் சமையல் செய்து உண்டோம். இன்றையத்''திரு அமுது'' புதுக்கோட்டை திரு. க. சிவமணி அவர்களால் வழங்கப் பெற்றது.

உள்ளூர் மக்கள் எங்களைச் சந்தித்து ஆசி பெற்றனர். இரவு 9 மணிக்குத் தூங்கத் தொடங்கினோம். இரவு 11 மணி அளவில் எனக்குச் சிறிது வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. இரவில் கோதுமைத் தோசை சாப்பிட்டதால் ஏற்பட்டதன் விளைவு இது! என்னிடம் இருந்த மாத்திரையினை வாயில் போட்டுத் தூங்கினேன்.

நள்ளிரவு இருக்கும். யாரோ எங்களை எழுப்புகிற சப்தம் கேட்டு எழுந்தேன். மற்றவர்களும் எழுந்தார்கள். எங்களைச் சுற்றிச் சுமார் நூறு மலைசாதி மக்கள் தலையில்தலைப்பாகையோடு, கையில் ஒரு வகையான தீவட்டியோடு நிற்கக் கண்டோம். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும் தைரியமாக எங்களுக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில் பேசினோம். அவர்கள் பேச்சில் இருந்து நாங்கள் அறிந்த விபரம் வருமாறு.

அவர்கள் மலைஜாதி மக்கள். ஒரு திருமணத்திற்குப் போவதற்காகச் சுமார் நூறு பேருக்கு மேல் ஆண், பெண், குழந்தைகள் நடந்து வந்துள்ளனர். விடிகாலை 4 மணிக்கு மீண்டும் நடந்து போய்விடுவர். அவர்கள் எப்பொழுது வந்தாலும் இரவில் இங்கு தான் தங்குவர். அந்தப் பழக்கப்படி இங்கே தங்க வந்துள்ளனர். ஆகவே எங்களை யார் என்று அவர்கள் விசாரித்து எங்களை வெளியே சென்று படுக்கும்படி கூறினர்.

''நாங்கள் இராமேசுவரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை செல்கிறோம்'' என்றேன். இராமேஸ்வரம் என்ற வார்த்தையைக் கேட்டதும் அவர்கள் எங்களைப் பணிந்து வணங்கி விட்டு எல்லோரும் வெளியே சென்று மைதானத்தில் படுத்துக் கொண்டனர். மலைஜாதி மக்களின் இராமேஸ்வர பக்தி எங்களை வெகுவாகக் கவர்ந்தது.

இரவு நாங்கள் நன்கு தூங்கினோம். என்றாலும் இரவில் இரண்டு மூன்று முறை எனக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. விசுவநாதரை மனத்தில் வழிபட்டவாறே தூங்கினேன்.

101. தொண்ணூற்று இரண்டு தொண்ணூற்று மூன்றாம் நாள்
(டேமர் நதி-பர்கி)

19-5-83 காலை 4¼ மணிக்குப் பயணமானோம். அப்பொழுது எனக்கு வயிற்றுப் போக்கு நிற்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். எனவே இனி அடுத்து என்ன செய்வது என்ற சிந்தனையில் நடந்து கொண்டிருந்தேன். சைக்கிள் ரிக்ஷா ரிம் அதிகமாக வளைந்து விட்டதால் பாதையில் ஓரிடத்தில் அதனைக் கழற்றிப் பழுது பார்க்க நேர்ந்தது. அப்பொழுது நாங்கள் அங்கு ரிக்ஷா ஓட்டுநருக்கு உதவியாக இருந்தோம். என் உடல்நிலை சரியாக இல்லை. எனவே மற்றவர்களை நிறுத்திவிட்டு, அய்யாச்சாமியை மட்டும் என் உதவிக்கு அழைத்துக் கொண்டு விரைந்து நடக்கலானேன். வழியில் சில முறை பேதி ஆயிற்று. மேலும் சில மாத்திரைகளை விழுங்கினேன். விசுவநாதரைப் பிரார்த்தித்தவாறே நடந்தேன்.

பள்ளத்தாக்கு கடந்து, மலைப்பகுதி கடந்து, சுக்ரி என்ற ஊர் வழியாக நடந்தோம். **டேமர் நதியில்** நீராடி 9 மணிக்கு **பர்கி** என்ற சிற்றூருக்கு வந்து சேர்ந்தோம். சிலமணி நேரத்தில் மற்றவர்களும் வந்து சேர்ந்தனர். பல முறை வயிற்றுப் போக்கினால் பெரிதும் சோர்வடைந்திருந்தேன். எனவே பர்கியில் யாராவது மருத்துவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து வரும்படி அய்யாசாமியை அனுப்பினேன். ஒரு கடையில் தயிர்

வாங்கி அருந்திவிட்டுச் சாலை ஓரமாக மர நிழலில் படுத்தேன். அரைமணி நேரத்தில் அய்யாசாமி வெற்றி கரமாகத் திரும்பி வந்தார்.

''ஊருக்குள் அரசாங்க மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அங்கு சென்று நமது பயண நிகழ்ச்சி நிரலைக் காட்டி, ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்று சைகை மூலம் தெரிவித்தேன். உடனே டாக்டர் அழைத்து வரச் சொன்னார். ஆகவே வாருங்கள் போகலாம்'' என்றார்.

இதுவும் விசுவநாதர் திருவருளே என்று எண்ணியவாறு நடக்கமுடியாமல் நடந்து ஊருக்குள் சென்று மருத்துவமனையை அடைந்தேன். அங்கிருந்த டாக்டர் பாலிகா M.B.B.S. என்னை மிகவும் அன்பாக வரவேற்றார். அவருடன் ஆங்கிலத்தில் உரையாடி நமது பயண நோக்கம்—பயண விவரம் பற்றி எல்லாம் சொன்னேன். அவர் மிகவும் மகிழ்ந்து பாராட்டினார். ''இந்தக் காலத்தில் இப்படித் தெய்வீக வீரச் செயலில் ஈடுபடுகிறவர்களைக் காண்பது அரிது'' என்று கூறிப் போற்றினார். பிறகு என்னை நன்கு பரிசோதனை செய்தார். அவர் கூறிய விபரம் வருமாறு:

''உங்களுக்கு வெப்பத் தாக்குதலால் (Sun Stroke) வயிற்றுப் போக்கு ஏற்பட்டுள்ளது. பயப்படாதீர்கள். இனி வெறும் தண்ணீர் அருந்தாமல், தண்ணீரில் இந்த மருந்தைக் கலந்து குடியுங்கள்'' என்று பல பொட்டலங்களைக் கொடுத்தார். ''உங்கள் குழுவினர் எல்லோருமே இந்தப் பொடியைக் கலந்து குடிப்பது நல்லது. வெப்பத் தாக்குதலுக்கு இது ஈடுகொடுக்கும். உடலில் உள்ள நீர்ச் சத்து குறையாமல் பாதுகாக்கும். மேலும் இந்த மாத்திரைகளைச் சாப்பிடுங்கள். வியாதி விரைவில் குணமாகும். இயன்ற வரை பழங்கள், தயிர் சாப்பிடுங்கள். நாளை உங்களுக்கு எல்லாம் சரியாகி

விடும். நாளையும் ஒரு முறை என்னைச் சந்தியுங்கள்'' என்று சொல்லி எங்களுக்கு வாழ்த்துக் கூறி மருத்துகளும், பொட்டலங்களும் தந்து எங்களை அனுப்பினார். எங்களிடம் காசு வாங்க அவர் மறுத்து விட்டார். எங்கள் குழுவினர் பயன்படுத்தப் பல மருந்துப் பொட்டலங் களும் தந்தார். அவை பிறகு எங்கட்கு மிகவும் பயன் பட்டன.

மருந்துகளைப் பயன்படுத்தினேன். அவை வியாதியைக் குணப்படுத்தியது போலவும் தெரிந்தது. குணப்படுத்தாதது போலவும் தெரிந்தது. எல்லாம் ''விசுவநாதர் பொறுப்பு'' என்று விட்டு விட்டேன்.

பர்கியில் ஒரு சிறு குன்று இருக்கிறது. அதன் மேல் ''சங்கர் மந்திர்'' உள்ளது. அங்கு எழுந்தருளி இருக்கும் சிவலிங்கத்தை வணங்கி, குன்றின் அடிவாரத் தில் இருக்கும் தொடக்கப் பள்ளிக் கட்டடத் தாழ்வாரத் தில் தங்கினோம். அன்று முழுதும் அங்கு நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டோம். பொறி உருண்டை, தர்பூசணிப் பழம் முதலியன கிடைத்தன.

பள்ளி முற்றத்தில் சமையல் செய்து உண்டோம். காலை உணவு திருச்சி திரு. ஏ.ஆர். அழகப்பன் அவர் களாலும், மதிய உணவு திருச்சி ''கன்னா பிரதர்ஸ்'' நிறுவனத்தினராலும், இரவு உணவு நடராஜபுரம் திரு. மா. பழ. லெ. அலமேலு ஆச்சி அவர்களாலும் ''திரு அமுதாக'' வழங்கப் பெற்றன.

(20-5-83) தொண்ணூற்று மூன்றாம் நாள் விடிந்தது. வயிற்றுப்போக்கு நீடித்தது. எனவே என்ன செய்வது என்று தெரியவில்லை. மருத்துவரைச் சந்தித் தேன். அவர் புதிய மருந்து கொடுத்தார். என் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. எனவே அன்று மாலையில் எங்கள் குழுவினர்களிடம் கீழ்க்கண்டவாறு கூறலானேன்.

"நாம் சுமார் 1300 மைல் இதுவரை நடந்து வந்துள்ளோம். இன்னும் 350 மைலில் காசி இருக்கிறது. இன்னும் 23ஆவது நாள் காலையில் நாம் காசி விசுவ நாதர் ஆலயத்தில் இருக்க வேண்டும். என் உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இனியும் வயிற்றுப் போக்கு ஏற்படுமானால் என்னால் தாங்க இயலாமல் போய்விடும். எனவே இப்பொழுது ஒரு மாத்திரை கடைசியாக உங்கள் முன் சாப்பிடப் போகிறேன். இத்துடன் வயிற்றுப்போக்கு நின்றால் நான் நாளைக் காலை உங்களுடன் நடக்கிறேன். இல்லாவிட்டால் நாளைக் காலை நீங்கள் தொடர்ந்து நடங்கள். நான் பேருந்து மூலம் பயணம் செய்து காசிக்குச் சென்று அங்குள்ள நகரத்தார் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை செய்து கொண்டு உங்கள் வருகைக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். நீங்கள் நல்லவிதமாக வந்து சேருங்கள்.

இப்பயணத்தின் அமைப்பாளர்- தலைவர் என்ற முறையில் அடியேன் திரு. இராகவன் அவர்களைத் துணைத்தலைவராக அமைக்கிறேன். அவர்கள் என் பொறுப்புக்களை எல்லாம் ஏற்று உங்களை வழிநடத்தி வருவார்கள். இதுவரை என் சொல்லைக் கேட்டு நீங்கள் நடந்ததுபோல இனி அவரது சொல்லைக் கேட்டு நடந்து வந்து பயணத்தை வெற்றியாக்குங்கள்.

சாதாரணமாகக் காசிக்கு வாகனங்கள் மூலம் செல்பவர்கள் அலகாபாத்தில் முடியிறக்கிக் கங்கை-யமுனை-சரஸ்வதி சங்கமத்தில் நீராடுவர்; காசியில் விசுவநாதரை வழிபடுவர்; கயாவில் பிதுர்க்கடன் செய்வர். இதனை

அலகாபாத் முண்டம் (முடியிறக்குதல்)
காசி தண்டம் (தண்டனிடுதல்)
கயா பிண்டம் (பிதுர்க்கடன் செலுத்தல்)

என்ற பழமொழியால் அறியலாம். நாம் மற்றவர்கள் போலக் காசிக்கு வாகனத்தில் செல்லவில்லை. பெரிய வேள்வியாக நடந்து செல்கிறோம். எனவே அலகா பாத்தில் முடியிறக்க நான் விரும்பவில்லை; காசி யிலேயே முடியிறக்க விரும்புகிறேன். அது சரியா என்று எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு தூரம் நடந்து சென்று அடைகின்ற காசியில் முடியிறக்காமல் அலகா பாத்தில் முடியிறக்க என் மனம் இசையவில்லை. எனவே ஒரு சோதனை செய்ய விரும்புகிறேன். நான் சாப்பிடப் போகும் இந்த மாத்திரையினால் வயிற்றுப்போக்கு உடனே நின்று விடுமானால் நாளை நான் நடக்கிறேன். காசியில் முடி இறக்குகிறேன், வயிற்றுப் போக்கு நிற்கா விட்டால் உடனே நான் பேருந்தில் ஏறுகிறேன்; அலகாபாத்தில் முடி இறக்குகிறேன். விசுவநாதர் விட்ட வழி'' என்று கூறி ஒரு மாத்திரையினை விழுங்கினேன்.

விசுவநாதர் நல்ல வழி காட்டினார். ஒருமணி நேரம் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறையாக இது வரை பேதியாகிய உடம்பில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. கடைசி மாத்திரை சாப்பிட்ட பின் வயிற்றுப் போக்கு நின்றது. அன்று மாலை, அந்தி, இரவு எந்த நேரத்திலும் வயிற்றுப்போக்கு நிகழ வில்லை. எல்லாம் விசுவநாதர் அருள். எனவே மறு நாள் காலை நான் நடப்பது என்பதும், காசியில் முடியிறக்க வேண்டும் என்பதும் தெய்வக் கட்டளையாக உணர்ந்தேன். எங்கள் குழுவினர்களும் காசியில் முடியிறக்க என்னைப் பின்பற்றி முடிவெடுத்தனர்.

பர்கியில் இன்று மதியத் திரு. அமுது சேலம் திரு. டி. சிதம்பரம் அவர்களால் வழங்கப்பெற்றது.

பர்கியில் இன்று பள்ளி மைதானத்தில் கிராமச் சந்தை கூடக் கண்டோம். முற்பகல் 11மணி அளவில் சந்தை கூடியது. பிற்பகல் 3மணிக்கெல்லாம் சந்தை கலைந்தது. உணவுப்பொருட்கள், தின்பண்டங்கள், துணிமணிகள், பாத்திரங்கள் முதலியன இச்சந்தையில் விற்பனையாயின. காட்டுப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இங்கு வந்து பொருள்களை வாங்கிச் சென்றனர். நாங்களும் சில பொருள்கள் வாங்கிக் கொண்டோம்.

102. தொண்ணூற்று நான்காம் நாள்
(நர்மதை நதி—தில்வாராகாட்—ஜபல்பூர்—கல் உடைக்கும் தமிழர்கள்)

21-5-83 சனி காலை 4¾ மணிக்குப் புறப் பட்டோம். இன்று எங்களுக்கு ஒரு முக்கியமான நாள். ஏனெனில் இன்று நாங்கள் பாரதத்தின் மிகப் புண்ணிய நதிகளில் ஒன்றாகிய **நர்மதை நதி**யில் நீராடப் போகி றோம். மேலும் மத்தியப் பிரதேசத்தின் மிகப்பெரிய நகர்களில் ஒன்றாகிய **ஜபல்பூரில்** நுழையப் போகிறோம். ஆர்வமாக நடக்கலானோம். இரண்டுநாட்களாக வயிற்றுப் போக்கினால் உடல் மெலிந்திருந்த நான் மிகவும் மெதுவாக நடக்கலானேன். இரண்டு நாளாக ஒன்றும் சாப்பிடாமல் வேறு இருந்ததால் உடல் மிகவும் பலவீனமாக இருந்தது. என்றாலும் விசுவநாதர் மீது பாரத்தைப் போட்டு நடந்தேன். அவர் என்னை வழி நடத்திச் சென்றார். வாகை சூட்டினார். அவ்வளவுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

மலையும் காடும் நிறைந்த பாதையில் 10 மைல் நடந்து காலை 9½ மணிக்கு நர்மதை நதியை அடைந் தோம். அந்தக் கோடை வெயிலிலும் நர்மதையில் தண்ணீர் நிறைய ஓடியது. எல்லையற்ற பக்தியோடு நர்மதையில் நெடுநேரம் குளித்தோம். என் உடம்பில் இருந்த சோர்வெல்லாம் நீங்கித் தெம்பு பிறக்கக் கண்டேன்.

நர்மதை நதியில் **சிவலிங்கம்** உற்பத்தி ஆவதாகப் பெரியோர்கள் சொல்வர். எனவே நாங்கள் நர்மதை

நதிக்கரையில் சிறிது தூரம் நடந்து தேடினோம். மிகச் சிறிய, வடிவம் குறைந்த சிவலிங்கங்கள் கிடைத்தனவே ஒழியச் சரியான சிவலிங்கங்கள் கிடைக்கவில்லை. பலமைல் வடக்கே நர்மதை நதி ஓரமாக நடந்தால் சிவலிங்கம் கிடைக்கும் என்றார்கள். அதற்கு நேரம் இல்லாததால் நாங்கள் அந்த முயற்சியில் ஈடுபட வில்லை. மேலும் வாணா நதிக்கரையில் சிவலிங்கம் உற்பத்தி ஆவதை நாங்கள் கண்டுவிட்டதால் எங்களுக்கு நர்மதையின் வடக்கே நடப்பதில் ஆர்வம் பிறக்கவில்லை.

நர்மதையில் நீராடி மீண்டும் தென் கரையில் ஏறினோம். அப்பொழுது அங்கிருந்த இராமர் கோயிலில் வழிபட்டோம். "ராமா! நேற்று என் உடல் இருந்த நிலையில் நர்மதை நதியில் குளிக்கும் பாக்கியம் கிடைக்குமா?" என்றிருந்தேன். அந்தப் பாக்கியத்தை இன்று தந்து விட்டாய். இனி மேலும் நடந்து காசிக்குச் சென்று கங்கை முதலிய எல்லாப் புண்ணிய நதிகளிலும் ஆடும் பாக்கியத்தையும் தா" என்று மனமார வணங்கினேன். ஸ்ரீராமபிரான் எனக்கு அருள் புரிந்தார். அதன்பின் ஓரளவு பொறி உருண்டை, தர்பூசணி, ரொட்டி போன்ற உணவுப் பொருள்களை மட்டும் உண்டவாறு நடந்தேன். வேறு எதுவும் உண்ணவில்லை. "உண்டால் மீண்டும் வயிற்றுப் போக்கு ஏற்பட்டு விடுமோ?" என்ற பயம். எனவே வயிற்றைப் பெரும்பாலும் பட்டினி போட்டே நடந்தேன். அதனால் குடல் சுருங்கி, வயிறு ஒட்டி உலர்ந்து விட்டது. நாங்கள் காசிக்குச் சென்ற அன்று என்னால் ஒரு இட்லி கூட உண்ண முடியவில்லை. அந்த அளவுக்கு என் குடல் சுருங்கி விட்டது. ஊன் குறைந்து விட்டது. அதனால் என்ன? அதற்குப் பதிலாக "உள்ஒளி" பெருகிவிட்ட தல்லவா? இதனைத்தான் **மாணிக்கவாசகர்**

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே?!

என்கிறார். மாணிக்க வாசரைத் தொடர்ந்து புறம் புறமாகச் சிவபெருமான் திரிந்தாராம். அவரும் சிவபெருமானைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தாராம். அதற்குக் காரணம் அவரது ஊன் சுருங்கி, உள் ஒளி பெருகியதே ஆகும். அது போல் அடியேனின் ஊனும் சுருங்கி, உள் ஒளி பெருகியதால் காசிக்கு நடந்து விசுவநாதரைக் காணும் பேறு கிடைத்தது.

அப்பொழுது வயிற்றைப் பட்டினி போட்டதால் இப்பொழுது "அல்சர்" நோயினால் வாடுகிறேன். இதுவும் விரைவில் விசுவநாதர் அருளால் குணமாகும் என்பதில் ஐயமில்லை.

நர்மதையின் தென்கரையில் இராமமரை வழி பட்டதும் பாலம் வழியே நடந்து சாலை வழியே நடந்தோம். என்ன அதிசயம்! ஒவ்வொரு வீட்டின் முன்னும் ஒவ்வொரு சிவலிங்கத்தை ஒரு பீடத்தின் மீது வைத்து மேலே இருக்கும் ஒரு செம்பிலிருந்து சொட்டுச் சொட்டாகத் தண்ணீர் அபிஷேகம் ஆகும் நிலையில் அமைத்திருந்தார்கள். "கோடை வெயிலுக்குச் சிவபெருமானுக்குக் குளிர்நீர் அபிஷேகம் செய்தால் மக்களுக்குக் கோடை வெப்பு குறையும் என்பது ஐதீகம்!' அதனை இங்கு வீட்டுக்கு வீடு அனுசரிக்கக் கண்டு மெய் மறந்தோம்! என்னே மத்தியப் பிரதேச மக்களின் பக்தி!

இவர்கள் பக்திக்குப் **பிரகலாதனின் பக்தியை** மட்டுமே ஈடுசொல்ல முடியும்.

ஒவ்வொரு வீட்டின் முன்பும் வைத்திருந்த சிவலிங்கங்கள் சிறியனவாகவும், நடுத்தரமானதாகவும், பெரியனவாகவும் இருந்தன. மிக அழகாக இருந்தன. பல நிறங்களில் இருந்தன. ''இவை ஏது?'' என்று கேட்டோம். அதற்கு அந்த மக்கள், ''இவை எல்லாம் நர்மதை நதியில் கிடைத்தவை. நாங்கள் நர்மதையில் நீராடும் பொழுது நர்மதைத் தாய் எங்களுக்குத் தந்த அன்பளிப்பு. ஆகவே இவற்றை வீட்டின் முன் வைத்துக் கொண்டாடுகிறோம்'' என்றனர். ''அடடா! நமக்கு அந்தப் பேறு கிட்டவில்லையே'' என்று நாங்கள் வருந்தினோம்.

நர்மதைப் பாலம் கடந்ததும் உள்ள ஊருக்கு **தில்வாராகாட்** என்பது பெயர். மகாராஷ்ட்ராவில் இருந்தே நாங்கள் இந்தியில் தான் பேசி வருகிறோம். இங்கு எங்களைச் சந்தித்த மக்கள் எல்லாம் பயபக்தி யோடு எங்களை வணங்கினர், ''காந்தி-நேரு நினைவுச் சின்னப் பூங்கா,'' 'காங்கிரஸ் கட்டடம்' ஆகியவற்றைக் கண்ணுற்றவாறு, ஊரின் எல்லையில் இருந்த ஒரு பள்ளிக் கட்டடத்திற்குள் நுழைந்தோம். கனமழை கொட்டத் தொடங்கியது! இது போன்ற ஒரு மழையை நாங்கள் எங்கள் வாழ்நாளில் கண்டதில்லை. அப்படி ஒரு மழை சுமார் மூன்று மணி நேரம் பெய்தது. நாங்கள் தங்கி யிருந்த பள்ளிக் கட்டடம் ஒழுகியது. எந்தப் பக்கம் தங்கினாலும் சாரல் அடித்தது. இடி சப்தம் காதைத் துளைத்தது; மின்னல் கண்ணைப் பறித்தது. நாங்கள் ஏதோ ஒரு சமாதானத்துக்காகப் பள்ளியில் தங்கி இருந்தோமே தவிர எங்கள் உடம்பெல்லாம் மழை ஒழுக்கினால் நனைந்து விட்டது.

போதாக் குறைக்கு எருமை மாடுகள், காளை மாடுகள், பசுக்கள் எல்லாம் எங்கிருந்தோ மேய்ந்து விட்டு, சாரி சாரியாக நடந்து வந்து பள்ளிக்குள் நுழைந்து எங்கள் அருகில் நின்றன. எங்கு பார்த்தாலும் மாடும், சாணமும், கோமயமும் ஆக இருந்தன. எங்கள் கையில் குழல் இல்லை. குழல் இருந்திருந்தால் நாங்கள் நிச்சயம் **கிருஷ்ண பரமாத்மா** தான்! மாடுகள் எங்களை முட்டாமல் எங்கள் அருகில் மிக அமைதியாக நின்றன. ஆபத்துக் காலங்களில் மனிதனைவிட மிருகங்கள் எவ்வளவோ மேல் என்பதை இதில் இருந்து உணர்ந்தோம்.

வானம் இடிந்து வடநாட்டில் மழை எவ்வாறு கொட்டும் என்பதை நர்மதை நதிக்கரையில் கண்டு கொண்டு விட்டோம். எனவே எந்தக் கராணத்தைக் கொண்டும் திட்டம் மாறாமல், குறித்தபடி ஜூன் 12 அன்று காசிக்குப் போய்ச் சேரவேண்டும் என்று அந்த மழை நடுவே தீர்மானம் செய்து கொண்டோம். மழைக் காலம் தொடங்கி விட்டால் வடநாட்டில் நதிகளில் எல்லாம் பாலத்துக்குமேல் வெள்ளம் ஓடும். பிறகு நம் பயணம் அதோகதிதான்! எனவே எச்சரிக்கை யானோம்.

பிற்பகல் 2½ மணிக்கு மழை நின்றது. வானம் வெளுத்தது. பாதையெல்லாம் இருந்த சூடு ஆறி இருந்த தால் காலுக்கு இதமாக இருந்தது. ஆர்வமாக நடக்கத் தொடங்கினோம். 10 மைல் நடந்து 6½ மணி அளவில் **ஜபல்பூர்** எல்லையை அடைந்தோம். எல்லையில் சாலையின் இருபுறமும் குண்டுக்கற்களை அடுக்கியது போன்ற அழகான மலைகள் தென்பட்டன. அம் மலைகளுக்கு இடையில் பாதை சென்றது மிக அழகான காட்சியாக இருந்தது. இருபுறமும் குண்டுக்கற்களை அடுக்கியது போன்ற மலைகளை ஒரு படத்தில் கண்டால்

அது ஜபல்பூர் என்று கூறிவிடலாம். தாஜ்மகால் என்றவுடனே ஆக்ரா நினைவுக்கு வரும். செங்கோட்டை என்றவுடனே டில்லி நினைவுக்கு வரும். "புலி அருவி" என்றவுடனே குற்றாலம் நினைவுக்கு வரும். கடற்கரைக் கோயிலைக் கண்டவுடனே திருச்செந்தூர் நினைவுக்கு வரும். அதுபோல் சாலையின் இருபுறமும் குண்டுக் கற்களை வைத்து அடுக்கியது போன்ற மலைக் காட்சியைக் கண்டவுடனே ஜபல்பூர் நினைவுக்கு வரும்.

ஜபல்பூரின் எல்லையில் நுழையும்பொழுது இருபுறமும் மலைப்பகுதியில் ஏராளமான தொழிலாளிகள் கல்லுடைத்துக் கொண்டிருந்தனர். நாங்கள் தமிழில் பேசிக் கொண்டு நடப்பதைக் கண்டதும் அவர்கள் உளியைப் போட்டு விட்டு, ஓடிவந்து எங்களை நிறுத்தி, "நீங்கள் யார்?" என்று தமிழில் ஆர்வமோடு கேட்டனர். பல நாட்களாகத் தமிழ்ப் பேச்சைப் பிறர் வாயில் இருந்து கேட்டிராத எங்கட்கு ஜபல்பூரில் தமிழ் பேசுவோரைக் கண்டதும் எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாகியது. நாங்கள் எங்கள் கதையைக் கூறிவிட்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டோம்.

அதற்கு அவர்கள் கூறிய பதில் வருவாறு; "நாங்கள் தமிழர்கள்தான். சேலம், ஈரோடு முதலிய பல பகுதிகளில் இருந்து இங்கு வந்துள்ளோம். சுமார் 40 ஆண்டுகளாக இங்கு கல் உடைத்து வருகிறோம். நல்ல சம்பளம் கிடைக்கிறது. இவ்வளவு சம்பளம் நம் ஊரில் கிடைக்காது. ஆகவே இங்கேயே தொடர்ந்து வாழ்ந்து வருகிறோம்' என்றார்கள்.

"இங்கு எவ்வளவு பேர் தமிழர்கள் இருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "சுமார் ஐயாயிரம் தமிழர்கள் வாழ்கிறோம், பெரும்பாலும் கல் உடைப்பதுதான் எங்கள் தொழில். இங்கேயே திருமணம் செய்து கொண்டு, பிள்ளைபெற்று,

ஜபல்பூர் மக்களோடு இணைந்து வாழ்கிறோம். எப்பொழுதாவது தமிழ்நாட்டுக்கு வருவோம்'' என்றார்கள்.

குமான், சங்கரன், வேலு போன்ற பெயர் உடைய இளைஞர்கள் பலரும் வந்து எங்களுடன் பேசிக் கொண்டிருந்தனர். எங்களை அங்கு வாழும் தமிழர்கள் தொடர்ந்து செல்ல விடவில்லை. அவர்களால் இயன்ற உபசாரம் செய்தார்கள். அன்று இரவு அங்கு தங்கி, மறுநாள் மாலை அவர்களது **தமிழ்ச் சங்கத்தில்** உரை யாற்றிச் செல்லுமாறு வேண்டினர். அவர்களது தமிழ்ப் பற்றினைப் பாராட்டினேன். பயணத்திட்டம் மாற்ற இயலாதது என்பதை விளக்கி, அவர்களிடம் இருந்து பிரியாவிடைபெற்றுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஜபல்பூர் மருத்துவக் கல்லூரி, அழகான சமணமதக் கோயில் ஆகியவற்றைக் கண்டவாறு சந்தடிமிக்க நகருக்குள் நுழைந்தோம். ஜபல்பூர் ஒன்பது இலட்சம் மக்களைக் கொண்ட மிக நெருக்கமான நகரம். போக்குவரத்து நெருக்கடியாக இருந்தது. எங்கட்கு அறிமுகப்படுத்தப்பட்ட முகவரியாளரைச் சந்திக்க இருவரை அனுப்பி விட்டு, ஒரு சைக்கிள் கடையில் அமர்ந்து, எங்கள் ரிக்ஷாவைப் பழுது பார்த்தோம். நாகபுரியில் ''டங்ககாக்'' அறிமுகப்படுத்திய ஜபல்பூர் நண்பர் அன்று ஊரில் இல்லை. எனவே அவரைச் சந்திக்க முடியாமல் எங்கள் பக்தர்கள் இருவரும் திரும்பினர். எனினும் அவர்களிடம் நான் கொடுத்தனுப்பிய கடிதத்தை அவரது அலுவலகத்தில் கொடுத்து விட்டு வந்தனர். அக்கடிதத்தில் நான் குறிப்பட்டிருந்தபடி அந்த நண்பர், அவருக்கு வந்திருந்த எமது கடிதங்களைப் பிறகு காசி நகரவிடுதி முகவரிக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். அத்துடன் அன்று சந்திக்க இயலாமற் போனதற்கு மிகவும் வருத்தப்பட்டிருந்தார்.

இரவு 8½ மணி அளவில் "கோதம்ஜிமெடியா" எனப்படும் சிறிய சிவன் கோவிலை வணங்கி, அதன் அருகில் இருந்த "தீன்மந்திர்" கோவிலில் வழிபாடு செய்து, "அனுமான் கோயில்" முற்றத்தில் தங்கினோம். 16 வயது மதிக்கத்தக்க இரண்டு சிறுவர்கள் எங்களை அந்த இடத்துக்கு அழைத்துச் சென்று, அங்கு நாங்கள் தங்க உதவி செய்தனர். அங்கு இரவு நேரத்தில் சில சமயங்களில் திருட்டு நடக்குமாம். எனவே எச்சரிக்கையாக எங்களை இருக்கும்படி அந்த சிறுவர்கள் கூறிச் சென்றனர். நாங்கள் எச்சரிக்கையாக அன்று இரவு உறங்கினோம். அதனால் இடையிடையே விழித்து உறங்க நேர்ந்தது.

விலங்குகள் வாழும் காட்டில் நிம்மதியாகத் தூங்கிய நாங்கள், மனிதர்கள் வாழும் நகரத்தில் எச்சரிக்கையாகத் தூங்க நேர்வது ஏன்? இதுதான் காலத்தின் கோலம்! மனிதன் ஏன் இப்படி வீழ்ச்சி அடைந்திருக்கிறான்?

103. தொண்ணூற்று ஐந்தாம் நாள்

(பநாகர்-காந்தி கிராமம்-பைத்தியங்கள்)

காலை 4¾ மணிக்குப் புறப்பட்டோம். ஜபல்பூரின் வட எல்லையை அடைந்த பொழுது அப்பகுதியில் ஆயிரக்கணக்கான எருமை மாடுகள் பண்ணைகளில் அணிவகுத்து நிற்கும் காட்சியினைக் கண்டு அதிசயத்தோம். ஜபல்பூரில் இருக்கும் அளவுக்கு **எருமை மாடு** வேறு எந்த ஊரிலாவது இருக்குமா என்பது ஐயமே. எருமை மாட்டின் பால், வெண்ணெயில் இருந்து பல பொருள்கள் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

வழியில் ''ஜவஹர்லால் நேரு விவசாயப் பல்கலைக் கழகம்'' கண்டோம்.

''ராணிதயால்'' வழியாக 10 மைல் நடந்து **பநாகர்** என்ற ஊரினை அடைந்தோம்.

மாலை 3½ மணிக்குப் புறப்பட்டோம். 2 மைலில் **டியோரி** என்ற ஊர் வழியாக நாங்கள் சென்ற பொழுது, நாங்கள் தமிழில் பேசிக் கொள்வதைப் பார்த்து இரண்டு மூன்று பேர் ஒரு கடையில் இருந்து ஓடிவந்து, ''நீங்கள் தமிழர்களா?'' என்று ஆர்வத்துடன் தமிழில் கேட்டனர். நாங்கள் ''ஆம்'' என்று அன்போடு பதில் சொன்னோம். அவர்கள் எங்களை மிகவும் ஆதரவாக வரவேற்றனர்.

சிவகங்கையைச் சேர்ந்த எஸ். **காசிம்,** திருநெல்வேலி மாவட்டம் சொக்கனூரைச் சேர்ந்த திரு. பி.எம்.

பால்கனி, ஆகிய இருவரும் எங்களை அவர்களது இல்லத்திற்கு வற்புறுத்தி அழைத்துச் சென்றனர். அவர்கள் ''டவர் கம்பெனி'' என்ற நிறுவனத்தில் வேலை பார்ப்பதாகவும், அந்த நிறுவனம் அருகாமையில் இருப்பதாகவும் சொன்னார்கள். நாங்கள் அவர்கள் வீட்டுக்குச் சென்று சிறிது நேரம் உரையாடினோம். அவர்கள் பிஸ்கட், தேநீர் வழங்கி உபசரித்தனர். அந்த ஊரில் சுமார் ஐம்பது தமிழர்கள் பணி புரிவதாகக் கூறினர். பிறகு நாங்கள் அவர்களிடம் இருந்து விடைபெற்றுப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

வழியில் தமிழ்நாட்டு இளைஞர்கள் சிலர் ''டிரங்குப் பெட்டிகளில்'' துணிகளை வைத்துக் கொண்டு, கிராமம் கிராமமாகச் சென்று வியாபாரம் செய்து பொருள் ஈட்டுவதைக் கண்டோம்,

பவானிப் பகுதியைச் சேர்ந்த சிலர் ''அடிபைப்'' அமைக்கும் தொழிலில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுவதையும் சில இடங்களில் கண்டோம்.

மேலும் 4 மைல் நடந்து **புடாகர்** என்ற பெயருடைய **காந்தி கிராமம்** என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தோம். ஊரின் எல்லையில் ஒருவர் எங்களை மிகவும் அன்பாக வரவேற்று, எங்கள் பாதங்களில் விழுந்து வணங்கி, விபூதி பெற்றுக் கொண்டார். அவரது பக்தியை மிகவும் மெச்சி விபூதி வழங்கினோம். பிறகு மீண்டும் ஒருமுறை பாதங்களில் பணிந்து விபூதி பெற்றார். நாங்கள் நடக்கத் தொடங்கினோம். எங்கள் பின்னாலேயே நடந்து வந்த அவர் மீண்டும் எங்கள் பாதங்களில் விழுந்து வணங்கி விபூதி கேட்டார். நாங்கள் அவர் ஒரு **பைத்தியம்** என்பதைப் புரிந்து கொண்டு விட்டதால், ''விபூதி போதும்'' என்று சொல்லி விட்டோம்.

ஊர்ச் சாலையில் சிவன் கோவில் இருந்தது. அக்கோவிலுக்குக் கதவு கிடையாது. நாங்கள் அக்-

கோயிலில் தங்கினோம். இந்தப் பைத்தியமும் எங்கள் அருகில் வந்து அமர்ந்து கொண்டு ஏதேதோ பேசியது. நாங்கள் மிகவும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந் தோம். சற்று நேரத்தில் ஒரு பெண் பைத்தியம் வேறு அங்கு வந்து, அந்த ஆண் பைத்தியத்துடன் சேர்ந்து கொண்டு எங்களுடன் ஏதேதோ இந்தியில் பேசியது. எங்களுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. நன்கு இருட்டிவிட்டது. சாப்பிட்டுப் படுக்க முனைந்தோம். அதுவரை அந்த இரு பைத்தியங்களும் அடித்த கொட்டத் துக்கு அளவில்லை. வனவிலங்குகளால் எங்களுக்குத் தொல்லை வரக் கூடாது என்று கருதிய இறைவன் அதற்குப் பதிலாக இந்த மனவிலங்குகளால் தொல்லை கொடுத்தான் போலும்.

நாங்கள் அந்தப் பைத்தியங்களைப் பற்றிக் கவலைப்படாமல் எங்கள் வேலைகளைக் கவனித்தோம். இன்று மதியத் "திரு அமுது" சேலம் திரு. ஆர். எம். பழநியப்பன் அவர்களாலும், இரவுத் "திருஅமுது" என் தம்பி (புதுவயல்) திரு. மு. இராம. ஆண்டான் செட்டி அவர்களாலும் வழங்கப் பெற்றன.

பிறகு நாங்கள் எப்பொழுது தூங்கினோம் என்பதும், அந்தப் பைத்தியங்கள் எப்பொழுது போயின என்பதும் கடவுளுக்கே தெரியும்.

இரவு ஒரு மணி இருக்கும். யாரோ ஒருவர் வந்து எங்களை எழுப்பினார். எனவே எழுந்து பார்த் தோம். அவர் எங்களைப் பார்த்து ஏதேதோ கேட்டார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "அது மூன்றாவது பைத்தியம் போலும்" என்று எண்ணிக் கொண்டோம். "பழைய கேஸ்" என்று எங்களுக்குள் சொல்லிக் கொண்டோம். அந்த ஆள் விடவில்லை. ஏதோ "பச்சா! பச்சா!" என்றான். சரி. ஏதோ குழந்தையைப் பற்றிக் கேட்கிறான் என்று நினைத்து, நாங்கள் "படே படே" என்று பதில் சொல்லிவிட்டுத் தூங்கிவிட்டோம். பிறகு அவன் எப்பொழுது போனான் என்பது எங்களுக்கே தெரியாது. இப்படியாக அன்று இரவு முழுவதும் தமாஷாகக் கழிந்தது.

104. தொண்ணூற்று ஆறாம் நாள்
(இல்ஹிரான் நதி-சிகோரா-புழுதிப்புயல்-மோசாம்)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். 8 மைல் நடந்து **இல்ஹிரான் என்ற நதியை** அடைந்தோம். அது ஒரு காட்டு நதி. அதில் நீராடி மகிழ்ந்தோம்.

நதியில் நீராடியபின் கரை ஏறிய பொழுது அங்கு ஓர் ஆள் நின்று கொண்டிருந்தான். அந்த ஆள் நேற்று நள்ளிரவில் நாங்கள் கண்ட ஆள் போலவே இருந்ததைக் கண்டு கொண்டேன். அவன் "பச்சா" "பச்சா" என்று கூறினான். அவன் தன்னுடைய மூன்று வயதுக் குழந்தையைக் காணோம் என்று தேடி வந்திருக்கிறான் என்பது புரிந்தது. எங்கள் ரிக்ஷாவில் அதைப் பூட்டி வைத்திருக்கிறோமோ என்று சந்தேகப்பட்டு எங்களைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டேன். எனவே ரிக்ஷாவின் கதவை நன்கு திறந்து போட்டேன். அவன் ரிக்ஷாவை உற்று உற்று உள்ளே பார்த்தான். நாங்கள் அவனைத் தடுக்கவில்லை. பிறகு அவனுக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது. அப்பொழுது நாங்கள் காப்பி போட்டுக் குடித்தோம். அவனுக்கும் காப்பி கொடுத்தோம். அவன் மகிழ்ச்சியோடு காப்பி குடித்து எங்களிடம் இருந்து திருப்தியோடு விடை பெற்றான். நல்ல வேளை! எங்களைப் 'பிள்ளை பிடிக்கி' என்று கருதிப் பின் தொடர்ந்தவன் தொலைந்தான் என்று நிம்மதி அடைந்தோம்.

2 மைல் நடந்து **சிகோரா** என்றஊரை அடைந்து அங்கிருந்த சிவன் கோவிலில் வழிபட்டு வெளிமுற்றத்தில் தங்கினோம். மதிய உணவு சமையல் செய்தோம். சமையல் ஆனதும் வழக்கம் போல் தரையில் ஒரு வெள்ளைத் துணியை விரித்து அதில் சுடுசோற்றைக் கொட்டினோம். ஒரு குழம்பு தயாராகியது. உடனே சோற்றைச் சுற்றி அமர்ந்து ஒரு நிமிடம் வழிபாடு செய்தோம். அப்பொழுது பிற்பகல் ஒரு மணி.

நாங்கள் சோற்றை உண்ணத் தொடங்கும் சமயம். அப்பொழுது திடீரென்று எங்கிருந்தோ ஒரு **புழுதிப் புயல்**—சூறாவளி அடித்தது. எங்கள் சோறு முழுதும் புழுதி படிந்து விட்டது. எங்களுக்கோ பசி மிகுதி. இனிச் சோறு மீண்டும் சமைக்க எங்களுக்குத் தெம்பில்லை. "புழுதிப் புயல்" சுமார் 10 நிமிடத்திற்கு அடித்து ஓய்ந்தது.

இனி நாங்கள் செய்வதற்கு வேறு ஒன்றுமில்லை. சற்று நேரம் நாங்கள் ஓய்வு கொண்டால் தான் மாலையில் நடக்க முடியும். எனவே புழுதி படிந்த சோற்றைத் தண்ணீரில் கழுவித் தூய்மை செய்து அதனை உண்டோம். காட்டில் எங்களுக்கு இதனைத் தவிர அப்பொழுது வேறு வழியில்லை.

விசுவாமித்திர முனிவர் ஒரு முறை காட்டில் நடந்து சென்ற பொழுது நாடும் காடும் மழையில்லாமல் வறட்சியால் வாடியதாம். அப்பொழுது அவருக்கு உண்ண எதுவுமே கிடைக்கவில்லையாம். பசி வருத்திய பொழுது எதனை உண்ணலாம் என்று பார்த்தாராம். அப்பொழுது பாதையில் ஒருநாய் செத்துக் கிடந்ததாம். வேறு வழியின்றி விசுவாமித்திர முனிவர் செத்த நாயின் ஊனைத் தின்றாராம். அதனைக் கண்டு வருந்திய வருண பகவான், உடனே மழை பொழியச் செய்து நாட்டையும் காட்டையும் வளப்படுத்தினாராம். அது

போல் தான் நாங்களும் இந்த வேள்வியின் போது புழுதி படிந்த சோற்றை உண்டோம்.

இன்று ஒரு மணிக்குப் புழுதிப்புயல் அடித்ததால் நாங்கள் ஒரு பாடம் கற்றுக் கொண்டோம். இனி ஒரு மணிக்குள் சாப்பிட்டு, பாத்திரங்களைக் கழுவி ரிக்ஷா வுக்குள் வைத்துவிட வேண்டும் என்று முடிவு கட்டினோம் அதுபோல் மறுநாள் ஒரு மணிக்குள் எல்லாம் முடித் தோம். பிறகு புழுதிப் புயல் வீசியது. அன்று அதனால் எங்கட்கு ஒன்றும் தீமை இல்லை. அதற்கு அடுத்த நாளும் ஒரு மணிக்குப் புழுதிப் புயல் வீசியது. இப்படி மத்தியப் பிரதேசக் காட்டில் ஒரு மணி அளவில் பல நாட்கள் தொடர்ந்து புழுதிப் புயல் வீசக் கண்டோம்.

இதனைத் தான் கம்பர் **"பூழிவெங்கானம்"** என்று குறிப்பிடுகிறார். "புழுதி நிறைந்த-வெப்பு நிறைந்த காடு" என்று கைகேயி வாக்கு மூலம் கம்பர் வர்ணிக்கிறார். காட்டில் மரம், செடி, கொடி, புல், புதர் நெருக்கமாக இருக்கும்பொழுது புழுதி எழ வழியில்லை. வெப்புக்கும் வழியில்லை. என்றாலும் மத்தியப் பிரதேசக் காடுகளில் புழுதியும் கண்டோம்; வெப்பும் நிலவியது. இது அந்தப் பிரதேசத்தின் பூகோள அமைப்புப் போலும் இதனை எப்படியோ **கம்பர்** தெரிந்து பாடியிருப்பது நம்மைப் பெரு வியப்பில் ஆழ்த்துகிறது.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டு **மோசாம்** என்ற சிறு கிராமத்தை அடைந்தோம். அங்கிருந்த சிறிய ராமர் கோயிலை அடைந்து வழிபட்டு அங்கு தங்கினோம். அதன் பூசாரி **புருஷோத்தம்** என்பவர் எங்கட்கு அன்பான வரவேற்பு வழங்கி, இனிய உதவிகள் பல செய்தார்.

105. தொண்ணூற்று ஏழாம் நாள்
(ஸ்லீம்னாபாடு-தேவ்ரி)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். தனாகுமா, டபாரா முதலிய சிறு கிராமங்களைக் கடந்து, பயங்கரமான காட்டின் வழியே 11 மைல் நடந்தோம். காலை 10மணி அளவில் **ஸ்லீம்னாபாடு** என்ற ஊரை அடைந்து, அங்கிருந்த ஒரு குடிசை வீட்டு முற்றத்தின் நிழலில் தங்கினோம். அருகிலேயே ஒரு கிணறு இருந்தது. இன்று சமையல் செய்ய வேண்டும். எனவே கிணற்றில் நீர் எடுக்கப்போனோம். தண்ணீர் மிக ஆழத்தில் இருந்தது. வாளி, நீண்ட கயிறு எல்லாம் எங்கள் ரிக்ஷாவில் இருக்கும். கயிற்றின் நீளம் இங்கு போதவில்லை. எனவே எங்கள் வேட்டியைக் கயிற்றோடு இணைத்துக் கட்டி நீர் எடுத்தோம்.

நீர் எடுக்கும் பொழுது இரண்டு அல்லது மூன்று வாளி எடுத்ததும் கையும் தோளும் வலிக்கும். தரையோடு தரையாக உள்ள கிணறுகள்தான் எங்கும் காணப்பட்டன. நம் ஊரில் போல் சுற்றுக் கட்டுச் சுவர், மேலே உத்தரம், உருளை-இந்த அமைப்புக்கள் இல்லை. தரையில் நின்றவாறு குனிந்து, இரு கையாலும் இழுக்க வேண்டும். சிறிது தவறினாலும் கிணற்றுக்குள் விழ வேண்டியதுதான். எனவே மிகவும் எச்சரிக்கையாகத் தண்ணீர் எடுக்க வேண்டும். சமையலுக்கு உரிய தண்ணீரை எங்கள் இளைஞர்கள் கொண்டு வந்து சேர்ப்பர். நாங்கள் அவரவர் குளிப்பதற்கு அவரவரே இறைத்துக் கொள்ள வேண்டும். எங்களில் பெரியவர்

களுக்கு நாங்கள் யாராவது மாற்றி மாற்றி உதவி செய் வோம். இப்படி ஆழமான கிணறுகளைத்தான் நம் இலக்கியங்கள் ''கூவல்'' என்று குறிப்பிடுகின்றன. இந்தியில் இதனை ''கூவா'' என்கின்றனர்.

என்னைப் பொறுத்தவரை அதிக ஆழமான கிணற்றைக் கண்டால் ஒரு வாளி தண்ணீர் இழுத்து உடம்பில் ஊற்றிக் கொள்வேன். உடம்பு முழுதும் நன்கு தேய்த்துக் கொள்வேன். இரண்டாவது வாளி இழுத்து உடம்பில் ஊற்றி உடம்பை நன்கு கழுவி விடு வேன். அவ்வளவுதான் குளியல்! மூன்றாவது வாளி நீரில் வேட்டி, துண்டை நனைத்துப் பிழிந்து விடுவேன். இப்படி ஆழமான கிணறுகளில் இவ்வளவு சிக்கனமாக இருந்தால்தான் முடியும். ஏனெனில் என் உடம்பிலோ வலுவில்லை. அதிகமாகச் சிரமப்பட முடியாது; அடுத்தவர்களையும் யாத்திரையில் சிரமப்படுத்தக் கூடாது என்பது என் எண்ணம். இக்குழுவுக்கு நான் தலைவனாக இருந்தாலும், என்னால் யாருக்கும் செலவோ. சிரமமோ நான் வைத்ததில்லை. என் வேலைகளை நானேதான் பார்த்துக் கொள்வேன். என் பையை நானேதான் தூக்கிச் செல்வேன்.

சிலசமயம் சில ஊர்களில் எங்களை வரவேற்க வந்திருந்த என் நண்பர்கள் என் பையைக் கேட்பார்கள். நான் கொடுக்கமாட்டேன். ''ஏன் தர மறுக்கிறீர்கள்?'' என்று கேட்பார்கள். அதற்கு நான், ''நமது பாரத்தை நாம்தான் சுமக்க வேண்டும். இப்பொழுது வாய்ப்பும் வசதியும் இருக்கிறது என்று நமது பாரத்தை இன்னொரு வர் சுமக்குமாறு செய்து விட்டால் இந்தப் பிறவியில் பாரம் சுமக்கும் கர்மா மிஞ்சிவிடுகிறது. எனவே அடுத்த பிறவியில் அந்தப் பாரத்தையும் சேர்த்துச் சுமக்க வேண்டும். அதிகமான பாரத்தை இந்தப் பிறவியில் மீதி வைப்பவர்கள் அடுத்த பிறவியில் கழுதையாகப் பிறந்து ஊர்ப் பாரத்தை எல்லாம் சுமக்க நேரிடும்'' என்பேன்.

இதனை எங்கள் குழுவினரும் பிறரும் உணர்ந்து தம்மை நெறிப்படுத்திக் கொள்வர். மேலும் பயணத்தின் போது வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் எங்கள் குழுவினர்கள் என்னைச் சுற்றி அமர்ந்து கொள்ள, அடியேன் "இராமாயணம்" "மகாபாரதம்" "கந்த புராணம்" "பெரிய புராணம்" "திருவிளையாடற் புராணம்" "சிலப்பதிகாரம்" "திருக்குறள்" "பாரதி பாடல்கள்" "உலக சரித்திர நிகழ்ச்சிகள்" "தலைவர் களின் வாழ்க்கைச் சம்பவங்கள்" "வீர வரலாறுகள்" "என் வாழ்க்கை அனுபவங்கள்" "வெளிநாட்டுப்பயண நிகழ்ச்சிகள்" போன்ற பல செய்திகளைச் சுவையாகக் கூறுவேன். அதனை அவர்கள் கேட்டு மிகவும் மகிழ்வர். தூக்கத்தைக் கூட விட்டுவிட்டுப் பல பகல்களில் இக்கதை களை என் குழுவினர்கள் வற்புறுத்திக் கேட்டுப் பயன் பெற்றதுண்டு.

"இப்படி ஒரு வாய்ப்பு எங்கள் வாழ்க்கையில் நாங்கள் பெற்ற பெரும் பேறு" என்று "அருள் தொண்டர்" திரு. இராகவன் அடிக்கடி குறிப்பிடுவார்.

ஸ்லீம்னாபாடு கிராம மக்கள் மிகவும் பயபக்தி யுடன் வந்து எங்களை வணங்கிச் சென்றனர். மாலை 5 மணிக்குப் புறப்பட்டு 3மைல் நடந்து 6மணி அளவில் **தேவ்ரி** என்ற ஊரை அடைந்து அங்கிருந்த சிறிய உயர் நிலைப் பள்ளிக் கட்டடத்தில் தங்கினோம்.

இன்றைய மதியத் "திரு அமுது" என் சிறிய தாயார் மகன் திரு. நா. சோலையப்பன் (புது வயல்) அவர்களாலும், இரவுத் "திரு அமுது" என் தம்பி ஆண்டான் செட்டியின் சகலை திரு. எஸ். சிதம்பரம் (பள்ளத்தூர்) அவர்களாலும் வழங்கப்பெற்றன.

106. தொண்ணூற்று எட்டாம் நாள்
(நிவார்நதி—ஜெஞ்சரி—கட்னிநதி கட்னி நகரம்—குரைனி)

காலை 4¾ மணிக்குப் புறப்பட்டோம். லகாப் தேரி—பிப்ரோடு என்ற குக்கிராமங்களின் வழியாக 10 மைல் நடந்து **நிவார்நதி** தீரத்தை அடைந்தோம். நிவார் நதியில் நீராடி, அருகில் இருந்த ஆஞ்சநேயர் கோயிலில் வழிபட்டோம். எதிரில் ஒரு "தர்ஹா" இருந்தது. அங்கு வந்திருந்த "ஜாபர்" என்னும் முஸ்லிம் அன்பர் எங்களது புனித யாத்திரையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் எங்களிடம் ஓடிவந்து எங்களை மிகவும் பாராட்டினார். "இந்தியா ஒற்றுமையாக இருந்தால் ஒழிய எதிர்காலம் இல்லை. இந்த மக்களுக்கும் நாட்டுக்கும் உங்கள் புனித யாத்திரை ஞானத்தை ஊட்டட்டும்" என்று இந்தியில் கூறி எங்களுக்குத் தேநீர் வழங்கினார்.

மேலும் 2மைல் நடந்து **ஜெஞ்சரி** என்ற குக் கிராமத்தை அடைந்து பகற்பொழுதுக்கு அங்கு தங்கி னோம். இன்னும் 2 மைலில் **கட்னி** என்ற நகரம் இருக்கிறது. அது மத்தியப் பிரதேசத்தின் முக்கிய தொழில் நகரங்களில் ஒன்று. அங்கு சுண்ணாம்புக் கற்கள் நிறையக் கிடைப்பதால் பெரிய சிமிண்டுத் தொழிற்சாலை ஒன்று அங்கிருக்கிறது. மேலும் சிறிய சுண்ணாம்புத் தொழிற் கூடங்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். வழியெல் லாம் பல **வண்ணப் பாறை**களைக் கண்டு ரசித்தவாறு நடந்தோம். உலகத்தில் எத்தனை வண்ணங்கள் உண்டோ, அவையெல்லாம் இந்தப் பாறைகளில்

இயற்கையாக அமைந்திருந்தன. பல மைல் நீளத்திற்கு இப்படி வண்ணப்பாறைகள் வழியெங்கும் இருபுறமும் காணப்பட்டன. இப்பாறைகள் தொல் பொருள் இலாகாவின் பாதுகாப்பில் உள்ளன. இந்த இயற்கைக் காட்சியில் மெய்மறந்து நாங்கள் நடந்ததால் எங்கள் அலுப்பு மறந்தது.

கட்னி நதிக் கரையில் கட்னி நகரம் உள்ளது. 5 மணிக்குக் கட்னி நதியினை அடைந்து நீராடி மகிழ்ந்தோம். இந்நதியில் சிறிய பாறையில் இருந்து ஓரிடத்தில் நீர் விழுவது சிறிய அருவிபோலவே அழகாக இருக்கிறது. அதிக வெள்ளம் வரும்பொழுது இந்த அருவிக்காட்சி மறைந்து போகும். குறைந்த தண்ணீர் ஓடும் பொழுது இக்காட்சியினைக் காணலாம்.

கட்னி நகருக்குள் நுழைந்தோம். இது ஒரு நெருக்கடியான நகரம். எங்கு பார்த்தாலும் சுண்ணாம்புக் கற்களும், சுண்ணாம்புத் தொழிற்சாலைகளுமாகக் காணப்பட்டன. சந்தடி மிகுதியாக இருந்ததால் நாங்கள் நாகபுரியில் பட்ட அவ்தி போதும் என்று கட்னி நகரை விட்டுக் கடந்து எல்லையில் உள்ள **குரைனி** என்ற கிராமத்தை அடைந்தோம். அங்கிருந்த சிறிய ஆஞ்சநேயர் கோயிலில் அனுமனை வணங்கிக் கோயில் முற்றத்தில் தங்கினோம்.

சமையல் செய்து உண்டோம். இன்றையத் "திரு அமுது" என் தம்பி ஆண்டான் செட்டியின் மாமனார் ஆன காரைக்குடி திரு. ராம. கருப்பன் செட்டியார் அவர்களால் வழங்கப்பெற்றது.

உணவு உண்டு முடித்தோம். கனமழையும், புயலும், இடியும் மின்னலும் சுமார் இரண்டு மணி நேரம் எங்களை வதைத்தன. கோயில் முற்றத்தில் தங்கி இருந்ததால் மழைச் சாரல் பட்டு எங்கள் உடம்பு தெப்பமாக நனைந்து விட்டது, மழை ஓய்ந்த பிறகு துணிமாற்றிக் கொண்டு தூங்கினோம். எல்லாம் அவன் செயல்!

107. தொண்ணூற்று ஒன்பதாம் நாள்
(ஜூக்கே-சவாகஞ்ச்-
போலீஸ்பாதுகாப்பு-பாலா)

காலை நாலரை மணிக்குப் புறப்பட்டோம். சாக்கா, கேழ்வாரா, டிக்ரவாரா என்ற கிராமங்களின் வழியாக நடந்தோம். வழியில் எங்கு பார்த்தாலும் சுண்ணாம்புச் சுரங்கங்கள், சிறு சுண்ணாம்புத் தொழிற் சாலைகள் காணப்பட்டன.

இதுவரை இராமேஸ்வரத்தில் இருந்து சரியாக வடக்கு நோக்கி நடந்துவந்த நாங்கள் இப்பொழுது கட்னியில் இருந்து கிழக்கு நோக்கி வலது புறமாகத் திரும்பி நடக்கத் தொடங்கி உள்ளோம். சூரியன் எங்கள் முகத்திற்கு நேரே ஒளி வீசுகிறான். இதே கிழக்குத் திசையில் நடந்தால் காசியை அடையலாம். காட்டுப்பகுதி வழியாக 10 மைல் நடந்து ஜூக்கே மலையடிவாரத்தை அடைந்தோம். அந்த இடத்தில் உள்ள ஊருக்கு **ஜூக்கே** என்ற பெயர் வழங்குகிறது. அங்கும் சிறிது சந்தடியாக இருந்ததால் மேலும் 2 மைல் நடந்து மற்றொரு மலையடிவாரத்தில் உள்ள **சவாகஞ்ச்** என்ற சிறு கிராமத்தை அடைந்து அங்கிருந்த தொடக்கப்பள்ளியில் தங்கினோம். இப்படிச் சிறிய கிராமங்களில் எல்லாம் இப்பொழுது சமீபகாலமாக மத்தியப் பிரதேச அரசு பள்ளிகள் ஏற்படுத்தி இருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது.

ஜூக்கே முதல் தெற்கு வடக்காகக் கிழக்கிலும், மேற்கிலும் நீண்ட மலைத் தொடர் செல்வதைக் கண்டு

ரசித்தோம். இந்த இரண்டு மலைத் தொடர்களுக்கும் இடையே உள்ள தூரம் சுமார் இரண்டு முதல் மூன்று மைல் கள் இருக்கும். இந்த இடைவெளிப் பிரதேசத்தில் தான் நாங்கள் இப்பொழுது நடந்து செல்கிறோம். எனவே இரு புறமும் மலைக்காட்சிகளைப் பார்த்தவாறு காட்டில் நடப்பது மிக இனிமையாக இருந்தது. இரண்டு மலைத் தொடர்களிலும் பெய்யும் மழைநீரால் இந்த இடைப் பட்ட பிரதேசம் மிக வளமாக இருக்கிறது. எனவே இங்கு அமேசான் நதிப் பள்ளத்தாக்கில் அமைந்திருப்பது போன்ற ஒரு காடு உருவாகி இருக்கிறது.

"சவாகஞ்ச்" கிராமத்தில் இருந்து நாங்கள் மாலை 4 மணிக்குப் புறப்பட்ட பொழுது மத்தியப் பிரதேசப் போலீஸ் அதிகாரிகள் மூவர் எங்களை அடைந் தார்கள். "கவிஞர் சோமசுந்தரம் என்பது யார்?" என்று விசாரித்தவாறு எங்களை அடைந்தார்கள். நான் அவர்களை வரவேற்று விசாரித்தேன். அதற்கு அவர்கள் "இன்று முதல் உங்களுக்கும் உங்கள் குழுவினர்க்கும் நேரடிப் போலீஸ் பாதுகாப்பு வழங்குமாறு மத்தியப் பிரதேச அரசு உத்தர விட்டிருக்கிறது. ஆகவே நாங்கள் மூன்று பேர் உங்களுடன் தொடர்ந்து நடந்து வருவோம். நீங்கள் இனி எதற்கும் அஞ்சாமல் நடந்து செல்லலாம்" என்றார்.

அதற்கு நான், "மத்தியப் பிரதேசக் காடும், மலையும் எங்களுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. இத்தகு வளமான பகுதியில் வாழ நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இங்கு எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. இரகசியப் போலீஸ் பாதுகாப்புப் போதும் என்று ஆரம்பத்திலேயே சியோனியில் போலீஸ் அதிகாரி யிடம் சொல்லி இருந்தேனே. இப்பொழுது எதற்கு அனாவசியமாக நேரடிப் பாதுகாப்பு?" என்று கேட்டேன்.


அதற்கு அவர், "நீங்கள் எங்கள் அரசாங்கத்தின் மரியாதைக்குரிய யாத்திரிகர். நாங்கள்மிகவும் போற்றும் இராமேஸ்வரத்தில் இருந்து 2000 மைல் நடந்து வருகிறீர்கள். உங்களுக்கு எங்களது மத்தியப்பிரதேசக் காடு, மலைகளில் ஏதாவது ஆபத்து ஏற்பட்டு அதனால் எங்கள் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்று அரசு நினைப்பதில் தவறில்லை. ஆகவே தான் முன் எச்சரிக்கையாக உங்கள் குழுவுக்கு நேரடியாகப் பாதுகாப்பு (Direct Security) கொடுக்கும்படி உத்தரவாகி இருக்கிறது. நாங்கள் உங்கள் பாதையை உங்கள் நிகழ்ச்சி நிரல் மூலம் அறிந்து பின் தொடர்ந்து வந்து உங்களை இங்கு சந்தித்தோம். சி. ஐ. டி. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் சாதா உடையிலும், போலீஸ்காரர்கள் இருவர் போலீஸ் உடையிலும் உங்களோடு இனி வழிநெடுக நடந்து வருவர். அடுத்த போலீஸ் நிலையம் வந்ததும் இவர்கள்மாற, வேறு மூவர் உங்களோடு வருவர்'' என்றார்.

நான் அந்தப் போலீஸ் அதிகாரிக்கும், மத்தியப் பிரதேச அரசுக்கும் எங்கள் குழுவின் சார்பில் நன்றி கூறினேன். அதன் பின் அவர்கள் எங்களுடன் நடந்து வந்தனர். எங்கள் உணவை அவர்கட்குக் கொடுத்தால் அவர்கள் பெற மாட்டார்கள். அன்போடு மறுத்து விடுவர். "நாங்கள்தான் உங்களுக்குத் தர வேண்டும்; உங்களிடம் இருந்து நாங்கள் பெற்று உண்பது பாவம்'' என்று பக்தியோடு கூறுவர். அவர்களுக்கு உரிய உணவை அவர்களே தேடிக்கொண்டனர்; அல்லது வீட்டில் இருந்து சப்பாத்தி கட்டிக் கொண்டு வந்து சாப்பிட்டனர். அவர்களது தெய்வ பக்தியும், அன்புப் பணியும் எங்களை மிகவும் ஈர்த்தது. அவர்கள் எங்களோடு ஆங்கிலத்திலும் இந்தியிலும் உரையாடினர்.

எங்களது பயணத்தில் 99 முதல் 107-ஆம் நாள் வரை ஒன்பது நாட்கள் போலீஸ் பாதுகாப்பு எங்கட்கு இறையருளால் அமைந்தது.

சவாகஞ்சில் இருந்து மாலை 4 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் "பகிரியா" என்ற கிராமம் வழியாக 4 மைல் நடந்து **பாலா** என்ற சிற்றூரை இரவு சூழும் நேரத்தில் அடைந்தோம். அங்கிருந்த தொடக்கப் பள்ளியில் தங்கினோம். இரவு சமையல் செய்து உண்டோம். மூன்று வேளை "திரு அமுது" சேலம் திரு. "எம். எஸ். உடையப்ப செட்டியார் புதல்வர்களால்" வழங்கப் பெற்றது.

இன்றுடன் 1400 மைல்களுக்கு மேல் நடந்துள்ள நிம்மதியோடு இரவு தூங்கினோம். இன்னும் 17 நாளில் 250 மைலில் காசி! எல்லாம் விசுவநாதரின் பேரருள்!!



108. நூறாம் நாள்

[பவளவிழா — குசஹரா — மைஹார் — சாரதா தேவி கோயில்]

27-5-83 வெள்ளியாகிய இன்று நூறாம்நாள்—பவளவிழா—இன்று அதிகமாக நடந்து இந்நாளைக் கொண்டாடினோம். காலை நாலரை மணிக்குப் புறப்பட்டோம். ருஹண்யா, அம்தரா வழியாக நடந்து **குசஹரா எனப்படும் பாதாம்பூர்** என்ற கிராமத்தைப் பத்தரை மணிக்கு அடைந்தோம். அங்கிருந்து ஆஞ்சநேயர் கோயிலில் வழிபாடு செய்து, கோயில் முற்றத்தில் தங்கினோம்.

பிற்பகல் 4 மணிக்குப் புறப்பட்டு 9 மைல் நடந்து இரவு 8 மணிக்கு **மைஹார்** என்ற முக்கிய நகர் சென்று அங்கிருந்த புகழ்மிகு **சாரதா தேவி**யை வணங்கி, அரசாங்க உயர்நிலைப்பள்ளியில் தங்கினோம். இப்பள்ளியில் நாங்கள் தங்குவதற்குப் போலீஸ் அதிகாரிகள் முன் கூட்டியே ஏற்பாடு செய்திருந்தனர். இப்பள்ளி மிகப் பெரிய கட்டடங்களைக் கொண்டிருக்கிறது. இப்படி ஒரு வசதியான பள்ளியை நாங்கள் மத்தியப்பிரதேசத்தில் வேறு எங்குமே காணவில்லை.

எங்களுடன் வந்த எஸ். கே. டெய்லாங் என்ற சி.ஐ.டி. அதிகாரியும், பால்கோபிரசாத், ராம்சியாராத் என்ற போலீஸ்காரர்களும் எங்களுடனேயே தங்கினர். அவர்கள் எங்களுடன் மிகவும் அன்பாகப் பழகினர். அவர்கள் மூலம் மத்தியப்பிரததேசம் பற்றிப் பல செய்தி

களை அறிந்து கொண்டோம். அவர்களும் தமிழ்நாடு பற்றிய பல விபரங்களை ஆர்வமாகக் கேட்டறிந்தனர். அவர்கட்கு நம் தமிழகப் போலீஸ் துறை மீது நல்ல மரியாதை இருக்கிறது. நம்முடைய முன்னாள் போலீஸ் ஐ. ஜி. திரு. அருள், காலஞ்சென்ற பொருந்தலைவர் திரு. காமராஜ் பற்றி எல்லாம் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர்.

"இந்தியாவின் ஒற்றுமைக்காக நாங்கள் நடக்கிறோம்'' என்ற எங்கள் நோக்கம் அவர்களை மிகவும் கவர்ந்தது. "தேசத்தையும் தெய்வத்தையும் நீங்கள் இணைத்தது பாராட்டத்தக்கது. மகாத்மா காந்தி அடிகளின் வெற்றிக்குக் காரணம் அவர் தேசத்தையும் தெய்வத்தையும் இணைத்ததே'' என்று பாராட்டிக் கூறினார்கள்.



109. நூற்று ஒன்றாம் நாள்
(நாதன் — அமர்பட்டான்— போலீஸ் வரவேற்பு)

4½ மணிக்குப் புறப்பட்டோம். 11மைல் நடந்து காலை 9 மணிக்கு ''திலவ்ரா'' என்ற ஊர் வழியாக **நாதன்** என்ற கிராமத்தை அடைந்தோம். மைஹாரில் இருந்து வேறு புதிய போலீஸ் அதிகாரிகள் எங்களுடன் வந்தனர். அவர்கள் மூலம் மத்தியப்பிரதேசப் போலீஸ் இலாகா பற்றி அறிந்தோம். பி. பி. டுபே (B. P. Dubey) என்பவர் ஐ .ஜி (I. G.& Director General of Police) ஆகவும், பி. கே. முகர்ஜி (B. K. Mukerjee) என்பவர் கூடுதல் ஐ. ஜி. யாகவும் சிறப்பாகப் பணி புரியும் செய்தி அறிந்தோம். அவர்கட்கு எங்களது நன்றி மிளிர்ந்த பாராட்டுக் கடிதங்களை அனுப்பிவைத்தோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். 5 மைல் நடந்து மாலை 6 மணி அளவில் **அமர்பட்டான்** என்ற நடுத்தர நகரை அடைந்தோம். அங்கு நகர எல்லையில் போலீஸ் இலாகா சார்பில் எங்களுக்கு இனிய வரவேற்பு வழங்கப்பட்டது. போலீஸ் பாண்டு வாத்தியங்கள் எல்லாம் முழங்கின. இரண்டு போலீஸ் அதிகாரிகள் மோட்டார் சைக்கிளில் எங்கட்கு முன்னால் சென்றார்கள். ஊர்மக்கள் எல்லாம் நூற்றுக்கணக்கில் கூடி இருந்தார்கள். அமர்பட்டான் போலீஸ் கண்காணிப்பாளர் (Supt)ஆகிய திரு. (D.P Singh) டி. பி சிங், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகிய திரு. ஐ. பி. சிங், (I. B. Singh) இரகசியத்துறை சப் இன்ஸ்பெக்டராகிய திரு. ஜி. பி. டுபே (G.P. Dubey) ஆகியோர் எங்களை வரவேற்று, நகர எல்லையில் அமைத்திருந்த இருக்கைகளில் எங்களை அமர வைத்து, எங்கட்குத் தேநீர் வழங்கினர்.

பிறகு அங்கு கூடியிருந்த மக்கள் முன் எங்கள் புனிதப்பயணம் பற்றிய விபரங்களை எடுத்துரைத்தனர். அதற்குப் பிறகு நான் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்து ஆங்கிலத்தில் பேசினேன். ''இந்தியாவிலேயே மிகவும் தெய்வபக்தி உடைய மாகாணம் இந்த மத்தியப் பிரதேசம்தான். இதன் மலையும், காடும், நதியும் இதன் ஒப்பற்ற செல்வங்கள். இதற்குள் நாங்கள் நுழையு முன்பு இதைப் பற்றி மிகவும் பயந்திருந்தோம். அதனால் தான் போலீஸ் பாதுகாப்புக் கேட்டிருந்தோம். ஆனால் இதற்குள் நுழைந்த பிறகு எங்கட்குப் பயம் போய் விட்டது.

இந்தப் பிரதேசம் எங்களை மிகவும் கவர்ந்து விட்டது. இங்குள்ள மக்கள் ஏழ்மையாக இருந்தாலும் எல்லையற்ற அன்பும், தெய்வ பக்தியும், ஒழுக்கமும் உடையவர்களாக இருக்கிறார்கள். போலீஸ் இலாகாவில் பணிபுரிபவர்களின் தெய்வபக்தியும் அன்பும் எங்களை மனம் நெகிழ வைக்கிறது. உங்களுக்கெல்லாம் எப்படி நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை. கடவுள் உங்களுக்கு நல்ல இயற்கை வளத்தைக் கொடுத்து உங்களை வாழ்த்தியிருக்கிறார்'' என்றேன். என்பேச்சை போலீஸ் அதிகாரிகள் இந்தியில் மொழிபெயர்த்துக் கூறினர். அதனைக் கேட்டு மக்கள் மகிழ்ந்தனர். அதன் பின் நாங்கள் எந்தக் கடையில் என்ன சாமான் வாங்கினாலும் இலவசமாகவோ அல்லது விலை குறைத்தோ கடைக்காரர்கள் எங்கட்கு வழங்கி உதவி புரிந்தனர்.

''அகர்வால் தர்மசாலை'' என்ற அழகிய மாளிகை போன்ற சத்திரத்தில் அன்று இரவு தங்க ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு **ஆர். கே. அகர்வால் என்ற நிருபர்** என்னைச் சந்தித்து நம் பயணம் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்து பல பத்திரிகைகளுக்கும், வானொலிக்கும் செய்தி அனுப்பினார். ஜபல்பூரில் இருந்து வெளியாகும், ''நவ்பாரத்'' ''நவீன்டுனியா'' ''யுக்தர்ம்'' என்ற இந்திப் பத்திரிகைகளிலும், சதானாவில் இருந்து வெளிவரும் ''சதனாடைகர்'' ''ஜவான் பாரத்'' என்ற இந்திப் பத்திரிகைகளிலும் என் புகைப் படத்துடன் செய்திகள் வெளிவந்தன.

110. நூற்று இரண்டாம் நாள்
(மௌஹார்-பேலா)

காலை 4 மணிக்குப் புறப்பட்டோம். அமர்பட்டான் போலீஸ் அதிகாரிகள் எங்களுடன் பயணம் செய்தனர். பண்ட்ஹா, சுகரா, கர்ஹி என்ற ஊர்களின் வழியாக 13 மைல் நடந்து காலை 9 மணிக்கு **மௌஹார்** என்ற ஊரை அடைந்தோம். இருபுறமும் நீண்ட மலைத்தொடர் தொடர்ந்து வந்தது கண்ணுக்கு இனிய காட்சியாக இருந்தது. மரத்தடியில் தங்கிச் சமையல் செய்து உண்டோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டு ஏராளமான கிராமங்கள் வழியாக 6 மைல் நடந்து 6¼ மணிக்கு **பேலா** என்ற சிறிய கிராமத்திற்குச சென்று அங்கிருந்த உயர்நிலைப் பள்ளியில் தங்கினோம். ஏராளமான மக்கள் எங்களைக் கண்டு வணங்கி, விபூதி பெற்றனர். இப்பகுதி கங்கைச் சமவெளி போல் வளமாக இருந்தது. கிராமங்களும் நெருக்கமாக இருந்தன.

பேலாவில் ரீவா போலீஸ் அதிகாரிகள் வந்து எங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். "ரீவாக்காடு'' உலகப் புகழ் பெற்றது. ரீவா பழைய சிறிய சமஸ்தானங்களில் ஒன்று. அந்த சமஸ்தான அரசர் முன்பு வெள்ளைப் புலி ஒன்று வைத்திருந்தார். அந்தப் புலியைப் பார்க்க ஆங்கிலேயர்கள் இலண்டனில் இருந்து ரீவாவுக்கு வந்ததுண்டு.

111. நூற்றுமூன்றாம் நாள்
(பிஹார்நதி—ரீவா—சிறைக்கைதிகளுக்கு ஆசி—ராய்ப்பூர்)

காலை 4 மணிக்குப் புறப்பட்டோம். "சோர ஹட்டா" என்ற ஊர் வழியாக 8 மைல் நடந்து காலை 7 மணிக்கு **ரீவா** வந்து சேர்ந்தோம். அங்கு **பிஹார் நதியில்** நீராடி மகிழ்ந்தோம். பிறகு அங்கிருந்த போலீஸ் நிலையத்திற்கு எங்களை அழைத்துச் சென்றனர். அங்கு நான் கையெழுத்துப் போடவேண்டி இருந்தது. போலீஸ் நிலையத்தில் நாங்கள் நுழைந்ததும் அங்கு இருந்த அதிகாரியும் காவலர்களும் எழுந்து நின்று வரவேற்று எங்கட்கு மரியாதை செய்து இருக்கை அளித்தனர்.

ரீவா போலீஸ் நிலையம் ஒரு பெரிய காவல் நிலையம். அங்கிருந்த அதிகாரியும், காவலர்களும் எங்களை வணங்கி எங்களிடமிருந்து விபூதி பெற்றுக் கொண்டனர். நாங்களே அவர்களது நெற்றியில் பூசி ஆசீர்வதிக்கும்படி கூறினர். இரண்டு போலீஸ்காரர்கள் ரூபாய் இரண்டு வீதம் நன்கொடை வழங்கினர்,

அப்பொழுது எதிர்ப்புறமாக இருந்த கம்பிச் சிறையில் அடைபட்டிருந்த கைதிகள் சிலர் இக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தனர். அவர்கள் தங்களையும் நாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். உடனே போலீஸ் அதிகாரி அதற்கு அனுமதி வழங்கினார். அடியேன் சிறைக்கம்பி களுக்கு இந்தப்புறம் நின்று கொண்டு அந்தப் பக்கமாக

நின்ற எல்லாக் கைதிகளின் நெற்றியிலும் விபூதி பூசி ஆசீர்வதித்தேன். ஒரு கைதி தனது அன்பளிப்பாக ரூபாய் இரண்டு வழங்கினார். அதனை நான் பெறலாமா என்று ஒரு கணம் யோசித்துப் போலீஸ் அதிகாரியை நோக்கினேன். அவர் என்னையும் கைதியையும் நோக்கினார். கைதி அந்தப் போலீஸ் அதிகாரியைக் கெஞ்சுவது போல் பார்த்து "இந்த எளிய நன்கொடையை வாங்கிக் கொள்ள உத்தரவிடுங்கள்" என்பதுபோல் மன்றாடினார். உடனே போலீஸ் அதிகாரி கண் சைகை மூலம் எனக்கு அனுமதி அளித்தார். நான் அந்த நன்கொடையை வாங்கிக் கொண்டேன். அந்தக் கைதி தன் கண்ணொளி மூலம் போலீஸ் அதிகாரிக்கும் எனக்கும் நன்றி தெரிவித்தார். இத்தனையும் சில வினாடிகளில் நிகழ்ந்தது. இச்சமயம் எங்களில் யாருமே பேசவில்லை. எல்லாம் கண் பார்வை மூலமே நிகழ்ந்தது. எனவே வாய் மொழியை விடக் கண்மொழிக்கு வலிமை மிகுதி என்பதை உணர்ந்தோம். இதனால்தான் "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்று மொழிப்பகுதிகளாகிய எண்ணையும் எழுத்தையும் கண்ணோடு ஒப்பிட்டார்கள் போலும்.

ரீவா போலீஸ் நிலையத்தில் இருந்து புறப் பட்டோம். ரீவா மன்னரின் வசந்த மண்டபம் கண்டு அழகான சத்திரத்தில் சிறிது தங்கினோம். அந்தச் சத்திரமும் பெரிய அரண்மனை போலவே இருந்தது. பிறகு எல்லைகடந்து ஒரு பள்ளியில் தங்கினோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டு 10 மைல் நடந்து 8 மணி அளவில் **ராய்ப்பூர்** அடைந்து அங்கிருந்த தர்ம சாலையில் தங்கினோம். இங்கு ஒரு போலீஸ் நிலையம் உள்ளது. எங்கள் பாதுகாப்புக் காவலர்கள் இங்கு மாறினர். இப்படி ஊருக்கு ஊர் போலீஸ் காவலர்களும், அதிகாயும் மாறி மாறிப் பொறுப்பேற்று எங்களைப் பாதுகாத்தது எங்களுக்கு வேடிக்கையாக இருந்தது. விசுவநாதர் எங்களை ஒன்பது நாட்களுக்கு இவர்களது பாதுகாப்பில் ஒப்பித்து எங்களுக்கு "உலகியல் அனுபவம்" தந்தார் போலும்.

112. நூற்று நான்காம் நாள்
(மங்காவான்-சிகரிநதி-ரகுநாத்கஞ்ச்)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். சுர்சா, வேலவா முதலிய ஊர்களின் வழியாக ரீவாக்காட்டில் 9 மைல் நடந்தோம். இருபுறமும் வானளாவிய தேக்கு மரங்கள் நிழல் பரப்பின. மகிழ்ச்சியாக நடந்து காலை 7½ மணிக்கு **மங்காவான்** என்ற ஊருக்கு வந்து அங்கிருந்த பள்ளியில் தங்கினோம். பழைய ரீவாக்காடு இப்பொழுது இல்லை. ஓரளவு காடு அழிக்கப்பட்டு நாடு ஆகி வருவதைக் கண்டோம். அதனால்தான் இப்பகுதியில் ஏராளமான கிராமங்கள் உள்ளன. அதற்கு இன்னொரு காரணம்—இரண்டு மலைத்தொடர்களுக்கு இடையே அமைந்துள்ள வளமான பிரதேசமாக இருப்பதால் இங்கு மக்கள் நெருக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் காடு அழிந்து நாடு வளர்கிறது.

தமிழ்நாட்டில் பூம்புகாரில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அரசாண்ட கரிகாலன் என்ற சோழ மன்னன் அப்பொழுதிருந்த காட்டைத் திருத்தி, நாடாக்கினான்; குளம் தோண்டி வளப்படுத்தினான் என்று ''பட்டினப்பாலை'' கூறுகிறது. ''காடு திருத்தி நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி'' அரசாண்டான் என்பது சங்கப்பாடல். காவிரிக்குக் குறுக்கே கல்லணை கட்டி, நீர் தேக்கி, கால்வாய்கள் அமைத்துத் தஞ்சைத் தரணியை வளப்படுத்தியவன் கரிகாலன். எனவேதான் அவனுக்குக் **''கரிகாற் பெருவளத்தான்''** என்ற பெயர் ஏற்பட்டது. அன்று முதல் தான் சோழ

நாட்டுக்கு "வளநாடு" என்றும், சோழ மன்னர்களுக்கு "வளவர்கள்" என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

அதுபோல் ரீவாக்காடு இறைவனின் பரிசான இயற்கை அமைப்பால் மத்தியப் பிரதேசத்திலேயே வளமான பகுதியாக அமைந்துள்ளது. இங்கு கரிகால னுக்குப் பதிலாகக் கடவுளே அந்த வேலையைச் செய்து வருகிறார்.

மாலை 5மணிக்குப் புறப்பட்டோம். 2 மைல் நடந்ததும் **சிகரிநதி** குறுக்கிட்டது. பனி போன்ற நதி நீரில் நெடுநேரம் குளித்து மகிழ்ந்தோம். "இருட்டு முன் அடுத்த ஊர் போய்ச் சேர வேண்டும்" என்று போலீஸ்காரர்கள் அவசரப்படுத்தினர். எனவே மற்ற வர்களை ஆற்று நீரில் இருந்து வெளியே வருமாறு நான் வற்புறுத்தினேன். அப்பொழுது திருநாவுக்கரசு செட்டியார், "என்ன தலைவர், போலீஸ்காரர்களை வைத்து நம்மைப் பயமுறுத்துகிறார்" என்று வேடிக்கை யாகக் கூறினார்.

இப்பகுதி நல்ல வளமாக இருப்பதனால் கொள்ளையர்களின் பயம் இருக்கலாம். எனவே இருட்டு முன் காட்டை விட்டு ஊருக்குள் செல்லப் போலீசார் அவசரப்படுத்தி இருக்கலாம். என்ன இருந்தாலும் நாம் போலீசார் பொறுப்பில் இருக்கிறோம். அதனால் அவர்கள் உணர்வையும் நாம் மதிக்க வேண்டும் அல்லவா! எனவே மனம் இன்றி ஆற்றை விட்டு வெளி யேறி எல்லோரும் தொடர்ந்து நடந்தோம்.

இரவு 5மைல் நடந்து 7½மணிக்கு **ரகுநாத்கஞ்ச்** என்ற சிற்றூர்க்குச் சென்று அங்கிருந்த ஒரு வீட்டின் முற்றத்தில் தங்கினோம்.

மங்காவானில் மதியத் "திரு அமுது" என் தம்பி திரு. மு. ராம. இராசகோபால் அவர்களாலும், ரகுநாத் கஞ்சில் இரவுத் "திரு அமுது" தர்மபுரி திரு தி "வள்ளிநாயகி பாங்கர்ஸ்" நிறுவனத்தாராலும் வழங்கப் பெற்றன.

113. நூற்று ஐந்தாம் நாள்
(தேவ் தாலம்-சிவசங்கரர்-உட்டா நதி-பன்னி-சலாரா நதி-மௌகஞ்ச்)

1-6-83 புதன் காலை 4 மணிக்குப் புறப்பட்டோம். மங்காவானில் இருந்து காசிக்கு வலதுபுறம் சாலையில் செல்ல வேண்டும். இடது புறம் ஒரு சாலை சென்றது. இடது புறச் சாலை வழியாகச் சென்றால் 67 கிலோ மீட்டரில் (50 மைலில்) **அலகாபாத்** இருப்பதாக ஒரு கைகாட்டி கூறியது. நாங்கள் காசிப் பாதையில் நேராக நடந்தோம். இதுவரை 1500 மைல் நடந்துள்ளோம். இன்னும் 150 மைலில் **காசி** இருக்கிறது. அதாவது ஒரு திருச்செந்தூர்ப் பாதயாத்திரை தூரம் மீதி இருக்கிறது. எங்களை அறியாமல் உற்சாகத்தில் நடந்தோம். ஆனாலும் கடைசி நேரத்தில் உடம்புக்கு ஏதாவது நோய் வந்து விடக் கூடாதே என்ற கவலை பிறந்தது.

''லௌர்'' என்ற ஊரின் வழியாக 5 மைல் நடந்து காலை 6½ மணிக்குத் **தேவ்தாலம்** என்ற ஊரை அடைந்தோம். அங்கு அன்று பெரிய சந்தை கூடியிருந்தது. அதற்குக் காரணம் அங்கு திருவிழா நடக்கிறதாம். என்ன திருவிழா என்று விசாரித்தோம். அங்குள்ள **''சிவசங்கர்''** கோயிலில் திருவிழா என்றார்கள். உடனே ஒரு மைல் ஊருக்குள் நடந்து சிவசங்கர் கோவிலுக்குச் சென்றோம். அங்கு ஆயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்தனர்.

கோயில் கிணற்று நீரில் நீராடிக் கோயிலுக்குள் நுழைந்தோம். அது ஒரு பழங்காலக் கோயில். வெள்ளைச் சலவைக் கல்லால் செய்யப் பெற்ற **ஐந்து முக சிவசங்கர் சிலை** காட்சி அளித்தது. அதற்கு அபிஷேக ஆராதனைகள் மக்களே செய்தனர்.

அடுத்த சந்நிதியில் **ஐந்து சிவலிங்கங்கள்** காட்சி அளித்தன. மேலும் பல சிலைகள் அங்கங்கே அழகழ காகத் தெய்வீக ஒளிபரப்பி நின்றன. இக்கோயில் ஆயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்தது. இத்திருவிழா ஆண்டுக்கு ஒருமுறை நிகழுமாம். இதனைக் காண மக்கள் பல்வேறு ஊர்களில் இருந்து ஆயிரக் கணக்கில் இங்கு திரண்டு வருவார்களாம். மத்தியப் பிரதேசத்தின் மிகப் பழமையான சிவன் கோயிலும் இது! புராதன மான திருவிழாவும் இது! இந்த விழாவில் பங்கு பெற்றுச் சிவபெருமானை வணங்கும் பேறு எங்கட்கும் கிடைத்தது.

திருவிழாச் சந்தையில் பொறி உருண்டை கிடைத்தது. நிறைய வாங்கி வைத்துக் கொண்டேன். அதுதானே எனது முக்கியமான உணவு!

மீண்டும் நெடுஞ்சாலைக்குத் திரும்பி ஒருமைல் நடந்து வந்து பயணத்தைத் தொடர்ந்தோம். 4 மைல் நடந்தோம். **உட்டாநதி** குறுக்கிட்டது. அதில் குளித்து **பன்னி** என்ற ஊரை அடைந்தோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். வழியில் **சலாராநதி** குறுக்கிட்டது. அதில் நீராடினோம். 6 மைல் நடந்து **மௌகஞ்ச்** என்ற ஊருக்கு வந்தோம். எங்களோடு பாதுகாப்புக்கு வந்த போலீஸ் அதிகாரிகள் மௌகஞ்ச் கிராமத்தில் உள்ள போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கும் எங்கட்கு ராஜ உபசாரம் செய் தார்கள். போலீஸ் நிலையத்தின் முற்றத்தில் மரநிழலில் மண்தரையில் படுத்து உறங்கினோம். எங்களது எளிமையைப் பார்த்துப் போலீசார் மிகவும் வியந்து பாராட்டினர்.

114. நூற்று ஆறாம் நாள்
(லோஹ்டா நதி-பர்காட் நதி-கட்கதி-கோர்மா நதி-நவ்யா நதி-அனுமானா)

காலை 4 மணிக்குப் புறப்பட்டோம். வழியில் **லோஹ்டா நதி**யிலும், பிறகு **பர்காட் நதி**யிலும் குளித்தோம். "பட்டேரா" என்ற சிற்றூரை அடைந்தோம். அங்கு 70 வயதான முதியவர் ஒருவர் தேநீர்க் கடை வைத்திருந்தார். மத்தியப் பிரதேச ஊர்களில் தேநீர்க் கடைகளில், நம் ஊர் போல் முன்கூட்டியே வேம்பாவில் நீர் கொதிக்க வைத்துத் தேநீர் தயாரித்துக் கொடுக்க மாட்டார்கள், ஆள் வர வர ஒவ்வொருவருக்கும் தனித் தனியே பால் காய்ச்சி, அதில் தேயிலைத் தூளை போட்டு வழங்குவர். எனவே அவசரமாக யாரும் உடனே தேநீர் பருகிவிட முடியாது. பால் காய்ந்துதான் தேநீர் பருக வேண்டும். ஆளைக் கண்ட பிறகு தான் பாலைக் காய்ச்சுவர். ஆனால் அடுப்பில் விறகு எரிந்து கொண்டே இருக்கும். இங்குதான் விறகுக்குப் பஞ்சமில்லையே.

எழுபது வயதுக் கிழவரின் கடைக்குச் சென்று தேநீர் கேட்டோம். ஒவ்வொருவராகச் சென்றோம். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே தேநீர் மிக அருமை அருமையாகத் தயாரித்துக் கொடுத்தார். எங்கள் பாதயாத்திரை பற்றி அறிந்ததும், இராமேஸ்வரம் என்ற வார்த்தையைக் கேட்டதும், அவர் "ராம் ராம்" என்றுகூறிக் கொண்டு எழுந்து நின்று கொண்டார். பிறகு அவர் உட்காரவே இல்லை. நின்று கொண்டே தேநீர் தயாரித்துக் கொடுத்தார். இராமபிரானுக்குத் தேநீர்

கொடுப்பது போன்ற உணர்வு அவருக்கு வந்துவிட்டது. அவரது கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. காசு வாங்க மறுத்து விட்டார். எங்களோடு வந்த போலீஸ் காரர்களுக்கும் அவர் இலவசமாகவே தேநீர் வழங்கினார்.

"இந்தப் புண்ணிய ஆத்மாக்களோடு நீங்கள் சிறிது தூரமாவது நடக்கக் கொடுத்து வைத்திருக்கிறீர்கள். எனக்கு வயதாகி விட்டது. இல்லாவிட்டால் இவர்களோடு நான் காசிக்கே நடந்து போய்விடுவேன்" என்று போலீசாரிடம் கூறி எங்கள் பாதங்களைப் பணிந்து விபூதி பெற்றுக் கொண்டார். நெற்றியிலும் விபூதி பூசி விடச் சொன்னார்.

அப்பொழுது எங்கள் போலீஸ்காரர்கள் கூறியதாவது; "நாங்கள் எங்கள் வாழ்நாளில் செய்த பெரிய புண்ணியம் இந்தப் பாதயாத்திரிகர்களோடு நடந்து செல்வதுதான். இவர்களோடு நடந்து செல்லும் பணியில் ஈடுபட எங்கள் நிலையத்தில் எல்லாப் போலீஸ்காரர்களும் முன் வந்து விட்டனர். பிறகு நாங்கள் பெரிய சிபாரிசின் பேரில் இந்தப் பணியைப் பெற்று நடந்து வருகிறோம்" என்றார்கள். எங்கள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. வாழ்க மத்தியப்பிரதேசம் என்று வாழ்த்தினோம்.

மத்தியப்பிரதேசத்தில் எங்குமே காப்பி கிடைக்காது. பால், தேநீர் மட்டுமே கிடைக்கும். மத்தியப் பிரதேச மக்கள் காப்பி குடித்துப் பழக்கமில்லை.

8 மைல் நடந்து **கட்கதி** என்ற ஊருக்குச் சென்று மரத்தடியில் தங்கினோம். சமையல் செய்ய விறகு தேவை என்றோம். உடனே போலீசார் ஏராளமான விறகு, விராட்டி கொண்டுவந்து சேர்த்து விட்டனர். தம் தலையிலேயே அவர்கள் அவற்றைச் சுமந்து வந்த

காட்சி எங்களை நெகிழச் செய்தது. என்னே அவர்களது பக்தி! போலீசார் இப்பொழுது எங்களுக்கு ராமபாதுகை தாங்கிய பரதாழ்வார் போலவே தென்பட்டனர். நாங்கள் **ராமராஜ்யத்தில்** இருப்பதாகவே உணர்ந்தோம்! "ராமா! உன்னுடைய ராஜ்யம் திரும்பியும் வரக் கூடாதா?" என்று பிரார்த்தித்தோம்.

இன்று மதியத் "திரு அமுது" காரைக்குடி திரு. அழ. பழ. பழநியப்ப செட்டியார் அவர்களால் வழங்கப் பெற்றது.

மாலை 4 மணி வரை அங்கு தங்கி இருந்தோம். அப்பொழுது வேறு போலீசார் வந்து எங்களைப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு முந்திய அன்பர்களை விடுவித்தனர். இராமபிரானிடம் அனுமனுக்குப் பிறகு அங்குதன் பணி ஏற்றது போல இருந்தது இது.

"பிசௌலி" என்ற ஊர் வழியாக நடந்தோம். 5 மைலில் **கோர்மாநதி**யில் குளித்தோம். இந்நதியின் குறுக்கே ஒரு சிறிய அணை திகழக் கண்டோம். பிறகு தொடர்ந்து நடந்தோம். மேலும் 2 மைலில் **நவ்யாநதி** குறுக்கிட்டது. அதிலும் குளித்தோம். இன்று ஒரு நாள் மட்டும் நான்கு நதிகளில் நீராடும் பேறு பெற்றோம். மேலும் 2 மைல் நடந்து இரவு 8 மணிக்கு **அனுமானா** என்ற முக்கியமான பெரிய ஊருக்கு வந்து சேர்ந்தோம். இதுதான் மத்தியப் பிரதேசத்தின் கடைசி ஊர்.

இங்குள்ள அழகிய "லட்சுமி நாராயணர்" கோவிலில் தரிசனம் செய்து, சங்கர் கோவிலுக்குச் சென்றோம். அங்கு வழிபாடு செய்து விட்டுக் கோவில் தாழ்வாரத்தில் தங்கினோம். அங்கு இரவுத் "திரு அமுது" தருமபுரி பாங்க் ஆப் மதுரை மேலாளர் திரு. ஏ. கந்தப்பன் அவர்களால் வழங்கப்பெற்றது. போலீசார் எங்களுடன் வந்தாலும் எங்கள் உணவை

ஏற்க மறுத்து விட்டார்கள். "காவல் காப்பது மட்டுமே தங்கள் கடமை'' என்று கூறிவிட்டனர்.

நாங்கள் அனுமானாவுக்கு வந்துள்ள செய்தி அறிந்ததும் ஏராளமான பக்தர்கள் எங்களைச் சந்தித்து ஆசி பெற்றனர். ஒரு சேட் எங்களுக்குக் கோதுமை, காய் கறி முதலியன வழங்கினார். ஏழைப் பெண்மணி ஒருத்தி தனக்குத் தெரிந்த ஏழைகளிடம் 10 காசு, 5 காசு, கால் ரூபாய் என்று ரூ 13-50 காணிக்கை வசூலித்துக் கொடுத்தாள். இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கண்டபொழுது நாங்கள் மத்தியப் பிரதேசத்துக்கு அடிமையே ஆகி விட்டோம் எனலாம்.

நாங்கள் முதலில் மிகவும் பயந்தது மத்தியப் பிரதேசம். ஆனால் பிறகு மிகவும் அடிமைப்பட்டதும் மத்தியபிரதேசமே. மற்ற மாகாணங்களில் எங்களுக்கு நல்ல உணவு கிடைத்தது மத்தியப் பிரதேசத்தில் நல்ல உணவு கிடைக்கவில்லை. ஆனால் மத்தியப் பிரதேசத்தில் கிடைத்தது போன்றதெய்வீக அன்பும் பக்தியும் மற்ற மாகாணங்களில் கிடைத்ததா என்றால் நிச்சயம் இல்லை என்றே சொல்லலாம்.

எனவே இந்தியாவின் தெய்வ பக்தியையும், உண்மையான அன்பையும், இராமாயணகால ஆன்மீக உணர்வையும் — சுருங்கச் சொன்னால் இந்தியாவின் இருதயத்தையும் — காண விரும்புபவர்கள் இந்தியாவில் வேறு எங்கும் போகக்கூடாது, மத்தியப் பிரதேசக் காட்டுக்கும் மலைக்கும் போக வேண்டும். அங்கேதான் இந்தியாவின் இருதயம் இருக்கிறது. அந்த இருதயத்தில் பொய் இல்லை; போலி இல்லை; புன்மை இல்லை. ஆனால் அன்பு இருக்கிறது; ஆன்மீகம் இருக்கிறது; தெய்வீக ஒளி இருக்கிறது.

பலாச் சுளையைச் சுற்றிப் பெரிய முள்ளும், கனத்த தோலும், கடினச் சதையும் போர்த்தி இருப்பதைப் போல

மத்தியப்பிரதேசத்தின் அந்த அன்புமயமான இருதயமாகிய பலாச்சுனையைச் சுற்றிக் காடும், மலையும், மிருகங்களும், கொள்ளைக் கூட்டங்களும் ஆகிய முள்ளும், கடினமான தோலும், சதையும் படர்ந்திருக்கின்றன. இவற்றைக் கடந்து சென்றால், என் இனிய இந்திய மக்களே! நீங்கள் ராம ராஜ்யத்தில் இருப்பது போன்ற உணர்வினைப் பெறுவீர்கள்!

ஏழ்மையான மத்தியப்பிரதேசத்தில் காட்டிலும் மலையிலும் அவற்றுக்கு உரிய மிருகங்கள் வளர்கின்றன. ஏழ்மையால் மரத்துப்போன கொள்ளைக் கூட்டங்களும் வாழ்கின்றன. இது அந்த நிலத்தின் பூகோளக் குணமாகும்! ஆனால் அந்த மிருகங்களும், கொள்ளைக் கூட்டமும் எங்களை நடந்து போக அனுமதித்தன. எங்களுக்குக் குறுக்கே வரவில்லை. இது அந்த நிலத்தின் ஆன்மீகக் குணமாகும்!! இந்தத் தெய்வீகப் பண்பை இந்த நாடு புரிந்து கொள்ள வேண்டும்.

115. நூற்றுஏழு நூற்று எட்டாம் நாள்

(அமிலா நதி — உத்தரப்பிரதேசம் — பைசோட்— விந்திய மலைத்தொடர் இறக்கம்-மலை அடிவாரம் பிரமாண்ட்கஞ்ச்—செவ்ட்டி நதி — தேள் படையெடுப்பு)

3-6-83 வெள்ளிக் கிழமையாகிய எங்கட்கு இன்று மிக உன்னதமான நாள். ஏனெனில் இன்று நாங்கள் மத்திய பிரதேசம்கடந்து உத்தரப்பிரதேசத்தில் நுழையப் போகிறோம். எனவே எங்கள் உள்ளத்தில் கரைகடந்த உற்சாகம் அலைமோதிக் கொண்டிருந்தது. சேதுக் கடலைக் கடந்து இலங்கைத் தீவுக்குள் நுழைந்த வானரக் கூட்டத்திற்குக் கூட இவ்வளவு உற்சாகம் இருந்திருக்குமா என்பது ஐயமே!

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். மலைப் பாங்கான வழியில் நடந்தோம். இன்றும் புதிய போலீசார் எங்களுடன் பயபக்தியோடு நடந்துவந்தனர். 3 மைல் நடந்து **அமிலா** நதிப் பாலத்தினை அடைந்தோம். அமிலா நதியில் குளித்தோம். இது ஒரு சிறிய நதி. இதுதான் மத்திய பிரதேசத்தையும் உத்தரப் பிரதேசத்தையும் பிரிக்கிறது. இப்பாலத்தின் சரிபாதி மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்தது. மீதி வடபாதி உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தது.

பாலத்தின் மீது நடக்கத் தொடங்கினோம். அப்பொழுது காலை 5-20 **சூரிய உதயம்** ஆகிக் கொண்டிருந்தது. சூரியனை வணங்கினோம்- பாலத்தின் நடுப் பகுதி சென்றதும் அளவிறந்த மகிழ்ச்சியோடு.

"காசி விசுவநாதருக்கு அரோகரா!"
"காசி விசாலாட்சிக்கு அரோகரா"
"அன்னபூரணிக்கு அரோகரா"
"கால பைரவருக்கு அரோகரா"
"இராமநாதசாமிக்கு அரோகரா!"
"பர்வதவர்த்தினிக்கு அரோகரா"

என்று கூவிக்கொண்டும், குதித்துக் கொண்டும் பாலத்தின் மறுபாதியைக் கடந்து **உத்தரப் பிரதேச** மண்ணில் கால்வைத்தோம். குழுவினர் அனைவருக்கும் மிட்டாய் வழங்கினேன். எங்களுடன் வந்த போலீசாருக்கும் மிட்டாய் வழங்கினேன். இந்திக்காரர்களாகிய போலீசாரும் எங்களுடன் சேர்ந்து பாலத்தில் "அரோகரா" போட்டு வந்தனர். அவர்களுக்கு நான் மிட்டாய் வழங்கியதும் அவர்கள் என் கைகளைக் குலுக்கி வாழ்த்துக் கூறினர்.

மேலும் போலீசார் "காசி விசுவநாதர் ஆட்சி செய்யும் உத்தரப்பிரதேசத்துக்கு நீங்கள் வந்து விட்டீர்கள். இது காசி வந்ததற்குச் சமானம். இனி உங்கட்கு ஒரு கவலையும் இல்லை. உங்கட்கு எங்கள் மத்தியப் பிரதேச அரசாங்கம், மக்கள், போலீஸ் இலாகாவின் சார்பில் எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்." என்று இந்தியில் பாராட்டிப் பேசினர். அவர்கள் மொழி புரிந்தது. அவர்களது முதலாவதான பாராட்டையும் வாழ்த்தையும் நான் விசுவநாதரின் வாக்காகவே கருதினேன்.

இதுவரை எங்கள் திட்டப்படி

தமிழ் நாட்டில்	28 நாள்	400 மைல்
கர்நாடகாவில்	7 நாள்	100 மைல்
ஆந்திராவில்	32 நாள்	500 மைல்

மகாராஷ்ட்ராவில் 14 நாள் 200 மைல்
மத்தியப்பிரதேசத்தில் 25 நாள் 300 மைல்

மொத்தம் 106 நாள் 1500 மைல்

நடந்துள்ளோம். இனி உத்தரபிரப்தேசத்தில் 10 நாள் 150 மைல் நடந்து காசிக்கு 12-6-1983 அன்று செல்ல வேண்டும். விசுவநாதரின் பேரருளால் இந்த இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய சரித்திரச் சாதனையாகிய இது நிகழும் என்ற நம்பிக்கை பிறந்தது.

2 மைல் தொடர்ந்து நடந்து "பைசோட்" என்ற சிறிய கிராமத்திற்கு வந்தோம். அங்கு உத்தரப் பிரதேச அரசாங்கத்தின் போலீஸ் சோதனைச் சாவடி (Police Check Post) உள்ளது. அந்த இடம் வரை எங்களுடன் வந்த மத்தியப் பிரதேசப் போலீசார் எங்களை உத்தரப்பிரதேசப் போலீசாரிடம் ஒப்படைத்து, அவர்களிடம் ஒரு கையெழுத்து வாங்கிக் கொண்டு எங்களுக்கு மீண்டும் நல்வாழ்த்துக் கூறி, எங்களிடம் இருந்து பிரியாவிடை பெற்றனர்.

உத்தரப் பிரதேசப் போலீசார் எங்களை அன்பாக வரவேற்றுத் தேநீர் வழங்கினர். "உத்தரப் பிரதேசத்தில் உங்கட்கு ஒன்றும் பயமில்லை. நீங்கள் தனியே நடக்கலாம். காசி வந்தது போல எண்ணிக் கொண்டு நடங்கள். உங்கட்கு எங்கள் வாழ்த்துக்கள்" என்று கூறி எங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு எங்களை அனுப்பினர்.

சோலிசாரின் துணையின்றி இப்பொழுது நாங்கள் நடக்கத் தொடங்கினோம். "பைசோட்" முதல் ஒரு மைல் தூரம் மலை ஏற்றம் தொடங்கியது. சுமார் 200 அடி மலையில் ஏறி இருப்போம். மலை உச்சியை அடைந்தோம். இதுதான் சாத்பூரா விந்திய

மலைத் தொடர்களுக்கு இடையே உள்ள உச்சியிட மாகும். இதுவரை இந்த மலைத்தொடர்களில் நாங்கள் எவ்வளவு தூரம் ஏறி இறங்கி மீதி இருக்கிறதோ அதை இனி இறங்கவேண்டும். அவ்வாறு இறங்கினால் சம வெளியை அடைவோம். அதுதான் உலகப்புகழ் பெற்ற கங்கைச் சமவெளி ஆகும்,

விந்தியமலையின் உச்சியில் இப்பொழுது நாங்கள் இருக்கிறோம். அங்கு ஒரு சிறிய கொற்றவை கோயில் இருக்கிறது. அதற்கு உரியவர் ஒரு பூசாரி. அவரைச் சந்தித்து எங்கள் யாத்திரை பற்றிக் கூறினோம். அவர் மிகவும் மகிழ்ந்து, எங்கட்கு அம்பாள் தரிசனம் செய்து வைத்துப் ''பொறி மிட்டாய்'' வழங்கி ஆசீர்வதித்தார்.

அப்பொழுது மணி பத்து. வெயில் ஏறிக் கொண் டிருந்தது. பூசாரி எங்களை நோக்கிக் கூறியதாவது, ''வெயில் ஏறுகிறது. இது மொட்டை மலை. வெயில் பிறகு பொறுக்க முடியாதது ஆகி விடும். எனவே இனி நிற்காதீர்கள். இங்கு குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் கிடைக்காது. தண்ணீர் வேண்டுமானால் மலை அடி வாரத்துக்கு 2 மைல் நடந்து போய்த்தான் எடுத்துவர வேண்டும். ஆகவே வெயிலைப் பார்க்காமல் கீழே இறங்கிச் செல்லுங்கள்'' என்று அவசரப் படுத்தினார்.

அப்பொழுதே வெயில் பொறுக்க முடியாததாக இருந்தது. எங்கள் ரிக்ஷாவில் இருந்த தண்ணீரும் தீர்ந்தது. நாங்கள் உள்ள இடத்தில் தண்ணீர் கிடைக் காது. தண்ணீர் வேண்டுமானாலும் மலையை விட்டுக் கீழே இறங்கினால் தான் முடியும். எனவே கீழே இறங்கு வது என்று முடிவு செய்தேன்.

அப்பொழுது எங்களில் ஒருவராகிய பழநி யாண்டி வெயில் தாக்கி மிகவும் சோர்வாக இருந்தார். பூசாரியோ ''தாமதிக்காமல் இறங்குங்கள். இந்த

இடத்தில் உங்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது. வெயிலுக்குத் தங்க நிழலும் கிடையாது; நீரும் கிடையாது. இங்கு நண்பகலில் வெப்பம் மிகுதியாகத் தாக்கும். ஆகவே ஒரு நிமிடமும் தாமதிக்காமல் இறங்குங்கள்'' என்று அவசரப்படுத்தினார்.

அவர் சொன்னது முற்றிலும் உண்மை. அங்கு தங்க நிழலே இல்லை. எங்கு பார்த்தாலும் மொட்டை மலை! வெயில் கொடுமை 10 மணிக்கே தாங்க முடிய வில்லை. மத்தியப் பிரதேசத்தின் குளிர் நிழல் இங்கு கற்பனையாகி விட்டது. எனவே ''கீழே இறங்குங்கள்'' என்று குழுவினரிடம் கூறினேன்.

சைக்கிள் ரிக்ஷா முதலில் இறங்கத் தொடங் கியது. சில நிமிடங்களில் அது விரைந்து மலையடி வாரத்தை அடைந்திருக்கும்.

தியாகராசன், தேனிமலை ஆகியோரை மட்டும் பழநியாண்டிக்குத் துணை செய்ய என்னுடன் நிறுத்திக் கொண்டேன். மற்றவர்கள் எல்லாம் விந்தியமலைத் தொடரை விட்டு இறங்கி அடிவாரத்தை அடைந்து விட்டார்கள்.

பழநியாண்டி நடக்கத் திணறினார். நாங்கள் மூவரும் அவருக்குத் துணை செய்தோம். அவர் ஒவ்வோர் இடத்திலும் உட்கார்ந்து உட்கார்ந்து நடந்தார். மணி 11 ஆகி விட்டது. வெயில் கொடுமையாகத் தலைமீது தாக்கியது. பழநியாண்டி கீழே படுத்து விட்டார். ''விசுவநாதா! இது என்ன சோதனை'' என்று அவர் முகத்தில் தண்ணீரைத் தெளித்து, விபூதியைப் பூசினேன். பிறகு நாங்கள் அவரைத் தரதர வென்று இழுத்துக் கொண்டு சுமார் ஆயிரம் அடி உள்ள மொட்டை மலையை விட்டுக் கீழே இறங்கி அரை மணி நேரத்தில் அடிவாரத்தை அடைந்தோம்.

அடிவாரத்தில் உள்ள ஊருக்குப் பெயர் "டிரமாண்ட்கஞ்ச்" என்பதாகும். அங்கு ஒரு பழங்காலச் சத்திரம் இருக்கிறது. அது நல்ல கல் கட்டடம் ஆகும். அங்குதான் பழங்காலப் பாதயாத்திரிகர்கள் தங்கி இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அவ்வளவு புராதனமாக அது இருந்தது. சத்திர முன்பக்கத்தின் ஒரு பகுதி இடிந்து கிடந்தது.

சத்திரத்தின் வாசலில் எங்கள் ரிக்ஷா நின்றது. குழுவினர்களும் நின்றார்கள். சத்திரம் அருகில் உணவுப் பொருள்கள் கிடைத்தன. அவற்றை வாங்கி உண்டு எங்களை அறியாமல் பலமணி நேரம் உறங்கினோம். வெப்பத் தாக்குதலால் தளர்ந்திருந்த பழநியாண்டியும் தன்னை மறந்து தூங்கினார்.

இவ்வூரில் **செவ்ட்டி நதி** ஓடுகிறது. அதில் மாலையில் நீராடி மகிழ்ந்தோம். பழநியாண்டிக்கு அவ்வூரில் உள்ள **மனோஜ்கமர் திவிவேதி** என்ற டாக்டரிடம் காட்டி மருத்துவ சிகிச்சை செய்தோம். அன்று இரவு சத்திரத்தில் தூங்க முனைந்தோம்.

சத்திரத் தாழ்வாரத்தில் வைத்திருந்த எங்களது சோற்றுச் சட்டியை எடுக்கச் சொன்னேன். தியாக ராஜன் அதனை எடுக்கப் போனார். அப்பொழுது ஒரு தேள் சட்டியருகில் ஓடியது. உடனே அவர் "தேள் தேள்" என்று கத்தினார். விளக்கு வெளிச்சத்தில் பார்த்தோம். சுவர் ஓரமாக ஒரு தேள் ஓடியது; அதனைத் தொடர்ந்து இரண்டாவது தேள் ஓடியது; பிறகு மூன்றாவது தேள் தொடர்ந்தது; ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒன்றன் பின் ஒன்றாக ஏழு தேள்கள் கியூ வரிசையில் ஓடின. தேளின் படையெடுப்பு நிகழ்ந்தது! எங்கள் கண்களை எங்களாலேயே நம்ப முடியவில்லை.

இந்தத் தேள்கள் எல்லாம் ஓர் அறைக்குள் புகுந்து மறைந்தன. உடனே சத்திர நிர்வாகியை அழைத்து வந்து செய்தியைச் சொன்னோம்; அவரது அறையைச் சுட்டிக் காட்டினோம். அதற்கு அவர், "தேள் ஒன்றும் பிரமாதம் இல்லை. இந்த அறைக்குள் இதுபோல் ஆயிரம் தேள்கள் இருக்கின்றன. இதற்கெல்லாம் நீங்கள் பயப்படக்கூடாது" என்று சாதாரணமாகக் கூறிச் சென்று விட்டார். அதன் பிறகு சத்திரத் தாழ்வாரத்தில் நாங்கள் படுக்கவில்லை. முற்றத்து மரநிழலில் கட்டில் போட்டு உறங்கினோம். எங்கள் கனவில் தேள் வராதது விசுவநாதர் திருவருளே!

நாங்கள் மிகவும் சோர்ந்திருந்ததால் முழு ஓய்வு கொள்ளும் பொருட்டு நூற்று எட்டாவது நாள் (4-6-83) டிரமாண்ட் கஞ்ச் சத்திரத்திலேயே தங்கினோம். நதியில் நீராடி சமையல் செய்து உண்டோம். இன்றைய "மதியத் திருஅமுது" தருமபுரி "நாச்சம்மை ஆச்சி பாங்கர்ஸ்" நிறுவனத்தாராலும், இரவுத் 'திரு அமுது' தருமபுரி பாங்க் ஆப் மதுரை அன்பர் திரு. சுப. சொக்கலிங்கம் அவர்களாலும் வழங்கப் பெற்றன.

உத்தரப் பிரதேசத்தில் நாங்கள் நுழைந்துள்ள மகத்தான செய்தியினை எங்கள் தலைமை நிலையத்திற்குத் தந்தி மூலம் தெரிவித்தோம்.

109. நூற்று ஒன்பதாம் நாள்

(பரோதா-பேலன்நதி-கராஹி)

காலை 5 மணிக்குப் புறப்பட்டோம், சத்திர மேலாளர் திரு. **லால்கந்த்** எங்களை அன்புடன் வழினுப்பி வைத்தார். 8 மைல் நடந்து காலை 8 மணிக்கு **பரோதா** என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். ஊரின் எல்லையில் ஓடிய **பேலன்** நதியில் நீராடினோம். பகல் உணவு தயாரித்து உண்டோம்.

மாலை 4½ மணிக்குப் புறப்பட்டு 5 மைல் நடந்து **கராஹி** என்ற சிறிய கிராமத்தை அடைந்து அங்கிருந்த இரண்டு மூன்று வீட்டின் முற்றத்தில் தங்கினோம். அந்த வீட்டின் உரிமையாளர் திரு. **சிங்** எங்களை அன்பாக வரவேற்று உதவிகள் செய்தார்.

பொதுவாக மத்தியப் பிரதேசத்தின் குளுமை இப்பகுதியில் இல்லை. ஆனால் மலை ஏற்ற இறக்கம் இல்லாத ஓரளவு சமவெளிப் பிரதேசம் ஆகையால் எளிமையாக நடக்க முடிந்தது.

117. நூற்றுப்பத்தாள் நாள்

(லால்கஞ்ச்-பராஹிநதி-வஹேராநதி- புனேளாநதி லஹாங்பூர் என்ற பஹவண்டாலோ-விந்தியமலை இறக்கம்-கங்கைச் சமவெளி-சமோகரா)

6-6-83 திங்கள் காலை 4¾ மணிக்குப் புறப்பட்டோம். 3 மைல் நடந்து **லால்கஞ்ச்** என்ற ஊருக்கு 6 மணிக்கு வந்தோம். அங்கிருந்த மக்கள் எங்களை அன்பாக வரவேற்று விபூதி பெற்றுக் கொண்டனர். பிறகு தொடர்ந்து பயணம் செய்தோம்.

பராஹிநதி, வஹேராநதி, புனேளாநதி ஆகியவற்றில் நீராடி 8மைல் நடந்து **லஹாங்பூர்** என்ற **பஹவண்டாலோ** என்ற கிராமத்திற்கு 9 மணிக்கு வந்து சேர்ந்தோம். இங்கு ஒரு பெரிய சிவன் கோவிலும், நம் செட்டி நாட்டில் உள்ளது போன்ற ஒரு பெரிய குளமும் உள்ளன. இக்குளத்தின் நான்கு கரையிலும், கரை முழுவதுமாகப் படி கட்டி வெள்ளைக் கல்லினால் அமைத்திருக்கும் அழகு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இத்தகு திருப்பணியை யாரோ ஒரு நகரத்தார் தான் செய்திருக்க வேண்டும். வேறு யாருக்கும் இப்படித் திருக்குளத் திருப்பணி செய்யத் தெரியாது.

சிவன் கோவிலில் வழிபட்டு மரத்தடியில் தங்கி இருந்தோம். அப்பொழுது **ராம்மோகன்மிஸ்ரா** என்ற ஒருவர் எங்களைச் சந்தித்தார். அவர் நன்கு படித்தவர்; அரசாங்க அலுவலராக இருந்தவர். அவர் எங்கள் புனித

யாத்திரையை மிகவும் வரவேற்றுப் பாராட்டினார். அப்பொழுது அவர் கூறிய சில கருத்துக்கள் வருமாறு:-

"இந்தியாவில் ஒற்றுமை உணர்ச்சி இப்பொழுது குறைந்து வருகிறது. இந்தியா ஒரு வளமிக்க நாடாக இருந்தும் தன் வலிமை தெரியாததால் ஏழ்மையாக இருக்கிறது. இந்தியர்கள் ஒற்றுமைக் குறைவால் அடிமைத் தனத்தை நோக்கிப் பின்னோக்கிச் செல்கிறார்கள். ஒற்றுமையை இந்துமதம் வலியுறுத்துவது போல் வேறு எந்த மதமும் வலியுறுத்தவில்லை. இந்தியாவுக்குத் தென்னாட்டில் இருந்து ஒரு பெரிய தலைவர் உருவாகி வரவேண்டும். வடநாட்டு மக்கள் அதை விரும்புவார் கள், இப்பொழுது இந்தியாவில் ஒருமைப்பாடு என்பது வாயளவில்தான் இருக்கிறது. இது செயற்படுவதற்கு உங்கள் பிரார்த்தனையும், யாத்திரையும் மிகவும் துணை செய்யும். உங்கட்கு என் பாராட்டுக்கள்." என்று கூறி விட்டு மேலும் ஒன்றைச் சொன்னார்.

"நீங்கள் காசி செல்லும் வழியில் நாளை மீர்சாபூர் செல்கிறீர்கள். அங்கு கங்கைக் கரையில் 4 மைல் தொலைவில் **விந்தியாசலம்** என்ற ஊர் இருக்கிறது. அங்கிருக்கிற **'விந்தவாசினி'** என்ற அம்மனை வழிபட்டுச் செல்லுங்கள். ஏனெனில் காசிக்குச் சமமான இடம் விந்தியாசலம். விசுவநாதருக்குச் சமமான சக்தி வாய்ந்த தெய்வம் விந்தவாசினி. காசிக்கு வரும் யாத்திரிகர்கள் எல்லாம் அங்கு சென்று வழிபடுவார்கள். ஆயிரக் கணக்கில் அங்கு நீங்கள் மக்களைக் காண்பீர்கள். ஆகவே அதனைத் தவறவிட்டு விடாதீர்கள். அந்த வாய்ப்பை இப்பொழுது நீங்கள் இழந்தால் பிறகு எப்பொழுதுமே இழந்தவர்கள் ஆகிவிடுவீர்கள். (If yon Miss it now, you miss it for ever) ஆகவே அவசியம் அங்கு சென்று விந்தவாசினியை வழிபட்டுக் காசிக்குச் செல்லுங்கள்" என்றுகூறி எங்களை வாழ்த்தினார்.

மத்தியப் பிரதேசத்தில் நாங்கள் நடந்தபொழுது குதிரையில் பலர் சவாரி செய்யக் கண்டோம். உத்தரப் பிரதேசத்தில் பலர் ஒட்டகங்களில் வரிசை வரிசையாகச் சவாரி செய்யக் கண்டோம்.

உத்தரப்பிரதேசத்தில் சில கல்யாணங்களைக் கண்டோம். இரவில் கல்யாணம் நடக்கிறது. வாத்தி யங்கள் வாசிக்கிறார்கள். விருந்து நடைபெறுகிறது. மறுநாள் மணப்பெண்ணை மூடுபல்லக்கில் வைத்து மணமகன் வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர். கல்யாண ஊர்வலத்தில் சிலர் துப்பாக்கி ஏந்தி வானத் தில் சுட்டவாறு செல்கின்றனர். இது வாண வேடிக்கை போல் இருக்கிறது. இரவில் திருமணம் நடக்கும்போது பெருங்கூட்டமாக இருக்கிறது. விடிந்தால் ஒருவரையும் காணோம்.

மாலையில் 4½ மணிக்குப் புறப்பட்டு மீண்டும் காட்டுப் பாதை வழியாக 3மைல் நடந்தோம். மனித நடமாட்டமே இல்லாத பாதையாக இது இருந்தது. சிறிது தூரத்தில் ஒரு மலை முகட்டைக் கண்டோம். என்ன ஆச்சரியம்! அங்கிருந்து பாதை கீழே இறங்கு கிறது. சுமார் 600 அல்லது 700 அடி அளவுக்கு மலை இறக்கம் இருந்திருக்கலாம். மலையிறக்கப் பாதை சுமார் 2 மைல் தூரம் தொடர்ந்தது. எச்சரிக்கையாகக் கீழே இறங்கினோம்! மலையில் இருந்து பார்க்கும் பொழுது மலையின் அடிவாரத்தில் அற்புதமான **கங்கைச் சமவெளி** தெரிந்தது. தூரத்தில் ஓடும் கங்கை நதியும், வளமான கோதுமை வயல்களும் தெரிந்தன. அவற்றைப் பார்த்தவாறே மலைவிட்டுக் கீழே இறங்கி னோம்.

அரை மணி நேரத்தில் மலை அடிவார ஊராகிய **கனப்புரா** அடைந்தோம். இங்கிருந்து நிலவளம், நீர் வளம் மிக்க ஊர்களைக் காண்கிறோம்.

ஒரு மைல் நடந்து **சமோகரா** என்ற ஊரை அடைந்தோம். அது ஒரு சிறிய கிராமம். ஊரின் தொடக்கத்தில் ஒரு பண்டகசாலை (Godown) இருந்தது. அங்கு தங்க அதன் காவலர் அனுமதித்ததால் அங்கு இரவு தங்கினோம். வயல் வெளி சூழ்ந்த முற்றத்தில் வானமே கூரையாகப் படுத்துத் தூங்கினோம்.

118. நூற்றுப்பதினொன்றாம் நாள்

(மீர்சாபூர்-கங்கைக்கரை-விந்தியாசலம் விந்தவாசினி)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். வழியில் மட்பாண்டம் செய்பவர்களைக் கண்டோம். பலவகையான அழகான மட்பாண்டங்களை அவர்கள் செய்து காயவைத்திருந்தது இனிய காட்சியாக இருந்தது.

6 மைல் நடந்து காலை 7½மணிக்கு **மீர்சாபூர்** என்ற மிக முக்கியமான நகருக்கு வந்து சேர்ந்தோம். இது உத்தரப் பிரதேசத்தின் அழகிய நகர்களில் ஒன்றாகும். இது **கங்கைக் கரையில்** இருக்கிறது. ஊர்மக்கள் எங்களை மிகவும் பக்தியோடு வரவேற்றனர்.

முதலில் கங்கையில் நீராடினோம். இந்தக் கோடையிலும் தண்ணீர் நிறைய ஓடியது. ஆயிரக் கணக்கான பக்தர்கள் கங்கையில் நீராடியது பார்க்கத் தக்கதாக இருந்தது.

இதுவரை சுமார் 1560 மைல் நடந்துள்ள எங்கள் உடல் வலியும், நாங்கள் பிறவிகளில் செய்துள்ள பாவங்களும் கங்கையில் நீராடியதால் தொலைந்தன. புத்துயிரும், புத்துணர்வும் பெற்றுக் கங்கையில் இருந்து வெளியே வந்தோம். கரையில் ஏராளமான கோயில்கள் வரிசை வரிசையாக இருந்தன. அனைத்திலும் வழிபாடு செய்தோம். காசித்தலத்தை அடைந்தது போன்ற எண்ணம் துளிர்த்தது.

பிறகு அலகாபாத் சாலையில் பயணமானோம். இது மீர்சாபூரில் இருந்து இடதுபுறம் செல்லும் பாதை யாகும். இதன்வழியே 4 மைல் சென்றால் **விந்தியாசலம்** அடையலாம். மீர்சாபூரில் இருந்து வலது புறச் சாலையில் **கிழக்கே** சென்றால் காசியை அடையலாம். நாங்கள் விந்தவாசினியைத் தரிசிப்பது என்று தீர்மானம் செய்திருந்தோம். எனவே கங்கைக் கரை வழியே இடது புறச்சாலையில் — அதாவது அலகாபாத் சாலையில் உற்சாகத்தோடு நடந்தோம்.

நாங்கள் உத்தரப்பிரதேசத்தில் நுழைந்து மீர்சாபூர் அடைந்த இனிய செய்தியினைத் தேவகோட்டைத் தலைமை நிலையத்திற்குத் தந்தி மூலம் தெரிவித்தோம்.

விந்தியாசலம் அடைந்தோம். அங்கு ஒரு சத்திரத்தில் தங்கினோம். கங்கையில் மீண்டும் நீராடினோம். ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரிசையில் நின்று விந்தவாசினியைத் தரித்தனர். நாங்களும் சில மணி நேரம் "கியூ" வரிசையில் நின்று உள்ளே சென்றோம். திருப்பதி வரிசைபோல் நீண்டது. காசி விசுவநாதர் கோயில் போல, மிகக் குறுகியசந்து வழியாக மிகச்சிறிய கோயிலை அடைந்தோய்.

விந்தவாசினி சந்நிதி முன் நின்றோம். இவள் விந்திய மலைத் தெய்வம்—அடிவாரமாகிய மீர்சாபூரில் எழுந்தருளி இருக்கிறாள். பழங்காலத்தில் காசி முதல் வட இந்தியாவில் இருந்து இராமேஸ்வரத்திற்கு நடந்து வந்தவர்கள் விந்தியமலையில் ஏறிக்கடப்பதற்கு முன்பு விந்தியமலைத் தெய்வமாகிய விந்தவாசினியை வழிபட்டே அம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே இந்த அம்பிகை காசிக்குச் சமமான சக்தியாகத் திகழ்கிறாள்.

"எங்கள் திட்டத்தை இனிதே நிறைவேற்றித் தருமாறு விந்தவாசினியை வணங்கி ஆசிபெற்றுக் கோயிலுக்கு வெளியே வந்தோம். சத்திரத்தில் பகல் முழுதும் தங்கினோம். "விந்தவாசினி'' படம் ஒன்று விலைக்கு வாங்கிக் கொண்டேன். அது இன்றும் என் பிரார்த்தனை அறையில் இருக்கிறது.

இன்று மதியத்''திரு அமுது'' பெரியாம்பட்டி திரு. பி. ஏ. பன்னீர்செல்வம் அவர்களால் வழங்கப் பெற்றது.

மாலையில் மீண்டும் மீர்சாபூர் நோக்கி நடக்க லானோம். இருள்சூழும் நேரத்தில் மீர்சாபூர் வந்தோம். இது ஒரு பெரிய நகரம். இங்கு பத்து இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இங்கு மட்பாண்டம். விரிப்பு (Carpet) முதலியன நிறைய உற்பத்தி ஆகின்றன. இங்கு உற்பத்தி யாகும் அழகிய விரிப்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்நகரில் அலுமினியம் தொற்சாலை, பெரிய மின்சார நிலையம் எல்லாம் இருக்கின்றன.

நாகபுரியில் நாங்கள் அடைந்த இன்னலினால், மீர்சாபூர் நகருக்குள் நாங்கள் தங்கவில்லை.பொதுவாக எங்கள் உள்ளம் மக்கள் சந்தடியற்ற காட்டுப் பிரதேசத் தையே நாடியது. எனவே மீண்டும் கிழக்கு நோக்கி (வலப் புறமாக) எங்களது காகிச்சாலையில் (N. H. 7) நடக்கத் தொடங்கினோம். இருட்டில் நடந்தோம். ஓரிரண்டு மைல் நடந்து ஊரின் எல்லையை அடைந்தோம். அங்கு ஒரு சர்தாரின் வீட்டைக் கண்டோம்.

இரவு அங்கு தங்கலாமா என்று அவரிடம் விசாரித்தேன். அவர் மிகவும் பக்தி வாய்ந்தவராகக் காணப்பட்டார். அவர் எங்களை "ராம் ராம்'' என்று

வாய்க்கு வாய் கூறி வணங்கினார். மகிழ்ச்சியோடு அவரது பாதுகாப்பில் நாங்கள் தங்க எங்களை அனுமதித்தார். அவரது வீட்டின் முற்றத்தில் புல்வெளியில் தங்கினோம்.

இரவுத் திருஅமுது ஹோசூர் "ஏஷியன் பேரிங்ஸ்" அதிபர் திரு. எஸ். எம். பழநியப்ப செட்டியார் அவர்களால் வழங்கப் பெற்றது.

கங்கைத் தென்றல் வீச, இரவு நிம்மதியாகத் தூங்கினோம். சர்தார் இரவு முழுதும் கண்விழித்திருந்து எங்களுக்குப் பாதுகாப்பளித்தார்.

119. நூற்றுப்பன்னிரண்டாம் நாள்

(கஜூரிநதி—உமரியாரசய்னா என்ற துபேபூர்-சத்தார்நதி—படரி)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். வழியில் **கஜூரி நதி**யில் குளித்தோம். டேபரி என்ற ஊரை அடைந்தோம். அங்கு தேநீர் பருகுவதற்காக ஒரு கடைக்குச் சென்றோம். அக்கடைக்காரர் எங்களைப் பார்த்து "நீங்கள் இராமேசுவரத்தில் இருந்து காசிக்கு நடந்து செல்லும் பாதயாத்திரிகர்களா?" என்று கேட்டார். நாங்கள் "'ஆம்'' என்றோம்.

உடனே அவர் எங்களை எண்ணிப் பார்த்து விட்டு, "ஒருவர் குறைகிறாரே, அவர் எங்கே" என்று கேட்டார். நாங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, "அவர் வயதானவர். மெல்ல மெல்ல நடந்து பின்னால் வருகிறார். நாங்கள் சிறிது வேகமாக நடப்பவர்கள். ஆகவே முன்னால் வருகிறோம்'' என்றோம்.

"எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நடக்கக் கூடாதா?'' என்று கேட்டார்.

"நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நடப்போம். அவரவர் வேகத்திற்கு ஏற்ப நடக்க வேண்டும். வேகமாக நடப்பவர் மெதுவாக நடப்ப வரோடு நடந்தால் அவருக்குக் கால்வலி வந்து விடும். பிறகு நடக்க முடியாது. மெதுவாக நடப்பவர் வேகமாக நடப்பவரோடு தொட்டு நடக்க முடியாது; மீறி நடந்தால் அவருக்குக் கால்வலி வந்து விடும். எனவே

நாங்கள் முன்னும் பின்னுமாக நடப்போம். சேர வேண்டிய இடத்தில் ஒன்று சேர்வோம்'' என்றேன்.

அவர் எங்கள் யாத்திரையை வெகுவாகப் புகழ்ந்தார்.

''நாங்கள் வருவதும் எங்கள் எண்ணிக்கையும்'' உங்கட்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன்.

அதற்கு அவர் கூறிய பதில் எங்களுக்கு வியப் பளித்தது. ''நேற்றுப் பத்திரிகையில் (இந்தி) உங்கள் வருகை பற்றிப் பிரசுரம் ஆகி இருந்தது. எத்தனை பேர் நடந்து வருகிறீர்கள் என்ற விபரம் எல்லாம் விளக்கமாக அச்சாகி இருந்தது. உத்தரப்பிரதேச எல்லையில் நீங்கள் நுழைந்த விபரம் எல்லாம் கூட வெளியாகி இருந்தது. ஆகவே உங்களைக் காணலாம் என்ற ஆசையோடு காத்திருந்தேன். அந்த ஆசை நிறைவேறியது'' என்று கூறி எங்களை வணங்கினார். விபூதி பெற்றுக் கொண்டார். அனைவர்க்கும் அவரது அன்பளிப்பாகத் தேநீர் வழங்கினார். பிறகு பயணம் தொடர்ந்தது.

இன்று 10 மைல் நடந்து **உமரியா ரசய்னா** என்ற **துபேபூர்** அடைந்து பகல் நேரம் தங்கினோம். கங்கைச் சமவெளி யாகையால் சாலையின் இருபுறமும் வளமான வயல்கள் இருந்தன. ஊர்கள் மலையாளத்தில் போல் நெருக்கமாக இருந்தன. மக்கள் தொகையும் மிகுதியாக இருந்தது. உலகத்திலேயே அதிகமான மக்கட் பெருக்க முள்ள பிரதேசம் இந்தக் கங்கைச் சமவெளிதான். அதற்குக் காரணம் கங்கை நதியின் வளமேயாகும்.

மாலை 4 மணிக்குப் பயணம் ஆனோம். **சத்தார் நதியில்** குளித்தோம். 3 மைல் நடந்தோம். மாலை 6 மணிக்கு **படரி** என்ற கிராமத்தை அடைந்து ஒரு பள்ளியில் தங்கினோம். இன்று இரவு கடும்புயல் வீசியது; கனமழை பெய்தது. என்றாலும் அவை எங்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

120. நூற்றுப் பதின்மூன்றாம் நாள்

(ஜுரிகூளிநதி - பூல்நதி-கசியவா நதி - ராம்பாண்ட்நதி சூனார்-ஜமுயிநதி-ஜமுயிபாஜால்)

காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். இன்னும் மூன்று நாளில் காசியை அடையப் போகிறோம். எங்கள் துயரமெல்லாம் தீரப் போகிறது என்ற எண்ணத்தில் எங்கள் உள்ளம் எங்கெங்கோ பறந்தது. மிக உற்சாகத்தோடு நடந்தோம். இப்பொழுது எங்கள் உடம்புக்கு ஒரு புதிய வலிமை ஏற்பட்டிருந்தது.

நான் வழியெல்லாம் பயந்து பயந்து சிறிதளவு உணவு மட்டுமே உண்டு வந்தேன். எனவே மிகவும் மெலிந்திருந்தேன். என்றாலும் எனக்கே இப்பொழுது உடல் வலிமை பெருகியிருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

நாங்கள் நடந்த பொழுது சிறிய மழை பெய்தது. அதற்காக நாங்கள் வழியில் தங்கவில்லை. மழையில் நனைந்தவாறே நடந்தோம்.

ஜுரிகூளி நதி
பூல் நதி
கசியவா நதி

ஆகிய நதிகள் அடுத்தடுத்துக் குறுக்கிட்டன. எல்லா நதிகளிலும் குளித்தோம்.

"டக்மக்பூர்'' புகைவண்டி நிலையம் அருகே நடந்து சென்றோம். பிறகு **ராம்பாண்ட் நதியில்** நீராடினோம்.

ஒரு புறம் சிறு மலை ஒன்று தொடர்ந்தது. 9 மைல் நடந்து காலை 9 மணிக்கு இனிதே **சூனார்** என்ற நடுத்தர நகரத்தை அடைந்து எல்லையில் ஒரு வீட்டில் தங்கினோம். சமையல் செய்து உண்டோம். மதியத் "திரு அமுது" புதுவயல் திரு. கே. எம். ரெங்கநாதன் அவர்களால் வழங்கப் பெற்றது.

அதன் பின் எங்கட்குத் "திரு அமுது" படைத்தவர்கள், காரைக்குடி திரு. எம். தியாகராஜன், சிதை. பழநியப்பன் சென்னை; வி.மனோகரன் பெங்களூர். தேவகோட்டை சிதம்பர விநாயகர் தண்டாயுதபாணி அபிஷேகக் கார்த்திகைக் குழு;

கே. ஆர். சடையப்ப செட்டியார், பெங்களூர்.

திரு. நாராயணன், பாங்க் ஆப்மதுரை - பெங்களூர்.

காரைக்குடி கரு. கருப்பன் செட்டி—திருச்சி.

எம். ஏகப்பன், சரஸ்வதி டியூப் கார்ப்பொரேஷன்-செகந்தராபாத்.

ஆகியோர் ஆவர்.

என் மகள் **பொன்முடி இராமசாமி** முதலில் ரூ 30. நன்கொடை வழங்கித் தொடங்கி வைத்த **"திரு அமுதுத் திட்டம்"** எங்கள் "காசி நடைப் பயணம்" முடியும் வரை தொடர்ந்து பயன்பட்டது. இந்தத் திட்டத்திற்கு உதவி செய்தவர்கள் பெயர், முகவரி எல்லாம் சொல்லி இறைவனிடம் இவர்கள் நன்மைக்காக அவ்வப்பொழுது நாங்கள் பிரார்த்தனை செய்தோம். எங்கள் பயண வெற்றியில் "திரு அமுது" படைத்த அன்பர்கள் அனைவர்க்கும் பெரும் பங்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

"சூனார்" பகுதியில் நிறையச் சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது. எனவே இவ்வூரில் ஒரு பெரிய

"சிமிண்டுத் தொழிற்சாலை'' இயங்கக் கண்டோம். இத்தொழிற்சாலை ஆசியாவிலேயே பெரியதாகும்.

சூனாரில் அழகான ஜாடிகள், பொம்மைகள் எல்லாம் களிமண்ணால் (Clay) செய்கின்றனர். இவை பார்ப்பதற்குக் கண்ணைப் பறிக்கின்றன. இவற்றின் வேலைப்பாடு ரசிக்கத் தக்கதாகும்.

இங்கு மீர்சாபூரைச் சேர்ந்த "ஸ்ரீவத்சவா'' என்ற அன்பரைச் சந்தித்தோம். அவர் தான் இங்கு நாங்கள் பகல் தங்கவும், சமையல் செய்யவும் வேண்டிய உதவிகளைச் செய்தார்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். 3 மைல் நடந்து **ஐமுயி** என்ற நதியில் குளித்தோம். நதிக்கரையில் உள்ள **ஐமுயிபாஜால்** என்ற ஊரை 5½ மணிக்கு அடைந்தோம். "**சிங்**'' ஒருவரின் துணிக்கடை அருகில் இரவு த்தங்கினோம். அவர் எங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தார்.

பொதுவாக உத்தரப் பிரதேசத்தில் இந்துப் பெண்கள் எல்லாம் தலையில் முக்காடுபோட்டு முகத்தை மறைத்துக்கொண்டிருக்கும் பழக்கத்தைக் கவனித்தோம். "இப்பழக்கம் எப்படி ஏற்பட்டது?'' என்று திரு. சிங் அவர்களைக் கேட்டோம்.

அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு: "முகலாய அரசர்கள் டில்லியில் இருந்து அரசாண்ட காலத்தில் இந்துக்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. அதுவும் அவுரங்கசீப் ஆட்சியில் இந்துக்களும், சீக்கியர்களும் பெரிதும் தொல்லைப் பட்டனர். இந்துப் பெண்களைக் கண்டால் படைவீரர்கள் தூக்கிச் செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டது. எனவே இந்துப் பெண்களும் முஸ்லீம் பெண்கள் போலத் தலையில் முக்காடுபோட்டுக்

கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டு தப்பினர். அன்று ஏற்பட்ட அப்பழக்கம் இன்று வரை நீடிக்கிறது. அவ்வளவு தான்'' என்றார்.

தென்னாட்டில் அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் அப்பழக்கம் இல்லை. அதற்குக் காரணம் இப் பகுதிக்கு முகலாயர் ஆதிக்கம் பரவாததே ஆகும்.

திரு. ''சிங்'' அவர்கள் எங்களை நோக்கி, ''உங்கள் நடை யாத்திரை சரித்திரத்தில் இடம் பெறும். தேசீய ஒருமைப்பாட்டுக்கு ஒரு பெரிய யாகம் செய்வது போலத் தியாகம் செய்து, இவ்வளவு பெரிய நடைப் பயணத்தை மேற் கொண்டுள்ளீர்கள். உங்கள் நோக்கம் நிறைவேற நானும் பிரார்த்திக்கிறேன்'' என்றார். அவரது பரந்த உள்ளம் எங்களை மிகவும் கவர்ந்தது.



121. நூற்றுப்பதினான்காம் நாள்

(கலக்கல்ஹியாநதி- பர்கோடா- காசிக் கோபுரம்- நாராயண்பூர்-கங்கைக் கால்வாய்-ராம்நகர்-தேவ கோட்டை அன்பர்கள் வரவேற்பு)

10-6-86 வெள்ளிக்கிழமையாகிய இன்று காலை 4½ மணிக்குப் புறப்பட்டோம். இன்று காசிக்கு மிக அருகில் உள்ள **ராம்நகர்** என்ற பிரதேசத்தை அடைய வேண்டும். கங்கையின் தென்கரையில் இந்த ஊர் உள்ளது. அதற்கு இன்று 15 மைல் நடந்தாக வேண்டும். வீட்டை நோக்கிச் செல்லும் மாடு எப்படித் தானே ஓடுகிறதோ அப்படி எங்கள் கால்கள் எங்கள் மனம் தூண்டாமலே ஓடின.

2 மைலில் **கலக்கல் ஹியாநதியில்** நீராடினோம். **கலஹட்** என்ற ஊரை அடைந்தோம். அவ்வூர் மக்கள் வழியை அடைத்து நின்று எங்கள் பாதங்களைத் தொட்டு வணங்கினர். அனைவரும் விபூதி பெற்ற பிறகே எங்களை நடக்க அனுமதித்தனர்.

"பர்கோடா'' என்ற ஊரை நோக்கிச் சென்றோம். ஊர் எல்லையில் எங்கள் சைக்கிள் ரிக்ஷா நின்றது. அது சாதாரணமாக மைல்கல் அருகில் தான் நிற்கும். ஆனால் இப்பொழுது நடுவழியில் நிற்பதனால் ஏதோ காரணம் இருக்கும் என்று எண்ணி விரைந்தேன்.

ரிக்ஷா ஓட்டும் அடைக்கப்பன் என்னிடம் ஓடி வந்து "அண்ணே! நாம் காசியை அடைந்து விட்டோம்.

இதோ பாருங்கள் **காசிக் கோபுரம்** தெரிகிறது,'' என்று கிழக்கு நோக்கித் தன் கையைக் காட்டினான். அங்கே காசிக் கோபுரம் தெரிந்தது. காசி இன்னும் இருபது மைலில் இருக்கிறது. இரண்டு நாள் கழித்துத்தான் அதனைத் திட்டப்படி அடைய வேண்டும். ஆனால் அதற்கு முன் இதோ காசிக் கோபுரம் தெரிகிறது! எங்கள் உணர்ச்சிகளை எங்களாலேயே அடக்க முடியவில்லை.

''விசுவநாதா! விசுவநாதா!'' என்று கூறிக் கொண்டே சாலையில் விழுந்து கோபுரம் நோக்கி மண்ணில் பணிந்து வணங்கினேன்; அழுதேன்; தொழுதேன்; மண்ணை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டேன்; முத்தமிட்டேன். என் தலைமீது ''அட்சதை!'' (மஞ்சள் அரிசி) போல மண்ணைத் தூவிக் கொண்டேன். எங்கள் குழுவினர் அனைவரும் மண்ணில் விழுந்து கோபுரம் நோக்கி வணங்கினர்.

அப்பொழுது எங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி அலை ஆரவாரம் செய்தது.

''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா!
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே''

என்று அப்பர் சுவாமிகள் பக்தி தோய்ந்த உள்ளத்தின் பரவச வெளிப்பாடுகளை விவரிக்கிறார்.

அது போல் நாங்களும் காசிக் கோபுரம் கண்டதும் பக்திப் பரவசத்தில் இருபது மைலுக்கு முன்னாயேயே கும்பிட்டுக் கூத்தாடினோம். பாடினோம்;

ஆடினோம். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தோம்.

இத்தகு ஒரு நிலையை ஷேக்ஸ்பியரின் **''இரண்டாம் ரிச்சர்டு''** என்ற நூலில் காணலாம். வெளிநாடு சென்றிருந்து பிறகு தன் நாட்டு மண்ணை மிதித்த இரண்டாம் ரிச்சர்டு என்ற அரசன், ஒரு கவிஞனாக இருந்ததால் அம்மண்ணைத் தொட்டு வணங்கினான்; முத்தமிட்டான்; அழுதான்; தொழுதான், ஆடிப் பாடினான். அவனது கவிதை வார்த்தைகளைக் கேளுங்கள்:

''நான் கடவுளின் பிரதிநிதி! என் தாயகத்து மண்ணில் நான் இருப்பதற்காக மகிழ்ச்சிக் கண்ணீர் வடிக்கிறேன்... உன்னை என் அன்புக் கைகளால் வணங்கிப் பெருமைப்படுத்துகிறேன். நீண்ட நாள் தன் குழந்தையைப் பிரிந்திருந்தால், மீண்டும் அதைக் கண்டதும் தாய் எவ்வாறு மகிழ்ச்சி கொண்டு, அணைத்து மகிள்வாளோ, அதைப் போல நானும் அழுகிறேன்; மகிழ்கிறேன்; வணங்குகிறேன்... உணர்ச்சி வயப்பட்டிருக்கும் என் செய்கைகளைக் கண்டு சிரிக்காதீர்கள். தேசப்பற்று என்னைக் கூத்தாடச் செய்கிறது; நாட்டுப்பற்று எனக்கு நம்பிக்கை ஊட்டுகிறது.'' என்று இரண்டாம் ரிச்சர்டு வர்ணித்தான். அந்த வர்ணனைகள் எங்கட்கும் பொருத்தமாக இருந்தன.

அளவற்ற உணர்ச்சிவசப்பட்டிருந்த நாங்கள் அப்பொழுது இன்னும் சிறிது எல்லை மீறியிருந்தால் பைத்தியமாக ஆகியிருப்போம்.

எந்தக் கோபுரத்தைக் காணவேண்டும் என்று நான்கு மாதத்திற்கு முன்பு புறப்பட்டோமோ, அந்தக் கோபுரம் இதோ எங்கள் கண்முன் தெரிகிறது! எங்கள் கண்களை எங்களாலேயே நம்ப முடியவில்லை. ''விசுவ

நாதா! எங்கள் ஆசையை நிறைவேற்றி விட்டாய்'' என்று மீண்டும் மண்ணில் விழுந்து தொழுது முத்தமிட்டேன். எங்கள் குழுவினர் அனைவர்க்கும் மிட்டாய் வழங்கினேன்.

இந்த இடத்தில் காசிக் கோபுரம் தெரிவது. பழநிப் பாதயாத்திரையில் பல மைல்களுக்கு முன்னால் **அடையாளவேல்** தெரிவது போன்ற காட்சியாகும்.

இருபது மைலுக்கு முன்பு இங்கு தெரியும் கோபுரம் காசியில் பல்கலைக்கழக வளாகத்தில் பிர்லா கட்டியுள்ள சலவைக்கல் விசுவநாதர் கோயிலின் மிகப் பெரிய கோபுரமாகும்.

''இக்கோபுரத்தை எப்படி நீ கண்டுபிடித்தாய்?'' என்று அடைக்கப்பனிடம் கேட்டேன்.

அதற்கு அவன் கூறிய பதில் வருமாறு : ''இந்த இடத்திற்கு நான் ரிக்ஷாவை ஓட்டி வந்த பொழுது ஒருவர் என்னை நிறுத்தினார். ரிக்ஷாவில் எழுதி இருந்த இந்தி வாசகங்களைப் படித்தார். ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''காசிக்கு'' என்றேன். உடனே அவர் இந்தக் கோபுரத்தைச் சுட்டிக் காட்டி ''இதோ! இதுதான் காசி விசுவநாதர் கோயில் கோபுரம்! நாங்கள் தினந்தோறும் காலையில் இதனை இங்கிருந்தே வணங்குவோம். நீங்கள் காசிக்கு வந்து விட்டீர்கள்'' என்றார். அதனால்தான் உடனே உங்களை நோக்கி ஓடி வந்தேன் செய்தி சொல்ல'' என்றான். அவனது பணியும் சிறப்பாக நிறைவேறி இருக்கிறது அல்லவா?

என் நினைவு பின்னோக்கிச் சென்றது. ஆந்திராவில் ஹைதராபாத் கடந்து காட்டுப்பகுதியில் ஓரிடத்தில் பகலுக்கு நாங்கள் மரநிழலில் தங்கி இருந்தபொழுது எங்கள் மத்தியில் ஓர் உரையாடல் நிகழ்ந்தது. அப்

பொழுது அடிக்கடி சைக்கிள்ரிக்ஷா பழுதாகி வந்த சமயம், அதனால் நாங்கள் மிகவும் அலுத்துப் போயிருந்தோம்.

எனவே நான் சொன்னேன், "ரிக்ஷா இனி ஓட முடியாது என்ற நிலை ஏற்பட்டால் என்ன செய்வது? அதற்காகப் பயணத்தை நிறுத்த முடியுமா?" என்றேன்.

மற்றவர்கள் "முடியாது" என்றனர்.

அப்படியானால் "காசிக்குச் செல்ல வழி என்ன?" என்று கேட்டேன். "நீங்களே சொல்லுங்கள்" என்றார்கள்.

அப்பொழுது நான் கூறியதாவது... "சைக்கிள் ரிக்ஷா ஓடாவிட்டால் நான் எனது பொருள்கள் உள்ள பையை நானே தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்து விடுவேன். காசி போய்த்தான் நிற்பேன். வழியில் **முக்தி** ஏற்பட்டாலும் மகிழ்ச்சிதான்" என்றேன்.

அதற்கு மற்றவர்கள், "நாங்களும் உங்களைப் போலப் பையைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்" என்றனர்.

அப்பொழுது நான் அடைக்கப்பனைப் பார்த்து "தம்பி! நாங்கள் நடந்தால் ரிக்ஷாவை என்ன செய்வது?" என்றேன்.

அதற்கு அவன், "அண்ணே! அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் நீங்கள் என்னைப் பற்றியோ, ரிக்ஷாவைப் பற்றியோ கவலைப்பட வேண்டாம். நீங்கள் பையைத் தூக்கிக் கொண்டு நடங்கள். நான் வழியில் வரும் ஏதாவது லாரிக்காரனைக் கெஞ்சி, காலில் விழுந்து, அழுது, ரிக்ஷாவை லாரியில் ஏற்றிக் கொண்டு எப்படியாவது காசிக்கு வந்து சேர்கிறேன்" என்றான்.

உடனே அன்று நான் என் இடத்தில் இருந்து எழுந்து சென்று அவனை அணைத்து, "அடைக்கப்பா! நல்லவார்த்தை சொன்னாய்! இனி எனக்குக் கவலை இல்லை. நீ எப்படியும் ரிக்ஷாவைக் கொண்டு வந்து சேர்த்து விடுவாய். இது புனிதமான ரிக்ஷா. இதுவும் நம்முடன் காசிக்கு வரவேண்டிய பாக்கியம் உடையது. இனி உன்னைப் பற்றியும் ரிக்ஷாவைப் பற்றியும் எனக்குக் கவலையே இல்லை. நாம் காசிக்கு நடந்து போய்ச் சேர்வது உறுதி!" என்றேன்.

அன்று நான் சொன்ன வார்த்தைகள் பலித்தன; ரிக்ஷாவை லாரி மூலம் அல்லாமல் காலால் ஓட்டியே கொண்டு வந்து சேர்த்த அடைக்கப்பனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த ரிக்ஷா இல்லாவிட்டால் நாங்கள் காசிக்கு எங்கள் திட்டப்படி வந்து சேர்ந்திருக்க முடியுமா என்பது ஐயமே! நாங்கள் நடந்து வந்து சேர வேண்டும் என்பது விசுவநாதரின் விருப்பம்! அதனை அவர் நிறைவேற்றி இருக்கிறார்.

பிறகு நாங்கள் தொடர்ந்து நடந்தோம். காலை 9 மணிக்கு **நாராயண்பூர்** (9மைல்) என்ற ஊரை அடைந்தோம். அங்கிருந்த திருக்குளத்தில் நீராடிச் சிவன் கோவிலில் வழிபாடு செய்து பகற்பொழுதை அங்கு தங்கிக் கழித்தோம். எங்கட்கு அங்கு தங்கவே மனம் கொள்ளவில்லை. என்றாலும் வைராக்கியமாக அங்கு தங்கினோம். **இதுவரை வைராக்கியமாக நடந்த நாங்கள், இப்பொழுது வைராக்கியமாகத் தங்கிஇருந்தோம்.** இது தான் முக்கியமான மனவேறுபாடு! அப்படி வைராக்கியமாக அங்கு தங்கி இராவிட்டால் இன்று இரவே நாங்கள் காசிக்கு நடந்து போய் விட முடியும். ஆனால் எங்கள் திட்டப்படி நாங்கள் நாளை மறுநாள் தான் காசிக்குப் போய்ச் சேர வேண்டும். எனவே

வைராக்கியமாக மனத்தைக் கட்டுப்படுத்தித் தங்க வைத்தோம்.

நாங்கள் நாராயண்பூரில் இருந்தாலும் எங்கள் உள்ளம் காசியில் வட்டமிட்டது; கங்கைக் கரையில் அலைபாய்ந்தது; விசுவநாதர் சந்நிதியில் விழுந்து தொழுதது! நாங்கள் ஒரு **பூசலார் நாயனாராகவே** மாறி நின்றோம்.

மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். இன்னும் 6 மைலில் ராம்நகர்—கங்கைக் கரை—அங்குள்ள **காசி அரசர்** அரண்மனை அருகில் நாங்கள் தங்கத்திட்டம். எங்கள் நிகழ்ச்சிநிரல் (புரோகிராம்) அப்படித்தான் சொல்கிறது. எப்பொழுதோ போட்ட திட்டம்! காசி விசுவநாதர் அதனை அப்படியே நிறைவேற்றிக் கொடுத் திருக்கிறார்! இதுதான் அவரது பெருங் கருணைத்திறம்!

நாராயண்பூர் எல்லையில் **கங்கைக் கால்வாயில்** நீராடிப் பயணம் தொடர்ந்தோம். ராம்நகர் எல்லையை 9½ மணி அளவில் நெருங்குகிறோம். அங்கு நாங்கள் எதிர்பாராதவாறு "திருத்தொண்டர்" ஆர். வயிரவன், கொட்டகை சிங்காரம், வில்சன் நடராசன் செட்டி, என் மனைவி நீலா, என் மகள் மங்கையர்க்கரசி மீனாட்சி, மற்றும் எங்கள் அனைவரின் உறவினர்கள் ஆக ஒரு பெரிய கூட்டமே எங்களை எதிர்பார்த்து எங்கள் சாலையின் எதிரில் நடந்து வந்து கொண்டிருக் கிறது. நாங்கள் அவர்களை அங்கு எதிர்பார்க்கவில்லை.

"அரோகரா!" "அரோகரா!" என்ற முழக்கம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தோம். தூரத்தில் இருந்து வைரவன் அவர்களும், மற்றும் பிறரும் ஓடிவந்து என் கால்களில் விழுந்து வணங்கி, அழுது, கட்டிப்பிடித்துப் பைத்தியம் போல் நிற்கின்றனர். எங்கள் யாருக்குமே பேச்சு வரவில்லை. கண்களில் இருந்து நீர் வடிகிறது.

ஒருவர் கண்ணீரால் ஒருவர் நனைந்தோம் என்பது உண்மை. இப்பொழுது இதனை எழுதும் போது கூட என் கண்களில் இருந்து கண்ணீர் வடிகிறது.

திருத்தொண்டர் வயிரவன் என்னை அணைத்த வாறு, ''கவிஞரே! சொன்னபடி—திட்டப்படி காசிக்கு நடந்து வந்து சேர்ந்து விட்டீர்கள். காசி விசுவநாதர் உங்கள் அருகிலேயே இருந்து உங்களைக் காப்பாற்றி அழைத்து வந்திருக்கிறார். நீங்கள் நிச்சயம் இப்பொழுது இப்பாதையில் வந்து கொண்டிருப்பீர்கள் என்று தைரிய மாக நடந்து வந்தோம். அது போல் நீங்கள் நடந்து வருகிறீர்கள். எப்பொழுதும் குறித்த காலம் தவறாமல் காரியம் செய்வீர்கள். அந்த நம்பிக்கைதான் நம்மைக் கூட்டி வைத்தது'' என்றார்.

''வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழுதின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே''

என்ற புறநானூறு இங்கே உண்மையாயிற்று.

வயிரவன் எங்களை இராமேஸ்வரத்தில் வழியனுப்பி வைத்தார். இப்பொழுது புகைவண்டி மூலம் ஏராளமான பக்தர்களைக் காசிக்கு அழைத்து வந்திருக் கிறார். அதுவும் எங்களை வரவேற்பதற்காக! அவர் முன் கூட்டியே ராம்நகர் சாலையில் எங்களைச் சந்தித்துப் போற்றுகிறார். அரவது கண்ணீர் என்னை நனைத்தது. இந்தக் காட்சி இராமபிரானும் பரதாழ்வாரும் 14 ஆண்டு கழித்து நந்தியம்பதியில் சந்தித்தது போல இருந்தது. வயிரவன் என் உடன்பிறவாச் சகோதரர் ஆகவே ஆகியிருந்தார். ஐயாயிரம் ஆண்டுகள் கழித்து மீண்டும் இராமாயணத்தைப் புதுப்பிக்கும் நிகழ்ச்சி யாகவே இந்த யாத்திரை அமைந்தது எனலாம்.

இதனை ஒரு ''இராமாயண யாத்திரை'' என்று மண்டபத்தில் வர்ணித்த அந்த ஏழை மீனவரை ஒரு குகனாகவே நான் கருதி வழிபடுகிறேன்.

ஹைதராபாத்துக்குப் பிறகு இரண்டு மாதம் கழித்து என் மனைவி நீலா என்னைச் சந்திக்கிறாள். அவள் கண்கள் நீரைப் பொழிகின்றன. அவள் என் பாதத்தை விட்டு நீண்ட நேரம் எழவில்லை. அவளைத் தலையில் ஆசீர்வதித்து இருகைகளால் தூக்கி நிறுத்தினேன். அவள் கண்களைத் துடைத்தேன். ''கவலைப் படாதே! விசுவநாதர் மீண்டும் என்னைக் காப்பாற்றி விட்டார்'' என்றேன். என் மகள் மங்கையர்க்கரசி மீனாட்சியையும் ஆசீர்வதித்தேன். என்னை வணங்கிய அனைவரையும் ஆசீர்வதித்தேன்.

என்னுடைய நிலைதான் எங்கள் குழுவில் உள்ள ஒவ்வொருவரின் நிலையும்—வரவேற்க வந்திருந்தவர்கள் எங்கள் குழுவினர் அனைவரையும் வணங்கி விபூதி பெற்றனர்.

பிறகு ''திருத்தொண்டர்'' வைரவன் ''இராமேஸ்வரா காசிவிஸ்வேஸ்வரா'' என்ற பாடலைப் பாட நாங்கள் திருப்பிப்பாட, எல்லோரும் ஒன்றாக நடந்து ''ராமநகர்'' காசி அரசரின் அரண்மனை முற்றத்தை அடைந்தோம். அங்கு எங்களுக்கு வரவேற்பாளர்கள் முறுக்கு, தேங்குழல், மணகோலம், முதலிய செட்டிநாட்டுத் தின்பண்டங்கள் தந்தனர். அவற்றை உண்டு அனைவருடனும் பேசி மகிழ்ந்தோம். கதை கதையாகச் சொன்னோம்.

காசி நகர விடுதிக்குவந்திருந்த எங்கள் கடிதங்களை எல்லாம் வயிரவன் வாங்கி வந்திருந்தார். ஏராளமான பாராட்டுச் செய்திகளும், தந்திகளும் வந்திருந்தன. வாசித்து மகிழ்ந்தோம். பிறகு

வைரவனைத் தவிர மற்ற வரவேற்பாளர்கள் அனைவரும் காசி நகரச்சத்திரத்திற்கு இரவு 9 மணி அளவில் திரும்பினர்.

நாங்கள் கங்கையின் தென்கரையில் நீராடிக் கங்கைக் கரையில் ஒரு சிறு கோவில் முற்றத்தில் இரவு தங்கினோம். எங்கள் குழுவினருடன் வைரவனும் தங்கியிருந்தார். அவர் எங்களுடன் காலால் நடக்காவிட்டாலும் மனத்தால் நடந்த மற்றொரு பூசலார் நாயனார் ஆயிற்றே.

நாளைவிடிந்தால் கங்கையைக் கடந்து காசி மண்ணில் கால்வைக்கப் போகிறோம். இது ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு இராமபிரான் கங்கையைக் கடப்பதற்கு முதல் நாள் குகன் பாதுகாப்பில் இருந்த நிலையை எனக்கு நினைவுபடுத்தியது. இராமபிரான் மறுநாள் குகனின் படகு மூலம் கங்கையைக் கடந்து தென்கரை ஏறினான். நாங்களோ மாளவியா பாலம் மூலம் கங்கையைக் கடந்து வடகரை ஏறப்போகிறோம்; இராமா! எல்லாம் உன் கருணையப்பா!

நான் இரவு தூங்கியதைப் பற்றிக் குறிப்பிடப் போவதில்லை. ஏனெனில் அன்று இரவு எங்களுக்குத் தூக்கம் வந்ததா! தூங்குவதற்கும் நேரம் இருந்ததா?

122. நூற்றுப் பதினைந்தாம் நாள்

(மாளவியாபாலம்-காசியில் நுழைதல்-பிரகலாத கட்டம்-சிறிய வீட்டுச் சிவன் கோயில்)

11-6-86 சனி காலை 4½ மணிக்குக் கங்கையில் நீராடினோம். அயோத்தியின் எல்லையில், நந்தியம்பதியில் இராமபிரானின் பாதுகையை அரியாசனத்தில் வைத்து. நின்று கொண்டே பதினான்கு ஆண்டுகள் அரசாட்சியை ஒரு தவம் போலச் செய்த பரதன், விடிகாலை மூன்று மணிக்கே சரயு நதியில் குளித்துப் பூஜைகள் செய்து சூரியோதயத்தின் போது ஆட்சி வேலைகளில் ஈடுபடத் தொடங்குவானாம். அதுபோன்ற தவத்தைத்தான் நாங்களும் இதுவரை செய்து வந்தோம். தினந்தோறும் காலை 4 மணிக்கே எழுந்து நீராடிப் பூசை செய்து நடக்கத் தொடங்கி விடுவோம்- அந்தத் தவம் பூர்த்தி பெறும் நாள் நாளை அல்லவா? அது காசி விசுவநாதர் கோயிலில் பூர்த்திபெறும்.

இன்று நாங்கள் கங்கைக்குக் குறுக்கே உள்ள மாபெரும் **மாளவியா பாலத்தைக்** காலையில் அடைய வேண்டும். ராம் நகரில் இருந்து மாளவியாபாலம் 5 மைலில் இருக்கிறது.

பாலத்தில் இருந்து காசி தொடங்குகிறது. அங்கிருந்து 5 மைலில் விசுவநாதர் கோயில் உள்ளது. காசியில் இன்று எங்காவது தங்கி இருந்து நாளைக் காலை கங்கையில் நீராடி எட்டு மணிக்கு விசுவநாதர் கோயிலுக்குள் நுழைந்து எம்பெருமானைத் தரிசிக்க வேண்டும். இதுதான் எங்கள் திட்டம்!

வைகறையில் நடக்கத் தொடங்கினோம். மக்கள் நெருக்கடி மிகுதியாக உள்ள ராம்நகர் சாலையில் நடந்தோம். ''இராமேஸ்வரா'' என்ற பாடலை வயிரவன் பாட, நாங்கள் திருப்பிப் பாடியவாறே 5 மைல் நடந்து புகழ்மிக்க மாளவியாப் பாலத்தை அடைந் தோம். இப்பாலமானது இந்திய தேசியத் தலைவர்களில் ஒருவராகிய ''மாளவியாவின்'' பெயரைத் தாங்கியிருக் கிறது. மாளவியாதான் காசியில் உள்ள ''காசி இந்து பல்கலைக் கழகத்தை'' நிறுவியவர்.

இந்தியாவில் உள்ள நதிகளிலேயே மிக ஆழ மானதும், புனிதமானதும் கங்கை நதிதான். அதன் நீரை ஒரு குடுவையில் அடைத்து வைத்தால், எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நீர் கெடாது; புழு தோன்றாது. மற்ற எந்தத் தண்ணீரும் சில நாட்களில் கெட்டுப் போகும்; புழு உற்பத்தியாகும்.

கங்கையில் நீராடினால் பாவங்கள் எல்லாம் தொலையும் என்று நம் புராணங்கள் கூறுகின்றன. கங்கைக் கரையில் முக்தி அடைய வேண்டும் என்று எத்தனையோ முனிவர்கள் முதல் பாமரர்கள் வரை தவம் செய்திருக்கின்றனர்.

கங்கைப் பாலத்தின் மீது மகிழ்ச்சியோடு நடந் தோம்.

காசி விசுவநாதருக்கு அரோகரா!
காசி விசாலாட்சிக்கு அரோகரா!
அன்னபூரணிக்கு அரோகரா!
கால பைரவருக்கு அரோகரா!
இராமநாதருக்கு அரோகரா!
பர்வத வர்த்தினிக்கு அரோகரா!
செந்தில் ஆண்டவனுக்கு அரோகரா!
பழநி ஆண்டவருக்கு அரோகரா!!
திருத்தணி ஆண்டவனுக்கு அரோகரா!!!

என்று முழங்கிக் கொண்டே பாலத்தைக் கடந்தோம். எங்கள் முழக்கம் விண்ணைப் பிளந்தது.

பாலத்தைக் கடந்து புனிதமான காசி மண்ணில் கால் வைத்தோம். கனமழை "சோ" என்று கொட்டத் தொடங்கியது. விண்ணவர்கள் பூமாரி பொழிவது போல் புனித மாரி பொழிந்து எங்களை வாழ்த்தி இருக்கிறார்கள். ஒரு சிறிய கட்டடத்தின் தாழ்வாரத்தில் நின்றோம். மழையின் சாரல் எங்கள் மீது படிந்து நாங்கள் தெப்பமாக நனைந்து விட்டோம். கங்கையின் தென்கரையில் விடிகாலையில் புனிதமான கங்கை நீரில் ஆடிய நாங்கள், கங்கையின் வடகரையில் இப்பொழுது மிகப் புனிதமான மழை நீரில் ஆடினோம். எல்லாம் அவள் அருள்!

உட்கார இடம் இல்லாமல் ஒரு சிறிய வீட்டின் தாழ்வாரத்தில் நாங்கள் மூன்று மணி நேரம் நின்று கொண்டே இருந்தோம். ஏனெனில் அங்கு நாங்கள் அனைவரும் உட்கார இடம் இல்லை.

"ஒருவர் படுக்கலாம்
இருவர் இருக்கலாம்
மூவர் நிற்கலாம்"

என்பார்கள். அத்தகு சிறிய இடத்தில் நாங்கள் அனைவரும் பரதாழ்வார் போல மூன்று மணிநேரம் நின்று கொண்டே தவம் செய்தோம்.

மழை ஒருவாறு நின்றது. ஹைதராபாத் அன்பர் திரு. அழகப்பன், என் தம்பி திரு. மு. இராம. இராசகோபால், அவன் மனைவி, மக்கள் ஆகியோர் அங்கு வந்து வரவேற்று எங்கள் பாதங்களில் விழுந்து வணங்கி ஆசி பெற்றனர். என் தம்பியின் கண்களில் இருந்து கண்ணீர் அருவி ஓடியது. காடு கடந்து வந்த

அண்ணனைக் கண்ட பரதன் அல்லவா அவன்! இராம பிரான் பிறந்ததும் **புனர்பூச நட்சத்திரம்.** அடியேன் பிறந்ததும் புனர்பூச நட்சத்திரம். ஆகவேதான் காட்டுக்குச் சென்று மீளும் பேறு அடியேனுக்கும் கிடைத்திருக்கிறது.

இன்று காசியில் இருந்து தேவ கோட்டைத் தலைமை நிலையத்துக்கும், தமிழக முதல்வருக்கும், மற்றும்பல நண்பர்களுக்கும் "காசியில் பத்திரமாக நுழைந்திருக்கிறோம்" என்று இருபது தந்திகள் அனுப்பச் செய்தோம். இத்தந்திகள் நாடு தழுவிய அளவில் எல்லாப் பகுதிகளுக்கும் பறந்தன.

மாலை 6½ மணிக்குப் புறப்பட்டு "இராமேஸ்வரா காசி விஸ்வேஸ்வரா" என்ற பாடலைப்பாடிக் கொண்டு காசி நகருக்குள் நுழைந்தோம். எங்கள் ரிக்ஷா முதலில் சென்றது. அதனை அடைக்கப்பன் தள்ளிக் கொண்டே சென்றான். நாங்கள் பாடிக் கொண்டே பின்னால் சென்றோம். வீதியெங்கும் மக்கள் கூட்டம் எங்களைப் பார்த்து, ஆரவாரத்தோடு வரவேற்றது. ஏராளமான மக்கள் எங்களை வணங்கி விபூதி பெற்றனர்.

விசுவநாதர் கோயிலுக்கு ஒரு மைல் முன்னால் உள்ள "பிரகலாத்காட்" பகுதியில் ஒரு வீட்டின் முன்னால் ஒரு சிறு சிவன் கோவில் இருக்கக் கண்டோம். அந்த விட்டுக்காரர் எங்களை "ராம் ராம்" என்று சொல்லி வரவேற்றார். உடனே நாங்கள் "சீதாராம்" என்று கூறியவாறு அவர் வீட்டின் முன் நின்றோம். வீட்டு முற்றத்திலும், கோயில் முற்றத்திலும் இன்று இரவு தங்கலாமா என்று கேட்டோம். அவர் மிகவும் மகிழ்ச்சியோடு "இதைவிட எனக்குக் கிடைக்கக் கூடிய பாக்கியம் வேறு என்ன இருக்கிறது? இராமேஸ்வரத்தில் இருந்து வருகின்ற நீங்கள் இங்கு ஒருநாள் இரவு தங்குவது அந்த

இராமபிரானே தங்குவது போல'' என்று கூறி ஓடியாடி எங்களுக்கு உதவி செய்தார்.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஹஸ்தினாபுரத்துக்குத் தூது சென்ற பொழுது **விதுரர்** வீட்டில் ஒருநாள் தங்கினார். அப்பொழுது எல்லையற்ற மகிழ்ச்சியோடு விதுரர் கிருஷ்ணபரமாத்மாவை நோக்கிக் கூறியதாவது ''கிருஷ்ணா! என் சிறு குடிலுக்கு நீ வந்திருக்கிறாயே! இது என்ன நீ பள்ளி கொண்டிருந்த திருப்பாற்கடலா? ஆதிசேடப் படுக்கையா? ஆல் இலையா? அல்லது வேதங்களா? இக்குடிலில் நீ தங்க இது என்ன தவம் செய்ததோ?'' என்று போற்றினார்.

அவ்வாறே இராமேஸ்வரம் காசி அடியார்களாகிய நாங்கள் தங்கிய சிறுகுடிலின் சொந்தக்காரரும் எங்களைப் போற்றிக் கொண்டாடினார். நாங்கள் தங்கி இருந்த பகுதி **''பிரகலாத கட்டம்''** ஆகும். பிரகலாதனைப் போன்ற பக்திமான் இதுவரை பிறந்ததில்லை. இப்பொழுது நாங்களும் பிரகலாதன் நிலையில் தான் இருந்தோம்.

நாங்கள் தங்கி இருந்த வீட்டுச் சிவன் கோவிலில் பஜனைகள் பாடி வழிபாடு செய்தோம். பஜனையில் வீதி மக்கள் பலர் கலந்து கொண்டு எங்களிடம் பிரசாதம் பெற்றனர். நகரவிடுதியில் இருந்து ஏராளமான அன்பர்கள் வந்து எங்களை வரவேற்று, மகிழ்ந்து, பாராட்டிச் சென்றனர்.

இரவு நீண்ட நேரம் கழித்து உறங்கலானோம்.

123. நூற்றுப் பதினாறாம் நாள்
சாதனை நிகழ்த்திய சரித்திர நாள்

(காசி விசுவநாதர் கோவிலில் வரவேற்பு—''காசிஸ்ரீ'' பட்டம்—நாட்டுக் கோட்டைச் செட்டியார் சத்திரத்தில் வரவேற்பு)

12-6-1983 ஞாயிறு விடிகாலையில் எழுந்து கங்கையில் நீராடிப் பூசைகள் செய்தோம். பிறகு சைக்கிள் ரிக்ஷா முன்னே செல்ல ''இராமேஸ்வரா! காசி விஸ்வேஸ்வரா'' என்ற புனிதப் பாடலைப் பாடியவாறு ஒருமைல் நடந்து காசி விசுவநாதர் கோயில் வளாகத்தை அடைந்தோம். அங்கு காசி நகர மக்களும், தேவகோட்டை காரைக்குடி முதலிய செட்டி நாட்டு ஊர்களில் இருந்து எங்களை வரவேற்பதற் காகவே வந்திருந்த மக்களும், மற்றும் பெங்களூர் ஹைதராபாத் கல்கத்தா முதலிய ஊர்களில் இருந்து வந்திருந்த அன்பர்களும் எங்களைக் காசி விசுவநாதர் கோயில் வளாகத்தில் வரவேற்றனர். அப்பொழுது உள்ளூர் அன்பர் ஒருவர் என்னைப் புகைப்படம் எடுத்திருக்கிறார். அதில் ஒரு பிரதி எனக்கு அவர் பிற்பாடு வழங்கினார். தலையில் நெற்றிப் பட்டத் துணி கட்டியவாறு நாங்கள் காசியில் நுழைந்த தோற்றம் அதில் உள்ளது.

காசி நாட்டுக் கோட்டைச் செட்டியார் நகரவிடுதி மேலாளர் திரு. **வினைதீர்த்தான் செட்டியார்** (புதுவயல்) அவர்கள் தலைமையில் எங்களை எல்லோரும் வரவேற்று

மேளதாளத்துடன் விசுவநாதர் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். திருத்தொண்டர் வயிரவன் எங்கட்கு மாலை சூட்டினார். "காசி விசுவநாதருக்கு அரோகரா விசாலாட்சிக்கு அரோகரா" என்று முழங்கிக் கொண்டு விசுவநாதர் கோயிலுக்குள் **காலை 8 மணிக்கு** நுழைந்தோம். அங்கு கோயில் நிர்வாக அதிகாரி திரு. **மிஸ்ரா** எங்களை உருக்கமாக வரவேற்றார்.

அப்பொழுது திரு. மிஸ்ரா என்னை நோக்கிக் கூறியதாவது: "என் அன்பான சோமசுந்தரம்! நீங்கள் ஐந்து மாதங்களுக்கு முன்பு எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தீர்கள். அதில் ஜூன் பன்னிரண்டாம் தேதி காலை 8 மணிக்கு நடந்து வந்து சேர்வதாக எழுதி இருந்தீர்கள். இன்று ஜூன் 12. இப்பொழுது சரியாக மணி எட்டு. இக்காலத்தில் விமானங்கள் கால தாமதமாக வருகின்றன. ரயில்கள் தாமதமாக வருகின்றன. பேருந்துகள் தாமதமாக வருகின்றன. ஆனால் 2000 மைல் நடந்து வந்த நீங்கள் சரியான நேரத்திற்கு வந்துள்ளீர்கள். கடவுள் மிகப் பெரியவர்" (God is great) என்று பாராட்டி எங்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

விசுவநாதர் திருமுன்பு எங்களை அமரவைத்து அனைவருக்கும் மாலை சூட்டினார். சங்கற்பம் செய்து வைத்தார். வேத விற்பன்னர்கள் வேத முழக்கம் செய்ய எங்கட்குக் கோயிலின் சார்பில் பரிவட்டம் கட்டி, உத்தரப்பிரதேச அரசாங்கத்தின் சார்பில் விசுவேஸ்வரர் முன்னால் "காசிஸ்ரீ" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

விசுவநாதர் சந்நிதிக்கு எங்களை அழைத்துச் சென்றார், சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து நாங்கள் வழிபாடு செய்ய ஆவன செய்தார். காசி விசுவநாதரைத் தொட்டு வழிபட்டோம். நாங்கள்

இராமேஸ்வரத்தில் இருந்து கொண்டுவந்திருந்த கோடி தீர்த்தத்தை எங்கள் கையால் விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்து எங்கள் பிரார்த்தனையை நிறை வேற்றினோம். கோடி தீர்த்தம் மட்டும் நாங்கள் அபிஷேகம் செய்யவில்லை. எங்கள் கண்ணீரும் அபிஷேகம் செய்தோம். அதுவும் கோடிபெறும். எங்கள் நீண்ட பிரார்த்தனையை—நெடிய தவத்தை — நான்கு மாத வேள்வியை—இனிதே நிறைவேற்றிக் கொடுத்த விசுவநாதருக்கு நன்றிகூறித் தொழுதோம். கோயில் நிர்வாகி திரு. மிஸ்ரா அவர்கள் எங்கட்குக் கோயில் துணியில் பிரசாதங்கள் வழங்கினார்.

கோயிலில் விசுவநாதர்—பார்வதி—சண்முகர்—அன்னபூரணி—இலட்சுமி நாராயணர்— அபிமுக்தேஸ்வரர் முதலிய தெய்வங்களை வழிபட்டோம்.

அன்னபூரணி திருமுன்பு சிவஞானதேசிகர் அருளிய கீழ்க்கண்ட அன்னப்பூரணிப்பதிகம் பாடி வழிபட்டோம்.

கன்னியாகுமரி யருள் காந்திமதி மீனாட்சி
கருணைபரு வதவர்த்தினி
கமலைப் பராசக்தி சிவகாம சுந்தரி
காழியுமை பிரமவித்தை

தன்னிகரி லாஞான அபயவர தாம்பிகை
தையல் அபிராமி மங்கை
தந்தஅகி லாண்டநாயகி அறம்வளர்த்தவள்
தன்னருள்செய் காமாட்சியிங்கு

என்னையாள் கௌரிஜ்வாலாமுகி உணாமுலை
இலங்கு நீலாயதாட்சி
எயிற்பிரம ராம்பிகை இலங்குபார் வதியாகி
எண்ணிலா நாமரூப

அன்னையாய்க் காசிமுதலாகிய தலத்துவிளை
யாடிடு விசாலாட்சியாம்
அண்டகோடிகள் பணிஅகண்ட பூரணியெனும்
அன்னபூரணியன்னையே.

பிறகு "காட்ஹவுலியா" (Godhowlia) என்ற பகுதியில் உள்ள **நாட்டுக் கோட்டைச் செட்டியார் நகரச் சத்திரத்திற்கு** எங்களை மேளதாளத்துடன் அழைத்துச் சென்றனர். அங்கு பூரணகும்ப மரியாதை செய்து, ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர். அங்குள்ள நகரேசுவரர், நகரேசுவரி, பாதாளஈஸ்வரர், சண்முகர் முதலிய தெய்வங்களை வழிபட்டோம்.

நகரவிடுதியின் சார்பில் விருந்து அளிக்கப் பட்டது. விருந்து முடிந்தபின் நடந்த பாராட்டுக் கூட்டத்திற்கு விடுதி மேலளார் திரு. வினைத்தீர்த்தான் செட்டியார் தலைமை தாங்கி எங்கள் அனைவருக்கும் நகரவிடுதி சார்பில் "**காசிதாசர்**" என்ற பட்டம் வழங்கி மாலை சூட்டினார்.

அப் பாராட்டுக் கூட்டத்தில் ஹைதாரபாத் அழகப்பன், புதுவயல் மு. இராம. இராசகோபால்; காரைக்குடி கம்பராமன், தேவகோட்டை கண. தியாகராசன் செட்டியார், முதலிய அன்பர்கள் எங்களைப் பாராட்டிப் பேசினர். எங்கள் குழுவினர் காசிஸ்ரீ சிதம்பரம் செட்டியார், "காசிஸ்ரீ" இராகவன், அடியேன் ஆகியோர் எங்கள் அனுபவங்களை விரித் துரைத்தோம்.

"திருத்தொண்டர்" வயிரவன் தெவகோட்டை யில் இருந்து அச்சிட்டுக் கொண்டுவந்திருந்த பாராட்டு மடலினை எங்களுக்குப் படித்தளித்தார். அந்தப் பாராட்டு மடல் வருமாறு:

சிவமயம்

ஸ்ரீ காசி விஸ்வநாதர் விசாலாட்சி துணை

பொற்கிழிக் கவிஞர்

திரு. அரு. சோமசுந்தரன் M. A., B. T., அவர்களின்

தலைமையில்

முதன் முதலாக இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு **17-2-1983**ஆம் நாள் யாத்திரை தொடங்கி **12-6-1983**ஆம் நாள் காசியினை அடைந்த அன்பர் களுக்குக் காசி மாநகரில் நடந்த வரவேற்பின் போது பாடிக் கொடுத்த

பாராட்டு மடல்

தேவ கோட்டைத் திருநகரில் வாழ்பவர்கள்
மேவுபுகழ் பக்தியினால் மேன்மையெல்லாம்
பெற்றவர்கள்!
பொற்கிழியை வென்ற புகழ்மிகுந்த நம்கவிஞர்
நற்றமிழைப் பாடுவதால் நலமெல்லாம் பெற்றவர்கள்!
அருசோவின் தலைமையிலே அன்பர் பதின்மூவர்
கருமேகம் நின்றாடும் காசிநடை மேற்கொண்டார்!
மாசுமரு வில்லாத மனக்கினிய அடியவர்கள்
காசியினை நோக்கிக் கடும்பயணம் செய்தார்கள்!
மன்னுபுகழ் மாசியிலே மாண்புடைய ஐந்தாம்நாள்
எண்ணற்றோர் வாழ்த்துரைக்க இவர்கள்நடை
தொடங்கியது.
ஆறுபடை வீட்டுக்கும் ஆண்டு பலவாக
வீறுநடை போட்டெவரும் வியப்பெய்தி வாழ்த்துரைக்க,
காசிப் பயணம் கடும்பயணம் என்றமொழி
தூசெனச் செய்து துணிவைநிலை நாட்டியுள்ளார்!
ஆறுபடை வீட்டுக்கும் அழகாய் நடந்தவர்கள்
வேறுபா டில்லா வேட்கை மிகுதியினால்

அன்பரெல்லாம் வழிநெடுக அட்டியின்றி உதவிடவே
தன்பலமாய் எண்ணாமல் தமிழ்பாடி நடந்தார்கள்!
பல்வேறு ஊர்வாழும் பதின்மூன்று நல்லடியார்
கல்முள்ளைப் பாராமல் காசிக்கே நடந்தார்கள்!
காசிமுதல் குமரிவரை களித்திருக்கும் மக்களெலாம்
வாசியுடன் வாழுதற்கே வழிநடையை
மேற்கொண்டார்!
இமயத்தில் ஏறுவதும் இவர்செயலும் ஒன்றேதான்
சமயத்தில் பற்றுடையார் தவம்செய்த புண்ணியர்கள்!
நூறோடு பதினாறு நுவலரிய நாளிவர்கள்
ஆறோடும் காசிக்கு அவனருளால் நடந்தார்கள்!
சரித்திரத்தில் வாழுகிற சாதனையைப் புரிந்தவரே
விரிபுகழைப் பெற்றென்றும் விளங்கிடுக பூவுலகில்!
இமயமுதல் குமரிவரை இவர்செயலைப் பாராட்ட
நமதருமை நண்பர்களை நம்பெருமான்
தொண்டர்களை
எல்லா நலத்தோடும் இறைவன் அருளோடும்
பல்லாண்டு வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகிறேன்!

ருத்ரோத்காரி வருஷம்
வைகாசி மாதம் 29 தேதி
12-6-1983

அன்புடன் வழங்கும்
திருத்தொண்டர் R. வைரவன்
தேவகோட்டை

பாவாக்கம்: கவிஞர் மு. இளங்கோவன்.

ஃ ஃ ஃ

மாலையில் கங்கைக்குச் சென்றோம். நாங்கள் இராமேஸ்வரத்தில் இருந்து கொண்டுவந்திருந்த கடல் மணலைக் கங்கையில் கரைத்து நீராடினோம். பிறகு கங்கைநீர் எடுத்துச்சென்று விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து மகிழ்ந்தோம்.

கங்கைக் கரையில் முடியிறக்கி மீண்டும் கங்கையில் நீராடினோம். இரவு 9 மணிக்கு விசுவநாதர்

கோயில் அர்த்தஜாமச் சிறப்பு பூசைக்கு சென்று மனம் குளிர விசுவநாதரை வணங்கி வந்தோம். இப்படியாக எங்கள் நெடுங்காலப் பிரார்த்தனை இனிதே நிறைவேறியது.

காசி நகரச்சத்திரத்தில் நாங்கள் எவ்வளவு நாட்கள் தங்கியிருக்கிறோமோ அவ்வளவு நாட்களுக்கு எங்களுக்குச் சத்திர சார்பில் விருந்தளிக்க அதன் மேலாண்மைக் கழகம் ஆவன செய்திருந்தது. அக்கழகத்தின் தலைவர், செயலர் மற்றும் உறுப்பினர்கட்கு எங்கள் அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டோம். எங்களைக் காணவும் வரவேற்கவும் வந்திருந்த அன்பர்களோடு கதை கதையாகப் பேசி மகிழ்ந்தோம்.

மகிழ்ச்சிக் கடலில் நாங்கள் மிதந்த அந்தச் சரித்திர நாள் எங்கள் வாழ்வின் மிக உன்னதமான நாளாகும்!

அப்பொழுது எங்கள் குழுவில் ஒருவரும், என் உடன் பிறவாச் சகோதரரும் ஆகிய ''காசிஸ்ரீ'' இராகவன் அவர்கள் என்னை நோக்கிக் கூறியதாவது... ''கவிஞரே! பாரதியார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு பாடினார். அவரது பாடல்கள் பல வருடங்கள் கழித்தே பலித்தன. ஆனால் நீங்கள் பாடுவதும் சொல்வதும் உங்கள் கண் முன்னாலேயே பலிக்கிறது.

''காசி முதல் குமரி வரை உனது எல்லையே; கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே'' என்று எழுதினீர்கள். அது உங்களாலேயே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உங்களோடு நாங்களும் நடந்துவர, அந்தக் கனவு உங்கள் கண் முன்னாலேயே பலித்திருக்கிறது. இனி ஆண்டாண்டுக் காலம் காசிக்கு நடப்பவர்க்கெல்லாம் உங்கள் பாடல் உறுதுணையாக நிற்கும். இந்தப்

பயணத்தை விரைவில் புத்தகமாக வெளியிடுங்கள்'' என்றார். நான் ''சரி'' என்று ஒப்புக்கொண்டேன்.

நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரைக் குழுச் செயலர் திரு. **சுப. சின்னக்கருப்பன்** அவர்களும் விமானம் மூலம் வந்து காசியில் எங்களை வரவேற்றார்.

நாங்கள் இன்று காசிக்கு இனிதே வந்து சேர்ந்த எங்கள் பயண விபரச் செய்தி இன்றைய மாலை இந்திப் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் வெளிவந்தது. ''ராய்ட்டர்'' செய்தி நிறுவனம் இச்செய்தியை இந்தியா முழுவதும் பரப்பியதால் நாடு முழுதும் உள்ள எல்லா மொழிப் பத்திரிகைளிலும், இச்செய்தி உடனே வெளி யாயிற்று. வானொலியிலும் இச்செய்தி ஒலிப்பரப்பப் பட்டது.

தினமணி 14-6-1983 சென்னை, மதுரைப் பதிப்பில் முதல் பக்கத்தில் வெளிவந்த செய்தி வருமாறு:

ராமேஸ்வரம் - காசி
பாதயாத்திரை முடிவு

வாரணாசி: ஜுன் 13:

ராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட பாத யாத்திரை கோஷ்டி இங்கு வந்து சேர்ந்த பொழுது உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ராமேஸ்வரத்தில் இருந்து புறப் பட்ட 13பேர் குழு 2000 மைல் பாதயாத்திரை செய்து நேற்று இங்குள்ள காசி விஸ்வநாதர் கோவிலுக்கு வந்த பொழுது பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிப்ரவரி 17ஆம் தேதி ராமேஸ்வரத்தில் புறப்பட்ட இந்த கோஷ்டிக்கு ஆசிரியர் சோமசுந்தரம் (45 வயது) தலைமை தாங்கினார்.

கர்நாடகம், மகாராஷ்டிரம், மத்தியப்பிரதேசம் உத்தரப்பிரதேசம் வழியாகக் காசியை அடைந்த இவர்கள் ரயில் மூலம் தமிழ்நாட்டிற்குத் திரும்புவார்கள்.

ஃ ஃ ஃ

சைவ நாயன்மார்கள் 63 பேர்; வைணவ ஆழ்வார்கள் 12 பேர் என்பது உலகப் பிரசித்தம். அதுபோல் காசி அடியார்களாகிய **''காசிஸ்ரீ 13 பேர்'' என்பதும் உலகப் பிரசித்தமாகும். இந்த யாத்திரையில் பங்கு கொண்ட காசிஸ்ரீ பதின்மூன்று பேரின் பெயரும் புகழும் விசுவநாதர் பேரருளால் உலகம் உள்ளவும் நிலைபெறும்** என்பதில் ஐயமில்லை.

124. காசியின் சிறப்பு

இந்தியாவின் மிகப் புராதனமான நகரம் காசியே ஆகும். இதுபற்றி வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய அனைத்திலும் குறிப்புக்கள் உள்ளன. காசியை முக்திஸ்தலமாக எல்லா நூல்களும் கூறுகின்றன. எனவேதான் பக்தித் துறையில் இருப்பவர்கள் எல்லாம் அதனைப் பெரிதும் கொண்டாடுகின்றனர்.

கங்கைக் கரையில் இருக்கும் காசி கல்விக்குப் பெயர் போனது. அதனை ஒரு கல்விக் களஞ்சியம் என்று கூறலாம். எனவேதான் கல்வித் துறையில் கரைகண்ட வித்தகர்கள் எல்லாம் கங்கைக் கரையில் உள்ள காசிக்குப் படையெடுத்தனர்.

வேதங்களை எல்லாம் தொகுத்த **வேத வியாசர்** காசியில் நின்று கொண்டு ''திருமாலே பரம் பொருள்'' என்று கையை உயர்த்திக் கூறினாராம். உயர்த்திய கை மடக்க வராமல் அப்படியே நின்று விட்டதாம். பிறகு வியாசர் ''சிவனே பரம் பொருள்'' என்று சொன்னாராம். அப்பொழுதுதான் அவரது கை மடக்க வந்ததாம். இந்தக் குறிப்பு **கந்தபுராணத்தில்** உள்ளது.

பீகார் மாநிலத்தில் ''புத்த கயா'' என்ற இடத்தில் ஓர் அரச மரத்தின் கீழே ''ஞானோதயம்'' பெற்றர் **புத்தர்** தன் சமயத்தைப் பரப்பக் காசிக்குத்தான் வந்தார். அங்கு வந்து தன் கருத்துக்களைப் பரப்பி, கல்விமான்களோடு வாதிட்டு, காசிக்கு அருகில் உள்ள சாரநாத்தில் சங்கம் நிறுவினார்.

சமண சமயத் தீர்த்தங்கரர்கள் எல்லாம் காசியிலும், சாரநாத்திலும் தங்கள் கருத்துக்களைச் சொல்லிய பிறகுதான் மற்ற இடங்களுக்குப் பரப்பினர்.

பிற்காலத்தில் முஸ்லிம் மதமும் தன் கருத்துக்களைப் பரப்பக் காசியில் நுழைந்தது. மென்மையாக மற்ற மதங்கள் காசியில் நுழைந்த நிலைமை மாறி, வன்மையாக முஸ்லிம் மதம் நுழைந்தது. ஔரங்கசீப் காலத்தில் காசி விசுவநாதர் கோயில் இடிக்கப்பட்டு அங்கு ஒரு மசூதி கட்டப்பட்டது. விசுவநாதர் சிலை ஒரு கிணற்றில் போடப்பட்டது. இப்பொழுது அந்தக் கிணறு கூடப் பூசனைக்கு உரியதாகி விட்டது.

ஔரங்கசீப்புக்குப் பிறகு முஸ்லிம் மதம் தன் வன்மையைக் கைவிட்டது. காசி எல்லா மதங்களையும் ஜீரணிக்கும் ஆற்றல் பெற்று வளர்ந்தது.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் காசியில் ஆங்கிலக் கல்வி நுழைந்தது. கிறிஸ்துவ மதம் அலங்கார, ஆடம்பரத்தோடு காசியில் அடியெடுத்து வைத்தது. காசி அதனையும் ஜீரணித்தது.

நவீன இந்தியாவை உருவாக்க வேண்டுமானால் புதிய ஆங்கில உயர் கல்வி இந்தியர்களுக்குத் தேவை என்று உணர்ந்த **பண்டித மதன் மோகன் மாளவியா** அவர்கள் காசியில் ''காசி இந்து பல்கலைக் கழகத்தை''த் தோற்றுவித்தார்.

இப்பொழுது காசியில் நவீனத் தொழில் நுட்பக் கல்வி எல்லாம் கற்பிக்கப் படுகிறது. இப்படிக் காசி ஒரு கல்விக் களஞ்சியமாக (Seat of Learning) எக்காலத்திலும் இருந்து வருகிறது.

இந்தியாவின் எந்தப் பகுதியைச் சேர்ந்த மகானும் காசி சென்று முத்திரை பெற்றால்தான்

இந்திய மக்களின் அங்கீகாரம் பெற்றதாக ஆகும். எனவே தான் எல்லாப் பகுதி மகான்களும், அறிவாளிகளும் காசிக்குச் சென்றார்கள். தம் கருத்துக்களைப் பரப்பினார்கள்.

பழங்காலத்தில் **அப்பர் சுவாமிகள்** காசிக்கு நடந்துச் சென்றார். அங்கிருந்து பிறகு கயிலைக்கு நடந்தார்.

ஆதிசங்கரர் மலையாளத்தில் ''காலடியில்'' பிறந்தார். இந்தியாவில் அவரது காலடி படாத இடமே இல்லை. அவர் காலடியில் இருந்து காசிக்குச் சென்றார்; பிறகு காஷ்மீரத்துக்கும் சென்றார்; அவர்தான் இந்தியாவின் (காஞ்சி) தெற்கு, (கேதார்) வடக்கு, (பூரி) கிழக்கு, (துவாரகை) மேற்கு, (சிருங்கேரி) மத்தியம் ஆகிய பகுதிகளில் சங்கர மடங்களை நிறுவினார். காசியில் இந்து மதம் எக்காலத்திலும் தளர்ந்ததில்லை. அங்கே தான் எல்லோரும் புத்துணர்ச்சி பெற்று, மற்ற இடங்களுக்கு அந்த உணர்வைப் பரப்பினர். அந்த உணர்வு பிற இடங்களிலும் தளராமல் இருப்பதற்காகவே ஆதிசங்கரர் எல்லாப் பகுதிகளிலும் மடங்களை நிறுவினார்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு **ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்** தமிழ்நாட்டில் இருந்து நடந்தே காசிக்குச் சென்றார். அங்கிருந்து ஆட்சிபுரிந்த நவாப்புக்குத் தன் ஆற்றலை வெளிக்காட்டினார். புலியின் மீது சவாரி செய்து அரசவை மண்டபத்திற்குள் சென்றார். அவரைக் கண்டதும் சிங்காசனத்தில் இருந்த நவாப் அஞ்சினான். குமர குருபரருக்குக் காசியில் மடம் கட்ட ஓரிடம் தேவை. அதனை அறிந்த நவாப் கருடன் வட்டமிட்ட ஒரு பெரிய பகுதியைக் கங்கைக் கரையில் மானியமாக வழங்கினான். அங்கே கேதாரகட்டம் அருகில் குமரகுருபரர் ''குமாரசாமி மடம்'' நிறுவித்

தமிழ்க் கல்வியையும், இலக்கியத்தையும், சமயத்தையும் பரப்பினார்.

குமரகுருபரர் மாலையில் தினம் கம்பராமாயணத்தைக் காசி மக்களுக்கு இந்தியில் சொல்லியதாகவும், அதனைக்கேட்டதால்தான் **துளசி தாசருக்குத்** துளசி ராமாயணம் இந்தியில் பாடவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்ட தாகவும், துளசி ராமாயணத்தில் கம்ப ராமாயணத்தின் சாயல் படிந்ததாகவும் சொல்லப்படுகிறது.

பாரதியார் காசியில் கல்விகற்றார். அவர் தமிழ் நாட்டுக் காஞ்சியையும், வடநாட்டுக் காசியையும் நன்கு அறிந்தவர். இரண்டுமே ''கல்விக் களஞ்சியங்கள்'' என்பதைப் புரிந்து கொண்டார். எனவே அவரது பாடலில்

''காசி நகர்ப் புலவர் கூறும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்''

என்று காசிக்கும் காஞ்சிக்கும் இடையே ஒரு வானொலித் தொடர்பை (Transmission) ஏற்படுத்தச் சொன்னார்.

காசி மண் **மிகப்** புனிதமானது. அங்கு எல்லா இடங்களிலும் சிவலிங்கங்களாகவே உள்ளன. புண்ணியம் செய்தவர்கள்தான் இங்கு பிறக்கிறார்கள்; இங்கு முக்தி பெறுகிறார்கள் என்பது பெரும்பாலான மக்களின் நம்பிக்கை.

காசி **விசுவநாதர் கோயில்** எத்தனையோ யுகம் யுகமாக இருந்து வருகிறது. இப்பொழுதுள்ள சிறிய அமைப்புள்ள கோயில் நாராயணபட்டர் என்னும் குருக்களின் கனவில் விசுவநாதர் தோன்றிக் கூறிய முறையில் கட்டப்பட்டதாகும். இங்குள்ள சிவலிங்கத்தின் முடியில் அர்ச்சுனன் அடித்த வில் தழும்பினைக் காணலாம்.

விசுவநாதருக்கு உச்சிக்கால பூசையின் பொழுது பல்வகைத் திரவியங்களால் அபிஷேகம் செய்யப் படுகிறது. அப்பொழுது ஆறுதட்டுக்களில் சுத்த அன்னம், குழம்பு முதலியன நைவேத்தியம் செய்யப் பெறுகின்றன.

இரவு 7 மணி முதல் 8 மணிவரை ''சப்தரிஷி பூசை'' நடைபெறுகின்றது. அச்சமயம் ஏழு அந்தணர்கள் வேதபாராயணம் செய்கின்றனர். பாராயணம் முடிந்ததும் ''தமருகம்,' முழங்கக் கால பைரவருக்குப் பூசை செய்யப் பெறுகிறது. பைரவர் பூசை முடிந்ததும் பக்தர்கள் விசுவநாதரைத் தொட்டு வணங்க அனுமதிக்கப்படுகின்றனர். பூசை நேரம் தவிர மற்ற நேரங்களில் விசுவநாதரை எல்லோரும் தொட்டு வணங்கலாம்.

இரவு **அர்த்த சாமப் பூசை** ஒன்பது மணிக்கு நடைபெறுகிறது. இதுதான் மிக முக்கியமான —அலங்கார பூசையாகும். அபிஷேகங்கள் முடிந்ததும் அலங்காரம் செய்து, நாகாபரணம், குடை சாத்துகின்றனர். இந்தக்கோலத்தில் விசுவநாதரைத் தரிசிக்கக் கோடிக் கண்கள் வேண்டும்.

தினந்தோறும் மதியமும், இரவும் காசி நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தில் இருந்து விசுவநாதர் கோவிலுக்குப் ''பண்டா'' தலைமையில் ''சம்போ'' ஊர்வலம் மேள தாள நாதசுர முழக்கத்துடன் வரும். பூசைக்குரிய எல்லா அபிஷேக ஆராதனைப் பொருள்களும் விடுதியில் இருந்து பயபக்தியுடன் ஏந்திச் செல்லப் பெறும். இவை சுவாமிக்கு நூறு ஆண்டுகளுக்கு மேலாக நகரத்தார்களால் வழங்கப் பெறுகின்றன. இது ஒன்றே நகரத்தார்களின் தெய்வ பக்திக்கும், நிர்வாகத் திறனுக்கும் நல்ல எடுத்துக்காட்டாகும்.

காசியில் நகரத்தார் சத்திரத்தில் மட்டுமே மேளம், நாதசுரம் இருக்கிறது. விசுவநாதருக்கு மேள தாள நாதசுரத்தோடு தமிழ்நாட்டுப் பாணியில் பூசை நடக்க ஆவன செய்தவர்கள் நம் நகரத்தார்களே.

விசுவநாதர் கோயிலில் பூசை முடிந்ததும் **விசாலாட்சி** கோயிலில் மேளதாள நாதசுர முழக்கத்துடன் பூசை நடைபெறும். இக்கோயிலைக் கட்டி, விசாலாட்சி சிலையினைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தவர்களும் நகரத்தார்களே. பல ஆண்டுகட்கு முன்பு விசாலாட்சி சிலையினைச் செய்து வழங்கியவர்கள் தேவகோட்டை திரு. ப. ராம. செ. இராமநாதன் செட்டியார் அவர்கள் ஆவார்.

விசுவநாதர் கோயில் அருகே **அன்னபூரணி** கோயில் இருக்கிறது. இங்கு எழுந்தருளி இருக்கும் அன்னபூரணி உலகத்து உயிர்களுக்கெல்லாம் அன்னம் வழங்குபவளாக இருக்கிறாள்.

அன்னபூரணி கோயிலுக்கு அருகில் **துண்டிராஜ விநாயகர் கோவில்** இருக்கிறது. இச்சிறிய கோவில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. செந்தூர நிறம் உடைய இவ்விநாயகரைத் தரிசித்தே விசுவநாதர் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

''துர்க்காகுண்டு'' என்னும் குளத்தின் அருகில் **''கௌடிபாய் திருக்கோயில்''** உள்ளது. கௌடிபாய் விசுவநாதரின் சகோதரி முறையினள். விசுவநாதரை எல்லோரும் தொட்டு வழிபடுவதை அவள் விரும்பவில்லை. ஒருநாள் அவள் அதுபற்றி விசுவநாதரிடம் முறையிட்டாள். உடனே விசுவநாதர், ''என் பக்தர்களை நீ அவமதித்ததால் சேரியில் வாழ்வாய்'' என்றார். பிறகு அவள் வருந்திச் சாப விமோசனம் கேட்க, ''என்னை வழிபடும் பக்தர்கள் உன்னையும் வழிபடுவர்.

அவர்கள் பலனில் ஒரு சோழி அளவு உனக்குக் கிடைக்கும். அதனால் உன் பாவம் நீங்கும்'' என்றார். அதன்படி விசுவநாதரை வணங்கிய பக்தர்கள் சோழி போட்டுக் கௌடிபாயை வணங்கிச் செல்கின்றனர்.

காசியில் வழிபட்டால் தொடர்ந்து சென்று வழிபட வேண்டிய சந்நிதிகள் பத்து ஆகும். அவை :

1. **விஸ்வேசம் :** விசுவநாதர் சந்நிதி

2. **மாதவம் :** காசியில் பஞ்சதீர்த்த கங்கா கட்டம் அருகில் விந்து மாதவர் எழுந்தருளி இருக்கிறார். காசியில் விந்து மாதவர்; இராமேஸ்வரத்தில் சேது மாதவர்; அலகாபாத்தில் வேணி மாதவர்.

3. **துண்டி :** துண்டி விநாயகர்.

4. **தண்டபாணி :** விசுவநாதர் கோயிலுக்கு வடகிழக்கில் ஒருமைலில் சிறிய கோயில் தூணில் தண்டபாணி எழுந்தருளி இருக்கிறார்.

5. **பைரவம் :** தண்டபாணி அருகில் கால பைரவர் எழுந்தருளி இருக்கிறார். இவர்தான் காசியின் காவல் தெய்வம். கருப்புக் கயிறு இங்கே பிரசாதம் ஆகும். காலபைரவரை வணங்கித்தான் காசியை விட்டுப் புறப்படவேண்டும்.

6. **வந்தே காசி :** பைரவர் கோயில் அருகே சிறிது தொலைவில் மேற்குத் திக்கில் ஆலமரத்தின்கீழ் ஒரு தேவி கோயில் அமைந்துள்ளது. அதுவே வந்தே காசி ஆகும்.

7. **குகா :** வந்தேகாசி அருகில் மேற்கே ஒரு குகை—சிறு கோயில் — சிவலிங்கம்— உளது. இதுவே குகா ஆகும்.

8. கங்கா : பகிரதன் தவம் செய்து கங்கையைப்பூமிக்குக் கொண்டு வருமுன் இருந்த திருக்குளம் இது. இக்குளக்கரையில் மூன்று தேவியர் உளர்.

9. பவானி : அன்னபூரணி கோயில்

10. மணிகர்ணிகா : கங்கையில் உள்ள புனித கட்டம்.

காசியில் விசுவநாதர் கோயிலுக்குத் தெற்கே உள்ள கோயில்களுக்குச் சென்று வழிபட்டால் அதனைத் "தட்சண யாத்திரை" என்பர். அப்படித் தட்சண யாத்திரையில் வழிபட வேண்டிய கோயில்களாவன:

1. திலபாண்டீஸ்வரர் கோயில்
2. சிந்தாமணி விநாயகர் கோயில்
3. கேதாரநாதர் கோயில்
4. அனுமார் கோயில்
5. வராகியம்மை கோயில்
6. துர்க்கை கோயில்
7. கௌடியம்மை கோயில்
8. அனுமந்தர் கோயில் ஆகியன.

நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம்

இது நூறு ஆண்டுகட்கு முன்புவங்காளம், பர்மா முதலிய பிரதேசங்களில் கொண்டு விற்கச் சென்ற நகரத்தார்களால் நிறுவப் பெற்றது. அவர்கள் கடையின் வருமானத்து மகமையினால் (வரி) இப்பணி தொடர்ந்து நடத்தப் பெற்றது. முன்பு சத்திரத்தில் யாத்திரிகர்கட்கு அன்னதானம் செய்யப்பெற்றது. ஆனால் இப்பொழுது அன்னதானம் செய்ய இயலாது.

விசுவநாதர்— விசாலாட்சி கோயில் பூசைக்கு அபிஷேக ஆராதனைப் பொருள்கள் நகரச் சத்திரத்தில்

இருந்து "சம்போ" ஊர்வலமாகத் தினம் அனுப்பப் பெற்றுச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன.

பாலாபிஷேகத்திற்கு நகரத்தார்கள் "பால் கட்டளை" வைத்துள்ளார்கள். இக்கட்டளைப் பால் தினந்தோறும் சுவாமி— அம்மனுக்கு அபிஷேகம் செய்யப் பெறுகிறது.

சத்திரத்தில் இருந்து விலை உயர்ந்த கோரோசனை, சந்தனம் முதலிய திரவியங்கள் அபிஷேகத்திற்கு அனுப்பப் பெறுகின்றன.

காசி நகரச்சத்திரம் செய்யும் பணிக்கு ஈடு இணையே கிடையாது. இதன் பலன், புண்ணியம் நகரத்தார்களுக்கு எத்தனையோ தலைமுறைகளுக்கு நிற்கும்.

125. மூன்றாம் கட்டம்
(காசியில் இருந்து இராமேஸ்வரம் வரை)

காசியில் முடியிறக்கும் பழக்கம் இதுவரை கிடையாது. ஆனால் நடந்து சென்ற நாங்கள் புதிய பழக்கத்தினை ஏற்படுத்தினோம். முடியிறக்கக் காணிக்கைச் சீட்டு என்று எதுவும் காசி விசுவநாதர் கோயிலில் இல்லை. நாங்கள் அதுபற்றிக் கோயில் நிர்வாக அதிகாரி திரு. சர்மாவிடம் கூறினோம். உடனே அவர் எங்களை ஆலோசித்து "முடிக்கட்டணம் ரூபாய் இரண்டு" என்று அறிவித்து முதன் முதலாக அடியேனுக்கு முதல் முடிக் காணிக்கைச் சீட்டு வழங்கினார். பிறகு எங்கள் குழுவினர்களுக்கு முடிச்சீட்டு வழங்கினார். இப்படி ஒரு புதிய பழக்கத்தை நாங்கள் காசியில் ஏற்படுத்தியது இறையருளே!

13-6-83 அன்று கங்கையில் நீராடித் துடி விநாயகர், காசி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் ஆகிய எல்லாத் தெய்வங்களையும் வணங்கினோம்.

இன்று இரவு நகரவிடுதியில் எங்கள் பொருட்டுத் தங்க விசாலாட்சி எழுந்தருளச் செய்து சிறப்பு ஆராதனை செய்வித்தனர். பொதுவாக ஐப்பசி மாதம் தீபாவளித் திருநாள் சமயம் மிட்டாய்த் திருவிழாவின் பொழுது தான் நகரவிடுதியில் தங்க விசாலாட்சியை எழுந்தருளச் செய்வது மரபு. ஆனால் காசிஸ்ரீக்கள் ஆகிய எங்கள் வருகையைச் சிறப்பிக்கும் பொருட்டு இன்று தங்க தங்க விசாலாட்சியை நகரவிடுதி மேலானர் எழுந்தருளச்

செய்தார். **தங்க விசாலாட்சியைக் காணக் கோடிக் கண்கள் போதா!**

14-6-83 அன்று நாங்களும், தேவகோட்டையில் இருந்து வந்திருந்த அன்பர்களும் ஒரு பேருந்து மூலம் **அலகாபாத்** சென்றோம். அங்குள்ள நம் நகர விடுதி மேலாளர் திரு. செந்தில் நாதன் செட்டியார் (தேவ கோட்டை) அவர்களின் துணையோடு கங்கை, யமுனை, சரஸ்வதிஃசங்கமம் ஆகும் இடத்திற்குப் படகில் சென்று நீராடி மகிழ்ந்தோம்.

யமுனைக் கரையில் உள்ள அசோகர் கோட்டைக்குள் சென்று அங்குள்ள ஈசுவரன் கோயிலில் இறை வணங்கினோம். அங்குள்ள பழங்கால முனிவர் களின் சிலைகளைக் கண்டு வியந்தோம்.

ஜவஹர்லால் நேருவின் ஆனந்தபவனம். அதன் எதிரில் உள்ள பரத்வாஜ முனிவரின் ஆஸ்ரமம், பொருட் காட்சி சாலை, பிர்லாமந்திர், ஆஞ்சநேயர் எல்லாம் கண்டு இரவு 9½ மணிக்கு இனிதே காசிக்குத் திரும்பினோம்.

15-6-83 அன்று பேருந்து மூலம் பீகார் மாநிலத் தில் உள்ள **கயா** சென்றோம். அங்குள்ள நம் நகர விடுதி மேலாளர் திரு. அண்ணாமலை (சிறுகூடல்பட்டி) அவர்களின் உதவியால் **விஷ்ணு பாதம் (விஷ்ணு கோயில்)** வணங்கி மூதாதையர்க்குப் பிண்டம் போட்டோம். கயாவில் இலை, காய், பழம் ஆகியவற்றில் ஒவ்வொன்றைத் தள்ள வேண்டும் என்பது விதி. நான் என் மனைவி சொற்படி, ஆல இலை, மூக்குத்திக்காய், பாலப்பழம் ஆகியவற்றைத் தள்ளினேன். மனத்திற்கு விருப்பமானதைத் தள்ளவேண்டும். ஆனால் நானும் என் மனைவியும் கிடைக்காத பொருள்களைத் தள்ளி னோம். வேறு என்ன செய்வது? "இந்த ஒரு காரியத்

திலாவது என் மனைவிக்குக் கட்டுப்படுவது'' என்று நான் முடிவு செய்து விட்டேன்.

ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் **கோபத்தை அங்கே தள்ளி விட்டேன்.** இப்பொழுதெல்லாம் எனக்கு முன்பு போல் கோபம் வருவதில்லை என்று என் மனைவி மக்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

''யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்''

என்பது தான் **கயாவில் தள்ளும் தத்துவம்.**

பங்குனி நதிக்கரையில் உள்ள கயாவில் இறை வணங்கியதும், புத்தகயா சென்று புத்த பகவானை வணங்கி, மாபெரும் **சோன்நதி** கடந்து காசிக்கு விடி காலையில் வந்து சேர்ந்தோம்.

16-6-83 காலை நகர விடுதி நகரேசுவரர் சந்நிதியில் நான், என்மனைவி, வயிரவன், அவர் மனைவி காசிஸ்ரீ திருநாவுக்கரசு செட்டியார், அவர் மனைவி ஆகிய ஆறுபேரும் எங்கள் குருநாதர் காசிஸ்ரீ சிதம்பரம் செட்டியார் அவர்களிடம் **சிவபூசை** எழுந்தருளச் செய்து கொண்டு, சிவபூசகர்கள் ஆனோம்.

மற்றும் எங்கள் குழுவினர்களில் காசிஸ்ரீ அடைக்கப்பன், காசிஸ்ரீ தியாகராசன், காசிஸ்ரீ தேனிமலை, காசிஸ்ரீ அய்யாச்சாமி, காசிஸ்ரீ பழநியாண்டி ஆகியோர் எங்கள் குருநாதரிடம் பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொண்டனர்.

17-6-83 அன்று கங்கையில் நீராடி விசுவநாதர் விசாலாட்சியைத் தொழுதபின் அனுமான் கட்டத்தில் உள்ள **''பிராசீன பஜனை மடம்''** சென்று இறை வணங்கினோம். இதனைச் சுமார் 160 வருடத்திற்கு முன்பு நிறுவியவர் **ராமாசாஸ்திரி** என்னும் பெரிய மகான்

ஆவார். அவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பத்தமடையைச் சேர்ந்தவர். அவர் தன் இளமை முதலே பகவத் கைங்கரியத்திலும், பஜனையிலும் ஈடு பட்டவர். ஒரு சமயம் அவர் **திருச்செந்தூர்** சென்று **ஸ்ரீசண்முகப் பெருமானைத்** தரிசித்துத் தியானம் செய்யும் தருணத்தில் ஸ்ரீஷண்முகர் அளித்த கட்டளைப்படி தீர்த்தாடனம் செய்யக் கிளம்பினார். அங்கிருந்து **கன்னியாகுமாரி, அனந்தசயனம், குருவாயூர், மூகாம்பிகா, கோகர்ணம்,** (நாஸிக் அருகில் உள்ள) **சப்தசிருங்கி, துவாரகை, ஜ்வாலாமுகி, அமர்நாத், வைஷ்ணவீதேவி, பத்ரி நாத், பத்ரி, கேதாரம், கங்கோத்தரி, யமுநோத்தரி, நேபாளம், துங்கநாத்** முதலான க்ஷேத்திரங்களுக்கு 12 வருட காலம் பாதயாத்திரை சென்று, தரிசித்து, ஆங்காங்கு உள்ள தேவதைகளை ஆராதித்து வரம்பெற்றுக் **காசி** அடைந் தார். காசி அனுமான் கட்டத்தில் **பஜனை மடம்** நிறுவி னார். தான் தன் கைப்பட எடுத்துவந்த 360 நர்மதா பாண லிங்கங்களை **கைலாஸயந்திரம்** என்ற விதிப்படி அமைத்தார். தவிர அநேக ஸாளிக்ராமங்களும் சேகரித்து வைத்தார். இத்துடன் ஸ்ரீகோதண்ட ராமர் முதலான அநேக பஞ்சலோக விக்கிரகங்களையும் வைத்துப் பூசித்தார்.

இந்த பஜனை மடம் அருகில் உள்ள ஒரு வீட்டில் **முத்துசாமி தீட்சிதர்** என்னும் கர்நாடக இசை மேதை பூசை செய்த சிவலிங்கம் உள்ளது. இங்கு புவனேஸ்வரி ஸ்ரீஎந்திரம் பிரதிஷ்டை செய்தவர் சிதம்பரநாத சுவாமிகள் ஆவார். இவ்வீடு மகாராஷ்ராவைச் சேர்ந்த சோம்நாத்பட் என்பவருக்குச் சொந்தமாகும். இப்பொழுது திரு. பட் இங்கு பூசை செய்து வருகிறார். இங்கும் சிவலிங்கம் வழிபாடு செய்தோம்.

"ஹனுமான் மந்திர்" கோயிலில் ராமர்-ராம லிங்கம்—சீதாலிங்கம் விக்கிரகங்களை வழிபட்டோம். அருகில் காஞ்சி காமகோடி பீடமடம் கண்டோம்.

கேதார் கட்டத்தில் "குமாரசாமி மடம்" கண்டோம். இது முந்நூறு வருடங்களுக்கு முன்பு தமிழ் நாட்டில் இருந்து நடந்தே காசிக்கு வந்த **ஸ்ரீகுமார குருபர சுவாமிகளால்** நிறுவப்பட்டது. இங்கும் இறைவணங்கிக் குமரகுருபரப் பெருமானைத் தொழுதோம்.

நாங்கள் இனிதே காசிக்கு வந்து சேர்ந்த செய்தியினை அச்சிட்ட கடிதத்தின் மூலம் நாடெங்கும் உள்ள நண்பர்களுக்குத் தெரிவித்து, காசி விசுவநாதர் விபூதி பிரசாதம்— விசாலாட்சி குங்குமம்— கால பைரவரின் கருப்புக்கயிறு ஆகியன அனுப்பி வைத்தோம். 18-6-83 அன்று ஆயிரம் பேர்களுக்கு அவ்வாறு கடிதம் அனுப்பினோம்.

அக் கடிதம் வருமாறு:

சிவமயம்

"பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ"
அரு. சோமசுந்தரன், M.A., B.T.,
அமைப்பாளர்
இராமேஸ்வரம் காசி
நடையாத்திரைக்குழு
பொன்முடி பதிப்பகம்
123, முத்துப்பட்டணம் மூன்றாம் தெரு,
காரைக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்)
தமிழ்நாடு. போன்: 824

முகாம்:
நாட்டுக் கோட்டை நகரச்சத்திரம்
காட்ஹவுலியா
காசி—1 (உ.பி)
14—6—1983

பேரன்புடையீர்,

வணக்கம், நலம். நலமே விளைக. காரைக்குடியில் அமைப்பாளர் இல்லத்தில் இருந்து 14-2-1983 மாலை புறப்பட்டு தேவகோட்டை சிலம்பணி விநாயகர் கோவிலில் இரவு வழிபாடு செய்து, 15-2-83 உப்பூர் வெயிலுகந்த விநாயகரை வணங்கி, தேவிபட்டினம் கடலாடி நவபாஷாணம் வணங்கி, இராமேஸ்வரம் சென்று 16-2-83 அன்று எல்லாத் தீர்த்தங்களும் ஆடி, இராமநாதரையும் பர்வதவர்த்தினியையும் வணங்கி, கோடி தீர்த்தமும் கடல் மணலும் எடுத்துக் கொண்டு, 17-2-83 காலை 13 பேர் இராமேஸ்வரம் கோயிலில் இருந்து காசிக்கு நடையாத்திரை புறப்பட்டோம். தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்ட்ரா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசத்தில் பயணம் செய்து காசிக்கு 12-6-1983 அன்று இறையருளால் இனிதே வந்து சேர்ந்தோம். காவிரி, தென்பண்ணை, வடபெண்ணை, துங்கபத்திரா, கிருஷ்ணா, கோதாவரி, சொர்ணா, பென்கங்கா, வார்தா, வாணா, பில்லி, கன்ஹான், வெயின் கங்கா, நர்மதை, ஹிரான், கங்கை முதலிய புண்ணிய நதிகளில் நீராடினோம். ஏராளமான தலங்களில் தரிசனம் செய்தோம். சேலம், பெங்களூர், ஹைதராபாத், நாகபுரி, ஜபல்பூர் வழியாக நடந்தோம். 1700 அடி உயரமுள்ள விந்திய-சாத்பூரா மலைத் தொடர் வழியாகவும் காட்டு வழியிலும் பல மைல்கள் நடந்தோம். இறைவனின் எல்லையற்ற பெருங் கருணையை ஒவ்வொரு கணமும் உணர்ந்தோம். கடவுள் அருளால் இனிதே காசி வந்து விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர், நகரேஸ்வருக்கு அபிஷேக ஆராதனை செய்து நாட்டின் ஒருமைப் பாட்டுக்கும், நாட்டின் நலத்துக்கும், அனைவரின் வளத்துக்கும், பிரார்த்தனை செய்தோம். இத்துடன் விபூதி பிரசாதம் உளது. அணிந்து கொள்ள வேண்டுகிறோம். இந்த

நூற்றாண்டின் மாபெரும் சமயச்சாதனையாகிய இந்த நடையாத்திரை வெற்றிபெற உதவி செய்த அனைவரின் திருவடிகளையும் வணங்கி நன்றி கூறுகிறோம்.

அன்புள்ள

''பொற்கிழிக் கவிஞர்'' **அரு. சோமசுந்தரம்**

அமைப்பாளர் தேவகோட்டை

''சிவபாதசேகரர்'' சிதம்பரம் செட்டியார் ,,

அ. திருநாவுக்கரசு செட்டியார் ,,

இராம. அடைக்கப்பன் ,,

தங்கவேலு பிள்ளை ,,

''வேல்சாமி'' நல்லதம்பி ,,

''அருள் தொண்டர்'' சுப. இராகவன் சொக்கநாதபுரம்

என். தியாகராஜன் ,,

''திருமுருகன்'' சுப்பையா சண்முநாதபுரம்

''அருள் தொண்டர்'' கு. பழநியாண்டி. சிங்கம் புணரி

இராசாங்கம் ,,

என். அய்யாசாமி திருச்சி

க. தேனிமலை வலையபட்டி

இது கிடைத்த விபரம் காரைக்குடிக்கு எழுதவும்

ஃ ஃ ஃ

என்று கடிதம் அனுப்பினேன். இதற்கு ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் இந்தியா முழுவதும் இருந்து வந்து குவிந்தன.

ஃ ஃ ஃ

19-6-83 அன்று கங்கைக்கரையில் உள்ள 64 தீர்த்தக் கட்டங்களுக்கும் படகில் சென்று தரிசித்தோம். அந்த 64 கட்டங்கள் வருமாறு :

1. அசி கட்டம்.
2. லோலார்சு
3. துளசிதாஸ்
4. ஜானகி

5. பார்சுவநாத
6. சிவாலய
7. நிரஞ்சன
8. பிரமேந்திர
9. அனுமான்
10. அரிச்சந்திர
11. லல்லி.
12. சிந்தாமணி
13. ராணி
14. கேதார
15. சௌகி
16. ருக்மாங்கத
17. க்ஷேமேசுர
18. மானசரோவர்
19. நாரத
20. அன்னபூரண
21. பாண்டேய
22. சதுர்சஷ்டி
23. தண்டி
24. ராணாமகால்
25. முன்ஷி
26. அகல்யாபாய்
27. சீதளா
28. பிரயாகை
29. தசாஅசுவமேத
30. அசுவ
31. கிடிகீ
32. மான்மந்திர
33. திரிபுரசுந்தரி
34. விசாலாட்சி
35. ஜராச்சந்தேஸ்வர
36. லலிதா
37. கங்காகேசவ
38. பிரம்மநாள
39. மகாமயான
40. சித்திவிநாயக
41. மணிகர்ணிகை
42. தாத்தாத்ரேய
43. சேந்திய
44. சங்கடாதேவி
45. யமேஸ்வர
46. கங்காமகால்
47. அக்னீஸ்வர
48. இராம
49. இலக்குமணபாலா
50. மங்களாகௌரி
51. பஞ்சகங்கை
52. பிந்துமாதவ
53. துர்கா
54. பிரம்மா
55. சத்திர
56. ராஜமந்திர
57. லால்
58. கௌ
59. நாராயண
60. திரிலோசனேஸ்வர
61. பிரகலாத
62. ராச
63. கட்கவிநாயக
64. வருணாசங்கமேஸ்வர

இவை அனைத்திலும் நீராட முடியாதவர்கள் 1) அசி, 2) அனுமான் 3) தசா அசுவமேத 4) அரிச்சந்திர

5) மணிகர்ணிகை, 6) பஞ்சகங்கை, 7) வருணா சங்கமேஸ்வர் கட்டங்களில் நீராடலாம்.

காசியில் 12-6-83 ஞாயிறு முதல் 20-6-83 முடியத் தங்கி இருந்தோம். அப்பொழுது காசியில் உள்ள சாரநாத், காசி மன்னர் அரண்மனை, பொருட்காட்சி சாலை, இந்து பல்கலைக்கழகம், அங்குள்ள பிர்லா மந்திர், துளசி மந்திர் முதலியன கண்டோம்.

இந்து பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் பிர்லா பல இலட்சரூபாய் செலவில் கட்டியுள்ள பிர்லா மந்திர் ஒப்புயர்வற்றது. இதன் கோபுரம் மிக உயரமானது. இக் கோபுரம் தான் எங்கட்கு 20 மைல் முன்பு தெரிந்தது. இக்கோயிலில் உள்ள விசுவநாதரை வணங்கினோம். இக்கோயில் முற்றிலும் சலவைக் கல்லால் கட்டப் பட்டுள்ளது.

ஒரு நாள் காசி விசுவநாதர் கோயிலுக்குக் காலை 6 மணிக்கு வணங்கச் சென்றோம். அப்பொழுது அதன் நிர்வாக அதிகாரி திரு. சர்மா விசுவநாதரை வழி பட்டு விட்டுத் தன் இருக்கையில் இருந்து தன் வேலை களைச் செய்து கொண்டிருந்தார். அவர் காலை 6 மணி முதல் பக்தியுடன் பணி புரிகிறார். கங்கையில் நீராடித் தண்ணீர் கொண்டு வந்து விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து, பூப்போட்டு வணங்கி, ஆறு மணிக்கே வேலை தொடங்குகிறார். கீழே உட்கார்ந்து கொண்டு வேலை செய்கிறார். வேலையில்லாத நேரத்தில் வேத மந்திரம் ஜெபித்துக் கொண்டிருக்கிறார். இப்படி ஒரு பக்திமான் ஆகிய நிர்வாக அதிகாரியை எங்குமே காண முடியாது.

உத்தரப் பிரதேசத்தில் காசி விசுவநாதர் கோயில் மட்டுமே உத்தரப் பிரதேச அரசாங்கத்தால் நிர்வாகம் செய்யப்படுகிறது. மற்ற கோயில்கள் எல்லாம் தனியார் கோயில்களே.

திரு. சர்மா அவர்கள் விசுவநாதர் கோயில் அமைப்பு முறை பற்றி என்னிடம் கூறியதாவது; "பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு விசுவநாதர் ஒரு வேடன் உருவத்தில் காசியில் உலவி இருக்கிறார். அப் பொழுது அவரது குருவாக இருந்தவர் **அபிமுக்தேஸ்வரர்.** குரு ஒருநாள் விசுவநாதரிடம் **''விசுவநாதா! நீ எந்தக் காலத்திலும் காசியைக் விட்டு விலகக் கூடாது''** என்று கேட்டுக் கொண்டாராம். அன்று முதல் விசுவநாதர் வாரணாசி எனப்படும் காசியை விட்டு விலகாமல் இருக்கிறாராம்.

வருண், அசி ஆகிய சிறு நதிகள் கங்கையோடு கலக்கும் இடைப்பட்ட பிரதேசத்திற்குள் இருப்பதுதான் வாரணாசி எனப்படும் காசியாகும். காசித் தலத்தில் புராண காலம் தொட்டு விசுவநாதர் இருந்து அருள் பாலிக்கிறார்.

விசுவநாதர் கோவில் பல்லாயிரம் ஆண்டுப் பழைமை உடையது. எத்தனையோ மாற்றங்களை இது கண்டிருக்கிறது. இதனைப் பல மன்னர்களும் மகாராணி களும் புதுப்பித்துக் கட்டியுள்ளார்கள்.

இக்கோயிலுக்குள் நுழைந்ததும் நடுவில் காசி விசுவநாதர் ஒரு வெள்ளித் தொட்டிக்குள் வீற்றிருக் கிறார். அவருக்கு எதிரில் வைகுந்தரும், தண்டபாணியும் வீற்றிருக்கின்றனர். நுழைவாயில் வலது மூலையில் அபிமுக்தேஸ்வரரும், இடது மூலையில் சத்திய நாராயணா மகாலட்சுமியும், எதிர்ப்பக்க வலது மூலை யில் அன்னபூரணியும், இடது மூலையில் பார்வதியும் வீற்றிருந்து உலக மக்களுக்கு எல்லாப் பேறுகளும் அளிக்கின்றனர்.

காசி முக்தி ஸ்தலம். இத்தலத்திற்கு நீங்கள் நடந்தே வந்து தொழுதிருப்பதால் உங்கட்கு இனிப்

பிறவி இல்லை. உங்கள் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

இந்தியக் கவிஞர்களில் தேசத்தையும் தெய்வத்தையும் இணைத்து இந்திய ஒற்றுமைக்காக இவ்வளவு பெரிய நடைப்பயணத்தை மகத்தான தவம் போலச் செய்துள்ளீர்கள். கவிஞர்கள் பொதுவாகப் பாடுவார்கள் ஆனால் செயலாற்றுவது குறைவாக இருக்கும். நீங்கள் கவியரசர் தாகூர் போலப் பாடல் திறனோடு செயல் திறனும் பெற்றுள்ளீர்கள். உங்களுக்கு மிகப்பெரிய எதிர் காலம் உண்டு. என்னுடைய வாழ்த்துக்கள்.'' என்று கோயிலின் வரலாற்றைக் கூறி என்னை ஆசீர்வதித்தார். அப்படிப்பட்ட மகானாகிய அதிகாரியின் ஆசி கிடைத்ததை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

என்னுடைய கவிதை நூலாகிய ''திருமுறைகள் வீட்டு நூல்'' என்பதை 1965 ஆம் ஆண்டில் சென்னையில் வெளியிட்டுப் பெருந் தலைவர் **காமராஜ்** என்னைப் பற்றிப் பாராட்டிப் பேசிய பொழுது ''பாரதியாருக்குப் பிறகு தமிழ்நாட்டில் தேசத்தையும் தெய்வத்தையும் பற்றிப் பாடியவர் ஸ்ரீமான் சோமசுந்தரமே ஆவார்'' என்று குறிப்பிட்டார். அந்த நினைவு இப்பொழுது எனக்கு வந்தது.

அப்பொழுது தேசத்தையும் தெய்வத்தையும் இணைத்துப் பாடினேன். இப்பொழுது இரண்டையும் இணைத்துச் செயற்படுத்தினேன். எல்லாம் இறைவன் அருள்!

காசியில் இருந்து ஊருக்குத் திரும்பத் திட்டமிட்டோம். புகை வண்டி நிலையத்துக்கு ஆளனுப்பினோம். சென்னைக்குப் புகைவண்டிச் சீட்டு (டிக்கெட்) கிடைக்கவில்லை. எனவே நானே சென்று புகைவண்டி நிலைய அதிகாரியைச் சந்தித்தேன். அந்த அதிகாரி நம்

நடையாத்திரை பற்றிய செய்தியினை இந்திப் பத்திரிகையில் படித்திருக்கிறார். எனவே என்னை அன்புடன் வரவேற்றுத் தேநீர் வழங்கினார். என்னை மிகவும் பாராட்டினார்.

"சென்னைக்குச் சுமார் அறுபது டிக்கெட்டுகள் தேவை" என்று சொன்னேன்.

அதற்கு அவர், "என் அன்பான சோமசுந்தரம்! இன்னும் ஒரு மாதத்துக்குப் பதிவுச் சீட்டு சென்னைக்குக் கிடைக்காது. எல்லாம் ஏற்கெனவே பதிவாகி விட்டது. பதிவுச்சீட்டு வேண்டுமானால் இன்னும் ஒரு மாதம் நீங்கள் காசியில் தங்கி இருக்க வேண்டும். **அதற்குள் நீங்கள் நடந்தே சென்னைக்குப் போய் வீடுவீர்கள்.** ஆகவே நீங்கள் எல்லோரும் காலை 7 மணிக்குச் சென்னை புறப்படுகிற ரயிலுக்கு காலை 4 மணிக்கே வந்த பொது வண்டியில் (General Compartment) ஏறி அமர்ந்து கொள்ளுங்கள். வேறு வழி இல்லை" என்றார். நான் அவருக்கு நன்றி கூறிப் புறப்பட்டேன்.

காசியில் 10 நாட்கள் தங்க வேண்டும் என்பது ஐதீகம். நாங்கள் 12-6-83 முதல் தங்கி இருக்கிறோம். 20-6-83 முடிய 9 நாட்கள் ஆகின்றன. எனவே 21-6-83 செவ்வாய்க் கிழமை காலை $1\frac{1}{2}$ மணிக்குப் புறப்படுவது என்று முடிவெடுத்தோம். 21-7-83 பிறந்து விடுவதால் அன்றைய தினமும் கணக்கில் சேரக் காசியில் இருந்த **நாள் பத்து** ஆகிவிடுகிறது.

21-6-83 காலை 1 மணிக்கு எழுந்து நீராடி இறை வணங்கிக் காசி நகர விடுதியில் உள்ள அனைவரிடம் இருந்தும், பிரியாவிடைபெற்று $1\frac{1}{2}$மணிக்கு சுமார் அறுபது பேர் புகைவண்டி நிலையத்துக்குப் புறப்பட்டோம். 2மணிக்கு நிலையம் அடைந்தோம். அங்கு நின்ற சென்னை வண்டிப் பொதுப் பெட்டியில்

ஏறி அமர்ந்தோம். நேரம் ஆக ஆகக் கூட்டம் அதிகரித்தது. 7 மணிக்குப் புகைவண்டி சென்னை நோக்கிப் புறப்பட்டது. 1½ நாள் புகைவண்டிப் பயணம். வண்டியில் புளி மூட்டை போல் அடைந்து கிடந்தோம். இடத்தை விட்டு அகல முடியாத கூட்டம்! இதை நினைக்கும் பொழுது நாங்கள் நடந்து வந்த பயணம் எவ்வளவோ மேல்!

எங்களது **திரும்பு பயணம்** பற்றிக் கீழ்க் கண்டவாறு திட்டமிட்டு எல்லோருக்கும் முன் கூட்டியே அறிவித்திருந்தோம். அத்திட்டம் வருமாறு

21-6-83 செவ்வாய். காசியில் இருந்து புறப்படுதல்.
23-6-83 வியாழன். சென்னை ரெங்கோன் நகர விடுதி
24-6-83 வெள்ளி. சென்னையில் தங்கல்.
25-6-83 மாலை - இராமேஸ்வரம் ரயிலில் பயணம் புறப்படல்.
26-6-83 தேவகோட்டை ரோடு - இராமேஸ்வரம்.
27-6-83 திங்கள். இராமநாதபுரம்.
28-6-83 செவ்வாய். திருச்செந்தூர்.
29-6-83 புதன். கன்னியாகுமரி.
30-6-83 வியாழன். மதுரை.
1-7-83 வெள்ளி. காலை 9 மணி. தேவகோட்டை.
2-7-83 சனி. காலை 10 மணி அமராவதி புதூர். 11 மணி. காரைக்குடி.

புகைவண்டியில் நாங்கள் பட்டபாடு கொஞ்ச மில்லை. சுவரில் அடித்த ஆணிபோல் இருந்த இடத்திலேயே இருந்தோம். புகைவண்டி தொடர்ந்து பயணம் செய்து 22-7-83 புதன் கிழமை இரவு 9½ மணிக்கு இனிதே சென்னை வந்து சேர்ந்தது. சென்னை மத்திய

புகைவண்டி நிலையத்தில் **நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவினரும்** மற்றும் உறவினர்களும் நண்பர்களும் எங்களை வரவேற்று மாலை சூட்டினர். நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவினர் ''காசிஸ்ரீக்கள்'' அனைவர்க்கும் சிவப்புப் பொன்னாடை போர்த்தினர். பிறகு தி-நகர் நாகப்ப செட்டியார் அவர்கள் தமது கார் மூலம் எங்களைப் பவளக்காரத் தெருவில் உள்ள ரெங்கோன் நகர விடுதிக்கு இரவு 10½மணி அளவில் கொண்டு வந்து சேர்த்தார்.

23-6-83 வியாழன் மாலை 6 மணிக்கு ரெங்கோன் நகர விடுதியில் ''நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரைக் குழு''வின்சார்பில் பாராட்டுக்கூட்டம் சிறப்பாக நடத்தப் பெற்றது.

அதற்குக் காரைக்குடி திரு. **குறள்இலக்குவன்** தலைமை தாங்கினார். திரு.**சபாரத்தினம்** இறைவணக்கம் பாடி அனைவரையும் ஈர்த்தார். சங்கத் துணைத் தலைவர் திரு. **முத்துராமன்** வரவேற்றார். கண்டனூர் இராமநாதன், ஆர். வயிரவன், பழநியப்பன், அண்ணா மலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. **மெய்யப்பன்** ஆகியோர் பாராட்டுரைத்தனர். திரு. மெய்யப்பன் அவர்கள் பேசும்பொழுது ''கவிஞர் சோமசுந்தரம் அவர்கள் இந்தப் பயண அனுபவங்களைச் சுமார் 600பக்க அளவில் விரிவாக வெளியிட வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார். அத்துடன் அந்த நூலைத் தான் இந்தியில் வெளியிடுவதாகவும் வாக்களித்தார். சங்கச் செயலர் திரு. **சேவுகன்** நன்றி கூறினார். இரவு விருந்து திரு. **மு. இராம. ஆண்டான் செட்டி** இல்லத்தில் வழங்கப் பெற்றது.

24-6-83 அன்று சென்னை மதியவிருந்து திரு சேவுகன் இல்லத்தில் வழங்கப் பெற்றது. மாலையில் **குரோம்பேட்டை** புகைவண்டி நிலையத்தில் இருந்து

காசிஸ்ரீக்கள் அனைவரும் இராமசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு அபிஷேக ஆராதனை முடிந்ததும் ஒரு பாராட்டுக் கூட்டம் திரு கே. கணபதி ஐயர் தலைமையில் நிகழ்ந்தது. அதில் திரு வரதராசன், கலை. நாராயணன், புலவர் மாணிக்கம் செட்டியார், சௌந்தரராஜன், கே. பலராமன் ஆகியோர் பாராட்டுரைத்தனர். காசிஸ்ரீ இராகவன் எங்கள் சார்பில் ஏற்புரை வழங்கினார்.

25-6-83 காலை மண்ணடியில் திரு. **செந்தில் நாதன் செட்டியார்** அவர்களும் மதிய உணவு திரு. **ந. சுப்பையா** அவர்களும் வழங்கினர்.

25-6-83 மாலை 4-40மணி "சேது எக்ஸ்பிரஸ்" புகைவண்டி மூலம் இராமேஸ்வரத்துக்குப் பயணம் ஆனோம். வண்டி புறப்படும் நேரத்தில் காரைக்குடி திரு. **பி. எல். ராமு** எங்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். புகைவண்டி திருச்சியை அடைந்த பொழுது அந்த நள்ளிரவிலும் எங்களை அங்கு வரவேற்றுத் திருச்சி நகரத்தார்கள் சார்பில் திரு. ஏகப்ப செட்டியார், அவர்கள் மனைவி, மகள், மாப்பிள்ளை மற்றும் திரு. இராம. சிதம்பரம் ஆகியோர் பாராட்டு மொழிகள் கூறினர்.

இரவில் புதுக்கோட்டைப் புகைவண்டி நிலையத்தில் புதுக் கோட்டை அன்பர்கள் சார்பில் திரு. வெங்கடாசலமும் மற்றும் பலரும் எங்களை வரவேற்று மாலை சூட்டிச் சிறப்பித்தனர்.

இரவில் காரைக்குடி நிலையத்தில் திரு அழ. சுப்ரமணியன் செட்டியார், என் மாப்பிள்ளை திரு.சி. இராமசாமி, மகள் பொன்முடி, ந. காசிநாதன், சொக்கலிங்கம், மற்றும் பலர் வரவேற்றுப் போற்றினர்.

தேவகோட்டை ரஸ்தாவில் அமராவதி புதூர்த் தலைமை ஆசிரியர் திருவிக்கிரமனும் மற்றும் பல

ஆசிரியர்களும், தேவகோட்டை அன்பர்களும் வர வேற்றனர்.

இராமநாதபுரத்தில் சமஸ்தானம், தேவஸ் தானங்கள் சார்பில் புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு நிகழ்ந்தது.

26-6-83 ஞாயிறு காலை 6½ மணிக்கு **இராமேஸ்** வரத்துக்கு இனிதே வந்து நகரவிடுதியை அடைந்தோம். நாங்கள் இராமேஸ்வரம் வந்த பிறகு சூறாவளிக் காற்று அடித்ததால் தண்டவாளத்தில் மணல் சரிந்து அதனால் இராமேஸ்வரப் பாதை அடைப்பட்டது. எனவே எங்கள் வண்டிக்குப் பிறகு இரண்டு நாட்களுக்கு எந்த வண்டியும் இராமேஸ்வரத்துக்கு வரவில்லை. அதுபோல் இரண்டு நாள் கழித்து நாங்கள் ஏறி அமர்ந்த வண்டிதான் இராமேஸ்வரம் தீவில் இருந்து முதலில் புறப்பட்டது. அதற்குமுன் எந்த வண்டியும் புறப்படவில்லை. எல்லாம் அந்த இராமநாதர் திருவருள்!

27-6-83 திங்கட்கிழமை காலை இராமேஸ்வரம் கடலில் (அக்கினி தீர்த்தத்தில்) தீர்த்தமாடினோம்; இராமநாதருக்கும் பர்வதவர்த்தினிக்கும் நாங்கள் அலகாபாத்தில் இருந்து கொண்டுவந்திருந்த கங்கைநீர் அபிஷேகம் செய்து வழிபட்டோம்.

இதன்மூலம் புனிதமான இந்தியதேசிய ஒருமைப் பாட்டு வழியை நாங்கள் புதுப்பித்து இறைவணங்கி னோம். எங்கள் நெடிய பிரார்த்தனையை எந்தவித ஆபத்தும் இல்லாமல் நிறைவேற்றித் தந்தமைக்கு இராம நாதருக்கும் பர்வத வர்த்தினிக்கும் நன்றி கூறி, உலகெலாம் இனிதே வாழ வணங்கினோம். நான் இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்கு நடந்து சென்ற பொழுது நாள் ஒன்றுக்கு ஒரு வெண்பா வீதம் எழுதி வந்த நூறு வெண்பாக்கள் அடங்கிய, **"காசி இராமேஸ்**

வரம் வெண்பா அந்தாதி'' என்ற பாடல் தொகுப்பினை இராமநாதர் சந்நிதியில் பாடி அரங்கேற்றினேன்.

மாலை 5மணிக்கு இராமநாதர் கோயிலில் எங்களை மேளதாளத்துடன் வரவேற்று, சுவாமி—அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை செய்வித்து, மேளதாள வாத்தியங்கள் முழங்க அம்பாள் சந்நிதியில் உள்ள மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வந்தனர். அங்கு கோயில் சார்பில் எங்களைப் பாராட்டி மாலைசூட்டினர். அப்பொழுது நடந்த பாராட்டுக் கூட்டத்திற்கு, தங்கச்சி மடம் ''ஏகாந்தராமர் கோயில்'' தர்மகர்த்தா திரு. **இராமநாத் பூசாரி** தலைமை தாங்கி எங்களைப் பாராட்டினார்.

அப்பொழுது அவர் கூறியதாவது... ''கவிஞர் சோமசுந்தரம் தலைமையில் இரண்டாயிரம் மைல் நடந்து சென்று காசியை அடைந்து விசுவநாதர்- விசாலட்சியை வணங்கி வந்துள்ள இந்தக் குழு பழைய வரலாற்றை நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அற்புதமாகப் புதுப்பித்திருக்கிறது. இவர்களது வெற்றிக்குக் காரணம் இவர்களது துணிவும், வைராக்கியமும், கட்டுப்பாடுமே ஆகும். இவர்கள் இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட முதல் நாளில் எங்களது ஏகாந்தராமர் கோவிலில் இவர்களை வரவேற்று சுவாமி தரிசனம் செய்வித்து ஆசிகூறி அனுப்பி வைத்தேன்.

இன்று இவர்களை இந்த இராமநாத சுவாமி ஆலயத்தில் வரவேற்கும் பாராட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதை நான் என் வாழ்க்கையின் பெரிய பேறாகக் கருதுகிறேன்.

''காசிஸ்ரீ'' பட்டம் பெற்று வந்துள்ள இவர்கள் திருநாவுக்கரசர், காரைக்கால் அம்மையார், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞான சம்பந்தப் பெருமான், மாணிக்கவாசகர், இராமலிங்கர், ஆதி சங்கரர், குமர குருபரர், போல நெடுந்தொலைவு நடந்து மகத்தான சாதனை செய்திருக்கிறார்கள். இக்காலத்தில் இப்படி நடப்பது தேவைதானா என்று சிலர் கேட்கிறார்கள். இதில் ஈடுபடுத்தும் முயற்சியும், பொருளும் வீண் என்று சிலர் கருதுகிறார்கள். அந்தக் கருத்துத் தவறு.

மனித சக்தியை மக்களுக்கு நிதர்சனமாக வெளிப்படுத்த இத்தகு நெடிய பாதயாத்திரைகள் முக்கியம்; இதன் மூலம் தெய்வசக்தி பிரயோகம் ஆவதைப் புரிந்து கொள்ளலாம்.

மனிதன் எவரெஸ்ட் மலையில் ஏறுவதும், துருவப்பிரதேசங்களுக்குக் கப்பல் மூலம் செல்வதும், விளையாட்டுப் போட்டிகள் நடத்தி இலட்சக் கணக்கான மக்கள் காண்பதும் மனித சக்தியை வெளிப்படுத்தும் வாயில்களே ஆகும். அது போலத்தான் இப்படி நீண்ட தூரம் நடந்து சாதனை நிகழ்த்துவதும்!

இப்படி நடந்து செல்வதன் மூலம் ''இந்தியா ஒருநாடு'' என்ற உணர்வைக் கிராம மக்களின் வாயிலாக உணர்த்த முடிகிறது. நாட்டின் சரித்திர, பூகோள, பொருளாதார, சமுதாய

நிலைமைகளை எல்லாம் நன்கு அறிந்து வெளிப் படுத்த இந்தப் பாதயாத்திரைப் பயணங்கள் பயன் படுகின்றன.

இதற்கும்மேலாகஇந்தப்பாதயாத்திரையில் ஒரு பெரிய நுட்பம் இருக்கிறது. பல ஆண்டுகளாக மக்கள் உலக வாழ்வில் பாவங்களைச் செய்து, அந்தப் பாவங்களை நீக்குவதற்குப் பரிகாரமாகக் கடலிலும், புண்ணிய நதிகளிலும் நீராடுகின்றனர். இதனால் அவர்கள் செய்த பாவங்கள் நீங்கி அவர்கள் பரிசுத்தம் அடைகின்றனர். ஆனால் அவர்களது பாவத்தை ஏற்றுக் கொண்ட சுத்தமான கடலும், நதிகளும் பாவப்பட்டு, பரிசுத்தம் இழந்து, கருமை அடைகின்றன. அவை எப்பொழுது பரிசுத்தமாகும்?

இவர்களைப் போன்று நீண்ட யாத்திரை செல்லும் மகான்கள் அத்த நதிகளிலும், கடலிலும் குளிக்கும் போது, இவர்களது தெய்வீக சத்தி யினால் அவை பாவம் நீங்கிப் பரிசுத்தம் அடை கின்றன. இராமபிரான் எல்லாப் புண்ணிய நதிகளிலும், சேதுக் கடலிலும் நீராடியது எல்லா வற்றையும் பரிசுத்தப் படுத்தத்தான்! அது போல் தான் இந்தக் காசிஸ்ரீக்கள் இப்பொழுது பெரிய மகான்கள் வரிசையில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் நீராடியதால் எல்லா நதிகளும், கடலும் பரிசுத்தம் அடைந்திருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட பாதயாத்திரை மகான் களின் காற்றுப் பட்டாலே நதிகள் எல்லாம் பாவம்

நீங்கிப் பரிசுத்தம் அடையும் என்று வேதம் கூறுகிறது. எனவே வேதக் கருத்துக்குப் புத்துயிர் ஊட்டிப் புதிய உதாரணம் படைத்திருக்கும் இவர்கள் பாதங்களை நான் அந்த ஸ்ரீராமபிரானின் பாதங்களாகவே எண்ணி வணங்குகிறேன். இவர்களைப் பாராட்ட எனக்குத் தகுதி இருப்பதாக நான் நினைக்கவில்லை. இவர்கள் எல்லாம் ஸ்ரீராம பிரானின் அருள் பெற்றவர்கள். இராமதூதர்கள்!

இராமநாதர் பர்வதவர்த்தினி—காசிவிசுவநாதர் விசாலாட்சி ஆகியோரின் பூரண அருளுக்கு இவர்கள் பாத்திரமானவர்கள். இவர்கள் பாதம் பட்ட இடம் தூய்மை அடையும்! இவர்கள் கைபட்டால் தொட்டது துலங்கும்! இவர்கள் கண்ணொளி வீச்சால் பட்டது தழைக்கும். இவர்களுக்கு நிகர் இவர்களேதான்'' என்றார்.

இராமேஸ்வரம் அரசு மேல் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. சுப்பிரமணியம், தங்கச்சிமடம் அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. இராமமூர்த்தி, இராமநாத சுவாமி கோயில் துணை பேஷ்கார் திரு. ரெங்கன் மற்றும் பலர் எங்களைப் பாராட்டி வாழ்த்தினர். எங்கள் அனுபவங்களை நான் எடுத்துக் கூறி நன்றி சொன்னேன்.

அப்பொழுது, ''நாங்கள் இராமேஸ்வரத்தில் இதே மண்டபத்தில் இருந்து 17-2-1983 அன்று காலை 8 மணி அளவில் காசிக்கு நடைபயணம் புறப்பட்டோம். எத்தனையோ இன்னல்களைத் துச்சமாகக் கருதி இராமநாதர் திருவருளால் 12-6-1983 அன்று இனிதே காசிக்குச் சென்று விசுவநாதரை வழிபட்டோம். நீண்ட

காலப் பிரார்த்தனையை இனிதே நிறைவேற்றி 26-6-1983 ஆகிய நேற்று இராமேஸ்வரத்துக்கு வந்து சேர்ந்தோம். இன்று மீண்டும் கடலாடி சுவாமி தரிசனம் செய்து உங்களை எல்லாம் மீண்டும் காணவும், உங்கள் நல்வாக்குகளைப் பெறவும், ஆன ஒரு பெரும் பேறு கிடைத்தது என்றால் அது நாங்கள் செய்த பூர்வ புண்ணியமே ஆகும்! மேலும் எங்கள் முன்னோர்கள் செய்த புண்ணியமும் ஆகும்! எங்களுடைய பிரார்த்தனை தேசிய ஒருமைப்பாடும், உலக மக்களின் நல்வாழ்வுமே ஆகும். நாலரை மாதம் கழித்து இங்கு மீண்டும் வருவோம். உங்களை எல்லாம் சந்திப்போம் என்று அன்று கூறிச் சென்றேன். அதனைப் பரிபூரணமாக நிறை வேற்றித் தந்த இறையருளுக்கு நன்றி.

இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டோம். இராமேஸ்வரத்திற்கு இனிதே வந்து சேர்ந்துவிட்டோம். இத்துடன் யாத்திரை இனிதே முடிவடைந்ததாகக் கொள்ளலாம். இனி எங்கள் வீடு திரும்பும் யாத்திரை எஞ்சி இருக்கிறது'' என்று கூறி முடித்தேன். பிறகு எல்லாரிடம் இருந்தும் நாங்கள் விடைபெற்றோம்.

இராமேஸ்வரம் நகர விடுதியில் காலையில் ''சிவ பூசை'' செய்தோம். அப்பொழுது அதன் சிறப்பினைப் பற்றி பலர் கேட்டனர். அதுபற்றி யான் கூறியதாவது:

சிவபூசை

ஒவ்வொரு குடும்பத்திலும் சிவபூசை நடைபெற வேண்டும். இயன்றவர்கள் விரிவான முறையில் பூசை செய்யலாம். இயலாதவர்கள் சுருக்கமாகப் பத்து நிமிடத்தில் செய்யலாம். அலுவலகம் செல்கிறவர்களும் இதனைச் செய்ய இயலும். ஒவ்வொரு வீட்டிலும் சிவபூசை மணிச் சப்தம் கேட்க வேண்டும்.

சிவன், அம்பாள், விஷ்ணு, விநாயகர், சூரியன் இந்த ஐந்து பேருக்கும் மூர்த்தி வைத்துப் பூசை செய்ய வேண்டும். இதற்குப் **பஞ்சாயதன பூசை** என்று பெயர். அங்கங்களோடு விக்கிரங்களாக இல்லாமல் இந்த ஐந்தையும் இயற்கையாகவே கிடைக்கும் ஐந்து பொருள் களில் ஆவாஹனம் செய்து பூசை செய்வது ஒரு சம்பிரதாயம்.

இவற்றில் சிவனுக்குரிய **பாணலிங்கம் நர்மதை நதியில் ஓங்கார குண்டத்தில் கிடைக்கிறது.** **அம்பிகையின் உருவமான ஸ்வர்ணமுகி சிலா என்ற கல் ஆந்திராவில் சுவர்ணமுகி ஆற்றில் கிடைக்கிறது.** அது தங்க ரேக் ஓடிய கல். **விஷ்ணுவின் வடிவமான சாளக்கிராமக் கல் நேபாளத்தில் கண்டகி நதியில் அகப்படுகிறது. சூரியனுக் குரிய ஸ்படிகம் தஞ்சாவூரில் வல்லம் பக்கத்தில் கிடைக் கிறது. விநாயகருக்கு உருவான சோனபத்ரக் கல், கங்கை யிலே கலக்கிற சோன் நதியில் அகப்படுகிறது.** ஆகு இந்த ஐந்தையும் ஓரிடத்தில் வைத்தால் இந்த தேசம் முழு வதையும் ஒன்று சேர்த்தது போலாகும்.

இந்த ஐந்தில் ஒன்றுக்காவது கண், மூக்கு, காது இல்லை. எனவே இடுக்குகளில் அழுக்கேறுவது கிடை யாது. அபிஷேகம் செய்து துடைக்க நாழிகை ஆகாது. எல்லாம் சின்னச் சின்னக் கற்கள். எல்லாமாகச் சேர்ந் தாலும் கொஞ்சம் இடத்தைத்தான் அடைத்துக் கொள்ளும். பெரிய பூசை மண்டபம் தேவை இல்லை. ஒரு சிறிய சம்புடத்தில் போட்டு வைத்து விடலாம். ஆவாஹனம் பண்ணி, சிறிது நீரில் அபிஷேகம் செய்து, சந்தனம், குங்குமம். அட்சதை வைத்து, அர்ச்சனை செய்து நைவேத்தியம் காட்டலாம்.

வெளியூருக்குப் போகும் போது கூடப் பத்து நிமிடம் இப்படிப் பூசை செய்வதில் சிரமமில்லை. வெளியூரில் அர்ச்சனைக்குப் பூ கிடைக்குமா என்று

கவலைப்பட வேண்டாம். வில்வத்தையும், துளசியையும் உலர்த்தி வைத்துக் கையில் எடுத்துப் போனால் சிவனையும், விஷ்ணுவையும் அதனாலே அர்ச்சிக்கலாம். மற்றவர்களுக்கு அட்சதையால் அர்ச்சனை செய்யலாம்.

நைவேத்தியத்துக்குச் சுத்தமான அன்னம் வெளியூர்களில் கிடைக்குமா என அலட்டிக் கொள்ள வேண்டாம். காய்ந்த திராட்சைப் பழத்தைக் கையோடு வைத்திருந்து நிவேதிக்கலாம்.

ஐந்து மூர்த்திகள், துளசி, வில்வபத்திரங்கள், திராட்சை, அட்சதை இந்த எல்லாவற்றையுமே கையடக்கமாக ஒரே சம்புடத்தில் போட்டு வைத்துக் கொண்டு விடலாம்.

பூசை என்பதற்காகப் பெரிய சிரமம் எதுவும் தேவையில்லை. மனம் இருந்தால் மிக எளிதில் எல்லோரும் எங்கேயிருந்தாலும் பூசை செய்யலாம்.

126. நான்காம் கட்டம்
(இராமேஸ்வரத்தில் இருந்து காரைக்குடி வரை)

இப்பொழுது எங்களது நான்காவது கட்டப் பயணம் தொடங்குகிறது. இராமேஸ்வரத்தில் இருந்து காரைக்குடிக்கு— அதாவது அடியேனின் வீட்டுக்குச் சென்று உணவுண்டு அனைவரும் விடைபெறும் வரை இப்பயணம் நடைபெறுவதாக நான்காம் கட்டம் அமைந்துள்ளது.

28-6-83 காலை இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டு **இராமநாதபுரம்** சாமிநாதசாமி கோயில் கல்யாண மண்டபத்துக்கு வந்து சேர்ந்தோம். அங்கு இராமநாதபுர சமஸ்தானம்— தேவஸ்தானம் சார்பில் அனைவருக்கும் மாலை சூட்டி வரவேற்றார்கள். விழாவிற்கு **இராமநாதபுரம் திவான்** தலைமை தாங்க ஏராளமான அன்பர்களும், தேவஸ்தான அதிகாரிகளும் எங்களைப் பாராட்டி இன்மொழிகள் புகன்றார்கள்.

சமஸ்தான விருந்துண்டு மாலை 3 மணிக்கு இராமநாதபுரத்தில் இருந்து புறப்பட்டு இரவு 8 மணிக்குத் **திருச்செந்தூர்** சென்று நகர விடுதியை அடைந்தோம்.

29-6-83 காலை திருச்செந்தூர்க் கடலாடி செந்திலாண்டவனுக்குக் கங்கை அபிஷேகம் ஆராதனை செய்து வழிபட்டோம். அன்று 11 மணி அளவில் நகர விடுதியில் நடந்த பாராட்டுக் கூட்டத்திற்குத் தேவகோட்டைப் பெரியவர் உயர்திரு. **வி. கரு. சித. சோம.**

நா. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கி எங்களுக்கெல்லாம் பொன்னாடை போர்த்திச் சிறப்பித் தார்கள். புதுவயல் அண்ணாமலை செட்டியார், காரைக்குடி திரு. பெரி. வீர. வீரப்ப செட்டியார் ஆகி யோர் எங்களைப் பாராட்டி வாழ்த்தினர். திரு. இராக வனும், அடியேனும் ஏற்புரை கூறினோம்.

பிற்பகல் 2மணிக்குப் பேருந்து மூலம் பயணமாகி இரவு 7 மணிக்குக் **கன்னியாகுமரி** சென்று ''நகரிய விடுதி''யில் தங்கினோம்.

30-6-83 காலை 4½ மணிக்குக் கடலில் நீராடி, கன்னியாகுமரி அம்மனுக்குக் கங்கை அபிஷேகம் செய்து வழிபட்டோம்.

காலை 6½ மணிக்குக் கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு நண்பகல் 12½ மணிக்கு **மதுரை** அடைந்து நகர விடுதியில் தங்கினோம். அன்று மாலை **மதுரை நகரத்தார் சங்கம்** சார்பில் **''கலைமகன்'' நடராசன் செட்டியார்** தலைமையில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் எங்களுக்கு பூமாலைகள் சூட்டிப் பொன்னாடைகள் போர்த்திச் சிறப்பித்தனர். **''பழம் நீ'' முத்துமாணிக்கம்** அவர்கள் நாங்கள் பயணம் புறப்பட்ட அன்று தேவகோட்டையில் பூமாலை சூட்டி வழியனுப்பியவர்கள்—இன்று இவ்விழா வில் எங்களுக்குப் பாமாலை சூட்டிப் பாராட்டினார்கள்.

பேராசிரியர் திரு. **டாக்டர் சுப. அண்ணாமலை,** கவிஞர் திரு. **சொ.சொ. மீ. சுந்தரம்** முதலிய அன்பர்கள் எங்கள் சாதனையைப் பாராட்டினர். இவ்விழாக் கூட்டத்திற்கு மதுரை மாநகரில் உள்ள நகரத்தார் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவருமே திரண்டு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அனைவரும் எங்க ளிடம் விபூதி பெற்றுச் சென்றனர். இவ்விழாவிற்கு என் அருமை நண்பர் ஆமத்தூர் திரு. **அ. இராமசாமி**

(தலைமை ஆசிரியர்) அவர்களும், அவர்கள் மகன் சகாதேவனும் வந்திருந்து எங்களை வணங்கிச் சென்றனர்.

அன்று இரவு 7½ மணி அளவில் மதுரை **ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில்** அதன் தக்கார் திரு. **வி. என். சிதம்பரம் செட்டியார்** அவர்கள் தலைமையில் எங்கட்கு மாபெரும் வரவேற்பு வழங்கப் பெற்றது. யானை முன் செல்ல, மேளதாளத்தோடு, கீழ் வாசல் வழியாக எங்களைக் கோயிலுக்குள் ஊர்வலமாக அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர். அம்பாளுக்கும் சுவாமிக்கும் கங்கை அபிஷேகம் செய்து வழிபட்டோம்.

அம்பாள் திருமுன்பு நடந்த பாராட்டுக் கூட்டத் திற்குத் தக்கார் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கி, எங்களைப் பாராட்டி, எங்களுக்குப் பொன்னாடை போர்த்தி, **மீனாட்சி திரு உருவம்** ஒன்று பரிசளித்தார்கள். புலவர் சுந்தரராமனும் மற்றும் பலரும் எங்களைப் பாராட்டி இன்மொழி கூறினர். இராகவன் ஏற்புரை புகன்றார்.

அப்பொழுது நன்றி தெரிவித்து அடியேன் பேசுகையில் ''இந்த மீனாட்சி அம்மன் கோவிலில் 1973-ம் ஆண்டில் முதல் **பொற் கிழி**யை எனது **''பாண்டிமா தேவி''** காவியத்துக்காகத் தமிழக முதலமைச்சரிடம் இருந்து பெற்றேன். இன்று புதிய சாதனை படைத்து வந்துள்ள தற்காக இக்கோயில் தக்காரிடம் இருந்து மீனாட்சி சிலையினையே பரிசாகப் பெற்றுள்ளேன். **அன்று பாடிப் பரிசு பெற்றேன்; இன்று ஓடிப் பரிசு பெறுகிறேன்.** அன்னை மீனாட்சி என்னை விட்டு அகலாமல் இருக்கிறாள் என்பதைக் குறிப்பாகக் கூறுவது போல் மீனாட்சி சிலை பரிசளித்துள்ளார்கள்'' என்று கூறி வியந்தேன்.

1-7-83 வெள்ளி காலை 5 மணிக்குப் பேருந்து மூலம் பயணமாகி 9 மணிக்குத் **தேவகோட்டை** பேருந்து நிலையத்திற்குக் குறித்த நேரப்படி வந்து சேர்ந்தோம். பேருந்து நிலையத்தில் எங்களுக்குப் பெரியவர் திரு. **மு. க. பெரி. மு. வீரப்ப செட்டியார்** அவர்கள் மாலை சூட்ட, ஏராளமான அன்பர்கள் கூடியிருந்து பஜனைப்பாடல்கள் பாடியவாறு எங்களை ஊர்வலமாகச் சிலம்பணி விநாயகர் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு விநாயகர் பெருமானுக்குக் கங்கை அபிஷேகம் செய்து வழிபட்டோம்.

இங்கிருந்து *14-2-83* அன்று எங்களை வழி யனுப்பிய மக்கள் எல்லாம் இன்று நடந்த மாபெரும் வரவேற்புக் கூட்டத்திற்கு வந்திருந்து சிறப்பித்தனர். வரவேற்பு விழாவிற்கு முன்னாள் நகரமன்றத் தலைவர் திரு. **சு. மு. மு. சுப்பிரமணியன் செட்டியார்** தலைமை தங்கினார். "திருத்தொண்டர்'' **ஆர். வயிரவன்** வரவேற்புப்பா படித்தளித்தார்.

தியாகி அண்ணாமலை செட்டியார், பேராசிரியர் **அர. சிங்காரவடிவேலன்,** பேராசிரியர் **கண. சிற்சபேசன்** ஆகியோர் எங்களைப் பாராட்டிப் பேசினர்.

எங்கள் குழு அன்பர்கள் சார்பில் எனக்கு நன்றி கூறு முகத்தான் எங்கள் குருநாதர் "காசிஸ்ரீ'' சிதம்பரம் செட்டியார் அவர்கள் அடியேனுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

அப்பொழுது அடியேன் நன்றி கூறிப் பேசுகையில் "இந்த விநாயகர் கோயிலில் இருந்துதான் ஆறுபடை வீட்டுப் பாதயாத்திரையும் புறப்பட்டு நிறைவேற்றி னோம். இப்பொழுதும் காசி நடைப் பயணத்தை விநாயகர் அருளால் வெற்றிகரமாக நிறைவேற்றி வந்திருக்கிறோம். அடியேன் புறப்பட்டபொழுது

''திரும்பி வருவேன்'' என்ற முழுநம்பிக்கையோடு புறப்படவில்லை. அவன் அருள் இருந்தால் பிழைத்து வருவோம் என்று கிளம்பினோம். எங்கள் மன உறுதியில் குறைவில்லை. ஆனால் ஆண்டவன் இந்த யாத்திரை நடைபெறவேண்டும் என்று நினைத்திருக்கிறான். அதனை நிறைவேற்றி இருக்கிறான். நாங்கள் வெறும் கருவிகளே!

இதுவரை எங்கள் யாத்திரையில் எங்களுக்கு மக்கள் நன்கொடை தந்தார்கள். இப்பொழுது நாங்கள் நன்கொடை தருகிறோம். எங்களுக்கு வசூலானதில் ரூ 700-எங்களிடம் மிச்சம் இருக்கிறது. இந்தப் பாத யாத்திரைகளுக்கெல்லாம் மூலகாரணமான திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவிற்கு இந்த ரூபாய் எழுநூறையும் முதல் நன்கொடையாக-நிரந்தர நிதியாக- இக்குழு சார்பில் வழங்குகிறேன். இதனை வங்கியில் **நிரந்தர நிதி**யாக வைத்து, இதில் இருந்து வரும் வட்டியினைத் திருச்செந்தூர் வழியில் பாதயாத்திரிகர்கட்கு உணவு வழங்கவும், நிர்வாகச் செலவுக்கும் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். ''திருத்தொண்டர்'' வயிரவன்; ''இசைத் தொண்டர்'' ந. காசிநாதன்; ''இசைத்தொண்டர்'' இராம இலக்குமணன் ஆகியோர் இந்த **''அறநிலை''** உறுப்பினர்களாக இருந்து இதனைப் பரிபாலிக்கட்டும்.

நாங்கள் கொண்டு சென்ற ''சைக்கிள் ரிக்ஷா'' காசிநகர விடுதியில் இருக்கிறது. அது விற்று வந்ததும் அதில் பெரும் பகுதித்தொகை திருச்செந்தூர்ப் பாத யாத்திரைக் குழுவுக்கும், ஒரு சிறு பகுதித்தொகை நகரத்தார் திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவுக்கும் நிரந்தரநிதியாக வழங்கப் பெறும்'' என்றும் அறிவித்தேன் ரூ. 700/- தொகையினை எங்கள் குருநாதரிடம் இருந்து ''அறநிலை'' உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர்.

எங்கட்கு அன்று உணவு "தெற்கு வீடு" மாணிக்கம் செட்டியார் அவர்கள் வீட்டிலும், மதிய விருந்து "ஆண்டான்" விசுவநாதன் செட்டியார் அவர்கள் வீட்டிலும், மாலை உணவு என் மாமனார் திரு. பிச. சுப. அண்ணாமலை செட்டியார் அவர்கள் வீட்டிலும், இரவு உணவு திரு. சிந்தாமணிச் செட்டியார் அவர்கள் வீட்டிலும் வழங்கப் பெற்றன. ஊரே எங்களைக் கொண்டாடியது என்றால் மிகையாகாது.

("சைக்கிள் ரிக்ஷா" பிறகு காசியில் ரூ. 5000க்கு விற்கப்பட்டு, அத்தொகை வந்த உடனே அதில் ரூ. 4500/- திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவுக்கும், ரூ. 500/- திருத்தணிப் பாதயாத்திரைக் குழுவுக்கும் நிரந்தர நிதியாக வழங்கப் பெற்றது.)

2-7-83 சனிக்கிழமையாகிய இன்று எங்கள் பயணத்தின் **நிறைவு நாளாகும்.** 14-2-83 திங்கட் கிழமை மாலை காரைக்குடியில் உள்ள அடியேனின் இல்லத்தில் இருந்து பயணம் புறப்பட்ட நாங்கள் எத்தனையோ இன்னல்களை அனுபவித்து, இறையருள் பரிபூரணமாகப் பெற்று நாலரைமாதம் கழித்து இப்பொழுது புதிய மனிதர்களாக, புதுப்பிறவி பெற்றவர்களாக, புறப்பட்ட இடத்தில் யாத்திரை நிறைவு செய்யப் போகிறோம். ஒரு தேர் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்வதை "நிலைக்குத்தல்" என்பார்கள். அப்படி ஒரு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

இன்று காலை தேவகோட்டையில் எங்கள் குழுவினர் "காசிஸ்ரீ" சிதம்பரம் செட்டியார் இல்லத்தில் பலகாரம் உண்டு காலை 9 மணிக்குப் புறப்பட்டோம்.

காலை 9½ மணிக்கு அமராவதிபுதூர் குருகுலம் உயர்நிலைப்பள்ளிக்கு வந்து சேர்ந்தோம். பள்ளித்

தலைமை ஆசிரியர் திரு. **திருவிக்கிரமன்** தலைமையில் மாமரத்தடியில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அதில் எங்களைப் பாராட்டித் தலைமை ஆசிரியர் பேசினார். அவர்கள்பால் உள்ள ஈடுபாட்டின் காரணமாக நாங்கள் பயணம் புறப்பட்ட பொழுது அங்கு வந்து வாழ்த்தியதையும், இப்பொழுது பயணம் முடித்து மீண்டும் வந்து வாழ்த்துவதையும், பள்ளி வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்ச்சியாகக் கருதுவதாக அவர் சொன்னார்.

''காசிஸ்ரீ'' இராகவன் அப்பள்ளியில் நாற்பது ஆண்டுகளுக்குமுன்பு கண்ணதாசனோடு தானும் சேர்ந்து ஒன்றாகப் பயின்ற பழைய அனுபவங்களை எல்லாம் எடுத்துக்கூறி, மாணவர்களை வாழ்த்தினர்.

அடியேன் அனைவருக்கும் ஆசிகூறிப் பேசி நன்றி தெரிவித்தேன்.

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு 11 மணி அளவில் காரைக்குடி சென்று **எங்கள் வீட்டை** இனிதே அடைந்தோம். எங்கள் வீட்டில் திரளான மக்கள் கூடி இருந்து, எங்கள் அனைவருக்கும் பாத பூசை செய்து வரவேற்றனர். உள் வீட்டுக்குள் நான் நுழைந்ததும் என் மகள் பொன்முடி மீது எனையீன்ற தாயார் மீனாட்சி தெய்வமாக வந்து என்னை வாழ்த்தினார்கள். நாங்கள் கொண்டு வந்திருந்த தீர்த்தக்குடம், சைக்கிள் ரிக்ஷாவில் கொண்டு சென்ற சுவாமிபடங்கள் ஆகிய அனைத்தையும் எங்கள் வீட்டில் உள்ள ''பிராத்தனை அறையில்'' வைத்து எல்லோரும் கீழே விழுந்து வணங்கித் திருநீறு அணிந்து கொண்டோம்.

நாங்கள் புறப்பட்ட அன்று எங்களை வாழ்த்தி அனுப்பிய போது வாக்களித்தபடி **''அருளாடியார்'' திரு. பழநியப்ப செட்டியார்** அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் தலைமையில் எங்கள்

இல்லத்தில் நிகழ்ந்த நிறைவுக் கூட்டத்தில் எம். ரெட்டியாபட்டி திரு. வெங்கடசாமியும் மற்றும் பல அன்பர்களும் எங்களைப் பாராட்டிப் பூமாலை சூட்டினர். ''அருளாடியார்'' திரு. பழநியப்ப செட்டியார் அவர்கள் எங்களை வாழ்த்திப் பேசிக் கொண்டிருந்த பொழுது காசி விசுவநாதர் கோயில் நிர்வாக அதிகாரி யிடம் இருந்து ஒரு பதிவுத் தபால் என் பேருக்கு வந்தது. அதனை வாங்கித் திறந்தேன். என்ன ஆச்சரியம்! அதில் எங்கட்கு உரிய ''காசிஸ்ரீ பட்டம்'' பொறிக்கப் பெற்ற கோவில் பத்திரம் இருந்தது. அதனை அருளாடியார் அவர்களிடம் கொடுத்து எல்லோருக்கும் வழங்கச் சொன்னேன்.

''காசிஸ்ரீ'' பட்டம் பொறிக்கப் பெற்ற விசுவநாதர் கோயில் பத்திரத்தினை எங்கள் அனைவர்க்கும் தம் திருக்கரத்தினால் வழங்கி, திருநீறு அளித்து, ''அருளாடியார்'' அவர்கள் பேசியதாவது:

''காசி நடைப் பயணம் என்ற புதிய சரித்திரத்தை நம் கவிஞர் சோமசுந்தரம் அவர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில் தொடங்கி நடத்திக் காட்டி, மகத்தான சாதனையை மிக எளிமையாகப் புரிந்திருக்கிறார்கள். இவர்கள் மிகவும் கைராசி உடையவர்கள். நல்ல பண்பாளர். சிறந்த கவிஞர். நிறையப் படித்தவர்கள். பழநிப் பாதயாத்திரை கடந்த நானூறு ஆண்டுகளாக நடந்து வருகிறது. இவர்கள் மற்ற ஐந்து படை வீட்டு யாத்திரைகளைத் தொடங்கி மக்களுக்குத் தெய்வ பக்தியை ஒட்டு மொத்தமாக ஊட்டி வருகிறார்கள். அத்துடன் மிகப் பெரிய காசி நடைப் பயணம் என்ற சாதனையைப் பழநியாண்டவர் கிருபையால் வெற்றிகரமாக நிகழ்த்திப் பத்திரமாக வீட்டுக்கு இன்று திரும்பி வந்திருக்கிறார்கள். இவர்கள் தொடங்கி உள்ள காசி நடைப் பயண யாத்திரை இன்னும் தொடர வேண்டும்.

பல பேர் தொடர்ந்து காசிக்கு நடந்து சென்று வர வேண்டும். அப்படி இனிமேல் தொடர இருக்கும் காசி நடைப் பயணங்களுக்கெல்லாம் குருநாதராகக் கவிஞர் சோமசுந்தரம் இறையருளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார். இவரது சாதனை ஈடு இணை இல்லாதது. இவரையும், இவரோடு இணைந்து செயலாற்றி இச் சாதனை நிகழ்த்தித் திரும்பியுள்ள மற்ற அன்பர்களை யும் மனமாரப் பாராட்டுகிறேன்.

உத்தரப் பிரதேச அரசாங்கத்தின் நிர்வாகத்தில் உள்ள காசி விசுவநாதர் ஆலயத்தின் மூலம் உ.பி. அரசாங்கச் சார்பில் வழங்கியுள்ள "காசிஸ்ரீ" பட்டம் பொறிக்கப் பெற்ற பத்திரத்தை இன்று இந்திய மக்களின் சார்பாக இவர்கள் அனைவருக்கும் வழங்குகிறேன். காசிஸ்ரீக்கள் புகழ் உலகம் உள்ள அளவும் நிலைக்கும்" என்று கூறி வாழ்த்தி அனைவருக்கும் பொன்னாடை போர்த்தினார்கள்.

பிறகு எங்கள் இல்லத்தில் நிகழ்ந்த மதிய விருந்தில் அருளாடியார் பழநியப்ப செட்டியார் அவர் களும், உள்ளூர் வெளியூர் அன்பர்களும், காசிஸ்ரீக்களும் கலந்து கொண்டனர். காசிஸ்ரீக்கள் அனைவர்க்கும் பூ, பழம், ரொட்டி, வெற்றிலை பாக்கு அடங்கிய ஒரு பிளாஸ்டிக் வாளியினை அருளாடியார் திருக்கரத்தால் வழங்கச் செய்தேன். அதுபோல் எங்கள் காசி நடைப் பயணக் குழுவைச் சேர்ந்த மற்ற மூன்று உறுப்பினர்கள் ஆகிய "திருத் தொண்டர்" வயிரவன் அவர்கட்கும், "இசைத் தொண்டர்" காசிநாதன் அவர்கட்கும், "இசைத் தொண்டர்" இராம. இலக்குமணன் அவர் கட்கும் அருளாடியார் திருக்கரங்களால் வாளி வழங்கச் செய்தோம்.

அனைவருக்கும் அருளாடியார் அவர்கள் பொன் னாடை போர்த்தினார்கள்.

அருளாடியார் அவர்கட்கும் ஒரு பெரிய வாளியில் பூ, பழம், ரொட்டி முதலியன வைத்து வழங்கிப் பயபக்தியோடு வீட்டுக்கு அனுப்பி வைத்தோம். அவர்கள்விடை பெற்றபின் காசிஸ்ரீக்கள் அனைவரும் என்னிடமும், எங்கள் வீட்டாரிடமும் நன்றி கூறிப் பிரியா விடைபெற்றுச் சென்றனர்.

எல்லோரும் சென்றபின் அடியேன் எங்கள் வீட்டுக் கிணற்று நீரில் குளித்து விட்டு அதே ஈரமஞ்சள் உடை யோடு எங்கள் வீட்டில் உள்ள பிரார்த்தனை அறையில் நுழைந்தேன். என் **சிறிய தாயார் திருமதி உண்ணாமலை ஆச்சி** அவர்கள் தம் திருக்கரத்தால் எனக்கு வெள்ளை உடை எடுத்துத் தந்தார்கள். இவர்கள் தான் நாலரை மாதம் முன்பு எனக்கு மஞ்சள் ஆடை தந்தவர்கள். இப்பொழுது மஞ்சள் ஆடைகளைக் கழற்றி வைத்து விட்டு, வெள்ளை ஆடைகளை அணிந்து கொண்டேன். காட்டு வாழ்க்கை முடிந்து நாட்டு வாழ்க்கைக்குத் திரும்பினேன். வெள்ளை உடையில் என்னைப் பார்த்த பிறகுதான் என் மனைவிக்குப் போன உயிர் திரும்பியது! அவளது மாங்கல்யபலத்தை எல்லோரும் மெச்சினார்கள். எனது மஞ்சள் ஆடை காசி நடைப்பயண நினைவுச் சின்னமாக வீட்டில் இருக்கிறது.

நாலரை மாத காலம் அயராது நடந்து உழைத்து வந்த என் உடம்பு மிகவும் சோர்ந்துகிடந்தது. எனவே தரையில் படுத்தேன். எப்படித் தூங்கினேன் என்பதே தெரியவில்லை. என்னால் திரும்பிக் கூடப் படுக்க முடியாத அளவுக்கு என் உடல் மிகவும் பலவீன மாக இருந்தது.

என் உடம்பில் இப்பொழுது எந்தப் பலமுமே இருப்பதாக என்னால் எண்ண முடிய வில்லை. என் உடம்பை விட்டு ஏதோ ஒரு சக்தி

வெளியேறி இருப்பதுபோல உணர்ந்தேன். அது என்ன சக்தி? அந்தச் சக்திதான் என்னைக் கடந்த நாலரை மாத காலமாகக் காட்டிலும் மலையிலும், நாட்டிலும் நகரிலும், வெயிலிலும் மழையிலும், பகலிலும் இரவிலும், அஜீரணத்திலும் பட்டினியிலும் இயக்கியது. என் உடம்புக்குத் தேவைப்பட்டவரை அந்தச் சக்தி என் உடலில் இருந்தது. இப்பொழுது அது போய்விட்டது.

அது என்ன சக்தி? அதைத்தான் தெய்வீக சக்தி என்கிறார்களோ? நடைப் பயணங்களில் இந்தச் சக்தி இருக்கும் என்பதால் தான் மற்ற மக்கள் பாதயாத்திரிகர்களை வணங்குகிறார் களோ? அந்தச் சக்தி இருப்பதால்தான் பாத யாத் திரிகர்களின் சொல் பலிக்கிறதோ?

எப்படி இருந்தாலும் இப்பொழுது நான் மிகவும் பலமிழந்தவனாகக் காணப்பட்டேன். நான் பயணம் புறப்பட்டபொழுது எனக்கு இருந்த மனநிலை இப்பொழுது இல்லை. நாலரை மாதத் தில் என் மனோநிலை மிகவும் மாறிவிட்டது. துறவு உள்ளம் என்னைத் தொற்றிக் கொண் டிருப்பதை உணர்ந்தேன். இல்லற வாழ்க்கை யிலும், உலகியல் பாசத்திலும் உள்ளம் ஒட்டாமல் நிற்பதைக் கண்டு கொண்டேன். இதைத்தான் தாமரை இலைத் தண்ணீர் என்கிறார்களோ?

சாக்ரட்டீஸ் சொன்னது போல என்னையே நான் ஆராயத் தொடங்கினேன். ''ஏதோ ஒரு காரியத்திற்காக இறைவன் நம்மைப் படைத்திருக்கிறான்'' என்று பௌராணிகர்கள்று கூறுகிறார்கள். இறைவன் எதற்காக என்னைப் படைத்திருக்கிறான்?'' என்று சிந்தித்தேன். அதற்கான சத்திய சோதனை எவ்வளவு காலம் நிகழுமோ? — அது அவனுக்கே தெரியும்.

127. பாராட்டுக்கள்

நாங்கள் காரைக்குடிக்கு இனிதே வந்து சேர்ந்த 2-7-1983 அன்று இரவு 7 மணி அளவில் தேவகோட்டையில் **திருமுருக கிருபானந்த வாரியார்** அவர்கள் தமது பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியில் எங்களைப் பாராட்டிப் பூமாலை சூட்டி, தமது **''தவம்''** என்ற நூலை எங்கட்குப் பரிசளித்து, நெடிய தவத்தை நிகழ்த்தியுள்ள எங்களை **''இக்கால நாயன்மார்கள்''** என்று வர்ணித்துப் பாராட்டி வாழ்த்தினார்கள். இப்படி நாங்கள் ஊருக்கு வந்த நாள் முதலே பாராட்டுக்கள் தொடங்கிவிட்டன. ஆயிரக் கணக்கில் பாராட்டுக் கடிதங்கள் வரலாயின.

முதுகுளத்தூர் வடக்குவாசல் செல்வி அம்மன் பூச்சொரிதல் ஏழாம் ஆண்டு விழாவில் 22-7-83 இரவு இராமநாதபுரம் திரு. **காசிநாததுரை** தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சொ. **பாலகிருஷ்ணன்** என்னைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினார். திரு. **ஜோதி கிருஷ்ணா** வாழ்த்துரைத்தார்.

பெங்களூரில் கர்நாடகா நகரத்தார் சங்கத்தின் சார்பில் மிகப் பெரிய அளவில் பாராட்டு விழா சங்கத் தலைவர் தலைமையில் **வள்ளல் பழனியப்பன் இராமசாமி** அவர்கள் முன்னிலையில் நடத்தப் பெற்றது. பழநியப்பன் இராமசாமிதான் எங்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வழங்கியவர். அவர் இவ்விழாவில் கலந்து கொண்டு அடியேனுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

பேராசிரியர் டாக்டர் அர. சிங்கார வடிவேலன், பேராசிரியர் கண சிற்சபேசன், கவிதா ராணி முதலிய பலர் பாராட்டிப் பேசினர்.

சேலம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் அதன் 17-ஆம் ஆண்டு நினைவு விழாவில் 7-8-1983 அன்று சங்கத்தலைவர் திரு. **எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார்** தலைமையில் தமிழகச் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு திரு. **க. ராஜாராம்** முன்னிலையில், தொழிலதிபர் திரு. **பழ. அண்ணாமலை செட்டியார்** அவர்கள் என்னைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

17-12-83 அன்று காரைக்குடி **இந்துமதாபிமான சங்கத்தின்** சார்பில் சிவன் கோவிலில் நிகழ்ந்த பாராட்டுக் கூட்டத்தில் "பெரியவர்" திரு. அபிசீனியா நாச்சியப்ப செட்டியார் எனக்குப் பொன்னாடை போர்த்தினார். சங்கச் செயலர் திரு. அரு. ராம. முத்து ராமன் என்னைப் பாராட்டினார். "காசிப்பயண அனுபவம்" பற்றி அடியேன் **இரண்டு மணி நேரம் விரிவுரை** நிகழ்த்தினேன்.

பழநிப் பாதயாத்திரைக் குழுவினர் சார்பாகப் பழநியில் 22-1-84 காலை திரு. **ஏ. சேனாபதி கவுண்டர் M.P.** அவர்கள் தலைமையில் எங்கட்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தப் பெற்றது-அதில் திரு. உ. மாணிக்கம் செட்டியார், தி. ராம. தி. பழ. சுப. சிதம்பரம், பேராசிரியர் டாக்டர் சுப. அண்ணாமலை, கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம், தியாகி இராம. அண்ணாமலை, "பழம்நீ" முத்து மாணிக்கம் ஆகியோர் பாராட்டிச் சிறப்பித்தனர்.

அன்று சிங்கம்புணரில் பழநிப் பாதயாத்திரிகர்கள் சார்பாக எங்கட்குப் பொன்னாடை போர்த்தப் பெற்றது.

சென்னை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 19-2-1984 அன்று சென்னை ''சேம்பர்'' மாளிகையில் **செட்டிநாட்டரசர் ''ராஜாசர்'' முத்தையாச் செட்டியார்** அவர்கள் தலைமையில் எங்களுக்குப் பாராட்டு விருந்து அளிக்கப்பெற்றது. விழாவில் திரு. எம். எஸ். ஆர்.எம். மெய்யப்பன், திரு. கே. தியாகராஜன், பேராசிரியர் திரு கண. சிற்சபேசன், சங்கத்தலைவர் திரு. சு. ராம. பழ சுப்பிரமணியன் செட்டியார், செயலர் பழ. பழநியப்பன் ஆகியோர் எங்களைப் பாராட்டிப் பேசினர். தள்ளாத வயதிலும் விழாவுக்கு வந்து தலைமை தாங்கிய செட்டி நாட்டரசர் திரு. முத்தையா செட்டியார் அவர்கள் எங்கட்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்கள்.

அப்பொழுது, 1961-ஆம் ஆண்டில் எனது முதல் கவிதை நூலாகிய **''கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன்''** என்ற நூலை அமைச்சர் திரு. **சி. சுப்பிரமணியம்** அவர்கள் சென்னையில் வெளியிட்ட விழாவிற்குச் செட்டி நாட்டரசர் திரு. முத்தையாச் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கி, எனக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்திய நிகழ்ச்சியினை நினைவு கூர்ந்தேன்.

புதுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பில் நிகழ்ந்த பாராட்டுக் கூட்டத்திற்குப் பெரும்புலவர் **முரு. பழ. இரத்தினம் செட்டியார்** அவர்கள் தலைமை தாங்கி, அடியேனுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். புதுக்கோட்டைப் புலவர்கள் பலர் பாராட்டிப் பேசினர்.

துலாவூரில் நிகழ்ந்த விழாவில் தவத்திரு. **குன்றக்குடி அடிகளார்** அவர்கள் என்னைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினார்கள்.

தஞ்சாவூர் நகரத்தார் சங்கத்தில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் அதன் தலைவர் அடியேனைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினார்கள்.

15-2-85 அன்று தேவகோட்டையில் நிகழ்ந்த **உடையம்மைக் கிழவி படைப்பில்** திரு. லெ. ராம. முரு. முருகப்ப செட்டியார் எனக்குப் பொன்னாடை போர்த்த, திரு சுப. பழனியப்பன், சுப. செட்டியப்பன் ஆகியோர் என்னைப் பாராட்டிப் பேசினர்.

நாடெங்கிலும் இருந்து ஏராளமான **பாராட்டுக் கடிதங்கள்** வந்தன. அவற்றில் சில வருமாறு:

ஃ ஃ ஃ

"இராமேஸ்வரம் காசி நடையாத்திரையாக இராமேஸ்வரத்தில் இருந்து 17-2-83 காலை தொடங்கி 13 பேர் பங்குபெற்று இரண்டாயிரம் மைல் தூரத்தை ஆறு மகாணங்கள் வழியாக நான்கு மாதங்களில் நிறைவேற்றி இருப்பதறிந்து மகிழ்ச்சி. தங்கள் பாத யாத்திரை சிறப்பாக அமைந்து தாங்கள் உடல் நலத்துடன் பயணத்தை முடித்து வெற்றியுடன் ஊர் திரும்பியதற்கு அங்கயற்கண்ணி தன்னொடும் அமரும் ஆலவாய் அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றேன்" **லெ. நாராயணன் செட்டியார்** தொழிலதிபர்—மதுரை—

ஃ ஃ ஃ

"சைவர்கள் வழிபட்டுப் போற்ற வேண்டிய பணி இது. இன்று பல அமைப்புக்கள் இதனைப் பின்பற்றுகின்றன. உங்கள் குழு நல்ல முன்னோடியாகத் திகழ்கின்றது. வாழிநும் பணி!"

பூம்புகார் தாசில் பண்ணை கண்ணகிகோட்டத் தலைவர் திரு. **ராஜசேகரன்**

ஃ ஃ ஃ

"காசிவரை பாதயாத்திரை செய்து வெற்றியுடன் திரும்பிய தாங்களும் மற்ற நண்பர்களும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்."

—சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் **குழந்தைக் கவிஞர்** திரு. அழ. **வள்ளியப்பா**

ஃ ஃ ஃ

"செயற்கரிய செயல்புரிந்த தங்கள் சாதனை சரித்திரப்புகழ்பெறக் கூடியதாகும். என்றும் மறக்க இயலாது; எவராலும் நடத்த இயலாது; இனி ஒரு முறை காண இயலாது'!— தங்கள் தொண்டும் தோற்றமும் சைவ சமயத்தை வளரச் செய்யும் என்பதில் ஐயமில்லை."

—லெ. **சோமசுந்தரம்**; ஸ்ரீ கைலாச ஆஸ்ரமம்! பெங்களூர்

ஃ ஃ ஃ

அன்பர்களுடன் நீங்கள் மேற்கொண்ட இராமேஸ்வரம்— காசி நடையாத்திரை செவ்வனே நிறைவேறியது அறிந்து பெரிதும் மகிழ்கிறோம். உங்கள் குறிப்பின்படி நாட்டின் ஒருமைப்பாடு, நலம், வளம் ஆகியன செழிக்க ஸ்ரீ விசுவநாதமூர்த்தி அருள் புரிவாராக.

—தத்புருஷதேசிகர் ("பாலகவி" வே. **இராமநாதன்** செட்டியார்)

ஃ ஃ ஃ

நீங்கள் காசி சென்று அடைந்ததைத் "தினமணி" முதல் பக்கத்தில் பார்த்து மகிழ்ச்சி அடைந்தவர்களில் நானும் ஒருவன். உங்கள் "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்" என்ற திண்ணிய எண்ணத்தைப் பாராட்டுகிறேன்.

—இல. **கஸ்தூரி ரெங்கன்**; திருச்செந்தூர்

ஃ ஃ ஃ

''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்ற மணிவாசகப் பெருமானின் வாக்கின்படி தங்களுக்கு இறைவனின் திருவருள் பரிபூரணமாக உள்ளது. இல்லையென்றால் இவ்வளவு வெற்றிகரமாக இச்சமயச் சாதனை நிகழ்ந்திருக்க முடியாது. தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழவும், மேலும் பல சமயச்சாதனைகள் புரியவும் எல்லாம் வல்ல திருவருட் கருணையை வேண்டி நிற்கின்றோம்.

—**கா. மா. தியாகராஜன்** காமரெட்டி; ஆந்திரா.

ஃ ஃ ஃ

''செயற்கரிய செய்வார் பெரியர் என்கிற சொற்படி, செயலில் காண்பித்து, பாரதத்தின் ஒரு கோடியில் புறப்பட்டு, ஏறத்தாழ 2000 மைல் கால் நடையாக மற்றொரு கோடியைப் பல இன்னல்களுக் கிடையே கடந்து சேர்ந்த தங்களுக்கும், தங்கள் குழுவினர்க்கும் எங்கள் அன்பான வணக்கங்கள்.''

—**என். கே. சுப்பய்யா** சிதாபூர்—கர்நாடகா.

ஃ ஃ ஃ

''தங்கள் இராமேஸ்வரம்—காசி பாதயாத்திரை சவுகரியமாகவும் சிறப்பாகவும் நடந்து இனிதே நிறை வெய்தத் திருவருள் புரிந்த திருச்செந்திலாதிபனுடைய பாதங்களில் சிரம் தாழ்த்தி வணங்குவதோடு, தங்களுக்குத் தீர்க்காயுளையும், எல்லா நலன்களையும் தந்தருள வேணுமாய்ப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

—**வ. முத்தைய செட்டியார்**; இராசபாளையம்.

ஃ ஃ ஃ

தாங்கள், மற்றும் தங்கள் குழுவினர் செய்து முடித்த அரும்பெரும் செயலைப் பத்திரிகைகளில் பார்த்துப் பரவசம் அடைந்தேன். இந்திய உபகண்டம்

முழுவதும் நம் தமிழகத்தின் பெருமையையும், நகரத்தார்களின் நாகரீகத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்த இந்தப் புனித நெடும்பயணத்தின் போது, தங்களுடன் ஓரிரு நாட்கள் பங்குகொண்டு, தங்களுக்குப் பணிபுரிய எனக்குக் கிடைத்த வாய்ப்பு குறித்து இன்றும் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

—காமரெட்டி கருப்பையா (ஆந்திரா)

ஃ ஃ ஃ

"பல்லாண்டுகளுக்குமுன் நம் குருமார்களும், முன்னோர்களும் கையாண்ட முறையை நீங்கள் செய்து புதுப்பித்துள்ளீர்கள். செயற்கரும் செயலைச் செம்மையாகச் செய்த உங்களையும், ஒத்துழைத்த குழுவினரையும் மிகவும் போற்றுகிறேன்.

நம் சமூகத்தை — சமுதாயத்தை — நாட்டை பக்தி வழியில் ஈடுபடச் செய்யும் தங்கள் முயற்சியை எல்லாம் வல்ல இறைவன் உடனிருந்து பூர்த்தி செய்து வைப்பார் என்பதில் ஐயமில்லை.

— **மு. வினைதீர்த்தான்** செட்டியார்; புதுவயல்

ஃ ஃ ஃ

அனைவரின் நலம் கருதித் தாங்கள் மேற்கொண்ட இந்நூற்றாண்டின் மாபெரும் சமயச் சாதனையாகிய இராமேஸ்வரம் காசி பாதயாத்திரையானது எழுத்தில் வடிக்க முடியாத மாபெரும் சாதனையாகும். இது போன்ற சமயத் தொண்டினைத் தொடர்ந்து மேன்மேலும் ஆற்ற வேண்டுமாய்ப் பழநிப் பதி வாழ் பாலதண்டாயுதபாணியை வேண்டி வணங்குகிறேன்.

—**என். என். வைரவன்** செட்டியார்.

சண்முகநாதன் ஸ்டோர். புதுக்கோட்டை.

ஃ ஃ ஃ

உங்கள் வீரதீர யாத்திரை, ஆன்மாவானது. உடலை வெற்றி பெற முடியும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் ஆகும். கடவுளின் அருள் இருந்தால் நாம் தோல்வி அடைய மாட்டோம்; அவன் அருள் இல்லா விட்டால் நாம் வெற்றி பெற முடியாது என்பதை உங்கள் யாத்திரை நிரூபிக்கிறது.

—டி. விஎஸ். மணியன் காரைக்குடி.

ஃ ஃ ஃ

பாதயாத்திரையாக இராமேஸ்வரம் காசி புனிதத் தலங்களைத் தொட்டுத் தொடங்கி, இறை தரிசனம் செய்து இன்புற்றுத் திரும்பத் திருவருள் கூட்டி இருக்கிறது தங்களுக்கு — எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

—ஸ்ரீ ஞான சம்பந்த தேசிகர்.

292 ஆவது குருமகா சந்நிதானம் திரு. ஞானசம்பந்தர் மடம்; மதுரை ஆதீனம்.

ஃ ஃ ஃ

தங்கள் பாதயாத்திரை இனிதே வெற்றியுடன் நிறைவேறியதற்கு எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி தன்னோடு அமர்ந்துறையும் ஆலவாய் அண்ணலை உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

—வி. என். சிதம்பரம்; தக்கார்; அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோவில், மதுரை.

ஃ ஃ ஃ

மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய நண்பருக்கு எல்லா நலன்களும் விளைக. தங்களால் மட்டுமே இத்தகைய அசாதாரணமான, துணிச்சலான, புனித கைங்கரியங்களில் ஈடுபட இயலும். அபாரமான சாதனையைப் புரிந்துள்ள தங்களை எவ்வாறு பாராட்டு

வது என்றே தெரியவில்லை. நான் "தினமணியில்" தாங்கள் தங்கள் குழாத்துடன் இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரையாகச் செல்வதை அறிந்தேன். தங்களுக்கும், தங்கள் நண்பர்களுக்கும் நல்ல வரவேற்பு காசியில் அளிக்கப்பட்டதை "தினமணி" முதல் பக்கத்தில் செய்தி பிரசுரித்திருந்தது. மகிழ்ச்சி—சாதனைக்குப் பாராட்டுக்கள். —**வி. சுவாமிநாதன்**; ஆசிரியர்; கும்பகோணம்.

ஃ ஃ ஃ

"அருமையான இந்தத் திருத்தல நலடப்பயணத்தால் தாங்களும், மற்ற மெய்யன்பர்களும் நிறைந்த திருவருள், நிறைந்த அனுபவம் பெற்றிருப்பீர்கள் என்பது உறுதி. இத்துடன் திருவருள் திருநீறு அனுப்பி உள்ளோம். அணிந்தும், அணிவித்தும் மகிழுங்கள்.

—**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**. குன்றக்குடி.

ஃ ஃ ஃ

தாங்கள் எல்லோரும் சௌக்கியமாய் ஊர் வந்து சேர்ந்ததற்கு என் மகிழ்ச்சி. இராமேஸ்வரத்தில் இருந்து காசிவரை நடையாத்திரையாகச் சென்று திரும்பிய புண்ணிய மூர்த்திகள் அனைவரது பாதார விந்தங்களைத் தொழுது என் மனத்தைத் திருப்திப்படுத்திக் கொள்கிறேன். அடுத்த முறையாவது நடையாத்திரையாக ஸ்ரீகாசிக்கு செல்ல எனக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்ற ஏக்கத்தில் இருந்து வருகிறேன்.

—**ஆர். எம். இராமநாதன்**; பெங்களூர்.

ஃ ஃ ஃ

"எத்தனையோ மகான்கள் இந்த ஞான பூமியிலே! அத்துணை பேருக்கும் எங்களது வணக்கங்கள்."

—**அன்னைமீனாட்சி** நூல்நிலையம்; மதுரை.

"இலக்கியத்துறையில் பெரும் சேவை செய்து வந்த தாங்கள் சமயத்துறையில் பெரிய சசதனையை நிகழ்த்தி விட்டீர்கள். நாடே உங்கள் சாதனையைக் கண்டு பிரமித்து நிற்கிறது. வாழ்க நீங்கள்! வளர்க உங்கள் சமயத்தொண்டு!

—உ. சிவராமன். முதல்வர்; ஸ்ரீவித்தியா மந்திர் மேல்நிலைப்பள்ளி; சேலம்—

ஃ ஃ ஃ

தங்களது திருத்தலப் பயணம் இறையருளால் நன்கு நிறைவெய்தியது குறித்து மகிழ்ச்சி. 2-7-83 காரைக் குடியில் பாதயாத்திரைக் குழுவினரை வணங்கி ஆசி பெற வருவோம். இது ஒரு பெரும் சாதனையே.

—பேராசிரியை டாக்டர் சரஸ்வதி இராமநாதன்

ஃ ஃ ஃ

எல்லோரும் காசியாத்திரை வெற்றிகரமாகப் போய்வந்ததைப் பற்றி சந்தோஷம் அடைகிறேன்.

—ஆர். இராமநாதன் செட்டியார், அரண்மனை;
செட்டிநாடு

ஃ ஃ ஃ

நாம் ஒவ்வொருவரும் பெருமைப்படக் கூடிய பெரிய சாதனைஇது. பாராட்டுக்கள்.

—யெ. மு. சொக்கலிங்கம்; புதுவயல். (சென்னை)

ஃ ஃ ஃ

தாங்களும் நண்பர்களும் நடத்திய இராமேஸ்வரம்—காசி நடையாத்திரை வெற்றிகரமாக முடிந்ததை அறிய மகிழ்கிறேன். தங்கட்கும், மற்ற நண்பர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ப. நெடுமாறன். M. L. A. மதுரை.

"தாங்கள் ஓர் அரிய சாதனையை ஏற்படுத்தி உள்ளீர்கள். தங்கள் எல்லோரையும் நேரில் கண்டு தரிசித்துப் பிரசாதம் வாங்கிக்கொள்ள மிக்க ஆவல்.

— பேராசிரியர் **இராம. லெட்சுமணன்.**
அரசினர் பொறி இயற் கல்லூரி. சேலம்—

ஃ ஃ ஃ

வெற்றிகரமான, துணிவான, தெய்வீகமான சாதனை நிகழ்த்தியதற்காக உங்களையும், உங்களது தகுதி வாய்ந்த தோழர்களையும், பாராட்டுகிறோம், உங்கள் அனைவரையும் வாழ்த்துமாறு இறையருளைப் பிரார்த்திக்கிறோம்'

— எம். எஸ். கிருஷ்ண மூர்த்தி; கௌரவ மானேஜர் ஸ்ரீஸ்ரீஜகத்குரு மகாசமஸ்தானம் சாரதா பீடம், சிருங்கேரி, (சேலம் கிளை) சேலம்.

ஃ ஃ ஃ

இந்த நெடிய பயணம் உண்மையிலேயே தனிச் சிறப்புப் பெற்றது.

—நா இராமச்சந்திரன் M. A., M, Ed. ஒத்தையால் சாத்தூர்.

ஃ ஃ ஃ

"இவ் இருபதாம் நூற்றாண்டில் நவீன போக்கு வரத்து வசதிகள் மிகுந்துள்ள நேரத்திலும், தங்களைப் போன்றோர்க்குப் போதிய நிதிவசதி இருக்கின்ற காலத்தும், தமிழகத்தில் துணிச்சலாக இறைவன் மேல் பாரத்தைப் போட்டுக் காசிக்குப் பாதயாத்திரை மேற் கொண்டமை போற்றுதற்குரிய செயலாகும்.

தாங்கள் புனிதமான திருக்கோவில்களுக்குப் பாதயாத்திரையாகச் சென்று வந்தமை அனைவரும்

அறிந்ததே. இருப்பினும் இஃது தமிழகத்துக்கே பெருமைத்தேடித்தரும் செயலாகும்.

தாங்கள் இராமேசுவரம் முதல் காசிவரை பாத யாத்திரை சென்று இடையில் தரிசித்த பல ஆலயங்களின் பெருமையையும், மற்றும் காணத்தக்க காட்சிகளையும் ஒரு நூலாக வெளியிட்டால் என் போன்றோர் படித்துப் பயன்பெறலாம் என்பது என் பணிவான வேண்டுகோள்.

—**புலவர் பெருமாள்**; கீரனூர்

ஃ ஃ ஃ

இறைவன் அருளால் செயற்கரிய பாதயாத்திரையை இனிதே முடித்த தங்கள் குழுவினருக்கு எங்கள் பாராட்டுதல்கள். பிரமிக்கத்தக்க இந்த இறைப்பணி வியக்கத்தக்கது. முயற்சி உடையோருக்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந்துறும் என்ற பொய்யாமொழிக்கு விளக்கமே தங்கள் சாதனை.

—**எஸ் கிருஷ்ணமூர்த்தி** தலைமை ஆசிரியர்.

அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவாடானை—

ஃ ஃ ஃ

தங்களது மாபெரும் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன். நடந்த நான்கு மாதம் கால்நடையாகத் தெற்கு வடக்கை இணைத்த தங்களது செயல் மகத்தானது. தங்களுடன் நடந்த நண்பர்களுக்கும் என் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

—**பழ. செல்லப்பன்**; நிர்வாக இயக்குநர்.

ஸ்ரீயோகலட்சுமி மில்ஸ். ஷோலிங்கர் (வ. ஆ.)

ஃ ஃ ஃ

பெரும் பொறுப்பு எடுத்து இராமேஸ்வரம் காசி நடையாத்திரைக் குழு அமைத்து, 13 பேர்களுடன்

குறிப்பிட்ட தேதி 12-6-83 அன்றே திட்டமிட்டபடி இறையருளால் இனிதே காசி போய்ச் சேர்ந்தது யாராலும் செயற்கரிய செயல். மன உறுதியுடன் பெரும் சாதனையைச் சாதித்த தங்களுக்குக் காசி விசாலாட்சி விசுவநாதர், நம் வைரவர் எல்லாப்பேறுகளும் அருள நம் வயிரவன் கோவிலில் இருந்து வேண்டுகிறேன்.

—**ராம. மாணிக்கம்.** வயிரவன் கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்; வயிரவன்பட்டி

ஃ ஃ ஃ

வணக்கம். நலம். மகிழ்ச்சியான விஷயம். மிகவும் ஆனந்த மகிழ்ச்சி அடைந்தோம். பாத யாத்திரை வந்த அனைவருக்கும் வணக்கங்கள்.

—**சி. நாராயணன்.** மாமிடிப்பள்ளி; ஆந்திரா

ஃ ஃ ஃ

தங்கள் தலைமையில் இராமேஸ்வரம் காசி நடையாத்திரை வெற்றிகரமாக முடிந்தது பற்றி இங்கு எல்லோருக்கும் அளவிலா மகிழ்ச்சி.

—**எம்.எஸ்.ஓ. சொக்கலிங்கம். சேலம்**

ஃ ஃ ஃ

தாங்கள் காசிநகர் அடைந்து 'வரவேற்கப் பெற்றமை தினமணியில் அறிந்து பெருமகிழ்வடைந் தேன். தங்களுக்கும் தங்கள் யாத்திரைக் குழுத் திருத் தொண்டர்களுக்கும் அடியேனின் வணக்கம் என்றும் உரியது.

—**பி. வெங்கட்ராமன்.** தலைமை ஆசிரியர்

அரசினர் மேல்நிலைப்பள்ளி; கந்தர்வகோட்டை

ஃ ஃ ஃ

பன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாகனவசதி ஏதுமில்லாத அக்காலத்தில் சிவபக்தர்கள் இராமேஸ்வரம் காசிக்கு நடையாத்திரையாகச் சென்று தீர்த்தங்கள் ஆடியும், சுவாமிதரிசனம் செய்தும் சிவனருளைப் பெற்றார்கள். **சேதுமாதவர்** என்கிற சிவபக்தர் இராமேஸ்வரம் காசிக்குப் போய்வந்தும், இராமேஸ்வரம் தீர்த்தத்தைக் காசி விஸ்வேஸ்வரருக்கும், காசிக் கங்கை நீரை இராமேஸ்வரம் இராமலிங்கத்திற்கும் கொண்டு வந்து அபிஷேகம் செய்ததாகச் சொல்வார்கள். இதைக்கண்டு, அவருடைய பேரன்புக்கு இரங்கி, அவரைத் தடுதது நிறுத்தி, கங்கை நீரை இராமேஸ்வரத்திற்கு ஈஸ்வரன் வரைவழைத்தாராம். அதுதான் **கோடிதீர்த்தம்** என்கிறார்கள். தங்கள் குழு இக்காலத்தில் சிவன் பேரில் உள்ள பேரன்பால் காசிக்கு நடந்து சிவனருள் பெற்றுள்ளார்கள். உங்களால் எங்களுக்கும் அந்த அருள் கிடைக்கப் பெற்றது, எங்கள் பாக்கியம். உங்கள் அடிபணிந்து வணங்குகிறோம்.

—**சோம. வீரப்பா**. நேமத்தான்பட்டி.

ஃ ஃ ஃ

"இறையருட் செல்வராகிய தங்களுக்கு வாழ்த்துக்கள். பக்திப்பரவசம் அடைந்துவரும் தங்கள் புகழ் திக்கெட்டும் பரவட்டும்.

—**கவிஞர் தாஹா** அதிராம்பட்டினம்.

ஃ ஃ ஃ

"தெய்வசிந்தனையாலும், நிறைந்த பக்தியாலும், விடாமுயற்சியாலும் தாங்கள் மேற்கொண்ட பெரிய-முதல்பயணம்-நம்மவர்களுக்கும் ஆஸ்திகப் பெருமக்களுக்கும் பெருமை தரும் நிகழ்ச்சி.

அரு. சுப்பிரமணியன். சேலம்.

ஃ ஃ ஃ

"அரிய செயல்கள் பல தொடர்ந்து தாங்கள் செய்தல் வேண்டும். அதற்கு இறைவன் அருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்கின்றோம்.

—ந. **செண்பகம்,** தலைமை ஆசிரியர். அரசினர் மேல்நிலைப்பள்ளி; சத்திரப்பட்டி.

ஃ ஃ ஃ

"தங்களுக்குக் "'காசிஸ்ரீ'' பட்டம் மிகப் பொருத்தம். காசிக்குக் கால் நடையாகச் சென்று வந்தது வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று. மிகமிகப் பாராட்டுகிறேன். வாழ்க சிவத்தொண்டு! வளர்க செல்வம்!!

—**திருநாவுக்கரசு.** வானதிபதிப்பகம், சென்னை-17

ஃ ஃ ஃ

"தாங்கள் நல்ல சுகமாய் யாத்திரை முடித்து வந்ததற்கு முருகப் பெருமானை மேலும் பிரார்த்தனை செய்து நல்ல சுகம் அடைய வேண்டுகிறேன்.

—**ஔரிசண்முகசுவாமி.** பாம்பன்.

ஃ ஃ ஃ

"இறைவன் அருளால் தாங்கள் ஒரு சாதனை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். அந்தமுறையில் உங்களுக்கும், உங்களுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பெருமை. இதேபோல மீண்டும் மீண்டும் பல சாதனைகள் புரியத் தங்களுக்கு ஆண்டவன் நல்லாசி வழங்கப் பிரார்த்திக்கிறோம்.

—**பெரி. பெரியகருப்பன்.** பெங்களூர்.

ஃ ஃ ஃ

"தாங்கள் மேற்கொண்ட பயணம் மிகவும் கடினமானது. அதை ஒரு இமாலய சாதனை என்று தான்

கொள்ள வேண்டும். வெற்றிகரமாக முடித்து வந்தமைக்கு இதயங்கனிந்த பாராட்டுதல்கள்.

—**இராம. வெள்ளையப்பன்.** பொள்ளாச்சி
தமிழ்இசைச் சங்கம். பொள்ளாச்சி.

ஃ ஃ ஃ

காசிக்கு நடந்து செல்லலாம் எனப் பேச்சு அளவில் பேசிக் கொண்டதைச் செயல் அளவில் செய்து காட்டிய **செயல்வீரர்** தாங்கள் தான் என்பதைக் காட்டிய பெருமை தங்களைச் சார்ந்தது. நடையாத்திரைக் குழு வினர்க்கு என் நன்றி.

—**அ. முருகப்பசெட்டியார்.** தேவகோட்டை

ஃ ஃ ஃ

தங்களின் முயற்சி திருவினையாக்கியது. இறையருளால் இனிதே பாதயாத்திரை சென்று வந்தமையைப் போற்றிப் பாராட்டுகிறோம்.

—**அழகப்பசெட்டியார்.** அனந்தப்பூர்

ஃ ஃ ஃ

"இவ்வளவு துணிவுடன் இந்த நடை யாத்திரையைத் துவங்கி வெற்றியுடன் முடித்த தங்கள் எல்லோருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள். தங்கள் கூடவே செந்தில் அதிபனும் வந்திருக்கிறான் என்று எண்ணத்தோன்றுகிறது.

—**ராம. சேதுராமன்.** நாச்சியார் டிரான்ஸ்
போர்ட்ஸ் தூத்துக்குடி.

ஃ ஃ ஃ

தங்கள் பொருட்டு எங்களுக்கும் விசுவநாதர் விசாலாட்சித் தாயார் அருள் கிட்டியது.

—**கரு. கருப்பன் செட்டி.** BHEL. திருச்சி

ஃ ஃ ஃ

"காசி விசுவநாதர் தரிசனத்தின் போது நல்வரவேற்பு சிறப்பாக அளிக்கப் பெற்றதைத் தினமணி மூலம் பார்த்தேன். மகிழ்ச்சி. பாராட்டுக்கள்.

—''சக்திதாசன்'' **கே. கே. சுப்பிரமணிய ஐயர்.**
மதுரை.

ஃ ஃ ஃ

''தங்களின் புனிதயாத்திரையை வெற்றிகரமாக முடித்துக் காரைக்குடிக்கு வரும் தங்களை இறையன்போடு, மகிழ்ச்சியோடு, வருக வருக என வரவேற்கிறேன்.

கே. கந்தசாமி, கோவில் நிர்வாக அதிகாரி. முசிறி.

ஃ ஃ ஃ

''இங்கு இராமநாதர் பர்வதவர்த்தினி வழியனுப்ப, அங்கு விசுவேசர் விசாலாட்சி வரவேற்றுக் கொண்டதைத் தினமணியில் கண்டு களிப்புற்றேன். எண்ணிய எண்ணம் ஈடேறத் துணை வந்து கருணை காட்டிய எம்பெருமானை எள்ளளவும் மறவாது துதி செய்வோம்.

—சித. **உமையாள்,** மங்கையர்க்கரசி மன்றம்;
பள்ளத்தூர்.

ஃ ஃ ஃ

''தங்கள் சாதனை இந்து மறுமலர்ச்சியின் வெற்றிச் சின்னமாகும்.''

ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்; பள்ளத்தூர்.

ஃ ஃ ஃ

''சாதனை நிகழ்த்திய தாங்கள் இன்னும் பன்னெடுங்காலம் சிவத்தொண்டு புரிய உள்ள உறுதியும்

பொருள் உறுதியும் தந்து உதவ எம்பெருமான் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

—கே. லெட்சுமணன். சேலம்.

ஃ ஃ ஃ

"பேரன்புமிக்க கவிஞர் அவர்கட்கு, வயசு கிரமத்தில் முதலில் உங்களை ஆசீர்வதிக்கிறேன்." தங்கள் அமைப்பில் கொண்டுள்ள இராமேஸ்வரம்-ஸ்ரீகாசி பாதயாத்திரை ஆண்டவன் அருளால் சுலபமாக நிறைவேறி, பல புண்ணிய தீர்த்தங்கள் ஆடி, காசி விசுவநாதரைத் தரிசித்துக் கொண்டு, அருட் பிரசாதங்கள் பெற்று, சுகமாக யதாஸ்தானம் திரும்பி வரும் விபரம் அறிந்து மகிழ்கிறோம். எங்கள் நன்றியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

—மு க. பெரி. மு. வீரப்ப செட்டியார்,
தேவகோட்டை.

ஃ ஃ ஃ

தாங்களும் தங்கள் குழுவினரும் மனவலிமையுடனும், உடல் வலிமையுடனும் ஆயிரக் கணக்கான மைல்கள் நடந்து சிவனருள் பெற்ற செய்தி கேட்டு, இங்கு எல்லோரும் ஆனந்தம் அடைந்தோம். தங்களின் அரிய சாதனை கண்டு பரவசம் அடைந்தோம்.

—எஸ். லெட்சுமணன் செட்டியார். நாமக்கல்.

ஃ ஃ ஃ

"நினைத்தற்கரிய ஒரு பெரும் நடைப் பயணத்தை இராமேஸ்வரர் விஸ்வேஸ்வரர் அருளால் இந்த நூற்றாண்டில் நிறைவேற்றி இருக்கிறீர்கள். பாரத மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உலகில் நல்வாழ்வு வாழ வேண்டி இந் நடைப்பயணத்தை மேற்கொண்ட உங்கள் பதின்மூவருக்கும், ஒவ்வொரு இந்தியனும் பெரிதும்

கடமைப் பட்டுள்ளான். உங்கள் அனைவரையும் இங்கு நாங்கள் தரிசித்த வாய்ப்பினை மறக்க இயலாது. தாங்கள் பெற்ற அனுபவத்தைப் புத்தகமாக வெளியிடுவீர்கள் என எண்ணுகிறேன். அதனைப் படிக்க மிகவும் ஆவலாக இருக்கிறேன். இங்கு எங்கள் வீட்டிற்கு வந்து, தங்கள் பாதம் எங்கள் வீட்டில் பட்டதைப் பெரும் பாக்கிய மாகக் கருதுகிறோம்,''

—சுதானந்தன்; ஹைதராபாத்.

ஃ ஃ ஃ

தங்கள் யாத்திரை யாருக்கும் மலைப்பாக உள்ள பெரிய விஷயம். அது மீனாட்சி சுந்தரேஸ்வரர் திரு வருளால் நல்லவிதமாகவும், சிறப்பாகவும் நடைபெற்ற தற்கு ரொம்ப சந்தோஷம்.

—சோம. கருப்பன் செட்டியார். ''சிவபூசகர்''
அமராவதி புதூர்.

ஃ ஃ ஃ

தங்கள் சாதனை கண்டு மனம் பூரித்தேன். இம் மாதிரி சமயத் தொண்டுகள் பல செய்யத் தங்களுக்கு நீண்ட ஆயுளையும், நல்ல ஆரோக்கியத்தையும் அளிக்கு மாறு இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

—ஆ. பழனியப்பன். பழனியப்பா ஸ்டோர்
மளிகை. கானாடுகாத்தான்.

ஃ ஃ ஃ

தங்கள் சாதனை கண்டு வியந்து கொண்டிருக் கிறோம்.

—க. வேலுசாமி, தலைமை ஆசிரியர் விருதுநகர்.

ஃ ஃ ஃ

தங்களின் அரிய புனித காசியாத்திரை அனுபவங்களைக் கவிஞர் அர. சிங்கார வடிவேலன் வாயிலாகக் கேட்டு மனம் சிலிர்த்தேன். தங்களின் புனிதப் பாதங்கட்கு வணக்கமுடையேன்.

—சிந்தனைக் கவிஞர் **பெரி. சிவனடியான்** விழுப்புரம்.

ஃ ஃ ஃ

"தங்கள் அனைவரின் திருப்பாதங்களையும் என் தலைமீது தாங்கி வணங்குகிறேன்.

—மெ. **முருகேசன்.** ஸ்ரீ குமரன் சைக்கிள் மார்ட்,
சிறுமுகை, கோவை மாவட்டம்.

பெரிய சாதனையை விளையாட்டாகவே செய்து முடித்துள்ளது பாராட்டுதற்குரியது. பயண அனுபவங்கள் யாவும் புத்தகமாக வரவேண்டும்.

—**சோம. நாராயணன்.** ஜமீன்தார் மாளிகை,
தேவகோட்டை.

ஃ ஃ ஃ

தங்கள் பாதங்களுக்கு வணக்கம்.

அடுத்த முறை காசிக்கு நடக்கும் பொழுது எங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—**எஸ். நடேசன், ஆர். மணிவாசகன்.** மதுரை.

ஃ ஃ ஃ

"தங்களுக்கு அடுத்தவரி என்ன எழுதுவது என்று தெரியவில்லை. தங்களது ஒவ்வொரு இலட்சியத்தையும் ஆண்டவன் துணையோடு செய்து முடிக்கும் திறமையை நினைத்து மெய் சிலிர்க்கிறது. கண்களில் என்றும் கண்ணீர்த் துளிகள். நிச்சயம் ஆனந்தக் கண்ணீர்தான்!

தங்கள்வீட்டில் இருந்து தங்கள் மகளைத் துணைவியாக அடைய நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

தங்களின் இந்தச் சாதனையை நினைத்து நினைத்து ஒவ்வொரு நாளும் தங்களிடம் இருந்து கடிதம் வரும் போதெல்லாம் நெஞ்சில் ஒரு பெருமிதம், நானே நடந்தது போல!

தாங்கள் காசியை அடையும் அந்த நன்னாளில் நானும் தங்கள் பெயருக்கு ஒரு புஷ்பாஞ்சலி ஐயப்பனுக்குச் செய்து என் மகிழ்ச்சியைக் காட்டிக் கொள்வேன்.

தங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு படியும் நிதானமாகவும் கண்டிப்புடனும் முன்னேறியது போல் காசிக்கு நிதானத்துடனும் மனத் திடத்துடனும் நடந்து கடந்து விட்டீர்கள். அந்தக் காசி விஸ்வநாத சாமியிடம் எங்களுக்கும் உங்களைப்போல் திடசிந்தனை, கோபம் இல்லாமை, எதையும் தாங்கும் மன உறுதி தருமாறு எங்களுக்காகப் பிரார்த்தித்து விபூதி பிரசாதம் அனுப்பி வையுங்கள்.

உங்களோடு நடக்க முடியாவிட்டாலும், நடந்து விட்டதைப் போல் சந்தோஷத்தில் நெஞ்சு அடைத்துக் கண்களில் கண்ணீருடன் இந்தக் கடிதத்தை எழுது கிறேன். இதுவரை நான் இத்தனை உணர்ச்சிவசப்பட்ட சந்தர்ப்பமே இல்லை. ஆண்டவனுக்கு என் நன்றி. தங்களின் சாதனைச் சிகரத்தை எட்டிய கடிதத்தைக் காண ஆவலோடு உள்ளேன்.

—சு. **இராமசாமி;** திருவாங்கூர் ரயான் தொழிற் சாலை பெரம்பாவூர். கேரளா-

ஃ ஃ ஃ

"சாதனை நிகழ்த்தியுள்ள உங்கள் திசை நோக்கித் தெண்டனிடுகிறேன்,

—**மு. இராமசாமி ஒதுவார்** திருச்செந்தூர்.

ஃ ஃ ஃ

"சிறந்த தங்கள் சாதனைக்கு வாழ்த்து. முருகன் ஸ்தல பாதயாத்திரை பக்தர்கள் சார்பில் உங்கள் எல்லோரையும் வாழ்த்துகிறோம்.

—''காவடிசாமி'. **எஸ். ஏகநாதன்.**

ஃ ஃ ஃ

இறைவன் திருவருள் பூரணமாகப் பெறும் தகுதி, தங்கள் அருமைத் தலைமையின் கீழ் 2000 மைல் கல்லும் முள்ளும், காடும் மலையும் தாண்டிச் செல்லும் பொன்னடியார்களுக்குக் கிடைத்தது. தங்கள் அருட் பணியை—இறைவன் திருவருளை நினைந்து வாழ்த்து கிறேன்.

வீர. சிவராமன் செல்வி பதிப்பகம் காரைக்குடி

ஃ ஃ ஃ

"நகரத்தார்கள் செய்யாதது ஒன்றுமில்லை. ஒன்று பாக்கி இருந்தது—காசிக்கு நடப்பது. அதனையும் ஸ்ரீ அரு. சோமசுந்தரம் பூர்த்தி செய்துள்ளார்கள். அக மிக மகிழ்ச்சி. இனி நம்மவரைப் பார்த்து மற்ற அனைவரும் பின்பற்றுவார்கள்—நம் நாட்டுப் பழக்கம்! அனைவர்க்கும் நலமெல்லாம் தர இறைவன் திருவடி வழுத்துகிறேன்.

—**மு. வி. அருணாசலம்**-பெங்களூர்

ஃ ஃ ஃ

"தாங்கள் எல்லோரும் பல இன்னல்களுக் கிடையில் எடுத்த முயற்சியை வெற்றியுடன் முடித்து விட்டீர்கள். கோடியில் ஒருவர் தான் அடைய முடியும். அந்த வரிசையில் தாங்களும் ஒருவர் ஆகி விட்டீர்கள். எங்களையும் ஆசீர்வதியுங்கள்.

—**கிருஷ்ணன்**; சௌத் இந்தியா கார்ப்பரேஷன்
ஹைதராபாத்

ஃ ஃ ஃ

"காசிக்குப் பாதயாத்திரை சென்று பெரும் புண்ணியம் தேடிக் கொண்ட தங்கள் எல்லோருடைய ஆசிர்வாதத்தையும் வேண்டுகிறோம்.

—"பழம் நீ" முத்துமாணிக்கம், மதுரை

ஃ ஃ ஃ

'செயற்கரிய செய்வார் பெரியர்'—என்ற திருவள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது குறித்து மிக்க மகிழ்ச்சி.

"காசி முதல் குமரி வரை உனது எல்லையே
கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே"

என்று நீங்கள் பாடிய உங்கள் கவிதை அரும்பு, போதாகி, மலராகி, பிஞ்சாகி, காயாகிக் கனியாகியது கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறேன். நீங்கள் அனைவரும் உங்கள் வாழ்க்கை வரலாறுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெற வேண்டிய அரிய செயலைச் செய்துள்ளீர்கள். பாராட்டுக்கள்

—புலவர் வே. அண்ணாமலை (வலையபட்டி)
ஆய்வுத் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

ஃ ஃ ஃ

"சங்க காலத்திலும் காணாத நீண்ட நெடிய ஆற்றுப் படையைப் புதுக்கிக் காட்டும் வண்ணம் தங்கள் பயணம் அமைந்துள்ளதை எண்ணி மகிழ்கின்றோம். தாங்கள் நம் கல்லூரியில் மீனாட்சி ஆச்சி நினைவுத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தும் பொழுது, சிலம்பில் **மாடலன்** என்ற பாத்திரத்தில் அதிக ஈடுபாடு காட்டியதன் உண்மை வெளிப்பாடே இந்த நீண்ட நெடிய பயணம் என்பது உறுதியாகிறது.

தங்கள் நடைப் பயணத்தால் பல்வேறு அனுபவங்கள் ஏற்பட்டிருக்கும். இவை தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் புது வருவாய்களாக அமைந்து பலன் தர வேண்டும் என்று காசி இராமேசுவர உமையொருபாகர் அருளை இறைஞ்சுகின்றோம்.

—தெ முருகசாமி; முதல்வர்

இராமசாமி தமிழ்க் கல்லூரி காரைக்குடி

ஃ ஃ ஃ

தங்கள் காசி நடைப் பயணம் தங்களுடைய விடாமுயற்சிக்கு மீண்டும் ஒரு எடுத்துக்காட்டு. அனைவர்க்கும் எங்கள் ஆசி உரித்தாகுக.

—கை. திருநாவுக்கரசு செட்டியார்; திருநெல்வேலி

ஃ ஃ ஃ

"யாரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு அரும் பெரும் சாதனை புரிந்துள்ள தங்கள் முயற்சியைப் பெரிதும் பாராட்டித் தங்களது பாத கமலங்களுக்கு எனது அன்பைக் காணிக்கை ஆக்குகிறேன்

ஒரு குழுவினை ஒருமித்த கருத்துக்கு இணங்க வைத்து, சுமார் நான்கு மாத காலம் தொடர்ந்து பாத யாத்திரை செய்து, அறியாத மக்களையும், இடங்களையும் கடந்து, ஒரு குறிக்கோளை நிறைவு செய்வது என்பது நினைக்க இயலாத செயல். உலகில் அழியாப் புகழ் பெற்று விட்டீர்கள்.

—இசைத்தொண்டர் ந. காசிநாதன்

தேவகோட்டை

ஃ ஃ ஃ

""தென் முனையும் வடமுனையும் இணைத்துநீர்
தீர்த்தம் ஆடிடப் பூண்டிட்ட
தொலைதூரப் புனிதப் பயணம்
துலங்கிட, நன்னோக்கம் நிறைவேற
தகைசால் தலைவர்கள் காண விழைந்த
தரும நெறியாம் ஒருமை உணர்வு
தழைத்திட, வளர்ந்திட, வாழ்த்தினைத்
தந்தனம் உவந்து சிறக்கவே

—**எஸ்வீராசாமி**; தலைமை ஆசிரியர், அன்னப்ப ராஜா நினைவு மேல்நிலைப் பள்ளி; ராஜபாளையம்

ஃ ஃ ஃ

'புண்ணியம் பெற்றிடுவோம்.'

கால் நடையாகக் காசிக்குச் செல்லும்
மக்களைக் கண்டிடுவோம்!

கண்டதினாலே தீவினை யகன்று
புண்ணியம் பெற்றிடுவோம்!

சீலமிகுந்த பக்தி செழிக்கத்
தியாகச் செயல்வேண்டும்.

சிந்தையில் உறுதி கொண்டே நடந்திடும்
செயலைப் போற்றிடுவோம்

பாலும் பழமும் வைத்தவர் பாதம்
பணிந்தே போற்றிடுவோம்

'பயணம்' சிறப்பாய் அமைந்திட நாமும்
பாடிப் பணிந்திடுவோம்

வேலும் மயிலும் துண்ணயாய் நின்றே
வெற்றியைக் கொடுக்கட்டும்

வேண்டிய தெல்லாம் விரைவினில் கிடைக்க
முருகனை வேண்டிடுவோம்.

கவிஞர் **வே. சேதுராமன் பெங்களூர்.**

கங்கை நகர் சேர்ந்தோரே வாழ்க

—கவிஞர் **அ. நாராயணன்**; சேலம்—

காசி நகர் நடக்கின்ற கிளியே வாழி!
கங்கை நகர் சேர்கின்ற கிளியே வாழி!
பாசமுடன் சேலத்துக் குகந்து வந்த
பண்பாட்டுப் பங்காளிக் கிளியேவாழியே

வாச மலர் தானுறையும் ஈசன் தன்னை
வாகான இராமனவன் பூஜை செய்தான்
மாசில்லா ஜானகியின் மாண்பைக் கண்டான்
மங்கலஞ்சேர் எழில் முடியைப் புனைந்து
கொண்டான்

நாடறிந்த புலவரிவர் காசி நோக்கி
நல்லோர்கள் சூழ்ந்து வரப்பயணம் கொண்டார்
ஏடறிந்த நகரத்தார் இன்பம் ஓங்கும்
இலம்பாடு தீர்த்தெங்கும் ஏற்றம் கொள்வார்!

பூசிக்கும் ஆண்டவனைப் பணிந்து நீங்கள்-
புலவருடன் செல்வரெலாம் உயர்ந்து வாழக்
காசிக்கும் கருணைக்கும் துணையாய் நிற்பீர்!
கைதொழுது நல்லறங்கள் சேர்ந்து வாழ்வீர்!

வானொலி. தொலைக்காட்சி

25-7-83 அன்று பகல் 11-40 மணிக்கு சென்னை வானொலியில் "எங்கள் தாயகம்" என்ற தலைப்பில் எமது பயணம் பற்றி "காசிஸ்ரீ" இராகவன் பேசிய தோடு சென்னைத் **தொலைக் காட்சி**யில் 29-9-83 அன்று ஒரு பேட்டி கொடுத்தார். மேலும் "தினமணி கதிரில்" ஒரு பக்கப் பேட்டியும் வெளியிட்டார்.

ஆந்திராவில் இருந்து வெளிவரும் "ஆந்திரப் பத்திரிகா" என்ற பத்திரிகை என் பேட்டியினை வெளியிட்டது.

திருச்சி வானொலியில் அடியேன் "படிப்பால் பெறாதது பயணத்தால் நிறையும்" என்ற தலைப்பில் இப்பயணம் பற்றி உரையாற்றினேன்.

128. இந்தியமக்கள் நன்கொடை

பொதுக்கணக்கு GENERAL a/c

1.	வள்ளல் வீ. தெ. வீரப்பசெட்டியார்; கண்டனூர் ரூ.	500	00
2.	பெ. சித. லெ. லெட்சுமணன் செட்டியார் சண்முகநாதபுரம்	101	00
3.	"பெருங்கவிக்கோ" வா. மு. சேதுராமன். சென்னை-5	10	00
4.	சரவணா அண்சன்ஸ். சென்னை-1	25	00
5.	தேவக்களஞ்சியம். விருது நகர்	5	00
6.	சண்முகம் மோட்டார்ஸ். அருப்புக்கோட்டை	100	00
7.	கே. எஸ். பி. நடராஜன் டிரஸ்ட் தூத்துக்குடி.	100	00
8.	அரிமா என். நாகராஜன் காரைக்குடி.	51	00
9.	புலவர் வே. அண்ணாமலை. வலையபட்டி	51	00
10.	எஸ். குலசேகரன்; அமிழ்தம் பதிப்பகம் வேலூர்	25	00
11.	ந. செண்பகம். சத்திரப்பட்டி,	25	00
12.	அண. வெங்கடாசலம் செட்டியார். தேவகோட்டை.	100	00
13.	கே. ஆர். முத்தையா செட்டியார். தேவகோட்டை	51	00
14.	பிரபு பிரிண்டிங் ஓர்க்ஸ். சென்னை.	6	00
15.	கே. அழகப்பன். புதுவயல்	11	00
16.	பி. சுவாமிநாதன், தேவகோட்டை	11	00

17. ஏ. வி.பி.எல் லெட்சுமி ஆச்சி. காரைக்குடி 16 00
18. நா. சொ. நா. உண்ணாமலை ஆச்சி
புதுவயல் 21 00
19. ஆசிரியர் செந்தில் நாயகம். கண்டனூர் 3 00
20. "பழம் நீ" முத்துமாணிக்கம்.
தேவகோட்டை 21 00
21. வெ. அண. வள்ளியம்மை. ஆச்சி;
சொக்கநாதபுரம் 6 00
22. சுப. சா. இராமநாதன்; காரைக்குடி 5 00
23. கதி. வெங்கடாசலம். வெற்றியூர் 11 00
24. வள்ளல் பழநியப்பன் ராமசாமி. சென்னை
(சைக்கிள் ரிக்ஷா வாங்க) 3400 00
25. மு. கதி, முத்தையா செட்டியார்.
தேவகோட்டை 16 00
26. ஏ. செல்லம்பிள்ளை; தேவகோட்டை 20 00
27. சொர்ணவல்லி ஆச்சி; ,, 16 00
28. எல்.எஸ்.டி.இராமநாதன் செட்டியார் ,, 51 00
29. ஆர். எம். இராமசாமி செட்டியார்
அழ. அரு. அழகப்ப செட்டியார். உப்பூர்
சத்திரம் டிரஸ்டிகள் 21 00
30. கை. திருநாவுக்கரசு செட்டியார்
தேவகோட்டை 21 00
31. ந. நாகப்பன்; சென்னை 17 201 00
32. ஆர். எம். இராமசாமி. கோனாபட்டு 20 00
33. எம். கே. சுதேஷ்ணா இராமேஸ்வரம் 5 00
34. வி. சின்னப்பெருமாள் பிள்ளை;
குமிழேந்தல் 10 00
35. எம். துரைராஜ். சப்பாணி ஏந்தல் 5 00
36. ஆ. சண்முகம் ஜனவேலி 5 00
37. க. இராசாமி ,, 2 00
38. வி. ஆர். ஜே. நாகப்ப செட்டி ஜனவேலி 2 00
39. தலைமை ஆசிரியர் & ஆசிரியர்கள்; அரசினர்

	மேல்நிலைப்பள்ளி திருவாடானை	101	00
40.	வி. எம். இராமகிருஷ்ணன் ,,	21	00
41.	மருதரத்தினம் ,,	2	00
42.	வெ. நா. மு, இராமநாதன் செட்டியார் தேவகோட்டை	101	00
43.	லெ. கதிரேசன் செட்டியார் தேவகோட்டை	16	00
44.	கு. ராம. வ. அண. நடராசன் செட்டியார் தேவகோட்டை	51	00
45.	மு. சோமசுந்தரம். மாவிடுதிக் கோட்டை	25	00
46.	செந்தில் நாதன் செட்டியார் (I.B) தேவகோட்டை	11	00
47.	எஸ். காந்தி ,,	11	00
48.	குழ. மா. மாணிக்கம் செட்டியார் ,,	12	00
49.	ஆத. வெ. நாச்சியப்பன் ,,	11	00
50.	வி. அருணாசலம் செட்டியார் ,,	7	00
51.	கண. தியாகராசன் செட்டியார் ,,	21	00
52.	அ. ராம. அ. லெ. அ. ,,	51	00
53.	மு. பழ. பழநியப்பன் ,,	11	00
54.	திருத்தொண்டர் ஆர். வயிரவன் ,,	11	00
55.	கு. மு. சித. முரு. சித விசாலாட்சி ஆச்சி கானாடுகாத்தான்	10	00
56.	சி. வீர. அலமேலு ஆச்சி தேவகோட்டை	10	00
57.	தேவகோட்டை மாதர்கள் வசூல் (சிவன் கோவிலில்)	41	00
58.	என். சிதம்பரம் திருவாடானை	11	00
59.	"இசைத் தொண்டர்" இராம. இலட்சுமணன் தேவகோட்டை	10	00
60.	நா. இராமநாதன் செட்டியார் சண்முகநாதபுரம்	21	00
61.	கரு. இராமசாமி சேர்வை இராம ஜம்புலிங்கம் தேவகோட்டை	32	00

62. ஜோதி குமாரவேலு; அ. புதூர் 5 00
63. சோம. கருப்பன் செட்டியார் அ.புதூர் 51 00
64. ஆர். கே. ஆர். எம். இராமச் சந்திரன்
அ. புதூர் 25 00
65. வி. ஏகப்பன் I.O.B. காரைக்குடி 16 00
66. ஏ. எல். தியாகராசன் ,, 20 00
67. இட்லர் மளிகை ,, 21 00
68. எஸ். குமரய்யா ,, 10 00
69. நா. வீரப்பன் ,, 5 00
70. ஆர். எம். ஏ. ஆர். ஏ. சிதம்பரம்
பள்ளத்தூர் 5 00
71. M. S. S. காசி செட்டியார்; பள்ளத்தூர் 5 00
72. எம். மருதமுத்து ஆசாரி
(Tent) கூடாரம் வாங்க ,, 501 00
73. ஜே. வி. சோலையப்பன் ,, 11 00
74. பேராசிரியர் க. தேசிகன் ,, 11 00
75. எஸ்.பி. இராமசாமி ,, 11 00
76. பி. ஆர். கணபதி வேலங்குடி 11 00
77. ஆர். இராமநாதன் செட்டியார்
EX M.P. கானாடுகாத்தான் 151 00
78. வி. இராமநாதன் செட்டியார்
கே. அழகாபுரி 11 00
79. எல். ஆர். எம். எல். லெட்சுமணன்
செட்டியார் கானாடுகாத்தான் 11 00
80. ஏ. எல். அடைக்கப்பன் ,, 11 00
81. முரு. சுப்பையா ,, 5 00
82. ராம. அண்ணாமலை ,, 11 00
83. கு. மு. சித. முருகப்ப செட்டியார்
கானாடுகாத்தான் 16 00
84. கு.மு. சொ. சிதம்பரம் செட்டியார்
கானாடுகாத்தான் 16 00

85.	சொ. வி. விஸ்வநாதன் செட்டியார் கானாடுகாத்தான்	21	00
86.	தூ. கரு. சித. கரு. விசாலாட்சி ஆச்சி கானாடுகாத்தான்	10	00
87.	எம். ஆர். நாகப்பன். ஆத்தங்குடி.	5	00
88.	பி. சி. டி. சிதம்பரம் கானாடுகாத்தான்	5	00
89.	ப. க. வெ. சித. ரெங்கநாதன்செட்டியார்;	16	00
90.	பள்ளத்தூர் ராம. வீட்டில் அன்பர்கள்	2	00
91.	சோம. வீரப்பா. நேமத்தான்பட்டி.	5	00
92.	கே. சி. நடராசன் செட்டியார். புதுக்கோட்டை	10	00
93.	வீர. சி. சண்முகம் பிள்ளை; ,,	16	00
94.	ஆறுமுகம் செட்டியார்; ,,	35	00
95.	எஸ். பி. கோவிந்தன்; ,,	51	00
96.	அருணாசலம்: ,,	11	00
97.	அசோகா கெமிக்கல்ஸ் சுப்பய்யா மண்டையூர்	101	00
98.	கா. வீரையா ஆசாரி. இரும்பா நாடு	21	00
99.	எஸ். பத்மநாபன். கீரனூர்	10	00
100.	அ. இராமசாமி. தலைமை ஆசிரியர் ஜோகில்பட்டி	25	00
101.	பி. கணபதி — . தொட்டியம்	10	00
102.	எஸ். கருணாம்பாள் ,,	10	00
103.	கே. ஆர். கிருஷ்ணசாமி ,,	5	00
104.	வள்ளியப்ப செட்டியார் நல்லூர்ப் பண்ணை	16	00
105.	எஸ். லெட்சுமணன் செட்டியார்நாமக்கல்	51	00
106.	கே. லெட்சுமணன் சேலம்	31	00
107.	எம். எஸ். சுந்தரேச ஐயர். சேலம்	5	00
108.	கே. ஆர். எஸ். சுப்பய்யா ,,	11	00
109.	வி. கருப்பன் செட்டியார் ,,	11	00
110.	எஸ்.பி. சம்பந்தம் செட்டியார் ,,	101	00

111.	டி. முத்துராமன் செட்டியார் திருச்சி	201 00
112.	எம். பழநியப்பன். சேலம்	10 00
113.	கலையரசன் பாண்டியன் பேப்பர். கம்பெனி சேலம்	100 00
114.	எம். எஸ். பி. சுப்பிரமணியன் சேலம்	101 00
115.	ஆடிட்டர் வேலாயுதம் மதுரை	51 00
116.	முத்துமீனா ஏஜென்சீஸ் சேலம்	25 00
117.	கதி. சுப. பழநியப்பன். தேவகோட்டை	21 00
118.	சைக்கிள் ரிக்ஷாவுக்கு மோட்டார் என்ஜின் பொருத்தத் தேவகோட்டை, காரைக்குடி அன்பர்கள் (கீழ்க்கண்டோர்)	1152 00

அழ. அரு.	101 00
உ. மு.சுப.லெ.சுப.	101 00
உ.மு.ராம.பழ.மு.	51 00
வி.மு.சுப.மீ	51 00
அரு.அரு.மோகன்	51 00
பழ.சோம.கை	51 00
எஸ்.பி.ஏகப்பன்	51 00
நாக.எ.நாக.ஏக.நா	50 00
தி. முத்துக் கருப்பன் செட்டியார்	51 00
பாங்க் ஆப் மதுரை காரைக்குடி மெயின்	151 00
சு. மு. மு. சுப	25 00
பழ. மீ. சம்பந்தம்	20 00
சொ. மெ. பழ. சின்ன வள்ளியப்பன்	10 00
சேது அருணாசலம்	21 00
எஸ். பி. பழநியப்பன்	10 00
பழ. சுப. பழ	25 00
சி. ராம. வி.	25 00

	அரு. ராதா கிருஷ்ணன்	25	00
	Life ராமு	11	00
	அ. லெ. அண	15	00
	சித. முரு. மீ.	20	00
	சுப. அரு.	25	00
	சபா. அருணாசலம்	25	00
	உ. தட்சணா மூர்த்தி	25	00
	சொ. அழ.	25	00
	கே. பி. ஆர். எம்.	10	00
	தி.ராம. அரு.	101	00
	சி. வள்ளியப்பன்	25	00
119.	கே. நாச்சியப்பன் சேலம்	25	00
120.	கே. என். முத்துப் பழநியப்பன் மதுரை	11	00
121.	சொர்ணா கார்ப்பரேஷன் சேலம்	21	00
122.	கா. துரைசாமி ,,	21	00
123.	எம் பழநியப்பன். வெள்ளாங்கோவில்	10	00
124.	அழ. அரு. அழகப்ப செட்டியார் கோட்டையூர்	31	00
125.	கதி. பழநியப்பன். சேலம்	15	00
126.	ராம. லெட்சுமணன் ,,	51	00
127.	எஸ்.எம்.முத்துசாமி முதலியார் ,,	10	00
128.	அழ. வெ. மாணிக்கம் செட்டியார் தேவகோட்டை	101	00
129.	பி. ஆர். ராமு. ஒசூர்	6	00
130.	அமர் ஆட்டோ மொபைல்ஸ். பெங்களூர்	51	00
131.	கே.டி.அழகப்பன் ,,	11	00
132.	அன்னை மீனாட்சி சுழல் நலகம் மதுரை	25	00
133.	பாங்க் ஆப் மதுரை. கண்டோன்மெண்டு பெங்களூர்	95	00
134.	கே. எம். என். வீடு முதலாளி. பெங்களூர்	21	00

135.	கே. எல். சிங்காரம் சென்னை	101	00
136.	எம். சிதம்பரம். பெங்களூர்	30	00
137.	எஸ். பெரிச்சியப்பன் ,,	21	00
138.	மு. இராம. மெய்யப்பன் புதுவயல்	116	00
139.	சி. சிதம்பரம். பெங்களூர்	21	00
140.	பழ. அருணாசலம் ,,	11	00
141.	கர்நாடகா மாநில நகரத்தார் சங்கம்	701	00
142.	ஹனுமந்தப்பா பெங்களூர்	10	00
143.	ஆர். கிருஷ்ணன் ,,	5	00
144.	எஸ். பழநியப்பன் ,,	10	00
145.	அண. அண்ணாமலை ,,	11	00
146.	எஸ். ராஜகோபால்-லாரி டிரைவர் (நாமக்கல்)	10	00
147.	ராஜமாணிக்கம்-லாரி டிரைவர் போக்கம்பாளையம்	5	00
148	ஆர். நடேசன்-லாரி டிரைவர் பாப்பம்பாளையம்	5	00
149.	எஸ். இராமகிருஷ்ணன் ஹைதராபாத்	11	00
150.	காப்டன் எம். ராமலிங்கம் செகந்தராபாத்	11	00
151.	நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூக, பண்பாடு சங்கம் ஹைதராபாத்	551	00
152.	எஸ். கருப்பய்யா காமரெட்டி	10	00
153.	அகுலா நடிபி பூமணியா மாமிடிபள்ளி-ஆந்திரா	10	00
154.	டுர்பு முத்தண்ணா மாமிடிபள்ளி ஆந்திரா	5	00
155.	ஓடை அப்பய்யா ,,	2	00
156.	கே. சத்தியசீலன் லாரி டிரைவர் நாமக்கல்	10	00
157.	என். பழநியப்பன் ,,	5	00
158.	எல். கிருஷ்ணன் ,,	5	00
159.	எஸ். கே. பழநிச்சாமி லாரி டிரைவர் அவிநாசி	5	00

160.	எஸ். சுப்பிரமணியம்-லாரி டிரைவர் திருப்பூர்	5	00
161.	என். ராஜு-பண்ட்ர கௌடா	5	00
162.	ஏ.பி. சுரேஷ்	5	00
163.	லக்னோ-லாரிடிரைவர்	5	00
164.	பிட்கார் போஹராஸ், மத்தியப்பிரதேசம்	5	00
165.	நாகபுரி அன்பர்கள்	11	20
166.	கவாசாவில் பக்தர்களிடமிருந்து பி. ஆஞ்சநேயலு வசூல் செய்து தந்தது	11	50
167.	மகேஷ்குமார் ஸ்ரீ வத்சவா-சியோனி	5	00
168.	பன்சிலால் ,,	5	00
169.	சியோனி பக்தர்கள்	3	75
170.	பஞ்சாரா குருசாமி	1	00
171.	பஞ்சாரா பக்தர்கள்	11	00
172.	டென்சிங் லாரிடிரைவர்	5	00
173.	மத்தியப்பிரதேசம்—லாரிடிரைவர்	5	00
174.	லாரிடிரைவர் வாங்வாக்கி	6	45
175.	கே. சத்தியசீலன், லாரிடிரைவர் நாமக்கல்	10	00
176.	முத்துசாமி-லாரிடிரைவர் ,,	5	00
177.	ஆர். பழநியப்பன்-லாரிடிரைவர் காட்டுப் புத்தூர்	10	00
178.	ஆர் அய்யாசாமி மூலம் வசூல் கட்னியில்	3	50
179.	முகேஷ். குன்வாரா	2	00
180.	பக்தர்கள். குன்வாரா	1	00
181.	குசஹடிபக்தர் பாதாம்பூர்	0	50
182.	கே. ராமசாமி. லாரிடிரைவர் நாமக்கல்	5	00
183.	மைஹார் பக்தர்கள்	2	25
184.	ஷியாம் சுந்தர் நாமதேவ்—கம்குல்காடி. சாதனா மாவட்டம். (ம.பி.)	2	00
185.	சர்தார்ஜி ஹோட்டல் அமர்பட்டான்	5	00

186.	எம். ஆறுமுகம்—லாரிடிரைவர் சோழகம்பட்டி	21	00
187.	ரீவா போலீசார்	4	00
188.	ஒரு கைதி—ரீவா	2	00
189.	அனுமானா பக்தர்கள் (ம.பி.)	13	50
190.	மீர்சாபூர் பக்தர்கள் (உ.பி.)	3	00
191.	ராமசங்கர் போலியநாத்; நாராயண்பூர்	5	00
192.	காசிபக்தர் ஒருவர்	1	00
193.	ஆர்.எம்.கே.ஆர், அழகப்பன் காசிநகரவிடுதி (ஒ.சிறுவயல்)	11	00
194.	ஹெச் ராமநாதன் சென்னை.	11	00
195.	குமார். சிவகாசி	16	00
196.	தே. ஆனந்தி ஆச்சி	2	00
197.	அ. ராமய்யா. காசி நகரவிடுதி	16	00
198.	சுவாமி நாதன் I.O.B. கீரனூர்	21	00
199.	திருச்சி பக்தர் ஒருவர் வரவு என். அய்யாசாமி மூலம்	100	00
200.	காசி நடைப்பயணத்தில் பங்கு கொண்ட பதின்மூன்று பேரும் ஆளுக்கு ரூபாய் நூறு வீதம் கொடுத்தது	1300	00
		12693—65	

இதற்குச் செலவு விபரம் (தோராயமாக)

சைக்கிள் ரிக்ஷா	3400	00
மேற்படி லாரிச் செலவு	200	00
நிகழ்ச்சிநிரல் அச்சுச் செலவு	75	00
ரப்பர்ஸ்டாம்பு	15	00
2 அரிக்கன் விளக்கு	46	00
வெள்ளைத்தாள்	20	00
தபால்செலவு	100	00

ரப்பர் ஸ்டாம்பு பாடு, கார்பன் பேப்பர் சாதாகவர், குண்டூசி முதலியன	30	00
சாமிபடம். வாட்டர் கேன், சைக்கிள் சாமான், தேவகோட்டை வயிகோ சிட்டைப்படி	147 294	25 70
மண்எண்ணெய்	56	00
சைக்கிள் ரிக்ஷா மோட்டார் என்ஜின் பொருத்த லெ. சிட்டைப்படி	2581	65
சைக்கிள் இன்சூரன்ஸ் & அடை. இன்சூரன்ஸ்	105	00
துணிக்கூடாரம் (டென்ட்)	660	00
தியாகராஜன், அடைக்கப்பன் வேட்டி	32	40
காசியில் வாங்கிய கவர் 1000	550	00
கயா அலகாபாத்— தி & அடை செலவு	166	00
சென்னை டிக்கெட் மேற்படி	248	00
சில்லறைச் செலவுகள்	100	00
சைக்கிள் ரிக்ஷா பெட்ரோல், பழுது பார்த்தல் மேற்படி சாமான்கள் வாங்கியது சுமார் (தி & அடை செலவு உட்பட)	3115	65
தேவகோட்டை ஐயப்ப சங்கபாத்திரத்துக்கு	51	00
திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவுக்கு	700	00
	12693—	65

இக்கணக்கினை காசிஸ்ரீ பழனியாண்டி நிர்வகித்தார்.

இச்செலவு தவிரக் காசிஸ்ரீக்கள் தமது சொந்தச் செலவு பல ஆயிரம் செய்துள்ளனர். மேற்கண்டவை பொது வரவு செலவு மட்டுமே.

திரு அமுதுத்திட்டம்

1.	சி. இராமசாமி பொன்முடி பள்ளத்தூர்	30	00
2.	எஸ். பி. மணியன் & முத்துக்கருப்பன் கோவை	30	00
3.	தனுஷ்கோடி வீர. சத்திரம் எஸ்.டி. எம். ஆர்: கீழவீடு தேவகோட்டை	100	00
4.	தண்டாயுதபாணி கார்த்திகைக்குழு தேவகோட்டை; (விசுவநாதன்)	32	50
5.	மேற்படி	32	50
6.	எம். பொன்னுசாமி தேவகோட்டை	30	00
7.	சு. அரு. அருணாசலம் ,,	31	00
8.	சு. செ. பழ. லெ. லெட்சுமணன் செட்டியார் தேவகோட்டை	35	00
9.	அலுவலர்கள் I. B. தேவகோட்டை	67	00
10.	வரவேற்புக் குழு தேவகோட்டை	37	00
11.	ராம- மாணிக்கம் ,,	35	00
12.	ந. அருணாசலம் Ex M.P. தேவகோட்டை	35	00
13.	பி. ஆர். எம். சுந்தரம் தேவகோட்டை	105	00
14.	அ. முருகப்ப செட்டியார். ,,	35	00
15,	S. Rm. Rm. P. முத்துக்கருப்பன் சண்முகநாதபுரம்	35	00
16.	பிச. சுப. கண்ணன் செட்டியார் காரைக்குடி 2	35	00
17.	கரு. லெ. லெட்சுமணன் காரைக்குடி	35	00
18.	சி. அ. லெ. லெட்சுமணன் செட்டியார் சண்முகநாதபுரம்	35	00
19.	மு. பெ. ராம. முத்துராமன்	35	00
20.	Rm. மாணிக்கம் I. O. B.	35	00
21.	ஆசிரியர் அலுவலர்கள். குருகுலம் உ. நி. பள்ளி அமராவதி புதூர்	35	00

22.	எஸ். அழகப்ப செட்டியார் (ஓட்டுமில்) அமராவதி புதூர்	35	00
23.	கோட்டையூர் நகரத்தார்	35	00
24.	V. A. R. அழகப்ப செட்டியார்பள்ளத்தூர்	51	00
25.	RM. AR. A. சிதம்பரம் ,,	35	00
26.	A. பழநியப்பன் மளிகை கானாடுகாத்தான்	35	00
27.	ந. நா. ராம நாராயணன் செட்டியார் கானாடுகாத்தான்	40	00
28.	கு.முரு.சிவ. முருகப்பசெட்டியார் கானாடு காத்தான்	35	00
29.	சொ.வீர. ராமநாதன் செட்டியார் கானாடுகாத்தான்	35	00
30.	பழ. குமரப்ப செட்டியார் நேமத்தான்பட்டி	35	00
31.	ராம. ராஜாமணி ஆச்சி வலையபட்டி	35	00
32.	எஸ். சவுந்தரம் ஆச்சி. மதுரை	35	00
33.	T.M.R.M. ராமநாதன் செட்டியார் குழிபிறை	35	00
34.	V.R.M. இராமநாதன் செட்டியார் குழிபிறை	35	00
35.	P.L.M. வெங்கடாசலம் செட்டியார் புதுக்கோட்டை	35	00
36.	PL.MM. முத்துராமன் செட்டியார் பி.புதுப்பட்டி.	35	00
37.	என். தியாகராசன் கொப்பனாபட்டி	35	00
38.	வ. மு. மு. ராம. முத்துராமன் செட்டியார் வலையட்டி	35	00
39.	பெரி. பெ. பார்வதி ஆச்சி நச்சாந்துபட்டி	35	00
40.	க. சிவமணி புதுக்கோட்டை	35	00
41.	ஏ. ஆர். அழகப்பன் திருச்சி	35	00
42.	கன்னாபிரதர்ஸ் திருச்சி	35	00

43.	மா.பழ.லெ.அலமேலு ஆச்சிநடராசபுரம்	35	00
44.	டி. சிதம்பரம். சேலம்	36	00
45.	ஆர் எம். பழநியப்பன். சேலம்	36	00
46.	மு.ராம. ஆண்டான்செட்டி புதுவயல்	35	00
47.	நா. சோலையப்பன். புதுவயல்	35.	00
48.	எஸ். சிதம்பரம். சேலம்	35.	00
49.	R. M கருப்பன் செட்டியார் காரைக்குடி	35	00
50.	எம். எஸ். உடையப்ப செட்டியார் சேலம்	105	00
51.	மு. ராம. இராசகோபால். புதுவயல்	35	00
52.	ஸ்ரீ வள்ளிநாயகி பாங்கர்ஸ் தர்மபுரி	35	00
53.	காரைக்குடி அழ. பழ. பழநியப்ப செட்டியார் தர்மபுரி	35	00
54.	ஏ. கந்தப்பன். B.O.M. ,,	35	00
55.	நாச்சம்மை ஆச்சிபாங்கர்ஸ் ,,	35	00
56.	எஸ். பி. சொக்கலிங்கம் BOM ,,	35	00
57.	P. A. பன்னீர் செல்வம் பெரியாம்பட்டி	30	00
58.	Sm. பழநியப்ப செட்டியார் "ஏஷியன் பேரிங்ஸ்" ஓசூர்	35	00
59.	Km. ரெங்கநாதன் புதுவயல்	35	00
60.	எம். தியாகராஜன் காரைக்குடி	35	00
61.	CT. பழநியப்பன் ஆலந்தூர் சென்னை	35	00
62.	வி. மனோகரன் பெங்களூர்	110	00
63.	தேவகோட்டை தண்டாயுதபாணி கார்த்திகைக் குழு.	32	50
64.	KR சடையப்ப செட்டியார் பெங்களூர்	100	00
65.	திருநாராயணன். B.O.M; ,,	35	00
66.	கரு. கருப்பன் செட்டி. BHEL திருச்சி	105	00
67.	எம். ஏகப்பன். செகந்தராபாத்	35	00
		2785	50

இத்தொகை முழுவதும் காசிஸ்ரீக்களுக்கு அவ்வப்பொழுது "திரு அமுது" வழங்கப் பயன்படுத்தப் பெற்றது. இக் கணக்கினைக் "காசிஸ்ரீ" இராகவன் நிர்வகித்தார்.

உண்டியல் வரவு செலவு

உண்டியல் தொகை ரூ. 520+520+230 ஆக ரூ. 1270 சேர்ந்தது. இது முழுதும் சுவாமி செலவுக்கும் குருகாணிக்கை முதலியவற்றுக்கும் பயன்படுத்தப் பெற்றது.

இப்படியாக மிகக் குறைந்த செலவில் மிகப் பெரிய ஒரு சாதனை நிகழ்த்தப் பெற்றுள்ளது என்றால் காசிஸ்ரீக்களின் முழு ஒத்துழைப்பினாலும் பக்தியினாலுமே என்று நன்றிப் பெருக்குடன் கூறுவேன்.

அங்கங்கே உணவளித்து ஏராளமான உதவிகள் செய்துள்ளோர் செலவுகளுக்குக் கணக்கில்லை. அப்படி அவர்கள் செலவு செய்ததனால் நாங்கள் மிகக் குறைந்த செலவில் இந்த யாத்திரையினை நிறைவேற்ற முடிந்தது.

129. காசி இராமேஸ்வரம் வெண்பா அந்தாதி

காப்பு

கடலாடும் ராமேஸ் வரம்காசி நின்று
நடமாடும் தெய்வம் நமையே—திடமாகக்
காப்பாற்றும் என்று கரம்கூப்பி வெண்பாவாம்
பூப்போட்டுச் செய்வோம் புகழ்

நூல்

புகழ்கின்ற கங்கை முடிமேல் அமர்ந்து
திகழ்கின்ற எங்கள் சிவமே—நிகழ்அலைகள்
நீர்போற்றும் ராமேஸ் வரநாத! நீடூழி
ஊர்போற்ற ஈவாய் உயிர்

உயிரான எங்கள் வடகாசி நாத!
பயிரான எங்கள் பதங்கள்—வெயிலோடு
போராடி ராமேஸ் வரம்தொட்டு வந்திக்கத்
தீராத துன்பங்கள் தீர்.

தீர்த்தனே! கங்கைத் திலகனே! காசிவாழ்
மூர்த்தியே! எங்கள் முதல்வனே!—கீர்த்தியால்
பாராளும் எங்கள் பருவத வர்த்தினி
தாராள மாகவே தா.

தந்தாலும் காசி தலையாரக் கும்பிட்டு
வந்தாலும் முக்தி வழங்கத்தான்—சிந்தாமல்
கொண்டாடி எங்கள் குலம்காக்கும் ராமேசா!
அண்டாமல் தீமை அடை.

அடையாத நெஞ்சால் அழைக்கின்ற கங்கை
உடையானே! காசி உயிரே!—நடையாகக்
கோடி மணலேந்திக் கும்பிட்டுத் தீர்த்தமுடன்
பாடி வரநயனம் பார்.

பார்க்கின்ற கங்கை பரமேசா! உன்னருளால்
ஆர்க்காமல் காக்க அருள்புரிக—தூர்க்காமல்
தெற்கு முனைவரைக்கும் தேன்கங்கை ஓடிவர
அற்புதமாய் ராமேசா ஆள்

(நடந்து சென்ற பொழுது பாதையில் குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் தாகத்தால் அவதிப்பட்ட பொழுது, ''விசுவநாதப் பெருமானே'! காசியில் ஓடும் கங்கை தென்கோடி வரைக்கும் ஓடி வருமே யானால் தண்ணீர்ப்பஞ்சம் உண்டா'' என்று எண்ணிப் பாடியது).

ஆளும் பதின்மூன்றாய் ஆண்டவனே! காசிக்கு
நாளும் இனிதாய் நடந்துவர—வேலும்
வழிகாட்டிச் செல்ல வடிவேலா! கோடி
எழில் காட்டிச் செய்வாய் இதம்.

இதமாகக் காசி விசுவேசா! ஈர்க்கப்
பதமாக வந்து பணிந்தோம்—சதமாகக்
கோடிக் கரைபாடிக் கோயிலிலே நீராடிக்
கூடிக் களிக்கஅருள் கூர்!

கூர்த்த மதியாய்! குளிர்கங்கைச் செம்பதியாய்
ஈர்த்தெம்மை ஆண்டஇயல்புடையாய்! தீர்த்தமுடன்
மூர்த்தியாய் உள்ள ட்துதல்தலமே ராமேசா!
நேர்த்தியாய்ப் பாதையெலாம் நீ.

நீயே இதயம் நினைவாக உள்ளதனால்
தாயே விசாலாட்சி தாளுற்றோம்—நோயேதும்
வாராமல் காத்து வரமருளி ராமேசா!
சீராக யாத்திரையில் சேர்.

சேர்கின்ற காசிச் சிவமே விசாலாட்சி
ஆர்கின்ற உன்றன் அகல்மார்பம்—சார்கின்ற
பக்தர் களுக்குய்வு பாலிக்க ராமேசா!
நித்தம் அருள்புரிக நீடு

நீடு துயில்நீக்கும் நிர்மலனே! காசியெனும்
ஓடு புனல்சூழும் ஓங்காரா!—பாடுபடும்
மக்கள் களிகூர மாதவங்கள் வெற்றி பெற
இக்கணமே ராமேசா ஈ

ஈயும் அடிதாங்கி ஈர முடிதாங்கிக்
காயும் கனல்தாங்கும் கங்கேசா!—பாயும்
திரைவருடும் கோயில் திகழ்ஒளிரா மேசா!
குறையாமல் சக்தியெலாம் கூட்டு

கூட்டும் அடியார்கள் கொள்கையெலாம் காதாரக்
கேட்டு மகிழ்காசி சாலாட்சி!—நாட்டினிலே
உண்ண உணவும் உடையுமிலாப் பஞ்சமெலாம்
அண்ணல்ரா மேசா! அகற்று

அகற்றிடினும் தாயை அடையும் குழந்தை
மகத்துவமே! காசி மணியே!—இகத்தினிலே
குற்றம் குறைநீக்கிக் கொண்டாடி வாழ்விக்க
நற்றமிழே! ராமேசா! நாடு!

நாடு புகழ்காசி நாதனே! சாலாட்சி
யோடு திகழ்ஒளியே! ஓங்காரா—கூடும்
சமுத்திரங்கள் பாடிச் சதிராடும் ஈசா!
சமுத்திர நீருக்கோய் வேது?

வேதங்கள் பாடும் விசுவேசா! எங்களது
பாதங்கள் நோகாமல் பார்த்திடுக—மாதங்கள்
நான்கினிலே காசி நடந்துவர ராமேசா!
தீங்கின்றித் தந்திடுவாய் தெம்பு

தெம்பு தனைத்தந்து திட்டிவிடம் நீக்கிக்
கம்பாய் வருகின்ற கங்கேசா!—நம்பிஉனைத்
தேடி வருகின்றோம் திட்டிவிடம் நீக்கிதனுஷ்
கோடிக் கரைநாதா! கொள்!

கொள்ளும் பொருள்கோடி கொண்டவனே! காசியிலே
உள்ள விசுவேசா! உன்னடிக்குத்—தெள்ளமுதாம்
கோடித் திருநீரைக் கொண்டுவரும் நாங்களெலாம்
கூடி வரவாக்கு கூறு

கூறும் பெருமையெலாம் கொண்டவனே! கங்கையெனும்
ஆறு தலைக்கொண்ட ஆண்டவனே!—நீறிட்டுக்
கால்கள் நடந்துவரக் கையிரண்டும் வீசிவரப்
பால்போலும் ராமேசா! பார்

பாரில் புனிதம் பழங்காசி விஸ்வேசா!
சீரில் அமைந்து சிறப்பாக்கு—தேரில்
எழுந்தருளும் எங்கள் இராமேசா! அன்பாய்த்
தொழுகின்றோம் தந்திடுவாய் தோள்

தோளில் வலிமையுடன் தொண்டர்யாம் காசிவரக்
காலில் வலுதந்து காப்பாற்று—வேலின்
துணையோடு சென்று துயரின்றி மீள
அணைகாண்ரா மேசா! அருள்!

அருள்கண்ட காசி அலைகண்ட கங்கைப்
பொருள்கண்ட மேனிப் புனிதா!—இருள்கண்ட
வையத் திடும்பையெலாம் வற்றிடவே
செய்திடுவான்
ஐயன் இராமேசன் ஆம்.

ஆமென்னும் முன்னே அடியெடுத்துச் காசிக்குச்
சேமமுடன் சேரஅருள் செய்தவனே!—
மாமனைக்குப்
பொன்னோடு நல்ல புகழோடு மீண்டுவரக்
கண்மணியே! ராமேசா! கா

காக்கும் பொருளனைத்தும் காசியிலே பாடிவர
ஆர்க்கும் திருக்கங்கை ஆடுவதை—ஈர்க்கும்
உளத்தாலே கண்டே உவகையுறும் கோடித்
தலத்தான் இராமநா தன்.

தன்னேர் இல்லாத தனிக்கங்கை சூடியசீர்ப்
பொன்னே! விசுவேசா! புத்தமுதே!—
மின்னனைய
பர்வத வர்த்தினியின் பாதங்கள் கண்டேத்தித்
தர்மம் நடந்தோமே தாள்!

தாள்கள் நடந்துவரத் தர்மங்கள் ஓங்கிவரக்
கோள்கள் அருள்புரிக விஸ்வேசா!—ஊழ்வினைகள்
எல்லாம் மறைய இனிப்பிறவி இல்லையெனச்
சொல்வாய் இராமேசா சூழ்ந்து.

சூழ்ந்த இருளகற்றும் சோதிவடி வானவனே!
ஆழ்ந்த முடிக்கங்கை ஆண்டவனே! — ஏழ்பிறவி
தந்தாண்ட ராமேஸ் வரநாதா! தாழ்வின்றி
வந்தீய வேண்டும் வரம்

வரத்தாலே காசி வருகின்றோம் செம்மை
நிறத்தானே! எங்கள் நிமலா!—தரத்தாலே
சின்னஞ் சிறியேங்கள் செய்தவங்கள்
வெற்றிபெறும்
மன்னவனாம் ராமேசன் மாண்பு.

மாண்புடைய கங்கை மகேசா! உனதடியைக்
காண்பதற்கு வந்துள்ளோம் கால்நடந்து—
வீண்பெருமை
பேசும் உலகத்தில் பேசாத ராமேசா!
தாசரது துன்பம் தகர்.

தகர்க்கின்ற வெப்பம் தணிப்பவனே! கங்கை
உகக்கின்ற நெஞ்சம் உடையாய்!—சுகத்துடனே
நன்றே நடந்துவர நாயகனே! ராமேசா!
இன்றே அருள்க எமக்கு.

எமக்கே வடகாசி நாதன் இதயம்
சுமக்கும் இதயம் சுகமாம்—தமக்கே
அனைத்தும் எனச்சொல் அவனியில் கோடி
நினைத்தோம் இராமேசா! நீள்

நீளும் இயல்புடையாய்! நித்தமும் காசியிலே
ஆளும் விசுவேசா! ஆதரிப்பாய்—நாளும்
திருப்புகழைப் பாடி இராமேசா! தேசத்
தெருவழியே வந்துற்றோம் தேர்.

தேரும் இயல்புடையாய்! தேசமெலாம்
கொண்டாடும்
ஊராம் வடகாசி உள்ளவனே!—நீரும்
அடிவருடிப் பாடும் அரியரர் மேசா!
தொடிவளையா ளோடிங்கே தோன்று

தோன்றும் நினைவாலே காசிக்கு நாங்களெலாம்
ஆன்ற அடிவைத்தோம் ஆதரிப்பாய்—ஈன்றவனே
அய்யா இராமேசா! யாத்திரையில் முன்னின்று
மெய்யாய் நிறைவேற்று மேல்.

மேலான தேவர்க்கும் மேலான தெய்வமே!
நூலெல்லாம் போற்றுகிற கங்கேசா!—காலாலே
நித்தம் நடக்கின்றோம்; நீரும் நிழல் எல்லாம்
உத்தமமாய் ராமேசா! உண்டு.

உண்டதெல்லாம் கங்கேசா! உன்னருளாள் வாழ்நாளில்
கண்டதெலாம் விஸ்வேசா காசிநகர்—தெண்டிரைகள்
பாடும் தமிழ்நாட்டுப் பர்வத வர்த்தினியே!
நாடு செழித்திடவே நல்கு

நல்கும் வளங்கள் நடையாத் திரையாலே
பல்க அருள்வாய் பரமேசா!—வெல்க
எனஎம்மைக் காசி நகர்க்கனுப்பி வைத்தான்
தனம்கொள்ரா மேசன் தவம்.

தவங்கள் மிகவே தலயாத் திரையாய்ச்
சிவனே எனவந்தோம் காசி—புவனம்
செழிக்க மழையீந்து தென்கோடி ஈசா!
கொழிக்க உணவு கொடு.

கொடுத்த தனைத்திலும் காசி நடக்க
விடுத்த தவம்நிறை வேற்றே—எடுத்த
செயலை முடிக்கத் திருராம நாதா!
வயலாய் நிழல்நீராய் வா.

வந்த துயரை வழியெல்லாம் போக்கியே
கந்தனாய்க் காத்திட்ட கங்கேசா!—பந்தமுடன்
ஒன்றே உணர்வாய் உவகையுடன் வந்தோம்யாம்
நன்றேரா மேசா! நடத்து.

நடத்தும் பெருவேள்வி நாயகனே! கங்கை
இடத்தும் பெருங்காதல் ஈசா!—தடத்தினிலே
அன்பாய் நடக்கும் அனைவர்க்கும் ராமேசா!
பண்பாய் அருள்க பரிந்து

பரிந்தெம்மைக் காக்கும் பரமேசா! காசி
தெரிந்தெம்மை ஈர்த்ததனால் சேர்ந்தோம்—
அறிந்தெம்மை
வெல்க என விடுத்த ராமேசா! பாதையெலாம்
அல்லல் களைவாய் அறிந்து

அறிந்து நடையாத் திரைசெய்யக் காசி
தெரிந்தோம் விசுவேசா! தேனே—விரிந்த
குணமெல்லாம் பெற்றோமே கோடிக் கரையாய்
கணமெல்லாம் நீ இருக்கக் கண்டு

கண்ட படிவாழும் காசினியில் விஸ்வேசா!
கண்டு முதலானோம் கால்நடையாய்—
பண்டுமுதல்
எம்மைக் கருணையினால் காத்த இராமேசா
இம்மையிலே காக்க இனிது

இனிதான காசி எழில்யாத் திரைக்குக்
கனிவாய் அழைத்தகங் கேசா!—துணிவாய்
நடந்தோமே எங்கள் நலம்காத் தருள
நடந்துவா ராமேசா நன்று

நன்று புரிந்தே நடமாடும் தெய்வத்தைக்
கண்டு வரவந்தோம் காசிநகர்—என்றென்றும்
உள்ளத்தில் உள்ள உயர்ராம நாதா நீ
கொள்ள வருவாய் கொழித்து

கொழித்த மணலும் குளிரும் புனலும்
களித்துக் கவிபாடும் காசி—செழித்த
உளத்தாலே செய்யும் உயர்யாத்திரையில்
நலத்தை இராமேசா நாட்டு

நாட்டின் நலமும் நகரத்தார் நல்வளமும்
காட்டி வளர்க்கின்ற கங்கேசா!—வீட்டில்
எழுந்தருளிக் காக்கும் இராமேசா! எங்கும்
கலந்தருளிக் காப்பாய் களித்து

களித்த உணர்வாலே காசிக்கு வந்தோம்
அளித்த வரங்கள் அனந்தம்—பலித்த
இனிய கனவை நனவாக்கும் கோடிக்
கனிராம நாதன் கழல்

கழலீந்து மார்க்கண்டன் கற்பாந்த காலம்
வளவாழ்வு வாழவரம் ஈந்தோய்!—உளமாரத்
தென்கோடி தொட்டு நடக்கின்றோம் ராமேசா!
அன்புடன்எம் ஆசைநிறை வேற்று

ஏற்ற நடையால் எழிற்காசி விஸ்வேசா!
ஆற்றுப் படையாய்! அணிபணிந்தோம்—சாற்றும்
தமிழ்மாலை ஏற்கும் தலைவ !ரா மேசா!
அமிழ்தமென எங்களையும் ஆக்கு

ஆக்கிப் படைத்தவனே! அண்டங்கள்
அத்தனையும்
ஊக்கி உணர்வூட்டும் விஸ்வேசா!—நாக்கில்
தினந்தோறும் உன்நாமம் திவ்ய மொழியே
மனமெல்லாம் ராமேசன் மாட்டு

மாட்டில் எழுத்தருளும் மாண்புடையாய்!
விஸ்வேசா !
காட்டில் நடந்தோமே கால்நடையாய்—நாட்டின்
ஒருமையினைக் காக்கும் உயர்ராம நாதா!
பெருமையினைத் தந்திடவே பேசு

பேசும் உரையெல்லாம் பேசாமல் ஏற்றருளும்
காசி விசுவேசா! காத்தருள்க—தூசிக்கும்
கீழான எங்களைக் கீழ்க்கடலோய்! ராமேசா!
மேலாக்கி மேன்மைமெரு கூட்டு

கூட்டும் அடியார்கள் கோடியிலே எங்களையும்
நாட்டும் விசுவேசா! நன்மைதா—ஊட்டும்
விதியால் நடக்கின்றோம் வெற்றியெலாம் ஈயும்
பதிராம நாதன் பதம்

பதமே துணையாகப் பண்புடைய காசி
சதமே எனவந்தோம் சால்பாய்—நிதமும்
உளத்திருந்து காக்கும் உயர்ராம நாதன்
களத்திருந்து செய்வானே காப்பு

காப்புப் புகழுடைய கங்கைக்கு நாயகனே!
தோப்பாய் இருந்து துணைசெய்க—யாப்பால்
பருவத வர்த்தினியே! பாடி நடந்தோம்
அருகிருந்தே தாயே! அணை

அணைக்கும் விசாலாட்சி அன்னையே!
உன்னை
நினைத்து வருகின்றோம் நித்தம்—கனைக்கும்
கடல்சூழும் ராமேஸ் வரநாத! எங்கள்
உடல் உடைமை காப்பாய் உயிர்

உயிரே! விசுவேசா! உன்னடியைக் காண
வெயிலில் அடிநடந்து வந்தோம்—துயிலும்
புறங்காட்ட உன்றன் புகழ்பாடு கின்றோம்
அறங்காட்டும் ராமேசா! ஆற்று

ஆற்றுப் படையாய்! அருள்கங்கை விஸ்வேசா!
ஆற்றுப் படையால் அடிநடந்தோம்—
ஏற்றமெலாம்
தந்து புறங்காக்கும் தன்னிகரில் ராமேசா!
வந்தெங்கள் நன்மை வளர்.

வளரும் பருவத்தில் காசிநகர் ஈசா!
தளராமல் வந்தோம் தலைவா!—உளறாமல்
உன்னடியே பாட உதவிடுக ராமேசா!
பொன்னடிஎம் நெஞ்சினிலே பூத்து

பூத்துக் குலுங்கும் புவனத்தில் உன்னடியில்
காத்துக் கிடக்கின்றோம் கங்கேசா—ஏத்தும்
அருந்தமிழால் சொன்னோம் அலைகடல்ரா
மேசா!
அருந்துகின்ற நீராய்நீ ஆகு

ஆகும் பொருளெல்லாம் ஆண்டவனே! கங்கேசா!
வாகாய் அளித்துநீ வாழ்விப்பாய்—ஏகும்
இடமெல்லாம் வந்தே இராமேசா! என்றும்
திடமாகத் தந்திடுவாய் தெம்பு.

தெம்பு குறையாமல் தெண்டனிடக் காசிக்குக்
கம்பின்றி வந்தோமே கங்கேசா!—தும்பையெனும்
உள்ளத்தில் வைத்தோம் உயர்ராம நாதநின்
வெள்ளம்போல் வென்றிடுக வேல்.

வேலின் துணையாலே வெற்றியுடன் காசிக்குப்
பாலாய் நடந்தோம் பரமேசா!—தாலாய்
இனிய தமிழ்சொன்னோம் ராமேசா! என்றும்
கனியாய் வருமுன்னைக் கண்டு.

கண்டு களித்தே கழல்தொழவே காசிக்குப்
பண்டுமுதல் வந்தோம் பரமேசா!—உண்டு
தினம்உறங்கும் வையத்தில் தீத்தமிழ்ரா மேசா!
மனந்தனிலே தங்கு மகிழ்ந்து.

மகிழ்ந்து வடகாசி மண்ணைத் தொழவே
புகழ்ந்து புறப்பட்டோம் பொன்னே! — அகழ்ந்த
நிலம்தாங்கும் தன்மைபோல் நீள்கடல்ரா மேசா!
தலமெல்லாம் நீவந்து தாங்கு.

தாங்கும் கரமுடையாய்! தங்கநிறக் கங்கைமுடி
தாங்கும் திறமுடையாய்! சர்வேசா!—மங்கைமகிழ்
பாகம் உடையாய்! பரமேசா! பக்தியெனும்
தாகம்ரா மேசன் தனம்.

தனமே வடகாசி தன்னிகரில் ஈசன்
இனமே நமதாய் எழுந்தோம்—மனமே
சிறிதும் தளராதே ராமேசன் பாதம்
குறியாய்த் தினம் எண்ணிக் கொண்டு.

கொண்ட பெருங் கொள்கை வெற்றி பெறக்
கங்கேசா !
அண்டை இருந்தேநீ ஆதரித்தாய்—பண்டைநாட்
கால்நடையாய்ச் செல்ல இராமேசா! கைகாட்டி
வாழ்நாளில் தந்தாய் வரம்.

வரங்கள் பலகோடி வாய்த்ததனால் காசிக்
குரமாய் நடக்கின்றோம் ஈசா!—திறமாய்
இராமேஸ் வரம்தொட்டுக் காசி நகர்க்கும்
இராமேசன் தீர்த்தான் இடர்.

இடரேதும் வாராமல் எந்நாளும் காத்த
சுடரே! வடகாசிச்சோதி—நடமாடச்
சக்தியினைத் தந்த சதுர்மறையோய்! ராமேசா!
பக்தியினால் கண்டோம் பதம்

பதமாய் இருக்கின்ற பான்மையினால் காசி
சதமாய் வருகின்றோம் சாறாய்!—மதத்தால்
உலகம் அழியாமல் ஒப்பில்ரா மேசா!
திலகமாய்க் காப்பாய் தினம்

தினமும் விசுவேசா! தீந்தமிழால் பாடிக்
கணமும் நடந்தோமே காலால்—மனமே!
பருவத வர்த்தினியே; ராமேசா! என்றே
உருவ வழிபாட்டில் ஊறு.

ஊறும் கவியெல்லாம் உன்னடிக்கே விஸ்வேசா!
பாரும் மணக்கப் படைக்கின்றோம்—மீறும்
துயரங்கள் நீக்கித் துணைசெய்ராமேசா!
நயமாகச் செவ்வாய் நலம்.

நலங்கள் பலவாக நாள்தோறும் ஈந்து
தலங்கள் தொழச்செய்விஸ் வேசா!—கலங்கள்
கரையேறச் செய்யும் கலங்கரைரா மேசா!
குறையின்றிக் காப்பாய் குணம்.

குணமே உருவான கூட்டத்தில் என்னை
மணமாய் அமைத்தவிஸ் வேசா!—கணமும்
பிரியாமல் காத்த இராமேசா!என்றும்
சரியாமல் காப்பாய் சதம்.

சதமே வடகாசி சர்வேசா! உன்றன்
பதமே சரணமெனப் பார்த்தோம்—நிதமும்

உடன்வந்தே காத்த இராமேசா! உன்றன்
இடம் வந்தோம் யாதிதற்கே ஈடு?

ஈடும் இணையுமிலா ஏந்தால்! எழிற்காசி
நீடு புகழ்கின்ற நிர்மலா!—பாடு
படுகின்ற மக்கள் பலம்பெறரா மேசா!
கொடுமையினைத் தீர்ப்பாய் குறித்து.

குறித்த தலமெல்லாம் கும்பிடவே கண்காட்டி
விரித்த அருளாய்! விஸ்வேசா—சிரித்த
மனிதரெலாம் போற்ற மகத்துவமே ஈந்தாய்
கனியேரா மேசாநீ காத்து.

காத்துக் கிடந்தோம் பலகாலம் இன்றைக்குப்
பார்த்து மகிழ்ந்தோம் பரமேசா!—ஈர்த்ததனால்
எட்டிரு நூறான மைல் நடந்தோம் ராமேசா!
இட்டமுடன் காத்தாய் இசைந்து.

இசைந்த உணர்வாலே எங்களையும் காத்துத்
திசைகாட்டி ஈர்த்தவிஸ் வேசா!—விசையாய்
நடக்க அருள்புரிந்த நாயகரா மேசா
கடக்க அருள் புரிவாய் கண்டு.

கண்டு முதலானோம் காசிக்கு வந்ததனால்
தொண்டர் உளம் வந்தோம் விஸ்வேசா!— உண்ட
உணவோடு நீரெல்லாம் உன்கொடைரா மேசா!
குணமாக காத்தாயே கூர்ந்து.

கூர்ந்து கவனித்தாய் கொள்கலமே! விஸ்வேசா!
தேர்ந்து வரவழைத்தாய் தேசமுனே—நேர்ந்து
மனம்கொண்ட தாலே நடந்தோம்ரா மேசா!
தனம் தந்து காப்பாய் தழைத்து.

தழைத்துப் பயிர் வளரும் தன்னிகரில் கங்கை
விளைத்துப் பொருள்சேர்விஸ் வேசா!—
அழைத்ததனால்
எண்ணி நடந்தோம்நாள் நூற்றுப் பதினாறில்
கண்ணியமாய் ராமேசன் காத்து.

காத்தவனே! எங்கள் கனதனமே! காசியிலே
பூத்தவனே! கங்கைநதிப் புத்தமுதே!—
தோத்திரங்கள்
பாடிப் பரவுகிறோம் பார் புகழும் ராமேசா!
கோடிப் பேருமை கொடு.

கொடுத்துப் புகழ்கொள் குவலயத்தில் கங்கை
விடுத்துப் புகழ்கொள்விஸ் வேசா!—எடுத்த
நடையாத் திரையை நளினமுட்ன் ஏற்ற
விடையோய்! இராமேசா! வெல்

வெல்லும் பணிகாட்டி வீரம் துணிவூட்டி
ஒவ்லும் வகைகாத்த விஸ்வேசா!—அல்லும்
பகலும் உறங்காமல் பாதம் பணிந்தோம்
பகவானே ராமேசா! பார்த்து

பார்த்து நடந்தோம் பரமேசா! காசிக்கே
ஈர்த்தெம்மை ஆண்ட எழில் உருவே!—
நேர்த்தியாய்
எங்கள் வினையை இனிதாய் முடித்திட்டாய்
தங்கமாய் ராமேசா தந்து.

தந்த பெரும்பேற்றில் தன்னிகரில் கங்கைக்கு
வந்த பெரும்பேறே வாய்மையாம்—சிந்தாமல்
எல்லா நலத்தும்ரா மேசா! எமைக்காத்து
வல்லாங்கு தந்திட்டாய் வாழ்த்து

வாழ்த்தும் உளங்களினால் வந்திட்டோம் கங்கேசா!
ஆழ்த்தும் இடர்கள் அகற்றிடுக—வீழ்த்தும்
கொடியோர்கள் வீழக் குணமிகரா மேசா!
அடியார்கள் மேம்படஆள் வாய்

வாயுன் புகழ்பாடப் பாதம் உனைநாட
ஓயாமல் வந்தோமே கங்கேசா—சாயாமல்
காத்து நடப்பித்த ராமேசா! உன்னடியில்
கோத்துக் கிடக்கஅருள் கூர்

கூரும் திருவருளால் காசிக்கு வந்துற்றோம்
நீரும் மணக்கின்ற நிர்மலனே!—பாரும்
வியக்கப் பெருவெற்றி ஈந்தரா மேசா!
தயக்க மின்றித்தா தாள்.

தாள்கள் தொழவே தலைவணங்கிக் காசிக்கு
நாள்கள் பலவாய் நடந்தோமே—வேள்முருகன்
கூர்வேல் வழிகாட்டக் கும்பிட்டோம் ராமேசா!
பார்போற்ற ஈவாய் பரிசு

பரிசு பலதந்து பாலித்த காசி
விரிநிழலே! விஸ்வேசா! வேந்தே!—உரிமையுடன்
பக்கத் திருந்து பணிசெய்த ராமேசா!
எக்காலும் காத்திடுக ஏற்று.

ஏற்ற பெருங்கருணை விஸ்வேசா! இவ்வுலகில்
தோற்றம் புகழ்க்குத் துணைவருக—மாற்றங்கள்
காலம் நிகழ்த்திடினும் கண்கண்ட ராமேசா!
சீலம் தவறாமல் செய்.

செய்யும் பணிகள் சிறப்புறவே விஸ்வேசா!
பெய்யும் மழையாய்ப் பிணித்திடுக—உய்யும்
வழிகாட்டி எம்மை வளர்ராம நாத!
விழிகாட்டிச் சேர்த்திடுக வீறு.

வீறு கொடுத்தாய் விசுவேசா! வெற்றியெலாம்
நீறு கொடுத்து நிருபித்தாய்—ஆறுமகிழ்
உச்சிச் சடைமுடியாய்! ஒப்பிலா ராமேசா!
மெச்சிப் புகழ்தருவாய் மேல்.

மேலான காசி விசுவேசா! நெஞ்சத்தில்
நூலாக நின்று நுகர்விப்பாய்—பாலாக
ஆக்கும் இராமேசா! அன்னை மலையரசி
பூக்கும் புகழே புகழ்.

''பொற்கிழிக் கவிஞர்'' ''காசிஸ்ரீ''

அரு. சோமசுந்தரன் வாழ்க்கைக் குறிப்பு

ஈன்றதாய் : மீனாட்சி.

தந்தை : முத்துராமன்

பிறந்த ஊர் : புது வயல் (பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்)

பிறந்த தேதி : 14 - 8 - 1936. தாது ஆடி முப்பது. புனர்பூச நட்சத்திரம். மிதுனராசி; கடக லக்கினம். (பிறந்த நாள் ஆடி முப்பதில் கொண்டாடுதல்)

வளர்ப்புத்தாய் : வள்ளியம்மை.

வளர்ப்புத் தந்தை : அருணாசலம்.

பிள்ளை வளரச் சென்ற ஊர் : தேவகோட்டை.

பிள்ளை வளரச் சென்ற தேதி : 5-5-1953

உடன் பிறந்தோர் : நால்வர், 1) தமக்கை சோலை

தம்பியர் : 1) ஆண்டான் செட்டி 2) இராச கோபால். 3) மெய்யப்பன்

திருமணம் : 1954 மே 4.

மனைவி பெயர் : நீலா.

குழந்தைகள : பொன்முடி, இளவெயினி, மங்கையர்க்கரசி மீனாட்சி எனும் புதல்வியர் மூவர்.

மருமகன் : பொன்முடியின் கணவர் இராமசாமி; இளவெயினியின் கணவர் இராமநாதன்.

பேரன்கள் : சுவாதிக் என்ற சோலையப்பன் அருணாசலம், பொன்னழகு என்ற ஷீலா. தண்ணீர் மலை என்ற கார்த்திக்.

படித்த பள்ளி : தொடக்கக்கல்வி ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை, புதுவயல்

உயர்நிலைப் பள்ளிக் கல்வி : சிட்டாளாச்சி உயர்நிலைப் பள்ளி, கண்டனூர்.

கல்லூரிக் கல்வி : அழகப்பா கல்லூரி; காரைக்குடி

பயிற்சிக்கல்வி : அரசினர் பயிற்சிக் கல்லூரி (B.T.) குமாரபாளையம், சேலம் மாவட்டம்.

ஆதரித்த வள்ளல் : கண்டனூர் வீ. தெ. வீரப்ப செட்டியார்.

கவிதைத் தொடக்கம் : 1953 ஆம் ஆண்டில் பள்ளி இறுதி வகுப்பில் படித்த பொழுது கவிஞர் தனது முதல் கவிதையினைத் தன்னை ஆதரித்த வள்ளல் பற்றி இயற்றினார்.

தேர்ச்சி : 1957 மார்ச் பி. ஏ. தேர்வில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேறி **ஜி. யு. போப் தங்கப் பதக்கம்'** பரிசினை மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனனிடம் இருந்து பெற்றார். 1963 ஏப்ரலில் தமிழில் எம். ஏ. தேர்வு தனியாகப் படித்து எழுதி மாநில இரண்டாம் பரிசு பெற்றார்.

பணி : 1957 ஆம் ஆண்டில் மதுரை 'தமிழ்நாடு' பத்திரிகையில் சில மாதங்கள் துணை ஆசிரியராக

வும், 1958ஆம் ஆண்டில் மதுரையில் ''பாங்க் ஆப் மதுரை'' நிறுவனத்தில் எழுத்தராகவும் பணி— 1959 ஜூன் முதல் நான்கு ஆண்டுகள் திருவாரூரி லும், தேவகோட்டையிலும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பணி-1963 ஜூலை முதல் நான்கு ஆண்டு கள் சண்முகநாத புரத்தில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணி - 1967 ஜூன் முதல் காரைக்குடி 'செட்டிநாடு தனிப் பயிற்சிக் கல்லூரி'' முதல்வர் பணி-1974 முதல் நாடெங்கும் கதாகாலட் சேபம் செய்து வருகிறார்; புத்தகங்கள் எழுதி வருகிறார்.

சிறப்புப் பட்டங்கள்

1) 1-8-1966 அன்று கவிஞரின் முப்பதாவது பிறந்த நாளை ஒட்டிக் குன்றக்குடியில் நடந்த விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் கோயிலூர் வேதாந்த சபையின் சார்பில் **''பல்துறைச் செந்நாப் பாவலர்''** என்னும் பட்டம் கவிஞருக்கு வழங்கப் பெற்றது.

2) 24-4-1972 அன்று பறம்புமலைப் பாரிவிழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களால் **''கவிஞர்கோ''** எனும் பட்டம் கவிஞருக்கு வழங்கப் பெற்றது. தமிழக முதலமைச்சர் திரு. **கலைஞர் மு. கருணாநிதி** கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தினார். தமிழகத் திரைப் படப்பிரிவு திரைப் படம் எடுத்து வெளியிட்டது.

3) தமிழக அரசின் சார்பில் மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயிலார் 1973ஆம் ஆண்டு மே மாதத்தில் நடத்திய பொற்கிழிக் காவியப் போட்டியில் பங்கு பெற்றுப் **'பாண்டிமாதேவி'** காவியம் எழுதி முதல் பரிசாகிய **பொற்கிழி** பெற்று, இருபதாம் நூற்றாண்

டில் முதற் பொற்கிழிக்கவிஞர் ஆனார். மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டாக்டர் மு. வரதராசன் தலைமையில் தமிழக முதலமைச்சர் திரு. கலைஞர் மு. கருணாநிதி, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் கவிஞருக்கு ரூ. 1001/- பொற்கிழி வழங்கினார் - தமிழக அமைச்சர்கள் பலரும், அறநிலையத் துறை ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மனும் பாராட்டினர்—தமிழகத் திரைப் படம் வெளியீடு.

1974ஆம் ஆண்டில் கவிஞரின் "ஐரோப்பா" என்ற கவிதை நூல் தமிழக அரசின் ரூ. 1000/- பரிசு பெற்றது. நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் பரிசு வழங்கினார்.

காரைக்குடி நாடகத் தமிழ் மன்றத்தின் சார்பில் கவிஞருக்கு 1984ஆம் ஆண்டில் "கலையரசர்" என்னும் பட்டம் வழங்கப் பெற்றது.

புத்தக வெளியீடும் பொன்னாடையும் :

கவிதை, காவியம், கட்டுரை, நாடகம், பயணம், இலக்கியத் திறனாய்வு, மொழி பெயர்ப்பு, வாழ்க்கை வரலாறு, சரித்திரம் முதலிய பலதுறை பற்றி இது வரை 80 நூல்கள் கவிஞரால் எழுதி வெளியிடப் பெற்றுள்ளன. 7000க்கு மேற்பட்ட கவிதைகள் 18 தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன.

கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பினை 29-11-1962 அன்று தமிழக நிதி அமைச்சர் திரு. **சி. சுப்பிரமணியம்** அவர்கள் சென்னையில் செயின்ட் மேரி மண்டபத்தில் நடந்த மாபெரும் விழாவில் வெளி யிட்டார். "கவிஞர் சோமசுந்தரன் வான் மழை போலக் கவிதை பொழிகிறார். மின்னல் கீற்றுப்போல ஒளி வீசுகிறார்" என்று திரு. சி. எஸ். பாராட்டினார்.

அவ்விழாவில் செட்டி நாட்டு அரசர் திரு. டாக்டர் **முத்தையா செட்டியார்** தலைமை தாங்கிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தினார். பேராசிரியர் திரு. டாக்டர் அ. சிதம்பரநாதன், கி. வா. ஜகந்நாதன், தமிழ்வாணன் முதலியோர் கவிஞரைப் பாராட்டினர்.

கவிஞரின் இரண்டாம் கவிதைத் தொகுப்பு ***14-11-1965*** அன்று சென்னையில் சத்தியமூர்த்தி மண்டபத்தில் நடந்த மாபெரும் விழாவில் பெருந் தலைவர் திரு. **காமராசரால்** வெளியிடப்பெற்றது. அப்பொழுது திரு. காமராசர் ''பாரதியாருக்குப் பிறகு தேசத்தையும் தெய்வத்தையும் இணைத்துச் சிறப்பாகப் பாடியவர் ஸ்ரீமான் சோமசுந்தரமே ஆவார்.'' என்று பாராட்டினார். அவ்விழாவிற்குத் தமிழக சபாநாயகர் திரு. செல்லபாண்டியன் தலைமை தாங்கினார். திரு. கிருஷ்ணசாமி நாயுடு, கவிஞர் கண்ணதாசன், சின்ன அண்ணாமலை, கொத்தமங்கலம் சுப்பு, பேராசிரியர் ந. சஞ்சீவி, அகிலன், திரைப்பட அதிபர் திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார் ஆகியோர் பாராட்டுரைத்தனர். தொழிலதிபர் திரு. பி. எஸ். எஸ். சோமசுந்தரம் செட்டியார் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தினார்.

15-10-1966-இல் தமிழக முதலமைச்சர் திரு. **பக்தவத்சலம்** அவர்களின் எழுபதாவது பிறந்தநாள் விழா மதுரையில் கொண்டாடப் பெற்றபொழுது நிகழ்ந்த கவியரங்கிற்குக் கவிஞர் சோமசுந்தரன் தலைமை தாங்கினார். அப்பொழுது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தி ஆசி கூறினார்.

1965-ஆம் ஆண்டு டிசம்பரில் தேவகோட்டையில் நடைபெற்ற இராமநாதபுரம் மாவட்டத் தமிழாசிரியர் கழக மாநாட்டில் கவிஞரின் ''தியாகக் குடும்பம்'' என்னும் நாடக நூலைத்தொழிலதிபர் திரு. கருமுத்து

தி. சுந்தரம் செட்டியார் வெளியிட்டுப் பொன்னாடை போர்த்தினார். மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. டாக்டர் மொ. அ. துரை அரங்கனார் பாராட்டினார்.

21-11-1974 அன்று சென்னை மாவட்ட நூலக மண்டபத்தில் கவிஞரின் பொற்கிழிக் காவியமான "பாண்டிமாதேவி" தமிழக சபாநாயகர் திரு. **ம. பொ. சி.** அவர்களால் வெளியிடப் பெற்றது. நீதிபதி திரு. கிருஷ்ணசாமி நாயுடு தலைமை தாங்கிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தினார். அப்பொழுது மறைமலை அடிகளின் புதல்வர் திரு. மறை திருநாவுக்கரசு, முது பெரும் எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன், டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், சிலம்பொலி செல்லப்பன், இளமுருகு பொற்செல்வி, "பெருங்கவிக்கோ" வா. மு. சேதுராமன் ஆகிய பலர் பாராட்டுரைத்தனர்.

கவிஞரின் **"அருள்மணியம்"** நாடகக் காப்பியம் 11-12-79 அன்று எட்டயபுரம் பாரதி மணிமண்டபத்தில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களால் வெளியிடப்பெற்றது.

பொதுப்பணி : 1963-ம் ஆண்டில் கவிஞர் இராமநாதபுர மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தைத் தொடங்கினார். 5 ஆண்டுகள் அதன் தலைவராகப் பணியாற்றினார். அதற்குமுன் தஞ்சை மாவட்ட ஆசிரியர் கழகச் செயலராகவும், இராமநாதபுர மாவட்ட ஆசிரியர் கழகச் செயலராகவும் பணி ஆற்றினார். 1971 முதல் 10 ஆண்டுகள் இராமநாதபுர மாவட்ட அருள்நெறி மன்றத் தலைவர். 1973-இல் நிகழ்ந்த எட்டயபுர "உலகத் தமிழ்ச்சங்க" அமைப்புத் தலைவர். 1968-ஆம் ஆண்டு முதல் காரைக்குடி அரிமா சங்க (Lions Club) உறுப்பினர். 1984-ஆம் ஆண்டில் காரைக்குடி அரிமாசங்கத் தலைவர். 1979

முதல் காரைக்குடி குழந்தை இலக்கியச் சங்கத்துணைத் தலைவர். சைவ ஆதீனங்களில் ஒன்றும், நகரத்தார் பெண்கள் குருபீடமும் ஆகிய துலாவூர் மடத்தின் நிரந்தர நிதிச்செயலர்.

சண்முகநாதபுரத்தில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியபொழுது அவ்வூரில் 65 ஆண்டுகளாகச் சிறிய அஞ்சல் நிலையமாக இருந்ததைப் பெரிய நிலையமாக மாற்றச் செய்தார். மேலும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, போலீஸ் நிலையம், மாவட்டக் கிளை நூலகம் முதலியன கொண்டுவந்தார்.

சீனப்படையெடுப்பு நிகழ்ந்தபொழுது அமைச்சர் ஜோதி வெங்கடாசலத்திடம் தேசீயப்பாதுகாப்பு தங்கப் பத்திரத்துக்குத் தன் தங்கச்சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தார்.

பிரதிநிதி : சென்னையில் 15 நாட்கள் ''யுனெஸ்கோ'' (UNESCO) நடத்திய குழந்தை இலக்கிய ஆய்வரங்கில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழி எழுத்தாளர்கள் பங்குபெற்றனர். அதில் கவிஞர் சோமசுந்தரன் தமிழ்மொழிப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று ஆய்வரங்கில் பங்கு பெற்றார். தமிழக முதலமைச்சர் திரு. பக்தவத்சலம், முன்னாள் திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. கோவிந்தராஜுலு நாயுடு, திரு. பெ. தூரன் ஆகியோர் ஆய்வரங்கில் பங்குபெற்றுப் பாராட்டினர்.

1959-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமெரிக்க ''புல் பிரைட் பேராசிரியர்'' திருமதி டாக்டர் நட்லி நடத்திய ஆங்கிலக் கருத்தரங்கில் கவிஞர் பங்கு பெற்றார்.

உலகத் தமிழ் மாநாடு : 31-1-1974-இல் இலங்கை யாழ்ப்பாணத்தில் தொடங்கிய நான்காம் உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதியாக அழைக்கப்பெற்று "இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதை" என்னும் தலைப்பில் கவிஞர் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தார்.

வானொலி : கவிஞரின் பல்வேறு நிகழ்ச்சிகளை திருச்சி, சென்னை, இலங்கை, சிங்கப்பூர், பிலிப்பைன்சு நாட்டு மணிலா வெரிட்டாஸ் வானொலிகள் ஒலி பரப்பி உள்ளன.

ஆங்கிலத்தில் : கவிஞரின் கவிதைகள் சில ஆங்கிலத்தில் Lyrical cavalcade என்ற நூலாக வெளிவந்து ஐரோப்பா முழுதும் பரவி உள்ளன.

சுற்றுப்பயணம் : கவிஞர் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் பன்முறை சுற்றுப் பயணம் செய்துள்ளார். இந்தியா முழுதும் மூன்றுமுறை சுற்றுப் பயணம் செய்துள்ளார். மேலும் 1972 ஏப்ரலில் நேபாளத்திலும், 1973 ஜனவரியில் இலங்கையிலும், 1974ஆம் ஆண்டில் பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், ஹலாந்து, ஆஸ்திரியா, வாட்டிகன் ஆகிய நாடுகளிலும், 1979ம் ஆண்டில் மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்லாந்து, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்தார். பம்பாய்த் தமிழ்ச்சங்கம், டில்லி தமிழ்ச் சங்கத்திலும், பெரம்பாவூர் (கேரளா) தமிழ்ச்சங்கத்திலும் உரையாற்றினார்.

கதாகாலட்சேபம் : 1974 மே மாதம் புதுவயல் ஸ்ரீ கைலாச விநாயகர்கோயிலில் தொழிலதிபர் திரு. யெ. மு. விசுவநாதன் செட்டியார் தலைமையில் "பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி" பற்றிக்

கவிஞர் முதலில் கதா காலட்சேபம் அரங்கேற்றினார். 1975 மேயில் ''சிலப்பதிகாரம்'' ''ஸ்ரீ மீனாட்சி திருமணம்'' பற்றிக் கதா காலட்சேபம் நிகழ்த்தினார். 1-6-1976 அன்று மகாபாரதம் தொடர் கதாகாலட்சேபம் அரங்கேற்றம். 30-12-77 அன்று ''இராமாயணம்'' தொடர் கதாகாலட்சேபம் அரங்கேற்றம். எல்லா நிகழ்ச்சிகளுக்கும் திரு. யெ. மு. விசுவநாதன் செட்டியார் தலைமைதாங்கிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தினார். தொடர்ந்து ''பெரியபுராணம்'' ''திருவிளையாடற் புராணம்'' முதலியனபற்றி உரை.

பொன்முடி பதிப்பகம் : 3-6-1963 இல் கவிஞர் ''**பொன்முடி** பதிப்பகத்தினை''த் தொடங்கி அதன் மூலம் தனது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

அணிந்துரை : கவிஞரின் நூல்கள் பலவற்றுக்கு டாக்டர் மு. வ; டாக்டர் தெ. பொ. மீ; டாக்டர் சி. இலக்குவனார், ஏ. வி. எம்; டி. ஐ. ஜி. டயஸ், அமைச்சர் சர்க்கரை மன்றாடியார், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், திரு. சா. கணேசன், மற்றும் பலர் அணிந்துரை வழங்கி உள்ளனர். கவிஞர் தமிழில் முதல் முயற்சியாக எழுதியுள்ள ''சிறுவர்க்கு விஞ்ஞானம்'' என்ற குழந்தைப் பாடல் தொகுதியினை நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி திரு. சர். சி. வி. இராமன் பாராட்டி உள்ளார்.

தொடர்பு : பழைய தலைவர்கள் பலரோடு கவிஞருக்கு இலக்கியத் தொடர்புகள் உண்டு. பாலதண்டாயுதம், ஈ. வி. கே. சம்பத், அமைச்சர் கக்கன், பி. ஜி. கருத்திருமன், துணை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், ஜோதி வெங்கடாசலம், பூவராகன்,

ஜெமினிகணேசன் ஆகியோரோடு பொது நிகழ்ச்சிகளில் கவிஞர் பங்கு பெற்றார்.

நாடகம் : கவிஞர் கல்லூரியில் படித்த பொழுதே "வேலின் முனை" என்னும் நாடகத்தினை எழுதி நடித்தார். அது முதல் ஆறு நாடக நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது நாடகங்கள் தமிழ் நாட்டிலும், பிற மாநிலங்களிலும் தமிழ் மக்களால் நடத்தப் பெற்று வருகின்றன.

ஷேக்ஸ்பியர் மொழி பெயர்ப்பு : கவிஞர் ஆங்கிலத்தில் இருந்து இரண்டு நாவல்களை முதலில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இப்பொழுது ஷேக்ஸ் பியர் நூல்களைத் தொடர்ந்து மொழி பெயர்த்து வெளியிட்டு வருகிறார். இவரது மொழி பெயர்ப் புக்கள் இலங்கைப் பல்கலைக் கழக, மதுரைப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களால் (Research-Students) "தமிழில் ஷேக்ஸ்பியர்" (Shakespear in Tamil) என்ற தலைப்புக்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

துணைப் பாடம் ; கவிஞரின் "உயர் கல்வி தந்த உத்தமர் கள்" என்னும் நூல் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் ஒன்பது பத்தாம் வகுப்புகளுக்குத் துணைப்பாடமாக ஐந்து ஆண்டுகள் வைக்கப் பெற்றிருந்தது. கவிஞர் எழுதிய 'மண்ணியல் சிறுதேர் — திறனாய்வு' நூல் பி. ஏ. மாணவர்களால் பெரிதும் பயன்படுத்தப் பெற்றது.

பாதயாத்திரை : கவிஞர் தேவ கோட்டையில் இருந்து இருந்து 3-5-1977 இல் முதன் முறையாகத் திருச் செந்தூருக்குத் தன் மனைவியுடனும், மற்றும் சில அன்பர்களுடனும் பாதயாத்திரை புறப்பட்டுச் சென்றார். திருச்செந்தூர்ப் பாதயாத்திரை ஆண்டு

தோறும் தேவகோட்டையில் இருந்து நடைபெற சித்ராபௌர்ணமியில் காவடி செலுத்தக் கவிஞர் ஆவன செய்துள்ளார். ஓராண்டுக் காலத்தில் கவிஞர் தன் மனைவியுடன் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகிய தலங்களுக்குத் தேவகோட்டையில் இருந்து பாதயாத்திரையாக சுமார் ஆயிரம் மைல் நடந்து சென்று வழிபட்டார்.

காவடி செலுத்தல் : இப்பொழுது ஆண்டு தோறும் சித்திரா பௌர்ணமிக்குத் "திருத் தொண்டர்" ஆர். வயிரவன் தேவகோட்டையில் இருந்து செந்திலாண்டவனுக்குக் காவடி செலுத்துகிறார். 'நகரத்தார்திருத்தணிப் பாதயாத்திரைக்குழு' சென்னையில் இருந்து திருத்தணி முருகனுக்குக் **பங்குனி உத்தரத்தன்று ஆண்டுதோறும்** காவடி செலுத்துகிறது. இதன் தலைவர் "காசி ஸ்ரீ" இராகவன். ஆடிக் கார்த்திகைக்கு "காவடிசாமி" ஏகநாதன் தேவ கோட்டையில் இருந்து பழமுதிர்சோலைக்குக் காவடி செலுத்துகிறார். திருபரங்குன்ற முருகனுக்கு ஆவணிக் கார்த்திகையில் "பழம் நீ" முத்து மாணிக்கம், மதுரை நகரத்தார் சங்கம் முயற்சியால் மதுரை நகரவிடுதியில் இருந்து காவடி செலுத்தப் பெறுகிறது. இதற்கெல்லாம் மூலகாரணமாக இருந்து இந்த யாத்திரைகளைக் கவிஞர் 1976இல் தொடங்கி வைத்தார்.

வழிநடைப் பாடல்கள் : இவர் பாதயாத்திரை சென்ற பொழுது எழுதிய ஏராளமான பக்திப்பாடல்களை ஆயிரக்கணக்கான பாதயாத்திரிகர்கள் பாடிக் கொண்டு, உற்சாகமாக நடைப்பதைக் காணலாம். பழைய பாடல்களுக்குப் பதிலாகப் புதிய உணர்ச்சி

கரமான வழி நடைப் பாடல்களைப்பாதயாத்திரிகர் கட்காக முதல் முதலில் எழுதிப் புதிய பாதை காட்டி யவர் இவரே ஆவார். இவரைப் பின்பற்றி இப் பொழுது ஏராளமான கவிஞர்கள் வழிநடைப் பாடல்களை எழுதி வருகின்றனர். இவரது

''அல்லும் பகலும் அடியார் கூடி''

என்ற பழநிப் பாதயாத்திரை வழி நடைப் பாடலை ''ஏ. வி. எம்'' நிறுவனத்தார் புகழ் மிகு பாடகர் களைக் கொண்டு ''காசெட்'' வெளியிட்டுள்ளனர்.

நால்வர் குரு பூசை : தேவகோட்டையில் கவிஞரின் முன் னோர் ஆன ''கட்ட முருகப்பர்'' கட்டியுள்ள சுமார் நூற்று ஐம்பது வருடத்திற்கு முந்திய ''காட்டுத் தண்ணீர்ப் பந்தல்'' என்ற அறநிலையத் தில் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரின் குருபூசையினை ஆண்டு தோறும் சிறப்பாக நடத்தி வருகிறார்.

தாய்வணக்கம் : கவிஞர் தன்னை ஈன்ற தாயையே முதல் தெய்வமாகக் கருதி வழிபட்டு வருகிறார். தனக்கு அறிவூட்டி ஆளாக்கிய தெய்வமாகிய தாய்க்கு வணக்கம் பாடாமல் கவிஞர் எந்த மேடையிலும் பேசுவதில்லை.

''எங்கள் பெருந்தேவே! ஈன்றெடுத்த
நற்றாயே!
சங்கத் தமிழ்தந்த சான்றோயே! — மங்காத
பண்பெல்லாம் தந்தாய்! பரிந்து
மிகவளர்ப்பாய்!
கண்ணிமை போல் எந்நாளும் காண்''

என்ற பாடல் கவிஞரின் உயிர் மூச்சாகும். கவிஞர் தன் பதினைந்து வயதில் தாயை இழந்தார். அவர்

பதினாறு வயதில் பிள்ளை வளரத் தேவகோட்டைக்குச் சென்றார். எனினும் மாதம் ஒரு முறை புது வயல் சென்று தன் தாயின் பீடத்துக்குப் பால், பழம், பூ வைத்துப் பாடல் பாடி வணங்கி வருகிறார்.

வார வழிபாடு : கவிஞர் வாரம் தோறும் வெள்ளிக் கிழமை அன்று கோயிலில் "வாரவழிபாடு" நடத்துவதில் பெரிதும் ஈடுபாடு உடையவர். 1965-ஆம் ஆண்டு தொடங்கி முதல் இரண்டு ஆண்டுகள் சண்முகநாதபுரத்தில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலிலும், 1967-ஆம் ஆண்டு முதல் காரைக்குடியில் முத்துப் பட்டணத்தில் உள்ள செல்வ விநாயகர் கோயிலிலும் தொடர்ந்து வெள்ளிதோறும் வார வழிபாடு நடத்தி வருகிறார்.

உலகம் சுற்றிய தமிழன் : கிழக்காசிய நாட்டுச் சுற்றுப் பயணம் முடித்துத் திரும்பிய கவிஞருக்குச் சென்னையில் 26-7-1979 அன்று பாராட்டு நிகழ்ந்தது. பெரியவர் விஜயாநாயுடு தலைமை தாங்க, அருள் தொண்டர் சுப. இராகவன் பொன்னாடை போர்த்தினார். எழுத்தாளர் திரு. விக்கிரமன் கவிஞரை "உலகம் சுற்றிய தமிழன்" என்று பாராட்டினார். கவிஞர் கிருஷ்ணா சீனிவாசன் அவ்வை துரை நடராசன், சூரியர் முஸ்தாபா, கே. சி. எஸ். அருணாசலம் "பெருங் கவிக்கோ" வா. சேதுராமன் மற்றும் பலர் பாராட்டினர்.

காசிஸ்ரீ : 17-2-1983 இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்டுக்காசிக்கு 2000 மைல் நடந்து 12-6-1983 இல் காசி அடைந்தார். அங்கு விசுவநாதர் கோயிலில் உ. பி. சார்பில் "காசிஸ்ரீ" பட்டம் வழங்கப் பெற்றது.

பொன்முடி பதிப்பகம்
123. முத்துப் பட்டணம் மூன்றாம் தெரு
காரைக்குடி. 6: 300, (ப. மு. மாவட்டம்)

பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரன் எழுதியுள்ள நூல்கள்

கவிதை

1	கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன்	6	50
2	திருமுறைகள் வீட்டு நூல்	15	00
3	பொற்கிழிக் கவிஞர் சோமசுந்தரன் கவிதைகள்	11	00
4	திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்	5	00
5	திரு. வி. க.	5	00
6	சிறுவர்க்கு விஞ்ஞானம்	8	00
7	பாண்டிமா தேவி (பொற்கிழிக் காவியம்)	6	00
8	செக்கிழுத்த செம்மல்	4	00
9	ஐரோப்பா (தமிழக அரசின் பரிசுபெற்றது)	8	00
10	மறைமலை அடிகள் பிள்ளைத் தமிழ்	4	00
11	ஸ்ரீ குருதட்சணா மூர்த்தி பிள்ளைத் தமிழ்	4	00
12	Lyrical caval cade	1	00
13	படகு	4	00
14	அன்னை மீனாட்சி அந்தாதி	6	50
15	கவிதை வானில்	9	00
16	கவிதை மண்ணில்	24	00
17	கவிதைக் கடலில்	25	00
18	சிறுவர் கவியரங்கில் திருஞான சம்பந்தர்	4	00

கட்டுரை

19	கட்டுரைப் பெட்டகம்	9	00
20	கட்டுரைக் கற்கண்டு	5	00
21	கட்டுரைக் கற்பகம்	10	00
22	கட்டுரை இலக்கியம்	14	00
23	கட்டுரை ஆய்வு	3	50
24	கட்டுரைக் கதம்பம்	5	00
25	மாணவர் பட்டிமன்றம்	3	75
26	பாரதியாரின் இராணுவ சிந்தனை	4	00
27	கட்டுரைக் கரும்பு	10	00

நாடகம்

28	கடமை	10	00
29	தியாகக் குடும்பம்	8	00

30	முகமூடி	8 00
31	வேலின் முனை	8 00
32	ஓரங்க நாடகங்கள் ஒன்பது	8 00
33	கால ஓட்டம்	8 00

வாழ்க்கை வரலாறு

34	உயர்கல்வி தந்த உத்தமர்கள்	10 00
35	பெருந்தொழில் வளர்த்த பெரியோர்	10 00
36	நாடு புகழும் ஜி. டி. நாயுடு	10 00
37	மாவீரன் நெப்போலியன்	8 00
38	பாரதப் பிரதமர்கள்	8 00
39	வள்ளல் அழகப்பர்	8 00
40	அடியார் அறுபத்து நால்வர்	10 00

பயணம்

41	இந்தியா	10 00
42	நேபாளம்	10 00
43	இலங்கை	10 00
44	பிரிட்டன்	8 00
45	பிரான்சு	8 00
46	மேற்கு ஜெர்மனி	8 00
47	சுவிட்சர்லாந்து	8 00
48	இத்தாலி	10 00
49	பெல்ஜியம்	8 00
50	ஹாலந்து	8 00
51	ஆஸ்திரியா	8 00
52	வாட்டிகன்	8 00
53	மலேசியா	15 00
54	சிங்கப்பூர்	15 00
55	ஹாங்காங்	10 00
56	தாய்லாந்து	12 00
57	பிலிப்பைன்சு	10 00
58	இராமேஸ்வரம் காசி நடைப்பயணம்	50 00

ஷேக்ஸ்பியர்—மொழிபெயர்ப்பு

59	மாக்பெத்	8 00
60	இரண்டாம் ரிச்சர்டு	6 00

61	அந்தோனியும், கிளியோபாட்ராவும்	12	00
62	எண்ணிய எண்ணியாங்கு (As you like it)	9	00
63	பன்னிரண்டாம் இரவு	10	00
64	வெனிஸ் வியாபாரி	13	00
65	மன்னன் லியர்	13	00
66	ஒதெல்லோ	15	00
67	ஹாம்லெட்	16	50
68	புயல்	10	00
69	ஜூலியஸ்சீசர்	8	00
70	கார்காலக் கதை (Winter's Tale)	15	00

சரித்திரம்

71	சீனப்படையெடுப்பு	6	00
72	பாகிஸ்தான் படையெடுப்பு	7	00
73	வங்காள தேசப் போர்	6	00
74	உலகைக் கவர்ந்த முக்கிய நிகழ்ச்சிகள்	10	00

சிறுகதை, நாவல்

75	அழகிய உளவாளி	20	00
76	சர்க்கஸ் அரசி	20	00
77	ஆங்கில அருங்கதைகள்	5	00
78	சுதந்திரதாகம்	6	51
79	ஒற்றுமைக் கதைகள்	1	50

நாடகக் காப்பியம்

80	அருள் மணியம்	25	00

மருத்துவம்

81	மூலபவுத்திர நோய்	4	00

பிறர் எழுதியவை

1	தங்க நட்சத்திரம் சி. இராமசாமி B. Sc.	6	50
2	நூறு வயது வாழுங்கள் ,,	9	00
3	இருட்டாய்ப்போன வெளிச்சங்கள் சுதந்திரதேவி	17	50
4	எத்தனை கலைகள் வாழ்க்கையில் ஜி. எதிராஜ் M. A.	12	00
5	ஓவியக்கலை-கோவிந்தராசன்	17	00

